
211,32 N75
N75.132

12 .:

es: Spiral borer: Stems, parti-
often show spiral swelling
nal tunneling of stem by the
.Thunb. As a result of tunneling
ed which is visible due to the

percent) sprayed around the foci
retard spread. This method of
onomic if the area to be sprayed

highly susceptible to anamber of
hich Colletorichum hibisci Pol. is
using anthracnose.
s is a fungal disease. Infection
and stipules which turn brown

Issued 2—8—75]

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

MONDAY 31st MARCH 1975

Volume CXXXII—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1975

Legislative Council Department
Fort St. George, Madras-9

PRICE 35 *Paise*]

NR]1, 32 N75
N75-132
63163

Tamil Nadu Legislative Council Debates

FIFTIETH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

31st March and 1st to 3rd April, 1975.

VOLUME CXXXII (Numbers 1—4).

TABLE OF CONTENTS.

Monday, 31*st March* 1975.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ...	i—v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	ix—xi
1. Questions and Answers	1—17
2. Decision of the Business Advisory Committee.	17
3. Calling attention to the non-payment of salaries to the teachers in Vedaranyam and Devakottai areas	18—19
4. Government Resolution—	
Discussion on Policy *re* Head of State, Ministers and Headquarters Staff and Policy Note on District Administration	19—85
5. Papers laid on the table of the House	85—86

PAGES

Tuesday, 1st April 1975

1. Questions and Answers ... ... 129—155
2. Personal Explanation ... ... 155—157
3. Calling attention to the attack on Members of dhobi families in Rowthapalli village near Kamanthotti in Hosur taluk by Caste Hindus of Dasanapuram ... ... 157—159
4. Government Resolution—
   Discussion on the Note on Progress of Education in Tamil Nadu ... ... 159—219
5. Papers laid on the table of the House ... 219

Wednesday, 2nd April 1975.

1. Questions and Answers ... . 325—333
2. Privilege Issue *re*—
   Publication of expunged portion of Council Proceedings in 'Nathigam' ... ... 333—334
3. Ruling of the Chair *re* expunction of portions from the proceedings of the Council ... 334—336
4. Discussion on the Note on Progress of Education in Tamil Nadu ... ... 336—397
5. Papers laid on the table of the House ... ... 397—398

Thursday, 3rd April 1975.

Discussion on the Note on Progress of Education in Tamil Nadu—*cont.* ... ... 399—470

Index 471–492

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Waqfs.

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and apex levels including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayat and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Commercial Taxes Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money-lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE. HON. THIRU. S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE. HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE. HON. THIRU. N. RAJANGAM, Minister in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** (முதலமைச்சர்): கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (கல்வி அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டமன்றம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (நல்வாழ்வுத்துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகரமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** (பொதுப் பணித்துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப் பணிகள், சிறப்புச் சிறுபாசனம் உள்ளிட்ட சிறுபாசனத் திட்ட வேலைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிற் சாலைகள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், மூகம்மதிய அறக்கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, கூட்டமைப்புகள், உள்ளிட்ட மாநில மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், இளைஞர் அணி, சீரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நல அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர் நலன், வீட்டுவசதி, இடவசதிக் கட்டுப்பாடு, எடைகள்–அளவுகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— மகளிர்–சிறுவர் நலன் உள்ளிட்ட சமூக நலத்துறை, மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரிகள் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வணிக வரிகள், காடுகள் மற்றும் சின்கோனா, கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் (கிராம வாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத்துறை, மற்றும் அரசினர் அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அறக் கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், செய்தி–விளம்பரம் திரைப்பட நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், மற்றும் திரைப்படச் சட்டம்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

மேலவைத் துணைத் தலைவர்.

திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். டி. ஆதித்தன்.
2. திரு. எ. பாலசுப்பிரமணியம்.
3. திரு. கே. எஸ். கணபதி.
4. திரு. எம். எம். பக்கர்.

மேலவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. வெள்ளிதுரை, பி.எஸ்ஸி.,

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.டி.எல்., பி.ஜெ

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.		தொகுதி
(1)		(2)
1 அப்துல் வகாப், கே. எஸ்.	..	மாநிலச் சட்டப் பேரவை.
2 அய்யணன் அம்பலம், அ...	..	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
3 அறிவழகன், க., எம்.ஏ.	..	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி.
4 அறிவுடைநம்பி, புலவர் ஓ.	..	வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி.
5 அனிபா, நாகூர், ஈ.எம். ..	..	மாநிலச் சட்டப் பேரவை.
6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல்.		திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
7 ஆறுமுகசாமி, எம். ..	..	மாநிலச் சட்டப் பேரவை.
8 இளம்பரிதி ..	..	மாநிலச் சட்டப் பேரவை.
9 இராசகோபால், சி. வி. ..	..	மாநிலச் சட்டப் பேரவை.
10 இராசமாணிக்கம், எஸ்.ஏ.	..	மாநிலச் சட்டப் பேரவை.
11 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்).		மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
12 இராஜு, ஜி. என். ..	..	மாநிலச் சட்டப் பேரவை.
13 இராமகிருஷ்ணத் தேவர், எஸ்.	..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
14 இராமநாதன், எம். ..	..	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
15 இராமசுப்பையா, காரைக்குடி	..	நியமனம்.
16 இராமசாமி படையாச்சி, எஸ்.எஸ்.		தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
17 எல்லமந்தா, பி. ..	..	மாநிலச் சட்டப் பேரவை.
18 கணபதி, கே. எஸ். ..	..	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி.
19 குன்றக்குடி அடிகளார், தவத்திரு.		நியமனம்.
20 கோலப்பா, சி. ஆர். ..	..	மாநிலச் சட்டப் பேரவை.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
21 சக்தி மோகன், ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
22 சங்கரலிங்கம், எம். ..	திருநெல்வேலி- கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி.
23 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல்.	சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி.
24 சாம்பசிவம், இரா.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்).	நியமனம்.
27 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்).	மாநிலச் சட்டப் பேரவை.
28 சுந்தரேசத் தேவர், என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
29 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி ..	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி.
30 தங்கப்பாண்டியன், வி., பி.ஏ.பி.டி.	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
31 தங்கவேல், ஏ. ..	மாநிலச் சட்டப் பேரவை.
32 தமிழரசி, சி. ..	மாநிலச் சட்டப் பேரவை.
33 தாமஸ், பி. ஆர். ..	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர் தொகுதி.
34 தாமோதரன், ஏ. ஆர்., பி எஸ்ஸி. (ஆனர்ஸ்).	சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி.
35 தாமோதரன், ஜி. ஆர். ..	சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி.
36 திராவிடமணி, ஆ. ...	மாநிலச் சட்டப் பேரவை.
37 டிமான்டி டென்சில் வின்செண்ட் ..	மாநிலச் சட்டப் பேரவை.
38 தென்னரசு, எஸ்.எஸ்.	நியமனம்.
39 தேவராஜ், வி. எம்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
40 நடராசன், எம். கே. டி.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1)	தொகுதி. (2)
41 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
42 நாராயணசாமி, மன்னை ப. (உள்ளாட்சித்துறை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
43 நாராயணசாமி, எஸ்.	சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி.
44 பக்கர், எம். எம்.	நியமனம்.
45 பலராமன், எல்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
46 பாலசுப்பிரமணியம், அ. ..	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
47 பாலசுப்பிரமணியம், கு. மா. ..	நியமனம்.
48 பெரியண்ணன், வி. ஆர். ..	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி
49 மணி, கோ. சு.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
50 மாசிலாமணி, மு.	மாநிலச் சட்டப் பேரவை.
51 முத்து, எஸ்.	மாநிலச் சட்டப் பேரவை.
52 முத்துகிருஷ்ணன், டி.வி. ..	மாநிலச் சட்டப் பேரவை.
53 முத்துசாமி, செ.	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர், நீலகிரி ஆசிரியர் தொகுதி.
54 முருகேசன், எச். எல். ..	நியமனம்.
55 ரஸ்ஸல் ராஜ், சி.	நியமனம்.
56 வசந்த பாய், ஜி.	சென்னை மாவட்ட பட்டதாரிகள். தொகுதி
57 வில்வம், ஏ. கே ..	நியமனம்.
58 வில்சன் அப்போலோஸ், என். ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெங்கா, வி.	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெள்ளபாண்டியன், எஸ். ..	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
62 ஜார்ஜ் கோமகன்	மாநிலச் சட்டப் பேரவை.
63 வெற்றிடம்	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் ஐம்பதாவது கூட்டத் தொடர்.

திங்கட்கிழமை, 1975 மார்ச் 31.

சென்னை, செயின்ட் சார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Text Books Published by the Tamil Nadu Text Book Society.

*210 *Q.*—Thiru K. S. GANAPATHY : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the text-books published by the Tamil Nadu Text Book Society till the academic year 1972–73 did not bear the names of the authors; and

(*b*) if so, the reason therefor ?

தமிழ்நாடு பாட நூல் கழகம் வெளியிட்ட பாடப் புத்தகங்கள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு பாட நூல் கழகம் 1972-73-ஆம் கல்வி ஆண்டு வரையில் வெளியிட்ட பாடப் புத்தகங்கள் ஆசிரியர்கள் பெயர்களைக் கொண்டிருக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) பாடநூல்கள் தேசியமயமாக்கப்பெற்று அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட நாள் முதற்கொண்டு நூலாசிரியர்களின் பெயர் எழுதப்படவில்லை. எனவே 1972-73-ஆம் ஆண்டிலிருந்து இம்மரபு மாற்றப்பட்டுள்ளது.

Recovery of Special Pay Paid to Weaving Instructors.

*211 Q.—THIRU P. R. THOMAS & THIRU K. S. GANAPATHY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that orders have been issued to recover from the Weaving Instructors, the special pay of Rs. 5 paid to them from the year 1961 to March, 1970 ;

(b) whether they are eligible for the special pay as per G.O. Ms. No. 1834, Education, dated 8th October 1956 and the amendments issued thereto ; and

(c) if so, the reasons for recovering the special pay from them?

நெசவுப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புச் சம்பளத்தை திரும்ப வசூலித்தல்

திரு. பி. ஆர். தாமஸ், (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1961-ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் நெசவுப் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புச் சம்பளம் ரூ. 5-ஐ அவர்களிடமிருந்து திரும்ப வசூலிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) கல்வித்துறையின் 8—10—1956 நாளிட்ட 1834-ஆம் எண் அரசாணையின்படியும் அதற்கு செய்யப்பட்ட திருத்தங்களின் படியும் சிறப்புச் சம்பளம் பெற அவர்கள் தகுதியுடையவர்களா ?

(உ) ஆமெனில், அவர்களிடமிருந்து சிறப்புச் சம்பளத்தை வசூலிப்பதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். முழுத் தகுதி பெற்ற கைத்தொழில் ஆசிரியர்களிடமிருந்து தனி ஊதியம் பிடித்தம் செய்ய உத்தரவிடப்படவில்லை. தனி ஊதியம் பெறுவதற்கான தகுதி பெறாத கைத்தொழில் ஆசிரியர்களுக்குத் தவறாக வழங்கப்பட்டு வந்த தனி ஊதியத்தைத் திரும்பப் பிடித்தம் செய்யுமாறு அரசு உத்தரவிட்டது. ஆனால் பிறகு கருணை அடிப்படையில் பிடித்தம் செய்யவேண்டாம் என ஆணை இடப்பட்டது.

(இ) இல்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, தகுதி அடிப்படையிலே வழங்கப்பட்ட அந்த ஊதியத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று மதுரை மாநகராட்சியிலே உத்தரவிட்டிருக்கிறார்கள். 1960-க்கு முன்னதாக ஹையர் கிரேடுக்கு ரூபாய் 50-2-90 என்ற ஊதிய விகிதமும் லோயர் கிரேடுக்கு ரூபாய் 45-2-85 என்ற ஊதிய விகிதமும் இருந்தது. மேற்கண்ட ஊதிய விகிதத்தில் இரண்டுக்கும் 5 ரூபாய் அதிகம் இருக்கிற காரணத்தாலே, 1—6—1960-க்குப் பின்னர் 90 ரூபாய் என்று ஊதியமானது நிர்ணயிக்கப்பட்ட உடன் அவர்களுக்கு 5 ரூபாய் 'ஸ்பெஷல் பே' கொடுக்க வேண்டுமென்று விதி வந்தது. அந்த அடிப்படையிலேதான் அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஒன்பது ஆண்டுகளாக அந்தச் சிறப்புச் சம்பளத்தைப் பெற்று வந்தவர்களிடமிருந்து திடீரென்று பிடிக்க வேண்டுமென்று உத்தரவு வந்தது. நியாயமான அடிப்படையிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதை இப்பொழுது பிடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளதால், அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி தனியாக கவனத்திற்குக் கொண்டுவந்தால், ஆராயலாம். இப்பொழுது தகுதி அடிப்படையில் இருப்பவர்களுக்குப் பிடித்தமில்லை. தகுதி அடிப்படையில் இல்லாமல் இருப்பவர்களுக்கு டி.எஸ்.எல்.சி.—செகண்டரி கிரேட் பாஸ் பண்ணாமல் பெற்று வந்தவர்களிடமிருந்துதான் பிடிக்க வேண்டுமென்று இருந்தது. அவர்கள் விண்ணப்பம் செய்ததற்குப் பிறகு, கருணை அடிப்படையிலே மறு உத்தரவிடப்பட்டு பிடிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே தகுதி அடிப்படை இருந்தும் அவர்கள் கொடுத்ததைப் பிடித்தம் செய்கின்ற அளவுக்கு மதுரை மாநகராட்சி மன்றத்திலே இருக்குமேயானால், அதைத் தனியாக துறை இயக்குநருக்கோ அல்லது துறைச் செயலாளருக்கோ கொண்டுவந்தால், அது பற்றித் தனியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் டி. எஸ். எல். சி. வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். என்னிடத்தில் தகுதி பற்றிய விவரக் குறிப்புகள் இருக்கின்றன. ஹையர் கிரேடுகளில் உள்ளவர்களுக்கு ரூபாய் 50-2-90 என்ற ஊதிய விகிதம் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. டி.எஸ்.எல்.சி. வேண்டும் என்று குறிப்பிடவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே,

It was brought to the notice of the Government in 1965 that a special pay of Rs. 5 had been paid to a certain number of Craft Instructors in the T.S.L.C. of the Secondary Grade. டி.எஸ்.எல்.சி. இருந்தால் அவர்கள் முழுத் தகுதி பெற்றவர்கள் என்று அர்த்தம். அது இல்லாதவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டது; அதைத்தான் திரும்பப் பெற வேண்டுமென்பதாக இங்கே என்னிடத்தில் இருக்கிற தகவல்கள் தெரிவிக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற தகவலைத் தனியாகக் கொடுத்தால், அதுபற்றித் தனியாக ஆராய்ந்து ஒரு முடிவெடுக்கலாம்.

Half-a-million Job Scheme

*212 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU P. R. THOMAS): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that many Secondary Grade Assistants employed under "Half-a-million Job Scheme" during 1973-74 and shifted to the permanent vacancies of higher grade posts under the same managements, are entitled to draw only higher grade scale of pay and the Secondary Grade Assistants appointed in the resultant vacancies, are eligible to draw secondary grade scale of pay; and

(b) if so, the action proposed to be taken thereon?

ஐந்து லட்சம் மக்கள் வேலை வாய்ப்புத் திட்டம்

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-74-ல் 5 லட்சம் மக்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணிக்கமர்த்தப்பட்டு, அதே கல்வி நிர்வாகங்களில் உயர்தரப் பதவிகளைச் சேர்ந்த நிரந்தர காலியிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ள இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள் உயர்தரச் சம்பள விதத்தில் மட்டுமே சம்பளம் பெற உரிமை உடையவர்கள் என்பது உண்மையா? இவ்வாறு மாற்றப்படுவதனுல் ஏற்படும் காலியிடங்களில் நியமிக்கப்படும் இடைநிலைப்பள்ளி ஆசிரியர்கள், இடைநிலைப் பள்ளி ஆசிரியர் சம்பள விதத்தில் சம்பளம் பெற தகுதியுடையவர்களா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1973-74-ம்
ஆண்டில் "ஐந்து லட்சம் பேருக்கு வேலை" திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்
கள் அனைவருக்கும் 1974-75 கல்வியாண்டு முதல் முறையான பதவிகள் (ரெகுலர்
போஸ்டு) அளிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டது. 1973-74-ல் அவரவர்
எந்தெந்த தர "ஐந்து லட்சம் பேருக்கு வேலை" பதவி வகித்து வந்தனரோ
அதே தரத்தில்தான் 1974-75-ல் முறையான பதவிகளை பள்ளிக் கல்வித் துறை
ஒதுக்க வேண்டுமென ஆணையிடப்பட்டது. எடுத்துக் காட்டாக 1973-74-ம்
ஆண்டில் செகண்டரி கிரேடு பதவியிலிருந்த ஒருவருக்கு 1974-75-ல் செகண்டரி
கிரேடு முறையான பதவியே தரப்பட்டு இருக்கவேண்டும். அவரை ஹையர்
கிரேடு பதவிக்கு அனுப்பி ஹையர் கிரேடு சம்பளம் தருவது அரசாணைக்கு
மாறுனது. எந்தப் பள்ளியில் எந்தச் சூழ்நிலையில் அத்தகைய "ஐந்து லட்சம்
பேருக்கு வேலை" செகண்டரி கிரேடு ஆசிரியரை ஹையர் கிரேடு ஆசிரியர்
பதவியில் போட்டார்கள் என்ற விவரத்தை பள்ளிக் கல்வித் துறைக்குத் தெரி
வித்தால், அத்துறை தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த 5 இலட்சம் பேருக்கு வேலை
வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய செகண்டரி கிரேடு
ஆசிரியர்களை முறையான பதவிகளில் 1—4—1974 முதல் நியமித்திருக்
கிறார்கள். ஆனுல் அதற்கு முன்னரே செகண்டரி கிரேட் சான்று பெற்று
ஹையர் கிரேட் பணியிடங்களில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களை அரசு
'அப்கிரேட்' செய்யும் முறையின் கீழ் 1—6—1974 அன்று முதல் தான்
செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக நியமித்திருக்கிறார்கள். இந்த ஆசிரியர்கள்
5 இலட்சம் பேருக்கு வேலைத் திட்டத்தின்கீழ் வந்த ஆசிரியர்களை விட
முன்னலேயே இருந்து பணியாற்றியிருந்தும் கூட இந்த 5 இலட்சம் பேருக்கு
வேலை வாய்ப்பின்மூலம் வந்தவர்கள் முன்னதாகவும் அதற்கு முன்னதாகவே
நிர்வாகத்திலே இருக்கக்கூடியவர்கள் பின்னதாகவும் பணியிடத்திலே, சேர்க்கப்
பட்டிருக்கிறார்கள். அதனுல் 1—4—1974-ல் பணியாற்றுபவர்களுக்குரிய
முன்னுரிமையையாவது 1—6—1974 முதல் பணியாற்றுபவர்களுக்கும் வழங்கு
வதற்கு அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 5 இலட்சம்
பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டவர்கள் தற்காலி
கமாக நியமிக்கப்பட்டவர்கள். அந்த அடிப்படையிலே நியமிக்கப்பட்டவர்களை
அதற்குப் பிறகு 'ரெகுலரைஸ்' பண்ணும்பொழுது, அதே பொறுப்பிலே தான்
'ரெகுலரைஸ்' பண்ண வேண்டும். அதற்குக் கீழே இறக்கப்பட மாட்டார்கள்.
இறக்கப்படக் கூடாது என்பது தான் அரசின் ஆணையும் கூட. அப்படி

யாராவது இறக்கப்பட்டிருந்தால், அது தவறு. அவர்கள் இறக்கப்படக் கூடாது. ஆனால் அவர்கள் ஹையர் கிரேடிலே நியமிக்கப்பட்டிருப்பார்களானால், அதற்குப் பிறகு 'ரெகுலரைஸ்' செய்யும்பொழுது, ஹையர் கிரேடாக 'ரெகுலரைஸ்' செய்த பிறகு அரசு ஆணையின்படி செகண்டரி கிரேட் ஆக ஆக்கப்பட்டிருப்பார்கள். அந்த நிலை அதன் பிறகு தான் வந்திருக்கும். ஆனால் 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு தரும்பொழுது, சாதாரணமாக தற்காலிகமாக எந்தப் பொறுப்பிலே நியமிக்கப்படுகிறார்களோ அதே பொறுப்பிலே இருக்க வேண்டும் என்பது தான் நியதி.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 5 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்திலே ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு இடம் ஒதுக்கப்படவில்லையென்று நான் நினைக்கிறேன். இடம் ஒதுக்கப்பட்டதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஹையர் கிரேட் 500 இடம் ஒதுக்கப்பட்டது.

Weightages for Middle School Headmasters.

* 213 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU P. R. THOMAS) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation regarding sanctioning of weightages for the Middle School Headmasters, who have completed less than 10 years of service on 2nd October 1970, has been received by the Government; and

(b) if so, the action proposed to be taken thereon?

கடந்த காலப்பணி அடிப்படையில் கூடுதல் ஊதிய உயர்வுகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 2—10—1970-ல் பத்தாண்டுகளுக்குக் குறைவாக நடுத்தரப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்துள்ளவர்களிடமிருந்து கடந்த காலப்பணி அடிப்படையில் கூடுதல் ஊதிய உயர்வு கேட்டு முறையீடு ஏதேனும் அரசுக்கு வரப்பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன்மீது அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இது நீண்ட நெடுங்காலமாகப் பரிசீலனையிலேயே இருந்து வருகிறது. இதனால் ஹைக்கோர்ட்டிலே கூட ரிட் வந்து அந்தத் தீர்ப்பை இன்னும் அமுல்படுத்தவில்லை. பல நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு கூடுதல் 'வெயிட்டேஜ்' போட்டுக் கொடுத்த பிறகு இப்பொழுது கொடுத்த சம்பளத்தைப் பிடித்தம் செய்து விடுகிறார்கள். ஆதலால் இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து முடிவுகளை விரைவாக நிறைவேற்ற அரசு முன்வருமா ? இரண்டாவதாக, இந்த சீனியாரிட்டிக்கு மரியாதை அளிக்கக்கூடிய வகையிலே இந்த நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதில் ஏற்பட்ட சங்கடத்தின் காரணமாகத் தான் அவர்கள் ரிட்டுக்குப் போனார்கள். சீனியாரிட்டிக்குக் கொடுப்பதா அல்லது ஏற்கெனவே தலைமை ஆசிரியர் பதவியில் இருந்தவர்களுக்குக் கொடுப்பதா என்பது பிரச்சினை. பணிமூப்பு இல்லாமல் 6-10-1971 அன்று தலைமை ஆசிரியர்களாக இருநதவர்களைப் பதவியிலிருந்து இறக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதற்குப் பிறகு சீனியாரிட்டி உடையவர்கள் 'ரிட்'டுக்குச் சென்றார்கள். அந்த ரிட் இருந்ததன் காரணமாக நாம் எந்தவிதமான முடிவும் எடுக்க முடியாமல் இருந்து வந்தது. இப்பொழுது அவர்களாகவே ரிட் மனுக்களை திரும்பப் பெற்றிருக்கின்றார்கள். ஆகவே இந்த நிலைமையிலே நாம் ஒரு சுமுகமான முடிவெடுப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ரிட் மனுக்களைத் தாங்களாகவே அண்மையில் திரும்பப் பெற்றுவிட்டார்கள். இந்த நிலைமையில் அரசு இந்தப் பொருளின்மீது இறுதி ஆணை வெளியிட வேண்டிய தன்மையில் இப்பொழுது இருக்கிறது. ஆகவே தான் அதை ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி ஆணை வெளியிட வேண்டியிருக்கும். ஆகவே ஏற்கெனவே இருந்தவர்களை அப்படியே காப்பாற்றி, இனிமேல் நியமிக்கப்படுபவர்களை சீனியாரிட்டியினுடைய அடிப்படையிலேதான் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது சமீபத்திலே வழங்கப்பட்டிருக்கும் உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பிலே அரசினுடைய எண்ணம் இதுவாக இருக்கும் என்று கருதுகிறேன் என்று தான் கூறப்பட்டிருக்கிறது. அரசினுடைய எண்ணம் இதுவாக இருக்கும்—6-10-1971-லே யார் யார் பணியாற்றினார்களோ அவர்களுடைய சம்பளம் பாதிக்கப்படாமல் இருக்கும் என கருதுகிறேன் என்று தான் உயர்நீதி மன்றத்

தினுடைய நீதிபதி கூறியிருக்கிறார்கள். ஆதலால் சீனியாரிட்டிக்கு மதிப் பளிக்கக்கூடிய வகையிலே 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' கொடுப்பதுபற்றி இந்த ஜட்ஜ்மென்டிலும் குறிப்பிடவில்லை. அரசு கொள்கை முடிவு எடுப்பதற்கு இந்த ஜட்ஜ்மென்டிலே எந்தவிதமான தடையும் இல்லை. ஆகையால் சீனி யாரிட்டிக்கு மரியாதை அளிக்கும் வகையில், பஞ்சாயத்து யூனியனுடைய சட்டப்படியே செலக்ஷன் போஸ்ட்ஸ்' அல்லது 'நான் செலக்ஷன் போஸ்ட்ஸ்' வழங்கப்படுமென்று இருப்பதை மாற்ற வேண்டும். சீனியாரிட்டிபடி தான் கொடுக்கப்பட வேண்டுமென்று இருந்தும் பஞ்சாயத்து யூனியன்களில் அது இதுவரை அமுல்படுத்தப்படாமல் இருக்கிறது என்பதையும் நான் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து சீனியாரிட்டி பாதிக்கப்படாமல் கொடுப்பதற்காக அரசு ஒரு கொள்கையை வகுத்து முடி வெடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசி னுடைய கொள்கை சீனியாரிட்டி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்பது தான். சீனியாரிட்டி பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால், ஏற்கெனவே வேலை பார்த்தவர்களை கீழே இறக்கத்தான் வேண்டும். இறக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆகவே இது முடிவடைந்ததன் காரணமாகத் தான் மற்றவர்கள் ரிட்டுக்குப் போனார்கள். இப்பொழுது அவர்களாக முன்வந்து திரும்பப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே இந்த ரிட்டிலே இருக்கிற வாசகங்கள் என்ன என்பதை நாம் சட்டத் துறை யினரைக் கலந்தாலோசிக்க வேண்டும். அவர்கள் அதை ஆராய்ந்து என்ன விளக்கத்தைத் தருகிறார்கள் என்பதைப் பார்த்துத்தான் நாம் மேற்கொண்டு முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே தான் அரசு இப்பொழுது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. ஆக அந்தத் துறை யினுடைய ஆலோசனையின் அடிப்படையிலே, முறையான வழியிலே நாம முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

[பிற்பகல் 4-10]

திரு. செ. முத்துசாமி: இதிலே சொல்லிக் கொடுத்த ஆசிரியர் அசின் டனாடாக நிர்வாகத்தினால் போடப்பட்டிருக்கிறார். அவரிடத்திலே படித்த மாணவன் செகண்டரி கிரேட் தலைமை ஆசிரியராக இருக்கிறார். குடும்பம, பிள்ளை, குட்டியோடு இந்த ஆசிரியருடைய சம்பளம் ரூ. 60 குறைவாக நிர்ண யிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நானும் சட்ட இலாகாவில் இதுபற்றிக் கேட்ட நேரத்தில் அரசு கொள்கை முடிவு எடுப்பதற்கு இந்த ஜட்ஜ்மென்டிலே எந்தவிதமான தடையும் இல்லையென்பதைத் தெளிவாகச் சொல்லுகிறார்கள். ஆதலால் சீனி யாரிட்டிபடிதான் கொடுக்கப்பட வேண்டும் என்று, 1722 ஜி.ஓ. வை அமுல்

படுத்துவதற்கான அளவிலே கல்வித் துறையிலே முடிவெடுத்தால், சட்டத் துறை அதிலே குறுக்கிடாது என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆகையால் சீனியாரிட்டிபடி கொடுப்பதற்கு கொள்கை முடிவெடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் திரும்பத்திரும்பச் சொல்லுகிறேன். அந்த விளக்கத்தை திரு. முத்துசாமி சொல்லி எடுக்க முடியாது. அதைச் சட்டத் துறை சொல்ல வேண்டும். கல்வித் துறைக்கு சட்டத் துறை சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி சொல்லுவதைப் போன்றதுதான் என்று சொல்லுவார்களே யானால், சீனியாரிட்டியில் இருப்பவர்கள் 'ரிட்'டுக்குப் போகவேண்டிய அவசியமே ஏற்படாது. அந்தத் தீர்ப்பை விட்டு விட்டு, அரசே கொள்கையின் அடிப்படையில் முடிவெடுத்து நிறைவேற்றலாம் என்று சொல்லியிருக்கலாம். ஏன் அவர்கள் 'ரிட்'டுக்குப் போனார்கள் என்றால், உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அவர்களைப் பாதிக்கிறது என்பதற்காகப் போனார்கள். இப்போது அவர்களே வாபஸ் வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பினுடைய அடிப் படையிலே நாம் முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் கொள்கையின் அடிப்படையில் முடிவு எடுக்கிறோம் என்று சொல்ல முடியாது. உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இடையில் வந்து நிற்கிறது. அந்தத் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுத்துத்தான் நாம் முடிவு எடுக்க வேண்டியிருக்கும். என்னைக் கேட்டால், சீனியாரிட்டி அடிப்படையில் கொடுப்பதுதான் நியாயம் என்று நான் முதலிலேயே சொன்னேன். ஏற்கெனவே எல்லாப் பதவிகளும் ஒரே நிலையில் இருந்ததன் காரணமாக யார் வேண்டுமானாலும் தலைமை ஆசிரியராக வரலாம். அவர்களுக்கு இருக்கிற வாய்ப்பு, வசதி, ஊர் போன்ற நிலைமைகளை சிலபேர் ஏற்றுக்கொண்டார்கள். வேண்டாமென்று சிலபேர் இருந்தார்கள். அது அவர்களுடைய விருப்பத்திற்கு விடப்பட்டது. அவர் களுக்கென்று ஒரு குறிப்பிட்ட சம்பளம் உயர்த்தப்பட்டதற்குப் பிறகு சீனியர்களாக இருப்பவர்கள் அந்த இடத்திற்கு வரவேண்டும் என்று விரும்புவதுதான் இயற்கை. அப்படியிருக்க வேண்டுமென்றுதான் நாமும் எண்ணினோம். ஆனால் தீர்ப்பு மாறுபாடாக இருக்கிறது. அது எந்த அடிப் படையில் இருக்கிறது என்பதை முழுவதும் ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது நமக்கு 'ரிட்' எதுவும் இல்லாததன் காரணமாக நாம் முடிவு எடுப்பதற்கு வசதி இருக்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, கல்வியமைச்சர் அவர்களிடத்திலே நான் அதைத் தெளிவாக விளக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஆசிரியப் பிரதிநிதி என்ற முறையில் ஆசிரிய இயக்கத்தினுடைய பொறுப்பிலே இருக்க வேண்டியவன் என்ற முறையில் அவர்கள் முடிவு எடுப்பதற்கு முன்னால் எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த முடிவு கொள்கையின் அடிப்படையிலே அல்ல. இது தீர்ப்பின் அடிப்படையிலே எடுக்கப்படவேண்டிய முடிவு. அந்தத் தீர்ப்புக்கு விளக்கம் தரவேண்டியவர்கள் சட்டத் துறையினர். சட்டத் துறையினர் என்ன விளக்கம் தருகிறார்களோ, அந்த விளக்கத்தினுடைய அடிப்படையிலே கல்வித் துறை முடிவு எடுக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

Wells dug during the reign of Pandia Kings.

* 214 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any large wells constructed during the reign of Pandia Kings (Tenth Century) have been unearthed in Thiruvadanai taluk, Ramanathapuram district;

(b) if so, the names of places which get benefited by those wells; and

(c) whether all the wells serve drinking purposes?

பாண்டிய மன்னர்கள் காலத்தில் வெட்டப்பட்ட கிணறுகள்.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானைத் தாலுக்காவில் பாண்டிய மன்னர்கள் காலத்தில் (பத்தாம் நூற்றாண்டு) வெட்டப்பட்டுள்ள மிகப் பெரிய கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவை தற்சமயம் எந்தெந்த ஊர்களுக்குப் பயன்படுகின்றன ?

(உ) எல்லாக் கிணறுகளும் குடிநீருக்காகப் பயன்படுகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இராஜமங்கலம் என்ற ஊரிலும், அப்பகுதியில் மற்ற ஊர்களிலும் உள்ள கிணறுகள் புதுப்பிக்கப்பட்டபின் அப்பகுதி மக்களுக்குப் பயன்படும்.

(உ) குடிநீராக எல்லாக் கிணறுகளும் பயன்பட அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : How does the Hon. Minister know that these wells were dug during the reign of Pandia Kings?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய கட்டட அமைப்பு, அதனுடைய கற்கள், அதனுடைய காலம், ஆகியவற்றை வைத்து இது கி.பி. 10வது நூற்றாண்டில் கட்டப்பட்ட கிணறு என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Has my hon. Friend Thiru Thangapandian, the questioner, anything to do with the Pandia Kings?

Supply of Water to Radhapuram Canal.

* 215 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the number of days between July 1974 and 30th January 1975 during which period, water was let out from the Anicuts in Kanyakumari district to the Radhapuram Canal; and

(b) the total estimated quantum of the water?

ராதாபுரம் வாய்க்காலுக்கு வழங்கப்பட்ட தண்ணீர்.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அணைகளிலிருந்து 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின் 30—1—1975-ஆம் நாள் வரை ராதாபுரம் வாய்க்காலுக்கு எத்தனை நாட்கள் தண்ணீர் விடப்பட்டது ?

(இ) விடப்பட்ட தண்ணீரின் உத்தேச மொத்த அளவு யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இராதாபுரம் கால்வாய்க்கு 16-10-1974-க்கும் 15-11-1974-க்கும் இடையே 36 நாட்களுக்கு தண்ணீர் விடப்பட்டது.

(இ) விடப்பட்ட தண்ணீரின் அளவு சுமார் 292 மில்லியன் கன அடி.

Anicut Across Goundanadhi.

* 216 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Works be pleased to state with reference to the answer given to L.C. Question No. 17 (Starred) on floor of the Council on 9th August 1972—

(*a*) whether the Government have approved the Scheme of constructing an Anicut across Goundanadhi, Aruppukkottai taluk; and

(*b*) if so, the steps taken to implement the Scheme?

கவுண்ட நதியின் குறுக்கே அணை.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற மேலவையில் 9—8—1972-ஆம் நாளன்று வினா எண் 17-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அருப்புக்கோட்டை தாலுக்காவில், கவுண்ட நதியின் குறுக்கே அணைகட்டும் திட்டத்திற்கு, அரசு அனுமதி அளித்துவிட்டதா?

(இ) ஆமெனில், திட்டம் செயல்பட என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

Conversion of Tapioca into Flour.

* 217 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that Tapioca is converted by the mills into Tapioca Flour; and

(*b*) if so, whether such conversion would be banned in view of the food scarcity?

மரச்சீனிக் கிழங்கு மாவாக மாற்றப்படுதல்

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மரச்சீனிக்கிழங்கு (Tapioca) ஆலைகளில் மாவாக மாற்றப்படுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், உணவு நெருக்கடியை முன்னிட்டு அவ்வாறு மாவாக்கப்படுவது தடை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மரவள்ளிக்கிழங்கில் ஐந்தில் ஒரு பங்குதான் மாவுச்சத்து, கஞ்சிப்பசை (Starch) மாவு Flour இவைகளாக மாற்றப்படுவதாக தெரியவருகின்றது.

(இ) மாவு ஆக்கப்படும் மரவள்ளிக்கிழங்கின் அளவு மிகக் குறைவாக உள்ளதால், இவ்வாறு மாவு ஆக்கப்படுவதைத் தடை செய்ய வேண்டிய அவசியமில்லை.

Fertile Lands belonging to Arulmigu Chidambareswarar Devasthanam of Poyyamani in Tiruchirappalli district.

* 218 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that some fertile lands belonging to Arulmigu Chidambareswarar Devasthanam of Poyyamani in Tiruchirappalli District, have been leased out for a very low rent and a large sum is outstanding from its tenants; and

(*b*) if so, the action proposed to be taken to recover the arrears and to enhance the rent?

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொய்யாமணியிலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான வளமான விளைச்சல் நிலங்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொய்யாமணியிலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான வளமான விளைச்சல் நிலங்கள் சில மிகவும் குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ளதும் குத்தகைக்காரர்களிடமிருந்து பெருந்தொகை வரவேண்டியுள்ளதும் உண்மையா?

(இ) ஆமெனில், நிலுவைகளை வசூலிக்கவும் குத்தகைத் தொகையை அதிகமாக்கவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மேற்படி கோயிலிற்குச் சொந்தமாக ஏக்கர் 111.20 செண்ட் நிலங்கள் உள்ளன. இந்நிலங்கள் நிலங்களின் தரத்தை அனுசரித்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 15 முதல் ரூ. 450 வரை 59 நபர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து குத்தகைதார்களாக இருந்து வருகிறார்கள். 1—1—1975-ல் இவர்களிடமிருந்து குத்தகைப் பாக்கி ரூ. 31,648.25 வசூலிக்க வேண்டியுள்ளது.

(இ) பாக்கிதார்கள் 8 நபர்கள் மீது ரெவின்யூ கோர்ட்டில் வழக்குகள் தொடரப்பட்டு 2 வழக்குகள் முடிவுற்றன. பாக்கி 6 வழக்குகளும் சிவில் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு நிலுவையில் உள்ளன. இதர குத்தகைதார்கள் மீது வழக்குகள் தொடர குத்தகைதாரர்கள் துயருதவிச் சட்டத்தைப் பரிசீலனை செய்து வழக்கறிஞர் அபிப்பிராயம் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள அறங்காவலர் ஏற்பாடு செய்து வருகிறார்.

கோவில் நிலங்களின் குத்தகைகளை நிலங்களின் தரத்திற்கு ஏற்ப உயர்த்தவும், பாக்கிகளை விரைந்து வசூல் செய்யவும் தக்கமுறையில் செயல்பட உதவியாக இருக்கும் பொருட்டு சட்டப்பிரிவு 45-ன் கீழ் நிர்வாக அதிகாரி நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிர்வாக அதிகாரி நியமனம் செய்தவுடன் பாக்கிகளை விரைந்து வசூல் செய்யவும், தற்போதைய நிலவரப்படி நிலங்களின் தரத்திற்கு ஏற்ப குத்தகைகளை உயர்த்தவும் அன்னார் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

THIRU A. R. DAMODARAN: Sir, the Government had some time back relaxed the provisions of the Rent Control Act in regard to buildings of temples and charitable institutions. May I know whether there is any proposal to extend those provisions to agricultural lands also?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: பொய்யாமணியைச் சேர்ந்த இந்தப் பகுதியிலே பல நஞ்சை நிலங்கள் மிகக் குறைந்த குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதுபோல், 20 ஆண்டுக்கு மேலாகக் குத்தகைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு 5½ ஏக்கர் நிலத்தில் கரும்பு விளைகிறது. பேட்டவாய்த்தலை காவேரி ஷுகர்ஸ்க்கு மனு போட்டிருக்கிறார்கள். 160 டன் 5½ ஏக்கரிலிருந்து வசூலிக்கிறார்கள். அந்த 5½ ஏக்கருக்கும் குத்தகை சென்ற ஆண்டு ரூ. 200. ஆனால் சென்ற மூன்று ஆண்டுகளாக குத்தகை பாக்கி கொடுக்கப்படவே இல்லை என்று இதைப் போன்ற பல நிகழ்ச்சிகள். மாண்புமிகு அமைச்சரவர்களே கூறினார்கள். ரூ. 30,000-க்கு மேலே வரவேண்டியிருக்கிறது என்று. நிர்வாக அதிகாரி தனியாகப்போட்டு நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லுகிறார்கள். ஆனால் உள்ளூரில் உள்ளவர்களே இதைச் சேர்ந்து செய்ததினாலே அவர்கள் நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். ரூ. 30,000 ஒரு சாதாரணத் தொகை. நஞ்சை நிலங்கள் அதிகம் உண்டு. நிலத்திற்கு ஏற்ப குத்தகை இதுவரையிலும் விதிக்கப்படவில்லை. அதுபற்றி நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, உள்ளூர்க்காரர்களே நிலத்தை வைத்திருந்தாலும் அறங்காவலரும், நிர்வாக அதிகாரியும் சேர்ந்து தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். துறையிலிருந்து இரண்டு மூன்று நாளைக்கு முன்னாலே அதற்கு ஒப்புதல் வந்தது. 4—3—1975 அன்று நிர்வாக அதிகாரி அங்கே பொறுப்பு எடுத்திருக்கிறார்கள். இந்தக் கோயிலைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டு ரொக்கம் ரூ. 9,638/-ம் நெல் 52 கலம்—சுமார் ரூ. 5,120/- மதிப்புள்ளது—மட்டும்தான் வந்திருக்கிறது. மிகக் குறைந்த வருமானம்தான். நெல் அதிகம் வர, வருமானம் கிடைக்கிற வகையில், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, இருக்கின்ற காரணத்தினால், நிர்வாக அதிகாரி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தூண்டப்பட்டிருக்கிறார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இந்தப் பொய்யாமணி கிராமமானது நல்ல உத்தமான நஞ்சை நிலங்களாகும். அதற்குப் பக்கத்திலே உள்ள நிலங்களெல்லாம் பன் மடங்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு 'பேர் செண்ட் கோர்ட்டிலே' போட்டு, அந்தக் குத்தகைக்குத் தகுந்தபடி வசூல் பண்ண அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஊர்ப் பெயருக்குத் தகுந்தாற்போல் அதிலே இருக்கிறவர்கள் நடந்துகொள்வார்கள் என்று எதிர் பார்த்துத்தான் நடவடிக்கை மேற்கொள்கிறோம்.

New Boarding Houses for Harijan Students.

*210. *Q.*—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thiru V. Thangapandian): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) the number of new boarding houses for Harijan students. which the Government propose to open in Tamil Nadu during 1975–76; and

(*b*) the names of places where they are proposed to be opened and the number of such boarding houses proposed to be opened District-wise?

புதிய அரிசன மாணவர் உணவு இல்லங்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு அரிசனநல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1975-76 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் எத்தனை புதிய அரிசன மாணவர் உணவு இல்லங்கள் திறக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(இ) மாவட்ட வாரியாக எத்தனை எந்தெந்த ஊர்களில் திறக்கப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அ) 20.

(இ) மாணவர் விடுதிகளைப் புதிதாகத் திறப்பதற்குரிய இடங்கள் பற்றி இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. today, the following programme of business has been decided :—

1st April 1975 and 2nd April 1975	Discussion on the Policy Note on Education.
3rd April 1975 to 10th April 1975	No Meeting.
11th April 1975	Consideration of the Tamil Nadu Appropriation Bill, 1975.
12th April 1975 to 16th April 1975	No meeting
17th April 1975	(1) Consideration of amendments to the Tamil Nadu Recognised Private Schools Regulations Rules, 1974. (2) Consideration of Official Bills.
18th April 1975 and 19th April 1975	Consideration of Official Bills.
20th April 1975	Sunday — Holiday.
21st April 1975 and 22nd April 1975	If necessary.

The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

[பிற்பகல் 4-20]

3. கவன ஈர்ப்பு.

வேதாரண்யம், தேவகோட்டை வட்டாரங்களில் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாதது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் வட்டாரத்திலும் முகவை மாவட்டத்தில் தேவகோட்டை வட்டாரத்திலும் கடந்த இரண்டு மாதமாக ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாதது குறித்து".

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தேவகோட்டை ஒன்றியத்தைப் பொறுத்த மட்டில், அங்கே 1975 ஜனவரி மாதம் வரையில ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி நிதி நிலைமை பற்றுக்குறை காரணமாக 1975 பிப்ரவரி மாதத்திற்குச் சம்பளம் வழங்கும் நாளன்று சம்பளம் வழங்கப் படவில்லை. மேலும், பொதுநிதிக் கணக்கில் பற்றுக்குறை காரணமாக, இந் நிதியிலிருந்தும் கல்வி நிதிக்குப் பணம் மாற்றப்பட இயலாத நிலையில் இருந்தது. இராமநாதபுர மாவட்ட ஆட்சியாளர் முன்பண மான்யமாக அரசுக்குக் கேட்க, அரசும் 1-3-1975 அன்று ஒப்புதலைத் தந்தது. 1975 பிப்ரவரி மாதத்தியச் சம்பளம் 10-3-1975 அன்று வழங்கப்பட்டது.

அடுத்து, வேதாரண்யம் ஒன்றியத்தைப் பொறுத்த மட்டில், 1974 டிசம்பர் வரையிலும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வி நிதி நிலைமை பற்றுக்குறை காரணமாக, 1975 ஜனவரி, பிப்ரவரி மாதத்திற்குச் சம்பளம் வழங்கும் நாளன்று சம்பளம் வழங்கப்படவில்லை. மேலும், பொது நிதிக் கணக்கில் பற்றுக்குறை காரணமாக, இந்த நிதியிலிருந்தும் கல்வி நிதிக்குப் பணம் மாற்றப்பட இயலாத நிலையில் இருந்தது. ஆகவே, தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் 1975 சனவரி முதல் மார்ச் வரை முன்பண மான்யத்திற்கு அரசுக்குக் கேட்க, அரசும் ஒப்புதல் கொடுத்தது. 1975 சனவரி, பிப்ரவரி சம்பளம் 8—3—1975 அன்று வழங்கப் பட்டது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படி இரண்டு ஒன்றியங்களிலே நடந்திருக்கின்றது. இதுபோன்று நடந்துவிடக்கூடாது என்பதற்காக முன்பண மானியமாக ரூ. 3.2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இனிவரும் மாதங்களில் தட்டுப்பாடு இல்லாமல் கொடுப்பதற்கு சீரான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, 375 யூனியன்களில் இரண்டு யூனியன்களில்தான் இப்படிப்பட்ட தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. அது சீர் செய்யப்பட்டுவிட்டது. இனி இப்படிப்பட்ட தட்டுப்பாடுகள் ஏற்படுவதற்கு இடமில்லை.

4. அரசின் தீர்மானம்.

மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த கொள்கை, மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கைக் குறிப்பு ஆகியவற்றின் மீது விவாதம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே,
"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த கொள்கையும், அவைமுன் வைக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கைக் குறிப்பும் @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த கொள்கையும், அவைமுன் வைக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கைக் குறிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of information, we have not got the Policy Note on Head of State, Ministers, Headquarters Staff; we have only been supplied with the Policy Note on Land Revenue and District Administration. There is no Policy Note given to us on the first portion, namely, Head of State, Ministers and Headquarters Staff.

MR. CHAIRMAN : There is no Policy Note on them. It is only stated as "Policy on Head of State ......"

THIRU G. VASANTHA PAI : The policy itself should be made known to us. The policy has not been made known to us.

MR CHAIRMAN : Thiru K. S. Ganapathi.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, குறிப்பாக இரண்டொரு விஷயங்களைப்பற்றி மட்டும் விரைவில் மிகச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன்.

@ 87–128 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. கே. எஸ். கணபதி] [1975 மார்ச் 31

முதலாவதாக இன்று சென்னை மற்றும் தமிழகத்திலுள்ள பல்வேறு முக்கிய நகரங்களில் ஒட்டப்படும் சுவரொட்டிகள் இருக்கும் நிலைமை மிகமிக மோசமாக இருக்கின்றது. 'வாழ்க்கை இரகசியம்' என்று ஏதோ ஒரு சினிமாப் படத்தை எல்லா ஊர்களிலும் இப்போது திரையிட்டு வருகின்றார்கள். அதற்கான விளம்பரங்கள் மிகவும் ஆபாசமாக, அருவருக்கத்தக்க விதத்தில் இருக்கின்றன. அவை பள்ளிக்கூடங்களுக்கு அருகாமையில்கூட ஒட்டப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் தடை செய்வதற்கு நமக்கு அதிகாரம் இருக்கத்தான் செய்கின்றது என்று நான் நினைக்கின்றேன். இவைபற்றிய விவரங்கள் 'அஷ்யூரென்ஸ் கமிட்டியில்' வந்தபோது இப்படிப்பட்ட ஆபாசமான, எகவும் அருவருக்கத்தக்கதாக உள்ள சுவரொட்டிகளைத் தடை செய்ய அல்லது அப்புறப்படுத்த போலீஸார் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள், சென்ற ஆண்டிலே என்று கேட்டிருக்கிறேன். ஏனென்றால், இப்படிப்பட்ட படங்களுக்கு 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று செர்டிஃபிகேட் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, அவற்றிற்கான சுவரொட்டி விளம்பரங்கள் இளைஞர்களைக் கவர்ந்து இழுக்கத்தக்கதாக இருக்கின்றன. அந்த விளம்பரம் மிகவும் அருவருக்கத்தக்க விதத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதைக் கட்டாயம் தடை செய்ய வேண்டும். திருச்சி நகரத்திலே இதுபோன்ற ஒரு சினிமாவிற்கான விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டிய நேரத்திலே, நிர்வாணமாக இருந்த காரணத்தினால் அந்த இடத்தில் மட்டும் ஒரு சிறு காகிதத்தை ஒட்டுவது என்று முயற்சித்திருக்கின்றார்கள். ஆனால் என்ன நடந்தது என்றால், ஒட்டப்பட்டுள்ள அந்தக் காகிதத்தை எடுத்துவிட்டுப் பார்ப்பது என்ற நிலைமை ஏற்பட்டது. ஆகவே, சுவரொட்டிகள் தடை செய்யப்பட வேண்டுமே தவிர, அப்படிப்பட்ட சுவரொட்டிகளை மறைப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளுவது நல்லதல்ல. எனவே இது போன்ற சுவரொட்டிகளைக் கட்டாயம் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதோடு இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது பல பத்திரிகைகளிலும் 'நியூ வேவ்' கதைகள் என்று எழுதப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட கதைகள் படமாக வரும்போது, சினிமாவிற்காவது நமது குழந்தைகளைப் போகாமல் பார்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதைப்போல அது 'நியூ வேவ்' கதைகள்தான். மிகவும் அருவருக்கத்தக்கதாக எழுதப்பட்டிருக்கின்றன. நமது கலாச்சாரம், நமது பண்பாடு இவை அனைத்திற்கும் நேர் விரோதமான முறையில் அவை எழுதப்பட்டு வருகின்றன. பத்திரிகைகள் தங்கள் வியாபாரத்திற்காக இப்படிப்பட்ட தரக்குறைவான கதைகளை வெளியிடுகின்றார்கள். இது போன்ற 'நியூ வேவ்'

1975 மார்ச் 31] [திரு. கே. எஸ். கணபதி]

கதைகள் வெளியிடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இதைப் பார்க்கும் போது, பத்திரிகைகளுக்கும் ஒரு 'சென்ஸார் போர்டு' என்று இருந்தால் பரவாயில்லை. பத்திரிகைகளில் சுதந்திரம் பாதிக்கப்படாத அளவிற்கு இது போன்ற கதைகளைப் பிரசுரம் செய்யாத வகையில் தடுப்பதற்காக ஒரு 'சென்ஸார் போர்டு' இருக்க வேண்டும். இதிலே அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும் என்று இருந்தாலும்கூட, நமது சமுதாயத்தை எதிர்பாராத நிலைமைக்கு, மிக மோசமான நிலைமைக்கு எடுத்துச் செல்லாமலிருக்க இப்படிப்பட்ட கதைகள் கட்டாயம் தடை செய்யப்பட வேண்டும், இதுபற்றி ஆராய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஜூலை 27, 1974-ல் நமது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் போலீஸ் அதிகாரிகளுடைய மாநாடு நடந்தபோது, அதிலே நமது பிரதமச் செயலாளர் அவர்கள் 'அதிகாரிகள் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டுவிட்டு, இறுதியில் 'அதிகாரிகள் உணரவேண்டிய ஒன்று' என்று ஒன்றை எடுத்துக்கூறியிருக்கின்றார்கள். அவர்கள் பழைய காலத்தோடு ஒப்பிட்டு, 'அதிகாரிகள் எந்த அளவிற்குக் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டுமோ, எந்த அளவிற்குப் பொறுப்புணர்வோடு நடந்துகொள்ள வேண்டுமோ, அந்த அளவிற்கு நடந்துகொள்ளவில்லை. முன்பிருந்ததைவிட மிகவும் தரம் குறைந்திருக்கின்றது' என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். உண்மை நிலையை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஒவ்வொரு மட்டத்திலும், அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்த விரும்புகின்றார்களே தவிர, அவர்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்கின்றார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. குறிப்பாகத் திருச்சியில், சென்னையில் நடந்ததைப் போல 1974-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 'ஓட்டல் நடத்துகின்றவர்கள் தங்கள் பண்டங்களுக்கு விலையைக் குறைக்க வேண்டும்' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சியாளர்கள் ஓட்டல் முதலாளிகளை அழைத்து, 'உங்களுக்கு நாங்கள் நியாய விலையில் முக்கிய பொருள்களைக் கொடுக்கிறோம். நீங்கள் தயாரிக்கும் பண்டங்களின் விலைகளையும் குறைக்க வேண்டும்' என்று சொன்னார்கள். அதைக் கேட்டு ஓட்டல் முதலாளிகளும் தங்கள் பண்டங்களின் விலைகளை ஓரளவிற்குக் குறைத்தார்கள். ஆனால் நவம்பர் முடிந்து, டிசம்பர் முடிந்தும் அவர்களுக்கு அரசாங்கம் நியாய விலைகளில் பண்டங்களை வழங்கவில்லை. பிறகு ஒரு மாதம் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு கொடுக்கப்படவில்லை. அது மறந்துவிட்ட ஒன்றாக ஆகிவிட்டது. அப்படி

வாக்குக் கொடுத்த அதிகாரிகள் ஓட்டல்களுக்குப் போகும் நிலையில் இல்லாத காரணமாகவோ என்னவோ, அதை அடியோடு மறந்துவிட்டார்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டால், அதன் படி நடந்துகொண்டால்தான் அவர்களிடத்தில் நமக்கும் கௌரவம் இருக்கும். அதிகாரிகள் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். நிறை வேற்றும்படி அரசாங்கம் அவர்களுக்குப் பணிக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடி மட்டத்தில் உள்ள கர்ணம் போன்றவர்களை எடுத்துக்கொண்டால், கர்ணத்திற்கு என்னென்ன பொறுப்புகள் இருக்கின்றன என்று சொல்லப் பட்டிருக்கின்றன. கிராம நிலையில் கர்ணம் போன்ற கிராம அதிகாரிகள் செய்யக்கூடிய இடையூறுகள் எண்ணிலடங்காது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் அவர்களை வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலைமை யில் அவர்கள்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றது அரசாங்கம். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன் பட்டா புத்தகம் என்று கொடுத்திருக்கின்றார்கள். முக்கியமான புத்தகம். அதிலே மூன்றாவது தலைமுறைக்காரர்களின் பெயர்களை எழுதி, சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பெயர்களை எழுதிக் கொடுத்திருக்கின்றார்கள். கொடுத்து

(பிற்பகல் 4-30)

விட்டு ஒரு ரூபாய் கொடுங்கள் என்று கேட்டு, பிறகு அந்தப் புத்தகத்தைக் கொடுக்கின்றார்கள். அந்த உரிமையாளர்கள் இந்தப் பெயர் என்னுடையதல்ல, நான் ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள். இந்த நிலைமை எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமானால், கிராம அதிகாரிகள் அவர் களுடைய செயலை சரியாகச் செய்யும்படியாக உத்தரவிடப்பட வேண்டும். நிலங்கள் அளவையில் கிராம அதிகாரிகளிடத்திலே கிராம மக்கள் பயப்படு கிறார்கள். ஒன்றுமே இல்லை என்றாலும்கூட ஒரு நேரத்திலே 'புறம்போக்கும் சேர்ந்திருக்கிறது' என்று நோட்டீஸ் அனுப்பினால், அதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்து அதற்குத் தீர்வு காணவேண்டும். தீர்வு காண்பதற்கு முன்னதாக அந்த கிராமத்து அதிகாரிகளை நாம் சந்திப்போமானால், அதற்குத் தீர்வு காண முடியும் என்று பொதுமக்கள் நினைப்பதினாலே, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் நம்மிடையே ஊறிவிட்ட காரணத்தினாலே, அந்த கிராமத்து மக்கள் அதைத் தடை செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த பட்டா புத்தகம் ஒரு சிறந்த முறை. இந்த பட்டா புத்தகம் ஒழுங்காக உரிமையாளர்களுடைய பெயர் கொண்டதாக இருக்க வேண்டும். இந்த பட்டா புத்தகங்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றம் செய்யப்படும்போது— விற்பனையாகவோ அல்லது வேறுவிதத்திலோ அந்த உரிமை மாற்றப்படும்

போது—அந்த மாற்றம் செய்யும் பதிவு அலுவலகத்திலே அந்தப் பதிவுகளைச் செய்துவிடச் சொன்னால், மிகவும் இலகுவாக இருக்கும். அந்த நோக்கத்தில் தான் இந்த பட்டா புத்தகம் புகுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் முழுமை யான பலன் கிட்டவில்லை. மாநில அடிப்படையிலே தக்க முடிவு எடுக்கவில்லை என்று நான் நினைக்கிறேன். பட்டா புத்தகம் ஒவ்வொரு முறையும் மாற்றம் செய்யப்படும்போது, அந்த மாற்றத்தை பதிவு அதிகாரியே பதிவு செய்தால், பட்டா மாறுதல் என்ற ஒரு நிலைமையே ஏற்படாது. அப்படிச் செய்தால் பட்டா மாறுதல் ஏற்படவேண்டிய அவசியம் இருக்காது என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினால், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு ஒரு சமுதாயப் பணியைச் செய்து வருகிறார்கள். அது பலவகை யிலே பொதுமக்களுக்கும், அடித்தளத்திலே இருப்பவர்களுக்கும் உதவியாக இருக்கின்ற காரணத்தினாலே, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தெருக் களிலே பிச்சை எடுக்கும் குழந்தைகள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒரு பிச்சைக்காரர் குடும்பத்தில் பிறந்துவிட்ட ஒரே காரணத்தினால், அந்த நிலையிலிருந்து வெளிப்பட முடியாத நிலைமையில் இருக்கின்றார்கள். இலவசக் கல்வி கொடுக்கப்பட்டாலும், அந்தப் பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பத் தயாராக இல்லை. ஆதலால், முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் பிச்சைக்காரர்களிடமுள்ள குழந்தை களைக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்து, அவர்கள் கல்வி பயில முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்மிடம் மதிய உணவுத் திட்டம் இருக்கிறது. ஆகையால், நாம் அவர்களுக்கு மதிய உணவு அளிக்க முடியும். ஒரு இடம்தான் அவர்களுக்குத் தேவை. ஜெயிலிலெல்லாம் 'ரீ-எட்யூகேஷன்' என்று சொல்கிறோம். Juvenile delinquency ஜுவனைல் கோர்ட் வைத்திருக்கிறோம். அங்கெல்லாம் அந்தக் குழந்தைகள் நடத்தப்படும் முறையே வெகு மோசமாக இருக்கிறது. அங்கு இருக்கும் மோசமான நிலைமைகளை எல்லாம் தவிர்த்து அந்தக் குழந்தைகள் சிறப்பாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இந்தப் பிச்சைக்காரர்களிடம் உள்ள குழந்தைகள் எந்தப் பாவமும் அறியாதவர்கள். அவர்கள் பாதுகாக்கப்படவேண்டியவர்கள். கல்வியானது அவர்களுக்குக் கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும். நாம் கட்டாயமாக அவர்களுக்குக் கல்வி கொடுக்காவிட்டால் அவர்கள் வலிய வந்து கல்வி பயில மாட்டார்கள். அந்த அடிப்படையிலே அந்தப் பிச்சைக்காரர்களுடைய குழந்தைகளுக்கு கல்வி அளிக்கும் ஒரு நல்ல

திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு நன்றிகூறி, முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பின் மீது பேசக்கூடிய நேரத்தில் இரண்டொரு வேண்டுகோள்களை நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களுக்கு மாநிலத்திலிருந்து ‘ கெஜட் ’ அனுப்பப்படுகிறது. மாவட்ட நிர்வாகங்களிலே ஒரு ‘ கெஜட் ’ போடுகிறார்கள். நிர்வாகத்தை நடத்தக்கூடிய முறைகளைப் பற்றியெல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் போடப்படுகிறது. ஆனால் அந்த மாவட்டத்திற்குரிய முறையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அது அனுப்பப்படாமலிருக்கிறது. எதிர்காலத்தில் அதை அனுப்ப வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தொகுதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. தொகுதிக்கு உட்பட்ட முறையில், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், நான்கு மாவட்டங்கள் இருக்கின்றன. நான்கு மாவட்டங்களிலுமே இருக்கும் நிலைமையைப் பிரச்சினையாக எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு அவசியத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றேன். நான்கு மாவட்டங்களிலும், ஆறு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்ஸில், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் நடைபெறுகின்றன. ஆரம்ப காலத்திலே எனக்கு ஒரு மாவட்ட மன்றத்திலே உறுப்பினராகவும், மற்ற மாவட்ட மன்றங்களிலே சிறப்பு அழைப்பாளராகவும் இருந்து கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பு கிட்டியது. கடந்த காலத்தில் எம்.பி.-யாக இருந்து, இன்றைக்கு குடி நீர் வடிகால் வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடிய திரு. கந்தப்பன் அவர்கள்தான் நான் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இந்த மன்றங்களில் கலந்துகொள்வதற்கான உரிமைகளைப் பற்றிச் சொன்னார்கள். நானும் எழுதிக் கொடுத்தேன். நான் கலந்துகொள்வதற்கும் ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் இருக்கும்போது தர்மபுரி டி.சி.யிலும், இங்கு சேலத்திலும் கலந்துகொண்டார்கள். ஏனென்றால் அவர்களுடைய எம்.பி. தொகுதி அப்படியிருந்தது. அதுபோல நான் ஆறு டி.டி.சி.க்களிலே கலந்துகொண்டிருந்தேன். சமீப காலத்திலே நான் ஒரு டி.டி.சி.யிலே தான் கலந்துகொள்ள முடியும் என்றும், மற்ற டி.டி.சி-க்களிலே கலந்துகொள்ள முடியாதென்றும் அறிவித்துவிட்டார்கள். ஆகவே, பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்கு அந்தந்தத் தொகுதிக்கு உட்பட்டு இருக்கக்கூடிய

மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலே கலந்துகொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மாநில, மற்றும் மாவட்ட அளவிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் கடிதங்கள் எழுதினால், அவ்வப்போது அதற்கான பதில்கள் வருவதில்லை. முறையாகவும், விரைவாகவும் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கும், குறைந்த அடிப்படையிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவிக்கும் வகையில் தக்க பதில்கள் அனுப்பும்படி அவர்களுக்குச் சரியான குறிப்புரைகள் வழங்கப்பட வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது மிகவும் முக்கியமான விஷயம். நாங்கள் தொகுதிகளிலே பணியாற்றும்போது, ஆங்காங்கு கொடுக்கப்படக்கூடிய பிரச்சினைகளை எழுதி அனுப்பும்போது, அதற்குத் தகுந்த பதில்கள் வந்தால்தான், அந்தப் பிரச்சினைக்கு உரியவர்களிடத்தில் தக்க பதில்கள் நாங்கள் எடுத்துச் சொல்ல முடியும். அதுதான் சிறந்த பணியாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இன்னொன்றையும் இந்த சந்தர்ப்பத்திலே கொண்டுவர விரும்புகிறேன். இப்படி தொகுதிப்பணி ஆற்றும் போது, எங்களுக்கு ஒருசில சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். தொகுதிப்பணிகளைச் செய்யும்போது, எங்களுக்கு ஸ்டாம்பு செலவு எல்லாம் ஏற்படுகிறது. ஆகையால் எங்களுக்கு ஸ்டாம்பு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். வேறு சலுகைகள் அதிகம் செய்யாவிட்டாலும்கூட, நாங்கள் ‘ கரஸ்பாண்டன்ஸ் ’ செய்வதற்கான, தபால் தொடர்புகள் கொள்வதற்கான, ஸ்டாம்பு எங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்கான கணக்குகளை வேண்டுமானால், கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆகவே, அதை ஒரு சலுகையாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போது அரசுத் துறையிலே இருப்பதுபோல, ஒரு குறிப்பிட்ட அளவு ஸ்டாம்பு வழங்கி, அது முடிவுற்ற பிறகு மீண்டும் பெறுவதற்கான ஒரு வசதியைச் செய்ய வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய டிஸ்ட்ரிக்ட் போலீஸ் நிர்வாகத்திலே, கோயம்புத்தூரில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதைக் கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். அதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு, இது ஒரு சந்தர்ப்பமாக இருக்கிறது என்ற காரணத்தினால் கொண்டு

வருகிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எதுவும் இதுவரை கொண்டு வருவதற்கான வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. நான் உண்மையைச் சொல்லுகிறேன். அந்தப் பகுதியிலே ஒரு ஆசிரியரை பள்ளியிலே புகுந்து அடித்துவிட்டார்கள். ஒரு பையன் திடீரென்று வெளியே சென்று விழுந்துவிட்டான். பின்னர் அவன் யாரிடமும் சொல்லாமல் வீட்டுக்கு ஓடிவிட்டான். விழுந்துவிட்ட காரணத்தினால் அவனுடைய மண்டை உடைந்துவிட்டது. அவனுடைய தந்தை ஊரிலே பெரிய மனிதர். அவர் உள்ளே புகுந்து அந்த ஆசிரியரை அடித்துவிட்டார். இந்த நிகழ்ச்சிக்காக அவர் இன்னும் 'அரஸ்ட்' செய்யப்படாமல் இருக்கிறார்.

மேலும், காங்கேயத்தில் இருக்கிற காவல் நிலையத்திற்கு நான் சென்றிருந்தேன். அந்தப் பகுதியில் நடந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டதில் எனக்குக் கொஞ்சம் அதிர்ச்சி ஏற்பட்டது. காங்கேயத்தில் இருக்கக்கூடிய ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வீதியிலே துரத்தப்பட்டு, அவர் அலுவலகத்திலே ஓடி ஒளிந்திருக்கிறார். அதுபற்றி எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். காவல்துறை அதிகாரிகளே இப்படித் துரத்தப்பட்டு, உயிருக்குப் பயந்து அவர்கள் அலுவலகத்திலே ஓடி ஒளிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு நிகழ்ச்சி ஒரு ஆறு மாதத்திற்கு முன்னாலே நடந்திருக்கிறது.

சமீபத்திலே துப்பாக்கியோடு ஒரு பெரிய மனிதர் உள்ளே வந்து அதனுடைய 'ஸ்டிகேட்டை' நீக்கிவிட்டுக்கொண்டு, இது ஒரு லைசென்ஸ் துப்பாக்கி என்று சொல்லி அந்த இன்ஸ்பெக்டரை மிரட்டி, அங்கு இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகளும் பயந்து வெளியே ஓடி, பின்பு அங்கு உள்ளே சீல் செய்து வைக்கப்பட்டிருந்த ஒரு லாரியையும் எடுத்துக்கொண்டு, லாரியை எடுக்கும்போது அதனுடைய டிரைவரையும் அடித்து, இப்படியெல்லாம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. இந்தச் செய்தியை நான் கேள்விப்பட்டு துணுக்குறுகிறேன். முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த நிகழ்ச்சியைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் என்ட்ரியாகி இருப்பதாகவே அறிய வருகிறேன். இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

சில இடங்களில் காவல்துறை அதிகாரிகள் மிகவும் அதிகமான அளவுக்கு மக்களிடையே கெடுபிடிகள் செலுத்துகிறார்கள். அந்த நிலைமையையும் பார்க்கிறேன். சில இடங்களில் காவல் துறை அதிகாரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தடுமாறுகிற நிலைமையையும் பார்க்கிறேன். இதையெல்லாம்

முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தயவுசெய்து இவற்றிற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, அமைச்சர்களுக்கு பல்வேறு முறையீடுகளைப்பற்றிக் கடிதங்கள் எழுதுகிறோம். தற்போது முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு எழுதக் கூடிய கடிதங்களுக்கு, சிறப்பு அலுவலர்களைப் போட்டு, அவ்வப்போது பதில்கள் வருகின்றன. முதலமைச்சர் அவர்களுடைய அலுவலர்களிடமிருந்து அனுப்பக்கூடிய பதில்களில் ஒரு குறிப்பிட்ட தேதியை வைத்து அனுப்புகின்றார்கள். "இரண்டு மாதத்திற்குள் தங்களுடைய வேண்டுகோள் முடிவுறும், இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடுகிறார்கள். மேலும், அவ்வாறு குறிப்பிட்ட தேதிக்குள் முடிவடையவில்லையாயின் மீண்டும் அறிவியுங்கள் என்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பு அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்படுகின்ற அந்தத் தேதிக்குள்ளாக, எந்த நடவடிக்கையும் சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களிலே எடுக்கப்படுவதில்லை என்பதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்களுடைய சிறப்பு அலுவலகத்திலிருந்து ஒரு தேதி குறிப்பிட்டு அனுப்பப்படுமானால் மாவட்டத் தலைமை அலுவலகங்கள் அதை மதித்துச் செயல்படும் ஒரு நடைமுறையை வகுத்து, சரியாகக் கண்காணிக்க வேண்டிய ஒரு குறிப்புரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதுபோல மற்ற அமைச்சர்களுக்குக் கடிதங்கள் எழுதும்போதும் பதில்கள் வருவதில்லை. பரிசீலனையில் இருக்கிறது என்றுகூட பதில் வருவதில்லை. உங்களுடைய கடிதங்கள் கிடைத்தன, தீர்மானங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன, அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன என்ற ஒரு பதில் தருவதற்கு எந்த ஒரு சங்கடமும் ஏற்பட்டுவிடாது என்று நான் கருதுகிறேன். ஆகையால் அந்த பதில்களை அவ்வப்போது கொடுப்பதற்கு உரிய முயற்சிகள் எடுக்க வேண்டு

(பிற்பகல் 4-40)

மென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நான் இரண்டு கடிதங்கள் எழுதினேன். ஒன்று மத்திய அரசின் கல்வித் துறைக்கும், இன்னொன்று இங்கு இருக்கின்ற கல்வித் துறைக்கும் எழுதினேன். மத்திய அரசிலிருந்து பதில்

வந்தது. ஆனால் இங்கே இருக்கின்ற கல்வித் துறையிலிருந்து பதில் ஏதும் வரவில்லை. என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, ஒரு சாதாரண பிரஜையானாலும், கடிதங்கள் என்று அனுப்பினால், அவைகளைக் கவனித்து அதிலுள்ள பிரச்சினைகள் பரிசீலனையில் இருக்கின்றன, இந்த நிலையில் இருக்கின்றன என்ற பதிலையாவது சொல்கின்ற ஒரு நல்ல முறையை நமது தமிழ் நாட்டு அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் டெல்லியில் உள்ள செக்ரட்டேரியேட்டைப் பார்த்திருக்கிறேன். நம்முடைய செக்ரட்டேரியேட்டையும் பார்க்கிறேன். இங்கே இருக்கக்கூடிய பணி சிறப்பாக இருக்கின்றது. இங்குள்ள பணியை இன்னும் சிறப்பாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இங்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு, நான் இங்கு சொல்லிய விஷயங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

* THIRU A. R. DAMODARAN : Sir, this is probably the first time that this House is discussing the Policy Note relating to General Administration and since some mention has been made of the Drought Relief Programme, may I take this opportunity of requesting one or two clarifications from the Government because I have not been able to get this information from the various statements that have been made?

Sir, the first doubt is this. It has been mentioned that Tamil Nadu has been granted Rs. 7.5 crores and that 70 per cent of this is a loan and 30 per cent is a grant. But what has not been mentioned is : While some mention has been made that it is likely to be adjusted in Plan assistance, it has not been clearly stated whether this is going to be adjusted in 1975–76 or in 1976–77 or whether there will be a time-limit of 15 or 20 years over a period of which this assistance for drought relief is likely to be adjusted by the Government of India. This is very important because even this year we are feeling the pinch, as we pointed out when we were speaking on the Policy Note on Public Health and we shall also point out while speaking on the Policy Note on Education. Because of the massive need for diverting funds from Plan programmes to drought relief, Tamil Nadu is going to suffer a great deal in its developmental activity and any attempt to adjust the loan given, in 1976–77 would mean a terrible setback to all developmental activities and would very well mean

that Tamil Nadu would lag behind almost all the other States and may fall well into the rear of the list. Therefore, this is a clarification which the Government of India must immediately give so that the Government may be able to plan its programmes accordingly.

The other point about drought relief is this. Sir, I have noted many statements made by persons who have appointed themselves as supervisors of the Drought Relief Programme and they have gone about saying—very important persons also—that according to the Drought Relief Programme, the wages that are paid to albourers should be anywhere between Rs. 4 and Rs. 6. In fact, critical comments have been made that in some areas, contractors were paying only Rs. 2 or Rs. 3 and I was very anxious to know whether any guideline had been laid down by the Government of Tamil Nadu regarding payment of wages to labourers in drought relief works. I find from this Policy Note that it has been clearly stated that a sum of Rs. 3 should be given as minimum wages for works carried out in drought relief works. In view of the fact that a general impression may be created that Government have provided higher wages for agriculturists and payment is being made only at Rs. 3 per day, I would like the Government to clarify what are the minimum wages that should be paid in such areas so that any misapprehension that may exist in the public mind may be removed speedily.

Sir, my third submission relates to the Reports that have been published by the Administrative Reforms Commission as early as in September 1973. A very impressive booklet was given to us on " District Revenue and General Administration ". There have been a number of recommendations made by this Administrative Reforms Commission and I am glad that two of these recommendations have been accepted, although they are very minor recommendations of the Commission. One relates to the waiver of interest charges on Land Revenue arrears and the other relates to the introduction of certain mechanised equipment in Taluk Offices—called ' Bradma ' equipment—for preparation of village records. We have been discussing in this House a number of revolutionary measures that have been introduced, such as rights of tenants to purchase land, land reforms, etc.; but in all

these Bills that have been passed one difficulty has always been experienced not only by Members sitting on this side but I think even by Members on the Treasury side and that relates to the absence of proper statistical data regarding ownership, tenancy, etc. Therefore, one of the important recommendations of the Commission was in relation to the structure of the Revenue Department in so far as the Village Munsif, Karnam, Talayari, etc., were concerned and it was pointed out that certain reforms were needed because the present basis of collection of statistics was extremely haphazard. We all know that the 'Adangal' is the most important record in the village. But unfortunately, the 'Adangal', 'Chitta' and other land records that the Village Munsifs are expected to prepare are all extremely hypothetical. In fact, even the Administrative Reforms Commission has pointed out that certain agricultural statistics such as crop forecast, gross production of foodgrains, marketable surplus, etc. are generally being compiled out of these defective basic data that are being gathered by village officers. I think we have come a long way from the old British system where the Village Officers were meant purely for revenue collection work. Today, they have very important functions to fulfil especially with regard to tenancy rights, rights of tenants to purchase land, land reforms, etc. The Government should have very accurate and adequate statistics in all these matters and I would strongly plead that the statistics-collection of the Village Officers be made in such a way that we do not have to ask questions every time the House meets about how many acres of land were transferred to the landless labourers under the Land Reforms Act, etc. It should be a continuous process. In fact, some sample data have already been furnished by the Administrative Reforms Commission regarding the defective statistical details that are being gathered. Since our entire planning effort in agriculture, education and public health depends upon the data that are furnished by the Village Officer—even the Hon. the Minister for Public Health will have to know how many children suffer from various diseases in the village and all this information has to be compiled only by the Village Officer—I would plead that this important recommendation of the Administrative Reforms Commission which was published in 1973 may kindly be gone into by the Government. I think it is of great importance in allowing us to plan for the future of our State.

Sir, the next question arose when I read a report about Family Cards. Mention was made by the Hon. the Minister for Food and Civil Supplies in his Policy Note also that as against an approximate 9 million Family Cards that should be issued, I believe, there was a lot of surplus duplicate cards that were being issued. This is a very big racket and I am sure there are considerable vested interests involved in this matter not only on the non-official side but possibly on the official side also and I think we ought to be ashamed of ourselves that in the year 1975 we have not yet been able to evolve a system whereby accurate and actual enumeration of family-members can be done. These works could be profitably done by the local bodies because they have persons who have considerable local knowledge. For example, if there is a member from the Municipal service coming to my house, I could not possibly lie to him, because there are always ways of cross-checking. It is possible that there has not been a proper co-ordination of work. Probably, a checking authority should also be there. Because I think during the next six months every ounce of rice that we are going to give through Family Cards is going to be of importance, it is necessary for us to see that anti-social elements do not take advantage and by furnishing duplicate family cards or by inflating the number of members in the family they do not draw more rice than what they are entitled to. I think to promote social responsibility, amongst all of us it is necessary that very strict action should be taken against all those who are misusing family cards by either inflating the number of members in the family or even by having duplicate family cards.

(பிற்பகல் 4-50)

The other point is this. In the last Session of the Legislature, we passed a very important amendment and in fact, I congratulated the Hon. Minister concerned, regarding the loud speaker menace that was there throughout our State and I requested the Hon. the Minister for Religious Endowments to kindly send a circular to all the temples asking them not to use the loud speakers during the month of Margazhi at 4 O' clock in the morning.

I do not know if instructions have been issued; but my intention in mentioning this is to request the Hon. the Chief Minister who is in charge of the Police portfolio, because the amendment to the Town Nuisances Act has been made, kindly to see that permission is not given to all and sundry to play this wretched loud speaker at all times of the day, because it disturbs business, it disturbr the patients, it disturbs the educational activities. . . .

MR. CHAIRMAN : It even disturbs the God.

THIRU A. R. DAMODARAN : Yes. I have already mentioned that I am not in favour of the temples playing the recorded music between 4 a.m. and 6 a.m. in the morning. I made it clear that neither temples, nor churches, nor mosques nor any public institution should be allowed to use loud speakers outside their premises. We have beautiful Mandapams in our temples where we can have any amount of Kacheris with loud speakers and so, it is unnecessary to use the loud speakers outside.

The other matter which I would like to stress is in regard to the protection of our parks, play-grounds, etc. Sir, this may seem to be a very small point when we are considering such important matters as drought relief and famine condition. Still I want to mention this, because even in my home town, Cuddalore Municipality, where we take so much pride in having a good Municipal Maidan, the Maidan has not been kept as it should be. In fact, when I was Chairman, I remember, Sir, a very great controversy arose about the location of the Subbarayalu Reddi Park and we did locate it in a portion which still exists today. The late Subbarayalu Reddi was the Chairman of Cuddalore Municipality for a number of years and he was the first Chief Minister of our State also. It is stated that in those days—1922-23—if anybody cut even a blade of grass, he would come on his horse and take very punitive action which I should not mention in these days. Sir, my only regret is that now the Maidan is being desecrated and in fact, a monstrous structure has been put up in a portion of the land where there was a toy train and it goes by the name of Open Air Theatre and massive construction has been made with an eight foot wall and an open air theatre. At

least we, in Tamil Nadu—and I have made this plea before—should show to the other people in our country that we have some sense of cultural appreciation and aesthetics. If we want to put up a nice theatre, we could have put up as they have put up memorials for Rajaji, Mahatma Gandhi and others and they are all structures which are pleasing and appealing to the eyes. My only plea is that the Maidan should be left free because it is the only lung space for our Town. We are very proud of our Maidan which consists of perhaps 80 to 90 acres and it is one of the most beautiful Maidans that exist in the whole of Tamil Nadu. Because we have the protection of Play-grounds Act, I hope the Government will kindly give directions to all the Collectors and Municipalities to the effect that when there is an Act, they should not desecrate Public Maidans by putting up such structures.

One more word and I have done, Sir. This relates to V.I.P. visits and the need for economy. I have mentioned this before and I am somewhat struck by the fact that even after 25 to 27 years of Independence, the way in which our Very Important Persons move about in India is something shocking to my sense of democracy. Sir, when we visit other countries—my hon. Friend Thiru Vasantha Pai may possibly be able to corroborate because he has been very recently to foreign countries and I had been there only 10 years ago—we find that the Prime Minister of U.K. walks from No. 10 Downing Street to the House of Parliament and no fuss is made about any V.I.P. who visits. But in Madras City every time we get a V.I.P.—it is unnecessary for me to mention names—the most annoying feature I find is that when I am travelling very much to the left of the road, whistles are blown and I am asked to stop on one side of the road, allowing those great personalities to pass. I think our V.I.Ps. should also adjust themselves to the fact that we have declared India to be a sovereign democratic Republic and that all of us are equal at least on the roads, though we may not be equal in other places.

THIRU G. VASANTHA PAI : My hon. Friend has omitted "Socialistic".

THIRU A. R. DAMODARAN: Sir it is not in the Constitution. It is a later development. I only mention that we should have a true appreciation of the need for an egalitarian concept in our socialist economy. The need for egalitarianism must be recognised and we should make less fuss like the stopping of cars on the road. There are a number of cars that follow the cars of the V.I.Ps. Even in Saudi Arabia with their magnificent supply of petrol, I do not think they would be using so many cars as we use in India to follow these gentlemen and to give them welcome. I am not saying that security arrangements should not be made but I make a plea, especially in view of the advice given by the Government to the general public that they should economise on expenditure, particularly on petrol, etc., and I hope that it will be possible for us to set an example to the people. When I refer to the V.I.Ps. in Delhi, it applies equally to the V.I.Ps. of our own State. We should not waste on unnecessary motor carriages going around behind the Ministers, because in these days it is likely to be misunderstood by the people who assume that all this is a deliberate show created by the Ministers. Unfortunately, the minions of the departments and the people who provide the security think it is necessary to provide all these and place these people in an embarrassing position. I only mention this because particularly in this hour when the people are suffering, we must at least give an indication to them that we are also adopting all the economy measures which the Government advise the people to follow. Thank you.

திரு. க. அறிவழகன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, முதற்கண் வறட்சி நிவாரண வேலைகள் நம்முடைய மாநிலத்தில் மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டு வருவதை இந்த அறிக்கை மிக நல்ல முறையிலே எடுத்துக் காட்டுகிறது.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

5—3—75 வரை ரூ. 17.8 கோடி மதிப்புள்ள 33,103 தனி நிவாரண வேலைகள் அனுமதிக்கப்பட்டன என்று அறிக்கை குறிப்பிடுகிறது. எனக்கு முன் பேசிய அருமை நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இதே அறிக்கையில் ஒருவருக்கு குறைந்த கூலியாக ரூ. 3 வீதம் 20 நாள் அடிப்படையில் கணக்கிடும்போது, ரூ. 55 கோடி வறட்சி நிவாரணப் பணிக்குத் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறிக்கையிலே

மூன்று ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கிற காரணத்தால், ஆண்களுக்கு ரூ. 3 வீதமும் பெண்களுக்கு ரூ. 2½ வீதமும் இராமநாதபுரம் மாவட்டத்திலே கொடுத்து வருகிறார்கள். நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் இன்றைக் கிருக்கிற வறட்சி நிவாரணப் பிரச்சினைகளிலே மிக முக்கியமாக, இந்தக் கூலியை உயர்த்தி எவ்வளவு அதிக அளவுக்கு நிர்ணயிக்க முடியுமோ, அந்த அளவு நிர்ணயித்தால்தான் இராமநாதபுரம் மாவட்டத்திலே வறட்சி நிவாரணப் பணிகள் நடந்துகொண்டிருக்கிற இடங்களிலே, அதனால் பயன் பெறுகிற மக்கள் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாநில ஆட்சித் தலைவர் என்ற தலைப்பில், இந்த சென்னை நகரத்திலுள்ள பல்வேறு பகுதிகளிலே பல்வேறு நல்ல காரியங்களை நம்முடைய மாநிலத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களும் அவர்களுடைய துணைவியாரும் எடுத்து நடத்தி வருகிறார்கள். அதிலே ஒன்று, சமீபத்திலே பிரதம அமைச்சர் அவர்கள் வந்தபோது 'விமன்ஸ் வாலண்டரி சர்வீஸ்' என்ற பெயரிலே ஸ்பர் டாங்க் ரோட்டிலே ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே கட்டிடம் கட்டுவதற்கு அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். சென்னை நகரத்தினுடைய அடிப்படையைப் பாதிப்பதாக இருக்கக்கூடியது திறந்த வெளிகளிலே புதிய கட்டிடங்களைக் கட்டுவது ஆகும். அது மட்டுமல்லாமல், விமன்ஸ் வாலண்டரி சர்வீஸ் என்ற பெயரிலே துவக்கப்பட்ட, அந்தக் கட்டிடம் கட்ட இருக்கிற இடம், 4 ஆயிரம் பெண்கள் படிக்கிற மாநிலப் பெண்கள் பள்ளிக்கு அருகாமையிலே இருக்கிற இடம் ஆகும். அந்த 4 ஆயிரம் பெண்களும் விளையாடுவதற்கு ஏற்ற சூழ்நிலையில் ஸ்பர் டாங்க் ரோட்டில் அவர்கள் பள்ளிக்கு அருகாமையில் உள்ள இடத்திலே 'விமன்ஸ் வாலண்டரி சர்வீஸ்' என்ற பெயரிலே கட்டிடம் கட்டப்படுமானால், அது மாநிலப் பெண்கள் பள்ளியிலே படிக்கிற பெண்கள் விளையாடுவதற்கு ஏற்ற இடமாக இருப்பது நிச்சயமாகப் பாதிக்கப்படும். அதை வேறு இடத்திலே கட்டுவதற்கு நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாநில ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

இரண்டாவது, எத்திராஜ் கல்லூரிக்கு பிரதமர் வந்த நேரத்தில், அதன் எதிரே இருக்கிற ஒரு பெரிய திறந்த வெளியில் மாநிலத்திலே உள்ள புத்திசாலிப் பிள்ளைகள் படிப்பதற்கேற்ற முறையில் ஒரு கட்டிடம் கட்டுவதற்கு நம்முடைய மாநில ஆட்சித் தலைவர் அவர்கள் பெரு முயற்சி எடுத்திருக்கிறார்கள். முயற்சி பாராட்டத்தக்கதாகும். அந்த எத்திராஜ் கல்லூரியிலே படிக்கிற இரண்டாயிரம்

மாணவியர்கள் விளையாடுவதற்கேற்ற இடம் இல்லாத சூழ்நிலையில், எதிரே இருக்கிற திறந்த வெளி கிடைக்குமா என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பிரதமருக்கு வசதியாக இருக்கட்டும் என்று, எதிரே இருக்கிற அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு நம்முடைய மாநில ஆட்சித் தலைவர் அவர்களும் அவருடைய துணைவியாரும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதையும் நிறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்வேன். இவை இரண்டும் நம்முடைய சென்னை நகரத்திலே உள்ள பகுதிகளிலே மேலும் மேலும் கட்டிடங்களைக் கட்டி, நெருக்கடிகளை உருவாக்குகிற முயற்சிக்குத் தடையாகவும் இருக்கும். அதே நேரத்திலே இளம் சிறார்கள் சிறுமிகள் விளையாடுவதற்கேற்ற பெரும் திடல்கள் வேறு பல பணிகளுக்குப் பயன்படுவது நிறுத்தப்படுவதும் மிக அவசியமாகும்.

(பிற்பகல் 5-00)

அடுத்தாற்போல், நம்முடைய சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அல்லது சட்டப் பேரவை உறுப்பினர்கள் இலவச மருத்துவ வசதியைப் பெற்று வந்தாலும்கூட, அவர்கள் வீட்டுத் துணைவியாரும் மக்களும் அதை அனுபவிப்பதற்கான வாய்ப்பு தரப்படவில்லை. அது எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும். வளர்ந்து வருகிற இந்த சமுதாயத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட வழங்கப்பட வேண்டும். இப்பொழுது என்.ஜி.ஓ-க்குளுக்கெல்லாம் வழங்குகிறோம், அவர்கள் குடும்பத்திற்கு வழங்குகிறோம், தொழிலாளர்களுக்கு வழங்குகிறோம், அவர்கள் குடும்பத்திற்கு எல்லாம் வழங்குகிறோம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு மாத்திரம் வழங்கப்படவில்லை. அரசாங்கக் கொறடா அவர்கள் பார்லிமென்ட் உறுப்பினர்களுக்குக்கூட வழங்கப்படுகிறது என்று குறிப்பிடுகிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவைத் துணைத் தலைவர் என்ற முறையில் எனக்குக்கூட வழங்கப்படவில்லை.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்குக்கூட வழங்கப்படவில்லையென்று கூறுகிறார்கள். அந்த இலவச மருத்துவ வசதி நிச்சயமாக வழங்கப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, நம்முடைய மாநிலத்திலுள்ள மாவட்டங்கள் எல்லாம் விரைந்து இரண்டாகப் பிரிக்கப்பட்டாக வேண்டும். அது ஆட்சி நடத்துவதற்கு எளிதாக இருக்கும். அதோடு மாத்திரமல்லாமல் நம்முடைய கல்வித் துறையை

எடுத்துக்கொண்டாலும் சரி, மற்றத் துறைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். கல்வித் துறையை எடுத்துக்கொண்டால்கூட, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் இருக்கிறார். நிர்ணயிக்க முடியாத ஒரு பரந்த நிலப்பரப்பிலே நூற்றுக்கணக்கான அலுவலகங்களையும், கல்வி நிலையங்களையும் கொண்டதாகக் கல்வித் துறை இருக்கிற காரணத்தால், அவர்கள் அதிலே தங்களுடைய முழுத் திறமைகளையும் ஈடுபடுத்த வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கிற புதிய முயற்சியை மிக விரைந்து எல்லா மாவட்டங்களிலும் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, நம்முடைய அருமை நண்பர் திரு. கே. எஸ். கணபதி அவர்கள் சிலபல ஆபாச சினிமாப் படங்கள் அல்லது ஆபாச சுவரொட்டிகளைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே நம் முன் இப்பொழுது அமர்ந்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் உலக நாடுகளுக்கெல்லாம் சென்றிருக்கிறார்கள். உலகெங்கிலும் அதை ஒழிப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டுத் தோற்றுப் போயிருக்கிறார்கள். இந்த வேலையைக் காவல் துறையினரிடம் கொடுத்தால், அது வீண் என்பதுதான் என்னுடைய கருத்து. சமுதாயத்தில் நல்ல பகுத்தறிவுப் பணி வளருகிற நேரத்தில், இது குறைய வாய்ப்பு ஏற்படும். நல்ல பகுத்தறிவுக் கருத்துக்களை மேலும் மேலும் வளர்க்க நம்முடைய பள்ளிக்கூடங்களிலே இருக்கிற ஆசிரியர்கள் மிகச் சிறப்பாக நல்ல கருத்துக்களைச் சொல்லச் சொல்லத்தான் இவைகள் எல்லாம் திருந்துமே தவிர காவல் துறையினருக்கு ஒரு கடுமையான வேலையாக ஒவ்வொரு ஆபாச சினிமாப் படத்தையோ அல்லது ஆபாச சுவரொட்டியையோ ஒட்டிக்கொண்டு வருகின்ற இந்த வேலையைத் தருவதிலே நாம் நிச்சயமாக வெற்றி பெற முடியாது. அதிலே வெற்றி பெறுவது நம்முடைய சமுதாய வளர்ச்சியிலே அவ்வளவு அவசியமான காரியமுமல்ல என்று நான் குறிப்பிட்டுக் கொள்வேன். இந்தக் கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொன்ன காரணத்தால், நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான பல காரியங்களை தன்னுடைய பிறந்த நாளின்போது செய்திருப்பதோடு நல்ல சமூகப் பணிகளையும் துவக்கி வைத்திருக்கிறார்கள் என்ற ஒரு நல்ல வார்த்தையை நம்முடைய மதிப்பிற்குரிய திரு. கணபதி அவர்கள் சொன்னார்கள்.

இதுவரையிலே உடல் ஊனமுற்றோருக்கு இந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள். உடல் ஊனமுற்றோரோடு சேர்த்து மூளை ஊனமுற்றோருக்கும்—'மென்டலி ரிடார்டட்' என்று அழைக்கப்படுகிறவர்களுக்கும்—அந்த நன்மையைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வேன். மேலும் மேலும் வளர்ந்து வருகிற சமுதாயத்தில் நம்முடைய பள்ளிக்கூடங்களில் மதிய உணவு தருகிறோம். நிச்சயமாக வறட்சிப் பகுதியிலே உள்ள பள்ளிக்கூடங்களிலே படிக்கும் பிள்ளைகளுக்கும், பொது இடங்களிலே உள்ள பிள்ளைகளுக்கும் இரண்டு வேளை உணவைத் தருகிற முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமானால், வறட்சி நிவாரணப் பணியினுடைய பெருமையை அந்தப் பகுதி மக்கள் மேலும் உணருவதற்கும் அதன் மூலம் நமது அரசினிடத்திலே நன்றிக் கடப்பாட்டுடன் நடப்பதற்கும், நேரடியாகப் பயன்படுவதாக இருக்கும். ஆகவே அங்கிருக்கிற குழந்தைகளுக்கு எல்லாம் இரண்டு வேளை உணவளிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

*திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புபற்றி நானும் சிறிது என்னுடைய அனுபவத்தைச் சொல்ல முன்வருகின்றேன். எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய நண்பர் திரு. அறிவழகன் அவர்களும், அவர்களுக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தாமோதரன் அவர்களும் இராமநாதபுரம் ஜில்லாவைப்பற்றி எடுத்துக் கூறினார்கள். அது உள்ளபடியே எனக்கு வியப்பாக இருக்கின்றது. இராமநாதபுரம் ஜில்லாவில் இரண்டு, மூன்று ரூபாய் கூலி கொடுக்கப்படுவதாக ஆங்கிலத்தில் பேசிய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னதாக மதிப்பிற்குரிய நண்பர் திரு. அறிவழகன் அவர்கள் சொன்னார்கள். அந்தமாதிரி இராமநாதபுரம் ஜில்லாவிலே எந்த இடத்திலே எந்த ஊரிலே நடக்கிறது என்பது இராமநாதபுரம் ஜில்லாவைச் சுற்றிச் சுற்றி வரும் எனக்கே தெரியவில்லையென்றால், அவ்வாறு அவர்கள் பேசியது பொருத்தமில்லாத காரியம் என்றே நான் நினைக்கிறேன். பொதுவாக கவர்னர் அவர்கள் அங்கு வந்திருக்கிறபோதுகூட, அங்கு பணியாற்றுபவர்களிடம் நேரில் கேட்டார்கள், "உங்களுக்குக் கூலி எவ்வளவு?" என்று. அங்கே தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்த பெண்களிடம் கேட்டதற்கு அவர்கள் 4 ரூபாய் கூலி தருகிறார்கள் என்று தெரிவித்தார்கள். மண் வெட்டிக்கொண்டிருந்த தொழிலாளர்களிடம் கேட்டதற்கு அவர்கள் 5 ரூபாய், 6 ரூபாய் என்று தருவதாக கவர்னர் அவர்களிடம் தெரிவித்தார்கள். இந்த நிலையிலே நான்

நல்ல கூலி கிடைக்கிறது என்றுதான் எண்ணுகிறேன். நல்லது செய்து கொண்டிருக்கிற இடத்திலே போய், இப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய மனம் எப்படியிருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் அப்படிப் பேசவில்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தவறைத் திருத்திக்கொள்ளுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள்தான் 2 ரூபாய், 3 ரூபாய் என்று கூலி கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஜில்லாக்களைப் பிரிக்க வேண்டுமென்று இங்கே பேசப்பட்டது. எனக்குத் தெரிந்த அளவிலே, இன்றைக்கு இருக்கிற மற்ற ஜில்லாக்களைப்பற்றி நான் அதிகமாக எடுத்துச் சொல்ல முன்வராவிட்டாலும் கூட, என்னுடைய இராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரையிலே, 4 ஜில்லாக்களாகப் பிரிக்க வேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால் ஒரு ஜில்லா என்பது 10 இலட்சம் மக்கள் தொகைக்கு உட்பட்டதாக இருந்தால்தான் அந்த ஜில்லாவின் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும். இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகமே ஸ்தம்பித்துப் போயிருக்கிறது, ஒரு பக்கத்திலே நடைபெறும் வேலையை இன்னொரு பக்கத்திலே இருக்கும் கலெக்டரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதேபோல் ஒரு பக்கத்தில் நடைபெறும் வேலையை இன்னொரு பக்கத்தில் இருக்கும் டிவிஷனல் அதிகாரிகளாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இது என்னுடைய நீண்டநாள் அனுபவம். பொதுவாக, பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால்கூட, அதன் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்பதை நான் அனுபவபூர்வமாக அறிந்துகொண்டு வருகிறேன். அது எங்கெங்கெல்லாமோ சுற்றிச் சுற்றி கடைசியாகக் கோட்டைக்கே வந்து சேர்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கிறபோது, அந்த ஜில்லாவை 10 இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஒரு ஜில்லா என்ற வகையிலே பிரித்தால், அவ்வாறு பிரிக்கப்பட்ட ஜில்லாவின் நிர்வாகம் ரொம்ப சீராகவும் சிறப்பாகவும் இருக்கும் என நான் நம்புகிறேன். என்னுடைய பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையிலே, அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே ஒரு நிர்வாகஸ்தர் ரொம்பத் தவறாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதை எடுத்துக்காட்டி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு அத்தீர்மானத்தை பஞ்சாயத்து யூனியன் சேர்மேன் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக டி.ஆர்.டி-க்கு அனுப்பி 3 வருஷம் ஆயிற்று. இன்னும் அதற்கு எந்தவிதமான

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எடுக்க முடியவில்லை. அல்லது சில குறுக்கீடுகளால் எடுக்க முடியவில்லை. அதை ஒரு குறைபாடாக நான் இங்கே கூறவில்லை. சரியாக நிர்வாகம் நடைபெற முடியவில்லை என்ற தகவலைத் தான் நான் இங்கே தருகிறேன். மேலும் இந்தக் குறுக்கீடு இன்னமும் தீர்ந்தபாடில்லை, குறைந்தபாடில்லை. அந்தக் குறுக்கீடுகளினால் சில நிர்வாக ஊழல்களும், நிர்வாகக் கேடுகளும் நடந்துகொண்டிருக்கின்றனவேயொழிய, அதை நிறுத்த இன்னும் முன்வரவில்லை. யார் எங்கு தவறு செய்தாலும், இல்லை ராமகிருஷ்ணத் தேவர் தவறு செய்தாலும்கூட, முதலமைச்சர் அவர்களைத்தான் குற்றம் சாட்டுகிறார்கள், சாடுகிறார்கள். பட்டா கொடுப்பதை எடுத்துக் கொண்டால், தாலுகாவை எடுத்துக்கொண்டால், நல்ல புத்தகங்களை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புத்தகங்கள் படும் பாடும் அதனுடைய நிலையும் அந்த முருகனுக்குத்தான் வெளிச்சம். எப்படி அதைப்பற்றிச் சொல்லுகிறது என்பதே எனக்குத் தெரியவில்லை. ஒரு கர்ணம் பதவியை எடுத்துக்கொண்டால், அவனுக்குச் செய்ய வேண்டியவற்றை முறையோடு செய்து அவனை டிஸ்மிஸ் பண்ணி அதன் பிறகுதான் இன்னொரு கர்ணத்தை நியமிக்க வேண்டும். அவன் இருக்கிறபோதே இன்டர்வியூவுக்கு 'கால்' பண்ணுகிறார்கள். இந்தப் பதவிக்கு எல்லா இடங்களிலிருந்தும், சென்னை உட்பட, 200 மனுக்கள் 300 மனுக்கள் என்று வரும். ஏகப்பட்ட விசாரணை நடைபெறும். ஆர்.டி.ஓ.-வுக்கு எல்லாவற்றையும் பரிசீலித்து அனுப்புவார்கள். ஆர்.டி.ஓ.விடமிருந்து முன்னால் இருக்கிறவன் பணியில் இருக்கும்போது பின்னால் வேறு ஒருவனுக்கு வாய்ப்பு இல்லையென்ற பதில் வரும். அவன் அதுவரைக்கும்

(பிற்பகல் 5-10)

பட்ட பாடு என்ன? இதிலே எனக்குத் தெரிந்தது, ஒருத்தன் 8-வது வரை படித்தவன் மனு போட்டான். 10-வது பெயில் ஆனவன் ஒருத்தன் வேலைக்கு மனு போட்டான். இந்த இரண்டு பேருக்கும் கிட்டத்தட்ட ரூ. 4,000, 5,000 செலவு ஆகியிருக்கிறது. இந்த இரண்டு பேருக்கும் எப்படி ஆயிற்று? 8-வது படித்தவன் மெட்ரிக் எழுதப்போனானும் திருச்சிக்கு. பரீட்சையில் உட்கார்ந்து விட்டு வந்துவிட்டான். சட்டத்திலே எட்மன் வேலைக்கு 'கண்டஸ்ட்' பண்ணுகிறவன் எஸ்.எஸ்.எல்.சி. கிளாசிலே உட்கார்ந்து விட்டு வந்தால் போதுமென்று இருக்கிறதாம். அந்த முறையிலே 8-வது படித்தவன் மெட்ரிக்குக்குப் போய் உட்கார்ந்து விட்டு வந்துவிட்டான். பெயில் ஆகிவிட்டான். 10-வது படித்தவனுக்கு மேலே போய்விட்டான். அவன் பெயில் ஆகிவிட்டாலும் பரவாயில்லை. இந்த இரண்டு பேரும் ஆர்.டி.ஓ.-விடம் போனார்கள். இரண்டும் செல்லாது என்று தள்ளினார்கள். இதற்கிடையிலே ரூ. 4,000 செலவு. இதற்கெல்லாம்

போய் சட்டங்கள், விளக்கங்கள் எல்லாம் கொடுத்தார்கள். கடைசியாக அந்த எட்மன் இருக்கிறான். அவனை விலக்க சட்டம் இல்லையென்று சொல்லிவிட்டார் ஆர்.டி.ஓ. இந்த மாதிரியெல்லாம் சீர்கேடு நடந்துகொண்டிருப்பதைச் சொல்ல முடியும். இவையெல்லாம் நிர்வாகம் குறுக்கிடுவதால், அதிகாரிகள் குறுக்கிடுவதால் வந்த நிர்வாகச் சீர்கேடு. நிர்வாகம் சரியாக இல்லாததால்தான் அதிகாரிகள் இப்படிப் பண்ணுகிறார்கள். இந்த மாதிரி குறுக்கீடுகளையெல்லாம் இங்கே தடுக்க வேண்டும். 10 லட்சம் ஜனத் தொகையை ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பிரித்தால், இந்த நிர்வாகம் நன்றாக நடக்கும். பஞ்சாயத்து யூனியனிலே பணங்களைச் சாப்பிட்டுவிட்டு, முதல் கட்டமாக பொது நிதியிலிருந்து செலவு பண்ணுவார்கள். அன்றைக்கு அப்படிப் பண்ணினார்கள். ரி-இம்பர்ஸ்மெண்ட் வாங்காமல் விட்டுவிட்டார்கள். கவுன்சிலின் அனுமதி வேண்டுமென்று காகிதத்திலே இருக்கிறது. அவனைப் பொறுத்தவரை நடவடிக்கை எடுத்தால் அது பூராவுமே வந்துவிடும். இந்த மாதிரிக் குறைபாடுகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து நல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது என்னுடைய நோக்கம். என்னுடைய பஞ்சாயத்து யூனியனிலே 2,20,000 ரூபாயைப் பொது நிதியிலிருந்து எடுத்து 1961-ம் வருஷத்திலிருந்து செலவு பண்ணினார்கள். இன்னும் ரி-இம்பர்ஸ்மெண்ட் வாங்காமல் போய்விட்டது. வாங்க வேண்டுமென்று எனக்குத் தெரிந்தால்தானே? என்ன படித்துவிட்டு வந்தவர்கள் நாங்கள்? ஏதோ ஜனங்கள் ஒரு 50 பேர் சேர்ந்து ஓட்டுப் போட்டார்கள். சேர்மனாக வந்துவிட்டோம்.

திரு. சி. வி. ராஜகோபால்: படிப்பைப்பற்றி என்ன? சேர்மன் நீங்கள் தானே? நீங்கள் தானே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: ரி-இம்பர்ஸ்மெண்ட் ஆர்.டி.ஓ.தான் வாங்க வேண்டும். வருஷா வருஷம் ஆடிட் நடக்கிறதே. ஒவ்வொரு வருஷமும் 4 தடவை நடக்கிறது. அதிலேயெல்லாம் எழுதித்தான் இருப்பார்கள். இதை விசாரித்து இந்த 2,20,000 ரூபாயை யார் யார் காலத்தில் வாங்காமல் இருந்தார்களோ, அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் சொத்தை ஜப்தி செய்ய வேண்டும். ஒரு இடத்திலாவது இப்படிச் செய்தால் தானே அவர்களுக்கு பயம் வரும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ரூ. 2,20,000 வரவில்லையென்று திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எப்படிப் பணம் வாங்காமல் விட்டார்கள்? பி.டி.ஓ.விற்கு அதுபற்றித் தெரிவிக்க

வில்லையா? ஆடிட் அப்ஜக்ஷன் செய்யவில்லையா? அது முழுவதும் வரவில்லையா? முழுத் தகவலையும் கொடுத்தார்களேயானால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கலாம். தகவல் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : 1961-ம் வருஷத்திலிருந்து இந்தப் பணத்தைச் செலவு செய்தார்கள். 1975-ம் வருஷத்திலே இந்த வறட்சி நிவாரணம் வந்த பிறகு, டி.ஆர்.டி. இடமிருந்து இதுவரைக்கும் ரி-இம்பர்ஸ்மெண்ட் வாங்கவேண்டிய பணம் இருந்தால் எவ்வளவு என்று கேட்டார்கள். அதற்கு ஒரு கணக்குக் கேட்கிறார்கள். அது 1974-75-ம் வருஷத்திற்கு. 1961-ம் வருஷத்திலிருந்து இந்தக் கணக்கைக் கொடுத்தால், அது தப்பாக வந்துவிடும். ஏன் இதுவரைக்கும் வாங்கவில்லையென்று கேள்வி வந்தால், என்ன செய்ய முடியும்? அதற்குப் பிறகுதான் கண்டுபிடிக்க வேண்டிய எல்லா நிலைமையும் வந்தது. இல்லையென்றால் அதையும் கண்டுபிடித்திருக்க முடியாது. கண்டு பிடித்தாகிவிட்டது. நான் கொடுக்கிறேன் கணக்கு. எந்தெந்த வருஷத்திலே வாங்காமல் இருந்தார்கள் என்று கொடுக்கிறேன். 1964-ம் வருஷத்திலிருந்து 1974-ம் வருஷம் வரை ரூ. 2,20,000-ம் எந்தெந்த வருஷத்திலே எந்தெந்தத் தலைப்பிலே எடுக்கப்பட்டது என்று கேட்டால், கொடுக்கிறேன் கணக்கு. அதுபற்றி அமைச்சரவர்களுக்கு எழுதுகிறேன். எழுதியே கொடுத்துவிட்டோம் இப்போது. கணக்கை வாங்கி, வசூல் பண்ணுங்கள் என்று சொல்லிவிட்டோம். எங்கே வசூல் பண்ணப் போகிறார்கள்? வசூல் பண்ணமாட்டார்கள். வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதிகாரிகளிடம் வந்து வசூல் செய்ய வேண்டிய காலத்தில் அவர்கள் சொல்லியிருந்தால் நடவடிக்கை எடுத்து வசூல் செய்திருப்பார்கள். காலாவதியாகிவிட்டால், முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்று கேட்கலாம். ரி-இம்பர்ஸ் செய்ய வேண்டுமென்று சொன்னால், சரியாகக் கேட்கப்பட்டிருக்கிறதா என்று தெரிய வேண்டும். செலவழிக்கப்பட்ட பணம் ரி-இம்பர்ஸ்மெண்டுக்கு உரியதுதானா? எல்லாப் பணமும் 'ரி-இம்பர்ஸ்மெண்டு'க்கு வரமுடியாது. முழு விவரத்தையும் கொண்டுவந்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : முழு விவரத்தையும் யார் கொண்டுவந்து கொடுக்க? 1961-ம் வருஷத்திலிருந்து 1974-ம் வருஷம் வரைக்கும் ரூ. 2,20,000 வரவேண்டும். கலெக்டருக்கு, கவர்ன்மெண்டுக்கு எழுதியாயிற்று. என்ன சொல்லுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அல்லவா கேட்க வேண்டும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அவர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது பி.டி.ஓ. விடம் சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்படி பி.டி.ஓ. அவர் சொன்னதைக் கேட்கவில்லையென்று சொன்னால், கலெக்டரிடம் சொன்னால், அவர் நடவடிக்கை எடுத்திருப்பார். உடனடியாக அதை அவர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பி.டி.ஓ.விடம் சொல்லி நடவடிக்கை எடுக்காவிட்டால், டி.ஆர்.டி.-க்குத் தெரிவிக்கலாம். அதன் பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுக்குத் தெரிவிப்பாரேயானால், அரசு நடவடிக்கை எடுக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : கலெக்டரிடம் கொடுத்திருக்கிறோம். கலெக்டர் கேட்டிருக்கிறார். இந்த 'பீரியடிலே' முடியுமா, கொடுப்பார்களா, என்று நான் சந்தேகப்படுகிறேன். ஆனால் இது இப்படியே நாளடைவில் வந்துவிட்டது. 'நீ தானே சேர்மன்?' என்று உடனடியாக நியாயமான கேள்வியைப் போடுகிறார்கள். சேர்மனுக்கு அங்கே என்ன பவர் இருக்கிறது? ஒரு கிளார்க் அஜெண்டாவைத் திருத்தினான் என்பதற்காக அந்த ஊரை விட்டு மாற்ற வேண்டுமென்று சொன்னோம். இன்றுவரை மாற்றவில்லை. டி.ஆர்.டி.கூட கலெக்டருக்குச் சொன்னார். இன்னும் மாற்றவில்லை. இந்த நிலைமையெல்லாம் இருக்கிறது. அதில் நான் என்ன செய்ய முடியும்? நான் சொல்லுவதெல்லாம், முதலமைச்சர் இதையெல்லாம் சரியாகத் திருத்தினால்தான், இந்தக் காகிதம் எல்லாம் இவ்வளவு அழகாக இருக்கிறது என்று நான் ஒப்புக்கொள்ள முடியும். இல்லையென்றால், அது பழைய பாதையாகத்தான் இருக்கும். நான், நல்லதைச் செய்தால் நல்லது என்று சொல்லுவேன். சிருஷ்டித்தவன் வந்து சொன்னாலும்கூட நல்லதைக் கெட்டது என்று சொல்லமாட்டேன். கெட்டதைச் செய்துவிட்டு அதைச் சொல்லாதே என்றால் என்னைத் தூக்கில் போட்டாலும் சொல்லாமல் இருக்க மாட்டேன். நாங்கள் ஒரு சின்ன பஞ்சாயத்து யூனியன் வைத்திருக்கிறோம். நாங்கள் என்ன தமிழ் நாடு பூராவும் ஆளவா நினைக்கிறோம்? ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த கதி என்றால், மாநில ரீதியிலே என்ன பண்ணியிருக்கிறார்கள் 3 வருஷமாக. இதை நான் சொன்னால் நேரடியாக நான் செய்தது மாதிரி வந்துவிடும். அப்படியல்ல நான் பேசுவது.

(பிற்பகல் 5-20)

அடுத்து, இந்த பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதுபற்றி உத்தரவு போட்டிருக்கின்றார்கள். சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்கு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள். பத்தாயிரம் ரூபாய் கிடைக்கிறது என்றால் இப்போதே போய்விடுவார்கள் போலிருக்கின்றது. அந்தமாதிரி ஒரு போக்கு இருக்கின்றது. அதற்கு எடுத்துக்காட்டாக 'குமுதத்தில்' கூட ஒரு அம்மையார் கொலை பண்ணிய பிரச்சினைபற்றி . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏதோ சில விஷமத்தனம் செய்கின்ற பத்திரிகைகளைக் கொண்டு திரு. ராமகிருஷ்ணத் தேவர் போன்ற பெரியவர் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. இந்தப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கின்ற திட்டத்திற்கு முன்பாகவே ஆயுள் இன்ஷூரன்ஸ் திட்டம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்றது. அதிலே கூட ஒருவர் இறந்துவிட்டால், உடனடியாக அவர் செய்துகொண்ட இன்ஷூரன்ஸ் பணம் அவருடைய மனைவிக்கோ அடுத்தவருக்கோ கிடைக்கின்றது. அதற்காக யாரும் கொலை செய்துவிடுவதில்லை. எங்கேயோ ஒரு கொலை நடந்ததை வைத்துக்கொண்டு, இந்தத் திட்டமே தவறு என்று சொல்லி, ஏழு லட்சம் அரசு ஊழியர்கள் பெறும் பயனை அவர்கள் இழந்து விடக்கூடிய அளவிற்குப் பிரச்சாரம் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சில பத்திரிகைகள் அரசு எதைச் செய்தாலும் அதற்கு உள் நோக்கம் கற்பிப்பதையே தங்கள் வேலையாகக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பத்திரிகைகள் வீசும் வலையில் திரு. ராமகிருஷ்ணத் தேவர் போன்ற பெரியவர்கள் விழுந்து விடக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவரவர்களே, பத்தாயிரம் ரூபாய் தருவதைத் தவறு என்று சொல்லவில்லை. கொடுக்கட்டும். ஆனால் இந்தமாதிரியெல்லாம் அரசாங்கத்தில் நல்லது செய்கின்றபோது ஒரு கெடுதலையும் ஏற்பாடு செய்துவிடுகின்றார்களே என்றுதான் சொல்லுகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுக்கு இந்த ரூ. 2,20,000 தொகையைப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் ஏதாவது முடிவாகச் செய்ய வேண்டும். டி.ஆர்.டி. அவர்கள் உடனடியாக உத்தரவு போட்டோ அல்லது எங்களுக்கு அதை யார் மூலமாகவாவது, அரசாங்கம் கொடுத்தாலும் சரி

அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகள்—தவறிப்போய் இதுவரையில் அதை வாங்காமல் இருந்துவிட்ட அதிகாரிகள்—மூலமாகவாவது எங்களுக்கு அந்தத் தொகையைக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிர்வாகத்தில் இப்போதுள்ள அளவிற்குப் பெரிதாக இல்லாமல், சீக்கிரத்தில் சின்னச் சின்ன ஜில்லாக்களை அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* THIRU D. V. D'MONTE : Hon. Deputy Chairman, Sir, at the outset, I must welcome the policy and action suggested in the Policy Note on District Administration. I have just two points to make. In this connection, I refer particularly to drought relief which has been put on a war footing. The plea that I would like to make today is that the labourers engaged in relief works should be given a fair and just wage. This point has been raised by some of my hon. Friends here, because apparently even the Governor of Tamil Nadu has made some reference to low wages. . I hope that this matter will be taken up by the Government. I urge at least a wage of Rs. 7 to Rs. 10 should be paid to those labourers who are suffering so much.

The other point, Sir, is in regard to drought situation itself which is likely to worsen over the next 3 months. I am sure a very detailed course of action and planning is before the Government and I would earnestly urge the Government to look into this aspect of this matter as well. Apart from finance and other considerations, it is important that we should gear up ourselves to meet difficulties not only in the matter of drought relief but in the matter of drinking water also. The whole work is done for relief with blood money being put into it. This is rather an urgent matter and should be treated with consideration as tens of thousands of people and their very lives are concerned. Thank you.

THIRU G. VASANTHA PAI : Hon. Deputy Chairman, my hon. Friend Thiru Damodaran, in his speech, referred to the treatment we accord to V.I.Ps. and Heads of State and also the enormous wastage that was incurred in this behalf. Sir, I would like, at the outset, to say that this is not the result of a mere treatment to the V.I.P. alone; but this is also due to the hero-worship that exists in every Indian mind. Sir, I would mention

only one recent instance. When I had been to the Airport, I found a big banner stating "Hail the Conquering Hero in Hockey". I found that the hero was a person who had never played Hockey, who was the President of the Hockey Federation and who went to Kualalampur and came back. I ask, Sir, why should so much of time and money be wasted and persons asked to come to the Airport?

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

Why should money on advertisement be wasted for that single purpose? We have got an innate habit of hero worshipping and spoiling even our hockey players. Similarly when the Amritharaj Brothers were felicitated, we found that there was a decided decline in their performance in the tennis field. Similarly whenever we started giving 'Padma Bhushan' and 'Padma Sri' titles to our hockey players, there was a decline in their performance. Similarly in the field of cricket also it happened. Sir, this hero worship should stop. I feel, to meander in the way in which my hon. Friend Thiru Damodaran spoke, the Heads of State should set an example for this purpose. I would refer in this connection only to one instance. I was in Chicago in the year 1971. I travelled with my wife from Chicago to Buffalo. But the Flight U.A. 444 was cancelled. The Air-India had given me a ticket on that flight in the coach. The United Airlines felt sorry for me and asked their American Airlines counterpart to give me and my wife a seat. They had no coach and so they gave a free first-class to travel. Sir, along with me there was one gentleman and I found he was a very important person because in the coach behind him sat one body-guard with a revolver in his hip pocket. So, I was wondering who the person was. When I travelled from Chicago to Buffalo, I made friends with him. He talked freely to me and my wife and enquired about the conditions in India. As he was alighting from the plane, I asked him, "Sir, may I know to whom I am talking?". He said, "I am Mr. Rogers, First Secretary to the President". Sir, there was nobody to see him off, no Government servant to see him off, no Government official wasted his time to come to the airport to see him off. At the Buffalo airport, the only

person who received him was the driver with his Mercedes-Benz car. Then he took leave of us and he carried his own suitcase, went to the car and drove away with the person who was his body-guard sitting in the front. I was so much struck by this that I referred to this earlier and that was the reason why Thiru Damodaran quoted me.

Sir, I was only referring to this for two reasons.

* * * *

Then, Sir, the Governor nominates five Members to this House. A healthy custom has been set up that for each turn new persons are nominated and not the same old persons are repeated however much they might have contributed. Similarly, the Hon. the Chief Minister has set a good example that persons who come elected by Members of the Assembly should be persons who have not already sat in the House. That is a healthy convention which he has set up. Sir, if that is so, why should the office of Sheriff be given to the same person twice; I do not understand. I say, Sir, the gentleman who has held such office of a dignitary like the Sheriff, should not be given the same post twice over. I strongly feel that because these are not what are called Chiltern Hundreds to be given away at your free will. There are hundreds of thousands of people who might have done service to the State and who deserve to be appointed to such office and the same person should not be appointed twice over for the same purpose. That is so far about the Head of State. When I went there to the Government House, I found

* * * *

as a matter of courtesy—which I was told I must observe—I signed in the Government House Register and when I went there I found that . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாநில ஆளுநர் அவர்களைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், மாமன்றத்திலே அனுஷ்டிக்க வேண்டிய மரபுகள் சில இருக்கின்றன. ஆகவே, அந்த மரபு கடந்து பேசுவது முறையாகத் தெரியவில்லை. அதைப்பற்றி தாங்கள்தான் ஒரு முடிவு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* Expunged as ordered by the Chair.

THIRU G. VASANTHA PAI: Sir, I now wish to join issue. . . . .

MR. CHAIRMAN: * * *

THIRU G. VASANTHA PAI: * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கவர்னர் பதவி இருக்கலாமா, இருக்கக்கூடாதா என்பது பற்றிக் கூட பேசலாம். ஆனால் கவர்னர் பதவியை ஒத்துக்கொண்டு அதன்பின் செயல்படுகிற அரசின் ஒரு மன்றத்தில்

* * * *

MR. CHAIRMAN: Please hear it, "Members should not discuss the action of the Governor".

THIRU G. VASANTHA PAI: Sir, I am not. You are mainly mistaken.

MR. CHAIRMAN: What is the hon. Member saying? I do not make any mistake. What does he mean by speaking like this?

THIRU G. VASANTHA PAI: Sir, let me clarify.

* * * *

MR. CHAIRMAN: First of all, the hon. Member should not talk of the Governor. He should not refer to the matter at all here.

THIRU G. VASANTHA PAI: The Policy is about the Head of State. If I was prevented.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை கவர்னர் ஒரு மாநிலத்திற்குத் தேவையில்லை என்பது. ஆனாலும் இந்த ஆளும் கட்சி எதிர்க்

* Expunged as ordered by the Chair.

கட்சியாக இருக்கிற நேரத்திலே கூட கடைப்பிடித்த சில அரசியல் நாகரிகங்கள் உண்டு. கவர்னரைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு பேச வேண்டும் என்கின்ற கொள்கையை வகுத்துக்கொண்டு தான் நாங்கள் பேசியிருக்கின்றோம். ஆகவே, இப்பொழுது நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள் பேசுகின்ற விஷயங்கள், உள்ளபடியே கவர்னர் அவர்களைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் அதை ஏற்றுக்கொண்டு இந்த அவையிலே அமைச்சர்கள் அமர்ந்திருக்கிறார்கள் என்பதும் அதைத் தாங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள் என்பதும் உள்ளபடியே வியப்புக்குரிய ஒன்றாகவும், வேதனைக்குரிய ஒன்றாகவும் ஆகிவிடும். ஆகவே, கவர்னர் அவர்கள் பற்றி திரு. வசந்த பாய் அவர்கள் பேசிய பேச்சுக்கள் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படவேண்டும் என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, I have not said anything about the Governor. I want to prove......

MR. CHAIRMAN: Please be seated, Mr. Vasantha Pai. First you must obey my orders. Then you may prove whatever you like.

THIRU G. VASANTHA PAI: Sir, I must be heard on my point. I have never said anything about the Governor.

* * * *

MR. CHAIRMAN: The hon. Member is always mentioning the name of Governor. At the same time, he is saying that he has not mentioned the name of the Governor.

THIRU G. VASANTHA PAI: * *

MR. CHAIRMAN: I shall read the rule. A member while speaking must not—

reflect upon the conduct of the President or any Governor or any Court of Justice or irregularly use the Governor's or President's name for the purpose of influencing a debate;

* Expunged as ordered by the Chair.

utter treasonable, seditious, defamatory or unparliamentary words; or

use his right of speech for the purpose of obstructing the business of the Council.

THIRU G. VASANTHA PAI: Sir, I am not guilty of any of these things. You are reading certain things about sedition.

MR. CHAIRMAN: If the hon. Member refers to the Governor here, that is what is stated in the rules.

THIRU G. VASANTHA PAI: We are discussing the Policy Note on Head of State. I am suggesting that the Head of State should not have public subscription made in his name, because private persons may misuse the opportunity to come into contact with the Head of State. I am not saying anything against the Head of State. I am saying it as a policy that the Head of State should not collect subscription. I am not saying that so and so has collected it and that so and so is guilty of something.

MR. CHAIRMAN: It is not in the Policy Note. The hon Member is mentioning the Governor.

THIRU G. VASANTHA PAI: Then why bring the Policy Note on Head of State for discussion here?

MR. CHAIRMAN: Where is the name of the Governor in the Policy Note?

(பிற்பகல் 5-30)

THIRU G. VASANTHA PAI: I have to mention the name of the Head of State. The Governor is the Head of State here. I have not mentioned his name. I never said that so and so, so and so, so and so.

* * * *

* Expunged as ordered by the Chair.

How can you say that I have entered upon grounds which are prohibited to me? I respectfully say ....

MR. CHAIRMAN: * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் ஒரு நல்ல யோசனையை எடுத்துச் சொன்னார்கள். அந்த யோசனையின்படி தகுதி வாய்ந்த ஏழையெளிய மாணவர்கள், நல்ல மதிப்பெண் எடுத்த மாணவர்கள்—இவர்களுக்கு விடுதிகள் அமைத்துத் தர வேண்டுமென்ற யோசனை அது. அந்த யோசனையின் அடிப்படையில் ஆங்காங்கு மாவட்டங்களிலே உள்ள வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள் அதற்காகப் பணம் கொடுத்து அப்படிப்பட்ட விடுதிகள் வைக்கப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI: Sir, I want to submit that * * and I am told that the Prime Minister of India also came in that connection in 1970.

MR. CHAIRMAN: * *

THIRU G. VASANTHA PAI: * * *

This is my submission. If you wish to accept it, you may accept it. If you think I am wrong, you may correct me. But I have read in the papers and I have found a statement that the money . . .

MR. CHAIRMAN: Certainly I must expunge all the remarks about the Governor. Let the hon. Member go to the other point. He should not have mentioned about the Governor here.

THIRU A. R. DAMODARAN: One submission, Sir, If you desire to expunge any remarks, I suggest that you might go through the remarks, find out what is unparliamentary and objectionable and then reserve your ruling for tomorrow, because the entire portion need not be expunged.

* Expunged as ordered by the Chair.

THIRU G. VASANTHA PAI : You may tell me what is objectionable tomorrow and I shall convince you that it is not objectionable. I think there is some misunderstanding by the Hon. the Chief Minister of what I have said. I go to the next point. It is about ....

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பாய் அவர்களால் இங்கே பேசப்பட்டது அங்கீகரிக்கப்படுவதாக ஆகிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த நடவடிக்கை பூராவும் பத்திரிகையில் வரக்கூடாது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே,

*   *   *   *

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே,

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அரசியல் சட்டப்படி கவர்னர் அவர்களைப்பற்றிப் பேசக்கூடாது என்று எங்கேயும் சொல்லப்படவில்லை. கவர்னர் அவர்களைப்பற்றிப் பேசலாம். கவர்னர் இதைச் சொன்னார், அதைச் சொன்னார் என்று சொல்லி கவர்னருடைய பேச்சை வைத்துக்கொண்டு இங்கு இருக்கின்ற டிபேட்டை 'இன்புளுயன்ஸ்' பண்ணக்கூடாது என்றுதான் இருக்கின்றதே தவிர, கவர்னரைப்பற்றிப் பேசவே கூடாது என்று சொல்லிவிட்டு, கவர்னர் அவர்களைப்பற்றிப் பேசியது அத்தனையுமே எடுத்து விடுவது என்று சொல்லிவிடக்கூடாது. நான் பார்த்த வரையிலே, கான்ஸ்டிடியூஷன் பிரகாரமோ அல்லது ரூல்ஸ் பிரகாரமோ இப்படி இருக்கின்றன மாதிரி எனக்குத் தெரியவில்லை. ஆகவே இதைப் பொறுத்த வரையிலே, ஒரு உறுப்பினர் சொல்வதைச் சரி பார்த்து நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நாளைக்கு எதை எதைச் சேர்க்கலாம், எதை எதை எடுக்கலாம் என்று பார்த்துவிட்டுச் செய்யலாம்.

*Expunged as ordered by the Chair.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ரூல்ஸ் பிரகாரம் அது சரிதானா என்பதைப் பார்த்துச் செய்யுங்கள். அந்த ஆஸ்டலைப் பொறுத்தவரையிலே, கவர்னர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். நானே பத்திரிகையிலே படித்தேன். வேண்டுகோள் விடுத்து அந்த ஆஸ்டலைக் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். நல்ல காரியத்திற்காக வேண்டுகோள் விட்டிருக்கின்றார்கள். அதிலே ஒன்றும் தப்பில்லை. ஒரு பாலிசி டெசிசன் எடுத்து, நன்றாகப் படிக்கக்கூடிய பையன்களுக்காக, எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும், அவர்களுக்காகக் கட்ட வேண்டும் என்ற முறையிலே கேட்டிருக்கின்றார்கள். அது தவறு தவறுதல் இல்லையா என்ற பிரச்சினையைப்பற்றி எடுத்துப் பேசியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவரே கேட்கவில்லை என்று சொல்கின்றார்கள். அவர்களுடைய மனைவியார்தான் அதிலே தலைவராக இருக்கின்றார்கள் என்றார். அப்படியானால் கவர்னர் அவர்களுடைய . . . (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் சொல்லாததை எல்லாம் சொல்கின்றார்கள். கவர்னர் அவர்களே போய் வசூல் பண்ணுகிறார்கள் என்பதைத்தான் மறுத்தேன். கவர்னர் வேண்டுகோள் விடுத்ததை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு அறிவுரையைச் சொல்லியிருக்கின்றார்கள், நல்ல ஆலோசனையைச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த நல்ல ஆலோசனையை இந்த அரசும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்றேன். ஆங்காங்கு இருக்கின்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடியவர்கள் அதற்கான தொகைகளைக் கொடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே இப்படிப்பட்ட விடுதிகள் திறக்கப்பட்டும் வருகின்றன என்பதைத்தான் நான் சொல்கின்றேன்.

(பிற்பகல் 5-40)

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நான் தவறாகச் சொல்லியிருந்தால் மன்னித்துக்கொள்ளக் கோருகிறேன். ஏனென்றால் என்னுடைய பேச்சினுடைய சூட்டிலே சொல்லிவிட்டேன். என்னைப் பொறுத்தவரையில், அரசியல் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, நம்முடைய கான்ஸ்டிடியூஷனைப் பொறுத்தவரையிலே அந்த மாதிரிப் பேசக்கூடாது என்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, நான் இங்கே பேசியது விமன்ஸ் வாலண்டரி சர்வீஸ் என்று சொல்லப்படுவதற்கு திருமதி மதுபென் ஷா அவர்கள் தலைவர் ஆவார்கள். அது நீண்ட காலமாக இருக்கின்ற ஒரு இயக்கமாகும். *

* Expunged as ordered by the Chair.

நான் குறிப்பிட்டது, விமன்ஸ் வாலண்டரி சர்வீஸ் கட்டடம் கட்ட இருக்கிற இடத்தைப்பற்றியதாகும். அந்த இடம் பெண்கள் பள்ளிக்கு வேண்டும் என்பதுபற்றி மாத்திரம்தான் நான் குறிப்பிட்டேன் என்று கூறிக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, now that Mr. Wahab has challenged me, I request the Hon. Chairman to ask the Government who are the persons who have sent contributions to His Excellency the Governor for the Hostel which is being put up in the Wellingdon Club Premises, for which the Prime Minister also came in the year 1972 or 1973 for the purpose of . . .

(Thiru K. S. Abdul Wahab rose)

(Let me finish. I am not yielding the floor to the hon. member)

........for the purpose of opening or conducting the opening ceremony.

(Thiru K. S. Abdul Wahab rose)

I am not yielding the floor to my hon. Friend. I am not yielding.

(The Hon. the Chief Minister indicated that the Member raised a point of order)

THIRU G. VASANTHA PAI : It is not a question of point of order.

THIRU K. S. ABDUL WAHAB : My hon. Friend was referring to me to clarify his point. What I was demanding from him was : He was saying that he was having some paper cutting.

THIRU G. VASANTHA PAI : The hon. Member is misquoting me.

THIRU K. S. ABDUL WAHAB : The hon. Member said that he had read from some paper. I want that paper to be placed before the House.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Chief Minister please clarify what the point of order raised is. By this he permitted the Member to interfere with my speech. Sir, as the Leader of the House, the Chief Minister should not have allowed the Member to interfere with my speech, unless he is sure of the point of order raised.

The question was 'point of order'. That is what the Hon. the Leader of the House said.

THIRU K. S. ABDUL WAHAB : I said only 'on point of clarification'.

THIRU G. VASANTHA PAI : It was interpreted by the Leader of the House as 'point of order'.

Sir, feel this should be expunged. What my hon. Friend Thiru Wahab said should be expunged.

MR. CHAIRMAN : Let the hon. Member go to the next point.

THIRU G. VASANTHA PAI : Sir, I am going to the next point. I wish to say that this is a very non-controversial one and I hope, Sir, the Hon. the Chief Minister, the Law Minister as well as the Revenue Minister will all exert their best efforts to achieve this purpose. There is a distinction—which I feel is invidious—which is made between playgrounds which are reserved for schools and playgrounds which are used by the clubs for the same purpose. Sir, this is a matter which I have to bring to the notice of the Government. There is section 27-H as well as section 29 which clearly refers to Urban Land Tax being exempted for playgrounds attached to the educational institutions. Sir, I want to say that all playgrounds whether they are attached to a club or an educational institution should be exempt in the interest of encouragement of sports. Sir, the reason why I say this is this. A club may have a tennis-court, a cricket-field, hockey-ground, basket-ball court or netball court; a club may have any

of these. But those are not used as club premises but only for people to come at a set time and play tennis, badminton, cricket, hockey or some such thing for which no member pays. Sir, now if all these grounds are added for the purpose of Urban Land Tax, no club can exist. Therefore, I request the Hon. the Chief Minister, the Hon. the Law Minister and the Hon. the Minister for Revenue to exempt all playgrounds in the State wherein persons *bona fide* play games. I say that the premises plus about two grounds around them can be assessed to Urban Land Tax. But, to make the vacant ground a part of the land assessed to Urban Land Tax and to demand those people to pay Rs. 4,000 or Rs. 8,000 per year when the member pays only Rs. 2 as subscription is very harsh. I make this personal appeal to the Hon. the Chief Minister because I know he is a lover of sports and the Hon. Ministers here do like sports and games and recreation and do everything to encourage them. I have seen them in cricket-grounds, in hockey-fields, tennis-grounds and I have seen them going for almost every match of national as well as international importance. So, in those circumstances, to encourage youth, to encourage games, to encourage sports and pastime in this country, I request that playgrounds attached to clubs may be completely exempt from Urban Land Tax. Sir, I do say that the building with sufficient extent of ground around it which is in the enjoyment of the club may be taxed. The Government may make a distinction between the building and the grounds and exempt those grounds and accept tax only on the buildings. Otherwise, most of the clubs will have to shut their premises down because the payment which is made for Urban Land Tax goes to the extent of Rs. 6,000 or Rs. 7,000 per annum. With this request, Sir, I think I have touched upon a very non-controversial subject and I hope the forewords which were there when I opened the speech have quietened down and I hope the Government will consider favourably what I have requested them to do.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கைக் குறிப்பைப் பாராட்டுவதற்கு இந்த வாய்ப்பினைத் தந்தமைக்காக நான் தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புயலுக்குப் பின் அமைதி என்ற முறையிலே, நம்முடைய அருமை நண்பர் திரு. வசந்த பாய் அவர்கள் வீசிய புயல் மிகக் கடுமையாக இருந்தது. கடுமைக்குப் பிறகு, புயலுக்குப் பிறகு கொஞ்சம் குளிர் தேவை என்பதற்காக நான் பேசுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, he is criticising me personally.

THIRU C. V. RAJAGOPAL: Sir, this is not criticism at all. I am placing before the House my appreciation for my hon. Friend.

THIRU G. VASANTHA PAI: Thanking you.

திரு. சி. வி. ராஜகோபால்: இதுவரையில் நாம் ஏறத்தாழ அரசினுடைய கொள்கையை நிலைநாட்டியிருக்கின்றோம். அதனை வெளிப்படுத்துகின்ற நேரத்தில், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நிர்வாகத்தில் இருப்பவர்கள் அத்தனை பேர்களும் அக்கறை எடுத்துக்கொண்டு பற்பல காரியங்களைச் செய்திருக்கின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கு இல்லை. இது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். உணவு உற்பத்தியில் முன்பு இருந்ததைவிட கடந்த சில ஆண்டுகளில் பற்பல விஷயங்களைக் கண்டுபிடித்து காரியங்கள் செய்திருக்கின்றார்கள். இப்போது நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள், ஹெட்ஸ் ஆப் டிபார்ட்மெண்ட்ஸ், ஆபீஸர்கள் இவர்கள் அத்தனை பேர்களும் எத்தனையோ விதமான உற்பத்திகளை, விவசாயத்தில் பயிர்களை எல்லாம் உற்பத்தி செய்திருக்கின்றார்கள். 41 விதமான நெல்கள், 41 varieties of paddy உற்பத்தி செய்திருக்கின்றார்கள். அருணா, கருணா, கண்ணகி என்றும், கோமதி என்றும் இப்படி பற்பல ரகங்களை, புதிய புதிய ரகங்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கின்றார்கள். நாம் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. நம் அரசு ஆணையிடலாம். அவர்களும் அந்தக் காரியங்களிலே ஈடுபட்டு பெரு முயற்சிகளை எடுத்துக் கொண்டு செய்திருக்கின்றார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் கிண்டலும் கேலியும் செய்யலாம். எனக்கு முன்னால் நண்பர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் அதிகாரிகளைப்பற்றி சொன்னார்கள். அது மாதிரி குற்றச்சாட்டுக்களை, குறைகளை எவ்வளவு வேண்டுமானாலும் இங்கே எடுத்துச் சொல்லலாம்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: தலைவரவர்களே, கோமதி என்று காஞ்சீபுரத்திலே ஏதாவது கண்டுபிடித்திருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இப்படி பல பல ரகங்கள் கண்டுபிடித்திருக்கின்றபோது, அப்படியும் ஒரு ரகம் வரலாம். எதிர்காலத்திலே வந்தாலும் வரலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இதுவரையில் நெற்பயிர் களிலே இப்படி புதுப்புது ரகங்களை உண்டாக்கியதே இல்லை. கார் என்பார்கள், சம்பா என்பார்கள், சிறுமணி என்பார்கள். இந்த 3 ரகங்களைத்தான் நான் என்னுடைய வாழ்நாளில் கேட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்குக் கிடைக் கின்ற விதைகள் எல்லாம் புதுப்புது விதங்களாகக் கிடைக்கின்ற காரணத்தால் தான் கோமதியும் வரக்கூடும் என்று . . . (சிரிப்பு) கோமதி விதை கூட வரக் கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கோமதி என்று சொல்வதைப் பார்த்தால் 'மதி'கோ ஆகிவிட்டது போலிருக்கிறது.

(பிற்பகல் 5-50)

திரு. சி. வி. ராஜகோபால்: கோமதி விதையும் வரக்கூடும் என்ற நம்பிக் கைக்காகத்தான் அதைச் சொன்னேன். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளில் எல்லாம் அதிகாரிகள் கூடவே இருந்து அதற்கு ஆவன செய்திருக்கிறார்கள் என்பதனை நான் கூறிக்கொள்ளுவதற்குக் காரணமே, இதற்கு உடன்பாடுடைய அருமை நண்பர் திரு. கணபதி அவர்கள் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் சொல்லாமலே ஒன்றிரண்டு மிக வேடிக்கையாகவே, கிண்டலாகவே சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காக நானாவது பாராட்ட வேண்டுமே என்பதற் காகத்தான் . . . (பல உறுப்பினர்கள் குறுக்கீடு) உழைப்பு இருக்கின்ற காரணத் தால், உழைப்பு இருப்பதை நாம் பாராட்டுவதை சம்பிரதாயமாக ஆக்கிக் கொள்ளவேண்டுமே ஒழிய . . .

திரு. ஜி. சுவாமிநாதன்: பாராட்ட வேண்டுமே என்று சொல்கிறார்கள். அதனுடைய அர்த்தம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: வேலை செய்கின்ற பெரும் அதிகாரிகளை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: அதிகாரிகளைப்பற்றிப் பாராட்ட வேண்டாம் என்று யாரும் இந்த சபையில் பேசவில்லை. தப்பு செய்கிறவர்களைப் பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்றுதான் பேசுகிறோம்.

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாராட்டக் கூடாது என்று சொல்லவில்லை என்கிறார்கள். அதற்குச் சில முறைகள் இருக்கின்றனவே. அவர் சொன்ன மாதிரி அது இல்லை, இது இல்லை, அவன்

ஓடினான், கணக்கனுக்கு 4,500 ரூபாய் செலவாயிற்று என்று வீண் வழக்கையே சொல்லியிருக்கிறார்கள். அந்த வழக்கிலே உள்ள சிக்கலை அவர்கள் தீர்த்து இருப்பாரானால், நான் உண்மையாகவே பாராட்டியிருப்பேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார் . . . பட்டவர்களுக்குத்தான் அதனுடைய அருமை தெரியும். படாதவர்களுக்குத் தான் அது சந்தனமாகத் தெரியும். பட்டவர்களுக்குத்தான் அது தீப் புண்ணாக அதனுடைய அருமை தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சில சர்க்கார் அதிகாரிகள் மீது கண்டனத் தீர்மானத்தைப் போட் டார்கள். சர்க்கார் அதிகாரிகள் மீது கண்டனத் தீர்மானத்தைப் போட யூனியன் உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

திரு. சி. வி. ராஜகோபால்: நான் சொன்னது 4,500 ரூபாயும் 5,000 ரூபாயும் ஒரு கணக்குப்பிள்ளை வேலைக்குச் செலவு செய்திருக்கிறார்கள். அவர்கள் அநேகமாக திமிர் பிடித்துத்தான் செய்திருக்க வேண்டும் என்ற என்னுடைய எண்ணத்தால்தான் நான் அதைச் சொன்னேனே ஒழிய, ஒரு கணக்குப் பிள்ளை, மணியக்காரர் வேலைக்கு 8 ஆயிரம் ரூபாய் எதற்காகச் செலவு செய்ய வேண்டும்? ஏன் செலவு செய்ய வேண்டும்? இப்படிச் செலவு பண்ணுவது சர்க்காருக்குத் தெரியுமா? சர்க்காருக்குத் தெரியாமலேயே சில காரியங்களைச் செய்துவிட்டு சர்க்கார் மேல் குற்றம் சொன்னால், அதிலே லாபம் ஒன்றுமில்லை என்பதற்காகத்தான் நான் சொன்னேன். 4,500 ரூபாய் கணக்குப் பிள்ளை வேலைக்காகச் செலவு செய்தேன் என்றால், அங்கு இருப்பவர்கள் எல்லாம் மகரிஷியா என்ன . . .

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். கொஞ்சம் தயவு செய்து நண்பர் அவர்கள் நான் என்ன சொன்னேன் என்பதை நிதானித்துக்கொள்ள வேண்டும். அதைத் தெரிந்துகொண்டு மாண்புமிகு உறுப்பினர் பேசினார்கள் என்றால் நான் சந்தோஷப்படுவேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மற்றொரு அலை இருக்கிறது. அங்கே வந்தால் புரிந்துகொள்ளலாம். (சிரிப்பு)

திரு. சி. வி. ராஜகோபால்: ஆகவே அதிகாரிகள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள், சிரமப்படுகிறார்கள். அவர்களைப் பாராட்ட வேண்டியது நம்முடைய கடமை என்பதற்காக நாம் பாராட்டுகிறோம். ஆகவே இந்தியா பூராவிலும் இல்லாத ஒழுங்கையும் சட்டத்தையும் தமிழ்நாடு தான் . . .

திரு. க. அறிவழகன்: எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . . நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த அவைக்கு வந்தால் தெரிந்துகொள்ளலாம் என்று சொன்னார்கள். நம்முடைய சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களுக்கு அந்த அவையிலே கடைசி வரிசையிலே சில இடங்களையாவது ஒதுக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மேலவை உறுப் பினர்கள் இரண்டு பேருக்கு முதல் வரிசையிலேயே இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: சட்டம் ஒழுங்கு என்று சொல்லுகிறார்கள். இந்தியாவிலே தமிழ் மாநிலத்திலேதான் மிக ஒழுங்காகக் காப்பாற்றுகிறார்கள். பீஹாரிலே உணவு அமைச்சராக இருந்த மிஸ்ரி . . . (சிரிப்பு).

(பலர் குறுக்கீடு)

மிஸ்ரா அவர்கள் பெரும் குண்டு விபத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர் களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று பாராளுமன்றத்திலே சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறார்கள். (சிரிப்பு).

ஆகவே இப்படிப்பட்ட பாதுகாப்பு மத்திய அமைச்சருக்கே இல்லாமல் இருந்தது என்பதை தமிழ்நாடு அறியும். இந்தியாவும் அறியும். அண்மையிலே ரயில்வேயில் மிகப் பெரிய ஸ்டிரைக் ஏற்பட்டது. பயங்கரமான ஸ்டிரைக் ஏற்பட்டது. போன ரயில் திரும்பவில்லை. அங்கே ரயில் கவிழ்ந்தது. இங்கே கவிழ்ந்தது, மக்கள் மாண்டார்கள் இப்படி எல்லாம் இருந்த நேரத்தில் இங்கே தண்டவாளங்களை எடுக்காமல் இருப்பதற்கு நம்முடைய தமிழகத்தில் எப்படி நிலைமைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதைப்பற்றி மதிப்பிற்குரிய அமைச் சர்கள், அதிகாரிகள் உள்பட பாராட்டி இருப்பதை நாம் இந்த நேரத்திலே மறந்துவிடுவதற்கில்லை என்பதை மாற்றுக்கட்சி நண்பர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்களுக்குக் கூறிக்கொள்ளுகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் மறந்து விடக்கூடாது என்பதற்காகத்தான். அப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அதிகாரிகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இரண்டாவது செய்த நல்ல காரியம், கிண்டி ரேஸை எடுத்திருக்கிறார்கள். அங்கே

ஏராளமான இடம் இருக்கிறது. அதிலே ஒரு அருமையான டெக்னாலஜி ஸ்கூல், இப்படி ஏதாவது திறந்தால் ரொம்ப நலமாக இருக்கும். அதே போல் ஊட்டியிலே கூட . . .

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டெக்னிகல் யுனிவர்சிடியைச் சொல்லுகிறார்களா அல்லது டெக்னாலஜி ஸ்கூலைச் சொல்லு கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: இரண்டுமே கலந்தாற்போல் இருக்கிற இடமாக இருக்கிற காரணத்தால் இரண்டுமே இருக்கலாம். (சிரிப்பு) ஆபாசங்களைப் பற்றி நண்பர் திரு. கணபதி அவர்கள் கூறினார்கள். இப்படிப்பட்ட ஆபாசங்கள் மறைக்கப்பட வேண்டுமென்று. இப்படிப்பட்ட ஆபாசங்கள் எல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே கோவில்களிலே இருந்து வருவதைப் பார்க்கிறோம். அங்குள்ள சிற்பங்கள் எல்லாம் நிர்வாணமாகவும், மார்பைக் காட்டுவதாகவும் இருக்கின்றன . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்படி எல்லாம் கோவிலிலே இருக்கிறது என்று ஆபாசமாகப் பேசாதீர்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: இருப்பதை நாம் மறைக்க முடியவில்லையே, பார்க்கிறோமே.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உங்கள் வயதுக்கு அதை எல்லாம் பார்க்கலாமா?

திரு. சி. வி. ராஜகோபால்: அதே மாதிரி ஒரிசாவிலே இருக்கிற கோவில் களிலே விக்கிரகம் நிர்வாணமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். சாமியைக் குளிப்பாட்ட வைப்பதை திருமஞ்சனம் என்று அழகாகச் சொல்லு கிறார்கள். இப்படி எல்லாம் ஐதிகம் இருக்கிறது. அகராதி இருக்கிறது. ஆகவே பத்திரிகைகளிலே விதண்டாவாதமாக எதைஎதையோ எழுதுகிறார்கள். அவர்களுக்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: சாதாரணமான சினிமா போஸ்டர் பற்றி அவர்கள் சொல்லவில்லை. 'வாழ்க்கையின் ரகசியம்' என்ற செக்ஸ் எஜுகேஷன் என்பதாக ஒரு சினிமா காட்டுகிறார்கள். அதிலே ரொம்ப ஆபாசமான

முறையிலே அந்த போஸ்டர்கள் வெளியிலே ஒட்டப்படுகின்றன. அவைகள் பள்ளிக்கூடங்களுக்குப் பக்கத்திலேயும் ஒட்டப்படுகின்றன. தெருவிலே போகக்கூடிய பெண்கள் எல்லாம் அவைகளைப் பார்த்து அவமானப்படக்கூடிய நிலைமையிலே இருக்கின்றன. அதைத்தான் அவர்கள் முக்கியமாகக் குறிப்பிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : ஒன்றிரண்டு வால்போஸ்டர்களை போலீசார் கலைக்கிறார்கள். அம்மாதிரியான ஆபாசப் புத்தகங்களையும் பறிமுதல் செய்கிறார்கள். அவர்கள் அடியோடு அந்த வேலையை . . .

திரு. கே. எஸ். கணபதி : இன்று கூட மௌண்ட் ரோட்டிலே கலைக்கப் படாமல் மிகப் பெரிய அளவிலே ஒரு போஸ்டர் இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : அவை எல்லாம் கலைக்கத்தான் பட வேண்டும். கலைக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அதில் சில ரகங்களை விட்டு விட்டால்கூடப் பரவாயில்லை. (சிரிப்பு) அதைப்பற்றி நாம் கலந்து ஆலோசிக்க வேண்டும். பத்திரிகைகளிலே இப்படி எழுத்துக்கள், சொற்கள், வார்த்தைகள் அணி அணியாக வருகின்றன. அவைகள் எல்லாம் பண்பாடு இல்லாததாக இருக்கின்றன. அதற்காக பத்திரிகைக்காரர்களை அழைத்து ஒரு கமிட்டி மாதிரி போட்டு இப்படி இருக்கலாம், இப்படி இருக்கக்கூடாது என்று ஆலோசிக்கலாம். இப்படி பற்பல விஷயங்களைப்பற்றி மாவட்ட அதிகாரிகள், மாவட்ட கலெக்டர்கள் 24 மணி நேரமும் ஓயாது ஒழியாது வேலை செய்து வருவதைப் பார்க்கின்றோம். அவர்களை எல்லாம் பாராட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நானும் பாராட்டிக்கொண்டு, வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

* *திரு. ஜார்ஜ் கோமகன் :* மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முன்மொழிந்த மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த கொள்கைக் குறிப்பை வரவேற்று நான் சில வார்த்தைகளைக் குறிப்பிட ஆசைப் படுகின்றேன். இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கைக் குறிப்பில் பல அருமையான கருத்துக்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை ஒரு அருமையான கருத்தை எடுத்துச் சொன்னார்கள். எழுத்தில் பிழை காண முயற்சிக்க வேண்டாம், எண்ணத்தில்

பிழை கண்டால் அதைச் சுட்டிக் காட்டுங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்றிருக்கிற அரசு, தன்னுடைய எண்ணத்திலே, சமுதாயத்திற்குத் தூய்மையாகப் பாடுபட வேண்டுமென்ற அறிஞர் அண்ணாவினுடைய அருமையான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடைபோடுகிறது. இதை நிச்சயமாக இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். அந்த அடிப்படையிலே நாம் எண்ணத்திலே பிழை இல்லாதவர்கள் என்பதை நிச்சயமாக எடுத்துச்சொல்லலாம். ஆனாலும் சில பேர் எழுத்திலே பிழை காண முயற்சிக்கிறார்கள். அந்த எண்ணம் கூட ஈடேற விடாத வண்ணம் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக மக்களுக்காக தூய்மையாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆட்சியினுடைய நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டுமென்றால், அந்த ஆட்சியினுடைய தலைவரால் மட்டும் செய்துவிடக் கூடிய காரியமல்ல, அந்த ஆட்சியிலே வாழுகிற சமுதாயமும் அதற்கேற்ற முறையில் ஒழுக்கமுடையதாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. நீண்ட நெடுங்காலமாக நம்முடைய இலக்கியத்தை எடுத்துக்கொண்டாலும், நம்முடைய வரலாற்றை எடுத்துக் கொண்டாலும், சமுதாயத்தை மாற்றுவதற்காக நம்முடைய பல தலைவர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மதத் தலைவர்கள், மார்க்கத் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய மார்க்கத்தின் வழியாக, தங்களுடைய மதத்தின் வழியாகக் கூட, சமுதாயத்து மக்களை நல்வழிப் படுத்தும் நல்ல எண்ணத்திலே பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பௌத்த மதத்தை எடுத்துக்கொண்டால் கூட, பௌத்த மார்க்கத்தை ஒரு மதமாகச் சொலலாமல் அதை scientific way of life வாழ்க்கைக்கான ஒரு வழியாகக் குறிப்பிடுவார்கள். அந்த அடிப்படையிலே சமுதாயத்தில் ஒரு சிறந்த மறுமலர்ச்சியைச் செய்து விட வேண்டுமென்ற எண்ணத்தில் தான், அப்படிப்பட்ட சமுதாயம்தான் நமக்குத் தேவை என்ற அடிப்படையிலே நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞருடைய ஆட்சி, நிர்வாகம் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த அருமையான பாதையில் நடைபோட்டு இன்றைக்கு மாவட்டங்களிலும் மாநிலத்திலும் மக்களுக்கும் ஆட்சிக்கும் ஒரு நெருங்கிய தொடர்பை, ஒரு நெருங்கிய பிணைப்பை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக நாம் யாரும் மறந்துவிட முடியாது. முன்பெல்லாம் அமைச்சர் பெருமக்கள் என்று சொன்னால், ஏதோ பார்க்கக் கூடாத இடத்தில் இருக்கிறவர்கள் என்ற ஒரு நிலை இருந்தது. மக்களை அவர்கள் சந்திக்க முடியாத நிலை இருந்தது. அப்படியும் சந்திக்க வேண்டுமென்று சொன்னால் பகீரதப் பிரயத்தனம் பண்ணித்தான் பார்க்க வேண்டுமென்ற நிலை

அன்றைக்கு இருந்தது. ஆனால் இன்றைக்கு சமுதாயத்திலே வாழுகின்ற சாதாரண மனிதன், இந்த நாட்டிலே வாழுகிற சமுதாயத்திலே பின் தங்கிய மனிதன், ஒதுக்கப்பட்டிருக்கிற மனிதன் தன்னுடைய குறைகளை நேரடியாக அமைச்சர் பெருமக்களிடத்திலே சென்று சொல்லி, அந்தக் குறைபாடுகளுக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையிலே ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி யிருப்பதை, மக்கள்பால் ஒரு கவனம் ஏற்பட்டிருப்பதை நிச்சயமாக யாரும் மறந்துவிட முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் மாநிலத்தில் பணியாற்றிய பெரிய அதிகாரிகளையெல்லாம் கூட்டி ஒரு கூட்டத்தை நடத்தியதாக நான் அறிகிறேன். அந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், மாநிலத்திலுள்ள இதர பெரிய பெரிய அதிகாரிகளுக்கும் ஒரு அரிய ஆலோசனையை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதிகாரிகள், அதிகாரி என்ற அதிகார தோரணையில் நடந்து கொள்ளாமல் மக்களுடைய தொண்டர்களாக இருக்க வேண்டுமென்றும், ஜனநாயகத்திலே சாதாரணத் தொண்டனாகத் தங்களை எண்ணி மக்களுக்காகப் பணியாற்ற வேண்டுமென்றும் அண்ணா அவர்கள் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதாக நான் அறிகிறேன். அந்த முறையிலேதான் இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய நிர்வாகம் நடை பெறுகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழக அரசிலே ஒரு அருமையான திட்டத்தினை அமுலுக்குக் கொண்டு வருகிறோம். பொது மக்கள் தொடர்புத் திட்டம்தான் அது. இந்தத் திட்டம் கிராமங்களில் நிச்சயமாகப் பயனளிக்கக் கூடிய திட்டமாக அமைந் திருக்கிறது. அதையே நாம் மனு நீதித் திட்டம் என்ற பெயரால் அழைக்கிறோம். சோழன் காலத்தில் இருந்தது இந்த மனுநீதித் திட்டம். சோழன் காலத்திலிருந்த மனுநீதித் திட்டத்தினை மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். பொது மக்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவிக்கும் அந்த இடத்திலேயே தீர்வு காணுகிற வகையில் இன்றைக்கு அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது. என்னுடைய அருமை நண்பர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்கள் அத்தகைய சிறந்த அதிகாரிகளைப் பாராட்ட வேண்டுமென்று அவருடைய சார்பாகப் பாராட்டினார்கள். சமுதாயத்தில் பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காக நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் அவர் களுடைய, ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் ஒவ்வொரு நல்ல திட்டத்தை—நல்வாழ்வுத் திட்டங்களை—இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்திச் செயல் படுத்துவதை நம்முடைய அருமை நண்பர் திரு. கணபதி அவர்களும் சுட்டிக் காட்டிப் பாராட்டினார்கள். உள்ளபடியே அந்தத் திட்டம் இந்த வையகத்திற்கே

வழி காட்டுகின்ற ஒரு நல்ல திட்டமாக அமைந்திருக்கிறது. அவர்கள் பிறந்த நாள் வருகிறது என்று சொன்னால், தமிழக மக்களுக்கெல்லாம் ஒரு பூரிப்பான செய்தி கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கை நட்சத்திரம் உதயமாகிறது. நான் ஒன்றை மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கை ரிக்ஷா இழுக் கின்ற, நீண்ட நெடுங்காலமாக மனிதனை மனிதன் இழுக்கின்ற, ஒரு மகா பயங்கரமான கொடுமை இருந்து வந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலேயே அதை ஒழிக்க முயன்றார்களா என்றால் நிச்சயமாக இல்லை. பலர் சொல்லலாம் "ஏகாதிபத்திய ஆட்சி, அவர்கள் எப்படி ஒழிப்பார்கள்" என்று. ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டிலே ஏதோ பெரிய நாகரிகத்தைக் கற்றுத் தந்ததாகச் சொல்லுகிறார்கள். நாகரிகத்தைக் கற்றுத் தந்ததாகச் சொல்லப்படுகிற அந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்திலேயே மனிதனை மனிதன் இழுக்கின்ற மகா பயங்கரமான கொடுமையான அந்தக் கை ரிக்ஷா முறையை ஒழிக்கின்ற நல்ல எண்ணம் அவர்கள் இதயத்தில் ஏற்பட்ட தாகத் தெரியவில்லை. அதற்குப் பின்னால் நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் காரர்கள் இந்த நாட்டினுடைய ஆட்சிப் பீடத்திலே அமர்ந்தார்கள். அவர்களுக்குக் கூட அந்த நல்ல எண்ணம் வந்ததா என்றால், வரவில்லை. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கை ரிக்ஷா இழுக்கின்ற அந்த முறையை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாக்களை இலவசமாக வழங்கியிருக்கின்றார்கள். மனிதனை மனிதன் இழுக்கின்ற அந்த மகா பயங்கர மான கொடுமையை ஒழித்துக்கட்டியதை நாம் எல்லோரும் இந்த நேரத்தில் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நான் பாராட்டுவதற்குக் காரணம் சமுதாயத்திலே ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாய அமைப்பிற்காக அமைச்சர்கள் மட்டத்திலும் அதிகாரிகள் மட்டத்திலும் பாடுபட வேண்டு மென்ற ஒரு எண்ணம், நல்ல எண்ணம் இன்றையதினம் உதயமாகியிருக்கிறது. அந்த எண்ணம் வளருவதற்காக நாம் நம்மை நாமே நிச்சயமாகத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும். ஆபாச சுவரொட்டிகளைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அவைகளுக்குப் போக விரும்பவில்லை. சமுதாயத்திலே புதிய சிந்தனைகள் வளர வேண்டுமென்று சொல்லப்படுகிற நேரத்திலே ஆபாசமும் சேர்ந்து வளருகின்ற ஒரு சூழ்நிலை எப்படியும் ஏற்பட்டு விடுகிறது. அதைத்தான் நான் முதலிலே குறிப்பிட்டேன். சமுதாயத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மாத்திரம் காரணமாக இருந்துவிட முடியாது. அரசாங்கம் மாத்திரம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. சமுதாயத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமுதாயத்திலே உள்ள அனைத்துப் பிரிவினரும் அதற்காக முயல வேண்டும். அதற்காக முனைப்பாகப் பணியாற்றிட வேண்டும். அப்படிப் பணியாற்றினால்தான் நல்ல ஒரு சமுதாயத்தை,

விரிப்பான ஒரு சமுதாயத்தை, மறுமலர்ச்சியான ஒரு சமுதாயத்தை நாம் காண முடியும். அத்தகைய வகையிலே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் தமிழகத்தினுடைய மேன்மைக்காக நல்லாட்சியை நடாத்திக்கொண்டு வருகிறார்கள். அதைப் பின்பற்றி நம்முடைய அதிகாரிகள் எல்லாம் செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டு அவர்களை எல்லாம் பாராட்டி வரவேற்று நான் அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6-10)

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் வறட்சி நிவாரண வேலைகள் சரியாக நடைபெறுகின்றன என்று மத்திய நிதி அமைச்சரவர்கள் நேற்றைய தினம் இங்கு வந்து சொன்னது ஒரு ஆறுதலைக் கொடுக்கிறது. ஏனெனில் இதில் ஏதேனும் உண்மை இருக்கும். தவறான வழியில் நிவாரண வேலைகள் நடக்குமோவென பலரும் சந்தேகப்படும்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. நேற்றைய தினம் அவர் வந்து கவனத்தோடு நன்றாக வறட்சி நிவாரண வேலைகள் நடக்கின்றன என்று கூறியிருக்கிறார். ஆகவே மத்திய அரசிலிருந்து நமக்கு மேலும் உதவிகள் கிடைக்குமென்று நான் நம்புகின்றேன். அதை எதிர்பார்த்து பற்றாக்குறை பட்ஜெட்டாக ரூ. 20 கோடிக்கு மேல் விட்டு வைத்திருக்கின்றோம். இல்லையென்றால் வேறு முக்கிய காரியங்கள் செய்வதிலிருந்து நாம் நிறுத்திக்கொண்டு அதைச் சரிக்கட்ட வேண்டியிருக்கும். உணவுப் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசு தாமதப்படுத்தாமல் சீக்கிரமாக, எவ்வளவு அதிகமாக அரிசியைக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க வேண்டும். நாம் நினைத்த மாதிரி மாதத்திற்கு ஒரு லட்சம் டன்னுக்கு அரிசியும் கோதுமையும் சேர்ந்து இன்னும் சில மாதங்களுக்கு வந்துகொண்டிருந்தால், இந்தக் கஷ்டத்திலிருந்து நாம் மீள முடியும் என்று நான் எண்ணுகின்றேன். வறட்சி நிவாரண வேலைகளில் கூலியைப்பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இங்கு இருக்கிறார்கள். இப்போது அவற்றையெல்லாம் 'காண்ட்ராக்ட்' ஆகத்தான் அரசு விட்டிருக்கிறது என்று நான் எண்ணுகின்றேன். 'காண்ட்ராக்ட்' விட்டால் அந்த காண்ட்ராக்ட்காரர்கள் ஆயக்கட்டுக்காரர்களையும், அந்தந்த கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளையும் காண்ட்ராக்டர்களாக ஆக்கி அவர்களைக் கொண்டு அந்தக் குள மராமத்து வேலையைச் செய்கிறார்கள். என் ஜில்லாவைப்பற்றி எனக்குத் தெரியும். அப்படி மண் வெட்டும் போது எவ்வளவு மண் வெட்டுகிறார்கள் என்று பார்த்து, வெட்டப்படுகிற வேலைக்குத் தகுந்தபடிதான் அரசு பணம் கொடுக்கிறது. அவர்களும் எவ்வளவு வேலை நடக்கிறதோ அதற்குத் தகுந்தபடிதான் கூலி கொடுக்கிறார்கள். அது

ரூ. 3-க்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கின்றது. கொஞ்சம் இதை வேறுவிதமாக ரூ. 6, ரூ. 5 கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்றால், 'மஸ்டர் ரோல்' மாதிரி வைத்துக்கொண்டு வேலைக்குத் தகுந்தபடி இல்லாமல் ஆளுக்குத் தகுந்தபடி, எத்தனை பேர் வருகிறார்களோ அத்தனை பேருக்குக் கொடுத்தால் முடியும். வேலை செய்பவர்களுக்குக் கூலியாக தானியத்தைக் கொடுக்கலாம். எப்படியாவது முக்கால் வாசிக் கூலியாக அரிசியோ, வேறு புஞ்சை தானியங்களோ போட்டுவிட்டால், அவர்கள் திருப்தியோடு இருப்பார்கள் என்று நான் சொல்கிறேன். அதை உணவு அமைச்சரவர்களும், முதலமைச்சரவர்களும் செயல்படுத்தினால் நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இப்போது வெளி நெல் வசூல் பண்ணுவதில் கொஞ்சம் அளவுக்கு மீறி அதிக உற்சாகத்துடன் இரண்டொரு இடங்களில் உத்தியோகஸ்தர்கள் இறங்கிவிடுகிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய பிரதேசங்களில், ஒரு சில இடங்களில் விளைந்திருக்கிறது. மதுரை ஜில்லாவில் வைகை பெரியாறு பாசனப் பிரதேசங்களில் மதுரை வரைக்கும் உள்ள நிலங்களில் விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. மதுரைத் தாலுகாவில் கீழ் பக்கத்தில், மேலூர் தாலுகாவில்கூட சரியாக அறுத்திருக்கின்றார்கள். அரிசிக்கு உள்ள பூ பருவத்தில் தண்ணீர் கிடைக்காமல் அப்போது அறுவடை வைக்கோல்தான் அறுத்திருக்கிறார்களே ஒழிய நெல் கிடைக்கவில்லை. இம்மாதிரி இடங்களில்கூட ஒரு தாசில்தார் மிகவும் கஷ்டப்படுத்தி மாங்குளம் என்ற ஒரு ஊரில் விவசாயியை சிறை வைத்திருக்கிறார். அப்படி சிறை வைக்கும் போது, இரண்டு குழந்தைகளும் அந்த வீட்டிற்குள்ளே இருந்திருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். மதுரை ஜில்லா கலெக்டர் அதை மறுத்திருக்கிறார். ஆனால் விசாரிக்கையில் கலெக்டருக்குத் தெரியாது, அந்த தாசில்தார் செய்தது என்றும், அவர் கலெக்டரிடம் மறைத்திருக்கிறார் என்றும் கூறுகிறார்கள். நேரில் நான் போய் அறிய முடியவில்லை. போனில்தான் விசாரிக்க முடிந்தது. இன்று நேராக அறிந்த உறுப்பினர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர் இதில் கலந்துகொண்டு பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் சென்னி நேரத்திலேயே எழுந்துபோய்விட்டார்கள். ஆனால் அவர்கள் நடந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள் என திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறுகிறார்கள். உண்மைதான், இது நடந்தது என்கிறார்கள். ஆகையால் அந்தத் தாசில்தார் பேரில் இம்மாதிரியெல்லாம் நடக்கக் கூடாதென்று அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படியாக கலெக்டருக்குத் தாக்கீது அனுப்ப வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் வறட்சி ஏற்பட்டு மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இம்மாதிரி ஒரு அவச்செயல் அவர்கள் செய்துவிட்டுப் போக அரசாங்கத்தை நடத்துபவர்கள்

பேரில்தான் அதனுடைய பலன் சேரும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த வறட்சி தீர்ந்து அடுத்த மழைக்காலத்தில் சரியானபடி மழை பெய்துவிட்டால், விவசாயிகளிடம் விதைப் பண்டம் இருப்பது கஷ்டம். உரம் வாங்குவதற்குக் கூட அவர்களுக்கு சக்தி இருக்காது. இதையெல்லாம் முன் யோசனையுடன் அரசாங்கம் கவனித்து அதற்கு எச்சரிக்கையுடன் ஏற்பாடுகள் பண்ண வேண்டும். அடுத்த வருஷம் மழை பெய்தால் விதைக்காக நெல் மாத்திரமல்ல, மற்ற புஞ்சை தானியங்களும் வேண்டியிருக்கும். விதைக்காக எப்படி வைப்பது? இப்போது இல்லை. விளையவே இல்லையென்கிற போது, விதைப் பண்டத்திற்கு என்ன செய்வார்கள்? ஆகையினால் முன் கூட்டியே அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். வீட்டு மனை ஒப்படை செய்தலைப்பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். 1946 லிருந்து 1967 வரை வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுத்தும், 1967-லிருந்து பின்னால் நடப்பு வரை 31-1-1975 வரை, பட்டா கொடுத்திருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்து, 20 ஆண்டுக் காலத்தில் 63,000 பேருக்குத்தான் கொடுத்திருந்தார்கள். நாங்கள் இந்த 7 ஆண்டில், 4,97,692 பேருக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். இதில் இன்னும் கொஞ்சம் விளக்கமாக, புதிதாக எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருந்தால், நன்றாகத் தெரிந்திருக்கும். ஏனென்றால் இவர்கள் அத்தனை பேரும் பல வருஷங்களாக அந்த இடங்களில் குடியிருந்தவர்கள்தான். பட்டா என்பது இப்போது கொடுத்திருக்கிறதே ஒழிய, ஏற்கெனவே அந்த இடங்களில் குடியிருந்தவர்களை அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்தக் கூடாதென்று சட்டம் இருந்தது. அந்த இடங்களுக்கு இப்போது பட்டா கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவர்களை அப்புறப் படுத்தக் கூடாதென்று சட்டம் இல்லை. 'குடியிருப்புச் சட்டம்' கூட இப்போது தான் கொண்டுவந்தோம். அவர்கள் இருந்தார்கள். அந்த இடம் கூட அவர் களுக்குச் சொந்தமாக இல்லை. அப்படியிருந்தாலும், நிலங்களை விற்றுக் கொண்டிருப்பதும், ரிஜிஸ்டர் செய்துகொண்டிருப்பதும் எல்லாம் நடந்து கொண்டே இருந்தது. அவர்களுக்குச் சொந்தமாக ஆகவில்லை. பட்டா கொடுக்கப்படாமல் இருந்தது.

திரு. கே. ராஜாராம்: எனக்கு அப்படி ஞாபகம். சரியாகத் தெரியாது. மன்னித்துக்கொள்ளுங்கள். மினிஸ்டர் சொல்லுவதைத்தான் நான் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனக்கு ஞாபகம், காங்கிரஸ் ஆட்சி நடந்த காலத்திலேயே போட்டோம் என்று. வீட்டு மனையிலிருந்து எவரையும்

அப்புறப்படுத்தக் கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அது சட்டபூர்வமாகச் செய்யப்பட்டதா என்று தெரியவில்லை. இப்போது அவர் களுக்கு இந்த அரசு பட்டா கொடுத்ததை நான் பாராட்டாமலிருக்க முடியாது. பட்டா கொடுத்து 'புல் ஸ்டாப்' வைத்தாகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் வேறு பல பெரிய பிரச்சினைகள் எல்லாம் இருந்தன. ஜமீன்தாரி ஒழிப்பு, மன்னர் ஒழிப்பு போன்ற காரியங்களில் கவனம் செலுத்தி, இம்மாதிரி பெரிய பெரிய காரியங்களை இந்த அரசுக்கு விட்டு வைக்காமல், அம்மாதிரிப் பெரிய காரியங்களில் கவனம் செலுத்தி அவைகளைச் செய்துவிட்டுப் போய் விட்டார்கள்.

(பிற்பகல் 6-20)

இப்போது அவர்கள் செய்த காரியத்தை, இந்த அரசு தொடர்ந்து செய்து கொண்டிருப்பது போற்றத் தக்கது. குறிப்பாக மற்ற வேலைகளில், உதாரண மாக, மதுவிலக்கு போன்றவற்றில் பரீட்சார்த்தமாக ஒத்திவைத்தது போன்று, இதைக் கைவிடாமல் செய்து வருவது போற்றத்தக்கது. குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மீனவர்களுக்கும் மற்ற ஏழைகளுக்கும் வீடுகளைக் கட்டித் தருவது மிகவும் சிறந்த காரியம். இதெல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆரம்பம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, இப்போது அதிகமான வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்த அரசுக்கு வாய்ப்புகள் ஏற்பட்டி ருப்பதற்குக் காரணம், அப்போது ரூ. 1,94 கோடி தான் மொத்த வருமானமாக இருந்தது; 1967-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் அந்த அளவிற்குத்தான் வருமானம் இருந்தது. இப்போது அது ரூ. 5,00 கோடிக்கு மேலே போய் விட்டது. அந்தக் காரணத்தால் நமது முதலமைச்சர் அவர்கள் நிதி அமைச் சராகவும் உள்ள காரணத்தினால், தாராளமாக ஏழை எளிய மக்களுக்கு இப்படிச் சிறந்த முறையில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது மிகவும் சிறந்த காரியம். அதை நாங்கள் என்றும் எப்போதும் குறைத்து மதிப்பிடுவதில்லை. நல்ல காரியம். காங்கிரஸ் ஆட்சி அதை ஆரம்பித்திருந்தாலும், அது இப்போது நாளுக்குப் பெருகி நல்ல முறையில் செய்யப்பட்டு வருகின்றது. இதைப் பாராட் டாமல் இருக்க முடியுமா?

அடுத்து, எஸ்டேட் ஒழிப்பு பற்றிச் சொல்ல வேண்டுமானால், ஆரம்ப காலத்திலே இதற்கு எவ்வளவோ இடைஞ்சல்களெல்லாம் இருந்தன. ஏனென்றால் எஸ்டேட் அபாலிஷன் சட்டம் முதன்முதலாகப் பிரேரேபிக்கப்பட்ட நேரத்தில் அதற்கு மிகவும் எதிர்ப்பு கடுமையாக இருந்தது. அப்போது இரண்டு சபைகளின் கூட்டு ஆய்வுக் குழுவில்—ஜாயிண்ட் செலெக்ட் கமிட்டியில்—

உறுப்பினராக இருந்து பல இடங்களுக்கு, மங்களூர், உடுப்பி போன்ற இடங்களுக்கெல்லாம்கூட சென்று அவர்களுடைய கருத்துக்களை அறிந்தோம். ஆந்திரப் பகுதிகளில்கூடச் சென்று கேட்டு வந்தோம். அப்போது திரு. பிரகாசம் அவர்கள் காலத்தில், அவருக்குப் பின்னால் டாக்டர் பி. சுப்பராயன் அவர்களை—அவரே ஒரு பெரிய ஜமீந்தாராக இருந்தும் அவரையே—இந்தக் கூட்டு ஆய்வுக் குழுவின் தலைவராகப் போட்டு, டாக்டர் பி. சுப்பராயன் அவர்களே இந்த எஸ்டேட் அபாலிஷன் சட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தார்கள். அது இன்னும் சில கிராமங்களைப் பொறுத்தமட்டில் செயல்பட முடியாமல் இருக்கும் நிலை வருந்தத்தக்கதாகும். அவற்றிலே சிக்கிரம் செட்டில்மெண்டு, ஸர்வே இவையெல்லாம் முடிந்து, அவற்றை ரயத்துவாரிக்கு மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி விட்டுப்போன கிராமங்களிலே தொடர்ந்து நடவடிக்கை எடுத்து ரயத்துவாரி செட்டில்மெண்டாக ஆக்கிக்கொடுக்க வேண்டும் என்றும், தாமதம் இல்லாமல் இதைச் செய்தாக வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சில கிராமங்களைப் பொறுத்தமட்டிலே, நீதி மன்றங்களுக்குச் சென்று தாற்காலிக தடை உத்தரவு, 'ஸ்டே' வாங்கியிருக்கின்றார்கள். அவை போக, பாக்கியுள்ள மற்ற கிராமங்களில் சீக்கிரம் செட்டில்மெண்டு செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஜமாபந்தியைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள் இதிலே. ஜமாபந்தியை ஒழிக்க வேண்டுமென்று வெகு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஜமாபந்தியை ஒழிக்க வேண்டும் என்று பொதுவாக ஜனங்கள் மத்தியில் பேசப்பட்டது, சொல்லப்பட்டது; ஏனென்றால், ஜமாபந்தியின் பெயரால் நிறையப் பணத்தை அங்கு அடிமட்டத்திலுள்ள அதிகாரிகள் வசூல் செய்து அங்குள்ள மக்களுக்கு அதிக இடைஞ்சல்களைச் செய்கின்றார்கள். அதுதான் முக்கியமாகச் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது இந்த அறிக்கையில் 'தற்போது ஜமாபந்திக்குப் பதிலாகப் புகுத்தப் பட்டுள்ள தணிக்கை முறை ஏறத்தாழ ஜமாபந்தியைப் போன்றதுதான்' என்று சொல்லப்பட்டிருப்பது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. ஜமாபந்தி முறை இல்லாமல், ஆனால் பொதுமக்களிடத்திலிருந்து மனுக்களைப் பெறுவது மட்டும் தவிர்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எது வேண்டுமோ அது தவிர்க்கப்பட்டிருக்கின்றது. பொது மக்களிடத்திலிருந்து புகார்களையும் மனுக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியது மிகமிக முக்கியம். அது இப்போது தவிர்க்கப்பட்டிருக்கின்றது. மற்றபடி ஜமாபந்தி போன்றதுதான் என்ற வார்த்தைகள் எல்லாம், 'ஜமாபந்தி போன்றது' என்றால், பணத்

தையும் வசூல் செய்து கொள்ளலாம் என்ற ஒரு எண்ணத்தைக் கொடுப்பது போன்று ஆகிவிடுகின்றது. இதெல்லாம் வேண்டியதில்லை. ஜமாபந்தி போன்றது தான் என்று அரசாங்கமே ஒரு அறிக்கையில் எழுதி வைத்தால், ஜமாபந்தி மாதிரி இன்னும் நாம் இருக்கலாம் என்று அவர்களும் நினைத்துக்கொண்டு விடுவார்கள். அந்த மாதிரி இருக்கக்கூடாது. ஆகவே அந்த மாதிரி இல்லாமல் கணக்குத் தணிக்கையோடு நின்றுவிட வேண்டும். இப்போது மனுக்களை அதிகாரிகளிடம் கொடுப்பதில் கஷ்டம் ஏதுமில்லை. ஏனென்றால் மாதாமாதம் அரசாங்க அதிகாரிகளே போய்—அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டிய பதிலை நானே சொல்லிவிடுகின்றேன்—மாதா மாதம் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்குச் சென்று மனுக்களை வாங்கி வந்து அவற்றைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதால், ஜமாபந்தியில் இது வேண்டாம் என்று கூறியிருக்கின்றது. ஆனால் அதே நோக்கில் மீண்டும் ஜமாபந்தியைப் போல இன்னும் ஒன்றைக் கொண்டு வந்துவிட வேண்டாம் என்று மறுமுறையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது முத்திரைத்தாள்கள் விஷயத்தில் பெரும் பற்றுக்குறை இருந்து வருகிறது. பொதுவாக இப்போதுள்ள விதிகளின்படி ரூ. 500க்கு உள்ள பத்திரத் தாள்கள் இல்லை என்றாலும், ரொக்கமாக ரூபாயைக் கட்டிவிட்டு அதற்கான ரசீதைக் காண்பித்து, அதன்படி அந்தப் பத்திரத்தில் சப்-ரெஜிஸ்ட்ரார் என்டார்ஸ் செய்துவிட்டால் போதும் என்று இருக்கிறது. ஆனால் சில நேரங்களிலே ரூ. 3,000, ரூ. 4,000க்கும் பத்திரங்களை எழுத வேண்டியிருக்கிறது. அப்போது அதற்கான முத்திரைத்தாள்களை வாங்கச் சென்னைக்குத் தான் வரவேண்டியிருக்கிறது. இங்கே கிடைக்கின்றது, ஆனால் மற்ற ஊர்களிலே கிடைப்பதில்லை. ஆகவேதான் அரசாங்கம் இதில்கூட சென்னையைத் தவிர மற்ற ஊர்களிலுள்ள சப்-ரெஜிஸ்ட்ரார்களுக்குத்தான் இப்படி என்டார்ஸ் செய்யும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். சென்னையிலுள்ள சப்-ரெஜிஸ்ட்ராருக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. ஆகவே இந்த பத்திரத்தாள்கள் மாவட்டத் தலைநகரங்களிலாவது கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக 'இன்பர்மேஷன் அண்டு பப்ளிஸிடி' இலாகாவிற்கு மட்டும் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் 90 லட்சம் ரூபாய் வரையில்— செலவாகிறது. இவ்வளவு செலவு தேவைதானா என்பதை முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொண்டு அதோடு விட்டு விடுகிறேன். ஏனென்றால், என் மனத்திற்கு அதிகமான தொகை அது என்று

தெரிகின்றது. எனவே அதைக் குறைக்கலாமா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிலே பிலிம் டிவிஷனுக்கு மட்டும் ரூ. 30 லட்சம் ஆகிறது. எந்த இனத்தில் குறைக்க முடியும் என்று பார்த்து அதைச் செய்யவும். ஏனென்றால் இப்போது கொஞ்ச நாளாக நமது முதலமைச்சர் அவர்கள் பேசும்போதெல்லாம் சிக்கனத்தைப் பற்றியே மிகவும் அதிகமாக வற்புறுத்திப் பேசுகின்றார்கள். இதிலும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் இது அவருடைய இலாகா.

திரு. ஜி. சுவாமிநாதன் : பேச்சே சிக்கனமா அல்லது சிக்கனத்தைப்பற்றிப் பேசுகின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : சிக்கனத்தைப்பற்றி வெகு தெளிவாகப் பேசியிருக்கின்றார்கள். உதாரணமாக வருஷா வருஷம் நமது வரவு—செலவுத் திட்ட கூட்டத் தொடர் முடியும் தருவாயில், 'ஹாஸ்டல் டே' என்று கொண்டாடுவது வழக்கம். அதிலே கொஞ்சம் பணம் செலவாகிறது என்று சிக்கனத்தையொட்டி இந்த ஆண்டில் அதைக் கை விட்டுவிட வேண்டும் என்று பிசினெஸ் அட்வைஸரி கமிட்டி மீட்டிங்கில்—இந்தச் சபையிலும் அந்தச் சபையிலும்—சொல்லி நிறுத்திவிட்டார்கள். இதை நான் முழுதாக வரவேற்கிறேன். வறட்சியில் மக்கள் எல்லோரும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் இப்படி ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்தார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதை வரவேற்றிருக்கின்றார்கள். இதை மூடுமந்திரமாகச் சொல்லவில்லை. பகிரங்கமாகவே சொல்லுகிறேன். இதை வரவேற்கிறேன். அதே மாதிரி எங்கெங்கே குறைக்க முடியுமோ அங்கெல்லாம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சில விளம்பரங்கள் பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில், திரு. பெல்லியப்பா அவர்கள் டிரான்ஸ்போர்ட் டைரெக்டராக இருந்த காலத்தில் அவர் பெயரால் கொடுக்கப்பட்ட விளம்பரம் இப்போது, 1975-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் வெளியாகியிருக்கின்றது. இதெல்லாம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. இப்படிக் கொடுப்பது அவசியம்தானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். திரு. பெல்லியப்பா அவர்கள் மூன்று அல்லது நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் டிரான்ஸ்போர்ட் டைரெக்டராக இருந்தார். அவர் போய் சில வருஷங்கள் கழித்து அவர் பெயரால் இந்த விளம்பரம் இப்போது வந்திருக்கின்றது. இதையெல்லாம் முக்கியமாக முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஏன் அனாவசியமாக இதைச் செய்தார்கள் என்று தெரியவில்லை. எந்தக்

காலத்திலேயோ போட வேண்டிய விளம்பரத்தை இப்போது போட்டிருக்கின்றார்கள். இதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. இந்த மாதிரி விளம்பரங்களையெல்லாம் நிறுத்த வேண்டும். சட்டப்படி செய்யவேண்டிய 'ஸ்டாசுடரி அட்வெர்டிஸ்மெண்ட்' தான். ஆனாலும் இப்போது ஏன் இப்படிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஆகவே எல்லாத் துறைகளிலும் மக்கள் இப்படிப்பட்ட பெரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நேரத்தில் எவ்வளவு அதிகமாகச் செலவைக் குறைத்து, சிக்கனத்தைக் கையாள முடியுமோ அதைச் செய்து, அவற்றை வறட்சி நிவாரண வேலைகளுக்குத் திருப்பி விடுவது முக்கியமாகும். இப்போதுள்ள வறட்சி தீர்ந்தவுடன் மக்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். இப்போது அவர்கள் படும் கஷ்டங்களைக் காட்டிலும் அவர்கள் அதிகமாக அப்போது கஷ்டப்பட வேண்டியிருக்கும். அந்த நேரத்தில் அவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் இவற்றையெல்லாம் கொடுத்து, எவ்வளவுக்கெவ்வளவு அரசாங்கம் அவர்களுக்கு உதவ முடியுமோ அந்த அளவிற்குச் செய்து கொடுத்தால்தான், அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று கூறி முடிக்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 6-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் குறித்த கொள்கைபற்றியும், அவை முன்னர் வைக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகம் குறித்த கொள்கைக் குறிப்புபற்றியும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துரைத்த கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்தக் கொள்கைக் குறிப்புக்கள்பற்றி முதலில் உரையைத் தொடங்கிய நம்முடைய உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் 'வாழ்க்கை ரகசியத்திலே' இருந்து தன்னுடைய உரையைத் தொடங்கினார்கள். வாழ்க்கை ரகசியங்கள் வெளிப்புறத்துச் சுவர்கள் அளவுக்கு வரக்கூடாது என்ற அவருடைய கொள்கையை நானும் ஏற்றுக்கொள்ளுகின்றேன். ஆனால் இன்றைக்கு ஆபாச சுவரொட்டிகள் தடுக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சியை அரசின் சார்பில் நாம் தீவிரமாக எடுத்து வருகிறோம் என்றாலும், அதிகாரிகளும் அவ்வப்போது நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள் என்றாலும், அதனையும் மீறி இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்ற காரியங்களும், ஆபாசக் கதைகள் பத்திரிகைகளிலே வெளிவருவதும் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. நண்பர் திரு. கணபதி அவர்களும், மற்றவர்களும் சுட்டிக் காட்டியதை மனதிற்கொண்டு இன்னும் அதிகாரிகள் இந்தச் சுவரொட்டிகளைத்

தடுப்பதிலும், அவற்றை அகற்றுவதிலும் அதிக கவனத்தைச் செலுத்துவார்கள் என்று நான் நம்புகின்றேன். ஒவ்வொரு முறையும் மேலவையிலும், பேரவையிலும் இந்தச் சுவரொட்டிகளைப் பற்றிய பிரச்சினை எழுகிறது. சில நேரங்களில் எது ஆபாசம் என்று தீர்மானிப்பது சங்கடமாகவும் ஆகிவிடுகிறது. எது வரையிலே ஆபாசம், யார் யாருடைய கண்ணுக்கு எது ஆபாசமாகத் தோன்றுகிறது, யார் யாருடைய உள்ளத்திற்கு எது ஆபாசமாகத் தோன்றுகிறது என்கின்ற இவ்வளவு விவரங்களும் வந்துவிடுகின்றன. ஆனாலும் பார்த்த மாத்திரத்திலே அருவருக்கத்தக்க பல விளம்பரங்கள் இன்றைக்கு சென்னை மாநகரத்தினுடைய தெருக்களை அசிங்கப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதனை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். விரிவாக அதுபற்றி மேலும் நான் குறிப்பிட விரும்பாமல் இங்கு நடைபெற்ற கருத்துப் பரிமாற்றங்களின் அடிப்படையிலேயே அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்கின்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் பேசுகிற நேரத்தில், தலைமைச் செயலாளர் ஒரு மாநாட்டில், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டில், அதிகாரிகளைப்பற்றிக் குறிப்பிட்டதுபற்றி எடுத்துச்சொன்னார்கள். பொதுவாக அதிகாரிகள் கலந்துகொள்கின்ற கூட்டங்களில் அதிகாரிகளை ஊக்குவிப்பதும், இன்னும், சிறந்த முறையிலே அவர்கள் பணியாற்ற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு சில அறிவுரைகளை வழங்குவதும், அந்த மாநாட்டிலே கலந்து கொள்ளுகின்ற ஆளுநர், முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் ஆகியோர்களுடைய கடமையாகும். அந்தக் கடமையின் காரணமாகச் சொல்லப்பட்ட கருத்துக்களை நாம் முன்மாதிரியாக வைத்துக்கொண்டு அதிகாரிகள் அனைவருமே தாம் குறைந்து விட்டார்கள் என்றோ, தவறாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றோ கருதிவிடக்கூடாது என்பதை நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

ஹோட்டல் அதிபர்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், ஹோட்டல் அதிபர்களை அழைத்துப்பேசி அவர்களுக்குத் தரப்பட்ட வாக்குறுதி தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுவருகிறது. 200 டன் அரிசி ஹோட்டல் வைத்திருக்கின்றவர்களுக்கு நியாய விலையிலே வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட இடங்களில் இட்டிலி போன்ற பலகாரங்களுக்கு நாம் 25 பைசா என்று நிர்ணயித்ததை அவர்கள் இன்றைக்கு அமுல்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். திரு. கணபதி அவர்கள் குறிப்பிட்டது ஒருவேளை திருச்சி நகரமாக இருக்கும்

என்று கருதுகின்றேன். திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில், ஜனவரி திங்களில் 50 டன் அரிசி மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கியிருக்கின்றார். ஆனால் வழங்கிய நியாய விலை அரிசியை ஏற்றுக்கொண்டு, ஹோட்டல் வியாபாரிகள் தாங்கள் அளித்த வாக்குறுதியை மீறியிருக்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் நமக்குப் புகார் அனுப்பியிருக்கிறார். ஆகவே, வாக்குறுதிகளை ஹோட்டல் அதிபர்கள் நிறைவேற்றத் தவறுவார்களேயானால், இனிமேல் தொடர்ந்து அவர்களுக்கு வழங்குகின்ற 'நியாய விலை உணவு தானியம்' நிறுத்தப்படும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தம் நவம்பர் திங்களிலே ஏற்பட்டது. நவம்பர்-டிசம்பர் மாதங்களிலே வழங்கப்படவில்லை. ஜனவரி மாதத்தில்தான் வழங்கப்பட்டது. இருந்தாலும் நவம்பர்-டிசம்பர் திங்களிலே அவர்கள் விலையைக் குறைத்திருக்கிறார்கள். தொடர்ந்து வழங்காத காரணத்தினால், வாக்குறுதியைச் செயல்படுத்தாத காரணத்தினால்தான் அவர்கள் விலை மாற்றுதலுக்கு உந்தப்பட்டார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நவம்பர்-டிசம்பரில் வழங்காமல் இருக்கும்போது குறைத்துவிட்டார்கள். ஜனவரி திங்களில் வழங்கியதும் அதிகமான விலைக்கு விற்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே, வழங்காமல் இருந்தால், குறைவாக விற்பார்கள் என்று இப்போது எங்களுக்குப் புரிகிறது. இதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்திலிருந்து நாம் புரிந்துகொள்ளக்கூடிய உண்மையாக இருக்கிறது.

கிராம அதிகாரிகள் மூலமாக பட்டா புத்தகங்கள் கிடைப்பதிலே இருக்கின்ற ஒரு சில கிராமங்களை திரு. கணபதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எல்லா பட்டா புத்தகங்களிலேயும் அப்படிப்பட்ட தவறுகள் நடந்துவிட்டதாக நாம் எடுத்துக்கொள்ள முடியாது. குறிப்பிட்ட புகார்கள் அரசுக்கு வருமேயானால், தொடர்புடைய அதிகாரிகள் மூலமாக அவைகள் கவனிக்கப்படும் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் மேலவை உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலே மாத்திரம் நடைபெறுகின்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும், அவர்கள் ஒரு நான்கைந்து மாவட்டங்களிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பிரதிநிதிகளாக இருக்கின்ற நேரத்தில் குறிப்பிட்ட மாவட்டத்திலே மாத்திரம் அவர்கள் சென்று பணியாற்றுவது என்பது வளர்ச்சிக் குழுக்

கூட்டத்தில சரியாக இல்லை என்றும், எல்லாக் கூட்டங்களுக்கும், எல்லா மாவட்டங்களுக்கும் செல்லுகின்ற அனுமதி எங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். 1958 ஆம் ஆண்டு என்று எனக்கு நினைவு, அப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சில விதிமுறைகளின்படி ஒரு மேலவை உறுப்பினர் நான்கைந்து மாவட்டங்களிலே இருந்து, அதாவது ஆசிரியர் தொகுதியிலோ அல்லது உள்ளாட்சி மன்றத் தொகுதியிலோ தேர்ந்தெடுக்கப் படுவார்களேயானால், அவர்களாகவே எந்த மாவட்ட வளர்ச்சிக் குழுவிலே தாங்கள் அங்கம் வகிக்கவேண்டும் என்று முதலிலே குறிப்பிடுகிறார்களோ, எதற் கென்று தேர்ந்தெடுக்கிறார்களோ அந்த மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு அவர்கள் செல்லலாம் என்கின்ற ஒரு விதி இருக்கிறது. ஆயினும் மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் ஆசிரியர் தொகுதி, உள்ளாட்சி மன்றத் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி இப்படிப்பட்ட தொகுதிகளிலிருந்து வருகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லாத் தொகுதிகளிலிருந்தும் வருகின்ற மேலவை உறுப்பினர்கள் எல்லாத் தொடர்புடைய மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டங்களிலும் கலந்துகொள்வதில் தவறு இல்லை என்றுதான் நான் கூடக் கருதுகிறேன். அதற்கேற்ற வகையில் விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள், இன்னும் அந்தக் காரியங்கள் தொடங்கப்படாமல் இருக்குமேயானால், விரை விலே அவைகளை ஆராய்ந்து அதற்கு வழி வகைகளை வகுப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவை மாவட்டத்திலே யாரோ காவல் துறை அதிகாரிகளை மிரட்டி விரட்டினார்கள் என்றெல்லாம் திரு. முத்துசாமி அவர்கள் எடுத்துச் சொன் னார்கள். குறிப்பிட்டு எந்தக் காவல் துறை அதிகாரி யாரால் மிரட்டப்பட்டார், என்ன காரணத்துக்காக மிரட்டப்பட்டார் என்கின்ற தகவல்களை அவர் இங்கு தெரிவிக்கவில்லை. ஒருவேளை அந்தத் தகவல்களைத் தனியாக அவர்கள் என் னிடத்திலே தருவார்களேயானால், அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்குத் தயா ராக இருக்கிறேன் என்பதையும் நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் இங்கே பேசிய உறுப்பினர்களும் வறட்சி நிவாரணம் குறித்து, அதன் தொடர்புடைய பணிகள் குறித்து, அதன் தொடர் பான விமர்சனங்கள் குறித்துப் பேசினார்கள். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் வந்து பாராட்டிவிட்டுப் போய்விட்டார்கள், இனிமேல் நாம் சந்தேகப்படத் தேவை யில்லை என்று சொன்னார்கள். நாங்கள் எல்லாம் சொன்னதை நம்பாமல்

மத்திய அரசிலிருந்து திரு. சுப்பிரமணியம் அவர்கள் வந்து பாராட்டிய பிறகு தான் 'நாம் இனிமேல் சந்தேகப்படத் தேவையில்லை' என்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம் கருதுவது உள்ளபடியே வேதனைக்குரியதாகும்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களை கிரிட்டிசைஸ் பண்ணி, குறை சொல்லிக்கொண்டிருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களே பாராட்டிவிட்டார், ஆகையால் இனி சந்தோஷப்படலாம் என்று சொன்னேனேயொழிய, என்னுடைய கருத்து எப்போதும் இருக்கிறது, அதை யாரும் அசைக்க முடியாது. முதலமைச்சர் அவர்களைக் குறை சொல்லிக் கொண்டிருந்தவரே பாராட்டிவிட்டுப் போய்விட்டார், ஆகையால் இனி சந்தேகப்படத் தேவையில்லை என்றுதான் சொன்னேன்.

(பிற்பகல் 6-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிச் சொல்லியிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன். அவர்களின் பேச்சு தொடக்கத்திலே வறட்சி நிவாரணப் பணிகளை மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களே பாராட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய மனதிலே இருந்தது வேறாக இருக்கலாம். சொன்னது இதுதான். திரு. சுப்பிரமணியம் அவர்கள் அல்ல; நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், நல்ல உள்ளம் படைத் தவர்கள் எல்லோம் பாராட்டினாலே போதும். மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு சர்டிபிகேட் கொடுத்துத்தான் ஒரு மாநில சர்க்கார் நேர்மையாக நடந்துகொள் கின்றது, மாநில சர்க்கார் நல்ல முறையிலே பணிகளை நடத்துகிறது என்று நம்பும் ஒரு சூழ்நிலையை உருவாக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்கிறேன். மாநிலங்களில் இருக்கக் கூடியவர்களுக்கு எல்லாம் மத்திய சர்க்கார்தான் சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று இருத்தல் ஆகாது என்பதற்காகத்தான் குறிப்பிட்டேனே அல்லாமல் வேறு அல்ல.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் இன்று வறட்சி நிவாரண நிதிக்காகத் தரப்பட்டது ரூ. 7½ கோடி என்று சொல்லப்படுகிறது, அதிலே 70 சதம் கடன், 30 சதம் மான்யம், இது திட்டத்திலே கழித்துக் கொள்ளப்படும் என்றெல்லாம் சொல்லப்படுகிறதே, அதுபற்றிய விளக்கங்கள் தேவை என்று கேட்டார்கள். அவர்கள் அந்த விளக்கங்களை அறிந்து கொள்ளாதவர்கள் அல்ல. என் மூலம் இந்த விளக்கம் அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் அதைச் சொன்னார்கள் என்றுதான் நான் கருது கிறேன். திட்டத்திலே கழித்துக்கொள்ளப்படும் என்றுதான் நேற்று முன்

தினம் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலே பேசிய திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அது ஐந்தாண்டுத் திட்டத்திலே கழித்துக்கொள்ளப்படுமா அல்லது அடுத்த ஆண்டுத் திட்டத்திலேயே கழித்துக் கொள்ள ஆரம்பிக்கப்படுமா என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். ஆகவே தான் நான் பேரவையிலும் குறிப்பிட்டேன். இங்கே பேசுகிறபோதுகூட நான் சுட்டிக் காட்டினேன். "வறட்சிப் பணிகளுக்காக என்று தனியாகத் தொகை ஒதுக்குகின்றார்களா? எவ்வளவு ஒதுக்கப் போகிறார்கள்? அல்லது திட்டத்திலே சேர்த்து ஒதுக்குகின்றார்களா? அப்படி ஒதுக்கப்படுகிற பணத்தை அவர்கள் திட்டத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளப் போகிறார்களா?" என்று கேட்டார்கள். அப்படிக் கழித்துக்கொள்வார்களானால், நம்முடைய திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் செயல்பட முடியாமல் வளர்ச்சித் திட்டங்கள் தடைபட்டுவிடக்கூடும். ஏதோ பணம் அனுப்புவதாகச் சொல்லி, வறட்சி நிவாரணத்திற்காக நாங்கள் பணம் அனுப்பினோம் என்று சொல்லி விட்டு, வறட்சி நேரத்தில் மக்களுக்கு மத்திய சர்க்கார் இவ்வளவு அனுப்பிய தாத மக்களை மகிழச் செய்துவிட்டு, மறுபடியும் இரண்டு ஆண்டுக் காலம் கழித்து, வறட்சியாக அனுப்பினோம் என்று சொன்னாலும், அதைத் திட்டத்திலே கழித்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், இந்த சர்க்கார் அல்ல, வேறு எந்த சர்க்கார் வந்தாலும், இந்தத் தொல்லையை, பொருளாதாரத்திலே, நிதி ஆதாரத்திலே, அனுபவிக்க வேண்டிய நிலை வரும் என்பதற்காகத்தான் நான் இதைக் கேட்கிறேன். இதற்கு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிற்கு மாத்திரம் அல்ல, ஆறாவது நிதிக் கமிஷன் வகுத்துள்ள வரைமுறையின்படி, எல்லா மாநிலங்களுக்கும் இது பொருந்தும் என்று சொல்கிறார்கள். எல்லா மாநிலங்களின் சார்பாகவும்தான் நான் சொல்கிறேன். எல்லா மாநிலங்களிலேயும் இருக்கின்ற முதலமைச்சர்கள் எல்லாம் இதைக் கேட்கிறார்களோ, இல்லையோ, அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நம் மாநில உரிமைகளை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்திக் கேட்கின்ற இடத்திலே நாம் இருக்கின்றோம். முறையாக நாம் கேட்டு வருகின்றோம். ஆகவேதான் திட்டங்களிலே கழித்துக்கொள்கின்ற வகையில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு அளிக்கக் கூடாது என்று சொல்கிறேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்கு என்று ஒதுக்கப்படுகின்ற பணம் தனியாக வரவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகிறோம். அந்த நிலையிலேதான் இன்றைக்கும் இந்த அரசு இருக்கின்றது என்பதை நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மற்றொன்றைச் சொன்னார்கள். நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே ரூ. 26 கோடி துண்டு விழுகிறது. நாம் எதிர்பார்த்த பணத்தையும் சேர்த்துக் கணக்கிட்டோம்.

இப்போது 26 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இப்போது அந்தப் பணத்தை நாம் பெறாவிடில், இந்தத் துண்டு விழுகிற தொகையை எப்படிச் சரிக்கட்டுவது என்று கேட்டார்கள். நாம் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் வறட்சி நிவாரணத்திற்காக ரூ. 50 கோடி செலவாகும் என்கின்ற செலவைக் காட்டித்தான் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கின்றோம். அதற்கு அவர்கள் நடப்பு ஆண்டில் போக, வரும் ஆண்டில் ரூ. 20 கோடி அல்லது ரூ. 30 கோடி தரவேண்டும் என்று நாம் மத்திய சர்க்காரிடத்திலே கேட்டிருக்கின்றோமே அல்லாமல் அதை வரவு வைத்துக்கொண்டு இந்த ரூ. 20 கோடி துண்டு விழும் என்று இல்லை. ஆகவே வரவிலே வைத்துக்கொள்ளவில்லை. அந்த 26 கோடி ரூபாயில் நாம் போட்டிருக்கின்ற வரவு இனங்கள் மூலம் ரூ. 6 கோடி சரிக்கட்டப்படும் என்றும் மீதம் உள்ள ரூ. 20 கோடிக்கு நம் திட்டத் தொகை மேலும் அதிகரிக்கப்பட்டுத் தரவேண்டும் என்று இந்த அவையிலேயும் பேரவையிலேயும் நான் விளக்கியிருப்பதை நான் மீண்டும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளிகளுக்கு வறட்சிப் பணிகளில் தரப்படுகின்ற கூலிகள்பற்றிப் பேசப்படுகின்றவைகளைப்பற்றிய கருத்துக்களும் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. இந்தக் கருத்து பத்திரிகைகளிலே வந்தது. ஆளுநர் அவர்களே சில இடங்களிலே சென்று ஆராய்ந்து பார்த்ததிலே, இந்தக் கூலி விதங்களில் வித்தியாசம் இருப்பதாகச் எடுத்துச் சொன்னார்கள். பத்திரிகைகளில் வந்ததை வைத்துக் கொண்டு சில பேர் இன்றைக்கும் வெளியிலே பேசுகிறார்கள். இந்த மன்றத்திலே அது பற்றிய விளக்கங்களை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கோருவது இயற்கைதான். நான் அதைத் தவறு என்று சொல்ல மாட்டேன். அரசின் சார்பில் எவ்வளவு கூலி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்று நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் வினா எழுப்பினார்கள். ரூபாய் 3-க்குக் குறையாமல் இந்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குக் கூலி தரப்பட வேண்டும் என்று அரசின் சார்பிலே ஆணை போடப்பட்டிருக்கின்றது. ரூபாய் 3-க்குக் குறையாமல் தரவேண்டும் என்று போட்டிருக்கின்றோம். சில இடங்களில் ரூ. 3, ரூ. 4, ரூ. 5 என்று வித்தியாசம் இருக்கின்றது என்கின்ற செய்தி வெளியாகின்றது என்றால், அதற்குக் காரணம் ஒப்பந்தக்காரர்கள் சில இடங்களில் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் அந்த வேலைகளை முடிப்பதற்காக தொழிலாளர்களை அமர்த்துகின்ற நேரத்தில் அதற்கு மனம் ஒப்புதலுடன் வருகின்ற தொழிலாளர்களைத்தான் அந்த வேலைகளுக்கு அமர்த்திக்கொள்கின்றார்கள். இன்னும் சில பணியாளர்கள் ஒரு வேலையை மொத்தமாக எடுத்துக்கொள்கின்றார்கள். தாக்குகள் என்று இருக்

இன்றன. கிராமங்களில் தாக்குகள் என்று சொல்வார்கள். அந்தத் தாக்குகளை வெட்ட, இன்னின்ன தாக்குகளை வெட்ட வேண்டும் என்ற அளவிலே எடுத்துக் கொள்ளும்போது, இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்து அந்தக் காரியங் களைச் செய்கின்றார்கள். குடும்பம் குடும்பமாகச் செய்கின்றார்கள். சின்னப் பிள்ளைகள் வீட்டில் இருந்தால் அந்தக் குழந்தைகள் உட்பட அந்தக் காரியங் களில் ஈடுபடுகிறார்கள். அப்படித் தரும்போது அவர்களுக்குத் தரப்படுகின்ற கூலியில் வித்தியாசம் இருக்கிறது. அதை நாம் பெரிதுபடுத்தி, ஏதோ கூலியில் வித்தியாசம், தமிழ் நாடு முழுவதும் நடைபெறுகிறது என்று தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள்கூட சொன் னார்கள், கூலியில் எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை, அது ஒழுங்காகத் தான் நடைபெறுகிறது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இப்போது ஒப்பந்தக்காரர்களிடத்திலே அனுபவம் பெற்றவர்களுக்கும், இப்படிப்பட்ட வேலைகள் எந்த முறையில் சரிவர நடைபெறும் என்பதை உணர்ந்தவர்களுக்கும் இதிலே நிச்சயமாக தவறு காண முடியாது என்பதை நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புள்ளி விவரங்கள் கொடுப்பதிலே இன்னும் எச்சரிக்கையாக கிராம அதிகாரிகள் ஈடுபட வேண்டும் என்று திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கின்றேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேலும் நல்ல முறையிலே எடுத்துச் செயல் படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றது என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அமைச்சர்கள் மற்றும் முக்கியமானவர்கள் எல்லாம் வெளியே செல்கின்ற நோத்தில் அதிகச் செலவாகிறது; நூற்றுக்கணக்கான கார்கள் அவர்களுக்குப் பின்னால் செல்கின்றன; சிக்கனம் என்று இன்று நம் அரசு நடந்துகொள்கின்றது என்று சொன்னாலும், இவைகளுக்காக ஆகின்ற செலவெல்லாம் அதிகமாக ஆகிறது என்ற கருத்துக்களையும் இங்கே எடுத்துக் கூறினார்கள். சில நேரங் களில் அமைச்சர்கள் செல்கின்ற நேரத்தில், அதுவும் வறட்சிப் பணிகள் நிலை மைகளைப் பார்வையிடச் செல்கின்றபோது, எல்லாத் துறை அதிகாரிகளும் வரவேண்டியிருக்கின்றது. நீர்ப் பாசனத் துறை அதிகாரிகள் வர வேண்டியிருக் கின்றது. சாலைப் பணித் துறை அதிகாரிகளும் வருவாய்த் துறை அதிகாரி களும் வரவேண்டியிருக்கின்றது. அவர்கள் எல்லாம் அமைச்சர்களுடன் வந்தால்தான் ஆங்காங்கு சொல்லப்படுகின்ற குறைகளைப்பற்றி வருகின்ற அதிகாரிகளுடன் கலந்து பேசி அந்த இடத்திலேயே தீர்வு கண்டு காரியங்களைச் செய்யச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் தொடர்ந்து எப்போதுமே அமைச்சர்களுக்குப் பின்னால் பல கார்கள் செல்வதை நாங்கள் விரும்பவில்லை

என்பதையும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே இதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லி, அமைச்சர்கள் ஒரு மாவட்டத்திற்கு வருவதற்கு முன்பு இன்னின்ன இடங்களுக்குப் பார்வையிட, இன்னின்ன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் செல்கின்றார்கள், அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு மட்டும் இந்த இந்த அதிகாரிகள் வந்தால் போதும் என்று அறிவிப்பு சென்றுவிடுகிறது. அந்த அளவுக்குத்தான் அதிகாரிகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றார்கள். அதை மேலும் குறைக்க வேண்டும் என்ற கருத்தை நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அப்படியே அதிகாரிகளுக்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. திடீரென்று சில நேரங்களில் ஒரு கிராமத்தில், அந்த கிராமத்து மக்கள் ஒரு குறைபாட்டைச் சொல்வார்கள் என்றால், உடனடி யாக விசாரிப்பதற்கு, தொடர்புடைய அதிகாரிகள் அங்கு இருந்தால்தான், அமைச்சர்களுக்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால்தான், அவர்கள் வருகின்றார்கள் என்பதைத்தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் திரு. அறிவழகன் அவர்கள் உலக மகளிர் தொண்டு இல்லத்திற்காக ஒரு கட்டிடம் கட்டப்படுவதைக் குறித்து இங்கே சொல்லி, அந்த இடத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவினை நடத்தியிருக்கின்றார்கள். அந்த உலக மகளிர் தொண்டு இல்லத்திற்குத் தலைவராக நம்முடைய ஆளுநர் பெருமான் அவர் களுடைய துணைவியார் அவர்கள் இருக்கின்றார்கள். இது பெண்கள் ஆண்டு. பெண்கள் ஆண்டில் பெண்களுக்காகச் செய்யப்படுகின்ற ஒரு காரியத்தைத் தடுத்து நிறுத்தி அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று ஆண்கள் கூறினால், அது நல்லதல்ல. அது மாத்திரம் அல்ல. அதற்கான ஒப்புதலை அதே மேடையிலே நானும் ஏற்கெனவே அளித்திருக்கின்றேன், அரசாங்கத்தின் சார்பில். இந்த உலக மகளிர் தொண்டு இல்லம் கட்டுவதை மாற்றுவது என்பது சிறப்பானதல்ல என்று நினைக்கின்றேன். அதை மாற்றியமைப்பது என்பது எளிதானதல்ல என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 6.50.)

நண்பர், நண்பர் என்று சொன்னால் பொருந்தாது. பெரியவர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் இங்கே சில குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய தொகுதியைப் பொறுத்தும், யூனியனைப் பொறுத்தும் எடுத்துச் சொன்னார். ஒரு முறை சொன்னார் முன்பே சபை யில். அதை விளக்க வேண்டாம் என்று விட்டுவிட்டேன். இன்றைக்கும்

சொன்னார். குறுக்கிட வேண்டாம் என்று இருந்து விட்டேன். மறுபடியும் திரும்பத் திரும்பச் சொன்னார். ஆகையால் நான் விளக்க வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்பட்டு விட்டேன். நிலைமை என்னவென்றால், ஆர். எஸ். மங்கலத்திலே உள்ள பஞ்சாயத்து யூனியன், சோழந்தூரிலே இருந்து தேவ சகாயம் என்கின்ற ஒரு ஆசிரியர், அதே யூனியனில் உள்ள ஆனந்தூர் என்கின்ற ஊருக்கு மாற்றப்பட்டார். அவருடைய மனைவி அதே ஊரில் மெட்ரனிடி அசிஸ்டெண்டாகப் பணியாற்றினார்கள். தேவசகாயம் என்கிற ஆசிரியர் மீண்டும் சோழந்தூருக்கு வரவேண்டுமென்று மாறுதல் கேட்டார். மனைவியார் அங்கே வேலை பார்க்கின்ற காரணத்தால் அந்த ஆசிரியர் அந்த ஊருக்கு வரவேண்டுமென்று கேட்டார். திரு. முத்துசாமி இல்லை. இருந்தால் நன்றாக ரசித்திருப்பார். சோழந்தூருக்கு மாறுதல் கேட்டார். மாறுதல் அவருக்குக் கொடுக்கவில்லை. ஆகவே, அவர் 23—6—1973 — இந்தத் தேதியில் பஞ்சாயத்து யூனியன் முன்பாக தீக் குளிப்பேன் என்று அறிவித்தார். அதற்குள் போலீசார் அவரைக் கைது செய்தார்கள். மற்ற ஆசிரியர்கள் எல்லாம் எதிர்த்து உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார்கள். இந்த அரசும் அதிகாரிகளும் இப்படிப்பட்ட விஷயத்தில் எவ்வளவு மனிதாபி மானத்தோடு நடந்துகொள்ளும் என்பது இந்த அவையில் இருப்பவர்களுக்குத் தெரியும். ஆகவே, மறுபடியும் அந்த ஆசிரியர் சோழந்தூருக்கு மாற்றப் பட்டார். இந்தக் கிளர்ச்சிகளுக்குப் பிறகு, தீக்குளிக்க அறிவித்ததற்குப் பிறகு, அதன் தொடர்பாக ஆசிரியர்கள் எல்லாம் உண்ணாவிரதம் ஆரம்பிக்க முடிவு செய்த பிறகு, அந்த ஆசிரியர் இங்கே மாற்றப்பட்டார். அவர் மறு படியும் அவர் மனைவி இருக்கின்ற ஊருக்கு மாற்றப்பட்டதை எதிர்க்கின்ற வகையில் நம்முடைய திரு. ராமகிருஷ்ணத் தேவர் தலைவராக இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன் கூட்டத்தில், ஆர்.டி.ஓ., பி.டி.ஓ. அவர்களையெல்லாம் எதிர்த்து ஒரு தீர்மானம் போடப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்கு எதிராகத் தீர்மானம் போடக்கூடாது என்பதை ஒட்டி, இந்தத் தீர்மானம் ஏன் ரத்து செய்யப்படக்கூடாது என்று பஞ்சாயத்து யூனியன் கேட்கப்பட்டு, இறுதியாக டி.ஆர்.டி. இந்தத் தீர்மானத்தை 26-1-75-ல் ரத்து செய்திருக்கிறார். இதில் விதி முறைகள் பின்பற்றப்பட்டு இருக்கின்றனவே யல்லாமல் விதிமுறைகளுக்கு மாறாக எதுவும் நடைபெறவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, தேவசகாயம் உண்ணாவிரதம் இருந்ததை ஆர்.டி.ஓ. மற்றவர்கள் எல்லாம் பார்த்து, உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்றுதான் அவர்கள் சொன்னார்கள்.

அவர்கள் 6 நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். 6 நாளைக்குப் பின்னாலே அவர்கள் தனியே போய்விட்டார்கள். அதற்கு ரொம்ப நீண்ட காலத்திற்குப் பின்னாலே, தேவகோட்டையிலே உள்ள பஞ்சாயத்து யூனியனிலே நோட்டீஸ் கொடுத்து அந்த ஏற்பாடு எல்லாம் பண்ணி அந்த ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இங்கே உண்ணாவிரதம் இருந்தவர்கள் பேரிலே எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தேவகோட்டையிலே உண்ணாவிரதம் இருந்தவர்கள் மீது, நடவடிக்கை எடுத்து, எல்லா யூனியன்களுக்கும் தகவல் கொடுத்து, அந்த மாதிரிச் செய்கின்ற எந்த ஆசிரியர்களுக்கும் லீவு கொடுக்கக்கூடாது, சம்பளப் பட்டுவாடா பண்ணக்கூடாது என்று எல்லாம் ஆர்.டி.ஓ. உத்தரவு போட்டார். டி.இ.ஓ. உத்தரவு போட்டார். அதேபோல் இந்த ஆர்.எஸ். மங்கலம் யூனியனுக்கும் ஏன் இந்த உத்தரவு போடக்கூடாது என்பதுதான் என்னுடைய பிரச்சினையே ஒழிய வேறு இல்லை. அந்த கெஜடட் ஆபீசர்கள் பேரிலே கண்டனத் தீர்மானம் போடக்கூடாது என்பதற்கான விதிமுறைகள் ஏதாவது இருந்தால், கொடுங்கள் என்று கேட்டேன், சொல்லவில்லை. அதற்குப் பின் நான் எழுதிய பின், டி.ஆர்.டி. இடம் வந்ததற்குப் பின், "1962-ம் வருஷத்திய ஜி.ஓ.விலே அந்த மாதிரி கண்டனத் தீர்மானம் போடக்கூடாது என்று போட்டிருக்கிறார்கள். நீங்கள் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள்" என்று உத்தரவு போட்டார்களே ஒழிய, அந்தத் தவறு செய்தவர்கள் பேரிலே நடவடிக்கை எடுக்கிறோம் என்று ஒரு வார்த்தை போட்டிருந்தால், கண்டனத் தீர்மானத்தை ரத்து பண்ணி விடுகிறோம். அது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அடுத்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பட்டாக்கள் வழங்குவதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அது மாத்திரம் அல்லாமல், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற அல்லது தொடங்கப்பட்ட காரியங்களை இந்த அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது என்பதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அதிலே வாதங்களில் புக விரும்பவில்லை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே என்ன நடந்தது என்று நான் அப்படிப்பட்ட வாதங்களை எழுப்ப விரும்பவில்லை. எனக்கு உள்ள மகிழ்ச்சியெல்லாம், தொடர்ந்து நல்ல காரியங்கள் நடந்து வருகின்றன என்பதையாவது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்கின்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒன்றைச் சொன்னார்கள், ஏற்கெனவே இந்த வீட்டு மனைப் பட்டாக்காரர்கள் எல்லாம் அவர்களுடைய வீடுகளில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் ; இதிலே பட்டா கொடுப்பது என்பது பாராட்டுக்குரியது என்றாலும்கூட அவர்கள் ஏற்கெனவே அந்த வீடுகளில்தான் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்

கள். 1947-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரை 20 ஆண்டுகளில் 63,770 பேருக்கு வீட்டு மனைப் பட்டா தரப்பட்டிருக்கிறது. நான் இப்போது கேட்பதெல்லாம், ஏற்கெனவே அந்த வீடுகளில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, ஏன் 63 ஆயிரம் பேருக்குப் பட்டா கொடுத்திருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி. பட்டா கொடுத்தால்தான் அந்த இடம் அவர்களுக்கு நிலைக்கும் என்பதற்காகத்தான் தரப்பட்டது. அப்படித் தரப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்க 63 ஆயிரமாக இருந்தது 20 ஆண்டுக் காலத்தில். 1967-க்குப் பிறகு இந்த எட்டு ஆண்டுக்குள் 4,94,692 பேருக்கு இந்த அரசின் சார்பில் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அதேபோல, இருபது ஆண்டுக் காலத்திலே 1947 லிருந்து 1967 வரையில் 1,15,000 பேருக்கு நிலப் பட்டா வழங்கப்பட்டது. மொத்தம் பரப்பளவு 2,88,000 ஏக்கரா. இந்த எட்டு ஆண்டுக் காலத்தில் 2,61,121 பேருக்கு நிலங்கள் ஒப்படைப்பு செய்யப் பட்டிருக்கின்றன. மொத்தப் பரப்பளவு 7,04,499 ஏக்கரா என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அஃதன்னியில் காடு, குன்று இவைகளிலே உள்ள நிலங்களை இன்றைய தினம் பட்டா செய்து கொடுக்கப்படுகின்ற அளவுக்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அப்படிப்பட்ட பட்டாக்களும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழிலாளிகள், தாங்கள் குடியிருக்கின்ற மனை தங்களுக்குச் சொந்தமாக வேண்டும் என்பதற்காக ரத்தப்புரட்சி எல்லாம் செய்திருக்கிறார்கள். அதற்காகப் பலபேர் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்காகக் குடியிருப்பு மனை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் பேசி முடிக்கும் வரை அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடியிருப்பு மனைச் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழகம் முழுவதும் 1,73,748 விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக ஆக்கியிருக்கின்றோம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஜமாபந்தி போன்ற விஷயங்களை, முத்திரைத்தாள் போன்ற விஷயங்களை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்து வைத்தார்கள். அப்படிப்பட்ட அரிய யோசனைகளுக்கு எல்லாம் நன்றி கூறி, அப்படிப்பட்ட யோசனைகளை பரிசிலித்து அரசு ஆவன செய்யுமென்று குறிப்பிட்டு இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU G. VASANTHA PAI: May I request the Hon. the Chief Minister to let me know whether he will consider exemption of playgrounds from urban land tax ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் இவைகளோடு இணைந்திருக்கின்ற அந்த மைதானங்களுக்கு இப்பொழுதே அந்த வரியிலிருந்து விதிவிலக்கு இருக்கிறது. ஆனால் தனிப் பட்ட முறையிலே கிளப்புகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு அப்படிப் பட்ட விதி விலக்கு இல்லை. அது தேவையா என்பது யோசிக்க வேண்டிய ஒன்று.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.00.)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

157. Notification issued with G.O. Ms. No. 466, Home, dated the 5th March 1974 in regard to amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

158. Notification issued with G.O. Ms. No. 115, Commercial Taxes and Religious Endowments, dated the 5th February 1975 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 on the instruments of transfer of debentures issued in the form of stock certificates and promissory notes by the Tamil Nadu Housing Board, in connection with the loan to the value of Rs. 110 lakhs floated by the said Board during December 1973. [Laid on the table of the House under section 75-A(2) of the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899)].

B. *Reports, Notifications and Other Papers.*

* 114. Policy Note on Land Revenue, District Administration, etc. (English and Tamil).

115. Demand No. 4—General Sales Tax and Other Taxes and Duties (English and Tamil).

116. Policy Note on Forest Department 1975-76. (English and Tamil).

117. Policy Note on Cinchona Department, 1975. (English and Tamil).

118. Policy Note on Animal Husbandry, 1975-76. (English).

119. Commercial Budget on Cinchona Department, 1975-76, (English).

---

* Circulated to all M.L.C's. on 29th March 1975.

இணைப்பு.

[19 ஆம் பக்கத்தில் இனம் 4க்கான அடிக்குறிப்பைக் காண்க]

இக்குறிப்பு, முக்கியமாக, "நிலவரி", "மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்" பற்றி விளக்குகிறது. இது தொடர்பான "இயற்கையின் சீற்றங்கள் குறித்து துயர்தணிப்பு", "இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்(", "ஜமீன்தாரர்களுக்கு இழப்பீடு", "மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்", "முத்திரைத்தாள் நிர்வாகம்" ஆகியவையாகும்.

வறட்சி நிவாரணம்.

2. மாநிலத்தின் இன்றைய வரலாறு காணாத வறட்சி நிலைமை 1974-75 ஆம் ஆண்டின் முக்கிய அம்சமாகும். அந்நிலைமை சீர்படுத்தப்பட்டு வருகிறது. அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் இயல்பான சராசரி மழையான 462 மி.மீ.-க்குப் பதிலாக 1974-ம் ஆண்டு இம்மாதங்களில் பெய்த மொத்த மழையின் அளவு 195 மி.மீ. ஆகும். இந்த மிகக் குறைந்த மழைகூட வளரும் பயிர்களுக்கு அவசியமான நாட்களில் அல்லாமல் அங்குமிங்குமாகப் பெய்தது. இதன் காரணமாக வேண்டிய அளவுக்குத் தண்ணீர் கிடைக்காது தண்ணீர் அதிகத் தேவையான நாட்களில் நீர்ப்பாசன ஏரிகள் வறண்டு போயின. ஆற்றுப் பாசன சம்பந்தப்பட்ட நீர்நிலையங்களில் கூட ஆறுதலளிக்கும் வகையில் நிலைமை அமையவில்லை. இயல்பாகவே, வறண்ட நிலப் பகுதிகளில் வறட்சியின் கடுமை அதிகமாக நிலவிற்று.

3. அரசின் ஆணைக்கிணங்க வருவாய் வாரிய உறுப்பினர்கள் வறட்சி நிலைமையைக் கண்டறிய மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தனர். மேற்சொன்ன நிலைமையையும், வருவாய் வாரியத்தின் அறிக்கையையும் ஆய்ந்த அரசு, வறட்சிப் பகுதிகளென பிரகடனம் செய்யப்பட்ட பகுதிகளுக்குக் கீழே கூறப்பட்டுள்ள உடனடி நிவாரணங்களை அளிக்க முடிவு செய்தது :—

(அ) நிலச்சுவான்தார்களுக்கு நிலவரி தள்ளுபடி, தண்டல் மற்றும் கடன் பாக்கி வசூல் ஒத்திவைப்பு.

(ஆ) பொதுமக்களுக்குக் குடிநீர் வசதிகளை அமைத்தல்.

(இ) உழவையே நம்பியுள்ள உழவர் பெருமக்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளுதல்.

கீழ்க்கண்ட நிவாரணப் பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டன:—

மாவட்ட ஆட்சித் தலைவரால் 'வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி'களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில்—

(அ) 1384 பசலியில் வசூலிக்கப்பட வேண்டிய அரசு கடன்கள் பழைய பாக்கி உள்பட, நடப்பு ஆண்டில் வசூலிக்கப்பட வேண்டிய பாக்கி வசூலை அடுத்த பசலிக்கு ஒத்திவைப்பு.

(ஆ) நடப்பு பசலியில் வசூலிக்கப்பட வேண்டிய கூடுதல் நஞ்செய் தீர்வை உட்பட நிலவரி, தண்ணீர்த் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, நஞ்செய் மற்றும் புஞ்செய், மானவாரி நிலங்களுக்கு உள்ளூர் வரி ஆகியவை வஜா செய்யப்பட்டுள்ளன. வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில், உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்க வேண்டாம் என ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 1384-ம் பசலியில் செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் வரியும், மேல் வரியும் இப்பிரதேசங்களில் வசூலிக்கப்படுவதில்லை.

(இ) 1383 பசலிக்கும், அதற்கு முன்னர் உள்ள பசலிகளுக்கும் செலுத்தப்பட வேண்டிய நிலவரி வசூலை 1385-ம் பசலிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(உ) குடியானவர்கள் குறுகிய காலக் கடன்களை நெடுங்காலக் கடன்களாக மாற்றுவதற்குதவ வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அன்னவாரி சான்றிதழ்களை கூட்டுறவு மத்திய வங்கிகளுக்கும், அதன் நகல் ஒன்றினை கூட்டுறவு சங்கங்கள் பதிவாளருக்கும் நேரடியாக அனுப்பும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(ஊ) வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை வசூலிப்பதிலிருந்து 16—1—1975 ஆம் நாள் தமிழக அரசின் 1975 ஆம் ஆண்டின் தமிழகக் கடன்பட்ட விவசாயிகளின் நெருக்கடி கால நிவாரண பிரகடன சட்டப்படி, ஓராண்டுக் காலத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி எந்த விவசாயியிடமிருந்தும் கொடுத்த கடன் பணத்தைத் திருப்பிப் பெற, உரிமையியல் வழக்கு விண்ணப்பமோ, உரிமையியல் மன்றங்களின் நிறைவேற்றுதல் மனுவோ தாக்கல் செய்ய இயலாது. வங்கிகளால் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு இந்த நெருக்கடி நிலைச் சட்டம் பொருந்தாது.

(எ) நடப்பு பசலி வேளாண்மை வருமான வரி மற்றும் முன் பசலிகளின் வரி பாக்கித் தொகை வசூல் 1975-76-ம் நிதி ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

27—3—1975 வரை 17,069 கிராமங்களில் 11,035 கிராமங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வறட்சியால் பாதிக்கப்பட்டவை என அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்கள் அரசு உத்தரவின்படி மேற்சொன்ன நிவாரணங்களுக்குத் தகுதியடைந்தவையாகும்.

4. மேலே கூறியவாறு 1975-ம் ஆண்டு சனவரி முதல் செப்டம்பர் வரை விவசாய வேலைகளின்றி அல்லலுறும், உழவுத் தொழிலாளர்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் நிவாரணப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிய தொழிலாளர்கள் எண்ணிக்கை பணிக் கால அளவு மற்றும் நாள் ஒன்றுக்கு ஒருவருக்குக் குறைந்த கூலியாக ரூ. 3 விதம் மாதம் ஒன்றுக்கு 20 நாள் அடிப்படையில் கணக்கிடும்போது ரூ. 55 கோடி வறட்சி நிவாரணப் பணிக்குத் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண தொழில் நுட்பமற்ற வேலைகளை மேற்கொள்ளும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ஊதியம் ரூ. 3 க்குக் குறையாமல் கொடுக்கப்பட வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது.

5. இதனடிப்படையில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அரசு தனி ஒதுக்கீடாக கீழ்க்கண்டபடி 3 தவணைகளில் ரூ. 10 கோடி அனுமதித்துள்ளது.

	ஒதுக்கிய பணம் (இலட்சக் கணக்கில்)
13—12—1974	300
4—1—1975	200
7—2—1975	500
	1,000

6. தற்போதுள்ள தனி வறட்சி நிவாரணத்தின் கீழ் குடி தண்ணீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், புதுக் கிணறுகள் வெட்டுதல், சிறு மத்தியதரப் பாசனங்களைச் சீரமைத்தல், சாலைகள் அமைத்தல், மண்வளப் பாதுகாப்பு முதலிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுக்குட்டைகள் அமைக்கும் வேலைகளையும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வேலைகளை குடி தண்ணீர் வழங்குதல் அல்லது சிறுபாசனம்

ஆகியவற்றின்கீழ் வறட்சி நிவாரணத் திட்டமாக எடுத்துக்கொள்ளலாம். குடிநீர் வழங்கும் வேலைகளை வறட்சியால் பாதிக்கப்பட்டவை என்று அறிவிக்கப்படாத பகுதிகளிலும் மேற்கொள்ளுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

7. 15—3—1975 வரை ரூ. 17.08 கோடி மதிப்புள்ள 39,103 தனி வறட்சி நிவாரண வேலைகள் அனுமதிக்கப்பட்டன. 15—3—1975 வரை ரூ. 6.32 கோடி மதிப்புள்ள வேலைகள் செய்யப்பட்டு அதற்கு ரூ. 5.03 கோடி செலவிடப்பட்டுள்ளது. 15—3—1975-ல் முடிவடைந்த ஒரு வாரத்தில் மட்டும் ரூ. 1.64 கோடி மதிப்புள்ள தனி வறட்சி நிவாரண வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

8. வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மதிப்பிட்ட ரூ. 55 கோடியில் ரூ. 17 கோடியை 1974-75 ஆம் ஆண்டிலும் (சனவரி 1975 லிருந்து மார்ச்சு 1975 முடிய), எஞ்சிய ரூ. 38 கோடியை 1975-ம் ஆண்டு செப்டம்பர் வரையும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளுக்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ரூ. 10 கோடியைத் தவிர, மேலும் ரூ. 7 கோடி, 1974-75-ல் இயல்பான வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து வறட்சிப் பகுதிகளில் பணிகளுக்காக சம்பந்தப்பட்ட துறைகளால் செலவிடப்படுகிறது. இதனடிப்படையில் 1974-75 ஆண்டுக்கு இந்திய அரசு நமக்கு ரூ. 7½ கோடி தந்து உதவ வாக்களித்துள்ளது. இதே போன்று ஏப்ரல் 1975-லிருந்து செப்டம்பர் 1975 வரை தனி ஒதுக்கீடு மூலமும், ஐந்தாண்டு திட்ட வேலைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டியிருக்கும்.

பயிரிட நில ஒப்படைப்பு செய்தல்.

9. நிலமற்ற ஏழை மக்களுக்கு நிலங்களை இயன்ற அளவுக்கு ஒப்படை செய்து கொடுப்பதை நோக்கமாகக் கொண்ட இவ்வரசின் கொள்கை தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1947-லிருந்து 1967 வரை, 20 ஆண்டுகளில் 1.15 இலட்சம் மக்கள் பயனுறும் வகையில் 2.88 இலட்சம் ஏக்கர் மட்டுமே ஒப்படைப்பு செய்யப்பட்டது. இவ்வரசு பதவி ஏற்றவுடன், தீவிரமாக திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாக, பயிரிட நிலம் ஒப்படைப்பு செய்வதில் அதிசயிக்கத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. 1967-68 இவ்வரசு பதவியேற்ற காலத்திலிருந்து 1975-ம் வருஷம் சனவரி மாத இறுதி வரையில் மொத்தமாக 7.05 இலட்சம் ஏக்கர் நிலம் ஏறக்குறைய 4 இலட்சம் மக்கள் பயனடையும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31—1—1975 வரை ஒப்படைக்கப்பட்ட நிலத்தின் அளவு மற்றும் அதனால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை, கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வருடம்.	அளவு.	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
	(ஏக்கரில்)	
1967–68	22,849	7,019
1968–69	51,852	24,604
1969–70	155,813	71,738
1970–71	173,558	99,138
1971–72	125,414	62,643
1972–73	85,103	47,923
1973–74	61,095	31,165
1974 ஏப்ரல் 1 முதல் ஜனவரி 1975 வரை ..	28,815	16,891
மொத்தம் ..	704,499	361,121

இதேபோன்று, காடுகள், குன்றுகள் ஆகிய இடங்களில் உள்ள, அரசுக்குச் சொந்தமான, 21,456 ஏக்கர் நிலங்கள், 31—1—1975 தேதிவரையில் பல நிலமற்ற ஏழைகளுக்கு அளிக்கப்பட்டு 11,000-த்திற்கு மேற்பட்ட பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

வீட்டுமனை ஒப்படை செய்தல்.

10. நகர்ப்புற மற்றும் கிராமப் பகுதிகளில் வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகளை இயன்றளவு ஒப்படை செய்வதற்காக இவ்வரசு மேற்கொண்ட சிறப்பு இயக்கம் உச்சக்கட்டத்தில் இயங்கி வருகிறது. இதைத் தவிர சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளி நகர எல்லைக்குள், குடிசை குடியிருப்பு ஒழிப்பு வாரியத்தின் உரிமை பாதிக்கப்படாத வகையில் சில ஒப்படைப்பு தடைகளை நீக்கி தடையற்ற ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் வகையில் அரசு திட்டம் வகுத்துள்ளது. பொதுவாக கிராமப் புறங்களில் 5 சென்ட் நிலமும், நகரப் பகுதிகளில் 3 சென்ட் நிலமும், சென்னை நகரத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் 750 சதுர அடியும் வீடு கட்ட ஒப்படைக்கப்படுகிறது. 1967-68-லிருந்து 1973-74 வரையிலும், மற்றும் 1—4—1974-லிருந்து 31—1—1975 வரை பயனடைந்தவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வருடம்.	பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
1967–68	12,953
1968–69	19,913
1969–70	89,520
1970–71	143,511
1971–72	86,116
1972–73	62,982
1973–74	50,600
1974 ஏப்ரல் 1 லிருந்து ஜனவரி 1975 முடிய	29,097
மொத்தம் ..	4,94,692

11. ஒருமித்த கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, 1967-68-லிருந்து 31—1—1975 முடிய 494,692 பேருக்கு வீட்டுமனைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1947-லிருந்து 1967 வரையிலான 20 ஆண்டு காலத்தில் 63,770 பேருக்கு மட்டுமே வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுள்ளது என்பதை ஒப்பு நோக்கலாம்.

பட்டா விவரக் குறிப்பேடு.

12. உழவர்கள் தாங்கள் வைத்துள்ள நிலங்களின் விவரங்களை அறிந்து கொள்ள இயலும் பொருட்டு ஒவ்வொரு உழவருக்கும் பட்டா விவரக் குறிப்பேடு வழங்கும் ஒரு திட்டத்தை அரசு 1972-ம் ஆண்டில் கொண்டுவந்தது. ஒவ்வொரு உழவருக்கும் சொந்தமான நிலத்தின் நில அளவை எண், நிலத்தின் பரப்பளவு, வகைப்பாடு, தீர்வை, உழவர் செலுத்திய தொகை, அரசிடமிருந்து அல்லது கடன் வழங்கும் பிற நிறுவனங்களிடமிருந்தும் உழவர்கள் பெற்ற கடன்கள், அவற்றை அவர்கள் திருப்பிச் செலுத்தியது போன்ற சான்று பெற்ற விரிவான விவரங்கள் அடங்கியிருக்கின்றன. இத்திட்டம் இம்மாநிலத்தில், சில தனி பிரச்சினைகளுக்காக அமுலாக்கப்படாத சென்னை, நீலகிரி மாவட்டம் மற்றும் குமரி மாவட்டத்தைத் தவிர்த்து எல்லா பகுதிகளிலும் அமுலில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விநியோகத்திற்காகக் கொடுக்கப்பட்ட 10,901,696 பட்டா பாஸ் புத்தகங்களில் 15-2-1975 வரை 10,229,382 புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டன. 1974-75-லிருந்து இப்பணி தீவிரமாக்கப்பட்டு 1974 டிசம்பர் திங்கள் வரை 90 லட்சத்திற்கு மேற்பட்ட பட்டா புத்தகங்கள் விநியோகப்படுத்தப்பட்டன.

தீவிர உட்பிரிவு திட்டம்.

13. மாநில அரசின் ஆளுகைக்குள் கடன் வழங்கும் பிற நிறுவனங்கள் அளிக்கும் கடன்களைப் பெற்று குடியானவர்கள் தங்கள் நிலத்தை மேம்பாடு செய்வதற்காக மதிப்பீட்டு குழுவின் யோசனையின்பேரில் தீவிர நில உட்பிரிவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

14. சோதனை அடிப்படையில் உட்பிரிவுத் திட்டம் மார்ச்சு 1965-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் முதற்கண் நிறைவேற்றப்பட்டது. இம்முன்னோடித் திட்டம் நல்ல பலனளிக்கத்தக்க வகையில் அமைந்ததால், இத்திட்டம் சென்னை, நீலகிரி மற்றும் குமரி மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

15. இன்றுவரை இத் திட்டம் 3,365 கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இக்கிராமங்களில் இதுவரை 1,890,154 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. மற்றும் 31—12—1974 வரை 833,828 தனிப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தம்.

16. 31—1—1975 அன்றுள்ளவாறு தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் கீழும், பின்னர் திருத்தப்பட்டுள்ள 1970, 1971, 1972 ஆம் ஆண்டு சட்டங்களின்கீழும் அறிவிக்கப்பட்ட, ஒப்படை செய்யப்பட்ட முதலிய நிலத்தின் மொத்த பரப்பளவு பின்வருமாறு :—

	(ஏக்கர்)
உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலப் பரப்பு	98,655
உடமையாக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலப் பரப்பு	77,289
ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பு	54,769
ஒப்படை செய்யப்பட்டோரின் எண்ணிக்கை	29,542

17. 1967 ஆம் ஆண்டிற்கு முன்னரும், 1967-லிருந்து சனவரி 1975 வரையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டும் ஒப்புமை அறிக்கை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

விவரங்கள்.	31—3—67 வரை ஏற்பட்ட முன்னேற்றம்.	1—4—67 முதல் 31—1—75 வரை ஏற்பட்ட முன்னேற்றம்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலப் பரப்பு (ஏக்கர்)	24,194	74,459	98,653
உடைமையாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பு (ஏக்கர்)	16,330	60,959	77,289
ஒப்படை செய்யப்பட்ட நிலப் பரப்பு (ஏக்கர்)		54,769	54,769
ஒப்படை செய்யப்பட்டோரின் எண்ணிக்கை.	..	29,542	29,542

18. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட குடியிருப்பு அனுபோக தாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டம் நிலச் சீர்திருத்த திட்டத்தின் முக்கிய அம்சமாகும். 19—6—1971-ம் நாள் அன்று எதாவது ஒரு குடியிருப்பில், குடியிருப்பவராகவோ அல்லது உரிமம் பெற்றவராகவோ இருக்கும் வேளாண்மைத் தொழிலாளருக்கு இச்சட்டம் அனுபோக பாத்தியதையை வழங்குகிறது. தஞ்சாவூர், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சி, தர்மபுரி, சேலம் (ஏர்க்காடு தாலுகா வட்டம் நீங்கலாக), இராமநாதபுரம் (இராஜபாளையம் தாலுகா வட்டம் நீங்கலாக), கோவை, மதுரை, திருநெல்வேலி மேலும் குமரி மாவட்டங்களுக்கும் இச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டங்களில் உள்ள தோட்டப் பயிர் உள்ள இடங்கள் இச்சட்டத்தினின்று விலக்களிக்கப்பட்டுள்ளது. தோட்டப் பயிர் பிரதேசமாகிய நீலகிரி மாவட்டத்திற்கும், நகரப் பிரதேசமாகிய சென்னை நகரத்திற்கும் இச்சட்டம் விஸ்தரிக்கப்படவில்லை. குடியானவர்களிடமிருந்தும், வேளாண்மை தொழிலாளர்களிடமிருந்தும் குடியிருப்பின் விலை, உட்பிரிவுக்கான கட்டணம் முதலியவைகளின் உரிமையை அரசு விட்டுக்கொடுத்துள்ளது. இந்தச் சட்டத்தின்கீழ் 31-12-1974 வரை அளிக்கப்பட்ட மொத்த பட்டாக்கள் 173,748. அவைகளில் அரிஜனங்களுக்கு 31—7—1974 முடிய கொடுக்கப்பட்ட 103,470 பட்டாக்களும், மற்றும் மீதமுள்ள வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்ட 60,561 பட்டாக்களும் அடங்கும்.

எந்தெந்த மாவட்டங்களில் இச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் இச்சட்டத்தை அமுல்படுத்துவதில் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. தோட்டப் பயிர் பயிரிடப்படும் பிரதேசங்களிலுள்ள, தோட்டப் பயிர் பயிரிடப்படாத குடியானவர்களுக்கும், வேளாண்மை தொழிலாளிகளுக்கும் இச் சட்டத்தை விஸ்தரிக்கும் சாத்தியக் கூறுகள் அரசின் ஆய்விலுள்ளது.

19. தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம், கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி, நாகைப்பட்டினம், நன்னிலம் ஆகிய ஆறு வட்டங்களுக்குப் பொருந்தும். பயிரிடும் காலங்களிலும், அறுவடை காலத்திலும், பல்வேறு வகை பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வீதங்களில் நியாயமான ஊதியம் வழங்க இச்சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் விவர அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள நியாய ஊதிய வீதங்கள் 14-12-1072 அன்றும் 18-9-1973 அன்றும் 19—1—1974 அன்றும் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இச் சட்டத்தின் கீழ் முதலில் வரையறுக்கப்பட்டுள்ள ஊதிய வீதங்களும், இரண்டு அறிவிப்புகள் வெளியிட்டு அவற்றின் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ள ஊதிய வீதங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	முதற்கண் நிர்ணயிக்கப்பட்ட வீதங்கள்.	14-12-1972-ல் திருத்தியமைக்கப்பட்ட வீதங்கள்.	18-9-1973-ல் திருத்தியமைக்கப்பட்ட வீதங்கள்.
ஆண்.			
பயிரிடு காலத்தில் எல்லா வகைப் பணிகளும்.	நாள் ஒன்றுக்கு ரூபாய் 3-00 அல்லது ரூபாய் 1-25 உடன் 6 லிட்டர் நெல்.	நாள் ஒன்றுக்கு ரூபாய் 3-00 அல்லது ரூபாய் 1-50 உடன் 6 லிட்டர் நெல்.	நாள் ஒன்றுக்கு ரூபாய் 4-00 அல்லது ரூபாய் 1-75 உடன் 6 லிட்டர் நெல்.
பெண்.			
பயிரிடு காலத்தில் எல்லா வகைப் பணிகள்.	நாள் ஒன்றுக்கு ரூபாய் 1-75 அல்லது ரூபாய் 0-25 உடன் 5 லிட்டர் நெல்.	நாள் ஒன்றுக்கு ரூபாய் 2-25 அல்லது ரூபாய் 0-50 உடன் 5 லிட்டர் நெல்.	நாள் ஒன்றுக்கு ரூபாய் 2-50 அல்லது ரூபாய் 0-75 உடன் 5 லிட்டர் நெல்.
அறுவடை.	அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு 54 லிட்டர் நெல்லுக்கும் 6 லிட்டர் நெல்.	மாற்றமில்லை.	மாற்றமில்லை.

19—11—1974-லிருந்து திருத்திய ஊதிய விகிதங்கள்.

ஆண்—நாள் ஒன்றுக்கு ரூ. 6.00 அல்லது ரூ. 2.75 உடன் 6 லிட்டர் நெல்.
பெண்—நாள் ஒன்றுக்கு ரூ. 4.00 அல்லது ரூ. 1.50 உடன் 5 லிட்டர் நெல்.

19—11—1974-ல் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் தனி நபர் குழுவில் (திரு. வ. கார்த்திகேயன், அ.இ.ப.) ஒப்புக்கொள்ளப்பட்டது.

குத்தகை உரிமை பாதுகாப்பு.

20. பயிரிடு குத்தகைக்காரர்களுக்கு குத்தகை உரிமையைப் பாதுகாக்க இயற்றப்பட்ட சட்டங்களின் விதித்துறைகளை செயற்படுத்துவதற்கு முழுமையான நம்பத்தகுந்த குத்தகை உரிமைப் பதிவேடு மிக அத்தியாவசியமானது. குத்தகை உரிமை குறித்த எழுத்து மூலமான ஆவணம் இல்லாததால் தங்களது உரிமைகளை நிலைநாட்ட பயிரிடு குத்தகைதாரர்களுக்கு இயலவில்லை. இதனால் பயிரிடு குத்தகைதாரர்கள் கடனுதவி நிறுவனங்கள் கொடுக்கும் கடன்களைப் பெறமுடியவில்லை. எனவே கிராம அளவில் குத்தகை உரிமைகள் குறித்த பதிவேட்டைத் தயாரிப்பதற்கு தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைப் பதிவேடுகள்) சட்டம் இயற்றப்பட்டது. 31—12—1974 வரையில் பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் மொத்த எண்ணிக்கை 3,99,350 ஆகும். பதிவு செய்யப்பட்ட பரப்பளவு 603,898 ஏக்கராகும்.

எஸ்டேட்டுகள் ஒழிப்பு.

21. நிலங்களில் இடையாட்களை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் அண்மைக் காலத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

(a) தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் ஆகியவை வாரியாக மாற்றுதல்) சட்டம்.

5,092 ஜமீன்கள், இனம், கீழ்க் குத்தகை எஸ்டேட்டுகள் ஆகியவை அறிவிக்கப்பட்டு இச்சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

	எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை.	பரப்பளவு (சதுரமைல்கள்).
மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுக மொத்த எண்ணிக்கை ..	5,092	11,439·28
1975–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31–ம் நாள் வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	5,091	11,438·79
எஞ்சியவை	1	0·49

எஞ்சிய ஒரு எஸ்டேட் தடையாணைகள், பிற சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் கீழ் உள்ளது.

(b) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்.

இரு வார இனாம் எஸ்டேட்டுகளும் பகுதிக் கிராம இனாம் எஸ்டேட்டுகளும் இச்சட்டத்தின் கீழ் ஒழிக்கப்பட்டுள்ளன:—

	எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை.	பரப்பளவு (சதுரமைல்கள்).
மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை ..	2,106	1,609·55
1975–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31–ம் நாள் வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	2,009	1,288·98
எஞ்சியவை	97	320·57

எஞ்சிய 97 எஸ்டேட்டுகளும் தடை ஆணைகளின் கீழும் ஏனைய சட்ட நடவடிக்கைகளின் கீழும் உள்ளன.

(c) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகைக் கிராமங்கள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம்:—

	எஸ்டேட்டுகளின் எண்ணிக்கை.	பரப்பளவு (சதுரமைல்கள்)
மேற்கொள்ளப்பட்ட மொத்த பகுதி	13	32·11
1975–ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31–ம் நாள் வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதி	13	32·11
எஞ்சியவை	இல்லை.	இல்லை.

(d) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் :—

	கிராமங்களின் எண்ணிக்கை.	பரப் ளவு (சதுரமைல்கள்)
நிலவரி ஏற்பாட்டுக்கான மொத்த பகுதி	13,584	1,556·68
31-1-1975 வரை நிலவரி ஏற்பாடு செய்யப்பட்ட பரப்பு ..	13,574	1,551·61.
எஞ்சியவை	10	5·07

எஞ்சிய கிராமங்களில் 5 கிராமங்கள் (2·79 சதுர மைல்கள்) தடையாணைகளின் கீழ் உள்ளன. மீதி 5 கிராமங்களில் நிலவரி ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன.

22. தமிழ்நாடு 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தினை செயல்படுத்திய பின்னரும், பட்டாவைத் தாராளமாக வழங்குவதற்கான நிர்வாக ஆணைகளைப் பிறப்பித்த பின்னரும் இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளில் ஏராளமான பேர் அந்த நிலங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து தங்கள் வசம் வைத்துக்கொண்டு பயனை அனுபவித்து வந்துள்ளது தெரியவந்தது. இச்சட்டத்தின்கீழ் பட்டா வழங்குவதற்குத் தகுதியுள்ள வகையின்கீழ் அல்லது மேற் குறிப்பிடப்பட்ட அரசின் ஆணைகளின்கீழ் அவர்கள் வரவில்லை. ஆதலால் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. எனவே, தொடர்ந்து நிலத்தைத் தமது உடைமையில் அனுபவித்து வரும் அடிப்படையில் அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்று அரசு முடிவு செய்தது. ஆகவே அறிவிக்கப்பட்ட நாளன்றும், அந்நாளுக்கு முன்னரும், நிலத்தை தொடர்ந்து தனது உடைமையில் அனுபவித்து வருபவர்களுக்கு எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டத்தின் வரம்பிற்கு அப்பாற்பட்டு பட்டாக்கள் வழங்குமாறு வருவாய்த்துறையின் 30—4—1971 ஆம் நாளிட்ட 1,300 ஆம் ஆணையில் அரசு ஆணையிட்டது. மேற்சொன்ன ஆணையின் கீழ் பட்டா பெறுவதற்கு விண்ணப்பம் செய்து கொள்வதற்கான காலவரையறை 30—6—1974-ல் முடிவடைந்துவிட்டது. காலவரையறையை நீட்டிப்பது பற்றி அரசு தனியே பரிசீலித்து வருகிறது. வருவாய்த்துறையின் 30—4—1971 ஆம் நாளிட்ட 1300ஆம் எண் அரசாணையில் வழங்கப்பட்ட சலுகையை தமிழ் நாடு 1963ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழும், தமிழ்நாடு 1963ஆம் ஆண்டு சிறு இனும்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழும் எடுத்துக் கொள்ளப் பட்ட இனும் எஸ்டேட்டுகள் கிராமங்களுக்கும், சிறு இனும்களுக்கும் அரசு வணிக வரி அறநிலையத்துறையின் 3—10—1974 ஆம் நாளிட்ட 370 ஆம் எண் ஆணையில் நீட்டித்தது.

23. இடையாட்களை ஒழித்து விட்டு, உழவர்களுக்கு பட்டா வழங்குவதே இனும் ஒழிப்புச் சட்டத்தின் நோக்கமாக இருப்பதால் பட்டா வழங்குவது குறித்து நில உடைமையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிரிடுபவர்களுக்கு மிடையே தகராறு எழும்போது அவர்களுக்கு சட்ட ஆலோசனை உதவி அளிக்க வேண்டும் என்று அரசு கருதியது. ஆகவே, பட்டா வழங்குவது குறித்து இனும் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எழும் தகராறுகள் அனைத்திலும், நில உடைமையாளர்களுக்கு எதிராக நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகள் முடிவு எடுத்து, நில உடைமையாளர்கள் அது குறித்து மேல் முறையீடு செய்திருந்து, துறை ஒரு தரப்பினராக விசாரணை செய்யப்படும்போது, துறை சார்பாக நியமிக்கப்படும் வழக்குரைஞர் வழக்குகளுக்கு ஆதரவாக வழக்காட வேண்டும் என்றும், துறை ஒரு தரப்பினராக விசாரிக்கப்படாதபோது துறையும் ஒரு தரப்பினராக விசாரணை செய்யப்படுவதற்கு மனுக்களை தாக்கல் செய்து பின்னர் அந்த வழக்குகளின் விசாரணையில் கலந்து கொண்டு உழவர்கள்/ விவசாயிகளுக்கு ஆதரவாக வழக்காட வேண்டும் என்றும் உள்ளூர் அரசு வழக்குரைஞர்களுக்கு கட்டளையிடப்படப்பட வேண்டுமென வணிகவரி—அறநிலையத்துறையின் 28—10—1974ஆம் நாளிட்ட 504 ஆம் எண் ஆணையில் அரசு ஆணையிட்டது. 1948ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எழும் தகராறுகளுக்கு இச்சலுகையை நீட்டிப்பது பற்றி தனியே பரிசீலிக் கப்பட்டு வருகிறது.

1971-72	86,342	2,15,37,777
1972-73	1,10,856	2,25,95,303
1973-74	1,55,771	2,25,37,167
1974-75	...	2,00,00,000 (R.E.)
1975-76	...	2,00,00,000 (B.E.)

NOTE.—In view of the fact that the collection of Agricultural Income-Tax in drought affected areas has been postponed the collection during 1974-75 is likely to be less than the figure of Rs. 2,00,00,000 indicated above by about Rs. 50 lakhs.

Urban Land Tax.—

41. Under the Tamil Nadu Urban Land Tax Act, 1966, Urban Land Tax is payable in respect of urban lands in certain areas. The tax is in lieu of the ryotwari assessment, quit rent, ground rent, etc. The Act was brought into force in the city of Madras with effect from 1st July 1963. It was brought into force in the Municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli and in the city of Madurai with effect from 1st July 1971.

42. In 1971, the Tamil Nadu Urban Land Tax Act was amended to augment the resources of the State by introducing a graded system of levy of tax on urban lands exceeding one ground as shown below :—

Extent of land.	*Rate of tax*
(1)	(2)
Where the total extent of urban land held by the owner—	
(1) exceeds 1 ground but does not exceed 2 grounds.	0·5 per centum of the market value of each urban land.
(2) exceeds 2 grounds but does not exceed 5 grounds.	0·7 per centum of the market value of each urban land.
(3) exceeds 5 grounds but does not exceed 10 grounds.	0·8 per centum of the market value of each urban land.
(4) exceeds 10 grounds.	1·0 per centum of the market value of each urban land.

43. At the same time, to give relief to the small urban landholders, the Government exempted holders of the land measuring one ground and below from the levy of tax. These changes took effect from 1st July 1971 (Fasli 1381).

44. By the Tamil Nadu Urban Land Tax (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 19 of 1973) the following concessions among others have been given to the urban landholders.

(i) The exemption limit has been raised from one ground to two grounds;

(ii) In the case of persons owning more than two grounds, urban land tax is to be levied only on the extent in excess of two grounds at the appropriate rate instead of on the entire extent owned as hitherto;

(iii) The rebate of tax allowed under section 26 (1) of the Act on lands with buildings occupied by the owners solely for residential purpose has been increased from 25 per cent to 50 per cent.

45. Revision of market value of urban lands in the city of Madras for purpose of levy of urban land tax was due in July 1973. The Government however ordered that the market value already determined as on 1st July 1963 for the urban lands in Madras City shall continue to remain in force for a further period of three years from 1st July 1973 to 30th June 1976.

During 1974-75, the Urban Land Tax collections up to 28th February 1975 amount to Rs. 193 lakhs.

Stamp Administration—

46. Instruments executed are chargeable with stamp duty under the Indian Stamp Act, 1899. The rates of stamp duty leviable in this State on various documents are prescribed in Schedule I to the above Act as in force in this State. An additional surcharge at the rate of two and half per cent of such stamp duty is leviable on all registered documents (other than bills of exchange, cheque, promissory notes, bills of lading, letters, proxies of credit, polices of insurance, transfer of shares debentures, proxies and receipts). Also a surcharge of not more than 5 per cent on the consideration of the property in respect of certain documents is collected under the local bodies Acts and is passed on to the local bodies.

47. As a measure to augment the revenue of the State, the Indian Stamp (Tamil Nadu Amendment) Act, 1974 (Act 25 of 1974) was enacted. Accordingly forward contracts or ready-delivery contracts in respect of agreement or memorandum of agreement relating to sale or purchase of commodities in general which were not liable to stamp duty were brought under levy on

the analogy of the Bombay Stamp Act, 1958 (Bombay Act LX of 1958). The above amendment came into force with effect from 1st August 1974.

48. With a view to rationalisation of stamp duty and facility in calculation, it is proposed to merge the additional surcharge with the basic stamp duty and to make marginal adjustments and also to effect a slight increase mainly in respect of instruments covering Bottomry Bond and Conveyance, as announced by the Chief Minister in the Budget Speech for 1975–76. The revised rates of stamp duty will not, however, affect the Transfer duty of 5 per cent on certain documents which is passed on to the Local Bodies. Necessary legislation is being brought forward to give effect to these charges.

49. In deserving cases, partial or full remission of stamp duty is being continued to be granted to certain institutions which serve public causes, so as to help such institutions.

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

செவ்வாய்க் கிழமை, 1975 ஏப்ரல் 1

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

Gazetted Headmasters and District Educational Officers

* 220 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that Gazetted Headmasters and District Educational Officers were under a combined cadre prior to 2nd October 1970;

(b) whether all the District Educational Officers who had completed the age of 55 were posted as Headmasters, where they were permitted to serve till they completed the age of 58;

(c) if so, whether all the District Educational Officers and Headmasters as on 1st October 1970 were permitted to enjoy the said benefit; and

(d) if not, the reason therefor?

அரசிதழ்ப் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களும் மாவட்டக் கல்வி அதிகாரிகளும்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசிதழ்ப் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களும் மாவட்டக் கல்வி அதிகாரிகளும் 2—10—1970-க்கு முன்னர் ஒருங்கிணைந்த பதவித்தரத்தில் இருந்தனர் என்பது உண்மையா?

(இ) 55 வயது நிரம்பிய மாவட்டக் கல்வி அதிகாரிகள் அனைவரும் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டு, 58 வயது முடியும் வரை அங்கேயே பணியாற்ற அனுமதிக்கப்பட்டனரா?

(உ) ஆமெனில், 1—10—1970 நிலவரப்படி மாவட்டக் கல்வி அதிகாரிகளாகவும் தலைமை ஆசிரியர்களாகவும் இருந்தவர்கள் அனைவரும் மேற்சொன்ன சலுகையைப் பெற அனுமதிக்கப்பட்டனரா?

(எ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 2—10—1970-க்கு முன் அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களும் மாவட்டக் கல்வி அலுவலர்களும் ரூ. 300-25-800 என்ற ஒரே ஊதிய விதத்தில் இருந்தனர். எனவே இவ்விரண்டும் ஒத்த தரத்தில் உள்ள பதவிகளாகக் கருதப்பட்டன.

(இ) & (உ) 1970 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களுக்கு முன்னர் மாவட்ட கல்வி அலுவலராக நியமனம் செய்யப்பட்டவர்கள் மட்டுமே, 55 வயது முடிவடைந்த பின்னர், அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்களாக மாற்றப்பட்டு, 58 வயது வரை தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டனர்.

(எ) நிர்வாகப் பிரிவில் உள்ள அலுவலர்களின் ஓய்வு பெறும் வயது 58 லிருந்து 55-க்கு 12—6—1969-ல் குறைக்கப்பட்டது. அதற்குப் பின்னர் தலைமை ஆசிரியர் பணியிடங்களில் நிரந்தரமான காலியிடம் இல்லாததாலும், 24—2—70-ல் மாவட்ட கல்வி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்ட 16 அலுவலர்களும் தலைமை ஆசிரியராக பணிபுரியாததாலும், அவர்கள் 55 வயதை அடைந்தவுடன் தலைமை ஆசிரியர்களாக மாற்றப்படவில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, 2—10—1970-க்குப் பின்னர் இவர்களிடம் மாவட்டக் கல்வி அதிகாரியாகப் போகிறீர்களா அல்லது தலைமை ஆசிரியராகப் போகிறீர்களா என்று 'ஆப்ஷன்' கேட்கப்படுகிறது. ஆனால், 2—10—1970-க்கு முன், ஏற்கெனவே மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றவர்களிடம் இந்த 'ஆப்ஷன்' கேட்கப்பட வேண்டிய அவசியமில்லை. அவர்களுக்கு இந்தத் தலைமை ஆசிரியர்கள் பதவி கொடுக்கப்படாமல் ஏற்கெனவேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 2—10—1970-க்குப் பின்னர் உள்ளவர்களுக்கும் அது கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 12—6—1969 லேயே, மாவட்டக் கல்வி அலுவலர்களது வயது 55 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 2—10—1970 என்பது அதற்குப் பிறகு வருகிறது. அதற்குப் பிறகு, 55 வயது என்று வருகின்றபோது, இந்த 16 பேரையும் நியமிக்கும்போதே, அவர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. நேரடியாக மாவட்டக் கல்வி அலுவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் நியமிக்கப்பட்ட தேதியிலேயே அவர்களுக்கு 55 வயது என்று

நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அவர்கள் தலைமை ஆசிரியர்கள் பதவியில் இருந்து வந்தவர்கள் அல்ல; நியமிக்கப்பட்டவர்கள். 55 வயது என்று நியமிக்கும்போதே . . .

The above sixteen officers were therefore informed even at the time of their appointment that they should retire on attaining the age of 55 years

என்று குறிப்பிட்ட காரணத்தாலே அவர்கள் ஓய்வு பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, 2—10—1970-க்கு முன்னர், மாவட்டக் கல்வி அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற்று, இந்த 'ஆப்ஷன்' கொடுக்கப்படாத நிலையில் ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு கொடுக்கப்படுமா? தலைமை ஆசிரியர், டி.ஈ.ஓ. இந்த இரண்டு பதவிகளுக்கும் ஒரே ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. 1969-க்கும் 1970-க்கும் இடையேயுள்ள காலத்தில் உள்ளவர்களுக்கும் தலைமை ஆசிரியர் பதவி வாய்ப்புக் கொடுக்கும்படியாக அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த 16 பேரும் ஓய்வு பெற்று விட்டார்கள். அவர்களுக்கு 55 வயது ஆகிவிட்டது. அவர்களுக்கு மறுபடியும் எப்படி தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க முடியும் என்று தெரியவில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, அதை நான் குறிப்பிடவில்லை. 2—10—1970-க்கு முன்பு டி.ஈ.ஓ. பதவி உயர்வு பெற்றவர்கள் இருக்கிறார்கள். இந்த 1969-க்கும் 1970-க்கும் இடையே உள்ளவர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படுமா என்றுதான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனியாக வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, தலைமை ஆசிரியர்கள் எல்லோரையும் அரசிதழ் பதவி பெற்ற தலைமை ஆசிரியர்கள் ஆக்குகின்ற செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். எல்லோருக்கும் கெஜட்டட் அந்தஸ்து அளிக்கும் குறிப்பு இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். பல்வேறு துறைகளில் சம்பள அடிப்படையில், அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்கவேண்டும் என்ற நிலைமை இருப்பதன் காரணமாக, அரசாங்கம் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து ஆராய்ந்துகொண்டிருக்கிறது. சேர்த்து முடிவு எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. அறிவழகன்: தலைவர் அவர்களே, இந்த அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள், பி.விங் பள்ளியில் இருப்பவர்கள், இப்போது டி.ஈ.ஓ. ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி அவர்கள் ஆக்கப்படுவார்கள் என்றால், 55 வயது முடிந்தவுடனே, மறுபடியும் தலைமையாசிரியர்களாகச் சென்று பணியாற்ற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது மாவட்டக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்படுவதற்கு முன்பே, 55 வயதுக்குப் பிறகு ஓய்வு பெற வேண்டும். ஆகவே அதற்கு வருகிறீர்களா, இங்கேயே இருக்கிறீர்களா என்று கேட்டு, யார் இசைவு தருகிறார்களோ, அவர்கள் மட்டும் தான் மாவட்டக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்படுகிறார்கள்.

Selection Grade Posts to B.T. Teachers in Tiruchirappalli Revenue District

* 221 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of B.T. Teachers of the 'B' Wing Government High Schools in the Revenue District of Tiruchirappalli, who were granted selection grade scale of pay on 1st January 1971 under percentage basis scheme and who had completed 10 years of service on 1st January 1971;

(*b*) whether it is a fact that the said category of teachers have not been granted the annual increment due to them on 1st January 1974; and

(*c*) if so, the reason therefor?

திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்திலுள்ள பி.டி. ஆசிரியர்களுக்கு தேர்வுத்தரப் பதவிகள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்திலுள்ள அரசினர் 'B' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் சதவீத அடிப்படையிலான திட்டத்தின்கீழ் 1-1-1971-ஆம் நாளன்று 10 ஆண்டுக்காலம் பணி முடித்து 1-1-1971-ஆம் நாளன்று தேர்வு நிலைச் சம்பள விகிதம் வழங்கப்பட்டுள்ள பி.டி. ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) மேற்கூறிய வகை ஆசிரியர்களுக்கு 1-1-1974-ஆம் நாளன்று கொடுக்கப்பட வேண்டிய ஆண்டு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(உ) ஆமெனில், அதன் காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தேர்வுநிலை பெற்ற 131 பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களில் 38 ஆசிரியர்கள் 1-1-1971-ல் 10 ஆண்டுகள் பணி முடித்துள்ளனர்.

(இ) 1-1-1971-ல் 10 ஆண்டுகள் பணி முடிக்காத பட்டதாரி ஆசிரியர்கட்கு வருடாந்தர ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை.

(உ) பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதனிலைத் தமிழாசிரியர்களின் மொத்த பதவிகளின் எண்ணிக்கையில் 15 விழுக்காடுகள் தேர்வுநிலை பதவிகளாக 1-1-1971 முதல் உயர்த்தப்பட்டது. பின்னர் 1-4-1973 முதல் 10 ஆண்டுகள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தோர்க்கு தேர்வுநிலைப் பதவிகள் வழங்கப்பட்டன. 1-1-1971-ல் தேர்வுநிலை பெற்ற 38 பட்டதாரி ஆசிரியர்களில் 1-1-1971-ல் 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்த 32 ஆசிரியர்கள் ஊதிய உயர்வு பெற்றுள்ளார்கள். 1-1-1971-ல் 10 ஆண்டுகள் பணி முடிக்காத மற்றவர்கட்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக கீழ்நிலை அலுவலர்கள் கேட்ட விளக்கத்திற்கு தேவையான விளக்கம் பள்ளிக் கல்வி இயக்குநரால் கொடுக்கப்பட்டு ஊதிய உயர்வு கொடுக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, 1-1-1974 அன்று ஊதிய உயர்வு கொடுக்கப்படவேண்டியது, 1-1-1975 அன்றைக்குக்கூட கொடுக்கப்படவில்லை. பத்து ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்குக் கொடுக்கப்படலாம் என்று ஜி.ஓ. 519-ல் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தும்கூட, அவர்களுக்கு ஊதிய உயர்வு—ரெகுலர் அனுவல் இன்கிரிமெண்ட்—கொடுக்கப்படவில்லை.

அதற்குப் பிறகுதான் இந்த வினா எழுப்பப்பட்டது. இந்த வினா எழுப்பியதற்குப் பிறகு, 1—1—1974-க்குக் கொடுத்துவிட்டார்கள். 1—1—1975-க்கு ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றுதான் இந்த வினா கொண்டு வரப்பட்டது. இனியாவது அந்தந்த ஆண்டுக்குரிய ஊதிய உயர்வை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு வழி செய்யுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் இருக்கின்ற அலுவலர்கள் விளக்கம் கேட்ட காரணத்தினால், பள்ளிக் கல்வி இயக்குநர் விளக்கம் தந்திருக்கிறார்கள். இப்போதும் விளக்கம் தரப் பட்டிருக்கிறது. அதன்மீது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறும்போது, 1-4-1973 முதல் வழங்கப்பட்டிருக்கின்ற பதவி உயர்வுகள் பற்றிச் சொன்னார்கள். 10 ஆண்டு கால ஊழிய அடிப்படையில் 1-4-1974 வரை வழங்கியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 10 ஆண்டு முடிவடைந்த ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும், அவ்வப்போது 10 ஆண்டு கால ஊழிய அடிப் படையில் பதவி உயர்வு—செலக்ஷன் கிரேடு—வழங்க அரசு ஆணையில் வழி செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாம் தேர்வு நிலை என்று வைத்திருக்கும்போதே, 10 ஆண்டுகள் நிறைவு பெற்றவர்கள் தேர்வு நிலை பெறலாம் என்று வைத்திருக்கிறோம். அவ்வப்போது கிடைக்காத சூழ்நிலையிருந்தால், அதற்கு என்ன காரணம் என்று அறிந்து அது கிடைப் பதற்கு வழிவகை செய்ய வேண்டும். தனியாக கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதுபற்றி ஆராய முடியும். இப்போது இருக்கின்ற விதிமுறை 10 ஆண்டுகள் முடிவு பெற்றால் தேர்வு நிலை வழங்கப்படும் என்பதுதான்.

(பிற்பகல் 4-10)

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த அரசு ஆணையில் 'இல்லஸ்ட் ரேஷன்' இல்லாத காரணத்தினால், 1-4-1973க்குப் பின்னால் வழங்குகிறதுபற்றி ஒன்றும் இந்த ஆணையில் சொல்லப்படவில்லை. அதைப்பற்றி ஏதாவது ஆணை வந்தால்தான் வழங்க முடியும் என்று அதிகாரிகள் சொல்லி, கொடுக்காமல் இருக்கின்றார்கள். ஆகவே 1-4-1974 முதல் அது அமுலுக்கு வருகிறது என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தும்கூட, அதற்குப் பின்னால் உள்ள பத்து ஆண்டுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருந்தும்கூட, 'அதைச் சரியாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை' என்று காரணங்

காட்டிக் கொடுக்காமல் இருக்கின்றார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அது கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்க வேண்டும்.

Middle Schools.

* 222. *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the number of Middle Schools in the Revenue Districts of Tiruchirappalli, Thanjavur and Pudukkottai; and

(*b*) the number of such schools where the total student strength is less than twenty ?

நடுத்தரப் பள்ளிகள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை வருவாய் மாவட் டங்களில் எத்தனை நடுத்தரப் பள்ளிகள் உள்ளன ?

(இ) அவற்றில், மொத்தம் இருபது மாணவர்களுக்கும் குறைவான எண்ணிக்கை கொண்ட பள்ளிகள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம்—479.

தஞ்சாவூர் மாவட்டம்—559.

புதுக்கோட்டை மாவட்டம்—130.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பள்ளிகளில், மேல் வகுப்புகளில், அதாவது 6, 7 மற்றும் 8-ம் வகுப்புகளில் 20 மாணவர்கள் கூட இல்லாத நிலைமை இருந்து வருகிறது. அதை மாற்றியமைக்க, அங்கங்கே இரண்டு மூன்று பள்ளிக்கூடங்களை ஒன்றாக இணைத்து, 'அன்எகனாமிக்'காக நடைபெறும் பள்ளிகளில் இந்த முறையைப் புகுத்தி, ஒன்றாக இணைக்க அரசு நடவடிக்கை எடுக்க முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 'அந்த ஆண்டில் 20 மாணவர்களுக்குக் குறைந்த அளவிற்கு எண்ணிக்கை கொண்டுள்ள பள்ளிகளில்'தான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் கூடுமானவரையில் இப்படி பல பள்ளிகளை ஒன்றாக இணைப்பதற்கு ஒத்துவருவார்களா என்று பார்க்க வேண்டும். அந்த எண்ணிக்கையை அவர்களுக்குச் சாதகமாக உள்ள அளவிற்கு வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே கூடுமானவரையில், எண்ணிக்கையின் தன்மையில் ஒன்றுபடும் அளவிற்கு அவற்றை ஒன்றாக இணைக்க முடியுமா என்பதை அரசு யோசிக்க வேண்டியிருக்கும். இதில் பல்வேறு பள்ளிகள்—ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள்—என்று இப்படி பல்வேறு வகைப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. இந்தப் பள்ளிகளை எந்த வகையில் இணைக்கலாம் என்பதில் ஒரு அடிப்படை வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, ஒவ்வொரு வகுப்பிலும் 20-க்குக் குறைந்த மாணவர்கள் இருந்தால், மூன்று வகுப்புகளிலும் உள்ள சராசரியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்குத் தக்கபடி ஆசிரியர்களை பணியிலிருத்த வேண்டும் என்று விதி முறை இருக்கின்றது. அதன்படி பார்க்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படிக் குறைந்த அளவுள்ள மாணவர்களைக் கொண்ட இப்படிப்பட்ட பள்ளிகள் நமது நாட்டின் எல்லைப் பகுதிகளில், அல்லது மலைப்பகுதிகளில்தான் இருக்கின்றன. இவற்றை இணைக்க வேண்டும் என்றால், அதனால் ஏற்படக்கூடிய விளைவு, அதில் பயிலும் மாணவர்கள் மேலும் ஐந்து அல்லது ஆறு மைல்கள் போய்த்தான் படிக்க முடியும் என்று ஆகிவிடும். கிராமப்புறங்களிலுள்ள பிள்ளைகளுக்கு எப்படியாவது கல்வி பயில வசதி செய்துதரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் அரசு இப்படிப்பட்ட பள்ளிகளை வைத்திருக்கின்றது. ஆகவே எண்ணிக்கை குறைந்துவிட்டது என்ற காரணத்திற்காக திடீரென்று இரண்டு மூன்று பள்ளிகளை இணைத்துவிட முடியாது. ஆகவே அத்தகைய ஆலோசனைகள் ஏதேனும் அரசுக்கு இருந்தால், அதைக் கைவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் 'அப்படிப்பட்ட பள்ளிகளை ஒன்றாக இணைக்க முடிந்தால் இணைக்கலாமா' என்றுதான் கேட்டிருக்கின்றார்கள். முடிந்தால் இணைக்கலாம். ஆனால் அதில் பல சங்கடங்கள் வரக்கூடும் என்று குறிப்பிட்டேன். அப்படிப்பட்ட சங்கடங்கள் இல்லாமல் இருந்தால்தான் அது பற்றி நடைமுறைப்படுத்தப்படும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த யோசனையைக் கைவிட வேண்டும் என்று சொல்லுகின்றார் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உங்களுக்கு அவர் பதில் சொல்லுகின்றார், நீங்கள் அவருக்குப் பதில் சொல்லுகின்றீர்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, நானும் அந்த யோசனையை நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் சொல்லுகின்றேன். 20 மாணவர்கள் என்று இருந்தால் ஒரு ஆசிரியர் என்று இருக்கின்றது. ஆனால் 50-க்கு மேலே இருந்தால் வகுப்பாசிரியர் கொடுப்பதில்லை. மூன்று வகுப்புகள் இருந்தாலும் இரண்டு ஆசிரியர்களைத்தான் தருகின்றார்கள். 6, 7 மற்றும் 8-வது வகுப்புக்களில், புதிய முறையில் அறிவியல், கணிதம் என்று கொண்டுவந்துவிட்டு, ஆசிரியர்களைப் போடும்போது, மூன்று பேருக்குப் பதிலாக இரண்டு ஆசிரியர்களைக் கொடுத்தால் கஷ்டம் ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட கஷ்டங்களைப் போக்க இப்படிப்பட்ட பள்ளிகளை இணைத்தால், அந்தத் தொல்லை குறைந்துவிடும். அப்படிப்பட்ட அடிப்படையில்தான் இப்படி ஒன்றாக இணைக்க வேண்டும் என்று குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்கள் அவருக்குப் பதில் சொல்லுகின்றீர்கள், அவர் உங்களுக்குச் சொல்லுகின்றார். சப்ளிமெண்டரி கேள்விகள் சுருக்கமாக இருக்க வேண்டும் என்று தெரியவில்லையா? ஒரே கேள்விக்கு அரை மணி நேரம் ஆகிறதே?

Vacation salary.

*** 223. Q.**—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) the number of teachers of Private Schools in the Tiruchirappalli Educational District who were transferred from one school to another and paid full pay for the summer vacation during the academic years 1970–71 and 1971–72;

(b) whether it is a fact that the payment was objected to by the Auditors and consequently recovery from the salary was ordered; and

(c) if so, whether there is any proposal with the Government to amend the rule relating to the payment of salary for the summer vacation ?

[1975 ஏப்ரல் 1

கோடை விடுமுறை கால ஊதியம்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில், தனியார் பள்ளிகளில் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்குப் பணி மாற்றம் பெற்ற எத்தனை ஆசிரியர் களுக்கு 1970-71, 1971-72 கல்வி ஆண்டுகளில் முழுமையான கோடை விடுமுறை கால ஊதியம் வழங்கப்பட்டது ?

(இ) தணிக்கையாளர்களால் (Auditors) அவ்வூதியம் மறுக் கப்பட்டுத் திரும்பச் செலுத்துமாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(உ) ஆமெனில், கோடை விடுமுறை கால ஊதியம் வழங்கும் விதி முறையை மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1970-71-ம் கல்வி ஆண்டில் 10 ஆசிரியர்களுக்கும், 1971-72-ம் கல்வி ஆண்டில் 17 ஆசிரியர்களுக் கும் முழுமையான கோடை விடுமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) ஆம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, கோடை விடுமுறைக்கான ஊதியமானது அரசுப் பள்ளிகளுக்கு ஆறு மாதம் என்றும், தனியார் பள்ளி களுக்கு எட்டு மாதம் என்றும் இருக்கின்றது. இருந்தாலும் ஒரு பள்ளியி லிருந்து மற்றொரு பள்ளிக்கு இடைக்காலத்தில் மாற்றப்பட்டுச் சென்றால், 'கன்டினுவஸ் ஸர்வீஸ்' இருந்தாலும் புதிதாக வந்ததாகக் காண்பித்து, கோடை விடுமுறை வழங்கப்படுவதில்லை. ஆகவே இதுபற்றித் தெளிவான உத்தரவுகள் இல்லாத காரணத்தினால், இந்த இடர்ப்பாட்டை நீக்க அரசு தெளிவாக உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்காட்டியதைப் போல, பல ஆசிரியர்களிடமிருந்து இதுபற்றிப் பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவை அரசின் பரிசீல னையில் இருக்கின்றன. அதுபற்றி ஆராய்ந்து, முறையான முடிவெடுக்கப்படும்.

1975 ஏப்ரல் 1]

Provident Fund Amounts Due to Retired Headmasters

* 224. Q.—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) the number of cases in the Revenue District of Tiruchirappalli where the Provident Fund amounts due to the retired Headmasters of the Government 'B' Wing Schools, have been withheld during the years 1967, 1968 and 1969 pending the rectification of defects and shortage in school property;

(b) the number of cases, where such withheld amounts kept in the deposits that remained unclaimed for a period exceeding 3 years have been ordered to be credited to the lapsed deposit account, under Rule 8 of the Statutory Rules relating to the deposits under the transaction of the District Board; and

(c) the action taken by the Chief Educational Officer, Tiruchirappalli, to settle the accounts ?

ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்களுக்குச் சேரவேண்டிய வருங்கால வைப்பு நிதித் தொகைகள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த அரசினர் தொகுதி பள்ளிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்களுக்குச் சேரவேண்டிய வருங்கால வைப்பு நிதித் தொகைகளில், 1967, 1968, 1969 ஆகிய ஆண்டுகளில் குறைபாடுகள், பள்ளிச் சொத்தில் இழப்பு ஆகியவற்றைச் சரி செய்வதை எதிர்நோக்கி கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நேர்வுகள் எத்தனை ?

(இ) மாவட்ட வாரியத்தின் பற்று வரவின்கீழ் வரும் வைப்பீடுகள் தொடர்பான நிலைச்சட்ட விதிகளின் 8-வது விதியின்கீழ் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்டும் உரிமை கோரப்படாமல் இருந்த வைப்பீடுகளில் வைக்கப்பட்டிருந்த மேற்சொன்னவாறு நிறுத்திவைக்கப்பட்ட எத்தனை நேர்வுகள் காலங்கடந்த வைப்பீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுமாறு ஆணையிடப்பட்டுள்ளன ?

(உ) இக்கணக்குகளை முடிவு செய்ய திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மொத்தம் 7.

1967	2
1968	1
1969	4
	7

(இ) 4

(உ) இவைகளை விரைவில் முடிப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் முதன்மைக் கல்வி அலுவலர்கள் எடுத்து வருகின்றனர். தணிக்கைக்காக பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தணிக்கைத் தடை நீங்கிய பின்னர் பணம் திரும்ப கொடுக்கப்படும். தவணை கடந்த வைப்புப் பணத்தையும் திரும்பக் கேட்டு கோரிக்கை வந்தாலும் அதுவும் கொடுக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இது 1967-ஆம் ஆண்டிலிருந்து, எட்டாண்டு காலமாகக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. 1969-ம் ஆண்டில் இந்த முதன்மைக் கல்வி அதிகாரிகள் அலுவலகத்தில் காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கின்றது. " You are informed that very urgent action is being taken " என்று இருக்கின்றது. இப்போது விரைவான நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்கிறார்கள். இதுவரையில் முடிவெடுக்கப்படாமல் இந்த அளவிற்குக் காலத் தாழ்வு ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதிலே நான்கு பேரைப் பொறுத்தமட்டில், அவர்கள் 'க்ளெய்ம்' பண்ணாமல் இருக்கின்றார்கள். அவர்கள் அல்லது அவர்களுடைய முறையான வாரிசுதாரர்கள் கேட்டால், திருப்பிக்கொடுக்கப்படும். காலம் கடந்துவிட்டாலும், மறுபடியும் கேட்டால் தரலாம் என்று இருக்கின்றது. அடுத்து, மூன்று பேரைப் பொறுத்தவரையில்தான் முடிவெடுக்கப்படவேண்டியிருக்கின்றது. They have to account for the loss of school properties such as furniture, science equipment என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபற்றித் தணிக்கை முடிந்தபிறகு முடிவெடுக்கப்படும்.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know what is the amount of loss of property and what is the amount due to them?

1975 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூன்று பேருக்கும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. ஒருவரிடத்தில் ரூ. 3,600, இன்னொருவரிடத்தில் ரூ. 100, மற்றொருவரிடத்தில் ரூ. 3,000.

THIRU G. SWAMINATHAN : May I know what is the amount due to them, Sir?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கணக்கு தெரிந்துவிட்டால், இந்த நேரத்தில் அவர்களுடைய கணக்கே முடிந்திருக்கும்.

THIRU G. SWAMINATHAN : Sir, the amount can be reduced and it can be kept in abeyance. Later on, the disputed amount can be settled. May I know why the whole amount should be kept in abeyance without paying a sum of Rs. 100?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகையிழப்பு எவ்வளவு என்ற புள்ளிவிவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் அதுபற்றித் தணிக்கை செய்துகொண்டிருக்கிறார்கள். அது முடிந்து இறுதி நிலை தெரிந்துவிட்டால், அவர்களுக்குரிய தொகையை அவர்களிடத்தில் கொடுத்துவிடுவார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, the amounts pertain to the year 1967–68–69 and I am sure the Hon. Minister will appreciate that six years have elapsed. May I ask whether Government have any proposal to fix a time-limit of 2 years or 3 years beyond which these disputes will automatically fall and either the amount has to be paid or the amount will have to be confiscated? May I know why this is not being considered?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட நேரத்திலேயே முடிக்கப்பட்டிருக்கவேண்டிய ஒன்றுதான் இது. ஆனாலும் காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கின்றது. ஏற்பட்டிருக்கவேண்டியதில்லை. இப்போது, ஏன் காலத் தாழ்வு ஏற்பட்டது என்று அந்த அடிப்படையை ஆராய ஆரம்பித்தால், அதற்கு ஒரு ஆறுமாதகாலம் ஆகும். எனவே இதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, presumably the pension also would not be paid. May I know whether the pension will be paid to such persons?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றிய விவரக்குறிப்புகள் இல்லை.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், 'பி' விங் பள்ளிகளானாலும், மற்ற பள்ளிகளானாலும் அவர்களுக்கு ஓய்வுக்கால ஊதியம் பல்வேறு காரணங்களினால் தரப்படாமல் இருக்கின்றது. தனியார் பள்ளியிலிருந்து 'பி' விங் பள்ளிக்கு வந்திருப்பதால், அவர்கள் விஷயத்தில் ஓய்வுக்கால ஊதியத்தைக் கணக்கிடுவதில் இருக்கும் தொல்லைகள் காரணமாக, அவர்களுடைய ஓய்வு ஊதியக் காலத்தின் கடைசி மாதங்களிலேயே அதுபற்றிக் கணக்கிட்டு, அது உடனடியாகத் தரப்பட வேண்டும் என்று அரசு புதிதாக ஒரு விதி விதித்திருந்தும் இப்படித் தாமதம் ஆகின்றது. எதிர் காலத்திலாவது, இப்படிப்பட்ட கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு முழு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது இதுபற்றிய முறைகள் எளிமையாக்கப்பட வேண்டும், காலத் தாழ்வு தவிர்க்கப் பட வேண்டும், அதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஓய்வு ஊதியத்தைக் கொடுக்கும்போது, மாவட்டக் கல்வி அதிகாரிகள் அதை அனுமதிக்க வேண்டும் என்று தெளிவாக உத்தரவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் ஆடிட் அலுவலகத்தில் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நமூனாக்களின் முறையில் தான் 'ஃபில் அப்' செய்ய வேண்டும் என்று இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, டி.ஈ.ஓக்கள் அந்த நமூனாக்களை முறைப் படுத்திச் செய்ய வேண்டும் என்ற கருத்து இந்த அரசு ஆணையில் வழங்கப்படவில்லை. ஆகவே டி.ஈ. ஓக்கள் அவற்றைச் 'சாங்ஷன்' செய்வதற் காக ஆடிட் அலுவலகத்திற்கு அனுப்பி அங்கிருந்து அது வழங்கப்படும் நடை முறை இருக்கிறது. மாவட்டக் கல்வி அதிகாரிகள் நமூனாக்களை முறைப்படுத்தி அவர்களே அதை வழங்குவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது பற்றிய விளக்கம் கூறுவதற்குப் போதுமான அளவிற்கு விளக்கக் குறிப்புகள் என்னிடம் இல்லை. ஆனால் ஆடிட் அலுவலகத்தை, அக்கௌண்டெண்டு-ஜெனரல் அலுவலகத்தைக் கலந்து கொண்டுதான் இதை வழங்கவேண்டும், ஒழுங்கு முறைப்படுத்த வேண்டும் என்ற முறை இருந்தால், இதைப்பற்றி அரசு ஆராயும்.

Unauthorised pumping of water from Upper Channel

*225 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that water is pumped unauthorisedly from the Upper Channel to irrigate about 100 acres of dry lands near Thiruengoy Hills in Musiri Taluk; and

(b) if so, the action taken thereon?

மேட்டு வாய்க்காலில் இருந்து அனுமதியின்றி தண்ணீர் எடுக்கப்படுதல்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முசிறி தாலுக்கா, திருஈங்கோய் மலைக்கு அருகிலுள்ள சுமார் 100 ஏக்கர் புன்செய் நிலத்திற்கு மேட்டு வாய்க்காலில் இருந்து மின்சார இயந்திரம் உபயோகப்படுத்தி அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுக்கப்படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(பிற்பகல் 4-20)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, திருஈங்கோய்மலை மேட்டு வாய்க்காலில் இருந்து பாசனத்துக்கு அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், அந்த வாய்க்காலுடைய பிற்பகுதி பாசனதாரர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் சர்க்காருக்கு எல்லோரும் மனுச் செய்திருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. அதுபற்றி சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறதா என்றும், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருஈங்கோய்மலை கிராமத்தைச் சேர்ந்த ஒரு இடத்தில் 100 ஏக்கராவுக்கு மேல் அனுமதி இல்லாமல் பாசனம் செய்திருக்கிறார்களா என்று கேட்டார்கள். இல்லை என்று நான் பதில் சொன்னேன். அனுமதியுடன்தான் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, முதலில் இல்லை என்ற வார்த்தையைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 'டெயில் என்ட்'டில் இருக்கின்ற இந்தப் பாசனதாரர்கள் அதனால் பாதிக்கப்பட்டு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அனுமதி இல்லாமல் எடுத்தார்களா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், இல்லை என்று பதில் சொன்னார்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, 'டெயில் என்ட்'டில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அனுமதி இல்லாமல் எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பது கேள்வி, இல்லை என்று பதில் சொன்னார். என்ன அர்த்தம் அதற்கு? அனுமதியோடு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, அந்த வாய்க்காலின் முடிவில் இருக்கும் விவசாயிகள் தங்களுடைய பாசன வசதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சர்க்காருக்கு மனுப் போட்டிருக்கிறார்களா என்றும் அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது இப்பொழுது கொடுக்கப்பட்ட அனுமதி அல்ல. அது 1949 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட ஒரு அனுமதி. அப்பொழுது 119 ஏக்கராவுக்கு அனுமதி கொடுத்தார்கள். 45 'ஹார்ஸ் பவர்க்கு' மோட்டார் வைத்துக்கொள்ளலாம் என்று அப்போது அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பின்னால், 1962 ஆம் ஆண்டு, 1965 ஆம் ஆண்டு, 1966 ஆம் ஆண்டு என்று இந்த அரசாங்க ஆணைகளை மாறி மாறிப் போட்டு அதைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். பின்னர் குறைக்க வேண்டாம், அப்படியே விடலாம் என்று சொன்னார்கள். ஒரு ஆளுக்கு 15 ஏக்கருக்கு மேல் பாசனம் செய்யக்கூடாது, காவிரியின் கீழ் பம்பு செட்டு போட்டு 7½ 'ஹார்ஸ் பவரு'க்கு மேல் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று 1970 ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பித்தோம். ஆக அந்த ஆணையின்

கீழ், அது தவறு என்றும் இவ்வாறு இருக்கக்கூடாது என்றும், குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும் நோட்டீஸ் கொடுத்தோம். அதற்குப் பிறகு அவர்கள் 'நாங்கள் ஏற்கெனவே வைத்திருக்கிறோம், எங்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்' என்று அரசாங்கத்தைக் கேட்டார்கள். 'அதைத் தர முடியாது; நீங்கள் ஒருவரே 119 ஏக்கருக்கு வைத்திருக்கிறீர்கள்; ஆகையால் அனுமதி கொடுக்க முடியாது' என்று சொன்னோம். மீண்டும் அவர்கள், 'ஒருவர் பெயரிலே நிலம் இல்லை, எட்டு பேர் பெயரிலே அதைப் பிரித்து எழுதி வைத்திருக்கிறோம். அதில் எட்டுப் பேருக்குப் பாத்தியதை இருக்கிறது' என்று மனு கொடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் கீழ் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. கீழ் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்பட்டிருந்தால், அது பற்றி அப்போது 1949 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட ஒரு அனுமதியின் நிமித்தம் கீழ் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்பட்டார்களா என்று இப்போது கேட்டால் நான் எப்படி பதில் சொல்ல முடியும்?

Directors Board of Nagercoil Peoples' Co-operative Bank.

* 226 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether is a fact that Board of Directors of Nagercoil Peoples' Co-operative Bank was superseded and entrusted to a Special Officer during July 1974, as it was found guilty of any malpractices;

(*b*) if so, the nature of the malpractices;

(*c*) whether it is a fact that the management of the Bank was again entrusted to the Board of Directors which was superseded; and

(*d*) if so, the reasons therefor?

நாகர்கோவில் பியூப்பிள்ஸ் கோவாபரேடிவ் வங்கி நிர்வாக போர்டு

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் பியூப்பிள்ஸ் கோவாப்பரேடிவ் வங்கி நிர்வாக போர்டு பல தவறுகளைச் செய்ததினால் கலைக்கப்பட்டு தனி அதிகாரி கையில் 1974 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒப்படைக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அந்த வங்கியில் நடந்த தவறுகள் யாவை?

(உ) கலைக்கப்பட்ட நிர்வாக போர்டிடம் மீண்டும் அவ்வங்கி ஒப்படைக்கப்பட்டது உண்மையா?

(எ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கூட்டுறவு சங்கங்களின் விதிகளுக்கும், வங்கியின் துணை விதிகளுக்கும் முரணாகவும் காசுக் கடன் வசதி புதுப்பித்தது, கல்வி யோக்யதாம்சம் இல்லாத நபர்களை வங்கி ஊழியர்களாக நியமித்தது, கடன் வசதி சரியான நோக்கங்களுக்கு அளிக்காதது, ரொக்க ஒதுக்கீடு அதிக அளவில் வைத்துக் கொண்டது, ஜாமீன் கடன், ரொக்கக் கடன் ஆகியவை வழங்கியதில் பாரபட்சம் காட்டியது ஆகிய காரணங்களுக்காக நிர்வாகக் குழு கலைக்கப்பட்டது.

(உ) ஆம்.

(எ) கலைக்கப்பட்ட நிர்வாகக் குழுவுக்கு, திருநெல்வேலி இணைப் பதிவாளர் அவர்கள் சுட்டிக் காட்டிய குறைகளை நிவர்த்தி செய்ய சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு, குழு, மாநில கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு செய்த மேல் முறையீட்டினை ஏற்று இணைப் பதிவாளரின் உத்திரவு ரத்து செய்யப்பட்டது. அத்துடன் இணைப் பதிவாளரால் குறிப்பிடப்பட்டுள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றனவா என பார்க்கும்படியும் அறிவுறுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அதே நிர்வாக போர்டிடம் ஒப்படைக்கப்பட்டு, இந்தத் தவறுதல்களைத் தீர்ப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால், 'ரெக்கார்ட்' ரீதியாக அவர்கள் தவறுகளைத் திருத்தியதாகச் சொல்லிவிட்டு தப்பித்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். மேலும் அவர்கள் அந்தத் தவறுதல்களைக் களைவதற்கு 6 மாதத் தவணை கொடுக்கப்பட்டு விட்டது. அந்தக் காலாவதியும் முடிவடைகிறது என்று தெரிய வருகிறது. எனவே, ஒரு உயர் அதிகாரியை அனுப்பி அந்தத் தவறெல்லாம் நீக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து, நீக்கப்படாமல் இருந்தால் மீண்டும் அரசே ஏற்றெடுத்து அரசின் சார்பில் ஒரு போர்ட் போடுவதற்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஒரு உயர்தர அதிகாரி போய் விசாரிக்கலாம் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

THIRU G. SWAMINATHAN: Sir, I find that the charges are very serious and the action taken by the Government seems to be very lenient. May I know who is responsible for all the mistakes and what action was taken on the particular person who has been responsible for this?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அங்கிருக்கும் ஜாயிண்ட் ரிஜிஸ்ட்ரார் நடவடிக்கை எடுத்திருக்கிறார். அதற்குமேல் அப்பீலிலே பதிவாளர் (ரிஜிஸ்டிரார்) இதையெல்லாம் 'ரெக்டிஃபை' செய்து விடலாம் என்று ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார். கொடுத்ததற்குப் பின்னால் சிலவற்றை அவர்கள் 'ரெக்டிஃபை' செய்து விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது மறுபடியும் 'ரெக்டிஃபை' ஆகவில்லை, மோசமாகத்தான் தொடர்ந்து நடந்து வருகிறார்கள் என்று அரசுக்கு ஒரு மனு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கிடையில் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதைப்போல, ஒரு உயர் அதிகாரி சென்று இதனுடைய நடவடிக்கைகளைப் பரிசீலிக்கலாம் என்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. வி. வெங்கா: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே பல சங்கங்கள் இதுபோன்ற நிர்வாகக் கோளாறுகள் சம்பந்தமாக கலைக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சங்கங்களுக்கு அவற்றின் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு இது போன்ற வாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் கொடுக்கமுடியுமா என்று பொதுவாகக் கேட்டால் பதில் சொல்ல முடியாது. சில குறிப்பிட்ட சங்கங்களில் தவறுதல்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டி அந்தத் தவறுதல்கள் திருத்தப்படலாமா என்று பார்க்க வேண்டும். உதாரணமாக இதிலே கடன்கள் முறையாக வழங்கப்படவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. கடன்களை அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கு வழங்கி விட்டார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. ஆகவே, இதை நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் தான் கொண்டு வந்தார்கள். அதை விசாரித்து, அப்படிப்பட்ட நிலைமையிலே இனிமேல் மனு எப்படி வரிசையாகக் கொடுக்கின்றார்களோ அந்த முன்னுரிமைப்படி பரிசீலிக்க வேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக்கொண்டது. பரிசீலித்துவிட்டதாக அவர்கள் அறிக்கையிலே சொல்லுகிறார்கள். ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இல்லை என்று சொல்லுகின்றார்கள். ஆகவேதான் உயர்தர அதிகாரியை அனுப்பி விசாரிக்கலாம் என்று சொன்னேன்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, சொந்தக்காரர்கள் என்று இருந்தால், அவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடாது என்று தெளிவாக உத்தரவு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொன்னதாகவும் அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. பல மனுக்கள் வந்திருக்கும்போது உறவினர்களுக்குப் பாரபட்சத்தோடு நடந்துகொண்டார் என்பதுதான் குற்றச்சாட்டு.

Failure of Crops

* 227 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the extent of lands in Kanyakumari district in which crops have failed for want of water, during January 1975; and

(b) the extent of lands in which crops are in the various stages of development?

பயிர்கள் வாடுதல்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1975-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தண்ணீரில்லாமல் வாடும் பயிர்களுடைய நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

(இ) அவைகளில் பூவும், போதியும், கதிருமாய் உள்ள நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) 13,000 ஏக்கர்கள்.

(இ) 3,670 ஏக்கர்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த வருஷம் 17 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தண்ணீரின்றி பயிர் வாடியிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆகவே, அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து இப்போது வறட்சிப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்திருக்கின்ற தொகையோடு மேலும் கூடுதல் ஒதுக்கீடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த எந்த ஒரு பகுதியும் இதுவரை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படவில்லை . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவைத் தலைவர் அவர்களே (பலத்த சிரிப்பு).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மேலவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த எந்தப் பகுதியும் இதுவரையிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு வறட்சிப் பகுதியாக அறிவிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து எந்தவித அறிக்கையும் வரவில்லை. இந்த மாவட்டத்தில் 1974-75-ஆம் ஆண்டில் கும்பம் பூவில் பயிரிடப்பட்ட பரப்பு 65,750 ஏக்கர். இதில் 1975 ஜனவரியில் தண்ணீரின்றி வாடிய பயிரின் பரப்பு 13 ஆயிரம் ஏக்கர். பூவும், போதியும், கதிரும் உள்ள பரப்பு 3,700 ஏக்கர். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை இது குறித்துக் கேட்டபோது, ஆங்காங்கே ஒருசில இடங்களில் ஒருசில வயல்களில்தான் கொஞ்சம் பயிர் வாடியிருக்கிறது என்றும், அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த கணக்குப்படி அவைகள் எதுவும் அந்த வகையிலே சேரவில்லை என்றும்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்து தெரிவித்திருக்கிறார். எனவேதான் அந்தப் பகுதி சேர்க்கப்படவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, 50 சதவீதம் நிலங்கள் பாதிக்கப்பட்டால், அது வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்படும் என்று ஒரு விதி இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் 65 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ள நான்கு தாலுக்காக்களில் ஒரு தாலுக்காவில் மட்டும் 17 ஆயிரம் ஏக்கர் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த ஒரு தாலுக்காவான அகஸ்தீஸ்வரம் தாலுக்காவையாவது வறட்சிப் பகுதியாகக் கருதி அதிகப் பணம் ஒதுக்கீடு செய்து அங்கு வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இந்த 50 சதவீதத்திற்கு உள்ளே வரவில்லை. மொத்தம் 13 ஆயிரம் ஏக்கர் என்று இருந்தாலும், அது 50 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கிற காரணத்தினால்தான், சேர்க்கப்படவில்லை. ஆனாலும், கன்னியாகுமரி மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படாதபோதிலும், குடிநீர் வசதிக்காகவும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகவும் இப்போது 7 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, தண்ணீர் இல்லாமல் வாடிவிட்ட அந்த நிலங்களுக்கு கிஸ்தி வஜா செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கிஸ்தி வஜா செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியில் லெவி எப்படி வசூலிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அங்கே அந்தக் கணக்குக்கு லெவி வராத காரணத்தினால் லெவியும் 'வெய்வ்' செய்யப் பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதியைப் பொறுத்தவரையில், லெவி குறைவாகக் கொடுக்கலாம் என்று உத்தரவு போடப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் உத்தரவு வழங்கப் பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அந்த இடங்களில் மனிதாபிமானத்தோடுதான் வாங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, இந்த வறட்சிப் பணிகளை நிறுத்தி வைக்கும்படியாக இப்போது அரசு உத்தரவு போட்டிருக் கிறதா, அப்படியானால் என்ன உத்தரவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மேலவைத் தலைவர் அவர்களே, நிறுத்தி வைக்கும்படி எந்தவிதமான உத்தரவும் வழங்கப்படவில்லை. நாம் எதிர்பார்த்ததைவிட தீவிரமாக அவர்கள் பணியாற்றியதன் காரணமாக கொடுக்கப்பட்ட தொகைக்கு மேலேகூட வேலைகளை ஏற்றுக்கொண்டு செய்கிறார்கள். அதனால் இப்பொழுது கொடுக்கவேண்டிய பணம் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட தொகைக்கு மேலே இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணம் கொடுப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. வேலைகள் தொடர்ந்து நடைபெறும்.

திரு. வி. வெங்கா : தலைவர் அவர்களே, 1—4—1974-லிருந்து வறட்சி நிவாரணத்திற்கு எவ்வளவு உதவித் தொகை தமிழ்நாட்டிற்குத் தேவை என்று இன்னும் அசஸ்மெண்ட் செய்து மத்திய சர்க்காரைக் கேட்கவில்லை என்று ஒரு அசஸ்மெண்ட் செய்து மத்திய சர்க்காரைக் கேட்கவில்லை என்று ஒரு பத்திரிகைச் செய்தி பார்த்தேன். அது உண்மைதானா என்று அறிய விரும்புவதோடு இனிமேலாவது அசஸ்மெண்ட் செய்து மத்திய சர்க்காரைக் கேட்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

1975 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பத்திரிகையிலே வருகின்ற செய்திகளை வைத்துக்கொண்டு சட்ட மன்ற மேலவையிலே கேட்பது சரியல்ல என்று கருதுகிறேன். காரணம் நம்முடைய அதிகாரிகளும், வறட்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்காக வந்த மத்திய அரசு அதிகாரிகளும், அதற்குப் பிறகு வந்த வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களும் பார்வையிட்டுவிட்டுப் போன பிறகு, இந்த மாநிலத்திற்கு செப்டம்பர் வரை ரூ. 55 கோடி கொடுக்கலாம் என்று ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கிடையிலே ரூ. 10 கோடி ஒதுக்கினார்கள். இதில் 8.70 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து செலவு செய்வோம். பத்திரிகையிலே வந்த செய்தி சரியல்ல. ஏற்கெனவே அதற்கு வேண்டிய திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே 50 சதவிகிதம் குறைந்த அளவு வறட்சியிலே பாதிக்கப்பட்டு நிலங்கள் இருந்தாலும் அவைகளுக்கும் வறட்சி நிவாரண நிதியிலிருந்து பணம் ஒதுக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது போல திருச்சி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் டெல்ட்டா ஏரியாவில் 8 கிராமங்கள் இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு அதிகாரிகள் வந்து பார்த்து, கிட்டத்தட்ட 30, 35 சதம் நஞ்சை நிலங்கள் பாதிக்கப்பட்டதனால், விளைச்சல் காய்ந்துபோன நிலைமையில் இருப்பதை, குறித்துக்கொண்டு போயிருக்கின்றார்கள். அதற்கும் குடிநீர் வசதிக்காக இந்த வறட்சி நிவாரண நிதியிலிருந்து ஒதுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வறட்சியைப் பயன்படுத்தி இதுவரையிலே . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, 'ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' அமைச்சர் அவர்கள் மீண்டும் 'பேரவைத் தலைவர் அவர்களே' என்று சொல்கின்றார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் காலையில் 5 அல்லது $5\frac{1}{2}$ மணி நேரம் பேரவையில் இருந்துவிட்டு இங்கு மாலை வருவதால் அப்படி வந்துவிடுகிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, . . .

ஒரு மாண்புமிகு உறுப்பினர் : அது ரொம்ப நல்லது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்த வறட்சியைப் பயன்படுத்தி இதுவரையிலே நகராட்சி மன்றங்களுக்கும், பேரூராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் வசதிக்காக அரசாங்கத்திலிருந்து உதவித் தொகை கொடுக்கப்படாமல் இருந்தது. இந்த வறட்சியைப் பயன்படுத்திக்கொண்டு நிவாரணத்திற்கு

கடனாகவும், மான்யமாகவும் வழங்கலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது குடிநீர் வசதிக்காக வறட்சி நிதியிலிருந்து செலவு செய்யலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. எல்லா கிராமங்களிலும் மக்களுக்கு வேண்டிய குடிநீர் கிடைப்பதற்கு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

Persons whose Names have been registered with the Employment Exchange, Tiruchirappalli.

* 228 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the number of persons qualified to be Tamil Pandits, B.T. Assistants Secondary Grade Assistants, Higher Grade Assistants and Specialist Teachers, who have registered their names with the Employment Exchange, Tiruchirappalli, seeking employment ; and

(*b*) the number of such persons in each category who have completed 26 years of age?

திருச்சிராப்பள்ளி வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்ப் பண்டிதர்கள், பிடி. ஆசிரியர்கள், உயர்நிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், சிறப்பாசிரியர்கள் ஆக பணியாற்றும் தகுதிபெற்று, வேலைவாய்ப்பு கோரி, திருச்சிராப்பள்ளி வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில், 26 வயது முடிந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, (அ) 1—3—1975 வரை, 3,906 நபர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்திருக்கின்றார்கள்.

(இ) தமிழ் பண்டிதர்கள்	88
பி.டி. உதவியாளர்கள்	150
இரண்டாம் நிலை ஆசிரியர்கள்	895
உயர்நிலை ஆசிரியர்கள்	188
கைத் தொழில் ஆசிரியர்கள்	207
உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்கள்	51
ஆக மொத்தம்	1,579

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அரசுப் பள்ளிகளிலும் மற்ற தனியார் பள்ளிகளிலும் இந்த ஆசிரியர்களை நியமிப்பதிலே 26 வயது பூர்த்தியாகியிருந்தால், அவர்களை நியமிக்கக்கூடாது என்று இருக்கின்றது. அந்த அடிப்படையிலே இவர்களுக்கு இனி வேலைவாய்ப்பே கிடைக்காது. அவர்களைப் பதிவு செய்வதில் என்ன நோக்கம் இருக்கின்றது? ஒன்று அவர்களுக்காக அரசு விதிகளைத் தளர்த்த வேண்டும் அல்லது அவர்களுக்கு வேலை இல்லை என்று குறிப்பிலிருந்து அகற்றிவிட வேண்டும். இதிலே அரசு என்ன செய்ய முடிவு எடுத்திருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, 30 வயது வரையிலே அரசுப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படுகிறது. 30 வயதிற்கு மேல் பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியங்களில், தனியார் பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு வேலை தரப்படலாம் என்று விதி இருக்கின்றது. அப்படி 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் கூட ஆசிரியர்களாக தனியார் பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் நியமனம் பெறுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, இப்படி வேலைவாய்ப்பு நிறுவனங்களிலே பதிவு செய்து கொள்கின்ற எல்லா ஆசிரியர்களுடைய பெயர்களும், அவ்வப்போது வேலை வாய்ப்பு கிடைக்கும்போது அனுப்பி வைக்கப்படும் என்ற புதிய திட்டம் ஒன்றை இதற்கு முன்பு வேலை வாய்ப்புத் துறை அமைச்சராக இருந்தவர்கள் வெளியிட்டார்கள். அந்தத் திட்டம் இப்போது செயல்பட்டுவருகிறதா என்று அறிய விரும்புகிறேன். தமிழ்ப் பண்டிதர்களுடைய பெயர்கள் ஏறத்தாழ 150 இருந்தால், அந்த 150 பேர்களுடைய பெயர்களையும் வேலை வாய்ப்புக்கு எடுத்துக்கொள்கின்ற முதன்மைக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கோ அல்லது தனியார் பள்ளி அலுவலகத்திற்கோ அனுப்புவது என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஏனென்றால் வேலை வாய்ப்பு நிறுவனங்களில் இருக்கும் அலுவலர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுடைய பெயர்களை அனுப்பிவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்து வருகிறது என்பதைப் போக்குவதற்காக ஒரு புதிய முறை பின்பற்றப்படும் என்று குறிப்பிட்டார்கள். முன்பு இருந்த இதே துறையினுடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இப்போது பின்பற்றப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, வரிசையாகத்தான் வேலைவாய்ப்புக்கான நபர்களுடைய பெயர்களும் அனுப்பப்படுகிறதே தவிர, எல்லா நபர்களுடைய பெயர்களையும் சகட்டு மேனியாக அனுப்புவது என்பதே இயலாத காரியம். அப்படிப்பட்ட முறையில் அனுப்புவதாக எனக்குத்

[1975 ஏப்ரல் 1

தகவல் இல்லை. அப்படிப்பட்ட முறையில் அனுப்ப இதுவரை உத்தரவு போட்டதாகவும் தகவல் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த ஆசிரியர்கள் 26 வயது வரை அரசுப் பள்ளிகளிலேயும், 30 வயது வரையில் தனியார் பள்ளிகளிலேயும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலேயும் சேரலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். அது மாதிரி 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களாகச் சேரலாமா என்று அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே, தனியார் பள்ளிகளிலே 30 வயதினர் சேர்த்துக்கொள்ளப்படலாம்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குரிய பதில் சொல்கின்றவர்கள் தொழிலாளர் நல அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் தொழிற்சாலைகளிலே தமிழாசிரியர்கள் தமிழ் இலக்கியத்தையும், பி.டி. ஆசிரியர்கள் ஆங்கிலத்தையும் சொல்லித் , தருவதற்கு ஏற்ற முறையில் குறைந்த ஊதியத்திலாவது அவர்களுக்கு வேலை தருகின்ற அளவில் பல்வேறு வேலை புரிகின்ற இடங்களில் அவர்களை அமர்த்துகின்ற அளவில் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இது தொழில் அதிபர்கள் யோசிக்கவேண்டிய விவகாரம். தொழிற்சாலையிலேயே பாடம் சொல்லிக் கொடுத்தால் தொழில் நடக்காது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, இந்த ஆசிரியர்கள் நியமனங்களுக்கான பதிவு முறை எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜ் ஆபிசிலேதான் இருக்க வேண்டுமா? அவர்களுக்கு என்று ஒரு தனித் துறை இருக்கின்றதே, அங்கேயே அவர்கள் பதிவு செய்துகொண்டு வேலைக்குச் செல்கின்ற வாய்ப்பினை அவர்களுக்கு அளிக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வேலை வேண்டும் என்பவர்கள் எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜுக்குத்தான் வரவேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலேயே அரசுப் பள்ளிகளைப் போல 26 வயது வரையிலேதான் சேரலாம் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதா என்று அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1975 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொல்லிவிட்டேன். அரசுப் பள்ளிகளில் 30 வயது வரையிலே அவர்கள் பதவி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது சட்ட பூர்வமாக அறிவிக்கப்பட்ட வகையில் 30 வயது தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. தன்னிலை விளக்கம்.

(Thiru G. Vasantha Pai rose. . .)

MR. CHAIRMAN : The hon. Member may wait for a little while. Why is he in a hurry? Regarding expunction of a relevant portion of the speech of Thiru Vasantha Pai, I will give my ruling tomorrow.

THIRU G. VASANTHA PAI : Sir, on this point. . .

MR. CHAIRMAN : The matter ends there and the hon. Member should not ask any question.

THIRU G. VASANTHA PAI : Sir, I am asking for your leave under rule 81 to make a personal explanation.

MR. CHAIRMAN : The hon. Member cannot ask for my permission here. He may please resume his seat. The ruling will be given tomorrow.

THIRU G. VASANTHA PAI : Sir, I want to make a request for personal explanation.

MR. CHAIRMAN : I am going to give my ruling tomorrow and the matter may be taken up tomorrow.

THIRU G. VASANTHA PAI : Sir,

MR. CHAIRMAN : I am not allowing the hon. member. He may please hear me, he must obey the Chair.

THIRU G. VASANTHA PAI : Sir, I am only asking for your permission under rule 81 which says that a Member may, with the permission of the Chair, make a personal explanation.

[1975 ஏப்ரல் 1

MR. CHAIRMAN: Did the hon. member get any permission from me?

THIRU G. VASANTHA PAI: Sir, I am asking you now.

MR. CHAIRMAN: The hon. Member cannot ask me here. He could have asked me in my office-room.

THIRU G. VASANTHA PAI: Sir, the rule does not say where the permission is to be taken. I can ask you in the House. Rule 81 says, "A Member may, with the permission of the Chairman, make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward, and no debate shall be allowed on such explanation".

MR. CHAIRMAN: In this case also, no debatable matter should be brought forward and no debate shall be allowed.

THIRU G. VASANTHA PAI: Sir, I am not bringing anything debatable. I am not saying anything on the expunction. I am only asking for permission to make an explanation.

MR. CHAIRAN: No. I am not allowing now.

THIRU G. VASANTHA PAI: Sir, that should precede your ruling.

MR. CHAIRMAN: The hon. Member can make it tomorrow.

THIRU G. VASANTHA PAI: Sir, how can you take it up tomorrow?

MR. CHAIRMAN: I am not allowing any explanation now. The hon. Member cannot go beyond the rule of the House and I hope the hon. Member, being an eminent lawyer, knows it.

THIRU G. VASANTHA PAI: Sir, I am not going beyond the rules. I am making a request. You may overrule it.

THIRU G. SWAMINATHAN: Sir, rule 81 says that a Member can raise and ask for permission to explain on a matter which is pending before the Council. The Hon. Chairman has said that, on the matter pending before the Council and on which the hon. Member Thiru Vasantha Pai wants to make an explanation under rule 81, he will give a ruling tomorrow. So,

1975 ஏப்ரல் 1] [Thiru G. Swaminathan)

eventhough the matter is pending, because the ruling is going to be given tomorrow, the hon. Member Thiru Vasantha Pai may wait to give his personal explanation under rule 81.

THIRU G. VASANTHA PAI: Sir, I do not want you to give the ruling without hearing me. I request you to give me five minutes.

MR. CHAIRMAN: No. I would not give five minutes.

THIRU G. VASANTHA PAI: Sir, please give me two minutes.

MR. CHAIRMAN: No. Thiru C. R. Kolappa.

(பிற்பகல் 4-40)

3. கவன ஈர்ப்பு.

கம்மந்தொட்டியை அடுத்த ராவுத்தப்பள்ளி கிராமத்தில் சலவையாளர் குடும்பத்திலுள்ளவர்களை தாசனபுரத்திலுள்ள ஜாதி இந்துக்கள் தாக்கியது குறித்து.

திரு. சி. ஆர். கோலப்பா: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; 'தர்மபுரி மாவட்டம், ஓசூர் தாலுகா, கம்மந்தொட்டி அடுத்த ராவுத்தப்பள்ளி கிராமத்தில் சலவையாளர் குடும்பத்தில் உள்ள ஆண், பெண் ஆகியோரை தாசனபுரத்தி லுள்ள ஜாதி இந்துக்கள் சேர்ந்து, ஜாதி வெறி எண்ணத்துடன் பயங்கர ஆயுதங்களோடு வந்து தாக்கி கொலை செய்ய முயற்சித்ததின் விளைவாக ஏற்பட்டுள்ள நிலவரம் குறித்து.'

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஹோசூர் வட்டம், கம்மந்தொட்டிக்கு அருகேயுள்ள ராவுத்தப்பள்ளி கிராமத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கழனிக் குடிசையில், வி. பச்சையப்பன் என்பவரது மகன் திரு. தருமன் என்பவர் (சாதியில் வள்ளுவர்) தமது தம்பி திரு. கண்ணனுடனும் ஏனைய உறவினர்களுடனும் வசித்து வருகின்றார். திரு. தருமன் இராணுவத்தில் யந்திரப் பொறியியற் பிரிவில் பணிபுரிந்து வருகிறார். இந்தப் பிரிவு தற்போது நேபாவில் பணியாற்றி வருகிறது. இவர் இப்போது 29—12—74-ஆம் நாளி லிருந்து விடுப்பில் இருந்து வருகிறார். விடுப்பு முடிந்து இவர் 1975 ஏப்ரல் முதல் வாரத்தில் தமது பிரிவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும். திரு. தருமன் 1973 மார்ச்சில் ராஜப்பா என்பவரிடமிருந்து ச.பு. எண் 55/3-ல் ராவுத்தப் பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள 1.87 ஏக்கர் புன்செய் நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கியிருந்தார். இவர் இராணுவத்தில் பணிபுரிவதால், இதே கிராமத்தைச்

சேர்ந்த அரசப்பன் என்பவர் இந்த நிலத்தைப் பார்த்து வருகிறார். 3—3—75 ஆம் நாளன்று பிற்பகல் ஒரு மணியளவில் திரு. தருமனுக்குச் சொந்தமான கால்நடை, அவரது நிலத்துக்கு அருகே அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் குடித்ததெனத் தெரிகிறது. இந்தக் கிணறு, தாசனபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடராமகௌடு என்பவருக்குச் சொந்தமானதாகும். திரு. தருமனின் தம்பி வாங்கியிருக்கிற ஒரு நிலத்தின் காரணமாக, திரு. வெங்கடராம கௌடுவுக்கும் தருமனது குடும்பத்தாருக்கும் இடையே சச்சரவு இருந்து வந்துள்ளது. இது தொடர்பாக ஹோசூர் மாவட்ட முன்சீபு நீதி மன்றத்தில் சிவில் வழக்கு ஒன்று விசாரணையில் உள்ளது எனக் கூறப்படுகிறது.

இந்த முன்பகை காரணமாக, வெங்கடராம கௌடுவின் மகனான சம்பங்கி ராமையா என்பவர், மேற்சொன்னவாறு கால்நடை கிணற்றில் தண்ணீர் குடித்ததை ஆட்சேபித்துள்ளார். இந்த நிகழ்ச்சி நடந்த கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, திரு. வெங்கடராம கௌடுவும் வேறு சிலரும் மாட்டு வண்டி ஒன்றை ஓட்டிக் கொண்டு திரு. தருமன் நிலத்துக்குள் அத்துமீறி நுழைந்தனர். இப்படி அத்துமீறி நுழைந்ததை, திரு. தருமன் வன்மையாக எதிர்த்ததோடு, அவர்களையும் மாட்டு வண்டியையும் தடுத்தும் நிறுத்தினார். திரு. தருமனின் இச்செயல் திரு. வெங்கடராம கௌடுவுக்கும் அவருடன் வந்த ஆட்களுக்கும் பெரும் சினமூட்டியது. ஆகவே, அவர்கள் திரு. தருமனை அடித்துவிட்டார்கள் எனத் தெரிகிறது. தருமனைச் சேர்ந்த ஆட்கள் அவரைக் காக்க வந்தனர். அவர்களும் பதிலடி கொடுத்தனர். இவ்விரண்டு குழுவினருக்கும் சிறிதுநேரம் கைகலப்பு நடந்தது. கைகலப்பின்போது, சைக்கிள் சங்கிலிகள், கம்புகள் முதலியன, தாக்கவும், தாக்குதலைத் தடுக்கவும் ஆயுதங்களாகத் தங்குதடையின்றிப் பயன்படுத்தப்பட்டன. இரு தரப்பிலும் ஆட்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன.

இது தொடர்பாக சூளகிரி காவல் நிலையத்தில், 32/75 ஆம் குற்ற எண்ணில் இ.பி.கோ. 147, 325, 323 ஆகிய பிரிவுகளின் கீழும் 33/75 ஆம் குற்ற எண்ணில் இ.பி.கோ. 147, 148, 447, 325, 323 ஆகிய பிரிவுகளின் கீழும் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவை புலன் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. திரு. தருமனின் சகோதரர், திரு. வி. பி. கண்ணனுக்கும் வெங்கடராம கௌடு வகையறுவைச் சேர்ந்த லக்ஷ்மையா என்பவருக்கும் கடுங் காயங்கள் ஏற்பட்டன. அவ்விருவருமே, ஹோசூரில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் அகநிலை நோயாளிகளாகச் சிகிச்சை பெறச் சேர்க்கப்பட்டுள்ளனர். 32/75 ஆம் குற்ற என் வழக்கின் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை

எனக் கூறப்படுகிறது. 33/75 ஆம் குற்ற வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட அனைவருமே, கைது செய்யப்பட்டனர் அல்லது நீதி மன்றத்தில் சரண் அடைந்துள்ளனர். நிலைமை தற்போது அமைதியாக உள்ளது.

திரு. சி. ஆர். கோலப்பா: தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையின் மூலமாகத் தெரிவித்திருப்பதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். உள்ளபடியே அங்கே பாதிக்கப்பட்டவர்கள் சலவைத் தொழிலாளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, அவர்களை இன்று கூட மருத்துவ மனையிலே சென்று பார்த்துவிட்டு வந்தேன். போலீஸ்காரர்கள் வேண்டுமென்றே அந்தச் சலவையாளர் குடும்பத்தின் வழக்கு சக்தி வாய்ந்ததாக இருக்கக்கூடாது என்பதற்காக மற்ற எதிரிலே உள்ளவர்களையெல்லாம் சேர்த்து கேஸ்கள் போட்டு அவர்கள் அந்தக் கேஸை பலமாக ஆக்க வேண்டும் என்பதற்காக போலீசார் வேண்டுமென்றே தவறுகள் செய்துகொண்டிருக்கிறார்கள். அதை இந்த சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல் 33/75 குற்ற என் வழக்கில் 147, 148, 447, 325, 323 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. அதற்குத் தக்கபடி பரிகாரம் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசின் தீர்மானம்.

‘தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி’ குறித்த கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே,

“சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்புகள்

@ ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கொடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக மீண்டும் திருப்பிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. குறிப்புகள் விரிவாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அது பற்றிய விவாதத்தைத் தொடரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்பு பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நிறையப் பேர் பேசவேண்டியிருப்பதால் 15 நிமிடத்திற்கு மேல் பேச வேண்டாம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : கல்வியினுடைய செலவு இனங்களிலே இந்த ஆண்டு 124 கோடி ரூபாயும், வேறு மருத்துவம், விவசாயம், கால்நடை ஆகிய துறைக் கல்விக்கு 24 கோடி ரூபாயும், ஆக மொத்தத்தில் 148 கோடி ரூபாய் கல்விக்காக இந்த அரசு செலவு செய்கின்றது. இந்த அரசினுடைய மானியமாக 124 கோடி. ரூபாய் கல்வி இலாகா மூலமாக செலவு செய்யப்படுகின்றது. ஒரு பெரிய தொகை செலவு செய்யக்கூடிய இலாகாவாக இது இருந்தபோதிலும் கூட, நிர்ப்பந்தமாக வருஷாவருஷம் ஆசிரியர்களுடைய சம்பள விகிதங்களைக் கூட்டுதலும், நிர்வாகச் செலவைக் கூட்டுதலுமாக ஏறிக்கொண்டே போகிறதே தவிர, கல்வித் துறையிலே பெரிய சௌகரியங்களும் மேம்பாடும் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், எதிர்பார்த்த செலவுக்கேற்ற மேம்பாடு காணாத நிலைமையைத்தான் பார்க்கிறோம் என்பதை இந்தச் சபை மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கல்விக்கு செலவு செய்யக்கூடிய பெரும் பகுதிப் பணம் சம்பளமாகவே செலவு செய்யப்படுகின்றது. நிர்வாகச் செலவாகவே இருக்கின்றது. கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு நிதி போதுமானதாக இல்லை. போதுமான பள்ளிக் கட்டிடங்கள் கிடையாது. அதற்குண்டான வசதிகளும் கிடையாது. உயர்நிலைப் பள்ளிகளிலே அறிவியல் கூடங்கள், தொழிற் கல்வி வசதிகள் போதுமானதாக அமைக்கப்படவில்லை. கிராமப்புறங்களில் ஏராளமான பள்ளிகளில் அறிவியல் கூடங்களே கிடையாது. தனியார் பள்ளிகளிலே இருக்கக்கூடிய அளவுக்குக்கூட நம்முடைய அரசுத் துறையிலே நடத்தக்கூடிய பள்ளிகளிலே கிடையாது என்பதை தலைவர் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும் மாணவர்களுக்கு வைத்தியத் துறையிலே ஆய்வு செய்யக்கூடிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கூறப்படுகிறது. எதுவும் முன்னேற்றகரமாகச் செய்யப்படவில்லை. மதிய உணவுத் திட்டம் சிறப்பானதாக இருந்தபோதிலும்கூட, அதிலே செய்ய வேண்டிய சில மாற்றங்களைச் செய்யாமல் அப்படியே அவைகள் நடந்து வருகின்றன. அதிலே பல மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் இருந்தும்கூட, செய்யப்படாமலேயே இருக்கிறது. குழந்தைகளுக்காக வசதிகள் செய்து கொடுப்பதில் குழந்தைகள் காப்பகம் என்ற கூட்டு மன்றங்களிலே ஒரு கொட்டகைகூட கிடையாது. மரத்தடியிலே வைத்து நடத்துகிறார்கள். அவைகளுக்கெல்லாம் வசதி கிடையாது. கல்வித் துறையிலே வசதியற்ற ஒரு சூழ்நிலை தமிழ் நாட்டில் எங்கு பார்த்தாலும் இருக்கும்பொழுது, அதற்காகச் செலவு மட்டும் 124 கோடி ரூபாய் என்று அரசு கூறியிருக்கின்றது. அதிகமான செலவு செய்கின்றோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை இந்த மாநிலத்திலே நாம் காண முடியவில்லை. நிர்வாகத்திலே பல சீர்திருத்தங்கள் செய்வதாகக் கூறி, நிர்வாகச் செலவை கண்டபடி உயர்த்திக் கொண்டே போகிறார்கள். பொதுவாக ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதை நான் ஆட்சேபிக்கவில்லை. சம்பளத்தை உயர்த்தி அதன் மூலமாக செலவு உயருமானால், அதைத் தனியாக வைத்திருக்க வேண்டும். காலத்திற்கேற்றவாறு தரத்தை 'உயர்த்துவதற்கான செலவை எதிர்பார்த்து அதற்கேற்ற நிதியை ஒதுக்கியிருக்க வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 4-50)

பள்ளிக் கட்டடங்களுக்கென பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு 75 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது போதுமானதாக இல்லை. பல பள்ளிக் கூடங்கள் அடிப்படை வசதி இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையிலும் 57 கோடியே 67 இலட்சம் ரூபாய் இந்த அரசு செலவு செய்கின்றது. இதில் பெரும்பான்மையான பணம், தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையிலே, கூட்டு மன்றத்தைச் சார்ந்ததாகவே இருக்கின்றது. கூட்டு மன்றத் துறைக்கு மட்டும் 42 கோடியே 21 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு அரசு தொடக்கக் கல்விக்காக மானியமாக வழங்கியிருக்கின்றது. பஞ்சாயத்து கூட்டு மன்றம் தன்னுடைய செலவாக இதில் சேர்த்து செலவு செய்யக்கூடிய தொகையைப் பார்த்தால், ஏறத்தாழ '70 கோடி ரூபாய்க்கு 'மேலாக இந்த ஆரம்பக்

கல்விக்குச் செலவழிக்கப்படுகிறது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், ஒரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆரம்பக் கல்வி அதிகமாக கூட்டு மன்றத்தினுடைய நேரடிப் பார்வையிலே நடக்கின்றது. அரசும் தொடக்கக் கல்விக்காக ஒரு சிறிய தொகையைச் செலவு செய்கின்றது. தொடக்கக் கல்விக்காக அரசு ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாயைச் செலவு செய்கிறது. அரசு சாதாரணமாக தொடக்கக் கல்வியை நடத்த வேண்டியது அவசியமா என்று நான் கேட்க ஆசைப்படுகின்றேன். அரசு தொடக்கப் பள்ளிப் பொறுப்பு முழுவதையுமே பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திடமோ, ஸ்தல ஸ்தாபனத்தினுடைய உள்ளாட்சித் துறையிடமோ கொடுத்து விடலாமென்று நான் கூறுகின்றேன். ஏனென்றால் அதிலே பெரிய ஆய்வு செய்ய வேண்டிய விஷயங்களோ அல்லது 'டெக்னிக்கல் மேட்டர்'களோ ஒன்றும் இல்லை. ஆதலால் 5-வது வகுப்பு வரையிலும் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு சாதாரண விஷயத்தில் உள்ளாட்சித் துறை கவனம் செலுத்துகின்ற முறையிலே அதனிடம் பொறுப்பை விட்டு விட்டு இதிலே அரசு தலையிட வேண்டிய அவசியமில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பொதுவாக ஆரம்பக் கல்வி பூராவும் உள்ளாட்சித் துறையினுடைய நேரடிப் பார்வையில் நடக்க வேண்டுமென்ற ஒரு நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமேயானால், அது நல்லபடியாக இருக்க முடியும். உயர்நிலைக் கல்வியை அரசாங்கம் நடத்திக்கொள்ளலாம். கல்லூரிக் கல்வியை அரசாங்கம் நடத்திக் கொள்ளலாம். ஆனால் சாதாரணமான உயர் தொடக்கப் பள்ளியினுடைய நிர்வாகத்தை ஸ்தல ஸ்தாபனத்திடமே பூரணமாக ஒப்படைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தனியார் நிறுவனங்கள் பல ஆரம்பப் பள்ளிகளை நடத்துகின்றன. அதையும் இந்த ஸ்தல ஸ்தாபன இலாகாவேதான் ஏற்று நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தனியார் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசாங்கம் 9 கோடியே 25 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்குகிறது. தனியார் துறையை நான் வரவேற்கக் கூடியவனல்ல என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை, தனியார் துறையால் நடத்தப்படுகின்ற பல நிறுவனங்கள் பல தவறுகளைச் செய்வதாக இந்தச் சபையிலே பல உறுப்பினர்கள், ஆசிரியர் தொகுதிகளிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள்

உட்பட, கூறுகின்றார்கள். நானும் ஒரு கூட்டு மன்றத்தினுடைய தலைவனாக இருக்கின்ற காரணத்தால், நானும், தனியாரால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் பலவிதமான தவறுகள் நடக்கின்றன என்று கூறுகின்றேன். பொதுவாக ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது, அவர்களிடமிருந்து முன்னதாகவே ராஜிநாமா கடிதம் வாங்கி விடுகின்றார்கள். அவர்களுக்குச் சம்பளம்கூட சரியாகக் கொடுப்பது கிடையாது. இப்படிப் பலவிதமான கோளாறுகள் தனியார் துறையில் இருக்கின்றன. ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், அது ஒரு பெரிய துறையும் அல்ல, ஒரு பெரிய நிர்வாகமும் அல்ல. ஆரம்பக் கல்வி தனியாரிடம் இருக்க வேண்டாம், அரசாங்கத்திடமும் இருக்கவேண்டாம் என்ற முறையில், உள்ளாட்சித் துறைக்கு இந்த அரசு ஒரு குறிப்பிட்ட நிதியை நிர்ணயித்து, அதைப் பூராவும் உள்ளாட்சித் துறையின் பொறுப்பிலே விட்டு விட்டால், நலமாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஆரம்பக் கல்வியில் பெரிய ஒரு மாற்றமும், நல்ல சீர்திருத்தமும் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், 90 சதவிகிதத்துக்கு மேலாக இன்றைக்கு ஆரம்பக் கல்வியிலே மாணவர்கள் பயிலுகின்றார்கள் என்று சொன்னால், அந்தப் பெருமை பூராவும் உள்ளாட்சித் துறைக்குச் சேருமே தவிர, வேறு யாருக்கும் போய்ச் சேராது என்பதை நான் கூறிக்கொள்கின்றேன். இவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் பட்டு ஆரம்பக் கல்வியினுடைய உயர்வுக்காக பாடுபட்ட உள்ளாட்சித் துறையிடம் ஏன் இந்த ஆரம்பக் கல்விப் பொறுப்பை ஒப்படைக்கக் கூடாது? இதிலே என்ன தவறு என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உள்ளாட்சித் துறைக்கு அரசு போதிய அதிகாரங்களையோ மதிப்போ கொடுக்காத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. இன்றையதினம் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால்கூட, ஆசிரியர்களை ஓரிடம் விட்டு வேறிடம் மாற்றும் அதிகாரம் உள்ளாட்சித் துறைக்குக் கிடையாது. அரசாங்கத்தினுடைய மானியத்தைப் பெற வேண்டுமென்று சொன்னால்கூட, உள்ளாட்சித் துறையானது தங்களுக்கு சட்டபடி கொடுக்கப்பட்ட மானியத்தை டி.இ.ஓ.-க்கு அனுப்பி, அவருடைய 'கவுண்டர் சிக்னேச்சர்' வாங்கி அதன் பிறகு டி.டி.ஓ.-க்குப் போய், அவருடைய ஒப்புதலைப் பெற்று அப்புறம் இங்கே கொண்டுவந்து சேர்க்கிறார்கள். இவ்வாறு கூட்டு மன்றங்களும், உள்ளாட்சித் துறையும் எந்தச் சிறு விஷயமாக இருந்தாலும் சரி, மானியங்களைப் பெறுவதிலும் சரி, நிர்வாகம் நடத்துவதிலும் சரி, எல்லா விஷயங்களிலும் ஒரு கட்டுப்பாட்டை வைத்து அதை இயங்க முடியாமல் செய்துகொண்டு வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஆசிரியர்களை மாற்ற வேண்டுமென்ற அதிகாரம் உள்ளாட்சித் துறையிலே இருக்கிறவர்களுக்கு

வேண்டுமென்று பல ஆண்டு காலமாகக் கேட்டுக்கொண்டு வருகின்றார்கள். ஆனாலும் எந்தவிதமான வாய்ப்பும் இந்த அரசால் இதுவரை அளிக்கப்படவில்லை. அது போகட்டும் என்று சொன்னால்கூட, ஒரு ஆசிரியர் ஒரு கூட்டு மன்றத்திலிருந்து இன்னொரு கூட்டு மன்றத்துக்கு வர வேண்டுமென்று சொன்னால், இரண்டு யூனியன்களும் ஒரு தீர்மானம் போட்டு, கலெக்டருடைய அனுமதி கிடைத்து விட்டால், தாராளமாக மாற்றல் வாங்கிப் போய்க்கொண்டிருந்தார். இதெல்லாம் இடர்ப்பாடுள்ள விஷயங்கள். ஏதோ ஆசிரியர் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்பதற்காக நான் இதைக் கூறவில்லை. ஒரு ஆசிரியருடைய மனைவி இன்னொரு கூட்டு மன்றத்திலே வேலை செய்யலாம். அப்படி வேலை செய்யும்போது அந்த ஆசிரியரின் மனைவி தனக்கு மாற்றம் வேண்டி கூட்டு மன்றத்திற்கு விண்ணப்பம் செய்யும் ஒரு இயல்பான சூழ்நிலையிலேகூட, அதைச் செயல்படுத்த முடியாத ஒரு நிலைமை இன்றையதினம் இருக்கிறது. இன்றையதினம் புதிய புதிய சட்டங்கள் போட்டு எந்தவிதமான அதிகாரமும் கூட்டு மன்றங்களுக்கு இல்லாத ஒரு நிலை ஏற்பட்டுக்கொண்டு வருவதோடு எல்லா அதிகாரங்களையும் கல்வித் துறையே எடுத்துக்கொள்ளும் ஒரு நிலை வந்துகொண்டிருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 124 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதில் ஏறத்தாழ 70 கோடி ரூபாய் கூட்டு மன்றங்கள் மூலமாக இந்தக் கல்வித் துறைக்குச் செலவு செய்யப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு துறை இன்றையதினம் எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கின்றேன். ஆகையால் முன்னர் நான் கூறியதுபோல், கூட்டு மன்றங்களிடத்திலே ஆரம்பக் கல்விப் பொறுப்பை முழுமையாக ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஆரம்பக் கல்விக்கென்று அரசாங்கத்தால் மானியமாக 58 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், அந்த 58 கோடி ரூபாயையோ அல்லது அதற்குக் கூடுதலாகவோ குறைவாகவோ ஒரு குறிப்பிட்ட தொகையை ஆர்.டி.எல்.ஏ. துறையினிடத்தில் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கொடுக்கும்போது, ஐந்தாவது வகுப்பு வரையிலுள்ள நிர்வாகத்தைக் கொடுத்தால் போதும். அதற்கு மேலுள்ள வகுப்புகள் வேண்டாம். அதில் கூட பல கஷ்டங்கள் இருக்கின்றன என்று கூறிக்கொள்கிறேன். இந்த நிலையிலே இதை ஒரு தனி நிர்வாகமாக வைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பள்ளிக் கூடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால் 20 ஆயிரம் ரூபாய் வரை ஒரு கூட்டு மன்றத்துக்கு வழங்குகிறார்கள். இது போதுமானதாக இல்லை. 20 ஆயிரம் ரூபாயைக் கொண்டு ஒரு கூட்டு மன்றம்

ஒரு ஆண்டுக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால், சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரண சிறு கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று சொன்னால்கூட, இன்றையதினம் 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆனால் உயர் துவக்கப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொன்னால், 60 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகின்றது. இப்படி ஒரு கட்டடம் கட்டுவதற்குப் போதுமான தொகையைக்கூட இந்த அரசால் கொடுக்க முடியவில்லை. அதற்குத் தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. அந்த நிலையையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்ப உயர் தொடக்கப் பள்ளிகளை பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் நடத்துகின்றன. அதே நேரத்திலே அரசாங்கம் உயர்நிலைப் பள்ளிகளை நடத்துகின்றது. ஆரம்ப உயர் தொடக்கப் பள்ளிகளிலே 6-வது, 7-வது, 8-வது வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவை உயர்நிலைப் பள்ளிக்குச் சமமானதாக இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் படிப்பதற்குண்டான வாய்ப்புகளையும் வசதிகளையும் பார்ப்பீர்களானால், அங்கு கணித ஆசிரியர்கள் இருக்கிறார்கள், தமிழ் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள், பி.டி. ஆசிரியர்கள் இருக்கின்றார்கள், இவ்விதமாக பலவிதமான வாய்ப்புகளும் வசதிகளும் உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்திலே ஒரு ஆரம்ப உயர்நிலைப் பள்ளியை பஞ்சாயத்துக் கூட்டு மன்றமோ, நகராட்சியோ நடத்துமானால், அந்தப் பள்ளிக்கு இந்தவிதமான வசதிகளும் வாய்ப்புகளும் கொடுக்கப்படவில்லை. பி.டி. ஆசிரியர்களைக் கொடுப்பதாகக் கூறுகின்றார்கள், ஆண்டுக்கு ஒரு ஆசிரியர் என்று சொல்லுகிறார்கள். ஏதோ ஒரு பள்ளியில் போட்டோம் என்ற பெயர்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, நிரந்தரமாக ஒரு யூனிட்டாக இருக்க முடியவில்லை. ஐந்தாவது வகுப்பு வரை இப்படிப்பட்ட ஒரு கல்வி இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்புமேயானால், அதையே தனியார் நடத்தினாலும் சரி, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் நடத்தினாலும் சரி, அரசாங்கம் நடத்தினாலும் சரி, எங்கே போனாலும் 5-ம் வகுப்பு வரைக்கும் உண்டான பாடத் திட்டங்கள் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும். அதே போல 6-வது வகுப்பு இருக்கிறது என்று சொன்னால் அது அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும் சரி, தனியார் துறையிலே இருந்தாலும் சரி, உள்ளாட்சித் துறையிலே இருந்தாலும் சரி அந்த 6-வது வகுப்புப் பாடம் ஒரு உயர்நிலைப் பள்ளியிலே எப்படிக் கற்றுக்கொடுக்கப்படுகிறதோ அதே நிலையில்தான் மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். அந்த நிலை இப்பொழுது இல்லாதது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அந்த ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நம் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். ஓரளவுக்கு ஏற்படுத்திக்கொண்டு வருகின்றோம், கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக, மாற்றிக்கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறார்கள்.

படிப்படியாகச் செய்யக்கூடிய வேலையல்ல இது. இது உடனடியாகச் செய்யப்படவேண்டிய வேலை. இதிலே ஒரு பெரிய மாற்றம் வேண்டும். கல்வித் துறையிலே பெரிய செலவாகின்றது என்று சொல்லுகின்றார்கள். எப்படிச் செலவாகின்றது? எதற்காகச் செலவாகின்றது? நிர்பந்தத்தினால் செலவு செய்யப்படுகின்றது. ஒரு போராட்டம் நடத்தி விட்டால், அதிலே ஊழியர் சம்பளத்தை உயர்த்தினால், 10 கோடி ரூபாய் அல்லது 5 கோடி ரூபாய் செலவு வருகிறது. இப்படியாக நிர்பந்தப்படுத்தி படுத்தி இன்றைக்கு 124 கோடி ரூபாய்க்குப் போய்விட்டதே தவிர, கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு ஆராய்ந்து பார்த்திருக்கின்றார்களா என்று பார்த்தால், அந்த நிலை இல்லை என்பதை நான் கூறிக்கொள்கின்றேன். ஆகையால் மாநிலம் பூராவுக்கும் எந்த வகுப்பாக இருந்தாலும் சரி, அதை யார் நடத்தினாலும் சரி, வகுப்பு நடத்தப்படுவதற்கான எல்லா விதமான வாய்ப்புகளும் வசதிகளும் ஒரு இடத்தில் எப்படி அளிக்கப்படுகிறதோ அதையே எல்லா இடங்களிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். பள்ளிக்கூட ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை நான் பேசுகின்றேன். சாதாரண கூட்டு மன்றங்களாலே பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டு இன்றைய தினம் அவைகள் எல்லாம் திறந்த வெளியிலே நடக்கின்றன. தடுப்புச் சுவர் எடுக்கக் கூடாது. முள் கம்பி போடக் கூடாது. இப்படி எல்லாம் உத்தரவிட வேண்டுமா? ஒரு சின்ன கட்டடம் கட்ட 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்றார்கள். பல தனியார் துறைகள் அரசாங்க மானியம் வேண்டாமென்று சொல்லுகின்றார்கள். ஏனென்று கேட்டால், பெரிய பிடுங்கலாக இருக்கிறது, ஓயாமல் இன்ஸ்பெக்ஷன் என்கிறார்கள், ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்றெல்லாம் கல்வித் துறையிலும் கூறுகின்றார்கள், மருத்துவத் துறையிலும் கூறுகின்றார்கள்.

(பிற்பகல் 5-00)

ஒரு பள்ளிக் கூடத்தைக் கட்டினால், அதற்கு வேலி எடுக்கக் கூடாது, காம்பவுண்டு எடுக்கக் கூடாது என்று உத்தரவு போடுகிறார்கள். கூட்டு மன்றத்தில் இருக்கிறவர்கள் அதை ஏன் செய்யக் கூடாது என்கிறார்கள். கூட்டு மன்றத்தின் பொது நிதியிலிருந்து செய்யலாம் என்றால், அரசாங்க ஆணை, எடுக்கக் கூடாது என்று இருப்பதாகச் சொல்லுகிறார்கள். பல கிராமங்களில் பள்ளிக் கூடங்களுக்குப் பக்கத்தில் குடிசைகள் போட்டுக்கொண்டு ஆக்கிரமிப்பு செய்து விடுகிறார்கள். சாதாரணமாக தெருவில் போகிறவர்கள் எல்லாம் பள்ளிகளில் தங்குகிறார்கள். பலவிதமான தவறான காரியங்கள் நடக்கின்றன. அதற்காக ஒரு வாட்ச்மேன் போட முடியாது. மான்யம் கொடுக்க வசதி இருந்தால் கொடுக்க வேண்டும். அதற்காக இப்படிப்பட்ட உத்தரவு போடக்

கூடாது. யாரிடமும் வசூல் செய்து நடத்த முடியவில்லை. அப்படி ஏதேனும் செய்ய வேண்டுமென்றால்கூட, கமிஷனர், மற்ற அதிகாரிகள் 'எஸ்டிமேட்' தயாரிக்க மாட்டேன் என்கிறார்கள். ஆகவே இம்மாதிரி சிறு சிறு உத்தரவுகள் போடுவதால், நிர்வாகச் சீர்குலைவு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடக்க நிலைக் கல்விக்கு ரூபாய் 38 கோடியே 78 லட்சம் செலவிடுவதாகச் சொல்லுகிறார்கள். உயர்நிலைப் பள்ளிகள் ஏறத்தாழ 2,882 இருக்கின்றன என்று சர்க்கார் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பள்ளிகளில் 50 சதவிகிதத்திற்குத்தான் கட்டிடம் இருக்கிறது. ஐம்பது சதவிகிதத்திற்குக் கிடையாது. கிராமங்களில் உள்ள பெரியவர்கள் எப்படியோ முயற்சி செய்து உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வாங்கி விடுகிறார்கள். ஆனால் அவற்றிற்குக் கட்டிடம் கிடையாது. பள்ளிக்கூடத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு வசதியில்லை. பல ஆண்டுகளாக இந்த நிலையிருக்கிறது. சாதாரணக் கொட்டகைகளில் உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றிற்கு இதுவரை கட்டிடம் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படாத நிலையிருக்கிறது. 50 சதவிகிதப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம் இல்லாத நிலையில், இங்கே கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது என்று எப்படிக் கூற முடியும்? ஆகவே, உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், அவைகளுக்கு ஒரு நல்ல நிலையை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதற்குச் சர்க்காரின் நேரடியான கவனம் தேவையாகும்.

தனியார் துறையில் இருக்கும் பள்ளிக்கூடங்கள் நல்ல விதமாகவும் கட்டுப்பாடான முறையிலும் எல்லா வசதிகள் உடையதாகவும் நடைபெறுகின்றன என்று பொதுவாகக் கூறப்படுகிறது. அரசாங்கம் நடத்துகிற சென்னை மாநகராட்சி போன்ற முக்கியமான நகரங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் வேண்டுமானால், எல்லா விதமான வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கலாம். கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைப் பார்த்தால், அங்கே கட்டிடம் கிடையாது, மாணவர்களுக்கு டெஸ்க் கிடையாது, ஆசிரியர் உட்காருவதற்கு சேர் கிடையாது, ஆய்வுக்கூடம் இருக்காது. ஒன்றுமே இல்லாத நிலையிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து நன்கொடை என்று வசூலித்து இம்மாதிரிக் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். அல்லது அரசாங்கமே கல்விக்காக 124 கோடி ரூபாய் என்று ஒதுக்கும்போது, மேலும் 10 அல்லது 20 கோடி ரூபாய் கட்டிடங்களுக்கு, ஆய்வுக்கூடங்களுக்கு என்று ஒதுக்கலாம். 75 ஆயிரம் ரூபாய் சாதாரணமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு கட்டிட வசதிக்காக ஒதுக்கப்படுகிறது என்ற நிலையிருந்தும்கூட, 50 சதவிகிதப் பள்ளிக்கூடங்கள், கட்டிடம் இல்லாமலே நடைபெறுகின்றன. இந்த நிலையைப்

பார்க்கும்போது, 14 லட்சம் ரூபாய் அரசாங்க உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் போர்டு பள்ளிக் கட்டிடத்திற்கு என்று 18 லட்சம் ரூபாயும், நகராட்சி என்றால் 7 லட்சம் ரூபாயும் மான்யமாக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தும் பிரயோஜனம் இல்லாத நிலைதான் இருக்கிறது. கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் இல்லை. ஊர்தியில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக் கூடங்கள் மூலமாக ஒவ்வொரு இடத்திற்கும் சென்று பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருப்பதாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் கல்வி வசதியை விரிவாக்க வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதற்கான முறையில் வாய்ப்பு வசதிகளை, ஆய்வுக் கூடங்களை அங்கே அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூடுமான வரையில் இந்த உயர்நிலைப் பள்ளிக்கூடங்களையெல்லாம் அரசாங்கம் எடுத்து நடத்துவது என்றால், கஷ்டமான காரியம் என்று கூறிக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நிறையப்பேர் அதுபற்றிப் பேசுவதற்கு இருக்கிறார்கள். பொதுவாக கல்லூரிகளில் அமைதி இல்லை. அமைதியான சூழ்நிலையை அங்கே அரசு ஏற்படுத்த வேண்டும். அரசியல் காழ்ப்பு உணர்ச்சிகளுக்கு அங்கே இடம் கொடுக்கக் கூடாது. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள், அங்கு பிறந்தவர்கள். முன்பு தொழில் அமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள். பட்டுக்கோட்டைக்கு கல்லூரி வேண்டும் என்று கேட்கும்போது அங்கே ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள், வக்கீல்கள் சங்கத்தில் பேசும்போது சொன்னார்கள். கலெக்டரைக் கொண்ட கமிட்டி ஒன்றும் போட்டார்கள். வசூல் செய்தார்கள். எல்லாம் செய்தார்கள்; ஆனால் என்ன காரணத்தாலோ அங்கே கல்லூரி கொண்டு வரவில்லை. 183 கல்லூரிகள் தமிழ் நாட்டில் 'ஜே, ஜே' யென்று இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் பிறந்த ஊராக இருந்தும், நிச்சயம் ஏற்படுத்துவதற்கு வகை செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்தும் கல்லூரி வரவில்லை . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்லூரி அமைப்பதற்கான நிபந்தனைகளை அப்போதே சொன்னேன். 40 ஏக்கர் இட வசதியும் 5 லட்ச ரூபாய் பணமும் வசூலித்துக் கொடுக்க வேண்டும் என்று சொன்னேன். கடந்த மூன்று ஆண்டுகளாக அதற்கான எந்த முயற்சியும் நடக்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வசூலிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டோம். எல்லோரும் இதற்கு முயற்சி எடுங்கள் என்று 5 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னேன். இந்த ஆண்டில் இனிமேல் கல்லூரி புதிதாக எதுவும் வேண்டாம் என்ற முடிவு எடுத்த பிறகு, இப்போது அந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பிறந்த ஊராக இருப்பதால், எப்படியாவது கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிச் செய்தால், பாரபட்சம் காட்டுகிறேன் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாவேன் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவர் அவர்களே, ஒரு அமைச்சர் முயற்சி எடுப்பது குற்றம் என்றால், யார்தான் முயற்சி எடுப்பார்கள்? அமைச்சர் அவர்கள்தான் முயற்சி எடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்களிடம் திருவாரூரில் கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். உடனே மடாதிபதிகள் பணம் கொடுத்தார்கள். யார் யாரோ வசூல் செய்து கொடுத்தார்கள். 5 லட்சத்துக்கு மேல் போய், மிச்சம்கூட இருந்தது. அமைச்சர் அவர்கள் வந்து இருந்து, தகுதியுடையவர்கள் கொடுங்கள் என்றால் யார்தான் நன்கொடை கொடுக்க மாட்டார்கள்? இதிலே அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்ன காரணத்தாலோ நடைபெறவில்லை. காரணம் சரியோ தவறோ, அதற்குள் நான் போகவில்லை. கல்வி அமைச்சர் அவர்களுடைய பதவிக் காலத்தில் முயற்சி எடுத்து பட்டுக்கோட்டையில் ஒரு கல்லூரி ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, எனக்குக் கொடுத்த நேரத்தை என்னால் முடிந்த அளவில் பயன்படுத்திக் கருத்துக்களை கூற வாய்ப்புக் கிடைத்ததற்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி வளர்ச்சி அறிக்கை குறித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்ததற்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வருஷம் ஸ்கூல் எஜுகேஷனில், 2 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதுகிறார்கள். நாம் கல்விக்காகச் செலவிடும் தொகை, திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னது போல், 124 கோடி ரூபாய்க்குப் போய்விட்டது. கிட்டத்தட்ட நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் 4-ல் ஒரு பங்கு கல்விக்குச் செலவு செய்கிறோம். அப்படிச்

செலவழித்தும், படித்து வெளியே வருகிற மாணவர்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்பு இருக்கிறதா என்றால், அதற்கு எந்தவிதமான இடமும் இல்லை. வேலை வாய்ப்புக்கான முறையில் நம் கல்வித் திட்டம் அமைந்திருந்தால், இந்தத் தொந்தரவு இல்லை. 'கோத்தாரி' கமிஷன் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி நாங்கள் 19 கல்லூரிகளில் பயிற்சி கொடுத்து வருகிறோம் என்கிறார்கள். 1975-76-ல் இன்னும் விரிவுபடுத்தப்போகிறோம் என்று சொல்லு

(பிற்பகல் 5-10)

கிறார்கள். உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எடுத்துச் சொல்லவில்லை, நானும் கல்லூரி என்றே குறிப்பிட்டுக்கொண்டிருக்கின்றேன். தவறு இருந்தால் எடுத்துக் கூறவேண்டும். ஆகவே இதற்குப் பதிலாக, 'உயர் நிலைப் பள்ளி' என்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதிலே பத்தொன்பது உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவை தனியார் பள்ளிக்கூடங்களா அல்லது அரசுப் பள்ளிக்கூடங்களா என்று தெரியவில்லை. எதுவாக இருந்தாலும், இப்படி உயர்த்தப் பட்டிருப்பதுபற்றிச் சந்தோஷம்தான். இன்னும் இப்படி எவ்வளவு பள்ளிக்கூடங்களை உயர்த்தப் போகிறோம் என்று சொல்லலாம். நூற்றுக்கு நூறு பள்ளிக்கூடங்களையும் இப்படி உயர்த்தலாமா என்று பார்க்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது என்று எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இன்றைக்கு இவ்வளவு கோடி ரூபாயை கல்விக்காக, மொத்தத்தில் கால் பங்கிற்குச் செலவழிக்கிறோம். பலன் என்ன என்று பார்த்தால், சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?

முன்பெல்லாம் ஆசிரியர்கள் வீட்டிற்குப் போய் இருந்து மாணவர்கள் கற்று வந்தார்கள். ஆசிரியர்களே அவர்களுக்குச் சாப்பாடு போட்டு கல்வி கற்றுக் கொடுத்தார்கள் என்று சரித்திரத்தில் படிக்கிறோம். அவர்கள் படித்துத் தேறிய பிறகு, தங்களுடைய ஆசிரியர்களுக்குத் தக்க சன்மானத்தைக் கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம். ஆனால் இப்போது ஆசிரியர்களுக்கு இவ்வளவு சம்பளத்தைக் கொடுக்கிறோம். ஆனால் நல்ல தரத்திற்குப் பிள்ளைகளைக் கொண்டு போக முடியவில்லை. மாணவர்கள் தரமுள்ளவர்களாக இருக்கின்றார்களா என்பது சந்தேகத்துக்கு இடமாக இருக்கின்றது.

பள்ளிக்கூடங்களுக்குப் போதிய கட்டிடங்கள் இல்லை என்று நமது திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். அவர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர். நான் நகராட்சியின் தலைவர். எனவே நான் நகராட்சிப் பள்ளிக்கூடங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாம் கல்விக்காக ரூ. 124

கோடியை நமது வரிப் பணத்திலிருந்து செலவழிக்கிறோம். அப்படிச் செய்தும் மொத்தப் பள்ளிக்கூடங்களிலே ஐம்பது சதவிகிதப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் இல்லை என்ற நிலைமைதான் இருக்கின்றது. ஏராளமான பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். இதிலே மொத்தத்தில் நகராட்சிப் பள்ளிக்கூடங்களுக்கான கட்டிடங்களுக்காக கட்டிட மானியமாக ரூ. 7 லட்சம். இதிலே உதவி பெறும் பள்ளிக்கூடங்களையும் சேர்த்து ரூ. 7 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உயர்நிலைப் பள்ளிகளுக்காக ரூ. 14 லட்சம் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் காலத்திலே செங்கல்லும் சிமெண்டும் விற்கும் விலையில், இப்படி ஒதுக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு பள்ளிக்கூடங்களுக்குப் போதும் என்று யோசிக்க வேண்டும். ரொம்பவும் சொற்பத் தொகையாக இருக்கின்றது. இதைப் போலவே தொடக்கப் பள்ளிகளுக்காக ஒதுக்கப்பட்டதும் மிகவும் கம்மியாக இருக்கின்றது. நாலு லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இது மிகவும் குறைவாகும். இந்தத் தொகையிலே எவ்வளவு பள்ளிக்கூடங்களைக் கட்டிவிட முடியும்? சர்க்காருடைய பாலிஸி பி.யு.ஸி. வரையில் இலவசக் கல்வி என்று இருக்கிறது. வரவேற்கத் தக்கதுதான். இன்னும் டிகிரி வரையிலேயே இலவசம் என்று சொல்லிவிடலாம். முன்பும் சொன்னோம். இப்போதும் சொல்லுகிறோம். கொடுக்கிறதைக் கொடுக்கிறோம், மேலும் இரண்டு மூன்று வருஷங்களுக்கு இலவசமாகவே கொடுத்துவிடலாம். இதிலே பல தொந்திரவுகளும் குறையும். இப்போது இந்தப் பிரிவினருக்கு உண்டு, அவர்களுக்கு இல்லை என்று சொல்லிக் கணக்குப் பார்ப்பதெல்லாம் போய்விடும். கல்லூரிகளைப் பொறுத்தவரையில், இரண்டு மடங்கு மானியத்தை அவர்கள் கொடுத்து விடுகின்றார்கள். ஒரு பங்கைத்தான் நாம் கொடுக்கிறோம். இதையும் கொடுத்து விடலாம். கொடுக்க வேண்டும். இப்போது பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி என்று சொல்லிவிட்டு, நகராட்சிப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில், எப்படி இருக்கிறது என்றால், நாங்கள் ஒரு லட்சம் வசூல் செய்தால், அவர்கள் ஒரு லட்சம் கொடுக்கின்றார்கள். ஆனால் இதற்காக நாங்கள் 30 சதவிகிதம் வரி என்று வசூலிக்கும்போது, அது 'டபிள் டேக்ஸ்' ஆக வருகிறது. கல்வி அமைச்சர் அவர்களையே கேட்டுக்கொள்ளுகிறேன். கல்விக்காக இவ்வளவு பெர்ஸெண்டேஜ் என்று வசூல் செய்கிறோம். இதற்குப் பிறகு 'கிராண்டு' என்று கொடுக்கும்போது, இவ்வளவு காலமாக அது அதிகமாக இருந்தது. இப்போது அதைக் குறைத்திருக்கின்றார்கள். இருந்தாலும் இது இரண்டு வரியாக மாறுகிறது. ஒரு பக்கத்தில் 'ஃப்ரி எஜுகேஷன்' என்றும் இன்னொரு பக்கத்தில் அதற்கு வரி என்றும் இருக்கிறது. ஆகவே இதை ஒழுங்குபடுத்தி கல்வி வரி இவ்வளவு என்று போட்டிருக்கிறோம், அதை வசூல் செய்து, பாக்கி உள்ளதை ஃப்ரீயாக ஆக்கிவிடுங்கள். இதைச் செய்து விடுங்கள். ஒரே நகராட்சியில், தனியார் பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு கொடுக்கப்பட்டு

விடுகிறது. அவர்கள் என்ன என்ன கணக்கு எழுதினாலும் கொடுத்து விடுகின்றார்கள். அவர்கள் என்னென்ன எழுதுகின்றார்கள் என்பதைப்பற்றிச் சொல்லத் தயாராயில்லை. ஆனால் பாக்கி உள்ள நகராட்சிகளுக்கு அந்த மாதிரிக் கொடுக்கப்படுவதில்லை. இப்படி விரும்பத்தகாத நிலை இருக்கிறது. இதிலும் பற்றாக்குறை நகராட்சிகளுக்குத்தான் அதிகமாக இருக்கிறது, அத்துடன் பற்றாக்குறை நகராட்சிகள்தான் அதிகமாக இருக்கின்றன. பற்றாக் குறை எங்கேயும் இருக்கிறது. அதிலும் நகராட்சியில் அது மிக அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய நிதியில் இப்படிக் கல்விக்காக அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும்போது நகர மக்களுக்காக, சுகாதாரத்திற்காக அதிகமாகச் செலவழிக்க முடியவில்லை.

அடுத்து, சென்னையில் எங்கே பார்த்தாலும் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்ஸ் ஒரு பக்கம், கேம்பிரிட்ஜ் அது இது என்று போட்டுக்கொண்டு நடத்துகின்றார்கள். அதே பிரகாரம் எங்கே பார்த்தாலும் கான்வெண்டுகள் ஜில்லாத் தலைநகரங்களிலே. இல்லையென்றால் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்ஸ். வசதி உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை அங்கேதான் அனுப்ப பிரியப்படுகின்றார்கள். இவ்வளவு ரூபாய் செலவழித்தும் நமது பள்ளிக்கூடங்களுக்கு வசதி இல்லாதவர்களுடைய பிள்ளைகள்தான் போகின்றார்கள். நமது குழந்தைகள் இங்கேதான் போய்த் தீர வேண்டும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, நமது அரசின் நோக்கமே வசதி இல்லாதவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்க வேண்டும் என்பதுதான். வசதி உள்ளவர்கள் அங்கே போனால், இங்கே உள்ளவர்களுக்கு நாம் அதிக வசதியைக் கொடுக்க முடியும். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை எதிர்க்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஒய். வேங்கடேஸ்வர தீக்ஷிதர் : அமைச்சர் உத்தியோகத்தில் இருந்து கொண்டு சொல்ல வேண்டியதை உறுப்பினர் பாதி பார்த்துவிட்டார். அவர் சொல்ல வேண்டியதை இவர் சொல்லுகின்றார். நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்று சற்றுப் பொறுமையாக இருந்து பார்த்திருக்க வேண்டும். வசதி உள்ளவர்கள் அங்கே நிறையப் பணத்தைக் கொடுத்துப் படிக்கின்றார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் நான் சொல்ல வந்தது, மோகம் அங்கேதான் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டத்தான். இவர்களுக்கும் பணம் இருந்தால், அங்கேதான் போவார்கள் என்ற அந்தக் கருத்தைத்தான் சொல்ல வந்தேன். சிறு வயது, அவசரப்பட்டுவிட்டார். நம்மைப்போல வயதானவர்களாக இருந்தால், பொறுமையாகக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். எல்லோருக்கும் இங்கிலீஷ் மீடியத்தில்தான்

விருப்பம் இருக்கிறது. இங்கே சென்னை மாநகரத்தில் பாருங்கள். ஏழடிக்கு, பத்தடிக்கு ஒரு இங்கிலீஷ் மீடியம் பள்ளிக்கூடம்தான். அந்தக் காலத்தில் ஏதோ ஒரு சில கிருஸ்துவ நண்பர்கள்தான் 'கான்வெண்ட் ஸ்கூல்' என்று நடத்திக்கொண்டு, முடிந்த அளவிற்கு அதற்கு மேல் நாடுகளிலிருந்து பண உதவியைப் பெற்றுக்கொண்டு, செய்துகொண்டிருந்தார்கள். இப்போது எங்கே பார்த்தாலும், எல்லோரும் நடத்துகின்றார்கள். நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று தெரியவில்லை. அரசாங்கத்திலும் இதைச் செய்து விடலாம். ஏன் அவர்கள் வீட்டுக் குழந்தைகள் மட்டும் நல்ல உடை, சட்டை என்று போட்டுக்கொண்டு சுத்தமாக இருக்க வேண்டும், இவர்கள் கிழிசலைப் போட்டுக்கொண்டு தரையில் உட்கார்ந்துகொண்டு கஷ்டப்பட வேண்டும்? இப்போது எங்கேயும் இங்கிலீஷுக்குத்தான் மதிப்பிருக்கிறது. ஏன், நமது சபையில்கூட இங்கிலீஷில் பேசினால் மதிப்பு இருக்கிறது. எங்களைப் போல தமிழில் பேசினால் கேட்கமாட்டேன் என்கின்றார்கள். இப்போது சபையில் தலைமை வீற்றிருப்பவர் அப்படி இல்லை. தமிழுக்காகப் பாடுபட்டவர். இன்னும் பாடுபடப்போகின்றவர் அவர். அவருக்காக இதைச் சொல்லுகிறேன்.

அடுத்து, கல்லூரிகள். இது ரொம்பப் பரிதாபகரமாக இருக்கின்றது. ஜூன் மாதம் என்று வந்துவிட்டால், இடம் தேடுவது என்பது அவ்வளவு பயங்கரமாகப் போய்விடுகின்றது. எல்லோரும் ஏதோ ஒரு குறிப்பிட்ட கல்லூரியில்தான் இடம் வேண்டும் என்று கேட்கின்றார்கள். அதிலும் பி.காம். ஸீட்தான் வேண்டும் என்று கேட்கின்றார்கள். இப்போது பி.காம். படிப்பிற்கு மோகம் அதிகமாகிவிட்டது. ஏழெட்டு கல்லூரிகள் இருந்தால் ஒரு ஐந்து கல்லூரிகளிலாவது மனுப் போட வேண்டியிருக்கிறது. எதிலும் இடம் கிடைக்க வில்லை என்றால், கடைசியில் கவர்ன்மெண்டு நடத்தும் கல்லூரிக்கு வருகின்றார்கள். அதிலும் தமிழ் மீடியம் என்றால், அப்படியே 50 சதவிகிதம் உடம்பு இளைத்துப் போய்விடுகின்றது. கல்லூரி விஷயத்தில் நான் ரொம்ப அனுபவப் பட்டுவிட்டேன். அதிலும் தமிழ் மீடியம் என்றால், இனி இருக்கலாமா வேண்டாமா என்றுகூட எண்ண ஆரம்பித்து விடுகின்றார்கள். நான் என்ன சொல்லுகிறேன் என்றால், கல்லூரிகளுக்கு அட்மிஷனைப் பொறுத்தவரையில், மொத்தக் கல்லூரிகளுக்குமாக ஒரு குழுவைப் போடுங்கள். அவர்கள் தேர்ந்தெடுத்து நன்கு படிக்கின்ற பிள்ளைகள் பத்து பேர், மண்டுகள் ஒரு பத்துப் பேர் என்று இப்படிக் கலந்து போட்டால், எல்லாக் கல்லூரிகளுடைய தரமும் ஒன்றாக இருக்கும். ஒரு கல்லூரியில் மட்டும் தரம் நன்றாக இருக்கின்றது என்றால், ஏன் அப்படி? ஒரு கல்லூரியில் தரமான மாணவர்கள் எவ்வளவு பேர் சேர்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தால், அதிகமாகப் பணம் உள்ளவர்கள் தான் அந்தக் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு எல்லா வகையிலும் சிறந்த வசதி படைத்தவர்கள் குறிப்பிட்ட கல்லூரியில் சேர்ந்திருப்

பதனால்தான் அதனுடைய தரம் உயர்ந்துகொண்டே போகிறது. மற்ற கல்லூரிகளால் அந்தக் கல்லூரியினுடைய அளவுக்கு முன்னேற முடியவில்லை. எங்களது ஊரில் நாவலர் நெடுஞ்செழியன் கல்லூரி என்று ஒன்று இருக்கிறது. லெக்சரர்களுக்கும்-மாணவர்களுக்கும் உள்ள விகிதாச்சாரம் அங்கு சரியாக இல்லை. மற்ற கல்லூரிகளில் சேருமளவுக்கு மாணவர்கள் இதில் சேர மாட்டேன் என்று சொல்லுகின்றார்கள். ஆதலால் அந்தக் கல்லூரியை ஆண்களுக்கு என்று வைத்திருப்பதைவிட, அங்கு கோ-எஜுகேஷன் என்றோ இல்லையென்றால் அதைப் பெண்கள் கல்லூரியாகவோ மாற்றலாம் என்றும் நினைத்தோம். இன்றைக்கு திருச்சிராப்பள்ளியில் பெண்கள் கல்லூரிக்கு ரொம்பக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அங்கு இரண்டு பெண்கள் கல்லூரிகள்தான் இருக்கின்றது. பெண்கள் கல்லூரியில் அட்மிஷன் வாங்கவேண்டுமென்றால், மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. அங்கு நாங்கள் அட்மிஷனுக்குப் போனால், எங்களைப் போன்றவர்களுக்கு ஒன்று-இரண்டு கொடுப்பார்கள். ஆனால் எங்களிடம் சிபாரிசுக்கு வருவோர் மட்டும் ஒரு கிளாசுக்குப் போதுமானதாக இருப்பார்கள். நாங்கள் அங்கு அட்மிஷனுக்கு இரண்டு மூன்று தடவை போகவேண்டியிருக்கிறது. மூன்று தடவை போனால், ஏன் காலையிலே வந்தீர்களே, இப்போது வருகிறீர்கள் என்று சொல்லி 'நோ-வேக்கன்சி' என்று சொல்லிவிடுகிறார்கள். இந்தமாதிரிப் பிரச்சினைகள் அங்கு இருக்கின்றன. மேலும் இந்த அட்மிஷனில் குறைபாடுகள் ஏற்படாமல் நல்ல முறையில் நடக்க நாம் ஒரு குழு அமைத்து, அட்மிஷனிலே நல்ல முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மேலும் சில கல்லூரிகளிலே, இந்த செக்ஷன் தேவையில்லை, அதை மாற்றிவிட வேண்டும், அதை நீக்கிவிட வேண்டும் என்றெல்லாம் தகராறு நடக்கிறது. அதையும் நாம் நல்ல முறையில் பரிசீலித்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். மேலும் தற்போது மாணவர்கள் எல்லாக் கல்லூரிகளுக்கும் அட்மிஷன் நேரத்திலே விண்ணப்பிக்கின்றார்கள். அதை நாம் தடுக்க வேண்டும். நாம் 'அஃபிஸ்யலாக' போட்டாலும் சரி, 'நான்-அஃபிஸ்யலாக' போட்டாலும் சரி அதற்கு ஒரு தக்க கட்டுப்பாடு வைக்க வேண்டும். அப்போதுதான் இந்த மாதிரி எட்டு அப்ளிகேஷன் போட மாட்டார்கள். அதற்கு இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் விலை என்று வைத்துவிட்டாலும், எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் வாங்கி விண்ணப்பிக்கின்றார்கள். அப்படிப் போடும்போது ஒருசில மாணவர்கள் போதுமான அளவுக்கு மார்க்கு வாங்கியிராத காரணத்தினால், அவர்கள் எங்காவது ஓரிடத்தில்தான் போய்ச் சேரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, வருங்காலத்தில் இந்த அட்மிஷனில் நாம் ஒரு முடிவு நிச்சயமாக எடுக்க வேண்டும். இல்லையென்றால் இந்தப் பிரச்சினை தீராது. மேலும் ஒரு இடத்தில் உள்ளவர்கள் அங்கேயே படிப்பதற்கும் ஒரு வாய்ப்பு உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். திருச்சி தேசிய கல்லூரியிலிருந்து 'பிலாசபியை' எடுப்பதற்கு அங்கு நிர்வாகக் குழு காரணமாக இருந்தது என்றும், உறுப்பினர் அவர்கள்தான் அதன் துணைத் தலைவராக இருக்கிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்கள். அதுபற்றி விளக்கம் தேவைப்படுகிறது.

திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, நான் முதலிலே நினைத்தேன். திரு. கணபதி அவர்கள் சொன்னபோதே நினைத்தேன். தவறு இருந்தால் சொல்லித்தான் ஆகவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் சொல்லித் தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தவறைப் போக்க முயற்சி உறுப்பினர் எடுத்தார்களா என்றுதான் கேட்கிறார் அமைச்சர்.

(பிற்பகல் 5-20)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவர் அவர்களே, இந்த நிமிடமே தயாராக இருக்கிறேன். அதற்கு சர்க்கார் துணையாக இருக்க வேண்டும். சர்க்காருடைய முயற்சிக்கு மக்கள் துணையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் போய் தனியாக ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, அதைப் பற்றி அப்புறம் பேசலாம். அதை இந்த இடத்தில் பகிரங்கமாகப் பேச முடியாது. மாணவர்களைக் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு ஒரு குழு போட வேண்டும். அப்போதுதான் எல்லாம் நல்ல முறையில் நடக்கும். நாம் கோடிக்கணக்கான ரூபாய் கல்விக்காக செலவழித்து வருகிறோம். இப்படியாக செலவழிக்கும் இத்தனை பணமும் மாணவர்களின் ஸ்டிரைக்கில்தான் போய் நிற்கிறது. ஸ்டிரைக் எப்படிச் செய்யலாம், எந்த விதத்தில் குற்றங்குறை கண்டுபிடிக்கலாம் என்றுதான் மாணவர்களது மனது போகிறது. அதைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்றால், தற்போதுள்ள இந்த ஹாஸ்டல்களைக் குறைக்க வேண்டும். அதிகமாகக் குறைக்க முடியாவிட்டாலும், முடிந்த வரையில் குறைக்க முயற்சிக்க வேண்டும். அந்த அந்த இடத்தில் உள்ளவர்களுக்கு ஹாஸ்டல் கொடுக்கக்கூடாது. இப்போது மெட்ராசில் கிறிஸ்டியன் காலேஜில் ஒருவன் சேருகிறான், அவன் வேறு இடத்தைச் சேர்ந்தவனாக இருப்பானானால், சேர்ந்துதான் ஆகவேண்டும். ஆனால் இப்படிப் பணம் கட்டிச் சேருகிறவர்களும் ஒரு 50 பேர்கள் சேர்ந்துவிட்டால், அவர்களுக்கு வேறு ஒன்றும் தேவையில்லை. மேலும், தற்போது அரசியல் வளர்ச்சிக்காக இந்தமாதிரி ஹாஸ்டல்கள்தான் உபயோகப்படுத்தப்படுகின்றன. நம்முடைய அரசியலை வளர்ப்பது இப்போது அங்குதான் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தமாதிரி ஹாஸ்டலில் மாணவர்கள் தங்குவதை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வாறு செய்தால், நம்முடைய

சிரமத்தையும், சர்க்காருடைய சிரமத்தையும் இது குறைக்கும். இந்த சர்க்கார் இதைச் செய்தால், வருங்கால சர்க்காருக்கு அந்த சிரமத்தை இது குறைக்கும். இந்த மாதிரிச் சீர்திருத்தங்கள் எல்லாம் கல்லூரிகளில் நாம் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பக்கத்திலே ஆந்திர மாநிலத்திலே யூனிவர்சிட்டி இருக்கிறது. அவர்கள் ஆந்திரா யூனிவர்சிட்டி என்று அந்த பாஷையிலே வைத்திருக்கிறார்கள். நாம் மட்டும் ஏன் அவ்வாறு செய்ய முடியாது? நம்முடைய துணைத் தலைவர் அவர்களும் மிகவும் உத்வேகத்துடன் இருப்பார் என்று நாம் நம்பலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : துணைத் தலைவரால் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இதுவரையிலும் சென்னையிலும், மதுரையிலும், அண்ணாமலைநகரிலும் பல்கலைக்கழகம் இருக்கிறது. கோயம்புத்தூரிலும், திருச்சியிலும் புதிதாக ஏற்படுத்தப்போவதாக அறிகிறேன். இருந்தாலும் இந்த மெட்ராஸ் யுனிவர்சிடி என்று இருப்பதை "தமிழ்நாடு யுனிவர்சிட்டி" என்று வைக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு, அப்போதுதான் நாம் தமிழை வளர்க்க வேண்டும் என்று சொல்லும் முயற்சி உதட்டளவில் இல்லாமல் உள்ளத்து அளவில் இருக்கும் என்று கூறி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே கல்வி வளர்ச்சிபற்றியும், கல்விக் கொள்கைகளைப்பற்றியும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிக்கை படைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே தொடக்கக் கல்விக்கும், உயர் தொடக்கக் கல்விக்கும் ஆயிரம் ஆசிரியர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். 6 முதல் 11 வயது மாணவர்களுக்கு 400 இடைநிலை இடங்களும், 11 முதல் 14 வயது உள்ள மாணவர்களுக்கு 600 இடைநிலை இடங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இது இன்றைக்குள்ள தேவைக்கு மிக மிகக் குறைந்ததாகும். தேவையின் அடிப்படையிலே இன்றைக்கு நிதியும் ஒதுக்கப்படவில்லை என்பதையும் நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அடுத்தாற்போல, தொழில் ஆசிரியர்கள் 150 பேர் முழுநேர ஆசிரியராக ஆக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அடுத்தாற்போல உடற்பயிற்சி ஆசிரியர்கள் உயர் தொடக்கப் பள்ளிகளிலே 180 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருவதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம்

விரைந்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இவைகளையெல்லாம் நான் வரவேற்கிறேன். ஆனால் 118 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிடப்படுகிறது. சென்ற ஆண்டிலே மொத்த வருமானத்திலே 24 சதவிதத்துக்கு மேல் தமிழ் நாட்டு அரசிலே கல்விக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு வருமானம் கூடியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு உயர்ந்துள்ள இந்த வருமானத்தைப் பார்த்து அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்குமானால், இன்னும் 15 கோடி ரூபாயாவது குறைந்தது சேர்த்து ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால் இந்த ஆண்டில் அது குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பதவி உயர்த்துதலில் ஹையர் கிரேடு இடத்திலே பணியாற்றக்கூடிய செகண்டரி கிரேடு சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 37,700 இடங்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் என்னவோ தெரியவில்லை, தொடக்க நிலையிலே இருக்கக் கூடியவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக தங்களை தேர்வுகளை எழுதி உயர்த்திக் கொண்டு இருப்பவர்களை பதவி உயர்த்துவதற்கான திட்டம் இந்த ஆண்டு கைவிடப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரிலேயாவது, இந்த ஆண்டு தேர்வு எழுதி இடைநிலை ஆசிரியர்களாக தங்களை ஆக்கிக்கொண்டவர்களுக்கு அரசாங்கத்தினுடைய கொள்கை அடிப்படையிலே விரைவாக அந்த 'அப்-கிரேடெட்' பதவிகள், பதவி உயர்வதற்கான பதவிகள் வழங்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் அளிப்பதுபோல, ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. உண்மையாகவே அது பாதுகாப்பான திட்டம். ஆனால் இந்தப் பாதுகாப்பைத் தருவதற்கு விடாமல் பல பேர் உயர்நீதி மன்றங்களுக்குச் சென்று நீதி தேடியிருக்கிறார்கள். அதிலே வேடிக்கை என்னவென்றால் ஆசிரியர்கள் சென்று உயர் நீதி மன்றத்திலே வழக்குகள் தொடுக்கும்போது, ஒரேமாதிரியாக இருக்கக் கூடிய கேஸிலே ஒரு ஆசிரியர் போட்டால், பல ஆசிரியர்களுக்கு அங்கே தடை வழங்கப்படவில்லை. ஆனால் மானேஜர்களுக்கு ஒரு மானேஜர் சென்று அங்கே போட்டால், நூற்றுக்கணக்கான பள்ளிகளுக்குத் தடை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தடையை உடைப்பதற்கான முயற்சியில் சமீபத்திலே உயர்நீதி மன்றத்திலே நமக்குச் சாதகமான தீர்ப்பு வந்திருக்கிறது. இதை கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தத் தடைகளை நீக்குவதற்கு முயற்சிகள் விரைவாக அரசு எடுத்துக் கொள்ள வேண்டு

மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தடைபெற்ற மானேஜர்கள் இப்படி இருந்தாலும்கூட, யார் யார் ஓடுகிறார்கள் என்றால், தங்களுடைய பள்ளிகளில் ஏற்கெனவே கடந்த காலத்தில் நடந்த தவறுகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று ஆர்வமும், வேகமும், ஆத்திரமும் கொண்டிருக்கக்கூடியவர்கள் தான் இன்றைக்கு வழக்கு மன்றத்தைத் தேடி ஓடுகிறார்கள். அதில், மைனாரிட்டி உரிமை என்ற வாதத்தில் புகுந்துகொண்டு இந்த நாட்டிலே மெஜாரிட்டி சமுதாயத்தினரை இந்த உரிமையின்கீழ் வைத்து காலிலே நசுக்கப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு வேறு வகையிலே கொடுக்கப்படக்கூடிய உரிமைகளை நான் மறுக்கவில்லை. அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகளை வைத்து, ஆசிரியர்களுடைய வாழ்விலே கை வைக்கக்கூடிய முயற்சியிலே ஈடுபடுகிறார்கள் என்பதனை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கல்வித் துறையிலே இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டம் சரியாக அமுல் படுத்தப்படாமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டும் நான் கொண்டு வருகிறேன். 1974 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதி முதல், இதற்கு முன்னால் தொடக்கப்பள்ளியானால் சி.இ.ஓ.-வால் இறுதி உத்தரவு இடப்பட்ட ஆசிரியர்களுக்கும், மேனேஜ்மெண்டில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்ட ஆசிரிர்களுக்கும் கல்வி இயக்குநர் அவர்களால் பள்ளியிலே சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இறுதி உத்தரவு வழங்கப்பட்ட உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய அந்த இறுதித் தீர்ப்புக்கள் அத்தனையும் சட்டபூர்வமாக அமலுக்கு வருகின்றன என்பதைப் பலமுறை கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இவ்வாறு அறிவித்த நேரத்திலெல்லாம் ஆசிரியப் பெருமக்கள் மன மகிழ்ச்சியடைந்தார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சி இதுவரையிலும் கிடைக்கவில்லை. இன்னும் பெண்டிங் கேசாக இருக்கின்றன. மேற்சொன்ன சட்டத்திலே சொல்லப்பட்டவை 1—12—1974 முதல் சட்ட ரீதியாக அமுலுக்கு வருகின்றன. ஆசிரியர்கள் பள்ளியில் வேலை செய்வோராகக் கருதப்படுவார்கள் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த விதியைச் செயல் படுத்துபவர்கள் யார்? செயல்படுத்தக்கூடிய மாவட்டக் கல்வி அதிகாரிகளும், அங்கே இருக்கக்கூடிய முதன்மைக் கல்வி அதிகாரிகளும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆசிரியர் இன்சால்வன்டாக இருக்கக்கூடாது என்ற ஒரு விதி 'கோட்-ஆஃப் காண்டக்டில்' இருக்கிறது. அதைமட்டும் உடனடியாக கல்வித் துறையிலே இருக்கக்கூடியவர்கள் செயல்படுத்துகிறார்கள். ஆனால் அதே சமயத்திலே இன்சால்வென்டாக இருக்கும் மேனேஜர்கள் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற பரிதாபமான சூழ்நிலையை கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆசிரியர்கள் எதிர்பார்த்ததை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இந்த மாதிரி 6 ஆண்டுகள் 7 ஆண்டுகள் காலமாக

உத்தரவிடப்பட்டும் அமுல் நடத்தப்படாமல், கல்வித் துறையையே அவமானப் படுத்திக்கொண்டிருந்த அந்த மானேஜர்கள்மீது சட்டப் பாதுகாப்பின் மூலம் சரியான நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதி வந்தேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வருகிறது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தவறு செய்பவர்கள்மீது, உடனடியாக நடவடிக்கை எடுங்கள். நடவடிக்கை எடுப்பதிலிருந்து தப்பித்துக்கொண்டிருக்கின்றவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள். இருக்கக்கூடிய நடைமுறையை கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் செய்கிறார்கள். மேலே இருக்கக்கூடிய அதிகாரிகளை சந்திக்கும்போது, சட்டம் தெளிவாக இருக்கிறது. ஏன் தயங்குகிறார்கள் என்று கேள்வி கேட்கிறார்கள். கேள்வி கேட்கப்படுகிறதே தவிர, அந்தக் கேள்வி கீழ்மட்டத்திலே இருந்து கேட்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். " Justice delayed is justice denied " என்று ஆங்கிலத்திலே சொல்கின்றார்கள். நீதி வழங்குவதற்கு இவ்வளவு காலத் தாழ்வு ஆனது போதா? 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம் கழிந்த பிறகு, ஒரு பாதுகாப்பு வந்திருக்கின்றது. இதற்குப் பிறகும் ஒரு காலத் தாழ்வா? இதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-30ம

அதற்கு அடுத்தாற்போல், டிஸ்ட்ரிக்ட் எஜூகேஷனல் ஆபீஸர்ஸ், ஹெட்ஸ் ஆப் இன்ஸ்டிடியுஷன்ஸ் ஆக இருக்கக்கூடியவர்கள், டி.ஈ.ஓ.க்கள் முழுமையான ஓய்வூதியம், பென்ஷனைக் கொடுப்பதற்கு ஆணையிடவேண்டும். 80 சதம் கிராச்சுடியும், பனிக்கொடையும் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு முடிவெடுத்து உத்தரவிட்டிருக்கிறது. அந்த உத்தரவை அமுல் படுத்துகின்ற நடைமுறைகள் இன்னும் அமுலுக்கு வரவில்லை. எப்போதுமே உத்தரவிடுவதற்கும், அமுலுக்கு வருவதற்கும் இடையில் ஏற்படக்கூடிய இந்த இடைக் காலத்திலே ஆசிரியர்களுக்கு நன்மை கிடைக்காமல் போகின்ற நிலையிருக்கின்றது. கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே கேள்வி நேரத்திலே கேட்டேன். இங்கே அரசு உத்தரவு இட்டுவிட்டது. அரசு கொள்கை முடிவு எடுத்துவிட்டது. இனி அதை ஆலோசிக்க வேண்டியதில்லை. ஆதலகல் உத்தரவு இட்டுவிட்டதை அமுல்படுத்துவதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். டி.ஈ.ஓக்களுக்கு இந்த சாங்ஷன் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்கின்றார்கள். சென்னையில் உள்ள அக்கௌண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தையே நம்பிக்கொண்டிருக்கின்ற நிலைமை வேண்டாம். அமைச்சர் அவர்கள் இந்த அதிகாரத்தைப் பரவலாக்கி உடனடியாக நீதி கிடைப்பதற்கு ஏற்பாடு

செய்தார்கள். செய்த ஏற்பாடு அந்த இடத்திலேயே தேங்கி நிற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் திருப்தி அடைந்திருக்கின்றார்கள். எல்லோருக்கும் டி.ஈ.ஓ.க்கள் விரைவாகத் தந்து விட்டார்கள் என்று நிம்மதியோடு இருக்கின்றார்கள். ஆனால் அந்த அறிவிப்பு கடைசி வரை போய்ச் சேர்ந்தால்தான், ஆசிரியர்களுக்கு நன்மை கிடைக்கும். சேராத வரை ஆசிரியர்கள் அதிருப்தியோடுதான் இருப்பார்கள். ஓய்வு பெற்ற வர்கள் எங்களிடத்திலே கண்ணீர் வடிக்கிறார்கள். இந்த நிலையைக் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஈட்டிய விடுப்பு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் தனியார் பள்ளிகளுக்கும் அரசு ஊழியர்களைப்போல தரப்பட்டிருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அரசு ஊழியர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்கள் இவர்களுக்கு இடையிலே உள்ள உள்ளாட்சித் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்கள் என்ன ஆனார்கள்? அவர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கு வழங்க வேண்டு மென்று உத்தரவுபோட்டால், அந்த ஆசிரியர்கள் அதிலே வரவில்லை என்றும் அதனால் வழங்கவில்லை என்றும் சொல்லிவிடுகின்றார்கள். நகராட்சிப் பள்ளி களிலே பணியாற்றுபவர்களுக்கு சமீபத்திலே தான் உத்தரவு வந்திருக்கின்றது. அதை நீங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் இந்த அறிக்கையிலே தவறு நேர்ந்துவிட்டது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு இங்கே இருப்ப தாக எழுதாமல் இருக்கின்றார்கள். ஆதலால் இல்லை என்கிறார்கள். விட்டு விட்டிருக்கிறார்கள். அதை கவனத்திற்குக் கொண்டுவந்து தயவுசெய்து உடனடியாக அந்த உத்தரவை இட வேண்டுகிறேன். அதற்கு அடுத்தாற் போல . . . .

ன

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டதாகவும், ஒரு பகுதி யினருக்கு மாத்திரம் கொடுக்கவில்லை என்பது மாதிரியும் சொல்கின்றார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த விதியானது நீடிக்கப்படவில்லை. ஓய்வு விதிகள் அரசுப் பள்ளிகளுக்கும் மற்ற பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியாக இல்லை. உதாரணமாக ஒரு ஆண்டு ஆறு மாதம், 1½ ஆண்டுகள் முழுமையான லீவ், உடல் நலக் குறைவு காரணங்களுக்கு கொடுக்கும் லீவ் சலுகைகள் அரசாங்கப் பள்ளிகளுக்கு இருக்கின்றது. ஆனால் இது தனியார் பள்ளிகளுக்கு நீடிக்கப் படவில்லை. எனவே எல்லாம் ஒன்றாக இருக்கிறது என்பது தவறு. இது தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே குறிப்பைப் பார்க்கும் போது 39-வது இனத்தைப் படித்தேன். அதிலே தெளிவாக இருக்கிறது. ஈட்டிய விடுப்பைப்பற்றிச் சொன்னேன். அவர் ஓய்வு விடுப்பைப் பற்றிச் சொல்கின்றார்கள். அவர் பேசும்போது ஓய்வு ஊதியத்தைப்பற்றி விளக்கமாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 300க்கு மேற்பட்ட சம்பளம் வாங்குபவர்களுக்கு இந்த இரண்டாவது ஊதியக் குழுவினுடைய சிபாரிசு அடிப்படையிலே ஊதியம் மாற்றியமைக்கப்படாதபோது, உத்தரவு இடப்பட்டிருந்தது. ரூ. 300க்கு மேல் இருக்கக்கூடியவர்களுக்குச் சலுகை யில்லை. ரூ. 300க்குக் குறைந்த சம்பளம் உடையவர்களுக்குத்தான் மருத்துவச் சலுகை உண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாம் ஊதியக் குழுவினுடைய சிபாரிசு வந்து சம்பளங்கள் மாற்றியமைக்கப்பட்ட பிறகு, அரசுத் துறையிலே இருக்கக்கூடியவர்கள் எல்லோருக்கும் ரூ. 500க்கு மேற் பட்டிருந்தால், அவர்களுக்குச் சலுகை இல்லை என்று உத்தரவு மாற்றியமைக்கப் பட்டது. ஆனால் இந்த உள்ளாட்சித் துறையிலே, முனிசிபல் உயர்நிலைப் பள்ளிகளிலே, தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலே, தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு ரூ. 500க்குக் குறைந்து உள்ளவர்களுக்குச் சலுகைகள் உண்டு, மேற்பட்டவர்களுக்குத்தான் இல்லை என்று உத்தரவு வழங்கப்படாத காரணத்தால், ரூ. 300க்கு மேற்படாத யாருக்குமே சலுகை யில்லை என்ற நிலை இருக்கின்றது என்பதைக் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இவைகளையெல்லாம் பலமுறை எடுத்துச் சொன்ன நேரத்திலே, பரிசீலனையில் இருக்கின்றது, பைனான்ஸ் துறையிலே இருக்கிறது என்றார்கள். அங்கே சென்றால் விரைவில் வருவதில்லை. ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்ட சலுகைகளின் மீது விரைவாக முடிவு எடுப்பதிலே, நிதித் துறையிலே கல்வியைப் பொறுத்த அளவிலே நிதி கொடுக்காமல் இருக்கிறார்கள் என்பதைக் கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து இதை விரைவாகத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 18 மாதகால மருத்துவ விடுப்புபற்றிச் சொல்ல விரும்புகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கு முனிசி பாலிட்டியில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளியாசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை என்பதையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1-4-1974-க்கு முன் நியமனம் செய்யப்பட்ட 'பி' பிரிவு பள்ளியாசிரியர் களுடைய நிலை என்ன ஆயிற்று; அவர்களுடைய ஊழிய காலம் நிர்ணயம் செய்யப்பட்டதா; எடுத்துக்கொள்ளப்படுகிறதா என்பவற்றிற்கு எந்தவிதமான விதிகளும் வகுக்கப்படவில்லை. இன்னும் அவர்களுக்கு ஊதிய உயர்வு

கிடக்கவில்லை. வேறு எந்தவிதமான ஒழுங்கு விதிகளும் இல்லை. அவர்கள் ஊழியம் 'ரெகுலரைஸ்' செய்யப்படவில்லை. அவர்களுடைய பணி ஒழுங்கு படுத்தப்படாத காரணத்தால், அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாமல் தவிர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். சாதாரணமாக, சில முடிவுகள் எடுக்கும்போது, ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்குச் செல்லும்போது அந்தத் துறையில் எவ்வளவு காலம் கடந்தாலும், அதற்கு ஒரு நிலையும் இல்லாது இருக்கின்ற காரணத்தினாலே, அது 'பப்ளிக் சர்வீஸ்' துறையில் சென்று அப்படியே நிற்பதாக பலமுறைகளாக அறிய வருகிறேன். உடனடி யாகத் தீர்வு காண்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

சமீபத்திலே பேரவையிலே அறிவிப்பு செய்கின்ற நேரத்தில், உயர் தகுதி பெற்ற உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு, ஹையர் பி.ஈ.டி. ஆசிரியர்களுக்கு செலக்‌ஷன் கிரேடு வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பு செய்தார்கள். அது நியாயமான ஒன்று. நீண்டகாலமாகப் பரிசீலனையில் இருக்கின்றது. அது பரிசீலனையில் இருக்கின்றது என்று பலமுறைகள் சொல்லிக்கொண்டிருந் தார்கள். அதை வழங்குவதற்கான அறிவிப்பைத் தந்திருக்கின்றார்கள். அறிவிப்பு வரும், அறிவிப்பு வரும், வந்துவிடும் என்று ஆவலாக இருந்தார்கள் அந்த ஆசிரியர்கள். மற்ற ஆசிரியர்களுக்கு, முதல் தரத்திலே இருப்பவர்களுக்கு 1-1-1971 லிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு, முதல் தகுதி பெற்ற ஆசிரியப் பெருமக்களுக்கு 1-4-1975 முதல்தான் செலக்‌ஷன் கிரேடு ஊதியம் வழங்கப்படும் என்று சொன்னால் ஒரே அரசில், ஒரே துறையில், ஒரே பள்ளியில் பணியாற்றக் கூடியவர்களுக்கிடையே இப்படிப்பட்ட வேறுபாடு தேவைதானா என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். 1-1-1971 முதல் 10 சதவிகிதம் செலக்‌ஷன் கிரேடும், 1-4-1974 முதல் 10 ஆண்டு காலம் ஊழிய கால அடிப்படையிலே செலக்‌ஷன் கிரேடும் வழங்க வேண்டும். அதற்கு எங்கள் ஊதியத்தை நிர்ணயம் செய்துவிட்டார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவர்களின் ஊழிய காலத்திற்கு ஏற்றாற் போல் அவர்கள் ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும். இதை முன் கூட்டியே கொடுக்க, காலத்தை நீட்டிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அரசு பரிசீலனை செய்வதற்கு கால அவகாசம் எடுத்துக்கொண்ட காரணத்தினா லேயே, ஆசிரியர்கள் தண்டிக்கப்பட வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். ஃபைனான்ஸ் துறையிலே இருக்கக்கூடியவர்கள், 'ரிட்ராஸ்ப்பெக்டிவ் எப்பெக்ட்' என்றுகூடச் சொல்கிறார்கள். தவறிவிடப்பட்டுவிட்டது. விடப்பட்ட ஒன்றைத் திரும்ப பழைய தேதியிலிருந்து தருவது நியாயம் என்று ஏற்றுக் கொண்டார்கள். அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அதை உடனடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்றைக்கு 'ஏ' விங், 'பி' விங், 'சி' விங் என்று இப்படி இருக்கக்கூடிய நிலைமையிலே 'பி' விங் ஆசிரியர்களாக விரும்பி நாங்கள் எங்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வரவில்லை. இந்த அரசாங்கம் ஒரு நெருக்கடிக்கு வந்து, அரசாங்கம் ஒரு கொள்கை முடிவு எடுத்து 'பி' விங் ஆசிரியர்களை அரசுப் பள்ளிகளிலே சேர்க்க வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள். இப்படி முடிவு எடுக்கும்போது, அவர்களுடைய கடந்த கால ஊழியகாலத்தை எடுத்துக்கொள்வதுதான் கல்வித்துறையிலே இருந்து வருகின்ற முறையாகும்.

கேரளாவிலே இருந்து அந்த எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலே இருந்து வந்தவர்களை நாம் எடுத்துக்கொண்டபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுத்துக்கொண்டபோது அவர்கள் நியமித்த நியமன தேதியை நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். ஆந்திராவிலிருந்து அழைத்துக்கொண்ட ஆசிரியர்களை அவர்களுடைய நியமனத் தேதியிலிருந்து நாம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் நம் நாட்டிலே பாதி அரசாங்கம் என்று சொல்லக்கூடியவைகள், குவாசி-அரசாங்கம் என்று சொல்லப்படக் கூடியவைகளான. உள்ளாட்சித் துறையி லிருந்து நியமிக்கப்படும் ஆசிரியர்களை அரசு நிலைக்கு மாற்றியமைக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்த காரணத்தால், அவர்களை மாற்றியமைக்கும்போது, அவர்களுடைய பணி ஆரம்பக் காலத்திலேயிருந்து, அவர்கள் நியமனத் தேதியை எடுத்துக்கொண்டு, இந்த ஏ விங், பி விங், சி விங் ஆக எல்லாவற்றையும் ஒன்றாக முடிவு செய்து அந்த ஊழியக் காலத்தை நிர்ணயிக்க வேண்டும். இதில் யார் யார் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்துக்கள்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று நான் கல்வி அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள் கிறேன். இந்த மூன்று பிரிவுகளை அரசு எடுத்துக்கொள்கின்றது. அரசாங்கம் கொள்கை முடிவு எடுக்கிறது. எப்போதுமே டிரான்ஸ்பர் என்று சொல்லும் போதுகூட அரசாங்கமே முடிவு எடுக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. அந்த அடிப்படையிலே ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும்போது, அப்போது அவர்களுடைய சீனியாரிட்டி பாதிக்கப்படக்கூடாது என்று உத்தரவு

(பிற்பகல் 5-40)

இருக்கிறது. இது பண்டமெண்டல் ரூலிலேயே இருக்கிறது. அப்படி இருக்கும் போது இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்காக யோசனை செய்து கொண்டு அதை ஒரு தனி விங்காக வைப்பது இன்னும் பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும். ஒரே பிரிவாக ஆக்க வேண்டும். அதிலே யாருடைய குற்றச் சாட்டையும் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அமைச்சர் அவர்கள் தம்முடைய காலத்திலேயே ஒன்றாக இணைத்தோம் என்ற பெருமையை ஏற்றுக்கொள்ளட்டும். அதற்காக எங்களுடைய ஒத்துழைப்பு உண்டு. அதிலே யார் எதிர்க்கிறார்கள்

என்பதைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. அத்தனை ஆசிரியர்களுடைய வாக்குகளைப் பெற்றுவரக்கூடிய பிரதிநிதிகள் தான் இதைச் சொல்லுகிறோம் என்பதைத் தெளிவாக இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றாக இணைத்து முழு இணைப்பாகச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இடைநிலை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும் பி.டி. தேர்வு எழுதிய தமிழாசிரியர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பள்ளிகளிலே எட்டாம் வகுப்பு சொல்லிக் கொடுப்பதற்காக தலைமையாசிரியராக பி.டி. ஆசிரியர்களை நியமிக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளிலே எட்டாம் வகுப்புக்குச் சொல்லிக்கொடுக்கக்கூடிய இடத்திலே செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அங்கே கல்வி நலன் கருதி பி.டி. ஆசிரியர்களை நாம் நியமிப்பதில்லை. அதற்கான காரணம் என்ன? அது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று என்பதைக் கேள்வி நேரத்தின்போது கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டும். எட்டாம் வகுப்புக்குப் போதிப்பதற்கு 'அகடமிக் சைடு இம்புருவ்மெண்டு'க்காக எட்டாம் வகுப்புத் தலைமை ஆசிரியராக பி.டி. ஆசிரியரைத்தான் போடுகிறோம் என்று, பி.டி. அப்பாயிண்ட்மெண்ட்போது எழுதப்பட்டிருக்கிறது அரசு ஆணையிலே. இதே 'அகடமிக் சைடு இம்புருவ்மெண்ட்' உயர்நிலைப் பள்ளிகளிலேயும் ஏற்பட எட்டாம் வகுப்பிற்குச் சொல்லிக் கொடுப்பதற்கு பி.டி. ஆசிரியரை நியமிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் ஆசிரியராகத் தேர்வு பெறுபவருக்கு அவர்களுடைய தகுதிக்கேற்ற முறையிலே ஊதியம் வழங்க வேண்டும். அது கல்வித் தகுதியை உயர்த்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது, அவர்கள் தேறும்போது பட்டதாரி ஆசிரியர்களுடைய சம்பளத்திற்குப் பக்கமாக வருகிறார்கள். அப்படி வரக்கூடியவர்களுக்கு அதே சம்பளத்தைக் கொடுக்கும்போது, அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டம் வந்துவிடாது என்று வாதாடி, அரசு அவர்களுக்கு உரிய ஊதியம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தலைமை ஆசிரியர்களை கெஜடட் அந்தஸ்திலே கொண்டுவர வேண்டும். அரசிதழ் பதிவு பெற்றவர்களாகக் கொண்டுவரவேண்டும். இதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை. இதைவிடக் குறைந்த சம்பளம் பெறுபவர்களுக்கு எல்லாம் இந்த அரசு முடிவு எடுத்துவிட்ட பிறகு, தலைமை ஆசிரியர்களைப்பற்றி முடிவு எடுக்கும்போது, மற்ற துறைகளிலே இருப்பவர்களைப்பற்றியெல்லாம் ஆராய்கிறோம் என்று கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லுகிறார்கள். மற்ற துறைகளுக்கு எல்லாம் அவர்கள் கேட்கிறார்களோ இல்லையோ, ஒரு பெரிய இன்ஸ்ட்டிட்யூஷனை நடத்தக்

கூடிய தலைமை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் பல்வேறு சிக்கல்கள் தீரும். ஊதிய உயர்வினை அவர்களே சேங்ஷன் செய்து கொள்ளலாம். ஊதியத்தை அவர்களே போடுவார்கள். இத்தகைய எல்லா விதிமுறைகளும் அவர்களுக்கு வந்துவிடுகின்றன. ஆகவே, தலைமை ஆசிரியர்களை அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்க முயற்சிகள் செய்யவேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிப் பிரச்சினையைப்பற்றி நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளிலே பல்கலைக்கழக மானியக்குழு சிபாரிசை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக் கழக மானியக்குழு இந்த நாட்டிலே பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு இருக்கிறது. செகண்டரி பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இல்லை. ஆனால் பல்கலைக் கழகங்களிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதாவது ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதே என்று நான் மகிழ்ச்சியடைகிறேன். அதனுடைய சிபாரிசு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வந்துவிடுகிறது. அது, இப்போது 1-1-1973 அன்று புதிய விகிதத்தில் சம்பளத்தை உயர்த்தி மாற்றி அமைக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. அதற்கு 80 சதவீதம் நாங்கள் தருகிறோம், 20 சதவிதம் மாநில அரசு தரட்டும் என்கிறார்கள். மறுபடியும் பாராளுமன்றத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் 'மீண்டும் விரைவாகச் செய்யுங்கள் என்று மாநிலங்களுக்கு தாக்கீது அனுப்புகிறோம்' என்று சொல்லுகிறார்கள். ஆனால் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுடைய நிலை என்ன? செகண்டரி பள்ளி ஆசிரியர்களுடைய நிலை என்ன? நேஷனல் பே கமிஷன் ஆப் டீச்சர்ஸ் என்று அகில இந்திய ரீதியிலே பள்ளி ஆசிரியர்களுக்கு பே கமிஷன் அமைக்க வேண்டும். கோதாரி கல்வி கமிஷன் சிபாரிசிலே தான் விஷயங்கள் நடைபெறுகின்றன. ஆனால் கோதாரி கமிஷன் சிபாரிசு அமுலாக்கப்படும்போது மாநில அரசாங்கம் அதிலே பின்னடைந்து விடுகின்றது. அதற்கான காரணம் புரியவில்லை. கல்வியைப் பொறுத்த அளவிலே, ஒரு வியாபார நோக்கோடு, இவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம், அவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று இலாப நஷ்டக் கணக்கு பார்ப்போமானால், இந்த நாட்டுக் கல்வி உருப்படாது. இதைப் பொறுத்த அளவில் என்ன தேவை என்பதை நாம் கணக்கிட்டு, 'எத்தனை ஆண்டுகாலத்தில் எவ்வளவு பயனை நாம் எதிர்பார்க்கிறோம், எவ்வளவு கல்வி அறிவு உள்ளவர்களை நாம் எதிர்பார்க்கிறோம்' என்று அந்த அடிப்படையிலே தான் திட்டங்களைத் தீட்ட வேண்டும். இன்றைக்கு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குச் சட்டம் வந்துவிட்டது. தனியார் கல்லூரிகளிலே இருப்பவர்களுக்குச் சட்டம் என்னவாயிற்று? அவர்கள் சம்பளத்திலே இரட்டத்திற்குக் கையெழுத்தை வாங்கிக் கொண்டு

கிறார்கள். ஆரம்பப் பள்ளிகளிலும் இருப்பதாக திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். கல்லூரிகளிலேயும் இருக்கிறது, அப்படிப்பட்ட கல்லூரிகளும் இருக்கின்றன. பேராசிரியர்களும் அப்படி இருக்கக்கூடிய பரிதாப நிலையிலே இருக்கிறார்கள். வாங்குவது ஒரு சம்பளம், கையெழுத்துப் போடுவது ஒரு சம்பளம். இப்படி இருந்தால்தான் வேலை கிடைக்கும். இது தான் இன்றைக்கு தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய சில கல்லூரிகளுடைய நிலை. தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு இல்லை. இதை உடனடியாகக் கொண்டுவர வேண்டும். பலமுறை சொல்லியிருக்கிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே விரைவு காட்ட வேண்டும். ஒரு அவசரச் சட்டமாவது கொண்டுவர வேண்டும். பல்வேறு அவசரச் சட்டங்களை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. நாட்டின் நலன் கருதி கொண்டு வந்திருக்கிறது. கல்லூரிப் பேராசிரியர் நலன் கருதி கொண்டுவரக்கூடாதா? மற்ற மாநிலங்களிலே இருப்பதை வைத்துக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், நேரடியாக சம்பளப் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். நேரடியாக சம்பளம் ரூ. 500, ரூ. 600, ரூ. 700 என்று வாங்குபவர்களுக்கு சம்பளத்தில் கைவைக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு நேரடிச் சம்பளப் பட்டுவாடா முறை வேறு சில மாநிலங்களிலே இருக்கின்றது. மகாராஷ்டிரா மாநிலத்திலே உயர்நிலைப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்களுக்கு நேரிடையாகச் சம்பளப் பட்டுவாடா முறை இருக்கின்றது. ஏன் இதை இங்கே கொண்டுவரக் கூடாது? இதிலே என்ன சிக்கல் இருக்கிறது? அதிகாரிகள் பல்வேறு விஷயங்களிலே சங்கடங்கள் செய்கிறார்கள். அமைச்சர் அவர்களிடத்திலே சொல்கிறார்கள். இதைப்பற்றி ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்க வேண்டும். இந்த நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் செயல்பட்டதை ஒரு நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். படி அரிசித் திட்டத்தைப்பற்றிச் சொன்ன நேரத்தில், பல அதிகாரிகள் பயப்படுத்தினார்கள். அதே நேரத்திலே, 'இதைச் செயல்படுத்துவதற்காகத்தான் வந்திருக்கிறேன். இந்தக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கான திட்டம் என்ன என்பதைத் தாருங்கள்' என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அதேபோல் கல்வி அமைச்சர் அவர்கள், 'நேரடியாக ஆசிரியர்களுக்கு மானியம் வழங்க வேண்டும், அதற்கு என்ன திட்டம், அதைத் தாருங்கள்' என்று கேட்க வேண்டும். கொள்கையை வரையறுத்து அறிவிக்கட்டும். அதைச் செயல்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் திட்டங்களைக் கேட்கட்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்தாற்போல், பட்டம் கொடுக்கும் விழா தேவைதானா? இந்த ஆண்டில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்திலே, ஒவ்வொரு ஆண்டு விழாவிலேயும் ஒவ்வொரு நிகழ்ச்சி. பொதுவாக இந்த . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பட்டம் வாங்குவது ஒரு சந்தோஷமான காரியம். அங்கத்தினர் அதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டாம். ஏதோ நாங்கள் நாலைந்து வருஷம் படித்துவிட்டு ஒரு நாள் போய் பட்டம் வாங்குகிறோம். அதை ஒரு கோலாகல விழாவாகக் கருதித்தான் போகிறார்களே ஒழிய அது ஒரு சடங்கு என்ற முறையில் அல்ல. அது ஒரு நல்ல காரியமாகக் கருதப்படுகின்றது.

திரு. செ. முத்துசாமி: நான் இதைச் சொல்லும்போது குறையாகச் சொல்லவில்லை. விட்டுவிடுகிறேன். ஆனால் அதன் தொடர்பான அம்சத்தைச் சொல்ல விரும்புகிறேன். உரிய மாணவர்கள் என்னுடைய பட்டம் வேண்டும் என்று எந்த நாள் வந்து கேட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். விரும்புகிறவர்கள் விழாவிலே வந்து வாங்கிக்கொள்ளட்டும். வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திலே எந்த நேரம் கேட்டாலும் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களிலே, சென்னையிலும், மதுரையிலும் அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று . . .

திரு. சி. வி. ராஜகோபால்: நேராக வந்து வாங்கவேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் இப்பொழுது கூட இல்லை.

திரு. செ. முத்துசாமி: அந்த விழா நடத்தக்கூடிய நாளுக்குப் பின்னால் தான் வாங்க முடியும். அதற்கு முன்னால் வாங்குவதற்கு வழியே இல்லை. பட்டமளிப்பு விழாவிலே நான் கலந்துகொள்ள இருக்கிறேன் என்று அவர்கள் அறிவிக்கக்கூடிய தேதியிலே விண்ணப்பம் செய்தால்தான் அது வழங்கப்படும். இதில் நேரடியாக என் அனுபவத்திலே சங்கடப்பட்டுவிட்டேன். என்னுடைய தம்பி ஸ்டேட்ஸ்-க்குச் சென்றிருக்கிறான். அவனுக்கு டிகிரியை வாங்கி அனுப்புவதிலே சங்கடங்கள் ஏற்பட்டுவிட்டன. அந்தச் சங்கடத்தால்தான் நான் சொல்லுகிறேன். இப்படி சில மாணவர்கள் சங்கடத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கைபற்றி 10 ஆண்டு, 2 ஆண்டு, 3 ஆண்டா அல்லது 11 ஆண்டு, 1 ஆண்டு, 3 ஆண்டா என்று ஒரு திட்டவட்டமான கொள்கை அறிவிக்கப்படவில்லை. ஆனால் பாடத் திட்டங்களைப் பொறுத்த அளவில் திட்டவட்டமான கொள்கைகளை அறிவித்து நடப்பதைப்

போலவே பாடத்திட்டங்கள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது புதிதாகக் கருத்துக்கள் தேடப்படுகின்றன. இன்றைக்குத் திட்டக் கமிஷனுடைய அறிக்கையைப் பார்க்கும்போது, மற்ற துறைகளிலே ஏராளமான பணம் செலவு செய்யப்படுகிறது. ஆதலால் இங்கே கொஞ்சம் பணம் வசூல் செய்தால் பரவாயில்லை, கல்வியிலே கொஞ்சம் வேறுபாடு காட்டினால் பரவாயில்லை, ஒரே மாதிரியான கல்விக் கொள்கை வைத்திருக்கக்கூடிய தமிழ்நாடு, அடிப்படையைக் கொள்கையை மாற்றிக்கொண்டால் நல்லது என்று இங்கே இருப்பவர்கள் பரிந்துரைத்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளைத் தருபவர்களுக்கும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமைகளுக்கும் எவ்வளவு தொடர்பு என்பதை நான் சொல்லிக்கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனால் இலவசக் கல்வி என்பது மிகமிக உயர்ந்த திட்டம். பணக்காரனும் ஏழையும் ஒன்றாக சமமான முறையிலே உட்கார்ந்து படிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். இதை நீக்கக்கூடாது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்களை பரிசீலிக்கத்தான் சொல்லியிருக்கிறோமே தவிர, அதைப்பற்றி முடிவு எடுக்கவில்லை என்று சொன்னார்கள். எப்போதுமே பரிசீலனை என்றாலே, அது கடைசியிலே வேறு ஏதாவது ஒரு முடிவுக்குச் சென்று விட்டுவிடும் என்ற பயம் எல்லோருக்கும் வரும். ஆனால் தேவை இல்லாததைப் பரிசீலித்துச் செய்ய வேண்டிய அவசியமில்லை. தேவை இருக்கும்போதுதான் பரிசீலனை நடைபெறும் என்றுதான் நான் நினைக்கிறேன். தேவையில்லாதபோது பரிசீலனை இருக்கக்கூடாது. அரசு அறிவிக்கின்ற கொள்கையினுடைய அடிப்படையிலேதான் அவர்கள் செயல்பட வேண்டும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

அதற்கு அடுத்தாற்போல் இந்த 11 ஆண்டுக் கல்வி தான் சிறந்தது. 10 ஆண்டு உயர்நிலைப் பள்ளியில் வைத்து விட்டு 2 ஆண்டு கல்லூரியில் வைத்து 3 ஆண்டு டிகிரியிலே கொண்டு வைப்பதாகச் சொல்லுகிறார்கள். 11 வருஷப் படிப்புக்கே பக்கத்தில் இருக்கிற உயர்நிலைப் பள்ளியில் படிக்க வைக்க சங்கடப்படக்கூடியவர்கள், ஒரு ஆண்டு பி.யு.சி. படிக்க வைப்பதற்கு ஹாஸ்டலிலே பணத்தைக் கட்டுவதற்கே கஷ்டப்படுகிற நடுத்தர மக்கள், சாதாரண மக்கள், இதை எப்படி வரவேற்க முடியும்? என்னைப் பொறுத்தவரையில், நான் ஆசிரியர்களை வைத்துச் சொல்லுகின்றேன். சாதாரண மக்கள் இரண்டு ஆண்டு ஹாஸ்டலிலே தங்க வைத்து கல்லூரி மாணவர்களைப் படிக்க வைத்துக் கொண்டிருக்க முடியுமா என்பதைப்பற்றிச் சற்று சிந்திக்க வேண்டும். அதே சமயத்தில் இந்த 11 ஆண்டு காலம் இதுவரை படித்துக்கொண்டிருந்த கல்வியை பகுத்து 10 ஆண்டுகளாக இன்று நாம் திணிக்கிறோம். மற்ற மாநிலங்களிலே

6 வயதிற்கு மேல் தான் 1 ஆம் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் ஐந்து வருஷம் முடிந்த உடனேயே பள்ளியில் சேர்க்கிறோம். ஆகையால் நமக்கு எந்தவிதமான வியப்புமில்லை. அவர்கள் 6 வயதிற்கு மேல் சென்று 14 ஆண்டுகளில் படிக்கிறார்கள் என்றால், நாம் 5 வயது முடிந்த உடனேயே சென்று 15 ஆண்டுகளில் படிக்கிறோம். ஆதலால் கல்லூரியிலே பட்டப்படிப்பை முடிக்கும்போது, எந்தவிதமான வயது வேறுபாடும் இல்லை. இது சம்பந்தமான குழு தன்னுடைய கருத்துக்களைக் கேட்க வந்த நேரத்திலேயே கூட, இன்றைக்கு இருக்கக்கூடிய கிராமச் சூழ்நிலையை வைத்து இந்தக் கல்வி முறைகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் தெளிவாகச் சொன்னேன். சில மாநிலங்கள் செய்து விட்டதினாலேயே அதைச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு செய்ய வேண்டிய அவசியமில்லை. நம்முடைய மாநிலத்துக்குத் தகுதி ஏது? இப்பொழுது கல்வி அமைச்சர் அவர்கள் கூட சில மாநிலங்களிலே சில விதமாக இருக்கிறது, சில மாநிலங்களிலே வேறு சில விதமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாநிலம் கூட இந்திய நாட்டிலே ஒரே விதமாக வைத்திருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. காரணம் இந்த நாடு ஒரு பெரிய நாடு. ஒரே மாநிலமாக அல்ல, பல்வேறு இன, மொழிகளைக் கொண்டிருக்கக்கூடிய மாநிலங்களை ஒன்றாக இணைத்திருக்கக்கூடிய ஒரு இந்தியப் பகுதி. இந்தக் கல்விக்கூடங்களிலே 10 ஆண்டுகள் என்று வைப்பதன் மூலமாக இந்திய ஒருமைப்பாடு வந்து விடும் என்று யாராவது கருதினால், அந்தக் கருத்துக்காக அனுதாபப்படுவதைத் தவிர, நான் வேறு ஒன்றும் கூறுவதற்கில்லை. பல்வேறு ஒற்றுமையான உணர்வுகள், தேசியப்பற்று இவைகளை கல்வியிலே மாணவர்களிடம் உருவாக்கக்கூடிய பாடத் திட்டங்களை உருவாக்காமல் இந்த ஆண்டுக் காலத்தை மாற்றி ஒரே மாதிரி வைப்பதன் மூலம் ஒருமைப்பாடு வந்துவிடும், கல்வியினுடைய தரம் முன்னேறி விடும் என்று சொல்லுவதிலே நான் கருத்து வேறுபடுகிறேன், வன்மையாகவே வேறுபடுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு கல்வியை போதிக்கும்பொழுது இருக்கக்கூடிய மாணவர்களுடைய கல்வித் தரம் எப்படி இருக்கிறது என்று பார்க்கவேண்டும். இப்பொழுது புதிய பாடத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கணிதம் புதிய கணிதம். விஞ்ஞானத்திலே கூட புதிய பாடத்திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கு புதிய கணிதத்தை போதிக்கிற ஆசிரியர்களுக்கு எல்லாம் முதலிலே 'இன் சர்வீஸ்' பயிற்சி கொடுத்தார்கள். பணியாற்றிக்கொண்டிருக்கும்போதே பயிற்சி. புதிய பாடத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அவர்களுக்குத் தேவையான அறிவை உண்டாக்குவதற்கான பயிற்சி. அந்தப்

பயிற்சியும் இப்பொழுது நின்றுவிட்டது. இப்பொழுது ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்புக்கும், உயர்நிலைப் பள்ளிகளிலே இன்னொரு வகுப்புக்கும் இந்த ஆண்டு புதிய கணிதப் புத்தகம் வருகிறது. ஆனால் பயிற்சி இடையே நின்றுவிட்டது. பொதுவாக உயர்நிலைப் பள்ளிகளில் கணிதத்தைப் போதிக்க கணித பட்டதாரி ஆசிரியர் என்றும் விஞ்ஞானத்தைப் போதிக்க விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் என்றும் இருப்பார்கள். இப்பொழுது இடைநிலை ஆசிரியர் களிலும் கணிதத்தில் பயிற்சி பெற்றவர்கள் கணித ஆசிரியர்களைப்போலப் பணியாற்றினால் தான், அந்த கணித ஆசிரியர்களைப்போல பாடம் சொல்லிக் கொடுக்க முடியும். முதலிலே புதிய கணிதம் வரும்போது, அந்தக் கணித அறிவை ஆசிரியர்கள் பெற்றாக வேண்டும். இதை நாங்கள் பாடத் திட்டக் குழுவிலே மிகத் தெளிவாகச் சொன்னோம். ஆனால் ஆசிரியர்கள் அறிவைப் பெற்றார்களோ இல்லையோ, திட்டம் அமுலுக்கு வந்துவிட்டது, புத்தகம் அச்சடித்தாகிவிட்டது, பிள்ளைகளுக்கு வழங்கியாகி விட்டது. இதை யார் எப்படிச் சொல்லித் தருவது? முதலிலே சொல்லித் தரக்கூடிய ஆசிரியர் களுக்கு கருத்துக்கள் மிக நல்லமுறையிலே தெளிவாகப் புரிய வேண்டும். அந்தப் புரிந்த கருத்தைத் தான் ஒரு பாத்திரத்துக்கு ஏற்ற முடியும். மாணவர்களுக்கும் சொல்லித் தரமுடியும். இந்த நிலையிலே இப்பொழுது செய்திருக்கும் செயலால் எப்படி முடியும் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். 11 ஆண்டை 10 ஆண்டாகப் பகுத்து அங்கே கொண்டு போய்த் திணிப்பதன் மூலம் கல்வி அறிவில் பயன் ஏற்பட்டுவிடும் என்று கருத முடியாது. ஆதலால் 11 ஆண்டுக் கல்வி என்று இப்பொழுது இருக்கும் முறை 11 ஆண்டாகவே தான் இருக்க வேண்டுமென்பதை நான் தெளிவாகவே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். கல்லூரி மட்டத்திலே நீங்கள் எந்த விதமான முடிவையும் எடுப்பதிலே யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் வளர்ந்துவிட்ட மாணவர்கள். அவர்கள் grown-up students. அவர்களுடைய மூளையில் அறிவு வளர்ந்திருக்கிறது. வளர்ந்திருக்கிற நேரத்திலே எதையும் கிரகித்துக்கொள்வதற்கான சக்தி அவர்களுக்கு உண்டு. அந்த சக்தி இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதும், கல்லூரி மாணவர்கள் எப்படி நடந்து கொள்ளு கிறார்கள் என்பதும் வேறுபட்ட நிர்வாகப் பிரச்சினை. ஆனால் வளர்ந்த மாணவர்களுக்கு எதையும் விரைவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சக்தி உண்டு. சாதாரணமாக 1 ஆம் வகுப்பில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு எதையும் ஏற்கக் கூடிய சக்தி மிகவும் குறைவு. அதுவும், பல தலைமுறைகள் கல்வி அறிவு வாசனையே இல்லாதவர்கள். இன்றைக்குக் கூட நாம் ஐந்தாண்டு ரொம்பக் கஷ்டப்பட்டு ஒரு 8 சதவிகிதம் தான் படித்தவர்களுடைய தொகையைக் கூட்டியிருக்கிறோம். இந்த 8 சதவிகித உயர்வைத்தான் நாம் இவ்வளவு காலத்திலே கஷ்டப்பட்டு அடைய முடிந்தது. காரணம் இந்த நாடு வறுமை

யுள்ளது, வறுமையின் காரணமாக பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியவன் மீண்டும் பாதியிலே நிறுத்திவிடுகிறான். ஆதலால் பிள்ளையைப் படிக்க அனுப்ப முடியவில்லை. இப்படி இருக்கும்பொழுது அரசு என்ன செய்ய வேண்டும்? கிராமப் பகுதிகளுக்கு ஏற்றாற்போல் திட்டங்களைக்கொண்டு வர வேண்டும். நகரத்திலே இருக்கக்கூடிய சிந்தனையின் அடிப்படையிலே கல்வித் திட்டம் அமுலுக்கு வருமேயானால் நகரத்திலே இருக்கக்கூடிய பிள்ளைகள் விரைவாக முன்னேறிவிடுவார்கள். கிராமத்திலே இருக்கிற பிள்ளைகள் முன்னேறவே முடியாது. இதைப்போன்று இன்னொரு கருத்தையும் நான் கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெளிவாக்க விரும்புகிறேன். கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கும் நகரப்பகுதியிலே இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கும் ஆசிரியர்-மாணவர் விகிதம் ஒன்று என்பது சரியல்ல. அதை அரசு முதலிலே மாற்றியாக வேண்டும். முதலிலே இதை முன் முயற்சியாக மலைப் பகுதியிலாவது 'ஹில் ஏரியா'-விலாவது மாற்றியமைக்க வேண்டும். மலைப் பகுதியிலுள்ள பிள்ளைகளுக்கும் கிராமப் பகுதியிலே உள்ள பிள்ளை களுக்கும் தனிக் கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும். அவர்கள் 10 தலைமுறை 20 தலைமுறையாக கல்வியறிவு வாசனையே இல்லாதவர்களுடைய பிள்ளைகள். இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுடைய குடும்பம் 2 தலைமுறை 3 தலைமுறை யாக கல்வி அறிவிலே இருந்து முன்னேறிய குடும்பம். இவர்கள் சென்று படிக்கும்போது இவர்களுக்கு நுண்ணறிவு நன்றாக இருக்கிறது, வீட்டுச் சூழ்நிலையும் நன்றாக இருக்கிறது. நன்றாக இருக்கக்கூடிய குடும்பத்திலே உள்ள மாணவனும் சாதாரணமாக பிற்பட்ட நிலையிலே இருக்கக்கூடிய குடும்பத்திலே உள்ள மாணவனும் ஒன்றாகப் போட்டியிட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. மருத்துவக் கல்லூரிக்குப் போட்டியிட வேண்டும், எஞ்சினியரிங் கல்லூரிக்குப் போட்டியிட வேண்டும் என்று இருக்கும் நிலையை இன்னும் நீடிக்க விடக்கூடாது, இவைகளுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வ தோடு கல்வித்தொடர்பான இந்த நல்லகருத்துக்களையெல்லாம் பரிசீலனை செய்து தன்னுடைய உரையிலே பதிலளிப்பார்கள், எல்லாவற்றிற்கும் பதிலளிக் காவிட்டாலும்கூட சொன்ன கருத்துக்களைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொண்டு நியாயம் என்று கொள்ளத்தக்கவைகளை ஏற்றுக்கொண்டு ஆசிரியர்களுக்கு இந்தப் பிரச்சினைகளை முடிவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த 'போன்ட் டீச்சர்ஸ் அசோசியேசன்' பற்றி ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நேரமாகின்றது. இன்னும் ஐந்து உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்கிறேன். இப்பொழுது 'பேரன்ட் டீச்சர்ஸ் அசோசியேசன்' என்று இந்தக் கல்வித் துறையில் இருக்கிறது. அதனுடைய பணி என்ன என்று தெரியவில்லை. ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர் அங்கே நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இந்த நாட்டிலேயும் கல்வித் துறையிலேயும் ஏராளமான பேர் படித்து விட்டு வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். பெரிய பெரிய பட்டத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் அதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார். நல்ல சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்களுடைய திறமையிலே எனக்கு எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆனால் ஓய்வு பெற்றவர்களுக்கு இப்படி ஒரு பதவியைக் கொடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, தமிழ் நாடு பாடநூல் நிறுவனம்பற்றி ஒரு வார்த்தை கூற ஆசைப்படுகிறேன். தமிழ்நாடு டெக்ஸ்ட் புக் சொசைட்டியிலே இன்றைக்கு இருக்கக் கூடிய ஊழியர்களை வரன்முறைப்படுத்தவில்லை. அவர்களுடைய பணிகளையெல்லாம் வரன்முறைப்படுத்தி அங்கே இருக்கக்கூடிய காலி இடங்களை எல்லாம் 'வேக்கன்சீஸ்' முறைப்படி மற்ற துறைகளைப் போலவே ஒரு கார்ப்பரேஷனைப் போலவே பூர்த்தி செய்ய வேண்டும், அதற்கு வேண்டிய அடிப்படையிலே செய்யப்பட வேண்டும் என்பதை நான் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சிறப்புக்களையும் சொன்னேன், குறைகளையும் சொன்னேன், வேண்டினேன், அவைகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 'தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி' என்ற ஒரு கையேடு மிகச் சிறப்பான முறையிலே ஒவ்வொரு ஆண்டும் போலவே இந்த ஆண்டும் தரப்பட்டிருக்கிறது. இதிலே கூறப்பட்டுள்ள சிறப்புக்கள் அனைத்தையும் நான் ஏற்றுக்கொண்டு என்னுடைய ஒருசில கருத்துக்களை மிகச் சுருக்கமாகச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். அண்மைக் காலமாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்துக்கள் சிலவற்றை ஆங்காங்கே மிகத் தெளிவாக ஆணித்தரமாகச் சொல்லி வருகின்றார்கள். அப்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை ஆணித்தரமாகச் சொல்லும்பொழுது அதிலே

ஈடுபாடு இல்லாதவர்கள் அது சரியானதல்ல என்று சொல்லுவதால், இது ஒரு பிரச்சினைக்கு உரிய பொருளாக அண்மையிலே மாறி வருகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு முழு உரிமை பெற்றவர்கள். அந்தக் கருத்து சிறந்ததா இல்லையா என்பது பொதுவாக பேசித் தீர்க்க முடியாத ஒன்று. அதைச் செயல்படுத்திப் பார்த்தால்தான், அதனுடைய சிறப்புகள் தெரியுமே தவிர, ஒருவர் கூறுவதனால் அது சிறப்புள்ளதென்றோ, குறைபாடுள்ளதென்றோ சொல்ல முடியாது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஓரிரண்டு கருத்துக்கள் எனக்கு மிகவும் சம்மதமானதாகவும், ஏற்புடையதாகவும், சிறந்ததாகவும் படுகின்றன. அந்தக் கருத்துக்களைப் பற்றி நான் சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். கட்டணம் வசூலிக்கும் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அபிப்பிராயம் தெரிவித்ததாகவும், அந்தக் கருத்துப்பற்றி பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லி வருவதாகவும் ஒரு பிரச்சினை. ஆனால் கட்டணம் வசூலிக்கும் ஸ்கூல்கள் (ஃபீலெவியிங் ஸ்கூல்கள்(நமக்குப் புதியதல்ல. ஏற்கெனவே தமிழகத்தில் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் பல உள்ளன. குறிப்பாக ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் அரசாங்கத்திடமிருந்து அனுமதி வாங்கி கட்டணம் வசூலிக்கின்றன. அவர்களைப் பற்றியெல்லாம் ஒருவரும் இது வரை கவலைப்படவில்லை. அமைச்சர் அவர்கள் இதை வெளியிடாது செயல்படுத்தியிருந்தால் அதைப்பற்றி யாரும் சிந்தித்திருக்கமாட்டார்கள் என்று நினைக்

(பிற்பகல் 6-00)

கிறேன். வெளியே சொல்லிவிட்ட ஒரே காரணத்தால் அதையே ஒரு விதண்டாவாதமாக எழுப்பி, ஒரு நல்ல திட்டத்தைச் செயல்படுத்த முடியாத அளவுக்குப் போய் விடுமோ என்று அஞ்சுகிறேன். ஏனென்றால் 'ஃபீ-லெவியிங் ஸ்கூல்' இருப்பதாலே . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சபையில் 'விதண்டாவாதம்' என்று சொல்ல வேண்டாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, வாதம் என்ற அளவில் அதைத் திருத்திக்கொள்கிறேன். இந்த முறையைச் செயல்படுத்துகின்ற காரணத்தால், இலவசக் கல்விக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டு விடாது என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள்கூட பணக்காரப் பையன்கள், ஏழைப் பையன்கள் என்று இல்லாது எல்லோரும் ஒன்றாக இருப்பதற்கு இப்போது வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் பேசும்போது, ஒன்றாக

இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். எப்போதுமே இந்தத் தகராறு இருக்கத்தான் செய்யும். ஆனால் இலவசக் கல்விக்கு வாய்ப்புக் கொடுத்து ஒரு ஊரிலே ஒரு இலவசக் கல்விக்கூடம் இருக்கும்போது, கட்டணம் வசூலிக்கும் மற்றொரு பள்ளிக்கூடம் இருப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. அது நிச்சயமாகக் கல்வியின் தரத்தை உயர்த்தும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, சாதாரணமான மக்கள் சம்பளம் கொடுத்துப் படிக்க முடியாது. பணக்காரப் பையன்களுக்குச் சம்பளம் கொடுத்துப் படிப்பதற்கு வசதியாக ஒரு பள்ளியும், சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த பையன்கள் அந்தப் பள்ளிக்கூடத்திற்குச் செல்லக் கூடாது என்ற முறையில் அவர்களுக்கு என்று தனியாக ஒரு பள்ளிக்கூடமும் அமைப்பது சரியல்ல. ஜனநாயக நாட்டில், இலவசக் கல்வி என்று சொல்லிக் கொண்டு, இரண்டுவிதமான பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும் என்று வாதிப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவரது கருத்தை அவர் சொல்லுகிறார். உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லுங்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். கல்விக்குச் செலவிடுகின்ற தொகையில் 85 சதவிகிதம் ஆசிரியர்களுக்கு ஊதியமாகச் சென்று விடுகிறது என்று குறிப்பிட்டார்கள். நாம், இந்த ஃபீ லெவியிங் ஸ்கூல்கள்—கட்டணம் செலுத்தும் பள்ளிக் கூடங்களை—ஏற்படுத்துவதால், கல்வியின் தரம் உயரும் என்பதோடு அந்தப் பள்ளிக்கூடங்களுக்குச் செலவழிக்கும் தொகையை மற்றப் பள்ளிகளுக்குச் செலவிடலாம் என்ற அடிப்படையில்தான் நான் சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், இரண்டு வினாத் தாள்கள் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு, இரண்டு வினாத்தாள்கள், சிறந்த பையன்களுக்கு என்று ஒன்றும், கொஞ்சம் தகுதிக்குறைவாக உள்ள மாணவர்களுக்கு என்று மற்றொன்றும், இருக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அந்தக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். பாடத் திட்டத்தை வகுக்கும்போதே, நகரங்களில் உள்ள மாணவர்களுக்கு என்று

தனியாகவும் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு என்று தனியாகவும் வைக்கக்கூடாது. நகரத்தில் உள்ள மாணவர்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு பாடத்திட்டங்களை வகுக்கக்கூடாது, கிராமத்தில் வாழும் மாணவர்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு வகுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இரண்டு வினாத்தாள்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். கல்வித் தரத்தில் உயர்ந்து உள்ளவர்களை, கிராமச் சூழ்நிலையில் அறிவாற்றல் குறைவாக இருந்தால், அவர்களுடைய நிலைக்கு இழுப்பது அல்லது குறைந்த ஆற்றல் உள்ளவர்களை அதிகமான ஆற்றல் உள்ளவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தவறு என்ற அடிப்படையில்தான், கல்வி அமைச்சர் அவர்கள், கிராமத்தின் சூழ்நிலை காரணமாக தகுதி குறைந்தவர்களாக இருப்பவர்களுக்கு என்று ஒரு வினாத்தாளும், தகுதி உயர்வாக, சூழ்நிலையின் காரணமாக, இருப்பவர்களுக்கு என்று மற்றொரு வினாத்தாளும் வைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையில் இரண்டு வினாத்தாள்கள் வைப்பதில் ஒன்றும் தவறில்லை. லோயர், ஹையர் என்று வைக்கலாம். லோயர் பாஸ் செய்து விட்டு ஹையர் பரிட்சைக்குப் போகலாம். 1960 ஆம் ஆண்டுக்கு முன்பு . . . .

திரு. செ. முத்துசாமி: உறுப்பினர் அவர்களுடைய கருத்தைப் பார்த்தால், நகரத்தில் இருக்கிறவர்களுக்கு ஒரு விதமான கேள்வித்தாளும், கிராமத்தில் இருக்கிறவர்களுக்கு ஒரு விதமான கேள்வித்தாளும் வைத்து விடலாம் என்று கூறுகிறார்கள். அவ்வாறு செய்வதற்குப் பதிலாக, கிராமத்தில் இருக்கிறவர்களிடம் அதிகமான கவனம் செலுத்தி அவர்களையும் நகரத்தில் இருக்கிறவர்களோடு சேர்க்க வேண்டுமென்று அவர். கருதுகிறாரா என்று அறிய விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் கிராமத்திலே இருக்கிறவர்கள் தரம் குறைந்திருக்கின்ற சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு கேள்வித் தாளும், நகரத்தில் இருக்கிறதால் தரம் உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு என்று ஒரு கேள்வித் தாளும் வைத்து, நகரத்தில் இருக்கிறவர்கள் விரைவாக முன்னேற வேண்டும் என்று விரும்புகிறாரா என்று தெரிய வேண்டும். . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் ஒருவர் பேசும்போது அவருடைய கருத்தைச் சொல்லுகிறார். உறுப்பினர்களில் ஒருவர் ஒருவரை மறுத்துப் பேசுவதை விடுத்து, அமைச்சரும் உறுப்பினரும் மறுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். அதுதான் விவாத முறையும் கூட . . .

[1975 ஏப்ரல் 1

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கல்வித் துறையிலுள்ளவர்களுடைய சிந்தனைக்காக இந்தக் கருத்தைச் சொன்னேன். மேல்நாடுகளில் பல இடங்களில், 'அட்வான்ஸ்ட் பேப்பர்', 'ஆர்டினரி பேப்பர்' என்று இருக்கிறது. ஒரு வகுப்பில் 40 மாணவர்கள் இருந்தால், அவர்களுக்கு ஒரே விதமான வினாத்தாள் வைக்காமல், 'அட்வான்ஸ்ட் பேப்பர்', 'ஆர்டினரி பேப்பர்' என்று வைத்து அவர்களுக்கு இஷ்டப்பட்டதை எழுதலாம் என்று வைத்திருக்கிறார்கள். 'ஆர்டினரி பேப்பர்' எழுதினால் வெற்றி பெற முடியும் என்றால் அதை எழுதலாம். அட்வான்ஸ்ட் 'பேப்பர் எழுதி, 4, 5 முறை தோல்வி அடைவதை விட, 'ஆர்டினரி பேப்பர்' எழுதி அவர்கள் வெற்றி பெறுகின்ற நிலையிருக்கிறது. அவ்வாறு வெற்றி பெற்று அவர்களுக்குரிய துறைக்குப் போகலாம். அதற்கு ஏற்றவாறு அங்கே 'அட்வான்ஸ்ட் செக்ஷன்', 'ஆர்டினரி செக்ஷன்' என்று இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சங்கடத்தைப் போக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதை ஒரு கருத்தாகச் சொன்னேன். அதை ஒரு சிந்தனைக்குரிய கருத்தாகத்தான் சொன்னேன். பரிட்சை வருவதற்கு 3 மாதங்களுக்கு முன்னால், தங்களுக்கு ஆர்டினரி பேப்பர் வேண்டுமா, அல்லது அட்வான்ஸ்ட் பேப்பர் வேண்டுமா என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு அது வாய்ப்பு இருக்கும். பரீட்சையில் தோல்வி அடைந்து கொண்டேயிருப்பதைவிட, ஒரு குறிப்பிட்ட துறைக்குச் செல்வதற்கு வாய்ப்பாக அமையும் என்ற முறையில்தான் அதை ஒரு சிந்தனைக்குரிய கருத்தாகச் சொன்னேன். அதற்காக, கிராமங்களில் உள்ளவர்கள் ஆற்றல் குறைந்தவர்கள் என்று சொல்ல முடியாது. 4, 5 ஆண்டுகளாகப் பார்த்தால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள்தான் அதிக மதிப்பெண்கள் பெற்று வந்திருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான், லோயர், ஹையர் என்று சொன்னதை, ஆர்டினரி ஸ்டாண்டர்டு அட்வான்ஸ்ட் ஸ்டாண்டர்டு என்று இரண்டு பிரிவாக வைக்கலாம் என்றும், அதிலே மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு முன்பு எதிலே தேர்வு எழுத விரும்புகிறார்கள் என்பதற்கு ஒரு 'ஆப்ஷன்' வைத்து அதன்படி எழுதலாம் என்றும் கூறுகிறார்கள். அதற்கு ஏற்பத்தான் நான் என்னுடைய கருத்தைச் சொன்னேன். அது மிகச் சிறந்த முறை. மாணவர்கள் விரும்பினால், முதலில் ஆர்டினரி தேர்வில் வெற்றி பெற்று அதற்குப் பிறகு, அட்வான்ஸ்ட் ஸ்டடி வேண்டுமானால், அதை எழுதி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கலாம். அந்த அடிப்படையில் அமைச்சர் அவர்களுடைய கருத்தை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, கிராமப்புறத்துக் குழந்தைகளோடு நகர்ப்புறத்துக் குழந்தைகளை ஒப்பிடக்கூடாது என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் நான் இந்தக் கருத்தைக் கூறுகிறேன்.

1975 ஏப்ரல் 1] [திரு. கே. எஸ். கணபதி]

(பிற்பகல் 6 10)

அடுத்தபடியாக, பத்து ஆண்டு பள்ளிக் கல்வி என்பதைப்பற்றி பலவிதமான விவாதங்கள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. ஆனால் அரசாங்கம் இதைப் பற்றி இன்னும் தெளிவாக ஒரு முடிவு எடுக்கவில்லை. நான் ஒன்று அதைப் பற்றிக் கேள்விப்படுகிறேன், அது உண்மையா அல்லவா என்று தெரியவில்லை. பத்து ஆண்டுக்கான பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு புத்தகங்களும் தயாரிக்கப்பட்டு விட்டனவாம். 11-வது ஆண்டுக்கான பாடத் திட்டங்கள் தயாரிப்பதற்காக சில ஆசிரியர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அது உண்மையா, தவறா என்று தெரியவில்லை. ஆனால் 11வது ஆண்டுக்கு ஒரு பாடத் திட்டம் வைத்துக்கொள்வதானால், அது இப்போது இருக்கும் பாடத் திட்டங்களை விட அதிகமான பாடத் திட்டமாக இருக்கும். 10 ஆண்டு என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் வந்து விட்டன. அதற்கு மேலே 11 ஆண்டு என்று வைத்தால் கல்லூரியில் இப்போது இருக்கும் கல்வித் திறன், 11 பிறகு ஒன்று பிறகு 3 என்று போய், பி.யு.சி. ஸ்டாண்டர்டு மிகக் குறைவாகப்போகும். பிறகு அங்கே ஒரு மாற்றம் செய்ய வேண்டியிருக்கும். அதற்கு அரசு ஒரு குழுவை அமைத்திருந்தாலும், அது முடிவெடுப்பதற்கு 3 மாதகாலம் கொடுத்திருந்தாலும், அது குறித்து ஒரு தெளிவான முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்வு அவசியம் இல்லை என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. சென்ற ஆண்டு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு அறிக்கை அனுப்பினார்கள். அதிலே 'பி' விங் பள்ளிகளில், பரீட்சை எழுதுகிறவர்களில் 10, 15 சதவீதத்திற்கு மேல் தேர்வில் நிறுத்த வேண்டாம் என்று கூறியிருக்கிறார்கள். உள்ளபடியே இது எனக்கு ஒப்புதல் உள்ள அறிக்கைதான். ஏனென்றால், தேர்வுகளே வேண்டாம் என்ற கருத்துடையவன் நான். அந்த அடிப்படையில் சொல்லுகிறேன். இப்போது சில பள்ளிகளில் தேர்விற்கு principles of promotion என்பதற்கு என்ன முறையை அனுசரிக்கின்றார்கள் என்று பார்த்தால்—நான் யாரையும் குறை சொல்ல வேண்டும் என்று இதைச் சொல்லவில்லை, ஆனால் இங்கே உள்ள நமது நண்பர்கள் சிலருக்கு அது தெரிந்திருக்க நியாயமில்லை என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன்—ஐந்து பாடங்கள் இருந்தால், நான்கில் 'பூஜ்யம்' வாங்கலாம். தேர்வு உண்டு. ஆனால் ஐந்து பாடங்களிலும் 'பூஜ்யம்' வாங்கினால் தேற முடியாது. இந்த நிலைமையில்தான், 'தேர்விற்கான அடிப்படை'யை வைத்திருக்கிறார்கள். எட்டாம் வகுப்பில் படிக்கும் பிள்ளைகள் மொத்தம் 500-க்கு 50 வாங்கினால்கூட, ஒன்பதாம் வகுப்பிற்குப் போய்விடலாம். அது என்று இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'பூஜ்யத்திற்கு' மதிப்பில்லை என்று சொல்லுகின்றீர்களா ?

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, நான் சொல்லுவது என்னவென்றால், இந்த நிலைமையை வைத்துக்கொண்டு, தேர்வு மூலம் அடுத்து உள்ள வகுப்பிற்குச் செல்லுவதா வேண்டாமா என்பதைவிட, 'க்யுமுலேடிவ் ரெகார்டை' வைத்துக்கொண்டு பத்தாண்டுகளுக்கு அவர்களை எந்த விதத்திலும் நிறுத்தாமல் அனுப்பிவிடலாம். அரசாங்கத்திற்கும் இதனால் செலவில்லை. இந்தப் பத்தாண்டுக்குப் பிறகு அவர்கள் அரசுத் தேர்வு எழுதலாம். அதிலே அவர்கள் வெற்றி பெற்றால், அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கலாம். அந்த முறையில் முதல் பத்தாண்டு காலத்திற்கு ஒருவரைக்கூட எந்த வகுப்பிலும் நிறுத்த வேண்டாம் என்ற கருத்தை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அமெரிக்காவில் De-schooling society என்று ஒன்று இருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கே செல்லாமல் கல்வி கற்கலாம் என்பது அவர்களுடைய வாதம். அந்த நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கின்றது. அப்படி இருக்கும்போது, அவர்களை இப்படியெல்லாம் நிறுத்தி வைப்பதில் பலனில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அடுத்து, 'ஏ' விங் 'பி' விங் என்று பிரித்துவைத்திருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். இது பலகாலமாக இருந்து வரும் பிரச்சினை. இதிலே Merger க்கு ஒரு யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு அதிகச் செலவில்லாமல் ஒன்றைச் செய்ய முடியும் என்று இதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக 'ஏ' விங்கில் டி.ஈ. ஓக்கள் இருக்கின்றார்கள். இப்போது இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் 'ஏ' விங்கிலுள்ள, 'பி' விங்கிலுள்ள தலைமை ஆசிரியர்களும் பட்டதாரிகளும்தான். மற்றவர்களுக்கு இது இணைந்தாலும் இணையாவிட்டாலும் கவலை இல்லை. எனவே 'ஏ' விங்கிலுள்ள டி.ஈ.ஓ-க்களில் கடைசியாகப் பிரமோஷன் செய்யப்பட்டவர் மிகக் குறைவான சர்வீஸ் உள்ள நிலையில், கடைசியாகப் பிரமோஷன் செய்யப்பட்டவர் என்று வைத்துக்கொள்ளுவோம். அண்மையில் பிரமோஷன் செய்யப்பட்ட அவர் 25 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால், 'பி' விங்கில் 25 ஆண்டுக்காலம் தலைமை ஆசிரியராக இருந்து பணியாற்றியவர்களுக்கு அந்தப் பதவி உயர்வுகளை 'ஸூப்பர் ந்யூமெரரி போஸ்ட்ஸ்' என்று ஏற்படுத்தி அவர்களுக்கு அளிக்கலாம். இப்படி 'ஸூப்பர் ந்யூமெரரி போஸ்ட்ஸ்' உண்டுபண்ணுவதால் அரசுக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படுவதற்கு நியாயம் இல்லை. ஏனென்றால், அவர்கள் ஏற்கெனவே ரூ. 500 என்ற அடிப்படையில் சம்பளம் வாங்குகின்றார்கள். அதேபோல 'ஏ' விங்கிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களை எடுத்துக்கொள்ளுவோம். 'பி' விங்கில் ஆறாண்டுகாலம் பணியாற்றியிருந்தால் தலைமை ஆசிரியர்களாக வந்து

விடுகின்றார்கள் என்று சொல்லுகின்றார்கள். அதிலே கடைசியாக தலைமை ஆசிரியர் பதவிக்கு உயர்த்தப்பட்டவரை எடுத்துக்கொள்ளுவோம். அவர்கள் பதினைந்து ஆண்டுகாலம் ஆகியிருந்தால், அந்த அடிப்படையில் அவர்களுக்கும், 'ஏ' விங்கிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பதினைந்து ஆண்டுகாலம் ஆகியிருந்தால் அவர்களுக்கும் தலைமை ஆசிரியரின் ஊதியம் வழங்கலாம். ஏனென்றால் தலைமை ஆசிரியர்களுடைய ஊதியம் ரூ. 450--25--750 என்று இருக்கின்றது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு செலெக்ஷன் கிரேடு வழங்குவதில் எந்தவிதமான செலவும் இல்லாமல், அவர்களுக்கும் 'ஸூப்பர் ந்யூமெரரி போஸ்ட்ஸ்' கொடுத்துவிட்டு இந்த இணைப்பைச் செய்துவிடலாம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் சொல்லும்போது யு.ஜி.ஸி. ஸ்கேலான து. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசியதைப் பற்றி உறுப்பினர் சொல்லவேண்டியதில்லை. Who is the Minister here? மந்திரிகள் எதற்காக உட்கார்ந்துகொண்டிருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்லுவார்கள். அவர்கள் அல்லவா பதில் சொல்ல வேண்டும். நீங்கள் அவருக்குப் பதில் சொல்லுவது, அவர் உங்களுக்குப் பதில் சொல்லுவது என்றால், What is this?

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, யுனிவெர்ஸிடி கிராண்டு கமிஷனுடைய ரெகமெண்டேஷன்ஸ் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பை, ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். இதைச் செயல்படுத்துவதனால் பல சிக்கல்கள் ஏற்படும் என்றும் அதிலே சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்களுடைய தரம் மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும்; அப்படிச் சிறந்த தரம் உள்ளவர்களுக்கு இந்த ஊதியத்தைக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலாவது— இன்றைக்குப் பலர் பிஎச்.டி. பட்டம் பெற்று வேலை வாய்ப்பு இல்லாது இருக்கின்றார்கள்—அவர்களை வேண்டுமானால் உபயோகித்துக்கொள்ளுவதற்கு சிறந்த தகுதி உடையவர்களுக்காவது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்து, அரசு ஆணைகள், இயக்குநருடைய நடவடிக்கைக் குறிப்புகள் இவை செயல்படுவதில் பெரும் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். உதாரணத்திற்கு இரண்டொன்றைச் சொல்லி அடுத்த நிலைக்குச் செல்ல இருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, நான் ஆறு மணிக்குத் தொடங்கி, இந்தப் பதினைந்து நிமிஷத்தில் ஏழெட்டு நிமிஷம் குறுக்கீடுகளில் போய்விட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அந்த ஏழெட்டு நிமிஷங்களை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். சுருக்கமாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. கே. எஸ். கணபதி : நன்றி. தலைவரவர்களே, 'பி' விங்கில் பணியாற்றும ஆசிரியர் அல்லாதவர்கள், 1—4—1970-க்குப் பின்னால் இப்படி நியமிக்கப்பட்டனர். ஆசிரியர்களைப் போலவே அவர்களுடைய பணிக் காலமும், பணியும் வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் என்று கல்வித் துறை இயக்குநர் மாவட்ட முதன்மைக்கல்வி அதிகாரிகளுக்குச் செயற் குறிப்பினை அனுப்பியிருக்கின்றார்கள். ஆனால் இது வரையில் யாரும் அப்படி வரன்முறைப்படுத்தப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்து, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளில் அதாவது 'ஏ' விங் பள்ளிகளில், பஞ்சாயத்து யூனியனிலிருக்கும் பள்ளிகளில் அல்லது அரசுப் பணியில் இல்லாது உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றியவர்கள் இந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் ஊதியமானது அவர்கள் ஆரம்பத்தில் பெற்றுவந்த ஊதியமாகத்தான் இருக்க வேண்டும் என்றும் இப்போது பெற்று வந்த ஊதியத்திற்குப் பாதுகாப்பு இல்லாது இருந்த நிலையில் அதற்குப் பாதுகாப்பு கொடுக்கலாம் என்றும் ஒரு உத்திரவு வந்தது. அவர்கள் ஊதியத்திற்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு, அரசு அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறது, அவர்கள் வாங்கும் ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று இவ்வாறு 30—1—1975 அன்று உத்தரவிடப்பட்டது. ஆனால் இது வரையில் அந்த உத்தரவு பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து வெளியே போகவில்லை. அரசாங்கம் உத்தரவிட்டு இரண்டு மாதமாகியும், அந்த உத்தரவு இயக்குநர் அலுவலகத்திலேயே இருக்கின்றது என்றால், அந்த ஆசிரியர்களுடைய நிலைமை என்ன? தயவுசெய்து, இது போன்ற காலதாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓய்வு ஊதியத்தைப் பொறுத்தவரையில், அதிலே 80 சதவிதத்தை உடனடியாகக் கொடுத்துவிடலாம் என்று உத்தரவு இருக்கிறது. ஆனால் இந்த உத்தரவு தெளிவாக இல்லை என்று சொல்லி அடிக்கடி திரும்பத்திரும்ப பள்ளிக் கல்வி இயக்குநரிடம் விளக்கம் கேட்கும் நிலைமை நீடிக்கின்றது. குறிப்பாக ஒரு

ஆசிரியர் ஓய்வு பெற்ற பிறகு ஓய்வு ஊதியம் உடனடியாகக் கொடுக்கப்படாவிட்டால், கொடுக்கப்பட வேண்டும் என்று மனுச் செய்துகொள்ளுகின்றார். திருச்சி மாவட்டத்திலே நடந்ததைச் சொல்லுகிறேன். ஓய்வு ஊதியம் உடனடியாக வழங்கப்படாத காரணத்தினால், முதன்மைக் கல்வி அதிகாரியிடம் கேட்டும் பலன் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், கல்விச் செயலாளர் அலுவலகத்தைச் சார்ந்த ஒருவரிடம் அவர் முறையிட்டுக்கொண்டு, பின்னர் அந்த அலுவலர் முதன்மைக் கல்வி அதிகாரியிடம் தொடர்பு கொண்டு 'உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால் பத்து நாட்கள் கழித்தும் எந்த முடிவும் எடுக்கப்படாமலிருக்கவே மீண்டும் பாதிக்கப்பட்ட அந்த ஆசிரியர் முதன்மைக் கல்வி அதிகாரியைச் சந்தித்துக் கேட்டார். அதற்கு அந்த முதன்மைக் கல்வி அதிகாரி, 'உங்களுக்கு அந்தச் செயலகத்தைச் சேர்ந்த அதிகாரியே வழங்குவார், நீங்கள் போய்வரலாம்' என்று உத்தரவிட்டிருக்கின்றார். இது என்ன நிலைமை? ஆசிரியர்கள் தங்களுக்கு ஓய்வு ஊதியம் கிடைக்கவில்லை என்றால், அதிகாரிகளைச் சந்தித்து, அல்லது முடிந்தால் யாரிடமாவது சிபாரிசு வேண்டுமானாலும் பெற்றுக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முறையாகக் கொடுக்கப்பட்டிருந்தால், ஆசிரியர்கள் இப்படி யாரையும் சந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. நியாயமாகக் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் காலத் தாழ்வு ஏற்படும்போது, அவர்கள்தான் என்ன செய்ய முடியும்? இப்படி யாரையாவது சந்திக்கும்போது பல பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. சட்ட மன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் எங்களிடம் குறை சொல்லுகின்றார்கள். இதை நாங்கள் வினாக்கள் மூலமாக இங்கே எழுப்பினால், திருச்சி மாவட்டத்திலே உள்ள அந்தத் தலைமைக் கல்வி அதிகாரி, 'நீங்கள் சட்ட மன்றத்தின் மூலமே வாங்கிக்கொள்ளலாம்' என்று சொல்லுகின்றார். இப்படி அவர் சொன்னது, இந்தச் சபையையே அவமதிப்பதாகக் கருதுகிறேன் நான். ஏனென்றால், அதிகாரிகள் இதைப் போல, 'நீங்கள் செயலாளரிடம் சென்று வாங்கிக்கொள்ளுங்கள், சட்ட மன்ற உறுப்பினரிடம் சென்று வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொல்லுவது முறையாகாது. தெளிவான உத்தரவுகள் இருந்தும் கூட அவர்கள் முறையாகச் செயல்படத் தயங்குகின்றார்கள். வேண்டுமென்றே அவர்கள் இப்படிச் செய்கின்றார்கள் என்றால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல, எந்த அதிகாரியாவது இப்படி 'சட்ட மன்ற உறுப்பினர் மூலம் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லியிருந்தால், அது

முற்றிலும் தவறானதுதான். அப்படிச் சொன்னவர் யார் என்பது குறித்துத் தகவல் தருவாரானால், தக்க நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கின்றது அரசு என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, நான் சொல்லும்போது எந்த அதிகாரி என்று குறிப்பிட்டுத்தான் சொன்னேன். திருச்சி மாவட்டம் முதன்மைக் கல்வி அதிகாரி Chief Educational Officer, Tiruchirappalli என்று சொல்லியிருக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சி.இ.ஓ. என்றாலும் எப்போது பணியாற்றியவர் என்ற கேள்வி இருக்கிறது. இப்போது இருப்பவராக இருக்கலாம் அல்லது முன்பிருந்தவராக இருக்கலாம். தெளிவாகச் சொன்னால், அரசு நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றது.

திரு. கே. எஸ். கணபதி: நன்றி, தலைவரவர்களே, தெளிவான விவரக் குறிப்புக்களை எழுதித் தருகின்றேன். அடுத்து, மார்ச் 31 முடிவிற்குள் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்ற **நினைவோடு** உத்தரவுகள் அனைத்தும் மார்ச்சில்தான் வெளியிடப்படுகின்றன. மற்ற பதினொரு மாதங்களில் இடப்படும் உத்தரவுகளையும் மார்ச் மாதத்தில் வெளியிடப்படும் உத்தரவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், 90 சதவிகித உத்தரவுகள் மார்ச்சில்தான் வருகின்றன. இதனால் எவ்வளவு பாதகம் ஏற்படுகின்றது என்று பார்க்க வேண்டும். ஏனென்றால், உதாரணமாக கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு, ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஸ்காலர்ஷிப் கொடுப்பது என்று இருக்கிறது. அதற்கான விளம்பரம் பத்திரிகையில் மார்ச் மாதம் 19-ம் தேதி வருகின்றது. அவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி 22. மூன்று நாட்களில் அவர்களுடைய விண்ணப்பங்கள் சென்னைக்கு வந்து சேர வேண்டும். இந்த நோக்கில் மாணவர்கள் கல்லூரியில் இல்லாமல் ஸ்டடி லீவ் என்று சொல்லிப் போய்விடுகின்றார்கள். இந்த நோக்கில் இந்த விளம்பரம் வந்து, அவர்களுடைய விண்ணப்பங்கள் கல்லூரிகள் மூலமாக இந்த இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டுமானால், இந்த இரண்டு தினங்களில் இதை எப்படிச் செய்ய முடியும்?

(பிற்பகல் 6-20)

அது மாத்திரமல்ல, அவர்கள் புகைப்படத்தையும் ஒட்ட வேண்டும். அதுவும் எப்படி முடியும்? ஆனால் விநோதம் என்னவென்று பார்த்தால் கல்லூரிக் கல்வி இயக்குநர் அதிலே 9 ஆம் தேதி என்று நாளிட்டு இருக்கிறார். 9 ஆம் தேதி

நாளிட்டது 19 ஆம் தேதி பத்திரிகையிலே வெளிவந்து, 22 ஆம் தேதிக்குள் சென்னைக்கு வரவேண்'ம் என்று சொன்னால், இது எப்படி முடியும்? இது கொடுக்க வேண்டாம் என்ற நோக்கத்தோடுதான் செய்கிறார்களா அல்லது அவ்வளவுதான் முடியுமா என்பது தெரியவில்லை. ஆகவே அதிலே தாமதத்திற்குக் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மிகவும் மகிழ்ச்சியோடு சொல்ல வேண்டிய ஒன்று என்னவென்றால், தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் புத்தகம் வெளியிடும் முறைதான். அந்த முறை மிகவும் வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கிறது. அந்தப் புத்தகங்கள் மிகவும் சிறப்பாக வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆரம்ப காலத்திலே இந்தப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ற புகார்கள் வந்திருக்கலாம். 'டீத்திங் டிரபிள்ஸ்' என்று சொல்வார்கள், அதுபோல எந்த ஒரு நிறுவனமும் ஆரம்பிக்கும்போது முதலில் குறைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் இன்றுள்ள நடைமுறையைப் பார்ப்போமானால், அந்தப் புத்தகங்கள் மே மாதத்திலேயே விற்பனைக்கு தாராளமாக வந்துவிடுகிற காரணத்தினால், குழந்தைகளுக்குப் புத்தகம் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்படவில்லை. நானும் அந்தப் புத்தகங்களைப் பார்வையிட்டேன். மிகமிகச் சிறப்பான முறையில் அவைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே ஒருசில குறைகள் இருக்கலாம். எந்தப் புத்தகத்தை எடுத்தாலும் குறைகள் இருக்கத்தான் செய்யும். ஆனாலும் இந்தப் புத்தகங்கள் மிகச் சிறப்பான முறையிலே வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, என்னுடைய பாராட்டுதல்களை அந்தத் தரமான நூல்களை நியாயமான விலைக்கு வெளியிடும் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திற்குத் தெரிவிக்க இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதுமாத்திரமல்ல, ஆசிரியர்களுடைய பணியிடைப் பயிற்சிக்கும் அந்த நிறுவனத்திலிருந்து பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இவையெல்லாம் வரவேற்கத் தக்கவைகள். தமிழ் நாட்டிலேயுள்ள ஒரு நிறுவனம் குறிப்பாக கடந்த மூன்று நான்கு ஆண்டுகளிலே கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் லாபம் பெற்றுவிட்ட காரணத்தினாலே அதன் மூலம் இதுபோன்ற நல்ல செயல்கள் செய்ய முடிகிறது. நான் இவற்றையெல்லாம் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். இவைகள் பாராட்டத்தக்கவைகள், போற்றி வளர்க்கப்படவேண்டியவைகள், பாதுகாக்கப்படவேண்டியவைகள் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே. எஸ். கணபதி] [1975 ஏப்ரல் 1

நான் கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக்கொள்ளுகிறேன். இந்தக் கல்லூரிகளிலே நிதி காப்பாளர் 'பர்சார்' என்ற ஒரு போஸ்ட் உண்டு பண்ணினார்கள். இருபது போஸ்ட் ஏற்படுத்தினார்கள். அந்த போஸ்ட்கள் 24-7-1974-லே ஏற்படுத்தப்பட்டன. ஆனால் 6-5-1974-லே, இரண்டு மாதங்களுக்கு முன்னதாக, கல்லூரிக் கல்வி இயக்குநர் தொகுதி என்றும், பள்ளிக் கல்வி இயக்குநர் தொகுதி என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பணியாற்றுபவர்கள் இரண்டு பிரிவாக ஆக்கப்பட்டார்கள். அந்த நிலையில் இந்த உத்தரவு வந்ததும் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒருவர் கூட இந்த நிர்வாகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த ஒன் யூனிட் சிஸ்டமானது 6—5—1974 அன்று வந்து அவர்கள் உயர்பதவிக்குப் போகும் வாய்ப்பு தடைசெய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்த வாய்ப்பு கிடைத்தும், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குக் கொடுத்ததுபோல், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குக் கொடுக்கப்படவில்லை. வேறு பல இலாக்காக்களிலிருந்து அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை. இந்த ஆண்டு 10 நிதி காப்பாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட இருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தினால், அந்த 10 பதவிகளையும் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக்கொள்கிறேன். இந்த 'ஒன் யூனிட் சிஸ்டத்திலே' பல குறைபாடுகள் இருக்கின்றன; அந்தக் குறைகளைக் களையும் வகையில் அந்த 'ஒன் யூனிட் சிஸ்டமானது' மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் குறிப்பிடுவதன் காரணம், பி.டபிள்யூ.டி.-யிலே ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் அது செயல்படுத்தப்படவில்லை. டெக்னிக்கல் எஜுகேஷன் டிப்பார்ட்மெண்ட்லே 1965-ஆம் வருஷம் 'ஒன் யூனிட் சிஸ்டம்' போட்டார்கள். ஆனால் அந்த உத்தரவானது 1971 ஆம் வருஷத்தில் திருப்பிப் பெறப்பட்டது. மறுமுறையும் மனுச் செய்தார்கள். பின்பு 1973-ல் அந்த 'ஒன் யூனிட் சிஸ்டம்' பரிசீலிக்கப்பட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்த 'ஒன் யூனிட் சிஸ்டம்' மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வி மானிய விளக்க உரையின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாநிலத்தினுடைய கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற ஒரு உயர்ந்த நோக்கத்துடனும், கல்வியானது அகில

1975 ஏப்ரல் 1] [திரு. பி. ஆர். தாமஸ்]

இந்திய அடிப்படையில் அமைய வேண்டும் என்ற சிறந்த நோக்கத்துடனும் துவக்க நிலை, நடுநிலை, உயர்நிலைக் கல்லூரிகளின் கல்வி அமைப்புத் திட்டமானது மாற்றப்பட இருப்பது வரவேற்கத்தக்கது. பதினோரு ஆண்டு பள்ளிக் கல்வியாக இருந்ததை 10 ஆண்டாக மாற்ற வேண்டும் என்றும், புகுமுக வகுப்பு ஓராண்டாக இருந்ததை இரண்டாண்டுகளாக மாற்ற வேண்டுமென்றும், பட்டக் கல்வியைத் தொடர்ந்து மூன்றாண்டுகளாக நடைபெறச் செய்யவேண்டுமென்றும் சொல்கிற பல நன்மைகள் இருக்கும் காரணத்தினால் அனைவராலும் வரவேற்கத் தக்கதாயிருக்கிறது. பள்ளிகளில் 11 ஆண்டு மாணவர்கள் பாடம் கற்கும் காலத்திலே கட்டுப்பாடுடனும், கண்காணிப்புடனும் ஓரளவுக்கு மேற்பார்வையுடனும் கல்வி கற்று வருகிறார்கள். பின்பு புதிதாக புகுமுக வகுப்பில் நுழைகிறார்கள். புகுமுக வகுப்பில் நுழைந்தவுடனே கட்டுப்பாட்டை இழந்து, நிலை தடுமாறி விடுதலை பெற்றவர்களாக அவர்கள் மாறிவிடுகிறார்கள். இவ்வாறாக இருக்கும்போது பல்கலைக் கழகத் தேர்வு நெருங்கிய காரணத்தினால் பலர் தோல்வி அடைகின்றார்கள். மேலும் அந்தக் காலத்திலே 'இரண்டாண்டு இன்டர்மீடியேட் பாடத் திட்டம்' இருந்த காலத்திலே இருந்த 80 சதவீத பாடத் திட்டமானது இந்த ஓராண்டு காலத்திலே திணித்து வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும் பலர் தோல்வியடைகின்றார்கள். இந்த இரண்டு இடையூறுகளையும் அகற்றும் வகையில் இரண்டாண்டு பட்ட முன் படிப்பு பயிற்சி கொடுக்கப்படுவது, சூழ்நிலைக்கு ஏற்றவாறும் அதோடு போதனாமுறைக் கல்லூரிகளில் வேறுபாடாக அமைவதை ஈடுகட்டும் வகையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக மாணவர்களுக்கு ஒரு பாதுகாப்பான திட்டமாகவும் இருப்பதனால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தகைய திட்டத்தை அமுலாக்கும்போது, இந்த இரண்டாண்டுப் படிப்பு எங்கு அமைய வேண்டும் என்ற கருத்து மூன்று வகையில் இருக்கிறது. ஒன்று பட்டப் படிப்பை தொடர்ந்து நடக்கக்கூடிய கல்லூரியோடு இணைப்பது, இரண்டாவது புதிதாக இரண்டாண்டு 'இரண்டாம் நிலைக் கல்லூரிகளை அமைப்பது', மூன்றாவது தற்போதுள்ள உயர்நிலைப் பள்ளிகளுடன் இரண்டாண்டுகளையும் சேர்த்துப் பயிற்றுவிப்பது. முதல் இரண்டு நிலைகளைப் பொறுத்த அளவிலே எப்போதும் பல்கலைக் கழகத்தினுடைய கண்காணிப்பிலும், கவனிப்போடும் அந்த கல்விப் போதனை இருப்பதால் நிச்சயமாக தரம் குறையாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் அது நாம் யாவரும் அறிந்துகொண்டுள்ள உண்மையும் தான்.

இன்றுள்ள உயர்நிலைப் பயிற்சியைப் பொறுத்த அளவிலே அங்குள்ள பாடத் திட்டமானது சிறந்த முறையில் செவ்வையாக சகல சோதனை வசதிகளுடனும் பயிற்றுவிக்கக்கூடிய நிலையில் இல்லை. அதை நாம் எல்லோரும் அறிவோம்.

ஆகவே, உயர்நிலைப் பள்ளிகளுடன் இந்த இரண்டு ஆண்டைக் கொண்டுபோய் இணைப்பதென்றால் முதலாவது உயர்நிலைப் பள்ளியினுடைய தரத்தையும், அதி லுள்ள சாதனங்களையும், நன்கு ஆராய்ந்த பிறகுதான் கல்வித்துறையானது அனுமதி வழங்க வேண்டும். இல்லாவிட்டால் எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டமானது வகுக்கப்படுறதோ, அதாவது தரத்தை உயர்த்தவேண்டுமென்ற அந்த நோக்கமானது தோல்வியடைந்துவிடும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த உயர்நிலைப் பள்ளிப் படிப்பை 11 ஆண்டிலிருந்து 10 ஆண்டு என்று குறைக்க வேண்டுமென்று, குறைப்பதால், துவக்க நிலையிலோ, நடுத்தர நிலையிலோ, உயர் நிலையிலோ எந்த நிலையிலும் ஆசிரியர் பணி இழப்பு ஏற்படாது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டத்தக்கது. அதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே முறையில் இன்றுள்ள நிலைமையை நான் கூற விரும்புகிறேன். கடந்த இரண்டு மாதங்களிலே அநேக தனியார் பள்ளிகளிலே, "அரசு அனுமதிக்கா விட்டால் உங்கள் பணி தேவையில்லை" என்று அநேக தனியார் நிறுவனங்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள், உத்தரவும் கொடுத்திருக்கிறார்கள். இது நியாயமற்ற, சட்ட விரோதமான ஒரு செயலாக இருக்கிறது. இப்பொழுது வந்துள்ள கல்விச் சட்டத்திற்கு முரணாக இருக்கிறது. ஆதலால் அரசு உடனடியாக தனியார் நிறுவனங்களுக்கு கண்டிப்பான ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். துவக்க நிலையைப் பொறுத்த அளவிலே, ஐந்தாண்டுக் கல்வியை நாம் போதிக்கிறோம். அதிலும் ஓரளவுக்கு ஆசிரியர்களுக்கு வேலைப்பளு இருக்கத்தான் செய்கிறது. தொடர்ந்து 7 பாட வேளையும் ஒரே ஆசிரியர் இருக்கிறார் என்றால், மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்படு கிறது. அவர்களுடைய தரமும் குறைகிறது. ஆதலால் துவக்க நிலையிலுள்ள பள்ளிகளிலே தொழில் ஆசிரியர்கள் நியமிப்பதுபற்றி அரசு ஆராயலாம் என்பது என்னுடைய கருத்து. அவ்வாறு துவக்க நிலையிலேயும் தொழில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால், மாணவர்களின் தரமும், கல்வியின் தரமும் குறையாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். மாணவர்களிடையே இருக்கும் சலிப்பும் குறையும் என்று கருதுகிறேன்.

இடைநிலையைப் பொறுத்த அளவிலே, அரசு 14 நாட்களுக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள். அதுவும் வரவேற்கத்தக்கது. ஆனால் இடைநிலையில் இன் றுள்ள கல்வித் தரத்தைப் பார்த்தால், திட்டமான, முழுமையான, ஆழமான அறிவும், ஆற்றலும் ஆசிரியர்களுக்கு இருந்தால்தான் அவர்கள் மாணவர்

(பிற்பகல் 6-30)

களுக்குத் தன்னம்பிக்கையுடன் பாடம் போதிக்க முடியும். இன்று பயிற்சி பெற்ற அந்த இடைநிலை ஆசிரியர்கள் என்ன கருதுகின்றார்கள்? அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சி போதுமானதாக இல்லை, மேலும் 2, 3 முறை பயிற்சி இருந்தால், இந்தப் புதிய பாடத் திட்டத்தைச் சிறந்த முறையிலே போதிக்க முடியும் என்று கருதுகிறார்கள். அதனாலேயே அவர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கேட்டுக் கொள்கின்றேன். ஆனால் கணித பாடத்தை, அறிவியல் பாடத்தைப் பொறுத்த அளவிலே, பட்டதாரி ஆசிரியர் களை அதற்குப் பயன்படுத்தலாம் என்று கருதுகிறேன். உயர்நிலைப் பள்ளி களைப் பொறுத்த வரையில், கடந்த ஆண்டில் 15,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது, பாராட்டுதலுக்குரியது. மேலும் உயர்நிலைப்பள்ளி ஆசிரி யர்களுக்குப் பயிற்சி கொடுத்து இந்தத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள்-ஆசிரியர்கள்" எண்ணிக்கையைப் பொறுத்த அளவிலே, மாவட்ட நிலையில் சில தனியார் பள்ளிகளில் 70-லிருந்து 90 மாணவர்கள் இருக் கின்றார்கள். எழுபதிலிருந்து 90 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் எவ்வாறு பாடம் போதிக்க முடியும் என்று எனக்கே விளங்கவில்லை. எனவே இந்த எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், எவ்வளவுக்கெவ்வளவு மாணவர்கள் குறைவாக இருக்கின்றார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு கல்வி தரமாக, சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிக மாக்கப்பட்டு கல்வியின் தரத்தைக் காக்க அரசு முயல வேண்டும்.

ஆங்கில போதனை முறை ஒன்றுதான் பள்ளியில் இருக்க வேண்டுமென்றால், இது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருக்கின்றது. அதிகமான மாண வர்கள் சேருகின்ற அளவுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலே அவர்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். புதிய பாடமுறை பள்ளிகளில் புகுத்தப்படுகின்றது என்றால் அதற்கு வேண்டிய கருவிகள், சாத னங்கள், வசதிகளை தேவையான அளவிற்கு ஏற்படுத்த வேண்டும். இல்லை யென்றால் வெறும் 'சாக் அண்டு டாக் மெத்தட்' என்ற முறையிலேதான் அமையலாமே தவிர அது சிறப்பாக இராது. எனவே பள்ளிகளுடைய தரத்தைப் பெருக்க வசதிகள் பெருகவேண்டும். புதிய கல்வித்திட்டம் பற்றிச் சொல்லும்போது புதிய கல்வித் திட்டங்கள், பாடப் புத்தகங்கள் புகுத்தப்படும் போது, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் விளக்கப் புத்தகங்கள் தேவைப்

படுகின்றபோது, நூல் நிலையங்கள் மூலம் கொடுக்கப்படுமானால், அவைகளை மாணவர்களும் பயன்படுத்துவார்கள், ஆசிரியர்களும் பயன்படுத்துவார்கள், அதன் மூலம் ஆசிரியர்கள் சிறந்த சேவைகளைச் செய்வார்கள்.

பள்ளியிறுதி ஆண்டிலே ஒரு தேர்வு அரசாங்கத்தாரால் நடத்தப்படுகிறது. இடைநிலையிலே 8-வது வகுப்பிலே ஒரு தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனி நாட்களில் பள்ளி ஆண்டு முடிந்த பின்னர் நடத்தப்படுகிறது. பள்ளி ஆண்டுக்குள்ளேயே ஒரு திட்டவட்டமான ஒரு நாளிலே மாநிலம் முழுவதிலும் அந்தத் தேர்வு நடத்தப்படலாம். மாவட்ட வாரியாக நடத்தப்படலாம் என்ற கருத்தையும் கூறிக்கொள்கின்றேன். மாவட்ட வாரியாக கேள்வித்தாள்கள் தயாரிக்கப்பட்டு நடத்தப்படலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகாறும் 5-வது வகுப்பு முடிந்த உடனே ஒரு தேர்வு நடப்பதில்லை. தேர்வு நடத்தப்படவேண்டும் என்று கருதுகிறேன். ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், ஆசிரியர்கள் போதனை முறையின் தரத்தையும், மாணவர்களின் அறிவு நிலையையும் சீர்தூக்கிப்பார்ப்பதற்குத் தேர்வு பயன்படும் என்றுதான் கூறுகிறேனேயல்லாமல் வேறல்ல. இதுதான் சிறந்த முறை என்பதற்காக இதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பத்திரிகைக் குறிப்பிலிருந்து புதிய முறையிலே கல்லூரியில் பாட போதனை ஆரம்பிக்கப்பட்டால், நம்முடைய மாநிலத்தினுடைய கல்வித் துறையின் அறிக்கையைப் பார்த்ததிலிருந்து, ரூ. 15 கோடி பணம் அதிகமாக முதல் ஆண்டுக்குச் செலவாகும் என்று பார்த்தேன். அதிலே ரூ. 12 கோடியானது கல்லூரிகளை நிலைப்படுத்துவதற்கும், வேண்டிய சாதனங்களைக் கொடுப்பதற்கும் ஆகும் என்று பார்த்தேன். ரூ. 3 கோடி அதிகமான ஆசிரியர்கள் நியமனத்திற்கு என்று இருந்தது. ஆனால் அதற்குமேல் ஒரு கோடி ரூபாய் யு.ஜி.ஸி. ஊதியம்பற்றிய பரிந்துரையைச் செயலாற்றினால் ஏற்படக்கூடிய செலவினங்கள் என்று காட்டப்பட்டிருக்கின்றது. எப்போது நாம் அகில இந்திய அடிப்படையிலே கல்வி அமைப்பை மாற்றுகிறோமோ அதே நேரத்திலே கல்லூரி ஆசிரியர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று அரசைப் பணிவன்போடு வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால் ஒரு சில மாநிலங்களில் அதை நிறைவேற்றியிருக்கின்றார்கள். நம் மாநிலத்தைச் சேர்ந்த பேராசிரியர் பெருமக்கள் மிகவும் நிதானத்துடனும் நேர்மையுடனும் எந்தவிதமான சிக்கலும் உருவாகாத நிலையிலே நாட்டில் கல்வித் துறைப் பணியைச் சிறந்த முறையில் செய்கின்ற காரணத்தால், இதை நாம் விரைவில் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.பி., பிரிவு பள்ளிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். 1786 ஆவது அரசு ஆணையின்படி, இரண்டும் இணைக்கப்படவேண்டும் என்று இருக்கின்றது. அதை நாங்கள் வரவேற்கிறோம். அனைத்து ஆசிரியர்களும் வரவேற்கிறோம். ஆனால் அந்த விகிதம் சரியாக இல்லை. 30 சதவிகிதம் மாவட்ட அலுவலர்கள் பதவி பி விங் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவது சரியல்ல. அதிகமாக வழங்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய கருத்து. ஏனென்றால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையிலிருந்து 344 பள்ளிகள் ஏ பிரிவில் இருக்கின்றன. 1,472 பள்ளிகள் பி பிரிவில் இருக்கின்றன. ஏ பிரிவில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் 6,773, பி பிரிவில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் எண்ணிக்கை 30,198. அவர்கள் ஒன்று பூரணமான இணைப்பு வேண்டும் அல்லது சதவிகித அளவிலே, எண்ணிக்கை அளவிலே இணைப்பு இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறார்கள். 1—4—1970 க்குப் பிறகு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நிலையை உறுதிப்படுத்தாத நிலை இருக்கிறது. அரசு கருணையோடு அதைப் பார்த்து, அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

பணிப்பாதுகாப்புச் சட்டத்தைப் பொறுத்து, சில வார்த்தைகள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் தனியார் நிறுவனத்திலிருந்து வருபவன் தான். ஒரு சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளியைச் சேர்ந்தவன் என்ற போதிலும், எந்தப் பிரிவைச் சார்ந்தாலும், எந்தப் பிரிவினருக்கும் பணிப் பாதுகாப்பைப் பொறுத்த அளவிலே, எந்தச் சலுகைகளையும் நிறுவனத்தாருக்கு வழங்கவேண்டாம் என்று திட்டவட்டமான ஒரு மன நிலையோடு இந்த அரசை நான் வேண்டிக்கொள்கிறேன். எவருக்கும் விதி விலக்கு பணிப் பாதுகாப்புக்கு அளிக்க வேண்டாம். சமீபத்திலே மதுரையில் ஒரு பள்ளியைச் சார்ந்த 11 ஆசிரியர்கள் 22 மாதங்களாக பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றார்கள். மதுரையில்கூட நானும் மற்ற உறுப்பினர்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கண்டு சொன்னோம். அவர்களும் மிகவும் மனம் இரங்கி அதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார்கள். இயக்குநர் அவர்கள் மூலமாக ஒரு ஆணை பிறப்பித்தார்கள். அந்த இயக்குநருடைய ஆணைக்கு இன்று வரை அந்த நிர்வாகம் கீழ்ப்படியாத அளவிலே 22 மாதங்களாக அந்த ஆசிரியர்கள் பணியிழந்து இருக்கின்றார்கள் என்பதை நான் கூறிக் கொள்கிறேன். இன்னும் சில நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. சில தனியார் நிறுவனங்கள் ஆசிரியர்களைப் பணம் கேட்டு வாங்கி அந்தப் பணத்தைப் பயன்படுத்தி நீதி மன்றங்களில் வழக்குத் தொடருகிறார்கள். ஏன் ஆசிரியர்கள் பணம் கொடுக்கிறார்கள் என்று கேட்கலாம். அவர்கள் பணம் கொடுக்காவிட்டால், அந்த ஆசிரியர்கள் உடனடியாக ஏதோ காரணம் கூறப்பட்டு வெளியேற்றப்படுகிறார்கள். இந்த நிலையிலே இப்போது நிறைவேற்றப்

பட்டிருக்கின்ற பணிப்பாதுகாப்புச் சட்டத்திற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். ஆசிரியர்கள் வாழ்த்துகின்றார்கள். 1—12—1974 லிருந்து நடைமுறையில் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆனால் இன்று வரை நாங்கள் எந்த நன்மையும் பெறாத நிலையில் இருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நடுவர் மன்றங்கள் நியமிக்கப்படவில்லை. அந்த 29-வது சட்டத்திலே, பணிப் பாதுகாப்புச் சட்டத்திலே, நடுவர் மன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம் என்று இருக்கின்றது. ஆனால் நடுவர் மன்றங்கள் நியமிக்கப்படாத காரணத்தால், அநேக மேல் முறையீடுகள் தடைப்பட்டு நீதி கிடைக்காமல் இருக்கின்றது என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடைநிலை ஊழியர்களைப் பொறுத்த அளவிலே, அவர்கள் பணியை வரன் முறைப்படுத்தி வளர் ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உடல் பயிற்சி ஆசிரியர்கள், முதல் பிரிவினரைப் பொறுத்த அளவிலே 1-1-1971 லிருந்து சதவிகித அடிப்படையிலேயும், 1-4-1974லிருந்து 10 ஆண்டுக்கால, பணிக்கால அடிப்படையிலேயும் வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக 1,600 ஆசிரியர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருப்பது பாராட்டுக்கு உரியதாக இருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் வருகிற ஆண்டிலாவது வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு முடிவாக ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-40)

கல்வியின் தரம் குறைகிறது. மாணவர்களின் தரம் குறைகிறது என்று கூறப்படுகிறது. கல்வியின் தரம் குறைவதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒழுக்கமின்மை, உழைப்பு இன்மை. முன்பு இரண்டு ஆண்டுகளில் தான் பட்டப் படிப்பு இருந்தது. ஆனால் இப்போது மூன்று ஆண்டுகளாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஒழுக்கம் உள்ள, தரமுடைய, ஊக்கமுள்ள மாணவர்கள் மூன்று ஆண்டுகளில் பட்டப் படிப்பை முடிக்காமல் இரண்டு ஆண்டுகளில் முடிப்பதற்கு வாய்ப்பும் வசதியும் அரசு செய்துகொடுத்தால், நிச்சயமாக கல்வி நிலையங்களிலே அமைதி நிலவும் என்று கூறி இந்த வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்வித் துறையில் . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்குப்பின் ஒருவர் பேச விருப்பதால் சீக்கிரம் முடித்துவிட வேண்டும்.

திரு. க. அறிவழகன் : இது கல்வித்துறையில் ஒரு புரட்சிகரமான ஆண்டு என்று கூற வேண்டும். கல்வித் துறையில் பாடத் திட்டங்களிலே மாறுதல்—பல்கலைக் கழகங்களைப் புதிதாக அமைத்தல்—ஆசிரியர்களுக்கான சட்டத்தை நிறைவேற்றி அதை அமுலுக்குக் கொண்டுவருவதிலே பிரச்சினைகளைத் தீர்த்தல்—இதுபோன்ற புதிய நிகழ்வுகள் இந்த ஆண்டிலே துவங்கியிருக்கின்றன. கல்வி என்பது உலக மார்க்கெட்டிலே செல்லுபடியாகக்கூடிய ஒரு தொழிலாக இருக்கிற காரணத்தால், கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற எவ்வளவு பெரிய தொகையும் சிறு தொகையாகத்தான் ஆகும் என்று நான் கருதுகிறேன். நம்மைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகள் மிக வெற்றிகரமாக இருக்கின்றன என்று சொன்னாலும் நம்முடைய கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் நாடு எங்கும் பேசுகிற பேச்சுக்கள் இந்தத் துறையில் செயலாக்கப்படுமானால், அதைவிட ஒரு பெரிய வெற்றி இந்தச் சமுதாயத்திற்கு இருக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். நம்முடைய கல்விக் குறிப்பிலேகூட, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களின் கருத்திலே நூற்றிலே ஒரு பங்குதான் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுடைய கருத்து நூறு பங்கும் இந்த நாட்டில் செயலாக்கப்பட வேண்டும். இது விரைந்தும் ஆக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

அடுத்து பல்கலைக்கழகம் அமைப்பதில், அதுவும் தொழில் நுட்பத் துறையைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகம் அமைப்பதில் நாம் பெரு முயற்சி எடுத்துக்கொண்டுள்ளோம். பல்கலைக் கழகம் அமைப்பதை யூ.ஜி.சி. இந்த ஆண்டு ஜனவரி 15-ம் நாள் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அது ஏற்றுக் கொண்ட அடுத்தநாளே நாம் பல்கலைக் கழகத்தைத் துவங்கியிருக்க வேண்டும். ஒருவேளை சென்னை பல்கலைக்கழகம் A. C. College of Technology ஐ இணைப்பதற்கு அதனுடைய ஒப்புதலைத் தருவதற்குக் காலதாமதம் ஆனாலும் கூட, நாம் இந்தப் பல்கலைக்கழகத்தை இந்த மாதத்தில், அதுவும் சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் இருக்கிற இந்த மாதத்தில் துவக்கி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். பல்கலைக் கழகத்தைத் துவக்குவதில் மத்திய அரசிடம் அல்லது யூ.ஜி.சி.யிடம் நாம் தவம் கிடக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இந்திராகாங்கிரஸ் கட்சியினர் ஆளுகின்ற மாநிலங்களிலே மத்திய அரசைப்பற்றியோ, யூ.ஜி.சி. ஐப்பற்றியோ கவலைப்படாமல் பல பல்கலைக் கழகங்களை இதுவரையிலே துவக்கியிருக்கிறார்கள். கேரளாவிலேகூட யூ.ஜி.சி.யினுடைய அனுமதி இல்லாமல் ஒரு பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது. இன்றையதினம் யூ.ஜி.சி. ஓடிப்போய் அங்கே நிதி உதவிகளைச் செய்து தருகிறது. மாநில சுயாட்சிபற்றிப் பேசுகிற

நாம், கல்வித் துறை என்பது நம்முடைய துறை, அந்தத் துறையிலே நாம் செய்ய வேண்டிய காரியங்களை நம்மிடத்திலே நிதி இருந்தாலும், இல்லா விட்டாலும் துவக்க வேண்டும். அதிலே முழுத் துணிவையும் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, பொறியியல் தொழில்நுட்பத் துறையைப் பொறுத்தவரையில், இந்த மாநிலத்தில் நெறியாளராக இருந்த திரு. டி.முத்தையன் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிற எஞ்ஜினியரிங் கல்லூரிகள், சேலம் நகருக்குப் பக்கத்திலே இருக்கிற கல்லூரியானாலும், அல்லது இந்த நாட்டில் பரந்து இருக்கிற பொறியியல் கல்லூரிகளானாலும், அவைகளையெல்லாம் பார்க்கிறபோது ஒரு பல்கலைக்கழகத்தைத் துவக்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் அவர்கள் செய்து விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதை எவரும் உணருவார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இந்தப் பல்கலைக்கழகத்தைத் துவக்குவதற்கு எந்தத் தடையும் இருக்காது என்கின்ற காரணத்தால், விரைந்து மேற்கொள்ளுதல் நம்முடைய அரசுக்குப் பெரிதும் மதிப்பைத் தரும் என்பதையும் சொல்லிக் கொள்வேன். இன்றையதினம் சென்னையிலே இருக்கிற பல்கலைக்கழகத்தைவிட கோயம்புத்தூரிலே ஒன்று இருப்பது நம்முடைய திரு. தாமோதரனுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. ஆனால் திருச்சியிலே பல்கலைக்கழகம் துவக்கு வதை நான் ஆதரிக்க முடியவில்லை. காரணம் ஒரேமாதிரியான பல்கலைக் கழகங்கள் பலவற்றைத் துவக்குவதிலே பலன் இல்லை. நாம் வெவ்வேறு துறை களிலே பல்கலைக்கழகத்தைத் துவக்கியாக வேண்டும். நம்முடைய நிதித் திட்டத்திலே ரூ. 110 கோடியிலே ரூ. 16 லட்சத்தை தமிழ் கலை, பண்பாடு, வளர்ச்சிக்காகவும் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதான்

திரு. க. அறிவழகன் : தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதுதான் . . .

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திரு. தாமோதரன் என்று குறிப்பிட்டார்கள். எந்த தாமோதரன் என்று சொல்ல வேண்டுகிறேன்.

திரு. க. அறிவழகன் : திரு. ஏ. ஆர். தாமோதரனுக்கு தென்னார்க்காடு மாவட்டத்திலே முதலிலேயே ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. அதிலே அவர்களுக்கு நிறைய இடம் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். **நான் சொன்னது திரு. ஜி. ஆர். தாமோதரனைத்தான்.**

University for Tamil Culture and Art and Music என்று ஒன்றைத் துவக்க வேண்டும்.

Thiru A. R. Damodaran :. . . . . . and Dance.

திரு. க. அறிவழகன் : நம்முடைய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எப்பொழுது நாட்டியத்திலே இவ்வளவு அக்கறை கொண்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் நம்முடைய மேல்சபைத் தலைவர் அவர்கள், 30 ஆண்டு களுக்கு முன்னாலே நாடகத்திலே நடித்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் நாடகத்திற்கும் சேர்த்து ஒரு பல்கலைக்கழகத்திலே இடம் இருக்க வேண்டும் என்று சொல்லலாம். நான் அதை முழுதும் ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கதாநாயகனாக நடித்திருக்கிறேன். (சிரிப்பு)

திரு. க. அறிவழகன் : அன்றையதினம் கதாநாயகனாக இருந்தவர்கள் இன்றையதினம் ஒரு சபையின் நாயகனாகவும் இருக்கிறீர்கள். அது பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பல நூற்றாண்டுகளாக தமிழ் நாட்டின் பெரியவர்கள், அதற்கென்று ஒரு தனித் தன்மை, தனிப் பண்பாடு, தனிக்கலை, தனி இலக்கியம், மிகப் பெருமையான கோவில்கள், சிற்பங்கள் என்று இவைகளையெல்லாம் அமைத்திருக்கிற ஒரு சூழ்நிலையில் இவற்றை எடுத்துக்காட்டத்தக்க வகையிலே ஒரு பல்கலைக் கழகத்தை நாம் அமைத்தாக வேண்டும். அதுவும், நாவலர் அவர்கள் அதைத் துவக்குவதற்கு மிகவும் விரைவாக செயல்களை மேற்கொண்டால், நாம் எதிர் காலத்தில் தமிழ் நாட்டினுடைய பெருமைகளையெல்லாம் உலக அரங்கிலே எடுத்துச் சொல்லுவதற்கு வசதியாக இருக்கும்.

நம்முடைய பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், பள்ளிக் கல்வி இயக்குநராக இருப்பவர்கள் அதிகாரங்களைப் பரவலாக ஆக்குகிற முயற்சி களிலே, நாட்டிலே இருக்கிற மாவட்டங்களினுடைய முதன்மைக் கல்வி அலுவலர்களை முழு அதிகாரம் பெறுபவர்களாக நியமிக்கிற ஒரு நல்ல முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிகாரங்கள் பரவலாக்கப்படுவது, வேறு ஒரு துறையிலே செயல்பட்டாலும் செயல்படாவிட்டாலும், கல்வித் துறையிலே நிச்சயமாகச் செய்யப்பட்டாக வேண்டும். அப்படிப் பரவலாக்கப் பட்ட அதிகாரங்கள் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களிடத்திலே சிக்கி விடுகின்றன. கல்வித்துறையிலே அவர்கள் சீனியராக இருக்கிறார்கள் என்பதைத் தவிர அதற்குரிய முழுத்தகுதிகளைப் பலரும் பெறாத காரணத்தால் அந்த அதிகாரிகள் நிர்வாகத்தை சீரோடும் சிறப்போடும் செய்ய முடியவில்லை. கல்வித் துறையிலே அதிகாரங்களைப் பரவலாக்குகிற முயற்சிகளிலே மிகுந்த சிறப்பான முடிவுகளை எடுத்தாக வேண்டும். ஆயிரக்கணக்கான பிரிவு பள்ளிகள் இன்றையதினம் அரசுப் பள்ளிகளோடு இணையும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றன. **அந்தப்** பள்ளிகளுக்கு என்று தனி வாரியத்தை

அமைத்தாக வேண்டும். அந்த வாரியத்தில் பி. விங்கினுடைய ஆசிரியர்கள் அமர வேண்டும். அப்படி ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் அமர்ந்து நடத்துகின்ற கல்வி இலாகாதான் ஒரு உண்மையான கல்வி இலாகாவாக இருக்க முடியும். அதுவல்லாமல் கல்வி இலாகாவினுடைய நடைமுறைகள் ஆசிரியர்களால் இன்றையதினம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவோ, குழந்தைகளுக்கு முழு நன்மையைத் தரத்தக்கதாகவோ நிச்சயமாக அமையாது என்பதையும் நான் சொல்லிகொள்வேன். நான் இந்த சபைக்கு வந்த நாளிலிருந்து கல்வித் துறையினுடைய ஆட்சிமுறையை மாற்றியமைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறேன். அதிலேயும், நான் இங்கிலாந்து நாட்டுக்கு கல்வித்துறையைக் காணுவதற்காகச் சென்றிருந்தபோது, அங்கே ஆசிரியர் பிரதிநிதிகள் இல்லாத கல்வி வாரியங்கள் எதுவும் இல்லை. ஒவ்வொரு மாவட்டம் தோறும் ஆசிரியர் பிரதிநிதிகள் 'லோகல் எஜுகேஷன் அதாரிடி'யிலே அதிகாரம் பெற்றவர்களாக அமர்ந்திருந்தார்கள். அப்படிப்பட்ட அதிகாரம் மிக்க வாரியங்களை அமைப்பதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் நிச்சயமாக முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, யூ.ஜி.சி. பரிந்துரை செய்துள்ள புதிய சம்பள விகிதங்களைக் கொடுப்பதில் என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன? இந்த நாட்டிலே உள்ள பல்வேறு மாநில அரசுகள் பல்வேறு நிலைமைகளைத் தெரிவித்து வருகின்றன. உதாரணமாக கேரள அரசு கூட, புதிய விகிதத்திலே தந்தால் அரசிலே வேலை பார்க்கிற மற்ற ஊழியர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறது. அது இன்றைக்கு பத்திரிகையிலே வந்திருக்கிறது. யூ.ஜி.சி.யினுடைய சம்பள விதங்களை பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற காரணத்தால், மற்ற ஆசிரியர்களுக்கு அதனால் மனத்தாங்கல் ஏற்படும் என்றோ, ஊழியர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படும் என்றோ இந்தச் சமுதாயத்தில் சொல்வது பொருத்தமற்றதாகும். ஏனெனில் நம்முடைய சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு என்பதும் ஊதியத்தில் வேறுபாடுகள் என்பதும் இல்லாத ஒன்றல்ல. இவைகள் நிறைந்திருக்கிற ஒரு சமுதாயமாகும். இதிலே முதலாளிகளும் இருக்கிறார்கள், தொழிலாளர்களும் இருக்கிறார்கள். சட்டமன்றத்துக்கு உள்ளேயும் இருக்கிறார்கள் சட்டமன்றத்துக்கு வெளியேயும் இருக்கிறார்கள். இப்படி முதலாளிகளும் தொழிலாளிகளும் நிறைந்திருக்கிற நாட்டில் ஒரு வேளை உண்ண உணவுக்கு வசதியில்லாத மக்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள். அப்படி இருக்கிற காரணத்தாலே 'யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் ஸ்கேலை' பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கோ, கல்லூரி ஆசிரியர்களுக்கோ கொடுத்து விட்டால், அதனால் மற்ற துறைகளிலே வேலை பார்க்கிற ஊழியர்களுக்கு எல்லாம் கோபம் வந்துவிடும் என்று சொன்னால், அது

பொருத்தமற்றதாகும். ஆசிரியர்கள் சமுதாயத்திலே மதிக்கப்படத் தக்கவர்கள் என்ற காரணத்தாலே, பல்கலைக் கழக ஆசிரியர்களும் நிச்சயமாகப் பெரு மதிப்பிற்குரியவர்கள். அப்படி கல்லூரி ஆசிரியர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் நிறையச் சம்பளம் வழங்கப்படும்போது, அவர்கள் நிறையச் சம்பளம் வாங்குவதைப் பார்த்து, இந்த சமுதாயம் அவர்களை மதிக்குமே தவிர, மகிழ்ச்சியடையுமே தவிர, அவர்களுக்கு நிறையச் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று என்றையதினமும் அதற்காக வருத்தப்படாது என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வேன். ஆனால் இந்த யு.ஜி.சி. என்பது எப்படி இருக்கிறது? யு.ஜி.சி-க்கு கொடுக்கப்படுகிற மொத்தம் 35 கோடி ரூபாயிலே 30 கோடி ரூபாயை அது மத்திய பல்கலைக் கழகங்களுக்கு வழங்குகிறது. அங்கே இருக்கக்கூடிய பேராசிரியர்கள் உடனே அதைப் பெறுகிறார்கள். டெல்லி பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர்களுக்கு 1974 ஆம் ஆண்டிலேயே யு.ஜி.சி. சம்பளத்தைக் கொடுத்து விட்டார்கள். டெல்லி பல்கலைக் கழகத்தில் இருக்கிற ஆசிரியர்கள் பெறுவார்கள், உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் பெறுவார்கள், விஸ்வபாரதியில் உள்ளவர்கள் பெறுவார்கள், மத்திய அரசினுடைய பல்கலைக் கழகங்களிலே இருக்கக்கூடியவர்கள் பெறுவார்கள். ஆனால் நம்முடைய பல்கலைக் கழகங்களிலே, கல்லூரிகளிலே இருக்கக்கூடியவர்கள் பெற்றால், அதைப் பார்த்து மற்ற ஊழியர்கள் வருந்தப்படுவார்கள் என்று சொல்லுவது பொருத்தமற்றதாகும். கேரள அரசு அப்படிப்பட்ட ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிற காரணத்தால் தான், நான் இதைச் சொன்னேன்.

(பிற்பகல் 6-50)

அடுத்து 'ஓரியன்டல்' கல்லூரிகளைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ஓரியன்டல் கல்லூரிகள் நல்ல தரத்தைப் பெறுவதற்கான ஒரு நல்ல திட்டத்தை நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகம் இப்பொழுது உருவாக்கியிருக்கின்றது. இனிமேல் புலவர் பட்டம் என்பது இல்லாமல் பி.லிட். என்ற பட்டம் வரவிருக்கிறது. அப்படி பி.லிட். பட்டம் என்று வரவிருக்கிற காரணத்தாலே, ஓரியன்டல் கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும், அவர்கள் விரிவுரையாளர்களாக இருந்தாலும் சரி, பேராசிரியர்களாக இருந்தாலும் சரி, மற்ற கலைக் கல்லூரிகள் அல்லது விஞ்ஞானக் கல்லூரிகளில் பணியாற்றுபவர்கள் பெறும் சம்பளங்களை நாம் வழங்கியாக வேண்டும்.

அடுத்து, நம்முடைய கல்வித் துறைக்கு என்று மருத்துவர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள் போன்றவர்களை நியமிக்கிற முறையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். இங்கேகூட ஊர்ந்து செல்லுகிற மருத்துவ ஊர்திகள் எல்லாம்

உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று இந்த அறிக்கையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால், வட சென்னையிலே இருக்கிற 1,77,426 குழந்தைகளைச் சோதனை செய்து பார்த்ததில், 1,718 பேருக்கு தொழுநோயினுடைய முதன்மை நிலை உருவாகியிருக்கிறது என்று கண்டுபிடித்து, அதற்குரிய மருத்துவத்தை "ஜெர்மன் லெப்ரசி அசோசியேசன்" செய்து வருகிறார்கள். நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் நம்முடைய பள்ளிகளிலே படிக்கிற பிள்ளைகளுக்கு தொழுநோயினுடைய கொடுமையை நீக்குவதற்கு எடுக்கப்பட்டிருக்கிற முயற்சியைப் போல எந்தவிதமான நோயும் அவர்களுக்கு வராமல் தடுப்பதற்கு ஒரு நாலாயிரம் பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்கூடத்துக்கு அல்லது 2 ஆயிரம் பிள்ளைகளுக்கு மேல் படிக்கிற பள்ளிகளுக்கு எல்லாம் ஒரு டாக்டர் நியமிக்கப்படவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். ஒருவேளை இன்றையதினம் டாக்டர்கள் வேலை இல்லையென்று வேலை நிறுத்தம் செய்கிறார்களே, அவர்களுக்காகச் சொல்லுகிறேன் என்று நினைக்கலாம். ஆனால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்காக மாத்திரமல்ல நான் கூறுவது. நன்றாக டாக்டர் வேலைக்குப் படித்து விட்டு மருத்துவத் துறையிலே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு நாம் தருவதன் மூலம் நம்முடைய குழந்தைகள் பலருடைய வாழ்வில் ஒரு நல்ல மகிழ்ச்சியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அது முழு வாய்ப்பு தருவதாகவும் அமையும்.

அடுத்து, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் உடற் கல்வியிலே தேர்ச்சி பெற்றவர்களுக்கு தனிப்பயிற்சி கொடுக்கக்கூடிய பல்வேறு முறைகளை உருவாக்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மீனவர்கள் சமுதாயத்திலே இருக்கக்கூடிய நல்ல துடிப்பான இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து பிறகு அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியிலே அவர்களை நீச்சல் போட்டியில் கலந்துகொள்ளச் செய்தால், நிச்சயமாக அவர்கள் தங்கள் திறமைகளைக் காட்ட முடியும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே நாம் இதைச் செய்வதன் மூலம் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய குல வேறுபாடுகளை அகற்றுவதற்கு இந்தத் திட்டம் பயன்படக்கூடும். அந்த முறையிலே அவர்களைத் தேர்ந்தெடுக்க முயற்சிக்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்வேன்.

புத்திசாலி மாணவர்களுக்காக விடுதிகளைக் கட்டுவதற்கான ஒரு முயற்சியை நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். அதைத் துவக்கி வைத்துப் பேசும்போது நம்முடைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் "புத்திசாலிகளுக்கான விடுதிகளை எங்கோ ஓரிடத்தில் கட்டி விடுவதினால் பயனில்லை, புத்திசாலிகள் எங்கே இருந்தாலும் அவர்களுக்கு விடுதிகள்

கிடைக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும்" என்று சொன்னார்கள். நாம் அந்த முறையில் திறமை மிக்க மாணவர்கள் எங்கே இருந்தாலும், அவர்கள் எந்தத் துறையிலே இருந்தாலும், கல்வித் துறையிலே இருந்தாலும், இசைத் துறையிலே இருந்தாலும், நீச்சலிலே இருந்தாலும், ஓட்டப் பந்தயத்திலே இருந்தாலும் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு அந்தப் புதிய பயிற்சியைத் தருகிற முயற்சியை மேற்கொண்டாக வேண்டும். இப்பொழுது நாம் "காம்பிரிஹென்சிவ் ஸ்கூல்" என்று சொல்லக்கூடிய வினைச் செயல் பள்ளிக் கூடங்களை, உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்கியிருக்கிறோம். ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு இருக்கிற ஒரு பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு நாம் செலக்ஷன் கிரேட் தந்தும் அந்த ஆசிரியர்களுக்கு இன்னும் தரவில்லை. அதைத் தருவதற்கு மாண்புமிகு நாவலர் அவர்கள் நிச்சயமாக முன் வந்து இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்த அவையிலேயே எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். கைத்தொழிலுக்கு மிகுந்த முக்கியத்துவம் தர வேண்டுமென்று இதிலே பல்வேறு இடங்களில் விளக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கைத்தொழிலை ஒரு முக்கிய பாடமாக எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு வரையிலே அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். அதோடு எல்லாப் பாடங்களும் முக்கியமானவை தான் என்பதை உணர்த்துகிற முறையில் நம்முடைய கல்வித் திட்டத்தை மறுபரிசீலனை செய்கிற முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாக் குழந்தைகளுக்கும் மதிய உணவு கிடைக்கிற திட்டத்திலே இன்றையதினம் ஏறக்குறைய 19 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றார்கள். இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய 60 இலட்சம் குழந்தைகளுக்கும் மதிய உணவுத் திட்டத்திலே உணவு வழங்கும்பொருட்டு மிகச் சிறப்பான முறையில் மதிய உணவு சமையற்கூடங்களில் உணவு சமையல் செய்யப்பட வேண்டுமென்று, கேட்டுக் கொள்வதோடு அதற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்வேன். அப்படிச் செய்தால், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற வறட்சியாக இருக்கக்கூடிய இடங்களிலுள்ள பிள்ளைகள் ஒரு வேளை உணவாவது உண்ணுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். 'உண்டி கொடுத்தவர் உயிர் கொடுத்தார்' என்ற சங்க இலக்கியப் பாடலை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லிச் சொல்லி, நான் அதை நல்ல முறையிலே கேட்டுக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். அவர்கள் இந்த

சமுதாயத்துக்கு உண்டியும் கொடுக்க வேண்டும், உயிரும் கொடுக்க வேண்டும், கல்வியும் கொடுக்க வேண்டும். அதன் மூலம் இந்த சமுதாயம் வளருவதற்கு உலக அரங்கில் தமிழும், தமிழ் ஆசிரியர்களும், தமிழ் மக்களும் மிகுந்த பெருமையைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்று சொல்லி தமிழ் ஆசிரியர்களுடைய் நிலையை உயர்த்துவதற்கான முயற்சிகளை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் எடுத்துக் கொண்டதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன், வணக்கம்.

* THIRU D. V. D' MONTE : Hon. Chairman, Sir, I must confess a feeling of disappointment on going through this Policy Note on Education, particularly in the matter of sports and games. Whilst I certainly appreciate the steps taken by the State Government to build Sports Stadia in eight districts, I still feel that something more has to be done in this direction, particularly in providing playing fields. This is certainly a serious and pressing matter. Any open space cannot be utilised as a playing-field. If we are to develop our sporting talent, we have got to provide much more in the way of facilities and we must tap the rural talent as well. Unless sufficient playing-fields are made available to schools, colleges and other institutions, the present sorry state of athletics in our country cannot be redeemed. I am sorry to say that in a vast country like ours with so much sporting talent—certainly we can be world-beaters in many directions—we need basic amenities. Therefore, one of the things which I plead for today is more provision for playing-fields.

Sir, if we take hockey, our national game, the position is even worse. We in the City have just one hockey stadium at Egmore which is used day in and day out, several times a day and the ground is certainly unfit to be used for national or exhibition events. The City certainly needs a special Stadium and more so in the districts. The hockey associations functioning in the districts have great difficulty in arranging matches because of the inadequacy of playing-fields and Sports Stadia. So, my appeal to the Hon. the Minister for Education is—I know his great interest in sports and I know the great trouble he has taken in promoting sports in our State—that he may consider these aspects as well.

Sir, in the United Kingdom, we have what is called the National Playing-fields Association. Whilst many of our eminent sportsmen have appealed to the Union Government to initiate and

constitute such a body. I feel that the Tamil Nadu Government would do well to consider starting what may be called the Tamil Nadu Playing-fields Association. Certainly we can emulate the good example that the United Kingdom has done and in this way we will be providing the wherewithal to young boys and girls who will be able to utilise and develop their sporting talent to the good of the State.

Sir, I have one more point which I want to make and I have done. It is with regard to the State Sports Council. Here again, the Hon. the Minister for Education has been taking various steps to see that this body functions effectively. But I am sorry to say that many of the affiliated associations do not have general body meetings year in and year out and they just carry on their functions. How can sporting and athletic talent develop on this basis when the basic administration of these bodies is not run properly? These are the two points I have made and I have done.

Thank you.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-00)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and Other Papers.

£ 120. Policy Note on Animal Husbandry 1975–76. (Tamil).

121. A Review on Tamil Nadu Police, 1974–75. (English and Tamil).

122. A Review on Tamil Nadu Fire Service 1974–75. (English and Tamil).

இணைப்பு

[59-ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி

மானியக் கோரிக்கை 17 —கல்வி.

(1975–76 வரவு- செலவு மதிப்பீடு.)

I. தோற்றுவாய்

கல்விக்காக 1975–76ஆம் ஆண்டில் ரூ. 118 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகை 1975–76ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ 538 கோடியில் ஏறத்தாழ 22 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

2. கல்விக்கான செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. 1974–75ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும், 1975–76ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும்

1975 ஏப்ரல் 1]

ஒப்பிட்டு, "277. கல்வி" என்னும் தலைப்பின் கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	1974–75 வரவு-செலவு மதிப்பீடு.			1975–76 வரவு-செலவு மதிப்பீடு.		
	திட்டத்தின் கீழ் வாராச் செலவினம்.	திட்டச் செலவுகள்.	மொத்தம்.	திட்டத்தின் கீழ் வாராச் செலவினம்.	திட்டச் செலவுகள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(ரூபாய் இலட்சத்தில்.)			
1. தொடக்க நிலைக் கல்வி	50,76	2,31	53,07	55,88	2,79	58,67
2. இடைநிலைக் கல்வி ..	34,24	2,18	36,42	36,86	1,92	38,78
3. பல்கலைக் கழகக் கல்வி ..	9,00	1,19	10,19	8,63	94	*9,57
4. சிறப்புக் கல்வி	13	5	18	59	21	80
5. தேசிய மாணவர் படை, விளையாட்டு, முதலியவை.	1,18	11	1,29	1,12	10	1,22
6. பிற இனங்கள் (அகவிலைப் படி உயர்வு)	3,06	..	3,06	3,31	..	3,31
7. தொழில் நுட்பக் கல்வி ..	3,62	72	4,34	3,74	46	4,20
மொத்தம்—277. கல்வி ..	1,01,99	6,56	1,08,55	1,10,13	6,42	1,16,55

* தமிழ் வளர்ச்சி குறித்த சுமார் ரூ 60 லட்ச செலவு "பல்கலைக் கழக கல்வி" என்ற தலைப்பில் இருந்து 'சிறப்புக்கல்வி' என்ற தலைப்புக்கு 1975–76-ல் மாற்றப்பட்டு உள்ளதே 1975–76-ல் கல்லூரிக் கல்விக்கான செலவு குறைந்தது போலத் தோன்றுவதற்குக் காரணம் ஆகும்.

[1975 ஏப்ரல் 1

3. 17-வது மானியக் கோரிக்கையில், "277. கல்வி" என்ற தலைப்பின்கீழ் ரூ 117 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பொது நூலகங்கள், தொல்பொருள்ஆராய்ச்சி, அரும் பொருட் காட்சிச் சாலைகள், பிற இனங்கள் ஆகியவற்றிற்கும் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது :—

	திட்டத்தின் கீழ்வராத செலவினம்.	திட்டத்தின் கீழ் வரும் செலவினம்.	மொத்தம்.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
277. கல்வி ..	1,10,13	6,42	1,16,55
278. கலை, பண்பாடு.	18	11	29
தொல்பொருள் ஆராய்ச்சி.	5	8	13
அரும் பொருட்காட்சி சாலைகள்.	8	1	9
பொது நூலகங்கள் ..	81	7	88
288. சமூகப் பாதுகாப்பும் நலனும்—உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன.	27	..	27
மொத்த மானியக் கோரிக்கை "17. கல்வி".	1,11,52	6,69	1,18,21

4. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள்

1975 ஏப்ரல் 1]

கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1975–76-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

(1)	திட்டத்தின் கீழ் வராத செலவு. (2)	திட்டச் செலவு. (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
பொதுக் கல்வி.			
(அ) வருவாய்க் கணக்கில் செலவு—			
314. சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் ..	..	75	75
மானியக் கோரிக்கை 37—பொதுப்பணி			
277. கல்வி—அரசுப் பள்ளிகள் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள்.	..	4	4
266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் ..	2,87	..	2,87
(ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு—			
459. பள்ளிக் கல்வித்துறை அலுவலகக் கட்டடங்கள்.	6	..	6
477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் ..	..	1,37	1,37
483. வீடு கட்டுவதற்கான மூலதனச் செலவு—அரசு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் வீடுகள்	..	2	2
677. கடன்கள்— தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக்கடன் ..	1	..	1
தேசிய கடன் படிப்புதவித் தொகைகள்	40	..	40
மொத்தம்—பொதுக் கல்வி. ..	3,34	2,18	5,52

(1)	திட்டத்தின் கீழ் வாராத செலவு. (2)	திட்டச் செலவு. (3)	மொத்தம். (4)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
தொழில் நுட்பக் கல்வி.			
477. அரசு தொழில் நுட்பக் கல்வி கட்டடங்களுக்கான மூலதனச் செலவு ..	..	15	15
677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள்.	12	..	12
மொத்தம்—தொழிற் கல்வி ..	12	15	27
மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும் ..	3,46	2,33	5,79

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால், 1975–76-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ 124 கோடியாகும்.

5. அரிசனங்கள், பின் தங்கிய வகுப்பினர் நலப்பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றுக்கான செலவும், சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இப் பல்வகை இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ 17 கோடியாகும்.

6. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றுக்கு, அந்தந்தத் துறைகளின் கீழ் 1975–76 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார், ரூ 7 கோடி,

மேற்கண்ட இரு இனங்களுக்காகும் செலவையும் (ரூ 17 கோடியும், ரூ 7 கோடியும்) கணக்கில் கொண்டால், 1974–75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ 148 கோடியாக இருக்கும்.

7. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி, 477. கல்வி மூலதனச் செலவு, 677. கடன்கள் முதலியன) கல்வியின் பல்வேறு துறைகளுக்கு 1975–76 ஆம் ஆண்டில் செய்யப்படும் திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.

	பொறுப்பேற்ற செலவினம். (1)	1975–76-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கப்படும் செலவினங்கள். (2)	மொத்தம். (3)
	(ரூபாய் இலட்சத்தில்.)		
பொதுக் கல்வி—			
(1) பள்ளிக் கல்வி ..	4,71	92	5,63
(2) கல்லூரிக் கல்வி ..	1,35 +23	29	1,64 +23
	6,06 +23	1,21	7,27 +23
தொழில் நுட்பக் கல்வி ..	57	8	65
பொது நூலகங்களும் கலைப் பணிகளும்.	51 +3	2	53 +3

8. இந்த நாட்டில் எழுத்தறிவை ஊட்டுவதிலும், கல்விக்காகச் செலவு செய்வதிலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் நமது தமிழகம் ஒன்ருகும். 14 வயதுவரை சிருர் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதிலும், வேறுபல மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது. வரவு, செலவு மதிப்பீட்டில் அனைத்துவகைக் கல்விகளுக்குமான மொத்தச் செலவுத் தொகை ஏறத்தாழ முப்பது விழுக்காட்டுக்கு மேலாகும். பல்வகை நிலைக் கல்விகளும் மேன்மேலும் பரவவேண்டும் என்பதிலும் அவற்றின் தரத்தை மேன்மேலும் சிறக்கச் செய்ய வேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனினும், இயலும் இடங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடித்து. கல்விக்காகச் செலவிடப்படும் அனைத்துச் செலவினங்களும் மிகுபயன் தருவனவாக அமையும்படி பார்த்துக் கொள்வதும் இன்றியமையாதது. இது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்பிட அரசு 1975 சனவரித் திங்களில் ஒரு குழுவை அமைத்துள்ளது.

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வியின் ஆண்டு வரம்புகள்.

9. கல்வியின் பல்வேறு நிலைகளின் ஆண்டு வரம்புகளில் மாற்றம் செய்வது தேவையா என்பது கடந்த சில ஆண்டுகளாகக் கல்வியாளர்கள் கவனத்தில் உள்ளது. வடஇந்திய மாநிலங்களில் பலவற்றுள்—உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராசஸ்தானம், பஞ்சாப், அரியாணு, மேற்கு வங்காளம் போன்றவற்றில்—14 ஆண்டுகளில் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் முடிவடைகின்றன. தென் இந்திய மாநிலங்களாகிய தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகியவற்றிலும், குசராத், ஓரிசா, பீகார் போன்றவற்றிலும் பள்ளிக் கல்விக்கும் கல்லூரிக் கல்விக்கும் சேர்த்து 15 ஆண்டுகள் ஆகின்றன. 15 ஆண்டு பள்ளி, கல்லூரிப் படிப்பு உள்ள மாநிலங்களிடையேயும் பல்வேறு நிலைக் கல்விகளின் ஆண்டு வரம்புகள் ஒரே மாதிரியாக இல்லை. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் போன்றவற்றில் 10+2+3 என்ற ஆண்டு வரம்புள்ளது. பீகாரில் (11+1 & 12)+3 என்ற ஆண்டு வரம்பும், ஓரிசாவில் (11+1)+3 என்ற வரம்பும் உள்ளன. தமிழ் நாட்டில் பள்ளிக் கல்வி பதினெரு ஆண்டுகள், கல்லூரிகளில் புகுமுக வகுப்பு ஒரு ஆண்டு, பட்டப் படிப்பு மூன்று ஆண்டுகள் என்ற நிலை உள்ளது. (பிற மாநிலங்களில் உள்ள ஆண்டு வரம்புகளைப் பற்றிய விவரங்கள், 1973 டிசம்பரில் மைய

அரசுக் கல்வித் துறைக்கு டாக்டர் சுக்லா குழு தந்த அறிக்கையிலிருந்து எடுத்தவை) நாடு முழுவதும் கல்வியின் பல்வேறு நிலைகளின் ஆண்டு வரம்பு ஒரே மாதிரியாக ஆக வேண்டுமாயின் அதற்காக ஆகக் கூடிய பெருமளவு கூடுதல் செலவை ஏற்க மைய அரசு இசைந்து முன்வர வேண்டும். இதற்கிடையில் 1975 சனவரியில் இவ்வரசு கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழு இப் பிரச்சினையைத் தீர ஆராய்ந்து தற்பொழுது தமிழ் நாட்டில் உள்ள ஆண்டு வரம்புகளை மாற்றுவது உசிதமா அல்லவா என்பது குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்.

II. தொடக்கக் கல்வி

மாணவர் சேர்ப்பு :—

1971ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கின்படி தமிழ் நாட்டில் 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த (1—5 வகுப்புகளில் படிப்பதற்குரிய) சிருர்களின் எண்ணிக்கை 1974–75-ல் 61·6 இலட்சமாகும். இவர்களில் 90·3 விழுக்காட்டினர் ஆகிய 55·6 இலட்சம் சிருர்கள் (நான்காவது திட்டக் காலத்திலும் 1974–75 ஆம் ஆண்டிலும் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 6·42 இலட்சம் சிருர்கள் உட்பட) பள்ளிகளில் படித்துக் கொண்டுள்ளனர். 1975–76-ல் இவ்வயதுத் தொகுதியினரில் மேலும் ஒரு இலட்சம் பேரைப் பள்ளிகளில் சேர்ப்பது குறிக்கோள் ஆகும்.

2. 1974–75-ல் 11—14 வயதுத் தொகுதிச் சிருர்கள் (6—8 வகுப்புக்கட்குரியவர்) 27·7 இலட்சம் பேர் இருந்தனர். அவர்களில் 52·6 விழுக்காட்டினர் ஆகிய 14·56 இலட்சம் பேர் (கடந்த ஆறு ஆண்டுகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 2·28 இலட்சம் உட்பட) பள்ளிகளில் படித்து வந்தனர். 1975–76-ல் இவ்வயதுச் சிருர்களில் மேலும் 50,000 பேரைப் பள்ளிகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வித் தர உயர்வு :—

3. பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் ஆசிரியர்-மாணவர் விகிதம் சீராக இருப்பதற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1 ஆம் நாளன்று 32,565 தொடக்கப் பள்ளிகளில் (உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட) 1,78,766 ஆசிரியர்கள் (நான்காவது திட்டக் காலத்தில் கூடுதலாக நியமிக்கப் பெற்ற சுமார் 25,000 ஆசிரியர்கள் உட்பட) பணியாற்றி வருகின்றனர். அப்பள்ளி

களில் பயின்ற மொத்தச் சிறுர்களின் எண்ணிக்கை 61·14 இலட்சமாகும். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் தற்போது 1:35 ஆகும். 1975–76-ல் 6—11 வயதுத் தொகுதிச் சிறுர்கட்காக 400 கூடுதல் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பணியிடங்களும், 11—14 வயதுத் தொகுதிச் சிறுர்கட்காக 600 கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் ஏற்படுத்தப்படும்.

4. பள்ளிகளில் போதனையின் தரத்தை உயர்த்துவதற்கான சிறப்பு நடவடிக்கையாக, கடந்த சில ஆண்டுகளாக உயர் தொடக்க நிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்கள் நியமனம், படிப்படியாக குறைக்கப்பட்டு இடைநிலை ஆசிரியர்களே நியமிக்கப்பட்டு வருகிறுர்கள். இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதி பெற்றிருந்தும் உயர் தொடக்க நிலைப் பதவிகளில் பணி செய்த ஆசிரியர்களுக்குப் பயனளிப்பதற்காக அவர்களுடைய பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தி, அவர்களை இடைநிலை ஆசிரியர்களாக அமர்த்தும் திட்டம் கடந்த சில ஆண்டுகளாகச் செயல்படுகிறது. இவ்வாறு இதுவரை 37,700 உயர் தொடக்கநிலை ஆசிரியர் பதவிகள் இடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. (1974–75-ல் உயர்த்தப்பட்ட 4,200 பதவிகள் உட்பட.)

5. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாயும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தால் 12,720 தொடக்கப் பள்ளிகளும், 3,334 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1975–76-ல் மேலும் 500 தொடக்கப் பள்ளிகளும் 200 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடையும்.

6. ''ஐக்கிய நாடுகள் பன்னாட்டுக் குழந்தைகள் நிதி'' (யூனிசெப்) உதவியுடன் 1971–72 கல்வியாண்டு முதல் 1973–74 கல்வியாண்டு முடிய சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு மாவட்டங்களில் 50 தொடக்கப்பள்ளிகளிலும் 30 உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அறிவியல் பாடத்தை பயிற்றுவிக்கும் தரத்தை உயர்த்துவதற்கான முன்னோடித் திட்டமொன்று செயல்பட்டது. 1974–75 முதல் யூனிசெப் உதவியுடன் அத்திட்டம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 1,550 தொடக்கப் பள்ளிகட்கும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கும் பயனளிக்குமாறு விரிவுப் படுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம், ரூபாய் மூன்று இலட்சம் செலவில், 1,550 தொடக்கப் பள்ளிகட்கு அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளையும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கு, ரூ 20 இலட்சம் செலவில், அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளையும் இலவசமாக வழங்கியுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் ரூ 10 இலட்சம் செலவில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு 20 நாட்களும், உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு 42 நாட்களும் என்ற அடிப்படையில் 1,550 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 3,600 உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சியும் தரப்பட்டுள்ளது. இப்பயிற்சிச் செலவிலும் பாதியை யூனிசெப் ஏற்கும்.

7. தொடக்கப் பள்ளிகட்கு இன்றியமையாத நூலகப் புத்தகங்களை வாங்கி வழங்கிட 1974–75-ல் ரூ. 1,00,000 அனுமதிக்கப்பட்டது. 1975–76 ஆம் ஆண்டிலும் ரூபாய் ஒரு இலட்சம் இப்பணிக்குச் செலவிடப்படும்.

8. மாநிலத்திலுள்ள 5,800 உயர் தொடக்கப் பள்ளிகளில் சிலவற்றிலேயே தனியான உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர். எனவே, 1973–74-ல் 195 உடற்பயிற்சி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். 1975–76ல் மேலும் 150 பேர் புதிதாக நியமிக்கப்படுவர்.

9. தாம் வாழுமிடத்திற்கேற்ற பயனுள்ள தொழில்களை மாணவர்கள் கற்றுக்கொள்ளும் பொருட்டும், தொழில் நுணுக்கத்தையும் உற்பத்தித் திறனையும் அறிந்துகொள்ளும் பொருட்டும், தொடக்கப் பள்ளிகளிலும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மாநிலத்திலுள்ள உயர் தொடக்கப் பள்ளிகளில் சுமார் 4,900 பள்ளிகளில் ஏற்கனவே பகுதிநேர அல்லது முழுநேர கைத்தொழில் ஆசிரியர்கள் உள்ளனர். 1973–74-ல் ஏற்படுத்தப்பட்ட 576 முழுநேரக் கைத்தொழிலாசிரியர்கள் பணியிடங்களும் இதில் அடங்கும். இந்த 576 பணியிடங்களில் நேரிடை நியமனம் வழி ஏறத்தாழ 300 முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் நியமனத்திற்கேற்ற தகுதி பெற்றிருந்தும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்களுக்கு எஞ்சிய பணியிடங்கள் தரப்பட்டன. 1975–76-ல் கூடுதலாக 150முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

நண்பகல் உணவுத் திட்டம்.

10. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படிச் செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய—மிகவும் ஏழைக் குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க-உயர் தொடக்க நிலைப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 19·58 இலட்சம் மாணவர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத்துறை நடத்திவரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1·60 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1975–76 ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ நாலரைக் கோடி ரூபாய் செலவிடப்படும். இத்துடன் அமெரிக்க ''கேர்'' நிறுவனமும் ஆண்டொன்றுக்கு ரூபாய் ஆறு கோடி பெறுமானமுள்ள உணவுப் பொருட்களை இத்திட்டத்திற்கு இலவசமாக உதவி வருகிறது.

11. ஆண்டில் 200 நாட்களுக்கு, ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 6 காசு வீதம், வழங்கப்பட்டு வந்த அரசு உதவித் தொகை 1974ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1ஆம் நாள் முதல் 10 காசாகவும், உள்ளாட்சி நிறுவனங்கள் வழங்க வேண்டிய பங்குத் தொகை 4 காசிலிருந்து 5 காசாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 1·17 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

12. நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப் பெற்றுச் சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் உணவை எடுத்துச் சென்று வழங்கும் மையச் சமையற் கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு வடஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டங்களில் இயங்கி வரும் 97 சமையற் கூடங்களும் ''கேர்'' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம் மாவட்டங்களில் சுமார் 3·75 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற் கூடங்களினின்றும் பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 டெம்போ உந்து வண்டிகளையும் ''கேர்'' நிறுவனம் வழங்கியுள்ளது. இவ் வண்டிகளையும், சமையலுக்குத் தேவையான கருவிகளையும், பழுது பார்க்க ''கேர்'' நிறுவனத்தின் உதவியுடன் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் ஒரு பணிமனை நிறுவப்பட்டுள்ளது. அப் பணிமனை தற்போது செயல்பட்டு வருகிறது. தேவையானஊழியர்களுடன், நிர்வாகப் பொறியாளர் ஒருவர் அப் பணிமனைக்குப் பொறுப்பாளராக உள்ளார்.

13. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து வைப்பதற்காக ''கேர்'' நிறுவன உதவியுடன் ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் செலவில் 6 வட்டாரக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

இலவசப் புத்தகங்கள் வழங்குதல்.

14. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப்புத்தகங்களும், சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாட புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின்கீழ் ஆண்டு தோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். 1972-73 ஆம் ஆண்டிலிருந்து பாடநூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது. பாடநூல் நிறுவனம் இப்பணிக்காக 1974–75-இல் ஏறத்தாழ ரூ. 20 இலட்சமும் 1975–76-இல் ரூ. 25 இலட்சமும் செலவிடும். முதல் வகுப்பு மாணவர்கட்குச் சிலேட்டுகள் வழங்கும் வகையில் 1975–76-இல் ரூ. 2·50 இலட்சத்தை மாநில அரசு செலவிடும்.

கட்டடங்கள்.

15. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதற் பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75 வரை தொடக்கப் பள்ளிக் கட்டடம் ஒன்றுக்கான அரசு மானியம் ரூ. 8,000 ஆகவும். பள்ளி நிருவாகத்தின் குறைந்த அளவுப் பங்குத் தொகை ரூ 4,000 ஆகவும் இருந்தன. உயர் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரை அப்பங்குகள் முறையே ரூ. 13,000 ஆகவும், ரூ. 6,000 ஆகவும் இருந்தன. 1974-75-லிருந்து தொடக்கப் பள்ளி/உயர் தொடக்கப் பள்ளி கட்டட மானியம் ரூ. 10,000,/ரூ. 17,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நிருவாகத்தினர் தரவேண்டிய குறைந்த பட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000 / 8,000 ஆக உயர்த்தப்பட்

டுள்ளது. 1975–76-இல் நகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளிக் கட்டடங்களுக்கு மானியம் தர ரூ. 4 இலட்சமும், அரசினர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ரூ 14 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1975–76-ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கட்காக ரூ. 75 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும். இவை தவிர, பரிசுச் சீட்டு வருவாயிலிருந்தும் பள்ளிக் கட்டடங்கள் கட்ட வகைசெய்யப் பட்டுள்ளது.

16. ஆசிரியைகள் கிராமப்புறங்களில் தங்கிப் பணியாற்ற ஊக்குவிப்பதற்காக ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியைகட்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் இதுவரை ஏறத்தாழ 1,600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 211 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்.

17. தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ 32,565 தொடக்கப் பள்ளிகளுள் ஏறத்தாழ 28,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றுள் 22,400 பள்ளிகள் (சுமார் 19,200 தொடக்கப் பள்ளிகளும், சுமார் 3,200 உயர் தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நிலவரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியம் கல்வி நிதிக்குச் செல்கிறது. தொடக்கக் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை மாற்றியமைக்கப் பட்ட வட்டார வகைப் பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்துகொள்கின்றன.

18. சுமார் 1,400 பள்ளிகளை (சுமார் ஆயிரம் தொடக்கப் பள்ளிகளும், சுமார் நானூறு உயர் தொடக்கப் பள்ளிகளும்) நகராட்சிகள் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் பாதிக்கு இணையான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகளின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது.

III. உயர்நிலைப் பள்ளிக் கல்வி

1. 1974–75-ல் தமிழ் நாட்டில் 14–17 வயதுத் தொகுதியினர் 22·87 இலட்சம் பேர் இருந்தனர். இவர்களில் 33 விழுக்காட்டினராகிய 7·52 இலட்சம் பேர் (கடந்த ஆறு ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளிற் சேர்க்கப்பட்ட 1·15 இலட்சம் மாணவர்களையும் சேர்த்து) உயர்நிலைப் பள்ளிகளில் 9–11 வகுப்புகளில் பயின்றனர். இம் மாநிலத்தில் 2,882 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 16·55 லட்சம் மாணவர்கள். பணிபுரியும் ஆசிரியர்கள் 69,500 பேர்கள். ஆசிரியர்களுள் ஏறத்தாழ 10,000 ஆசிரியர்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் நியமனம் பெற்றவர்கள். 1975–76-ம் ஆண்டில் 14–17 வயது மாணவர்களுள் சுமார் 30,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும் சுமார் 600 பட்டதாரி ஆரிசிரியர்களைக் கூடுதலாக நியமிக்கவும் கருதப் பட்டுள்ளது.

(க) கல்வித்தர உயர்வு.

2. புதிய பாடத்திட்டத்தின் கீழ் ஏழாம் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வுக்கூடங்களை அமைப்பதற்கும், நிதியுதவி அளிக்கும் திட்டம் 1975–76-லும் தொடரும். இதுகாறும் 867 உயர்நிலைப் பள்ளிகள் அறிவியற்கூட நிதியுதவியைப் பெற்றுள்ளன. 1975–76-ல் மேலும் 11 உயர்நிலைப் பள்ளிகள் இந்நிதியுதவியைப் பெறும். 1974–75 முதல் ஒவ்வொரு பள்ளிக்கும் ஆன செலவுத் தொகை ரூ. 40,000-லிருந்து ரூ. 55,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆய்வுக்கூட கட்டடத்திற்காக ரூ. 37,000-ம் அறிவியல் சாதனங்களுக்காக ரூ. 18,000-ம் செலவிடப்படும், தனியார் உயர்நிலைப் பள்ளிகளும், நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளும் பெறும் ஆய்வுக்கூட மானியம் ரூ. 40,200 ஆகும். இதில், ரூ. 18,000 கருவிகளுக்காகும். இக்கருவிகளை பள்ளிக் கல்வித் துறை இயக்குநரே விலைக்கு வாங்கி வழங்குகிறார். கட்டடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 22,200, இதில் எது குறைவோ அது, என்ற அடிப்படையில் ஆய்வுக்கூட கட்டட மானியம் தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளுக்கு அளிக்கப்படுகிறது.

3. இதுகாறும் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போதுள்ள 17 நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகளோடு 1974–75-ல் எட்டு வண்டிகளும் 1975–76-ல் ஐந்து வண்டிகளும் சேர்க்கப்படும். இதனால் தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 30 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆய்வுக்கூட வண்டி பணிபுரியும் நிலை ஏற்படும்.

4. மாநில அறிவியல் கல்வி நிறுவனம், மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனத்தின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ளது. அது அறிவியற் கல்வியின் வளர்ச்சி, அறிவியற் பாடத்திட்டச் சீரமைப்பு, ஆசிரியர் மறு பயிற்சி, ஆய்வுகள், வெளியீடுகள், விரிவுப் பணிகள் ஆகியவற்றைக் கவனித்து வரும். உயிரியல், இயல்பியல், வேதியியல், கணிதம், ஆகியவற்றில் கோடைக் காலப் பயிற்சி வகுப்புகள் 1969-லிருந்து ஆண்டு தோறும் " கல்வி ஆய்வுகள் மற்றும் பயிற்சிக்கான தேசியக்குழு ", " பல்கலைக் கழக நிதியுதவிக் குழு " ஆகியவற்றின் உதவியோடு அறிவியல் ஆசிரியர்களும், கணித ஆசிரியர்களும் பயன்பெறும் பொருட்டு நடத்தப்பட்டு வருகின்றன. ஆயிரத்திற்கும் அதிகமான உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஏற்கனவே பயிற்சி பெற்றுள்ளனர். 1975–76-ல் மேலும், ஏறத்தாழ 40 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் மறு பயிற்சி பெறுவர்.

5. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்கும் நோக்குடன் பொருத்தமான நூலகப் புத்தகங்கள் வாங்கப் பட்டுப் பள்ளிகட்கு வழங்கப்படுகின்றன. 1974–75-ல் பள்ளி ஒவ்வொன்றிற்கும் ரூ. 500 மதிப்புள்ள புத்தகங்கள் வீதம் 684 உயர்நிலைப் பள்ளிகட்கு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை ஏறத்தாழ 2,472 உயர்நிலைப் பள்ளிகள் இத் திட்டத்தால் பயன்பெற்றுள்ளன. 1975–76-ல் ரூ. 85,000 மொத்தச் செலவில் மேலும் 85 அரசு உயர்நிலைப் பள்ளிகள் நூலக புத்தகங்களைப் பெறும்.

6. 1974–75-ல் உயர்நிலைப் பள்ளிகளில் ஒலி-ஒளிக்கல்வி வசதிகளை ஏற்படுத்தவும், மாநிலத் திரைப்படச் சேமிப்பு நிலையத்தை முன்னேற்றவும், ரூபாய் ஒரு இலட்சம் அனுமதிக் கப்பட்டுள்ளது. சென்னையிலும் அதன் அண்மையிலுமுள்ள சுமார் 300 பள்ளிகளில் 1975–76-ல் தொலைக் காட்சிக் கருவிகள் நிறுவப்படக்கூடும்.

7. உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற்பயிற்சி தருவதற்காக பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளை (Comprehensive High Schools) நிறுவுமாறு கோத்தாரிக் கல்விக் குழு பரிந்துரைத்துள்ளது. வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தல், மின் இயக்கிகள் பின்னுதல் (Electric Motor Rewinding), உந்து வண்டி பழுது பார்த்தல் (Motor Mechanism), வேளாண்மைப் பொறியியல், ஆகியவற்றைப் பாட நேரத்திற்குப் புறம்பான வேளைகளில் கற்பிக்கும் வண்ணம் 1974–75-ல் 19 உயர் நிலைப் பள்ளிகள் பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டன. இத்திட்டம் 1975–76-ல் விரிவாக்கப்பட்டு, மேலும் சில உயர்நிலைப் பள்ளிகளில் அந்தந்த இடங்களின் சூழ்நிலைத் தேவைகட்கு ஏற்ப வெவ்வேறு தொழிற் பயிற்சிகளைத் தொடங்கி அப்பள்ளிகள் பல்வகைப் பயிற்சி தரும் பள்ளிகளாக உயர்த்தப்படும்.

மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்.

8. சென்னையிலுள்ள மாநிலக் கல்வி நிறுவனம், கல்வி ஆய்வுகள், பயிற்சிக்கான தேசிய மன்றத்திற்கு நிகரான மாநில அமைப்பு ஆகும். அது பள்ளி நிலையில் பணியிடைப் பயிற்சிக்கான பொறுப்பை ஏற்றுள்ளது. பல்வகைப் பணியிடைப் பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றி வருவதோடு, கற்பித்தல் முறைகள், பாடத்திட்ட முன்னேற்றம், ஆகியவற்றில் ஏற்படும் பல்வகைப் பிரச்னைகள் குறித்த ஆய்வுகளையும் நடத்தி வருகிறது. தொடக்கக் கல்வி விரிவுப்பணி மையமொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனத்தின் பணிகளை விரிவாக்கி கல்வித் துறையில் ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றுக்கான சிறந்த நிலையமாக இதனை உருவாக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் 1975 பிப்ரவரி முதல், அரசுத் தேர்வு இயக்குநருடைய நிர்வாகத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்.

9. இம்மாநிலத்திலுள்ள 2,882 உயர்நிலைப் பள்ளிகளுள் ஏறத்தாழ 50 விழுக்காடு பள்ளிகள் போதுமான இடவசதி யற்றவையாக உள்ளன. 1975–76-ல் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 14 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், நகராட்சி மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் வழங்கவும் ரூ. 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டங்கள் கட்டவும், அவற்றைப் பழுது பார்க்கவும் ரூ. 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பழிப்பு உதவித் தொகைகள்.

10. தமிழ் நாட்டில் எல்லா நிலைகளிலும் பள்ளிக் கல்வி இலவசமாகும். கிராமப்புறத்தைச் சார்ந்த, கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகைகள் 1971—72 முதல் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டு தோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மாணவர் களுக்கு புதிதாக இவ்வுதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகை யைப் பெறுவார். இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகள் ஏதாவது ஒன்றில் மாணவர் படிப்பதாயிருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படித்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-மும், விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படித்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித்தொகை வழங்கப்படும். மாணவர் தம் விருப்பப்படி சாதாரணப் பள்ளியில் சேர்ந்து படித்தாலும் ஆண்டொன்றுக்கு ரூ. 150 வழங்க 1974—75 முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் (புதிதாகப் பெறுவோருள்பட) சுமார் 2,000 ஆகும். இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடி மக்கள், தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும், தாராளமான கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

நடமாடும் மருந்துவ வண்டிகள்.

11. வட ஆர்க்காடு, மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய வருவாய்த்துறை மாவட்டங்களில் பள்ளிப் பிள்ளைகளின் மருத் துவச் சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன. காலப் போக்கில் பிற மாவட்டங் களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

12. பள்ளிகளில் வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்களது முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் இதுவரை 510 பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்தப்பட்டு அதன் வழியில் ரூ. 13·05 கோடி மதிப்புள்ள பொருள்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்பொழுது அறிவியல் மற்றும் நூலக மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறு

வதில் நாட்டம் செலுத்தப்படுகிறது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு ஏறத்தாழ 40 இலட்சம் மாண வர்கட்கு ரூ. 2·57 கோடி செலவில் இலவசச் சீருடைகளும் இதுகாறும் வழங்கப்பட்டுள்ளன.

நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்றல்.

13. பொருளாதாரப் பற்றுக்குறையுடைய நகராட்சி மன்றங்களால் நடத்தப்பட்டு வந்த உயர்நிலைப் பள்ளிகள் பதினொன்றினை 1972—73 முதல் 1974—75 வரையுள்ள காலத்தில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் மூன்று பள்ளிகளை விரைவில் அரசு எடுத்துக் கொள்ளும். இதுவரை எடுத்துள்ள பள்ளிகளை நடத்த ஆண்டுதோறும் அரசுக்கு சுமார் ரூ. 20 இலட்சம் செலவாகும். 1975—76-ல் நகராட்சி உயர் நிலைப் பள்ளிகளில் மேலும் ஐந்தை அரசு ஏற்கும்.

(உ) கல்விச் சூழலை இசைவாக்கல்.

பாடமுறைத் திருத்தம்.

14. 1974—75-ம் ஆண்டுடன் 7-ஆம் வகுப்பு முடிய அனைத்து வகுப்புகளிலும் அனைத்துப் பாடங்களிலும் (ஏழாம் வகுப்பில் கணிதம், அறிவியல் தவிர) புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. ஒன்பதாம் வகுப்பில் தமிழுக்கும் புதிய பாடத்திட்டம் 1974—75-ம் ஆண்டிலேயே வந்துவிட்டது. 1975—76-லிருந்து ஏழாம் வகுப்பில் கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களிலும், எட்டாம் வகுப்பில் எல்லாப் பாடங்களிலும், ஒன்பதாம் வகுப்பில் தமிழ் தவிர ஏனைய பாடங்களிலும், புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

15. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் 1—7 வகுப்புகளில் எல்லாப் பாடங்கட்கும் 1974 முதல் புதிய பாடத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இப்பள்ளிகளில் 8, 9 வகுப்பு களில் புதிய பாடத்திட்டம் 1975-ல் நடைமுறைக்கு வரும். பாடத்திட்ட சீர்திருத்தத்தை இடைவிடாது கவனிக்கும் நிலையான அமைப்பாக பாடத்திட்ட மேம்பாட்டுப் பகுதி ஒன்று மாநிலக் கல்வி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அரசுப் பாட நூல் வெளியீடு.

16. பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத் திடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. தரமான நூல்களை

உருவாக்குவதிலும் அவற்றை மலிவு விலையில் விற்பதிலும் அந்நிறுவனம் நற்பணியாற்றியுள்ளது. 1972–73 முதல் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வருவதற்கேற்ப, புதிய பாடத்திட்டப்படி புதிய பாட நூல்களை இந்நிறுவனம் அவ்வப்பொழுது வெளிக் கொணருகிறது. 1974–75-ல் இந்நிறுவனம் ஏறத்தாழ 207 இலட்சம் பாட நூல் படிகளை அச்சிட்டு வழங்கியுள்ளது.

1975–76-ல் ஏறத்தாழ 215 லட்சம் பாட நூல் படிகளை அச்சிட்டு வழங்கும். 1974–75 ஆண்டு முதல் நமது மாநிலத்தில் சிறுபான்மை மொழிகளாகிய மலையாளம், தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய மொழிகளில் வரலாறு, புவியியல், கணிதம் போன்ற பாடங்களுக்கும் அரசுப் பாட நூல்களை இந்நிறுவனம் வெளியிடும்.

17. இந்நிறுவன புத்தகங்கள் ஏற்பளிக்கப்பட்ட 58 வட்டார மொத்த விற்பனையாளர் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 811 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநிலம் முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க இந்நிறுவனம் வகை செய்துள்ளது.

ஆசிரியர் பயிற்சி.

18. இடைநிலை ஆசிரியர்கட்குப் பயிற்சி அளித்திட மாநிலம் முழுவதிலும் தற்போது 106 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இவை தவிர, நர்சரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மூன்று, இளஞ்சிறுர் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று ஆகியவையும் செயல்படுகின்றன.

19. 1973–74-ல் 1—3 வகுப்புகளிலும், 1974–75-ல் 4—6 வகுப்புகளிலும் கணித பாடத்தில், தரம் உயர்த்தப்பட்ட புதிய பாடத் திட்டம் புகுத்தப்பட்டது. 1973–74-ல் 1—5 வகுப்புகளிலும், 1974–75-ல் ஆறும் வகுப்பிலும் அறிவியலில் புதிய பாடத் திட்டம் புகுத்தப்பட்டது. 1975–76-ல் 7—9 வகுப்புகளிலும் கணிதம், அறிவியல் பாடங்களில் புதிய பாடத்திட்டம் புகுத்தப்படும். பள்ளிகளில் புதிய பாடத் திட்டத்தின்படி இவ்விரு பாடங்களையும் நடத்த வேண்டிய ஆசிரியர்கட்குப் பணியிடைப் பயிற்சி தேவைப்படுகின்றது. 1972–73-ல் ஏறத்தாழ 60,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1973–74,

1974–75 ஆண்டுகளில் உயர்தொடக்க நிலை வகுப்பு ஆசிரியர்கள் 30,000 பேருக்கும், உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் பயிற்றுவிக்கும் பட்டதாரி ஆசிரியர்களில் 12,000 பேருக்கும், இந்தப் பணியிடைப் பயிற்சி தரப்பட்டது.

20. தற்பொழுது இம்மாநிலத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி மையங்கள் ஆறு செயல்பட்டு வருகின்றன. 1974 ஆகஸ்டில் மதுரை மாவட்டம் மேலூரிலும், வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரிலும், திறக்கப்பட்ட இரண்டு மையங்களும் இவற்றில் அடங்கும். 1967–68 முதல் 1974–75 முடிய உள்ள காலத்தில் மொத்தம் 11,773 ஆசிரியர்கள் (1974–75-ல் பயிற்சி பெற்ற 1,700 பேர்கள் உட்பட) பயிற்சி அளிக்கப்பட்டனர். இத் திட்டம் 1975–76-லும் தொடர்ந்து செயல்படும். பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்காக 3 முதல் 5 மாதங்கள் நடைபெறும் நீண்டகாலப் பயிற்சியும் தணிக்கை அலுவலர்கள், பயிற்சி மைய ஆசிரியர்களுக்கான 2 முதல் 4 வாரங்கள் நடைபெறும் குறுகிய காலப் பயிற்சியும், ஆண்டுதோறும் பெங்களூரிலுள்ள மண்டல ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்நிறுவனத்தில் இதுகாறும் 349 பட்டதாரி ஆசிரியர்களும், 42 மாவட்டக் கல்வி அலுவலர்களும், 166 பள்ளித் துணைத் தணிக்கை அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

21. அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களின் தொழில் தகுதிகளை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் ஆண்டுதோறும் 10 பட்டதாரி ஆசிரியர்கள் எம். எட். பயிற்சிக்கு அனுப்பப்படுகிறுர்கள். இவ்வாறு இதுகாறும் 60 ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். 1975–76-ல் மேலும் 10 பேர் அனுப்பப்படுவர்.

தேர்வுகள்.

22. 1975 பிப்ரவரி வரை பள்ளிக் கல்வி இயக்குநரே அரசுத் தேர்வு ஆணையாளராகவும் இருந்து வந்தார். 1975 பிப்ரவரி முதல் அரசு தேர்வுகளுக்காகத் தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மாணவர் கல்வித்தர ஆய்வுக் குழு, மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுக்கும் அவரே இயக்குநர் ஆவார். அரசுத் தேர்வு ஆணையாளருக்கு உதவியாக ஒரு செயலர், ஒரு கூடுதல் செயலர், ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலர் ஆகியோர் உளர். அவர் ஆண்டுதோறும் சுமார் 24 தேர்வுகளை நடத்துகிறுர். அவற்றில், ஆண்டுக்கு ஒரு முறை நடப்பன சில ; ஆண்டுக்கு இருமுறை நடப்பன சில . பள்ளியிறுதித் தேர்வு அவற்றில் முதன்மையான

தாகும். அது மார்ச்சுத் தேர்வில் 1,200 மையங்களிலும் அக்டோபர் தேர்வில் 150 மையங்களிலும் நடைபெறுகிறது. 1974 மார்ச்சில் நடைபெற்ற பள்ளியிறுதித் தேர்வு எழுதிய 2,21,402 பேரில் 1,12,358 பேர் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றவர் விழுக்காடு 51.9 ஆகும். பள்ளியிறுதித் தேர்வு முடிவுகளை விரைவில் அறிவித்தற் பொருட்டு இயந்திரக் கணிப்புப் பொறி பயன்படுத்தப்படுகிறது.

23. மாநிலத்திலுள்ள ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று, 18 வயது நிறைவு பெற்ற அனைவரும் தனிப்பட்ட முறையில் பள்ளியிறுதித் தேர்வில் கலந்துகொள்ள அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்க சீர்திருத்தமாகும். படிப்பை முடிக்காமல் நின்று விட்டவர்கள் பிற்காலத்தில் தங்களுக்கு விருப்பமுள்ள வேலையில் தனிப்பட்ட முறையில் கல்வி பயில வசதி செய்ய வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு பொதுவாகப் பரிந்துரைத்திருந்தது. அப்பரிந்துரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

24. மாணவர் கல்வித் தரத்தை மதிப்பிடும் முறைகளை மேம்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக 1972—73-ல் கல்வித்தர ஆய்வு மாநிலப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. தேர்ந்தெடுத்த 250 உயர்நிலைப் பள்ளிகளில் முன்னோடித் திட்டமாக, மாணவர்களின் திறமையின் அனைத்துக் கூறுகளையும் அந்தந்த ஆசிரியர்களே முழு அளவில் மொத்தமாக மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்று 1973—74ல் தொடங்கப்பட்டது. அது 1974—75-ல் மேலும் 200 பள்ளிகளுக்கு விரிவாக்கப்பட்டது. முன்னோடித் திட்டத்தில் பெற்ற அனுபவத்தை ஒட்டி மாநிலத்தில் உள்ள பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகட்கும் இதனை விரிவாக்க கருதப்பட்டுள்ளது.

இளஞ்சிறார் பள்ளிகள்.

25. ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுவர் சிறுமியருக்கான 40 இளஞ்சிறார் பள்ளிகள் (நர்சரி, கிண்டர்கார்டன், மாண்டிசோரி), தற்பொழுது இம்மாநிலத்தில் கல்வித் துறையின் ஒப்புதலைப் பெற்று நடந்து, அரசு மானியமும் பெற்று வருகின்றன. இவற்றுக்கென மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சம் செலவு ஆகிறது. கிராமப்புறங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் "குழந்தைகள் காப்பகங்களை" நடத்தி வருகின்றன.

கீழ்த் திசைக் கல்விப் பள்ளிகள்.

26. வடமொழி கற்பிக்கும் 12 பள்ளிகளும், அரபுமொழி கற்பிக்கும் 5 பள்ளிகளுமாக, ஏற்பளிக்கப்பட்ட கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள் பதினேழு இம்மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. சாதாரண உயர் நிலைப் பள்ளிகளைப் போலவே இப்பள்ளிகளும் அரசு மானியம் பெற்று வருகின்றன.

ஊனமுற்றோர்க்கான பள்ளிகள்.

27. உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்பொழுது இம்மாநிலத்தில் 27 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவருக்காக 12 பள்ளிகளும், காது கேட்காத சிறுவர்களுக்காக 14 பள்ளிகளும், தொழு நோயால் வருந்தும் குழந்தைகட்காக 2 பள்ளிகளும், முடமாயுள்ள சிறுவர்களுக்காக ஒரு பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் ஏறத்தாழ 3,000 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர்.

இம்மாநிலத்தில் தனியார் நிருவாகங்கள் சுமார் 380 அனாதை இல்லங்களை நடத்தி வருகின்றன. அவற்றில் உள்ள சுமார் 67,000 பிள்ளைகள் மாநில அரசின் நிதியுதவி பெறுகின்றனர்.

கைத்தொழில் பயிற்சி மையங்கள்.

28. தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுப் படிப்பை நிறுத்திவிட்ட, 11—14 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்கட்கு கைத்தொழிற் பயிற்சியளிக்க இம்மாநிலத்தில் 6 மையங்கள் இயங்கி வருகின்றன.

வயது வந்தோருக்கான கல்வி.

29. 1975—76-ல் சில மாவட்டங்களில் "இளைஞர் பணி அணியினருடைய" தொண்டைப் பயன்படுத்திக்கொண்டு முதியோர் கல்வி மையங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. "வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்தறிவிப்புத் திட்டம்" கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், திண்டிவனம், கோயில்பட்டி ஆகிய கல்வி மாவட்டங்களில், ஒரு கல்வி மாவட்டத்துக்கு முப்பது மையங்களில் மேற்கொள்ளப்படும்.

இளைஞர் நிலையங்கள்.

30. 1973 நவம்பர் முதல் மத்திய அரசுக் கல்வித் துறை "நேரு இளைஞர் நிலையங்கள்" நான்கினைத் தமிழ் நாட்டில் திறந்துள்ளது. இவை கடலூர், வேலூர், சேலம், திருச்

சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவை இளைஞர்கட்குப் பொதுக் கல்வி புகட்டி அவர்களிடையே அறிவியல் மனப்பான்மை வளரச் செய்யும்; பாட்டு, நாடகம் முதலிய கலைத்திறன்களை வளர்க்க உதவும்; போட்டிப் பந்தயங்களையும் உடற்பயிற்சிகளையும் ஊக்குவித்து நடத்தும். விரைவில் இன்னுமொரு இளைஞர் நிலையம் மதுரையில் அமைக்கப்படும்.

விளையாட்டுகளும், உடற்பயிற்சிக் கல்வியும்.

31. அனைத்துப் பள்ளிகளிலும் உடற்பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். மாநில விளையாட்டுக் கழகமும் மாவட்ட விளையாட்டுக் கழகங்களும் பள்ளி மாணவரிடைமட்டுமின்றிப் பொது மக்களிடையேயும் போட்டிகளையும், விளையாட்டுகளை யும் பரப்புவதில் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன. இதுவரை எட்டு மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சாரணர், சாரணியர் இயக்கங்கள்.

32. தமிழ் நாட்டுச் சாரணர் கழகம் மொத்தம் 73,504 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டுள்ளது. 1974–75-ல் ரூ. 1,13,000 செலவில் மேலும் 14,000 மாணவர்களுக்கு விரிவாக்கப்பட்டது. மாணவனுக்கு ரூ. 40 வீதம் 5,000 மாணவர்கட்கு இலவசச் சீருடை வழங்க ரூ. 2,00,000 அனுமதிக்கப்பட்டது. 1975–76-ம் ஆண்டில் ரூபாய் 60,000 செலவில் மேலும் 7,000 மாணவர்கள் சாரணர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ங) ஆசிரியர்கள் நலன்.

33. தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் தற்போது ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். நிர்வாக வாரியாக ஆசிரியர்கள் விவரங்கள் வருமாறு:—

பள்ளிகள்.	ஆசிரியர் கள்.	ஆசிரியை கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
தொடக்கப்பள்ளிகள்.	69,692	40,825	1,10,517
உயர் தொடக்கப் பள்ளிகள்.	37,037	31,212	68,249
உயர் நிலைப் பள்ளிகள்.	47,350	22,104	69,454
மொத்தம் ..	1,54,079	94,141	2,48,220

மேலுள்ள 4-வது பத்தியின் எண்ணிக்கை நிர்வாகவாரியாக வருமாறு:—

பள்ளிகள்.	அரசு.	அரசு (கழகம்).	ஊராட்சி ஒன்றியம்.
(1)	(2)	(3)	(4)
தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ..	7,482	..	63,894
உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் ..	3,370	..	28,746
உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ..	6,773	30,200	..
மொத்தம் ..	17,625	30,200	92,640

பள்ளிகள்.	நகராட்சி.	தனியார் பள்ளி.	மொத்தம்.
(1)	(5)	(6)	(7)
தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ..	9,870	29,271	1,10,517
உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் ..	6,779	29,352	68,249
உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ..	4,260	28,223	69,454
மொத்தம் ..	20,909	86,846	2,48,220

34. வேறு பல மாநிலங்களைப் போல அல்லாமல், தமிழ் நாட்டில் தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. இம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1970–71-ல் ரூ 55 கோடியாக இருந்தது, 1975–76-ல் சுமார் ரூ 85 கோடியாக உயரும்.

35. 1974ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெற்ற "தமிழ் நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்தும்) சட்டமும்" அதன் கீழ் செய்யப்பட்ட

விதிகளும் 1974 டிசம்பர் முதல் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. அவை தனியார் பள்ளி ஆசிரியர் பணி நிலைமைகளுக்கு சட்டப்படி பாதுகாப்பு தருவதோடு, நிர்வாகத்தினர் பள்ளிகளைச் செவ்விய முறையில் நடத்திட ஊக்கமும் அளிக்கும்.

தேர்வுத் தரப் பதவிகள்.

36. பிற துறைகளில் பணியாற்றுகிறவர்களோடு ஒப்பிடும் போது பள்ளி ஆசிரியர்கட்குப் பதவி உயர்வு வாய்ப்பு குறைவு. எனவே உயர்நிலைப் பள்ளிகளில் பத்து ஆண்டுப் பணியினை முடித்த பட்டதாரி ஆசிரியர்கட்கும் முதல்நிலைத் தமிழாசிரியர்கட்கும், பி.டி. தரத்தைச் சார்ந்த பிற சிறப்பு ஆசிரியர்கட்கும் தேர்வு நிலைப் பதவிகளைத் தரும் ஆணை 1-4-1973 முதல் செயலாக்கப்பட்டது. அதன் பிறகு அக்கொள்கையை விரிவுபடுத்தி, எல்லா வகை நிருவாகங்களின்கீழும் எல்லா வகையான பள்ளிகளிலும் பணியாற்றும் உயர் தொடக்க நிலை—இடை நிலை ஆசிரியர்களும் பத்து ஆண்டுகள் பணியினை முடித்தால் தேர்வு நிலை தரவேண்டும் என்ற ஆணை 1-4-1974 முதல் செயலாக்கப்பட்டுள்ளது.

தமிழாசிரியர்கள்.

37. 1974 சனவரி முதல்நாளுக்குப்பின் செய்யப்படும் தமிழாசிரியர் நியமனங்கள் அனைத்தும் முதனிலைத் தமிழாசிரியர் பதவிகளாக மட்டுமே செய்யவேண்டுமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதனிலைத் தமிழாசிரியராக நியமிக்கப்படுவதற்குத் தேவையான தகுதிகள் இருந்தும் இரண்டாம் நிலைப் பதவிகளில் இருந்த தமிழாசிரியர்கள் அனைவரும் 1-1-1974 அன்று முதல், முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் அந்தத் தேதிக்குப் பின்னர் முதனிலைத் தமிழாசிரியருக்குரிய தகுதியைப் பெறுவராயின் அந்தத் தகுதியை அடையும் நாள்முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமனம் பெறுவார்கள். வித்வான் அல்லது புலவர் பட்டத்துடன் தமிழாசிரியர் பயிற்சி அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று, ஆனல் குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி பெறுமையால் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக உள்ளவர்களும் 1-1-1974 அன்று பத்து ஆண்டுகள் பணி முடித்திருப்பார்களாயின் அந்நாள் முதலும், அதன் பிறகு பத்து ஆண்டுகள் பணி முடித்தால் பத்தாண்டு முடியும் நாளிலிருந்தும், முதனிலைத் தமிழாசிரியராக நியமனம் பெறுவர். புலவர் அல்லது வித்வான் பட்டம் மட்டும் பெற்று, தமிழாசிரியர்

பயிற்சி அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சியும் இல்லாது, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவியில் இருப்பவர்களும் 1-1-1974 அன்று 15 ஆண்டுகள் பணி முடித்திருப்பின் அந்நாள் முதலும், அதன் பிறகு 15 ஆண்டுகள் பணி முடித்தால் முடித்த அந்த நாளிலிருந்தும், முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமனம் பெறுவர் எனவும் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இவற்ருல் தமிழாசிரியர்கள் பணி நிலைமை உயர்வதோடு தமிழ்ப் பாடம் பயிற்றும் தரமும் உயருமென நம்பப்படுகிறது.

தனியார் பள்ளி, உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

38. மாநில அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வு ஊதிய விதிகள், தனியார் பள்ளிகளிலும் உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகளிலும் பணியாற்றி 1-6-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1-4-1972 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவ்வூழியர்கள் ஓய்வு ஊதியம், பணிக்கொடை முதலியவற்றை மாநில அரசு ஊழியர்கள் பெறுவதற்கு இணையாகப் பெறுவர். அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்ற பிறகு, ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப்படுதலில் ஏற்படும் காலத்தாழ்வால் அல்லலுருமலிருக்க தற்காலிக ஓய்வு ஊதியமும், பணிக்கொடையும் பெற ஏற்கனவே வழி செய்யப்பட்டுள்ளது. 1974 ஏப்ரலில் இவ்விதி தனியார் பள்ளிகள், உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகள் ஆகியவற்றிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கும்; தனியார் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு விரிவுபடுத்தப் பட்டுள்ளது :—

(1) ஓய்வூதியம்.—தற்காலிக ஓய்வூதியம் ஓய்வுபெறும் நாளிலிருந்து 12 மாதங்கட்கு வழங்கலாம்.

(2) பணிக்கொடை.—80 விழுக்காடு தற்காலிகப் பணிக்கொடையாக வழங்கலாம். இறுதியான ஓய்வு ஊதியம், பணிக்கொடை ஆகியவற்றை வழங்க அதிகாரமுள்ள மாவட்டக் கல்வி அலுவலர்களே இந்த தற்காலிக ஓய்வு ஊதியத்தையும் பணிக்கொடையையும் வழங்கலாம்.

39. ஈட்டிய விடுப்பைப் பணமாகப் பெறுவதற்குரிய உரிமை உட்பட, மாநில அரசு ஊழியர்கட்கான விடுப்பு உரிமைகள் அனைத்தும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்டுள்ளன.

40. மாநில அரசு ஊழியர்கட்கான குடும்ப நலத் திட்டம் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தாமாகவே பொருந்தும். அத்திட்டம் தனியார் பள்ளி, உள்ளாட்சி நிறுவனப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் நலத்திற்கான தேசீய அமைப்பின் வசூல் நிதியிலிருந்து 1974–75இல் உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஏறத்தாழ 500 ஆசிரியர்களுக்கு சுமார் இரண்டு லட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டது.

41. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. மதுரை மாவட்டத்திலுள்ள கோடைக்கானலிலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்திலும் உள்ள ஆசிரியர் இல்லங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு லட்சம் நிதி உதவி தரப்பட்டது. வேறு சில மாவட்டங்களிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

" பி " பிரிவு உயர்நிலைப் பள்ளிகள்.

42. முன்னாள் மாவட்டக் கழகப் பள்ளிகளில் 1–4–1970க்கு முன் பணியிலிருந்துவந்த ஊழியர்களின் ஊழியம் " தமிழ் நாட்டுக் கல்வித்துறைச் சார்பு நிலை ஊழியம் (பி பிரிவு)" எனப் பெயரிடப்பட்டு தனி ஊழியப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளது. இரு பிரிவு ஊழியர்களது நலத்தையும் கருதி, அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர் நிலை வரை தனிப் பிரிவாகவே இது அமைக்கப்பட்டுள்ளது. 1–4–1970 அன்று அல்லது அதற்குப் பிறகு "பி" பிரிவு பள்ளிகளில் நியமனம் பெறுகின்ற ஆசிரியர்களும், "ஏ" பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும், " ஏ " பிரிவு ஆசிரியர்களாகத் தனியாக வைக்கப்பட்டு அவர்கள் பணி நிலை " தமிழ் நாட்டுக் கல்வித் துறைச் சார்பு நிலை ஊழிய விதிகளின்படி " ஒழுங்கு செய்யப்படும்: 1974 அக்டோபர் முதல் " பி " பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்ளும் மாநில அரசின் பிற ஊழியர்களைப் போன்றே கருவூலங்களில் ஊதியப்பட்டியல் மூலம் ஊதியம் பெறுகின்றனர். அப்பள்ளிகளின் ஊதியச் செலவும், பிற செலவுகளும் இதுவரை " மாவட்ட இடைநிலைக் கல்வி நிதிக் கணக்கிலிருந்து " அந்தந்த முதன்மைக் கல்வி அலுவலரால் செய்யப்பட்டு வந்தன. அக்கணக்குகள் விரைவில் முடிக்கப்படும். புதிய நடைமுறை இவ்வுயர்நிலைப் பள்ளிகளின் நிருவாகத்தை ஒரே சீராக்கும். மாவட்டக் கல்வி அலுவலர்களின் பதவிகளில் ஏற்படும் நிலையான காலி இடங்களில் 30 விழுக்காடு பதவிகளுக்கு இனிமேல் " பி " பிரிவுப் பள்ளிகளில் அரசிதழ்

பதிவு பெற்ற தலைமையாசிரியர்களும் தலைமையாசிரியைகளும் பதவி உயர்வு மூலம் நியமனம் பெறத் தகுதியுடையவராவர். " பி" பிரிவு அரசுப் பள்ளிகளில் 1–4-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு நியமனம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள், அதற்கு இணையான பதவிகளிலுள்ள பிற ஆசிரியர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர், பிற சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருள்ளும் விதிகளின்படி தேவையான தகுதிகள் பெற்றிருந்து, 21–3–1974 அன்று ஓராண்டு காலப்பணி முடித்திருந்தவர்களுடைய நியமனங்களை முறைப்படுத்துமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

IV. கல்லூரிக் கல்வி

இம்மாநிலத்தில் 1947-ம் ஆண்டு 24 ஆகவும், 1961-ல் 59 ஆகவும், 1966–67-ல் 105 ஆகவும் இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1974–75-ல் 183 ஆக உயர்ந்துள்ளது. கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 1947, 1961 மற்றும் 1966–67 ஆகிய ஆண்டுகளில் முறையே 17,000, 45,000 மற்றும் 94,000 என வளர்ந்து 1974–75-ம் ஆண்டில் 2 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இம்மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளில் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ் எல்.சி.) எழுதிய மாணவர்கள், அத்தேர்வில் தேர்ச் அடைந்த மாணவர்கள், இம்மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களைச் சார்ந்துள்ள கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் பின்வருமாறு :—

ஆண்டு.	பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்கள்.	பள்ளி இறுதித் தேர்வில் தேறிய மாணவர்கள்.	கல்வி யாண்டு.	கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் சேர்ந்த மாணவர்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)
ஏப்ரல் 1968.	1,96,272	98,181	1968–69.	60,000
அக்டோபர் 1968.	57,374	11,004	..	..
ஏப்ரல் 1969.	1,82,829	91,794	1969–70.	66,000
அக்டோபர் 1969.	34,408	8,326	..	..

(1)	(2)	(3)	(4)	(5)
மார்ச் 1970.	1,91,853	1,03,974	1970–71.	70,000
அக்டோபர் 1970.	33,572	8,192	..	..
ஏப்ரல் 1971.	1,93,059	1,11,823	1971–72.	76,814
அக்டோபர் 1971.	25,445	6,674	..	..
மார்ச் 1972.	2,01,950	1,19,122	1972–73.	80,506
அக்டோபர் 1972.	37,570	6,726	..	..
மார்ச் 1973.	1,73,686	96,903	1973–74.	72,646
அக்டோபர் 1973.	30,361	5,367	..	..
மார்ச் 1974.	2,21,402	1,12,358	1974–75.	78,625
அக்டோபர் 1974.	28,104	5,482	..	..
மார்ச் 1975.	2,30,000 (தோராயமாக)	..	1975–76.	—

2. நான்காவது திட்டக் காலத்தில் புதிதாக 40 கல்லூரிகளை தொடங்கத் திட்டமிட்டிருப்பினும் அந்த ஐந்து ஆண்டுகளில் 56 கல்லூரிகள் திறக்கப்பட்டன. 1974–75-ம் ஆண்டில் 5 கல்லூரிகள் திறக்கப்பட்டன. இப்பொழுது மொத்தம் உள்ளவை 183 கல்லூரிகள். இம்மாநிலத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தேவை ஏறத்தாழ முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டது எனலாம். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன் வருகின்றனர். ஆனால் கிராமப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்போதே பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. எனவே, புதிய கல்லூரிகளைத் தொடங்க நாம் அனுமதிக்கு முன்னர், தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் நிரப்ப வேண்டியது விரும்பத் தக்கதாகும். தற்போதுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கையை பெருக்குவதற்குப் பதிலாக கல்லூரிக் கல்வியின் தரத்தை மேம்படுத்த முழு கவனத்தைச் செலுத்துவதே சிறந்ததாகும். கல்லூரிக் கல்விக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 1967–68-ம் ஆண்டில் ரூபாய் 3.21 கோடியாகவிருந்து 1975–76-ம் ஆண்டில் ரூபாய் 11 கோடியாக (கல்லூரிக் கட்டடச் செலவு உட்பட) உயர்ந்துள்ளது.

3. நமது மாநிலத்தில் தற்போதுள்ள 183 கல்லூரிகளில் 106 கல்லூரிகள் சென்னை பல்கலை கழகத்துடனும் 77 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்துள்ளன. ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள் எண்ணிக்கை 30 அல்லது 40-க்கு மேல் அதிகமாக இருத்தல் கூடாது என்ற கஜேந்திரகட்கர் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் மேலும் ஒன்று அல்லது இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவக்குவதற்கு நியாயம் உண்டு. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க வகை செய்யப்பட்டுள்ளது.

4. தற்போதுள்ள 183 கல்லூரிகளில், 51 கல்லூரிகள் அரசால் நேரடியாக நடத்தப்படுகின்றன. ஏனைய 132 கல்லூரிகள் மானியம் பெறும் தனியார் கல்லூரிகளாகும். 1966–67-ம் ஆண்டில் 78 ஆக இருந்த தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை 1974–75-ம் ஆண்டில் 132 ஆக உயர்ந்துள்ளது. 1975–76-ம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான மொத்த செலவுத் தொகையான ரூபாய் 11 கோடியில் தனியார் கல்லூரிகளுக்கு மட்டும் சுமார் ரூபாய் 4 கோடி மானியமாக வழங்கப்படும்.

5. கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் மானிய உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் தான் பயின்று வருகிறார்கள் என்பதைக் கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து அறியலாம் :—

ஆண்டு.	அரசினர் கல்லூரி.	மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	மானியம் பெறும் தனியார் கல்லூரிகள்.	மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	மொத்தம் மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1969–70.	39	0.34	101	1.19	1.53
1974–75.	51	0.54	132	1.47	2.01

அரசுக் கல்லூரிகளின் எண்ணிக்கை தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கையில் பாதியைவிடக் குறைவு. அவற்றில் பயிலும் மாணவர் எண்ணிக்கையும் அப்படியே. எனினும் அரசாங்கக் கோட்பாடான "சமூக நீதியை" செயல்படுத்துவதில் அரசுக் கல்லூரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு.

தனியார் கல்லூரிகளில் ஆகும் அதிகக் கல்விச் செலவை ஏற்க இயலாதவர்களும், சமுதாயத்தில் சமூகம், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்களும், ஆன மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகள் குறைந்த கட்டணத்தில் நல்ல கல்வியை அளிக்கின்றன.

6. இம்மாநிலத்தில் அரசுக் கல்லூரி மாணவர் ஒருவரிடமிருந்து கட்டணம் மூலம் கிடைக்கும் வருவாய், செலவை விட மிகக் குறைவாகவே உள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரம் காட்டும். அரசு அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவித் தொகை அளிக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகும்.

	கல்லூரி புகுமுக வகுப்பு		பட்ட வகுப்பு		பட்ட மேற்படிப்பு	
	கலை.	அறிவியல்.	கலை.	அறிவியல்.	கலை.	அறிவியல்.
ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ஆகும் செலவு (ரூபாய்).	380	500	410	600	775	1,120
ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணவரும் தரும் கட்டணம் (ரூபாய்).	...	..	183	183	அரசுக் கல்லூரிகளில் ரூ. 250. தனியார் கல்லூரிகளில் ரூ. 300 விருந்து ரூ. 360 வரை.	

7. ஐந்தாவது திட்ட காலத்தில் கல்லூரிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதே அரசுக் கல்லூரிகளின் முக்கிய நோக்கமாகும். சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி ஆகிய இரு முதன்மையான கல்லூரிகளும் பட்ட மேற்படிப்பு நிலையில் குறிப்பிட்ட பாடத் துறைகளில் சிறப்புக் கல்வி தரும் நிலையங்களாக மேம்படுத்தப்படு

கின்றன. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதி பெருக்கப்படும். இதற்காக 1974–75-ஆம் ஆண்டில் ரூ. 3·50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1975–76 ஆம் ஆண்டிற்கும் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிக விலையுள்ள பாட புத்தகங்களை வாங்க இயலாதவர்கள் பயன்படுத்துவதற்காக அரசுக் கல்லூரிகளில், தமிழ் பாட புத்தகங்கள் உட்பட, அனைத்துப் பாட புத்தகங்களும், பொது அறிவிற்கான புத்தகங்களும் சேமித்து வைத்து வழங்கிட 1974–75-ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவிடப்பட்டது. அரசுக் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக உணவருந்தும் இடம், மிதி வண்டி நிறுத்துமிடம், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றை அமைக்க 1974–75-ல் ரூ 3·35 இலட்சங்களும், 1975–76-ல் ரூ 3·50 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கல்லூரிகளில் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்த்திட, விளையாட்டுத் திடல்களைப் பேணிச் சீர்படுத்துவதற்காகவும் விளையாட்டுச் சாதனங்கள் வாங்குவதற்காகவும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

8. அரசுக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சி செய்து பி.எச்.டி. பட்டம் பெறுவதற்காக பேராசிரியர்கள் அனுப்பப்படுகின்றனர். நிரந்தரமாகப் பணிபுரியும் பேராசிரியர்களைத் தவிர வெளியிலிருந்தும் சில பேராசிரியர்கள் விரிவுரையாற்ற அழைக்கப்படுகின்றனர். சில கல்லூரிகள் நகரிலிருந்து தொலைவில் அமைந்துள்ளதால் அக் கல்லூரி ஆசிரியர்கள் குடியிருப்பு வசதிப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் பணியாளர் குடியிருப்பு இல்லங்கள் அந்தந்தக் கல்லூரி வளைவிற்குள்ளேயே அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மொழி வாயிலாகக், கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. சமீப காலமாக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 2 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டு வருகின்றது.

9. தொடர் கல்வி அளிப்பதில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளும் அஞ்சல் முறை பாட பயிற்சிகளும் பயனுள்ள பணி செய்கின்றன. 1974–75-ஆம் ஆண்டில் மாலை நேர புகுமுக வகுப்புகள் அரசு கல்லூரிகள் நான்கிலும் மாலை நேரப் பட்டப் படிப்பு வகுப்புகள் அரசுக் கல்லூரிகள் மூன்றிலும் புதிதாகத் துவக்கப்பட்டன. 1974–75 ஆம் ஆண்டு மாலை நேர வகுப்புகள் மொத்தம் 44 கல்லூரிகளில் நடத்தப்

பட்டன. ஏறத்தாழ 8,000 மாணவர்கள் அவற்றில் கல்வி பயின்றனர். அஞ்சல் முறை பாட பயிற்சி மூலமாக இளங்கலை (பி.ஏ.) பட்டப் படிப்பினை மதுரைப் பல்கலைக் கழகம் துவக்கியுள்ளது. அதனை மாணவர்கள் ஆர்வத்துடன் பயன்படுத்துகின்றனர். இத் திட்டம் வந்த பின்னர் மாலை நேரக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கல்லூரி ஆசிரியர்களின் தகுதி வளர்ச்சி.

10. கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய வீதங்களில் கணிசமான உயர்வுக்கு இரண்டாவது சம்பள ஆணைக் குழு வகை செய்துள்ளது. சிறந்த தகுதியுள்ளவர்கள் ஆசிரியர் தொழிலில் சேர முன்வருவதற்கு இது தூண்டுகோலாக உள்ளது. இது தவிர சாதாரணப் பேராசிரியர்களைவிட உயர்ந்த சம்பள வீதத்தில் அரசுக் கல்லூரிகளில் முதல் நிலைப் பேராசிரியர் பதவிகள் 29 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 50 விழுக்காடு பதவிகளுக்குத் தற்போதுள்ள பேராசிரியர்கள் பதவி உயர்வு கொடுத்து நியமிக்கப்படுவர். மீதி 50 விழுக்காடு பதவிகள், டாக்டர் பட்டம் பெற்றவர்களிடையே இருந்து நேரடித் தேர்வு நடத்தி நிரப்பப்படும். ஏற்கெனவே பணியாற்றும் பேராசிரியர்களை முதல் நிலைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்கும்போது டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏற்கெனவே பணியாற்றும் பேராசிரியர்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு மாதந்தோறும் நூறு ரூபாய் சிறப்பு ஊதியம் கொடுக்கப்படுகிறது.

படிப்பு உதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்.

11. கல்லூரிப் புகுமுகப் படிப்பு அளவில் இலவசக் கல்வி அளிக்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத் திட்டத்தினால் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் இரண்டு கோடி செலவாகிறது. இதைத் தவிர 1971 72-ம் ஆண்டு முதல், அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகளில் தமிழ் மூலம் கல்வி பயிலும் மாணவர்கள் ஆண்டொன்றுக்கு ரூ 180 பயிற்சி உதவித் தொகையும், புகுமுக வகுப்பில் தமிழ் மூலம், பயிலும் மாணவர்கள் ஆண்டுக்கு ரூ 50 புத்தகப் படியும் பெற்று வருகிறார்கள். இத் திட்டத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் அரசுக்கு சுமார் ரூ 40 இலட்சம் செலவாகிறது. அரசுக் கல்லூரி

களிலும் தனியார் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1974–75-ல் புகுமுக வகுப்பில் 19,542, பட்டப் படிப்பில் 15,839 ஆகும்.

12. வேறு பல திட்டங்களின்கீழும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவை வருமாறு :—

திட்டம்.	மொத்தம் படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை புதியவையும், புதுப்பிக்கப்பட்டவையும் 1973–74.	1974–75.
தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டம்.	2,480	2,450
ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகை.	264	219
தேசிய கடன்-படிப்பு உதவித் தொகைத் திட்டம்.	5,284	2,942

தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின்கீழும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தின்கீழும், தற்போது ஆகும் அளவுக்குச் செலவை 1974–75-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செய்து வரும் பொறுப்பை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அந்தச் செலவுக்கு மேலாகக் கூடுதல் படிப்புதவித் தொகைகள் ஏற்படுத்துவதற்கு ஆகும் செலவை மட்டுமே மைய அரசு ஏற்கும் என்றும், மைய அரசு தெரிவித்துள்ளது. இம்முடிவை மறு ஆய்வு செய்து, முன்போலவே முழுச் செலவையும் மைய அரசு தொடர்ந்து ஏற்றுவர வேண்டுமென அவ்வரசிடம் கோரப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோர், பாதுகாப்புப் படையினரின் குழந்தைகள், பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் ஆகியோருக்கான படிப்பு உதவித் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. அரிசன மாணவர்களும், பழங்குடி மாணவர்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களும், அரிசன நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

13. படிப்புதவித் தொகைத் திட்டங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் உள்ளவற்றிற்கு மட்டும் 1975–76 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சுமார் ரூபாய் ஒரு கோடியாகும்.

தமிழ் மொழியில் கல்லூரிப்பாட நூல்கள்.

14. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரையில் 650 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இந்த 650 புத்தகங்களில் 490 மூலநூல்களாகும். 160 மொழி பெயர்ப்புகளாகும். இந்த வெளியீடுகளில் பலவற்றை பாட நூல்களாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும் மாணவர்கள் பயன்படுத்திடப் பல்கலைக் கழகங்கள் பரிவுரை செய்துள்ளன. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், மானிடவியல் முதல் அணுசக்தி அறிவியல் வரை அனைத்துப் பொருள்களையும் பற்றி மேலும் 250 புத்தகங்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய மாணவர் படை.

15. தமிழ் நாடு தேசிய மாணவர் படை 1975 சனவரியில் தேசிய மாணவர் படை விருதைத் தொடர்ந்து நான்காவது முறையாகப் பெற்று வாகை சூடி வந்துள்ளது. தேசிய மாணவர் படையில் தற்போது 52 முதுநிலைப் பிரிவுகளும் (32,000 மாணவ-மாணவியர்), 735 இளநிலைப் பிரிவுகளும் (72,000 மாணவ-மாணவியர்) உள்ளன. இவற்றில் மாணவியர் முதுநிலைப் பிரிவுகள் ஐந்தும் (3,000 மாணவியர்), இள நிலைப் பிரிவுகள் 57-ம் (5,700 மாணவியர்) அடங்கும். தேசிய மாணவர் படைக்கு 1975–76 ஆம் ஆண்டில் மாநில அரசு செலவிடவிருக்கும் தொகை சுமார் ரூ 95 இலட்சமாகும்.

தேசியப் பணித் திட்டம்.

16. கல்லூரி மாணவர்கள் நாட்டின் பணியில், குறிப்பாக கல்விப் பணியில், தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிட வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் தேசியப் பணிப் படைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்துகிற பல்கலைக் கழகங்கள், ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ 120 என்ற வீதத்தில் மானியம் பெறுகின்றன. இதில் ரூ 70-ஐ இந்திய அரசும், ரூ 50-ஐ மாநில அரசும் கொடுக்கின்றன. அண்மை ஆண்டுகளில் சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் சுமார் 8 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் இத் திட்டத்தில் பங்கு கொள்கின்றனர். 1974–75 ஆம் ஆண்டில் 8,000 மாணவர்கள் இத் திட்டத்தில் பங்கேற்றனர். 1975–76 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் எண்ணிக்கை 12,000 ஆக உயரும்.

சட்டக் கல்லூரிகள்.

17. சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1968–69-ல் 1,045 ஆக இருந்து 1974–75-ல் சுமார் 2,647 ஆக (முறையான பட்டப் படிப்பு வகுப்புகளில் 1,830, மாலை நேரப் பட்டப் படிப்பு வகுப்புகளில், 703, எம். எல். வகுப்புகளில் 114) உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவு செய்யும் பொருட்டு, மாலை நேர வகுப்புகள் 1966–67-ல் தொடங்கப் பட்டன. மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்கான பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் (எம். எல்.) 1969–70-ல் தொடங்கப்பட்டன.

1974-75 ஆம் ஆண்டில் மதுரையில் புதிய சட்டக் கல்லூரி திறக்கப்பட்டு 320 மாணவர்கள் முதல் ஆண்டு சட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

V. தொழில் நுட்பக் கல்வி

1. தொழில் நுட்பக் கல்விக்காக 1974–75-ல் ரூ 462 இலட்சங்கள் (தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டடச் செலவு போன்றவை உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளன. இத் துறையின்கீழ் 7 பொறியியற் கல்லூரிகளும், 38 பல்

தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும், எட்டு தனித்தொழில் டிப்ளொமாக் கல்வியகங்களும் உள்பட) 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இன்றைய நிலையில் பட்டப் படிப்புக்காக பொறியியல் கல்லூரிகளில் 1,300 மாணவர்களும், டிப்ளொமாப் படிப்பிற்காகப் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 4,800 மாணவர்களும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் ஆண்டு தோறும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மேற்சொன்ன ஏழு பொறியியற் கல்லூரிகள் தவிர இந்த மாநிலத்தில், கிண்டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி ஆகிய ஐந்து பொறியியற் கல்லூரிகளும் உள்ளன. அவை பல்கலைக் கழகப் பிரிவுகளாக இயங்குபவை, அல்லது தன்னுரிமையுள்ளவை ஆகும்.

2. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத் தொடக்கத்திலிருந்தே தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும், தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும், பிரிவுகளிலும் எந்தெந்தப் பயிற்சிகளைப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்களோ அந்தந்தப் பயிற்சிகளை அளிக்கவும், தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத்திட்டங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

பொறியியல் கல்லூரிகள்.

3. புதிய பல பாடங்களைத் தொடங்கும் திட்டத்தின்கீழ் கிண்டிப் பொறியியல் கல்லூரியில் "செயல் வகையாய்வு" (Operations Research) என்ற துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளொமா வகுப்பு தொடங்கப்படும். அக் கல்லூரியிலே ஆற்றல் மின்னணுவியல் (Power Electronics) என்ற புதிய துறையும் துவக்கப்படவிருக்கிறது.

பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் டிப்ளொமா வழங்கும் மற்ற பயிலகங்களும்.

4. பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பல புதிய பாடத்திட்டங்கள் துவக்கப்படும். சென்னையிலுள்ள மையப் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் தொலைப்படப் பொறியியல்

டிப்ளொமா மேற்படிப்புத் திட்டம் துவக்கப்படும். திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசுப் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில், மகளிர் பயிலுவதற்காக, மின் அணுவியல் துறையில் ஒரு டிப்ளொமா படிப்பு ஆரம்பிக்கப்படும். மாநிலத்தில் ஏற்கனவேயுள்ள மகளிர் பயிலகங்களிலுள்ள வசதிகளோடு மேற்சொன்ன ஆண்கள் பயிலகத்திலும் இவ்வாறு மகளிர்க்கான படிப்புத் திட்டங்களைத் தொடங்குவது மகளிர்க்கான வசதிகளை நிறைவாக்கும். சென்னையிலுள்ள மையப் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் இப்போதுள்ள "மீன் தொழில் நுட்பம்—கப்பலியக்குமுறை" ஆகிய படிப்பு வேலையிடைக் கல்வி (Sandwich) முறைக்கு மாற்றப்படும். தோல் பதனிடுபவருக்கேற்ற ஒரு தொழிற் படிப்புத் திட்டம், சென்னை, தோல் தொழில் நுட்பப் பயிலகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. நுண் அலைத் தொடர்பு (Microwave Communication) என்ற விருப்பப் படிப்பு சென்னையிலுள்ள மகளிர் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் துவக்கப்படும். மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பயிற்சி நிலையமும், சென்னையிலுள்ள கலைத் தொழில் நுணுக்கக் கல்லூரியும் 1973 ஆகஸ்ட் திங்கள் 1-ம் தேதியிலிருந்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின்கீழ் வந்துள்ளன. அந்தச் சிறப்புப் பயிற்சி நிலையத்தில் இப்பொழுது இருக்கும் "கட்டடம் மற்றும் சிற்பக் கலை"க்கான டிப்ளொமாப் படிப்பு சீர்திருத்தி அமைக்கப்படும். அது டிப்ளொமா வாங்குவதற்கு முன்னால் இரண்டு வருடப் பாடப் படிப்பும், மூன்றாவது வருடம் அதே பாடத்தில் முறையான டிப்ளொமா படிப்பும் கொண்டதாக அமைக்கப்படும். அந்தக் கலைத் தொழில் நுணுக்கக் கல்லூரியில் புகைப்படக் கலை, கல்லச்சுப் பதிப்புக் கலை, படஅச்சு செய்முறை, புத்தகக்கட்டுக் கலை, சிப்பம் கட்டும் கலை (Photography, Lithography, Block Making, Book Binding, Packaging) ஆகிய புதிய பாடங்கள் தொடங்கப்படும்.

5. கல்வியாண்டு 1974–75-லிருந்து திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசினர் தொழில் நுட்பப் பயிலகத்திலும், பொள்ளாச்சியிலுள்ள நாச்சிமுத்து தொழில் நுட்பப் பயிலகத்திலும், புகுமுகத் தொழில் நுட்ப வகுப்பில் உள்ள எட்டுப் பாடங்களில் இயல்பியல், பொறியியல் வரைபடம் ஆகிய இரண்டு பாடங்கள் மட்டும் எல்லா மாணவர்களுக்கும் தமிழில் கற்பிக்கப்படுகின்றன. இந்த முயற்சியின் மூலம் மாணவர்கள் இரு மொழியிலும் பயிற்சி பெற்று, படிப்பு முடிந்தபின், வாழ்க்கையை நன்முறையில் நடாத்திச் செல்லவும் தமிழையும் ஆங்கிலத்தையும் பயன்படுத்தும் திறன் பெறுவர்.

6. நன்கு வளர்ந்த பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் தாமே புதுக் கல்வித் திட்டங்களை வகுக்கவும், இருக்கும் பாடத் திட்டத்தைச் சீர்திருத்தவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல் புரியவும், தாங்கள் விரும்பியவாறு பயிற்சி அளிக்கவும், கற்பிக்கவும் உரிமைகள் வழங்கலாமென தொழில் நுட்பப் பயிலகங்களுக்காக அமைக்கப்பட்ட திரு. தாமோதரன் குழுவும், மற்றவர்களும் பரிந்துரை வழங்கியுள்ளனர். இந்த முறை ஒன்றிரண்டு பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் சோதனையாக செயல்படுத்திப் பார்க்கப்படும்.

7. தொழில் நுட்பக் கல்வி இயக்கமே அனைத்து டிப்ளோமாப் படிப்புகளுக்கும் தேர்வுகளையும் நடத்தி வருகிறது. தேர்வு நடத்தும் முறை, ஒழுங்கு ஆகியவை முன்னேற்றம் கண்டு வருகின்றன. 1974-ம் ஆண்டு நவம்பரிலிருந்து சில பாடங்களில் '' வினா வங்கி '' முறை துவக்கப்பட்டுள்ளது. இந்த முறையினால் வினா வங்கியில் விவரித்த வினாக்களின் உதவியோடு மாணவர்கள் அந்தந்தப் பாடம் முழுவதையும் கற்று அறிந்து கொள்ள இயலும். வினா வங்கியிலிருந்து தான் தேர்வுக்கு வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வினா வங்கியானது அந்தந்தப் பாட ஆசிரியருக்கும் ஒரு துணையாகும்.

நல்லதொரு கல்வி வளர வேண்டுமென்றால், இந்தியச் சூழ்நிலைக் கேற்பச் சிறந்த பாடப் புத்தகங்களை மலிவான விலையில் வெளியிட வேண்டும். பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்கான பாடப் புத்தகங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தனியார் பொறியியற் கல்லூரிகளும், தொழில் நுட்பப் பயிலகங்களும்.

8. தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வரும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து வருகிறது. 1968-69-ல் ரூ 68 இலட்சங்கள் அளிக்கப்பட்டதற்கு மாறாக 1975-76-ல் சுமார் ரூ 1,09 இலட்சங்கள் மானியத் தொகையாக வழங்கப்படவிருக்கிறது. தனியார் பள்ளி மற்றும் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஏற்கனவே தாராள ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். தனியார் பொறியியற் கல்லூரி மற்றும் தொழிற் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்களையும் அவ்விதிகளின்கீழ் கொண்டு வந்து அவர்களுக்கும் ஓய்வூதியம் தர அரசு முடிவெடுத்துள்ளது.

வெளிப்புலப் பேராசிரியர் திட்டம்.

9. மாநிலத்திலுள்ள பல உயர் கல்விக் கூடங்களில், சில சிறப்புப் பாடங்களை நடத்த தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் இல்லாமையால் அதற்கென்று 1973-74-ல் '' வெளிப்புலப் பேராசிரியர் திட்டம் '' தொடங்கப் பட்டு தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

வணிகவியல் பாடங்களில் தேர்வு.

10. தொழில் நுட்பவியல் இயக்குனரே வணிகவியல் பாடங்களான தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வரவு-செலவு கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் முதலியவற்றில் ஆண்டு தோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்குத் தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார். மேற்கண்ட பாடத்திட்டங்களும், தேர்வு முறைகளும் செம்மையாக்கப் பட்டுள்ளதோடு, இம்மாநிலத்திலுள்ள ஒப்புதலளிக்கப்பட்ட வணிகவியல் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆங்கிலச் சுருக்கெழுத்தில் இடைநிலைத் தேர்வும், தமிழ் தட்டெழுத்தில் மிகு விரைவுத் தேர்வும், புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடைசித் தேர்வு முடிந்த நாளிலிருந்து மிகக் குறுகிய காலத்தில், அதாவது ஏறத்தாழ பத்து வாரங்களுக்குள், முடிவுகள் வெளியிடப்படுகின்றன. அதன்பின், 15 நாட்களுக்குள் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. தமிழ் சுருக்கெழுத்துத் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக ''தமிழ் சுருக்கெழுத்து அகராதி '' ஒன்றினைத் தயாரித்து வெளியிடக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்.

11. கடந்த சில ஆண்டுகளாகவே, தமிழகத்தில் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் துவக்க முனைப்பான முயற்சிகள் செய்யப்பட்டன. ஒற்றை வகைத் (Unitary Type) தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்த வேண்டுமென்னும் மாநில அரசுக் கோரிக்கைக்குக் கொள்கையளவில் 1975-ம் ஆண்டு சனவரி திங்கள் 15-ம் நாள் அன்று பல்கலைக் கழக மானியக்குழு இசைந்துள்ளது. கிண்டிப் பொறியியற் கல்லூரியுடன் அதையொட்டியமைந்துள்ள மையத் தொழில் நுட்பப் பயிலகங்களைச் சேர்த்து ''அறிவியல், தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் '' அமைக்கப்படும். கடந்த 180 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்படும் கிண்டிப் பொறியியற் கல்லூரியில் தற்பொழுது

ஆண்டு தோறும் 400 மாணவர்கள் நான்கு பொறியியல் துறைகளில் பட்டப் படிப்பிற்கும், 100 மாணவர்கள் பதினைந்து துறைகளில் பட்ட மேற்படிப்பிற்கும் சேர்க்கப்படு கின்றனர். பொதுவியல், இயந்திரவியல், மின்னியல், மின் னணுவியல், இரசாயன நுட்பவியல், தோல் நுட்பவியல், நெசவு நுட்பவியல், மீன்தொழில் நுட்பவியல், தோட்டக் கலை, அச்சியல், வணிகவியல் முதலிய பல்வேறு தொழில் நுட்பவியல்களுக்கான டிப்ளோமாப் படிப்புகளையும் மற்ற வேறு பலவகைப் படிப்புகளையும் மையத் தொழில் நுட்பப் பயிலகங்கள் நடத்தி வருகின்றன. கிண்டிப் பொறியியற் கல்லூரி வளாவின் பரப்பளவு 265 ஏக்கரும், மையத் தொழில் நுட்பப் பயிலகங்கள் வளாவின் பரப்பு 891 ஏக்கரும் ஆகும். பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான கட்டடங் களும், தேவையான கருவிகளும் இந்த நிறுவனங்களில் உள்ளன.

12. சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திவரும் "அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி" இரசாயன நுட்ப வியல், தோல் நுட்பவியல், நெசவு நுட்பவியல், கட்டடக் கலை, நகரமைப்பியல் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புக் கல்விகளை அளித்து வருகிறது. புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கும் பல்கலைக் கழகம் இந்தக் கல்லூரி யையும் ஏற்று நடத்த வேண்டுமென பல்கலைக் கழக மானியக் குழு, ஒரு நிபந்தனை விதித்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்திடம் இதற்கான ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்புதலைப் பெற்று, இந்தப் புதிய தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் கூடிய விரைவில் நிறுவப்படும்.

13. இந்நாட்டு அறிவியல் வல்லுநர்களில் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருபவர்களையும் அழைத்து அவர்கள் திறனையும் பயன்படுத்த முதலமைச்சர் அறிவித்த திட்டம் தொடர்ந்து செயல்படுகிறது. இத்திட்டத்தின்படி, நம் நாட்டிற்கு விடுப்பில் வரும் அறிவியல் அறிஞர்கள் நமது கல்லூரிகளிலும் ஆய்வகங்களிலும் தகுந்த பணிகளில் மாதந்தோறும் ரூபாய் 1,200 அல்லது ரூபாய் 1,800 சிறப்பூதியத்தில் ஆறு மாதம் அல்லது ஓராண்டுக்கு அமர்த்தப்படுகிறார்கள். தற்பொழுது சில அறிஞர்கள் இத்திட்டத்தில் பணியாற்றுகின்றனர். அடுத்த ஆண்டுகளில் மேலும் பலர் இத்திட்டத்தில் பணியாற்ற வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணித அறிவியல் நிறுவனம்.

14. நடுவண் அரசு, மாநில அரசுகளின் உதவியோடு தன்னுரிமைபெற்ற அமைப்பாக கணித அறிவியல் நிறுவனம் அடையாறு பகுதியில் செயல்படுகிறது. இந்நிறுவனத்துக்கு மாநில அரசு ஆண்டொன்றுக்கு 3·5 இலட்சம் மானியமாக அளிக்கிறது. தற்பொழுது இந்நிறுவனம் அடிப்படைக்கணி தத்திலும், கணிதஞ் சார்ந்த இயல்பியலிலும், உயர்தர ஆய்வு நடத்தி வருகிறது. இந்நிறுவனம் அனைத்திந்தியப் பெருமை அடைந்துள்ளது. அதன் பணிகள் சிறக்கும் வகையில் இந்திய அரசு பெருமளவில் அதற்கு உதவி செய்ய முன்வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம்.

15. குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம் 1949-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1969–70 வரை அது தனியார் பொறியியற் கல்லூரியாக இருந்தது. 1969–70-ம் ஆண்டு முதல் அது தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஆட்சிக் குழுவின் நிருவாகத்தின்கீழ் வந்துள்ளது. முற்றிலும் புதிய துறைகளான வானவூர்திப் பொறியியல், உந்து வண்டிப் பொறியியல், மின்னணுப் பொறியியல், கருவிப் பொறியியல் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் வகுப்பு நடத்துகிறது. அறிவியல் பட்டதாரிகளே இவ்வகுப்புகளில் சேர்க்கப்படுகின்ற னர். வானவூர்திப் பொறியியலிலும், மின்னணுப் பொறியிய லிலும் இந்நிறுவனம் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களையும் (சென்னைப்பல்கலைக் கழகத்தோடு இணைந்தவை) நடத்துகிறது. இந்நிறுவனத்தை நடத்த ஆண்டு தோறும் ஆகும் நிகரச் செலவு இப்பொழுது ஏறத்தாழ ரூ 11 இலட்சமாகும், இச்செலவில் மூன்றில் இரண்டு பகுதியை நடுவண் அரசும். மூன்றில் ஒரு பகுதியை மாநில அரசும் ஏற்று வந்தன. இந்த விகிதத்தின்படி செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள முதலில் 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடியவே மைய அரசு ஏற்று இருந்ததெனினும், அந்நாளுக்குப் பின்னரும் தொடர்ந்து ஏற்றுவருமாறு மைய அரசு வேண்டப்பட்டுள்ளது. அவ்வரசு இசையும் என நம்பப்படுகிறது.

வட்டாரப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

16. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி, மைய அரசும் மாநில அரசும் இணைந்து நடத்தும் நிறுவனமாக 1964-65-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது.

அது தன்னுரிமையுள்ள நிறுவனமாகும். தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரே அதன் ஆட்சிக் குழுவின் தலைவராவார். தற்பொழுது அக்கல்லூரியில் பொறியியற் பட்ட வகுப்புகளுக்கு ஆண்டு தோறும் 200 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர். கல்லூரியிலுள்ள இடங்களில் பாதி தமிழ் நாட்டு மாணவர்களைக் கொண்டும், பாதி பிற மாநில மாண வர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. கல்லூரியை நடத்த ஆகும் தொடரும் செலவில் பாதியை நடு அரசும், பாதியை மாநில அரசும் ஏற்று வருகின்றன. இதனால் மாநில அரசுக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவு சுமார் ரூ. 14 இலட்சமாகும்.

VI. கலைப் பணிகள்

இயல் இசை நாடக மன்றம்.

1. தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கிவரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு தனி நிறுவனமாகும். இம்மன்றம், நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளை வளர்த்திட அரும்பணிகளைச் செய்து வருகின்றது. இந்திய அரசின் கலாச்சார பரிமாற்றுத் திட்டத்தின்கீழ் வெளி நாடுகளிலிருந்து வரும் கலைக் குழுக்களுக்கு வரவேற்பளிப்பதுடன் சிறந்த நாடகங்களின் ஆக்கத்திற்கு ஊக்கமளித்தும், தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு கலைக் குழுக்கள் செல்ல ஆதரவளித்தும் வருகின்றது. மேலும் இம்மன்றம், சிறந்த கலைஞர்களுக்கு '' கலைமாமணி '' என்ற பட்டமளித்துச் சிறப்பிக்கின்றது. 1974-75-ம் ஆண்டு முதல், அத்தகைய சிறந்த கலைஞர்களில் பதின்மருக்கு நபருக்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் அளிக்கப்படுகிறது.

2. குறவஞ்சி, பாகவதமேளம் முதலிய தமிழ் நாட்டின் பண்டைய கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் இம்மன்றம் திட்டங்கள் வகுத்துள்ளது. இம்மன்றம் இவ்வித பாரம்பரியக் கலைகளின் இயங்கும் கண்காட்சிகளை நடத்தவும் கருதி உள்ளது. இம்மன்றம் பாரம்பரிய இசை, நாடகம் ஆகியவற்றின் ஒலி ஒளிப்பதிவுகளின் சேமிப்பு நிலையம் ஒன்றையும் அமைத்து வருகிறது.

3. மைய அரசும், மாநில அரசும் இணைந்து பொறுப் பேற்று வந்த ஒரு திட்டத்தின்கீழ் வறுமை நிலையில் உள்ள 259 கலைஞர்கள் ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் மேலும் அதிகக் கலைஞர் களுக்கு ஓய்வு ஊதியம் அளிக்க மைய அரசு மறுத்து விட்ட தால், மேலும் அதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கும் பொறுப்பினை மாநில அரசு தானே ஏற்றுக்கொண்டு தன் சொந்த நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கி வருகிறது. இதற் கான மாநில அரசுத் திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 350 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1975-76-ம் ஆண்டும் தொடரும். அவ்வாண்டில் மேலும் 75 கலைஞர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது.

4. ஓவியம் முதலிய நுண் கலைகளைப் பேணி வளர்க்க கல்வி அமைச்சரின் தலைமையின் கீழ் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியங்கள்.

5. சென்னையிலும், புதுக்கோட்டையிலும் அரசு அருங் காட்சியகங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகங்களில் சிறந்த சிற்பங்கள், மரச்செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் முதலியவை உள்ளன. இவை தவிர தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருள்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொது மக்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் இவற்றால் பெரும் பயன் அடைந்து வருகின்றனர். இவ்வருங்காட்சியகங்கள் பொதுமக்களுக்கான அறிவியல் விரிவுரைகளையும் கண்காட்சி களையும் நடத்தி வருகின்றன. சென்னை அருங்காட்சியகத்தில் '' ஜவகர்லால் நேரு குழந்தைகள் இல்லம் '' ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இந்த இல்லத்தில் குழந்தை களுக்கான அருங்காட்சியகம் ஒன்றும், பொம்மைகள் அருங் காட்சியகம் ஒன்றும் இடம்பெறும். மேலும் கலை, இசை, நடனம் முதலியவற்றில் சிறு குழந்தைகள் தங்களுக்குள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வசதிகளும் அந்த இல்லத்தில் இருக்கும்.

தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி.

6. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 230 மாணவர்கள் பயிலுகின்றனர். இதில் 22 தலைசிறந்த இசைவாணர்கள் ஆசிரியர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இக்கல்லூரியில்

வாய்ப்பாட்டு, கருவி இசை, பரத நாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இக்கல்லூரி அனைத்திந்திய அளவில் புகழ் பெற்று விளங்குகின்றது. பிற மாநிலங்கள் பலவற்றிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் இக்கல்லூரியில் பயின்று வருகின்றனர். இக்கல்லூரி 1974-75-ம் ஆண்டில் தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடியது.

பொது நூலகங்கள்.

7. நூல் நிலையச் சட்டம் ஒன்றை இயற்றி பொது நூலக இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதவரளித்துவரும் இந்திய மாநிலங்கள் சிலவற்றில் தமிழ்நாடும் ஒன்றாகும். கன்னிமாரா பொது நூலகம், மாநிலத்தின் மைய நூலகமாகும். தற்போது புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் மொத்தம் 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. 1,441 கிளை நூலகங்களும் உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நூலக ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டியுள்ளது. பொது நூல் நிலையச் சட்டம் இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படவில்லை. இந் நூலகங்களில் ஏறக்குறைய 3,000 பேர் பணிபுரிகின்றனர். மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நடமாடும் நூலகங்கள் போன்ற சிறப்பான நூலகப் பணிகளையும் புகுத்தியுள்ளன.

8. நூலக நிதியின் பெரும்பகுதி வீட்டு வரி, சொத்து வரி ஆகியவற்றின் மீது வசூலிக்கப்படும் நூலக மேல்வரியைக் கொண்டதாகும். 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து, நூலக மேல்வரி ரூபாய்க்கு 3 காசிலிருந்து 5 காசாக உயர்த்தப்பட்டது. இதனால் நூலக ஆணைக்குழுக்களின் வருவாய் பெருகும். 1974-75 ஆண்டில் இவ்வாணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக சுமார் ரூ. 70 இலட்சம் பெறும். சென்னை தவிரப் பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமான இணை மானியத்தை அரசிடமிருந்து பெறுகின்றன. 1973-74ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகிறது. திட்டப் பணிகளின் கீழ் தொடங்கப்பட்ட நூலகங்களுக்கான மானியங்களை அரசு தனி மானியமாக வழங்குகின்றது. 1973-74ஆம் ஆண்டிலிருந்து திட்ட மானியத்தில் 50 விழுக்காடு புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றது. 1974-75ஆம் ஆண்டில் நான்கு கிளை நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டு

வதற்காக (ஒவ்வொன்றுக்கும் ரூ. 45,000 வீதம்) மொத்த ரூ. 1,80,000 மானியம் வழங்க ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. 1975-76 ஆம் ஆண்டு பொது நூலகங்களுக்காக மொத்தம் சுமார் ரூ. 88 இலட்சத்தை அரசு செலவிடும்.

9. 1972 ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பொது நூலகங்களுக்காகத் தனியாக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாட்டில் நூலகப் பணியில் தற்போதைய அமைப்பை ஆராய்ந்து அதன் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான வழிவகைகள் குறித்து ஆலோசனை கூற, ஐவர் குழு ஒன்றை அரசு நியமித்தது. அக்குழு 1974-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தன் அறிக்கையை அனுப்பியது. அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை.

10. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சீரான முறையில் செயலாற்றி வருகின்றது. 1975-76-ஆம் ஆண்டில் மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனையும், தஞ்சாவூர் அரண்மனையும் செப்பனிடப்பட்டு மேம்படுத்தப்படும். அண்மையில் சில ஆண்டுகளாக, இந்தியக் கலைச் செல்வங்களின் திருட்டு பெருகியுள்ளது. மைய அரசின் உதவியுடன் நாடு முழுவதிலும் உள்ள வெண்கலப் படிமங்கள், சிற்பங்கள், மரச்செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் முதலிய தொல்பொருள்கள் யாவற்றையும், பதிவு செய்யும் திட்டம் ஒன்று துவங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இப்பணி பதிவு அலுவலர்கள் எழுவரால் கவனிக்கப்படுகின்றது. அவர்கள் சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பணி செய்கின்றனர். அவ்வலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் உதவி புரிய ஓர் இளநிலை எழுத்தரும், ஓர் ஆவண எழுத்தரும், ஒரு கடைநிலை ஊழியரும் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது இப்பணி, கலைச் செல்வங்கள், முக்கியமாக வெண்கலப் படிமங்கள், நிரம்பியுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரமாக நடைபெறுகிறது. 1973-74-ஆம் ஆண்டு முதுகலை (எம்.ஏ.) பட்டப்படிப்பில் தேறிய மாணவர்களுக்குத் தொல்பொருள் மற்றும் கல்வெட்டு ஆராய்ச்சியில் பயிற்சியளிக்க ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. இதில் பயிற்சி பெறுபவர்களுக்கு பட்ட மேற்படிப்புச் சான்றிதழ் ஒன்று அளிக்கப்படுகின்றது. இந் நிறுவன மாணவர்களுள் முதல் அணியினர் பயிற்சியில் தேறி 1974 ஜூலையில் வெளி வந்தனர். இவ்வகுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

VII. தமிழ் வளர்ச்சி

தமிழ் தொன்மைச் சிறப்பும், புதுமை நலமும் ஒருங்கே அமைந்த மொழி. சமஸ்கிருத மொழியையொத்த, அல்லது அதனினும் மிகுந்த தொன்மைச் சிறப்புடைய தமிழ் இன்றும் இந்தியாவில் ஏறத்தாழ நான்கு கோடி மக்களால் பேசப்பட்டு வருவதுடன், இலங்கை, மலேசியா, மொரிசியஸ் தீவுகள், பிஜித் தீவுகள் முதலிய உலகின் பல பாகங்களில் உள்ள பல இலட்சம் மக்களாலும் பேசப்பட்டு வருகின்றது. தமிழ் மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றை வளர்ப்பதில் தமிழ்நாடு அரசு மிக்க ஈடுபாடு கொண்டுள்ளது. 1974-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் சட்டமன்றத்தில் தெரிவித்தபடி, இவ்வரசுச் செலவினங்களுள் தமிழ் வளர்ச்சிக்கு நேரடித் தொடர்புடையவை அனைத்தும் 1975-76-ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீட்டில் ஒருங்கிணைக்கப்பட்டு " 277. கல்வி—C. தனிவகைக் கல்வி—f. தமிழ் மொழி மற்றும் தமிழிலக்கிய வளர்ச்சி " என்ற தனித் தலைப்பின்கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. 1975-76-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 77 இலட்சங்களாகும். அதில் ரூ.40 இலட்சம் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையும் புத்தகச் செலவுத் தொகையும் அளிக்கச் செலவிடப்படும். ரூ 15 இலட்சம் கல்லூரிப் பாட நூல்களைத் தமிழில் கொண்டுவரச் செலவிடப்படும். ரூபாய் 9 இலட்சம் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கும் அதன் பணிகளுக்கும் செலவிடப்படும். பிற காரியங்களுக்காக ரூ. 13 இலட்சம் செலவிடப்படும்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

2. தமிழ்நாட்டில் தமிழை ஆட்சி மொழியாகச் செயல்படுத்தும் கொள்கையை எல்லா மட்டங்களிலும் முழு ஆற்றலுடன் நிறைவேற்ற வேண்டுமென்பதில் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. அரசுச் சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புப் பணிகள் மிகத் துரிதமாக, நடந்து வந்துள்ளன. ஆட்சிச் சொல்லகராதி, தொழில் நுட்பத் துறைகளுக்கான சிறப்புச் சொற்கள் துணையகராதி ஆகியவை அரசுத் துறைகளுக்குப் பயன்படும் வகையில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வதில் ஏற்படும் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக, மாவட்ட அளவில் தனி ஆய்வுப் பணியாளர்கள்

அமர்த்தப்பட்டுள்ளனர். 1867 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட தமிழ் புத்தகங்களின் விவரப் பட்டியல் ஒன்று தொகுக்கப்பட்டு வருகின்றது. 1867 முதல் 1910 முடிய வெளியிடப்பட்ட தமிழ் நூல்களின் விவரப் பட்டியல் எட்டுத் தொகுதிகளில் முன்னரே வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகுதிகளை வெளியிடும் பணி தொடரும்.

3. ஆதார பூர்வமான தமிழ்நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு வல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளையுடைய இவ்வரலாற்றின் முதல் நான்கு தொகுதிகள் முடிக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் வெளியிடப்படும். தமிழில் தரமான நூல்களை வெளிக்கொணரும் நூலாசிரியர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்றையும் இத்துறை செயல்படுத்தி வருகின்றது. மேலும் தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகத்தில் உள்ள சித்த மருத்துவம் பற்றிய பனை ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து பதிப்பிப்பதற்கும் நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

4. நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள் தமிழ் வளர்ச்சிக்கான இருக்கைகள் அமைத்து தமிழ் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளவும் இத்துறை தாராளமான முறை மானியம் வழங்கி வருகின்றது.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி.

5. " செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி" யைத் தொகுத்து வெளியிடுவதற்காக, தமிழ், திராவிட இன மொழியியலில் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களை தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் இயக்குநராக அரசு நியமித்துள்ளது. அவர் இத்திட்டத்தின் பணியைத் துவங்கியுள்ளார். இந்நூல் முழு விரிவு வாய்ந்த, திட்டவட்டமான நூலாக அமையும். இது ஏறத்தாழ 12 தொகுதிகளில் வெளிவரும் என்றும், இப்பணி சுமார் நான்கு ஆண்டுகளில் நிறைவேறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

6. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970 ஆம்-ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது. தமிழ் ஆராய்ச்சியில் பற்றுள்ள உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழ்த் துறையிலும் தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். 1972-ஆம் ஆண்டிலிருந்து

இந்நிலையம் தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகள் அவ்விதழில் இடம் பெறுகின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் சிறந்த நூலகம் ஒன்று இந் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ நன்கொடையாக அளித்துள்ள காட்சி கேள்விச் சாதனத்தின் உதவியுடனும், மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியைக் கொண்டும் வெளி நாட்டு மாணவர்களுக்கு இந் நிலையம் சிறப்பான முறையில் தமிழ் கற்றுத் தருகிறது. தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பிற அறிஞர்களின் இலக்கியங்களின் பட்டியல் ஒன்றையும், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கிய நூல்களின் பட்டியல் ஒன்றையும் இந்நிலையம் வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இவை தவிர, சங்க காலத் தமிழர் சமூக வரலாற்றையும், தமிழ் இலக்கியத்திற்கு ஒரு துணை நூலையும், தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றையும், இது வெளியிடக் கருதியுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகளுக்கும் 1974–75-ஆம் ஆண்டில் இந் நிறுவனம் ஏற்பாடு செய்தது. அண்மையில் சில ஆண்டுகளாக இந் நிலையம் தமிழ்நாடு அரசிடமிருந்து ஆண்டுதோறும் மூன்று இலட்சம் ரூபாய்கள் அளவில் மானியம் பெற்று வருகின்றது. தற்போது இந்நிறுவனம், அடையாறு மத்தியப் பல்தொழிற் பயிற்சி நிலையக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இந் நிறுவனத்திற்கு நிலையான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக தற்போது இந் நிறுவனம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆறு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

இணைப்பு 1.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

(சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.)

	1965–66 (மூன்றாவது திட்ட முடிவு).	1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு).	1973–74 (நான்காவது திட்ட முடிவு).	1974–75
(1)	(2)	(3)	(4)	(5)
அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை—				
வயதுத் தொகுதி 6–11—				
சிறுவர்	25·85	26·79	30·45	31·15
சிறுமியர்	25·64	26·58	29·79	30·44
மொத்தம் ..	51·49	53·37	60·24	61·57

இணைப்பு 1—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

(1)	1965–66 (மூன்றுவது திட்ட முடிவு). (2)	1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3)	1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4)	1974–75. (5)
	(சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.)			
வயதுத் தொகுதி 11–14—				
சிறுவர்	11·31	11·72	13·71	14·01
சிறுமியர்	11·23	11·63	13·40	13·70
மொத்தம் ..	22·54	23·35	27·11	27·71
வயதுத் தொகுதி 14–17—				
சிறுவர்	9·33	9·67	11·31	11·56
சிறுமியர்	9·26	9·60	11·07	11·31
மொத்தம் ..	18·59	19·27	22·38	22·87

ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—				
வயதுத் தொகுதி 6–11—				
சிறுவர்	26·37	28·22	30·64	31·33
சிறுமியர்	18·74	20·96	23·74	24·27
மொத்தம் ..	45·11	49·18	54·38	55·60
வயதுத் தொகுதி 11–14—				
சிறுவர்	7·21	8·00	9·10	9·30
சிறுமியர்	3·45	4·28	5·09	5·26
மொத்தம் ..	10·66	12·28	14·19	14·56
வயதுத் தொகுதி 14–17—				
சிறுவர்	3·86	4·30	4·97	5·05
சிறுமியர்	1·65	2·07	2·42	2·47
மொத்தம் ..	5·51	6·37	7·39	7·52

இணைப்பு 1—தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

(1)	1965–66 (மூன்றாவது திட்ட முடிவு.) (2)	1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு.) (3)	1973–74 (நான்காவது திட்ட முடிவு.) (4)	1974–75. (5)
இப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—				
6 முதல் 11 வரை—				
சிறுவர்	102·03	105·34	100·6	100·6
சிறுமியர்	73·08	78·85	79·6	79·8
மொத்தம் ..	87·61	92·15	90·2	90·3
11 முதல் 14 வரை—				
சிறுவர்	63·78	68·23	66·3	66·4
சிறுமியர்	30·72	36·79	37·9	38·4
மொத்தம் ..	47·31	52·57	52·3	52·6
14 முதல் 17 வரை—				
சிறுவர்	41·38	44·48	43·9	43·8
சிறுமியர்	17·83	21·52	21·8	22·0
மொத்தம் ..	29·65	33·05	33·0	33·0
ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—				
தொடக்கப் பள்ளிகள்	24,641	25,694	26,726	26,797
உயர் தொடக்கப் பள்ளிகள் ..	6,065	6,018	5,773	5,768
உயர்நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள் உட்பட)	2,234	2,513	2,823	2,882
உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—				
தொடக்கப் பள்ளிகள்	88,173	91,918	1,06,332	1,10,517
உயர் தொடக்கப் பள்ளிகள் ..	59,943	62,222	66,843	68,249
உயர்நிலைப் பள்ளிகள்	48,574	54,857	65,959	69,454
மொத்தம் ..	196,690	208,997	2,39,134	2,48,220

(1)	(2)	(3)	(4)	(5)
ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—				
(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)—				
தொடக்கப் பள்ளிகள்	27	36	35	35
உயர் தொடக்கப் பள்ளிகள் ..	35	33	33	33
உயர் நிலைப் பள்ளிகள்	31	26	24	24
(2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியிலிருந்து நீக்கி)—				
தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி.	37	37	37	35
உயர் தொடக்கநிலை வகுப்புத் தொகுதி.	32	33	33	33
உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி.	32	32	29	29

	1973–74 நான்காவது திட்ட முடிவு. (6) மார்ச். 1973.	(7) அக். 1973.	1974–75. (8) மார்ச். 1974.	(9) அக். 1974.
1	1,93,686	30,361	2,21,402	28,104
2	96,903	5,367	1,12,358	5,482
3	72,646		78,625	
4				
	72,646		78,625	
	51,698		51,063	
	49,057		49,332	
	14,859		15,287	
	6,993		6,307	
	1,95,253		2,00,614	
5				
	2,969		3,383	
	7,090		7,416	
	10,059		10,799	
6				
	51		51	
	127		132	
	178		183	

இணைப்பு—3.

தொழில் நுட்பக் கல்வி—புள்ளி விவரங்கள்.

(1)	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு). (2)	1968-69 (ஆண்டுத் திட்டகால முடிவு). (3)	1973-74 (நான்காவது திட்ட முடிவு). (4)	1974-75. (5)
(அ) பொறியியற் கல்லூரிகள் எண்ணிக்கை—				
(1) அரசு	3	4	4	4
(2) தனியார்	4	3	3	3
(3) தன்னுரிமையுள்ளவை ..	5	5	5	5
மொத்தம் ..	12	12	12	12
(ஆ) பல்தொழிற் பயிலகங்கள் எண்ணிக்கை—				
(1) அரசு	16	16	19*	19*
(2) தனியார்	18	18	18	18
(3) தன்னுரிமையுள்ளவை ..	1	1	1	1
மொத்தம் ..	35	35	38	38

* கலை—தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்கள் மூன்றையும் சேர்த்து.

(1)	1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2)	1968–69 (ஆண்டுத் திட்டகால முடிவு). (3)	1973–74 நான்காவது திட்ட முடிவு). (4)	1974–75. (5)
(இ) தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளிகள்—				
(1) அரசு	11	11	11	11
(2) தனியார்	4	4	3	3
மொத்தம் ..	15	15	14	14
(உ) ஆசிரியர்கள் எண்ணிக்கை—				
(1) பொறியியற் கல்லூரிகள் ..	..	..	..	515
(2) பல்தொழிற் பயிலகங்கள் ..	..	..	..	754
(3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்.	..	..	..	66
மொத்தம் ..	..	..	..	1,335
(ஊ) மாணவர்கள் எண்ணிக்கை—				
(1) பொறியியற் கல்லூரிகள் ..	5,289	7,163	6,796	8,246
(2) பல்தொழிற் பயிலகங்கள் ..	10,526	12,633	10,591	11,061
(3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்.	1,124	1,304	1,704	827
மொத்தம் ..	16,939	21,100	19,091	20,134

NOTE ON "DEMAND—17. EDUCATION".

BUDGET ESTIMATES, 1975–76.

CHAPTER I.

INTRODUCTION.

The outlay under "Demand 17—Education" in 1975–76 is Rs. 118 crores, which represents 22 per cent of the total expenditure on Revenue Account namely Rs. 538 crores. It constitutes the highest single component in the Budget.

2. The expenditure on education has been steadily rising. A comparative study of the figures of the Budget Estimates for 1975–76 under "277. Education" and those for 1974–75 given below will amply bear this out:—

	Budget Estimate for 1974–75.			*Budget Estimate for 1975–76.*		
	Non-Plan.	*Plan.*	*Total.*	*Non-Plan.*	*Plan.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			(RS IN LAKHS.)			
1. Primary Education.	50,76	2,31	53,07	55,88	2,79	58,67
2. Seconary Education.	34,24	2,18	36,42	36,86	1,92	38,78
3. University Education.	9,00	1,19	10,19	8,63	94	*9,57
4. Special Education.	13	5	18	59	21	80
5. N.C.C., Sports, Etc.	1,18	11	1,29	1,12	10	1,22
6. Other items (increase in Dearness Allowance).	3,06	..	3,06	3,31	..	3,31
7. Technical Education.	3,62	72	4,34	3,74	46	4,20
TOTAL—277. EDUCATION.	1,01,99	6,56	1,08,55	1,10,13	6,42	1,16,55

* About Rs. 60 lakhs connected with Tamil Development has been transferred from "University Education" to the head "Special Education" in 1975–76. Hence the apparent reduction under "University Education" in 1975–76.

3. The Demand 17 for Education includes besides the provision of Rs. 117 crores under 277. Education, provision for Public Libraries, Archaeology, Museums and other allied items as indicated below :—

	Non-Plan.	Plan.	Total.
(1)	(2)	(3)	(4)
	(RS. IN LAKHS.)		
277. Education	1,10,13	6,42	1,16,55
278. Art and Culture	18	11	29
Archaeology	5	8	13
Archives and Museums ..	8	1	9
Public Libraries	81	7	88
288. Social Security and Welfare Schools for Handicapped, etc.	27	..	27
TOTAL—DEMAND 17. EDUCATION.	1,11,52	6,69	1,18,21

4. Besides these, provision has also been made in 1975-76 under other Demands, for School and College Buildings, loans, etc., as follows :—

	Non-Plan.	Plan.	Total.
(1)	(2)	(3)	(4)
	(RS. IN LAKHS.)		
General Education.			
A. Expenditure within Revenue Account—			
314. Community Development Works—Panchayat Union School Buildings	..	75	75
Demand 37.—Public Works Buildings for Government Schools and Colleges ..	..	4	
266. Pensions to teachers of Aided and Local Body Schools	287	..	287

(1)	(2)	(3)	(4)
		(RS. IN LAKHS.)	
B. Expenditure outside Revenue Account—			
459. Capital Outlay—School Education Department Office Buildings	6	..	6
477. Capital Outlay on Education, Art and Culture Buildings for Government Schools and Colleges, etc. ..	..	1,37	1,37
483 Capital outlay on Housing Quarters for High School Teachers	..	2	2
677. Loans—Marriage loans to Aided School Teachers ..	1	..	1
National Loan Scholarships.	40	..	40
TOTAL—GENERAL EDUCATION.	3,34	2,18	5,52

	Non-Plan.	Plan.	Total.
(1)	(2)	(3)	(4)
		(RS. IN LAKHS.)	
Technical Education.			
477. Capital Outlay—Buildings for Government Technical Educational Institutions ..	..	15	15
677. Loans to Technical Education students	12	..	12
TOTAL—TECHNICAL EDUCATION.	12	15	27
TOTAL—GENERAL AND TECHNICAL Education.	3,46	2,33	5,79

If all the above allocations are taken into account the expenditure on education will be Rs. 124 crores in 1975-76.

5. These figures do not include the expenditure on Harijan Welfare and Backward Class Schools and hostels, Scholarships to Scheduled Castes, Scheduled Tribes and Backward Class Students and on a few special items such as Approved Schools, Industrial Training Institutes, etc. The total provision for these items is about Rs. 17 crores.

6. The Budget makes separate allocations for Medical, Agricultural and Veterinary education under the respective departments to the tune of Rs. 7 crores. If these allocations (Rs. 17 crores plus Rs. 7 crores) are taken into account, the outlay on education in the Budget Estimate for 1975-76 will be in the order of Rs. 148 crores.

7. In 1975-76, the plan expenditure on various sectors of education under all heads (277 Education, 477 Capital Outlay on Education, 677 Loans, etc.) will be as follows: (The figures with plus sign represent the outlay on Centrally Sponsored Schemes) :—

(RS. IN LAKHS)

	Committed.	*New Schemes sanctioned in 1975-76.*	*Total.*
General Education—			
(i) School Education	4,71	92	5,63
(ii) College Education ..	1,35	29	1,64
	+23		+23
	6,06	1,21	7,27
	+23		+23
Technical Education	57	8	65
Public Libraries and Culture ..	51	2	53
	+3		+3

8. 1975-76 will be the second year of the Fifth Year Plan. Both in the percentage of literacy and in the percentage of investment on education, Tamil Nadu is one of the leading States in the country. In fulfilling the constitutional directive of providing free primary education for all the children up to the age of fourteen this State is ahead of most other States. The percentage of expenditure on all types of education in Tamil Nadu will work out to more than 30 per cent. While no one would deny the need for maintaining or even intensifying the tempo of qualitative and quantitative improvement in Education, the scope for effecting economics, wherever possible and making a more effective deployment of the resources spent on education has also to be explored. The Government have constituted in January 1975 a Committee to go into this issue and submit a report to the Government.

Educational Structure.

9. This problem has been receiving the attention of educationists during the past few years. While in many of the North Indian States like Uttar Pradesh, Madhya Pradesh, Rajasthan, Punjab, Haryana and West Bengal, the duration of school plus college education is 14 years, it is 15 years in the Southern States of Tamil Nadu, Andhra Pradesh, Karnataka and Kerala as well as in Gujarat, Orissa, Bihar, etc. Even, among the States with a 15 year pattern, there is no uniformity. While Andhra Pradesh, Karnataka and Kerala have a 10+2+3 pattern, Bihar has (11+1 and 12)+3, Orissa has (11+1)+3; while Tamil Nadu has 11 years of School Education, one year Pre-University and three years Degree Course. (The information on the pattern in the other States is taken from Dr. Shukla Committee's Report submitted to the Union Ministry of Education in December 1973.) If a uniform pattern of educational structure has to be evolved throughout India, the Government of India will have to agree to meet the extra cost involved in the change over, which is quite considerable. In the meantime, the Government of Tamil Nadu have constituted in January 1975 a committee of educationists to go into all aspects of the problem and report to Government on the advisability or otherwise of changing the present 11+1+3 pattern of Tamil Nadu into one of 10+2+3.

CHAPTER II.

ELEMENTARY EDUCATION.

Enrolment.

Adopting the 1971 census figures, the population of children of the age group 6—11 (corresponding to Standards I to V) in Tamil Nadu in 1974–75 was 61.6 lakhs. Of this, 55.6 lakhs were actually going to schools, including as many as 6.42 lakh pupils additionally enrolled in the Fourth Plan period and in 1974–75. The enrolment percentage thus works out to 90.3 per cent for this age group. During the year 1975–76 our target is to enrol additionally about one lakh pupils in this age group.

2. The population of children of the age group 11—14 (corresponding to standards 6 to 8) in 1974–75 was about 27.7 lakhs. Out of them, 14.56 lakhs were actually enrolled in schools (including 2.28 lakhs additionally enrolled) during the past six years. The enrolment percentage for this age group is now 52.6 per cent. During 1975–76 our target will be an additional enrolment of about 50,000 pupils of this age group.

Quality Improvement.

3. With a view to maintain a high standard of instruction in schools, steps have been constantly taken to improve the teacher-public ratio. The total number of teachers working in the 32,565 elementary schools including higher elementry schools as on 1st August 1974 is 1,78,766 of whom as many as about 25,000 were appointed during the Fourth Plan period. The total number of pupils in the elementary schools is 61.14 lakhs as on 1st August 1974. The teacher-pupil ratio in elementary schools thus works out to 1 : 35 now. During 1975–76 te Government will be sanctioning 400 additional posts of Secondary Grade Teachers for age group 6—11 and 600 additional posts of Secondary Grade Teachers for age group 11—14.

4. As a special step towards ensuring improvement in the quality of instruction in schools, the appointment of higher grade teachers is being gradually reduced during the last few years and Secondary Grade Teachers are being employed in their place. Higher Grade Teachers who have since qualified themselves to be Secondary Grade Teachers are being absorbed by the conversion of Higher

Grade into Secondary Grade Posts. So far 37,700 Higher Grade posts have been converted into Secondary Grade posts, including 4,200 posts upgraded in 1974–75.

5. With a view to improving the teaching of science in Elementary Schools the syllabi has been revised and grants are also given for the purchase of Science equipment and teaching aids, at Rs. 300 for each elementary school and Rs. 1,000 for each higher elementary school. So far, 12,720 elementary and 3,334 higher elementary schools have been benefited. During 1975–76 these grants will be given to 500 elementary schools and 200 higher elementary schools.

6. A pilot project for improving science teaching in elementary schools with UNICEF assistance was implemented during the years 1971–72 to 1973–74 in 50 elementary and 30 higher elementary schools in Madras, Chingleput and South Arcot Districts. From 1974–75, the scheme has been expanded with UNICEF assistance to cover 1,550 elementary schools and 1,800 higher elementary schools spread out throughout the State. The UNICEF supplied free of cost Science kits to 1,550 elementary schools (cost Rs. 3 lakhs) and to 1,800 higher elementary schools (cost Rs. 20 lakhs). Further, under this scheme about 1,550 elementary school teachers and 3,600 higher elementary school teachers were given in-service training during 1974–75 (20 days for elementary school teachers and 42 days for higher elementary school teachers) at a cost of about Rs. 10 lakhs, of which half will be borne by UNICEF.

7. During 1974–75, an expenditure of Rs. 1,00,000 was sanctioned on the purchase and distribution to elementary schools of essential library books. An equal sum of Rupees one lakh will be spent for this purpose in 1975–76.

8. Of the 5,800 higher elementary schools in the State, only a few are having separate Physical Education Teachers. Hence 195 posts of Physical Education Teachers were created during 1973–74. About 150 more posts will be created in Higher Elementary Schools during 1975–76.

9. Crafts are taught in elementary schools for developing the technical skills and creative talents of pupils and enabling them to learn some useful crafts relevant to the needs of the locality.

About 4,900 higher elementary schools are already having either full-time or part-time Craft Instructors. This is inclusive of about 576 posts of full-time craft teachers sanctioned during 1973–74 of which about 300 were filled up from the open market and the remaining by absorbing fully qualified craft teachers who were working in part-time posts. During 1975-76, 150 additional full-time craft teacher posts will be created in higher elementary schools.

Midday Meals Scheme.

10. The provision of the Midday Meals in all elementary schools has a major role in promoting and retaining enrolment in the schools. One-third of the total number of pupils of threse schools who come from the poorest sections of the population, benefit under this scheme. About 19.58 lakhs of poor pupils in standards 1 to 8 of elementary and higher elementary schools receive midday meals, including the 1.60 lakhs fed in Harijan Welfare Schools ran by the Harijan Welfare Department. The provision for the Midday Meals Scheme in the budget for 1975–76 is about Rs. 4½ crores. This is supplemented by commodity assistance from the CARE Organisation, worth about Rupees six crores every year.

11. From 1st October 1974 the State Government grant for the Midday Meals Scheme has been raised from 6 paise to 10 paise per pupil per day for 200 days and the local body contribution has been raised from 4 paise to 5 paise per pupil per day for 200 days. This has meant an extra expenditure to the Government of about Rs. 1.17 crores per year recurring.

12. The three districts of Chinglepu, South Arcot and North Arcot are covered by the Central Kitchen Programme, under which meals are cooked in modern ovens under hygienic conditions and transported to the surrounding schools in closed vans. 97 Central Kitchens are functioning in those districts. They were established with CARE assistance at a total cost of about rupees two crores. They are serving about 3.75 lakhs of pupils in those three districts. These kitchens are having about 224 tempo vans gifted by CARE for transporting the food from the kitchens to the schools. A workshop for servicing, repairing and

maintaining these vehicles as well as equipments used for cooking at the kitchen has been constructed at Vikravandi in South Arcot district at a cost of about Rs. 15 lakhs with the assistance of CARE. The workshop has since been commissioned. An executive Engineer with necessary supporting staff is in charge of the workshop.

13. To facilitate proper storage of the food stuffs required for this programme, six regional godowns have been constructed in Tamil Nadu with the help of the CARE organisation at a cost of about Rs. 20 lakhs.

Free Supply of Books.

14. Poor pupils receiving Midday Meals in standards I to III get text books free and poor pupils in standard I get slates also free. More than 12 lakhs of pupils get this free supply every year. From the year 1972–73 the cost of text books is met by the Tamil Nadu Text Book Society from its funds. The scheme cost the Society about Rs. 20 lakhs in 1974-75 and will cost about Rs. 25 lakhs in 1975–76. About Rs. 2.50 lakhs will be spent from State Government funds in 1975–76 mainly for the free supply of slates to pupils in standard I.

Buildings.

15. Grants are given to local bodies and managements of aided schools towards the construction of school buildings. Till 1974–75 the rate of State Government grant for an elementary school building was Rs. 8,000, and the minimum management contribution was 4,000. The rates for a higher elementary school were Rs 13,000 and Rs. 6,000 respectively. From 1974–75 the maximum grant payable for an elementary school building/higher elementary school building has been raised to Rs. 10,000/17,000, subject to a minimum contribution by the management of Rs. 5,000/8,000. In 1975–76, provisions of Rs. 4 lakhs for grants to Municipal and Aided Elementary schools and Rs. 14 lakhs for expenditure on Government Elementary School buildings have been made. The provision made in the Community Development Budget for grants to Panchayat Union Elementary School buildings in 1975–76 is Rs. 75 lakhs. In addition to these, funds from Raffle collections are also made available for construction of school buildings.

16. With a view to encouraging women teachers to reside in rural areas, a scheme for the construction of quarters for women teachers of Panchayat Union Elementary schools is being implemented. About 1,600 quarters have so far been constructed and 211 quarters are under construction.

Local Body Schools.

17. Out of about 32,565 elementary schools in Tamil Nadu, about 28,000 are in Panchayat Union areas. Out of the 28,000, about 22,400 (about 19,200 elementary schools *plus* about 3,200 higher elementary schools) are run by Panchayat Union Councils. Under the revised pattern of financial assistance to Panchayat Union Councils for Elementary Education, 4/9ths of the local cess, levied at 45 paise per rupee of land revenue continues to be made to the Panchayat Union Elementary Education Fund. The Government are also giving a grant calculated at Rs. 6 per head of population in each Block, based on the 1971 census. The balance of expenditure on Elementary Education is shared by the Government and the Panchayat Unions according to the revised classification of Blocks.

18. The number of Elementary schools run by Municipalities is about 1,400 (1,000 elementary *plus* 400 higher elementary). The Government sanction 50 per cent of the Education Tax realised by a Municipality as Government contribution and they are also meeting the entire net deficit in the Municipal Elementary Education Fund Accounts.

CHAPTER III

SECONDARY EDUCATION.

The population in the Age Group 14—17 in Tamil Nadu was 22.87 lakhs in 1974-75. Out of this, 7.52 lakhs were actually in schools in standards 9 to 11 (including 1.15 lakhs additionally enrolled during the past six years). The enrolment percentage for this Age Group is now 33 per cent. There are now 2,882 high schools in the State with about 69,500 teachers and 16.55 lakhs of pupils. Out of the 69,500 teachers, as many as about 10,000 were appointed during the past six years. During 1975-76, 600 additional posts of B.T. Grade will be sanctioned for Age Group 14—17, for an additional enrolment target of about 30,000 pupils.

(i) Qualitative Improvement.

2. The revised syllabus provides for the study of science as three separate disciplines, i.e. Physics, Chemistry and Biology from Standard VII onwards. The scheme for grant-in-aid to high schools for the purchase of science equipment and setting up of science laboratories will be continued in 1975-76. 867 High Schools have so far got Science Laboratory grants and 11 more will receive the benefit of this scheme in 1975-76.. From 1975-76 the quantum of this grant for each schools has been raised from Rs. 40,000 to Rs. 55,000 (Rs. 37,000 for building and Rs. 18,000 for equipment). The non-Government schools each get a grant of Rs. 40,200, out of which Rs. 18,000 is for equipment (purchased and supplied by the Director of School Education himself) and the balance of Rs. 22,200 is for the laboratory building (the building grant being given at 60 per cent of the cost or Rs. 22,200 whichever is less).

3. There are now 17 Mobile Science Laboratory vans., eight more will be added during 1974-75 and five more during 1975-76, so that out of the 48 educational districts in the State, thirty will each have one van for catering to the needs of Science teaching in rural High Schools, not yet provided with Science Laboratories.

4. The State Institute of Science Education has been set up as a wing of the State Institute of Education, Madras. The Institute is in charge of improvement of science education in schools, improvement of science curriculum, teacher's training programme, research, publications and extension service. Summer Science Institutes in Biology, Physics, Chemistry and Mathematics have been conducted every year since 1969 with the help of National Council for Educational Research and Training and University Grants Commission for the benefit of Science and Mathematics teachers. Over, 1,000 high school teachers have already been trained, and about 40 more high school teachers will receive re-orientation during 1975-76.

5. With a view to improving library facilities in High Schools suitable library books are purcased and distributed to schools. About 2,472 High Schools have been covered till now, including

684 High Schools for which Library Books worth Rs. 500 each were supplied in 1974-75. 85 Government High Schools will get Library Books in 1975-76 at a total cost of Rs. 85,000.

6. During 1974-75 sanction was accorded for providing Audio-Visual Aids to secondary schools and for enriching the State Film Library, at a cost of Rs. 1,00,000. Educational Television is likely to be introduced during 1975-76 in about 300 schools in Madras City and its neighbourhood.

7. The Kothari Education Commission recommended the concept of comprehensive High Schools with a view to vocationalising secondary education. During 1974-75 nineteen High Schools were upgraded as comprehensive High Schools by providing for the teaching of subjects like Radio-repairing, Electric motor re-winding and Motor Mechanism and Agricultural Engineering, outside school hours. The scheme will be expanded to some more high schools in 1975-76 by the introduction of a number of vocational courses suited to the needs of particular locatities.

State Institute of Education.

8. The State Institute of Education, Madras, is the State-level counter part of the National Council for Educational Research and Training and is incharge of in-service education at the School level. Besides conducting several in-service programmes. the institute is also initiating research on various problems relating to teaching techniques and curriculum development. A primary Education Extension Centre is also attached to it. In order to enlarge the activities of the State Institute of Education and make it an effective centre of educational research and training it has been placed under the control of the Director of Government Examination from February 1975.

High School Buildings.

9. Of about 2,882 high schools in our State, nearly 50 per cent of the schools are in need of adequate accommodation. A provision of Rs. 7 lakhs has been made in 1975-76 for grants to Municipal and Aided High Schools for putting up buildings, besides a provision of Rs. 14 lakhs for buildings for Government High Schools and a provision of Rs. 18 lakhs for buildings for Government (Board) High Schools and repairs to those schools.

Scholarships.

10. School education in Tamil Nadu is free at all stages. Rural talent scholarships are awarded from 1971-72. Under the scheme, scholarships are awarded every year to two students in each Panchayat Union. The scholarships are tenable for the entire school course. The value of the scholarships when the student is studying in selected highschools, approved for the purpose, is Rs. 1,000 per annum for each boarder and Rs. 500 per annum for each day-scholar. Pupils who get these scholarships but are studying in ordinary schools of their own choice are allowed Rs. 150 per annum from 1974-75 onwards. The total number of scholarship holders in any year is about 2,000 including renewals. Besides this, generous educational concessions continue to be given to the children of Burma and Ceylon repatriates, Ex-service and Defence Personnel, Scheduled Castes and Scheduled Tribes, Goldsmiths affected by the Gold Control Act and Political sufferers.

Mobile Medical Vans.

3. An Experts' Committee has been set up to write the authentic history of Tamil Nadu. Four volumes in the series of six volumes have been completed and will be released shortly. The Department is also implementing a scheme for financial assistance to authors for bringing out original books in Tamil. Financial assistance is also being given to the Saraswathi Mahal Library, Thanjavur for Research and publication work on Siddavaidya Palm Leaf Manuscripts.

4. The Department is also offering generous grants to various Universities in the country which come forward to establish chairs in Tamil and undertake Tamil Research work in their Universities.

TAMIL ETYMOLOGICAL DICTIONARY :

5. The Government have appointed the eminent scholar in Tamil and Dravidian linguistics, Thiru G. Devaneya Pavanar as Director of the Tamil Etymological Dictionary Project for compiling and publishing the "Centamil Corppirappiyal Akaramutali" and he has started work on the project. It is expected that this comprehensive and definitive work will come out in about a dozen volumes and that the project will take about four years to complete.

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES :

6. The International Institute of Tamil Studies was established in October 1970 with the object of promoting research in all aspects of Tamil Studies and allied fields with the active co-operation of International Scholars interested in such studies. From 1972, the Institute is publishing a half-yearly research journal—the Journal of Tamil Studies—Containing articles written by scholars all over the world. A well-stocked reference library has been set up in the Institute. The Institute gives intensive coaching in Tamil to foreign students with the aid of a language laboratory and audio-visual equipment gifted by UNESCO. The Institute proposes to publish Bibliographies of foreign classics which have been translated into Tamil as well as Tamil Classics which have been translated into English, besides a Social History of the early Tamils, a Companion to Tamil Literature and a Tamil-English Dictionary. In 1974-75 it also organised popular lectures in Literary theories with special reference to Tamil Literature. In recent

years, the Institute is getting an annual grant of Rs. 3 lakhs from the Government of Tamil Nadu. It is now located in the campus of the Central Institutes of Technology, Adyar, and the Government have allotted six acres of land to the Institute near its present location for the construction of a permanent building for the Institute.

APPENDIX I.

STATISTICS OF SCHOOL EDUCATION.

(1)	1965–66 (*End of Third Plan*). (2)	1968–69 (*End of Annual Plans*). (3)	1973–74 (*End of Fourth Plan*). (4)	1974–75 (*As on 1st August*). (5)
	(PUPILS IN LAKHS.)			
A. Population of Age Group—				
Age Group 6—11—				
Boys	25·85	26·79	30·45	31·13
Girls	25·64	26·58	29·79	30·44
Total ..	51·49	53·37	60·24	61·57
Age Group 11—14—				
Boys	11·31	11·72	13·71	14·01
Girls	11·23	11·63	13·40	13·70
Total ..	22·54	23·35	27·11	27·71
Age Group 14—17—				
Boys	9·33	9·67	11·31	11·56
Girls	9·26	9·60	11·07	11·31
Total ..	18·59	19·27	22·38	22·87
B. Number of students enrolled—				
Age Group 6—11—				
Boys	26·37	28·22	30·64	31·33
Girls	18·74	20·96	23·74	24·27
Total ..	45·11	49·18	54·38	55·60

APPENDIX I—*cont.*

STATISTICS OF SCHOOL EDUCATION—*cont.*

(1)	1965–66 (*End of Third Plan*). (2)	1968–69 (*End of Annual Plans*). (3)	1973–74 (*End of Fourth Plan*). (4)	1974–75 (*As on 1st August*) (5)
	(PUPILS IN LAKHS.)			
B. Number of students enrolled—*cont.*				
Age Group 11—14—				
Boys	7·21	8·00	9·10	9·30
Girls	3·45	4·28	5·09	5·26
Total ..	10·66	12·28	14·19	14·56
Age Group 14—17—				
Boys	3·86	4·30	4·97	5·05
Girls	1·65	2·07	2·42	2·47
Total ..	5·51	6·37	7·39	7·52
C. Percentage of Enrolment—				
Age Group 6—11—				
Boys	1,02·03	1,05·34	1,00·6	1,00·6
Girls	73·08	78·85	79·6	79·8
Total ..	87·61	92·15	90·2	90·3
Age Group 11—14—				
Boys	63·78	68·23	66·3	66·4
Girls	30·72	36·79	37·9	38·4
Total ..	47·31	52·57	52·3	52·6
Age Group 14 to 17—				
Boys	41·38	44·48	43·9	43·8
Girls	17·83	21·52	21·8	22·0
Total ..	29·65	33·05	33·0	33·0

APPENDIX I—*cont.*

STATISTICS OF SCHOOL EDUCATION—*cont.*

(1)	1965–66 (*End of Third Plan*). (2)	1968–69 (*End of Annual Plans*). (3)	1973–74 (*End of Fourth Plan*). (4)	1974–75 (*As on 1st August*). (5)
D. Number of Schools—				
Elementary Schools.	24,641	25,694	26,726	26,797
Higher Elementary Schools.	6,065	6,018	5,773	5,768
High Schools (includes Matriculation and Central Schools).	2,234	2,513	2,823	2,882
E. Number of Teachers—				
Elementary Schools.	88,173	91,918	1,06,332	1,10,517
Higher Elementary Schools.	59,943	62,222	66,843	68,249
High Schools ..	48,574	54,857	65,959	69,454
Total ..	1,96,690	2,08,997	2,39,134	2,48,220
F. Teacher-Pupil Ratio (as on 1st August)—				
(i) Type of Schools (including Specialist Teachers)—				
Elementary Schools.	27	36	35	35
Higher Elementary Schools.	35	33	33	33
High Schools ..	31	26	24	24
(ii) By stages (excluding Specialist Teachers)—				
Primary Stage ..	37	37	37	35
Middle Stage ..	32	33	33	33
High School Stage	32	32	29	29

APPENDIX II.

Statistics of University Education.

Details.	1965–66 (End of Third Five-Year Plan).		1968–69 (End of Annual Plan period).		1973–74 (End of Fourth Plan).		1974–75	
	March 1966.	October 1966.	April 1968.	October 1968.	March 1973.	October 1973.	March 1974.	October 1974.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
(i) Number of students who appeared for the S.S.L.C. Examination.	1,46,592	31,327	1,96,272	57,374	1,93,686	30,361	2,21,402	28,104
(ii) Number of students who passed the S.S.L.C.	75,270	8,128	98,181	11,004	96,903	5,367	1,12,358	5,482
(iii) Number of students who entered University.	39,507		59,743		72,646		78,625	
(iv) Total number of students in—								
(i) Pre-University	39,507		59,743		72,646		78,625	
(ii) B.A.	11,349		28,016		51,698		51,063	
(iii) B.Sc.	22,381		33,576		49,057		49,332	
(iv) B.Com.	3,050		4,556		14,859		15,287	
(v) Post-Graduate Course ..	2,607		3,624		6,993		6,307	
Total ..	78,894		129,515		195,253		200,614	
(v) Number of teachers in—								
(i) Government Colleges ..	(Details not available).		1,509		2,969		3,383	
(ii) Aided Colleges ..			5,071		7,090		7,416	
Total ..	4,932		6,580		10,059		10,799	
(iv) B.Com	3,050		4,556		14,859		15,287	
(vi) Number of Colleges—								
(i) Government	21		33		51		51	
(ii) Aided	71		93		27		132	
Total ..	92		126		178		183	

APPENDIX III.

STATISTICS ON TECHNICAL EDUCATION.

(1)	1965–66 (End of Third Plan). (2)	1968–69 (End of Annual Plan Period). (3)	1973–74 (End of Fourth Plan). (4)	1974–75. (5)
Number of Engineering Colleges—				
(i) Government ..	3	4	4	4
(ii) Aided ..	4	3	3	3
(iii) Autonomous ..	5	5	5	5
Total ..	12	12	12	12
Number of Polytechnics—				
(i) Government ..	16	16	19*	19*
(ii) Aided ..	18	18	18	18
(iii) Autonomous..	1	1	1	1
Total ..	35	35	38	38
Number of Technical High Schools—				
(i) Government ..	11	11	11	11
(ii) Aided	4	4	3	3
Total ..	15	15	14	14
Number of Teachers—				
(i) Engineering Colleges.	..	..	..	515
(ii) Polytechnics ..	..	..	..	754
(iii) Technical High Schools.	..	..	..	66
Total ..	..	..	..	1,335

APPENDIX III—*Cont.*

STATISTICS ON TECHNICAL EDUCATION.

	(1)	(2)	(3)	(4)
Number of students strength—				
(i) Engineering Colleges. ..	5,289	7,163	6,796	8,246
(ii) Polytechnics ..	10,526	12,633	10,591	11,061
(iii) Technical High Schools.	1,124	1,304	1,704	827
Total ..	16,939	21,100	19,091	20,134

Includes these institution of Arts and Crafts

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை—1975 ஏப்ரல் 2

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Properties of Tiruchirappalli—Srirangam Electric Licensee

* 229 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the properties of the Tiruchirappalli–Srirangam Electric Licensee have been acquired by Government and handed over to the Tamil Nadu Electricity Board;

(*b*) if so, when it was transferred;

(*c*) the total value of the said properties;

(*d*) whether payment has been made to the South Madras Electric Supply Corporation; and

(*e*) if so, when it was made?

திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் மின்சார உரிமதாரர் சொத்துக்கள்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் மின்சார உரிமதாரர் சொத்துக்களை அரசு கையகப்படுத்தி, தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் கொடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அது எப்போது மாற்றிக்கொடுக்கப்பட்டது?

(உ) மேற்படி சொத்துக்களின் மொத்த மதிப்பு எவ்வளவு?

(எ) தென்சென்னை மின்வினியோகக் கழகத்திற்குத் தொகை ஏதேனும் கொடுக்கப்பட்டுள்ளதா?

(ஐ) ஆமெனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இந்த மின்சக்தி வழங்கும் நிறுவனம் 1—12—73 அன்று அரசின் உரிமையாகிறது. 31—1—74 வரை இந்த நிறுவனத்தின்

நிர்வாகம் உரிமதாரர்களிடம் நீடித்து வந்தது. இதன் நிர்வாகம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1—2—74 அன்று மாற்றப்பட்டது.

(ஊ) & (எ) : இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஐ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த நிறுவனம் எடுத்துக் கொள்ளப்பட்டு 13 மாதங்கள் ஆகின்றன. இன்னும் அந்தத் தொகையைக் கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இதிலே பங்குதாரர்களாக இருப்பவர்கள், ஒரு பங்கு, இரண்டு பங்கு வைத்திருக்கிறார்கள். 10 ரூபாய், 20 ரூபாய் பங்குதாரர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். இதை மிக விரைவாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The undertaking has been transferred to the Board on 1st February 1974 with all assets, rights and liabilities, etc. The claim is under scrutiny with reference to the audited accounts and reports furnished by the Board. Details of revised clear profit working under the Electricity Supply Act, 1948 based on the audit objections called for from the Board are awaited. The liabilities and obligations due to non-bonafide transactions do not, however, vest in the Government. Such liabilities are under examination and notice under section 9 of the Acquisition Act, 1973 has been issued to the ex-licensee by the Government claiming an amount of Rs. 55.65 lakhs towards the loss caused to the Government as succeeding owners of the undertaking on account of non-handing over of certain assets. The ex-licensee has submitted a claim amounting to Rs. 2,20,50,262. The Chief Electrical Inspector to Government has, however, submitted a rough estimate of compensation amounting to Rs. 1,24,39,670.40 P. and the proposed deduction of a sum of Rs. 74,30,373.96 under section 10 of the Act. Hence, the net amount comes to Rs. 50,09,296.44. The payment of compensation is under the active consideration of the Government. The Chief Secretary is the Chairman and the Secretary, Finance and the Secretary, Public Works Department are members of the Committee.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, உடனே முடிவு செய்ய முடியாவிட்டாலும், அரசாங்கத்தில் உள்ள விதி முறைப்படி, அரசாங்கத்திற்கு உள்ள தகவல்படி, ஒரு குறிப்பிட்ட தொகையை முன் பணமாக அந்த நிறுவனத்திற்கு வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே இந்த நிறுவனத்திற்குச் சம்பந்தப்பட்டவர்கள், பொதுப் பணித் துறைச் செயலாளரைச் சந்தித்துப் பேசியதாகத் தகவல் இருக்கிறது. மீண்டும் 7-ஆம் தேதி சந்தித்துப் பேசுவதாக முடிவு எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தபடி, இந்தப் பிரச்சினையை எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக முடிக்கும்படி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

THIRU S. NARAYANASWAMY: Mr. Chairman, is the Hon. Minister aware that his predecessor-in-office promised that this matter of compensation would be settled within a few months of the handing over of the undertaking and on that basis the fixing of a date for payment of the compensation was agreed to be omitted from the Act by the licensees?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: So far as this undertaking is concerned, the date by which 1972–73 accounts have to be submitted—30th September 1973; the date of receipt of 1972–73 accounts—29th September 1973; the date by which accounts up to vesting date have to be submitted—1st January 1974; the date of receipt of vesting date accounts—30th March 1974; date by which accounts for the permissive period have to be submitted—1st May 1974;. the date of submission of permissive period accounts—16th August 1974. The audit of all the three periods was completed by 9th month in 1974. However, the compliance by the licensee with the earlier years' audit comments had to be looked into. The reports for the 3 periods have been received by the Government and are under consideration.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இது போன்று வேறு 6 நிறுவனங்கள் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கும் இதே நிலைமையில் பணம் கொடுப்பதற்குத் தாமதம் ஆகுமா? பணம் அவற்றிற்கும் சீக்கிரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமோ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் மிக அதிகமாக நஷ்ட ஈடு கேட்கிறார்கள். பணம் கொடுப்பதென்றால், அதற்கு பல விதி முறைகள் இருக்கின்றன. அதை நிர்ணயிப்பதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியிலே, சீஃப் செக்ரட்டரி, பைனான்ஸ் செக்ரட்டரி, பி. டபிள்யூ.டி. செக்ரட்டரி ஆகியோர் இருக்கிறார்கள். எல்லோரும் கூடிப் பரிசீலித்துத்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும். கொடுக்கின்ற பணத்தை, ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும். சீக்கிரமாகவே முடிக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களும் தெரிவித்

திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பேச்சு வார்த்தை நடந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த மாதம் 7 ஆம் தேதி மீண்டும் பேசுவதாக இருக்கிறார்கள். அதற்குப் பிறகு முடிவு செய்யப்படும்.

THIRU S. NARAYANASWAMY : The Hon. Minister said that the licensee has asked for too much money. Is the Hon. Minister aware that they have asked for compensation only on the basis set out in the Indian Electricity Act, exactly on the same formula?

THE HON THIRU S. J. SADIQ PASHA : That is why I said that the matter was under consideration. The committee constituted is considering the matter and it will be finalised soon.

Road between Nemam Village and Nemam-Pazhayur

* 230 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government are aware that the road construction work between Nemam Village and Nemam-Pazhayur, Tiruputhur Taluk, Ramanathapuram District remains incomplete for years together; and

(b) if so, the action taken thereon?

நேமம் கிராமத்திலிருந்து நேமம்-பழையூருக்குச் செல்ல அமைத்த சாலை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத்தூர் வட்டத்திலுள்ள நேமம் கிராமத்திலிருந்து நேமம்-பழையூருக்குச் செல்ல அமைத்த சாலை பல ஆண்டுகளாக முற்றுப்பெறாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி : (அ) அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, 1971-ல் புஞ்சைக் காடுகளையும், குடிமக்களுக்கு உரிய நிலங்களையும் எடுத்து இந்தச்சாலை போடப்பட்டது. சாதாரணமாக இருந்தபோது, அந்த

வழியாகப் போய் வந்து கொண்டிருந்தார்கள். வண்டிகள் போய்க் கொண்டிருந்தன. சாலை போடுவதாகச் சொல்லி, சாலை போட்டு 3 பாலங்களும் ஒரு பைப்பும் போடாததால், பாதை குண்டும் குழியுமாக இருக்கிறது. சாலை அமைத்து 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆகவே அரசு உடனடியாக அந்த வேலையை முடிக்க வேண்டும், அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, 1970—71, வறட்சிப் பகுதிகளைச் சீரமைக்கும் திட்டத்தின் கீழ் அந்தச் சாலை போடப்பட்டது. அதிலே இரண்டாவது பர்லாங்கிலே ஓடை குறுக்கிடுகிறது. கிட்டத்தட்ட அதற்கு 70 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. அதற்குக் கப்பி போடுவதென்றால், அதையும் சேர்த்து 80 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இப்போது மற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கின்றன. பணம் பற்றாக்குறையின் காரணமாக அதைச் செய்ய இயலாத நிலையிருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, 80 ஆயிரம் ரூபாய் ஆகாது. பாலங்களும், பைப் அமைக்கின்ற வேலையும் தான் இருக்கிறது. கல் போட வேண்டியதில்லை. ஆகவே அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நான் அந்த யோசனையை அந்தக் கூட்டு மன்றத்தின் ஆணையரிடம் சொல்லி, அதற்கு ஏற்பாடு செய்யலாமா, பணம் போதுமானது இருக்கிறதா என்று ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கச் சொல்லுகிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, வறட்சி நிவாரணப் பணிகளில் சாலைகள் அமைக்கும் வேலையையும் சேர்த்துக்கொள்ள இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே; தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண் 231 ஒத்தி வைக்கப்படுகிறது.

Construction of Overbridge or Causeway across the Palar

@* 197 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to construct an overbridge or a Causeway across the Palar, from Vaniambadi Town to old Vaniambadi (Devasthanam) Panchayat in North Arcot District; and

(b) if so, the estimated cost thereof?

@ 27-3-75 வினா பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

பாலாற்றின் குறுக்கே பாலம் அல்லது மேம்பாலம் கட்டல்

திரு. எல். பலராமன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி நகரத்தில் இருந்து, பழைய வாணியம்பாடி (தேவஸ்தானம்) பஞ்சாயத்திற்கு பாலாற்றின் குறுக்கே, தரைப்பாலமோ மேம்பாலமோ கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமெனில், இதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இது குறித்து பாலம் கட்ட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்ததா? அதுபற்றி அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பொது மக்களிடத்திலிருந்து கோரிக்கை வந்ததாகத் தலைமைப் பொறியாளர் இதுபற்றி ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். ஆனால் இப்போது நிதிப் பற்றுக்குறை காரணமாக அது எடுத்துக் கொள்ளப் படவில்லை. வரும் ஆண்டில் நிதி நிலை சீரான பிறகு, இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

State-owned Wax Refinery Industry at Ennore

@* 196 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. V. D'MONTE): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have any proposal to start a State-owned Wax Refinery Industry at Ennore; and

(b) if so, the details thereof?

எண்ணூரில் அரசுக்குச் சொந்தமான, மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி.வி.டி'மாண்டி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) எண்ணூரில் அரசுக்குச் சொந்தமான, மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

@ 27—3—75 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

District Headquarters Offices of Other Districts in Krishnagiri

@* 199 Q.—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal with the Government to station certain other District Headquarters Offices at Krishnagiri itself?

கிருஷ்ணகிரியில் மற்ற மாவட்டத் தலைமை அலுவலகங்கள்

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

மற்ற மாவட்டத் தலைமை அலுவலகங்கள் சிலவற்றை கிருஷ்ணகிரியில் வைப்பதற்கு செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கிருஷ்ணகிரியில் இருக்கும் அலுவலகங்கள் தவிர வேறு எந்தத் துறை மாவட்டத் தலைமை அலுவலகங்களையும் கிருஷ்ணகிரியில் வைப்பதற்கான செயற் குறிப்பு ஏதும் இல்லை.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்தின் தலைநகரான தருமபுரி நகரில் போதுமான குடிநீர் இல்லாத காரணத்தினால், அங்கே உள்ள சில மாவட்டத் தலைமை அலுவலகங்களை கிருஷ்ணகிரிக்கு மாற்றுவது உசிதமாக இருக்கும் என்ற காரணத்தினால், அப்படிச் சில அலுவலகங்களையாவது கிருஷ்ணகிரிக்கு மாற்றுவதற்கு அரசு முடிவெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏற்கெனவே தருமபுரி மாவட்டத்தின் தலைமை அலுவலகங்கள் பலவும் கிருஷ்ணகிரியில்தான் இருந்து வந்திருக்கின்றன. மேலும் சிலவற்றை இப்போது தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக தருமபுரியிலிருந்து கிருஷ்ணகிரிக்கு மாற்றுவது என்றால், அதிகச் செலவாகும்.

இப்போது தருமபுரிக்கு வேண்டிய குடிநீரை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இரண்டு உதவி இயக்குநர் அலுவலகங்கள் மட்டும் இங்கே இருக்க வேண்டும் என்ற அவசியம் கருதி அவை இரண்டு மட்டும் தருமபுரியில் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை பெருமளவிற்கு வளர்ந்துவிட்டது. தமிழ்நாட்டின் மையமாக திருச்சி நகர் இருக்கின்றது. அங்கே குடிநீர் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் வசதிகள் இருக்கின்றன. எனவே, இங்குள்ள தலைமை அலுவலகங்கள் அல்லது இனி ஏற்படக்கூடிய தலைமை அலுவலகங்களையாவது திருச்சி நகரில் வைத்துக்கொள்ளுவதற்கான ஆலோசனை அரசிடம் இருக்கின்றதா?

@ 27-3-75 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

இதைப் போல மகாராட்டிரத்தில் இருக்கின்றது. அதைப் போல சில தலைமை அலுவலகங்களைத் திருச்சிக்கு மாற்றுவதற்கு உத்தேசம் அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தண்ணீருக்காக தலைமையகங்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். இப்பொழுது சென்னையில் எப்படி குடிநீர் பிரச்சினை இருக்கின்றதோ அதேபோல திருச்சியிலும் குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றது. தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது என்பதற்காக தலைமையகத்தை மாற்றுவதற்கு இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, திருச்சியில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டாலும், தஞ்சையில் குடிநீருக்கு வேண்டிய அளவிற்கு வசதி இருப்பதால், அங்கே அவற்றை மாற்றுவதற்கான உத்தரவினை அரசு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, பொதுவாகச் சொன்னேன், தண்ணீர் கிடைக்கும் இடத்திற்கெல்லாம் தலைமையகங்களை மாற்ற முடியாது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே. தண்ணீர் பிரச்சினை இருக்கட்டும். ஆனால் இப்போது தலைமையகங்கள் எல்லாம் சென்னையில் இருக்கின்றன. கன்னியாகுமரியிலிருந்து வருகின்றவர்கள் முதல் எல்லோரும் வடக்கே இருக்கின்ற இந்தக் கோடிக்கு வரவேண்டியிருக்கின்றது. திருச்சியில் இருந்தால் எல்லோருக்கும் போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கும். திருச்சிதான் எல்லாவற்றுக்கும் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்:—ஸ்ரீரங்கத்தில் இருக்க வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்கள் சொல்லுகிறபடி ஸ்ரீரங்கத்தில் இருந்தால் வசதியாக இருக்கும் என்று கூடச் சொல்லலாம். வந்துவிட்டு அப்படியே ஸ்வாமி தரிசனத்தையும் பண்ணிவிட்டுப் போகலாம். எனவே இதை திருச்சிக்கு மாற்றுவதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம்: இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, may I.........

MR. CHAIRMAN: I will call the hon. Member. Why is he in a hurry? This is not his subject. This is about a privilege issue.

THIRU G. VASANTHA PAI: I am rising on a point of order.

MR. CHAIRMAN: The hon. Member is always in a hurry. He is an eminent lawyer and a man of letters.

THIRU G. VASANTHA PAI: Immediately after the Question Hour I have to raise the question.

2. உரிமைப் பிரச்சினை

'நாத்திகம்' இதழில் மேலவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளைப் பிரசுரித்தது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 11-3-75-ம் நாளன்று திரு. வி. வெங்கா அவர்கள் எழுப்பிய உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக நான் கூறும்போது, 'நாத்திகம்' ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பிறகு அறிவிப்பதாகக் கூறினேன், அதன்படி, 'நாத்திகம்' ஆசிரியரிடம் விளக்கம் கேட்கப்பட்டது.

அதற்குக் கீழ்க்கண்டவாறு அவர் பதிலளித்துள்ளார் :—

"8-3-1975–ஆம் நாளன்று வெளிவந்த 'நாத்திகம்' இதழில், 'அபுபக்கர் சொன்ன ரூளி அலங்காரி கதை' என்ற தலைப்பில் பிரசுரமான பெட்டிச் செய்தியில் சட்டமன்ற மேலவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட உத்திரவிடப் பட்டிருந்த பகுதிகள் இடம் பெற்று இருந்தமைக்கு எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

"நாத்திகம்" இதழில் வெளிவந்த அந்தச் செய்திப் பகுதிகள் சபைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டவை என்று தெரியாத நிலையில் தவறுதலாக இடம் பெற்றுவிட்டன. மற்றபடி அவையின் உத்தரவை மீற வேண்டும் என்ற நோக்கத்தோடு வெளியிடப் பட்டது அல்ல என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே தவறுதலாகப் பிரசுரமாகிவிட்ட அந்தப் பகுதிகளுக்காக பொறுத்தருள வேண்டுகிறேன்."

"நாத்திகம்" ஆசிரியர் வருத்தம் தெரிவித்துக்கொள்வதால், இனிமேல் இவ்வித நிகழ்ச்சி ஏற்படக்கூடாது என்று அந்த நாளிதழுக்கு எச்சரித்து, மேற்கொண்டு எந்தவித நடவடிக்கையும் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, 'நாத்திகம்' பத்திரிகை ஆசிரியர் முதன்முறையாக இப்படி மன்னிப்பு கேட்கவில்லை. தொடர்ந்து பல ஆண்டுகளாக, இதைப் போலவே செய்து வருகின்றார்கள். முதன் முறையாக அவர்கள் இப்படிச் செய்திருந்தால், அவர்களை எச்சரித்து விடுவது சரியாக இருக்கும். ஆனால் இப்படித் தொடர்ந்து செய்யும் காரணத்தினால், மாண்புமிகு தலைவரவர்கள் தமது முடிவினை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இங்கே அப்படிச் செய்திருந்தால் பரவாயில்லை. பல இடங்களிலே செய்து விடுகின்றார்கள்.

திருச்சியில் செய்துவிட்டு, ஜெயிலுக்குப் போயிருக்கின்றார்கள். அதற்கு நான் என்ன பண்ணுவது?

THIRU G. VASANTHA PAI : * * *

MR. CHAIRMAN : The point of order is not going to be recorded.

THIRU G. VASANTHA PAI : * * *

MR. CHAIRMAN : I would not record it.

3. தலைவரின் தீர்ப்பு.

அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்குவது குறித்து.

MR. CHAIRMAN : I informed the House yesterday that I would give my ruling on the portions to be expunged in the proceedings of the House on 31st March 1975.

Rule 67, item (v), of the Legislative Council Rules reads as follows :—

"A Member while speaking must not reflect upon the conduct of the President of any Governor or any Court of Justice or irregularly use the Governor's or President's name for the purpose of influencing a debate."

Rule 197 of the Council Rules is as follows :—

"If the Chairman is of opinion that words have been used in debate which are defamatory or indecent, or unparliamentary or undignified or grossly irregular, he may, in his discretion, order that such words or portion of the speech containing such words be expunged from the official report of the proceedings of the House and all consequential alterations, made in such report".

On that day the hon. Member Thiru Vasantha Pai made certain references to 'a Head of a State'. Those references, I consider, are irregular and undignified and are not in good taste. Hence, I have expunged such portions which referred to a Head of a State and his conduct and ordered consequential alterations to be made in the proceedings. Further, the incident referred to by the Member relates to what happened in 1970. The discussion now before the

*** Not recorded as ordered by the chair.

House relates to the estimates relating to the financial year 1975–76. In this view also the matter raised by the Member is irrelevant.

I have also to inform the House that the Chair is very zealous to protect the freedom of speech of the Members on the floor of the House and, at the same time, it has to safeguard the dignity and decorum of the House. Freedom of speech of Members does not mean that they can say anything on the floor of the House. Freedom is restricted by rules and regulations. Freedom should not mean licence.

Article 203 of the Constitution says that Members can discuss the estimates but so much of the estimates as relates to expenditure charged upon the Consolidated Fund of a State shall not be submitted to the vote of the Legislative Assembly. The Members can discuss the policy behind or offer suggestions for the better administration of those estimates but should not reflect upon High Officials or a high dignitary or the Governor. In view of these, I have expunged all the portions reflecting upon the Governor, as I have already informed the House.

The transcript of the proceedings of the House deleting all the expunged portions will be made available to the Member and the press.

(பிற்பகல் 4–20)

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த விவாதங்கள் வருகின்றபோது, தமிழிலே எங்களுக்குச் சொல்வதற்கு, மெஷின்கள் மூலமாகச் சொல்கின்ற மாதிரியாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆங்கிலத்திலேதானே ரூல்ஸ் இருக்கின்றன. இங்கிலீஷிலே ரூல்ஸ் இருக்கும்போது, இங்கிலீஷிலே சொல்கிறேன். வேறு எப்படிச் சொல்ல முடியும்? என்னிடத்தில் சொல்லிக் கொள்வதைவிட, கவர்ன்மெண்டுக்குச் சொல்லி, இவைகளை எல்லாம் தமிழ் ஆக்கச் சொல்லுங்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தமிழில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழிலே வேண்டும், தமிழிலே வேண்டும் என்று சொல்கின்றீர்கள். எந்த விதி இங்கே தமிழில் இருக்கின்றது?

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அதை எழுதித் தருகிற அதிகாரிகள் எல்லாம் தமிழிலே எழுதித் தருவதில்லை. பொதுவாகத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பொதுவாக என்று சொல்லாதீர்கள். உங்களுக்கு என்று சொல்கிறீர்கள். இங்கு 187, 120 விதி எல்லாம் இங்கிலீஷிலே இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, நான் என்ன சொல்கிறேன் நாட்டிலேயுள்ள நிதியிலிருந்து ஏதாவது ஒதுக்கி செலவு பண்ணுங்கள் என்று தான் சொல்கிறேன். வேண்டிய அதிகாரிகள் ....

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதிகாரிகள் பற்றியெல்லாம் குற்றம் சொல்லக்கூடாது. ஏனென்றால் அதிகாரிகள் இங்கு வந்து உங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. யார் இந்த சபைக்கு வந்து பதில் சொல்ல முடியாத நிலையிலே இருக்கின்றார்களோ அவர்களைப்பற்றிச் சொல்லக்கூடாது என்பதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, தமிழிலே தருவதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்றுதான் நான் இங்கு கேட்டுக் கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI: I request that this matter may be referred oo the Privileges Committee so that I could exonerate myself.

MR. CHAIRMAN: I am very clear on this point. I cannot re… this question to the Privileges Committee.

4. தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றி, தற்சமயம் நடந்த சூடான விவாதத்திற்குப் பிறகு, ஒரு சில வார்த்தைகளை நானும் கூறலாம் என்று நினைக்கின்றேன். நேற்றைய தினம் மாண்புமிகு அங்கத்தினர்கள் இங்கே பேசுகின்றபோது முக்கியமாக ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலத்திலே கல்வி வளர்ச்சிக்காக ரூ. 118 கோடி செலவு செய்தாலும்கூட ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியமே அதிகமாக இருக்கின்றது என்பதையும் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம், மேலும் 14 அங்கத்தினர்கள் பேச வேண்டியிருக்கின்றது. இன்றைக்கு இரவு 9 ஆகிறதோ, 10 ஆகிறதோ, ஒவ்வொருவரும் பேசிவிட்டு கிளம்பிப் போய்விட்ட பிறகு, நாங்கள் எல்லாம் மேலும் உட்கார வேண்டியிருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இன்றைக்கு அதற்கு முக்கியமான காரணம் நேற்றையதினம் மதிப்பிற்குரிய நண்பர் திரு. கணபதி அவர்கள் சொன்னதைப் போல, நம்முடைய இலவசக் கல்வி கொடுப்பதுதான் முக்கியமான காரணம் ஆகும். இந்த நிலைமையிலே நம்முடைய மாநிலம் போய்க் கொண்டிருந்தால், செலவிலே கிட்டத்தட்ட 80 சதவிகிதம் இலவசக் கல்விக்கு ஆகிறது. நாம் இலவசக் கல்விக்கு என்று தற்போது வரையறுக்கும் போது, அப்படிச் செலவு செய்யக்கூடிய நிலைமைக்கு வருவோம் என்ற காரணத்தினால், சில பள்ளிகளிலேயாவது பணம் கொடுத்துப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நாம் அது போன்ற வசதிகளையும் வாய்ப்புகளையும் செய்து கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். நேற்றைய தினம் நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் பேசுகிறபோது, இங்கே ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். இலவசக் கல்வி என்ற முறை இருக்கும்போது, பணம் கட்டிப் படிக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாக்கப்படுமானால், அந்த நிலைமையிலே ஏழைகள்–பணக்காரர்கள் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாத நிலைமை படிக்கக்கூடிய மாணவர்களிடையே ஏற்படாது என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம் நாட்டிலே இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகள் பள்ளிகளோடு முடிந்துவிடுவதில்லை என்ற கருத்தை நான் முன்னாலேயே இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஏழை மாணவர்கள் அதே பள்ளிகளிலே மதிய உணவுத் திட்டம் என்பதன் பெயரால், உண்ண வேண்டிய அவசியத்தில் இருக்கின்றார்கள். அதே சமயத்திலே வீட்டிலேயே உண்ணக்கூடிய நிலைமையில் இருப்பவர்கள் வீட்டிற்கே சென்று உண்ணக்கூடிய நிலைமையில் இருக்கின்றார்கள். பள்ளிகளுக்கு ஊர்திகளிலே வரக்கூடியவர்கள், பொதுப் பேருந்துகளிலே வருபவர்கள் இருக்கின்றார்கள், நடந்து வரக்கூடியவர்கள் இருக்கின்றார்கள், கார்களிலே வரக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். சமுதாயத்திலே உள்ள ஏற்றத்தாழ்வுகள் மட்டுமல்ல. இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள், தனி நபர்கள் என்ற முறையிலேகூட பார்த்தோமானால், முதல் வகுப்பிலே பிரயாணம் செய்யக் கூடியவர்கள் இருக்கின்றார்கள். மூன்றாம் வகுப்பிலே பிரயாணம் செய்பவர்களும் இருக்கின்றார்கள். மூன்றாம் வகுப்பு என்பதை இரண்டாம் வகுப்பு என்று சொல்லை மாற்றிவிட்டு, ஏதோ முன்னுக்கு வந்தோம் என்ற ஒரு தன்மையை உருவாக்கலாமே தவிர, தாரதம்மியம் நாட்டிலே முழுமையாகப் போய்விட்டது என்று நாம் யாரும் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட நிலைமையிலே பணம் கொடுத்து படிக்கக்கூடிய வசதி உள்ளவர்கள், மருத்துவர்களாக இருப்பவர்கள், என்ஜினியர்களாக இருக்கக்கூடியவர்கள், பேராசிரியர்களாக இருக்கக் கூடியவர்கள், வழக்கறிஞர்களாக இருக்கக் கூடியவர்கள், அவர்கள் பிள்ளைகளுக்குப் பணம் கட்டி படிக்க வைக்கலாம் என்ற நிலைமை இருக்குமானால், அவர்களுக்கும் சேர்த்து இலவசக் கல்வி கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று சொல்வது சரியானதல்ல என்பதோடு, சோஷலிச பாணி என்பது இல்லாதவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்பதே தவிர, இருப்பவர்களுக்கும் சேர்த்து இலவசமாகக் கொடுக்க

வேண்டும் என்பது அல்ல என்று நான் கூறிக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டி. ஆதித்தன் அவர்கள் வேண்டுமானால்........

THIRU S. T. ADITYAN : Sir, Socialism, as I understand it, is making the productive property the property of the State or society. That is Socialism. Other things do not come under the definition of Socialism.

THIRU S. NARAYANASWAMY : Sir, it is not so. It is not Socialism under any definition.

[பிற்பகல் 4.30 மணி]

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சோஷலிசம் என்ன என்பதைப்பற்றி இவ்வளவு வாதப் பிரதி வாதங்கள், பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை மதிப்பிற்குரிய நண்பர்கள் பேசியதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள முடியும். சோஷலிசம் என்பதே தனி யாருடைய சொத்தையெல்லாம் எடுத்து அரசுடைமையாக்குவது தான் என்று சொல்கிறார்கள். ஆனால் நாம் சில சமயங்களில் தனி யாருடைய சொத்துக்களை எடுத்து அரசுக்கு உடைமையாக்குவது மட்டு மல்லாமல், பொதுவாக இருந்த நிர்வாகத்திலிருந்த சொத்துக்களைக் கூட தனியார்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையிலே இங்கே நிலசீர் திருத்தம் என்ற பெயரிலே பல சட்டங்கள் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். அதுவும் சோஷலிசம் தான் என்று சொல்லப் பட்டு வருகின்றது. இங்கே பேசுகிற கருத்தெல்லாம் இப்படியிருக்கிறது. இந்த மாதிரி இப்போது 2 கோடி ரூபாய், இரண்டு ஆண்டுகள் கழித்து இன்னொரு கோடி ரூபாய் வரி என்ற நிலைமை தான் அரசுக்கு வருகிறது. இனிமேல் வரி அதிகமாகி 118 கோடி, 200 கோடி, 300 கோடி என்று போடக்கூடிய நிலைமையிலே மாநில அரசும் மத்திய அரசும் வரலாம். அநேகமாக வரி போடக்கூடிய எல்லைக்கே, மாநில அரசு மட்டும் என்றில்லை, மாநில அரசு, மத்திய அரசு இரண்டுமே சென்று விட்டன என்பதை மத்தியிலே எஜுகேஷன் மினிஸ்டர்ஸ் கான்பரன்சிலே சொன்னார்கள். நாம் இவ்வளவு செலவு செய்தும் கூட எல்லோருக்கும் நல்ல தரமான கல்வியைப் போதிக்க முடியவில்லை என்று சில பேர் சொன்னார்கள். ஆகவே தரமான கல்வியைக் கொடுக்க வேண்டுமென்றால் யார் பணம் கட்டிப் படிக்க முடியுமோ, அதற்குத் தகுந்த பள்ளிகளைத் திறந்து, அந்தப் பள்ளிகளிலே படிக்க வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே உள்ள மருத்துவ மனைகளிலே சென்று பார்த்தால், ஏழைகளாக இருப்பவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்யப்படுகிறது. பணம் கட்டி மருத்துவ வசதி பெறக்கூடியவர்களைப் பார்க்கிற போது, இப்போதும் அவரவர் வருமானத்திற்குத் தகுந்த

படி மருத்துவ வசதிக்காகப் பணம் கட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எல்லோருக்குமே இலவசமாகச் செய்யப்பட வேண்டும் என்ற விதிமுறைகள் நம்முடைய மாநிலத்திலே இல்லை. ஆகவே, கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன முறை நல்ல முறை என்று நான் பாராட்டுகிறேன். இதே முறைதான் ஜப்பானிய நாட்டிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், தரமான கல்வியை அரசாங்கம் கொடுக்க முடியாது என்ற பயம் இருக்கிறது. நாளைய தினம் வசதி யாக இருப்பவர்கள், பணக்காரர்களாக இருப்பவர்கள் இந்தப் பள்ளி களுக்குச் சென்று விட்டால், அந்தப் பள்ளிகள் தரமான கல்வியைக் கொடுக்கும். நம்முடைய அரசாங்கப் பள்ளிகளிலே தரமான கல்வியைக் கொடுக்க முடியாது. வசதி பெற்றவர்கள் நல்ல கல்வியைப் பெற்று விடுவார்கள், வசதி இல்லாதவர்கள் நல்ல கல்வியைப் பெற முடியாது என்ற அடிப்படையிலே மனத்திலே எழக்கூடிய உணர்ச்சியின் காரணமாக அரசாங்கக் கல்வி முறை சரியாக இயங்காது என்பது ஒன்று. ஜப்பானிய நாட்டிலே பணம் கட்டிப் படிக்கிற முறையும் இருக்கிறது. பணம் கட்டாமல் சாதாரண ஏழை எளிய மாணவர்கள் படிக்கிற முறையும் இருக்கிறது. அங்கே பார்க்கிறபோது, இந்த இரண்டுக்கும் போட்டி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அரசாங்கப் பள்ளிகளும், கல்லூரிகளும் அவர்களுடன் போட்டியிட்டு அவர்களும் தரமான கல்வி முறையை, மாறுபாட்டை ஜப்பானிய நாட்டிலே செய்தார்கள். அது நல்லமுறையிலே நடந்து வருகிறது. ஆகவே, கல்வி அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல், அந்தக் கொள்கையை இன்னும் உறுதியாகக் கடைப்பிடித்து பரப்ப வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு எதிர்ப்புகள் வரலாம்.

கடந்த ஐந்தாறு வருஷங்களாக அவர்கள் பல நல்ல கொள்கைகளைச் சொல்லி வருகிறார்கள். ஷிப்ட் சிஸ்டம்பற்றிச் சொன்னார்கள். இதுபோல் பல நல்ல கொள்கைகளைச் சொல்லி வந்தார்கள். எப்பொழுதும் ஒரு நல்ல கொள்கையைச் சொல்லும்போது, ஏதோ ஒரு பக்கத்திலிருந்து எதிர்ப்பு கிளம்புகிறது. இந்த எதிர்ப்பு கிளம்புகிறபோது, நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமை என்ன? இருக்கக்கூடிய தேர்தல், ஓட்டு, அரசாங்கம், அரசியல் ஆகிய இவைகளை நம்பியிருக்கிற நிலைமை யிலே, மக்களுடைய மனோபாவம் என்ன? மக்கள் எப்படி ஓட்டுப் போடுவார்கள்? என்று இதையே பார்த்துக்கொண்டுதான் மத்திய அரசும், மாநில அரசும் இருக்கிறதே தவிர, மக்களுடைய நலனுக்காக ஒரு திட்டத்தைத் தைரியமாகப் போடமுடியாத ஒரு நிலைமையில் போய்க்கொண்டிருக்கிறது. இதே நிலைமையிலே போய்க்கொண்டிருந் தால்,'' பள்ளிகளிலே அரசியல் வரக்கூடிய நிலைமை ஏற்படுமானால், முக்கியமாக கல்வியினுடைய தரம் வளர முடியாது என்பதை நான் உறுதியாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இடங்களைப் பற்றிப் பேச்சு வந்தது. கல்லூரிகளைப் பார்க்கிறபோது, எப்படி இடம் ஒதுக்குகிறோம் என்று சொன்னால் 49 சதவிகிதம் பிற்பட்டவர்களுக்கு, அந்த 49 சத

விகிதத்திற்குள்ளாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு, 51 சதவிகிதம் முன்னேறிய வகுப்பாளருக்கு என்று சொல்லி சில இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. ஆனால் 51 சதவிகிதத்தில் ஓபன் காம்படிஷனை அங்கே கொண்டு வருகிறார்கள். அதிலே முன்னேறிய வகுப்பிலே இருக்கக்கூடியவர்கள் வருவதற்கு குறைவாக இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. எந்த உறுப்பினரைக் கேட்டாலும் தெரியும். ஒரு கல்லூரி யிலே இடம் வேண்டுமென்று சொன்னால், உடனே அவனிடம் கேட்பது, 'நீ எந்த ஜாதி, நீ எந்த வகுப்பு?' 25 ஆண்டுகளாக நாம் பிரசாரம் செய்து, நடைமுறையில் என்ன பார்க்கிறோம் என்றால் ஜாதி அதிக மாகப் போய்க்கொண்டே இருக்கிறது. தேர்தலாக இருந்தாலும், ஒரு கேண்டிடேட் நின்றால் 'நீ எந்த ஜாதி?, உன்னுடைய ஜாதியைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?'.. ..

புலவர் ஓ. அறிவுடைநம்பி : அடி மட்டத்திலே இருக்கிற ஜாதிக்காரர்கள் உயர்ந்து விட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் நம்புகிறாரா அல்லது நினைக்கிறாரா?

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்தப் பிரச்சினையும் வருகிறது. சூடாக விவாதிக்க வேண்டிய பிரச்சினை. ஏனென்றால்......

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்கள் அதைச் சொல்லவில்லை. ஜாதி இருக்கிறது. அது போகவில்லையே என்கிறார்கள். தேர்தல் இருக்கிற வரைக்கும் ஜாதியும் இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தேர்தல் வருகிறபோது ஜாதி வந்து விடுகிறது. உடனே நாம் என்ன செய்கிறோம்? தஞ்சையிலே சுவாமிநாதன் நிற்க வேண்டும் என்று சொன்னால் உடனே சுவாமிநாதன் என்ன ஜாதி? சுவாமிநாதன் இருக்கிற ஜாதியிலே ஓட்டு.......

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தேர்தல் வந்தால் ஜாதியும்........

திரு. ஜி சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் சொல்ல விரும்பு வதை எழுந்துநின்று சொல்ல வேண்டுகிறேன். தேர்தலுக்கு மட்டும் இல்லை. கல்லூரிகளில் இடம் தேவை என்றாலே ஜாதி தேவைப்படுகிறது. அரசாங்கத்தினுடைய வேலைக்கு வர ஜாதி தேவைப்படுகிறது. ஒருவன் இடத்திற்காக வரும்போது, அவன் என்ன ஜாதி, பிராமண ஜாதியா? ஐயர் ஜாதியா? முதலியார் ஜாதியா? பிள்ளை ஜாதியா? முன்னேறிய செட்டியார் ஜாதியா? இப்படி இருந்தால் இடம் கிடைக்காது..—

திரு. க. அறிவழகன் : இலவசக் கல்விமுறை உயர்நிலைப் பள்ளியிலும் ஆரம்பப் பள்ளியிலும் இருக்கின்ற காரணத்தால், அங்கு ஜாதியைப் பற்றி யாரும் கேட்பதில்லை. எல்லோரையும் சேர்த்துக்கொள்கிறார்கள். கல்லூரிகளிலே இலவசக் கல்வி இல்லாத காரணத்தால்தான், இந்த ஜாதிப் பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன. எல்லா இடங்களுக்கும்

இலவச முறை வந்து விட்டால், எல்லோரையும் சேர்த்துக்கொள்ள ஒரு முறை வரும். இப்பொழுது இலவசக் கல்வியைப் போக்குவதன் மூலம் முன்னேறிய ஜாதிக்காரர்கள் ஏழைகளாக இருந்தால், அவர் களும் சம்பளம் கட்டிப் படிக்கவேண்டிய நிலைமை வரும். ஆகவே, சம்பளம் கட்டிப் படிப்பதால் இளம் சிறார்களிடத்திலே ஜாதி முறை வரும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திரு. அறிவழகன் அவர்கள் கல்வித் துறையிலேயும், கல்லூரிகளைப் பொறுத்தும் என்னை விட அதிகமாக அறிந்தவர்கள். அரசியலிலே என்னைவிட ஈடுபாடு கொண்டவர்கள். ஆகவே நான் என்ன சொல்ல வேண்டும் என்று கருதுகிறேனோ, அதைவிட அதிகமாக அவர்கள் சொல்ல முடியும். அவர்கள் சொல்ல முடியாததை என் மூலம் சொல்லச் சொல்லலாம் என்று கருதுகிறாரோ என்னவோ. புகுமுக வகுப்பைப் பொறுத்த வரையிலே, இலவசக் கல்வி இருக்கிறது. இந்த இலவசக் கல்வியிலே சேரவேண்டும் என்று சொன்னால், உடனே ஜாதி என்ன என்று கேட்கிறோம். நம்முடைய அப்ளிகேஷன் பாரத்திலே ஜாதியைப்பற்றிக் கேட்கிறோம். திரு. அறிவுடைநம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் தந்தையார் காலத்திலே இருந்து பரம்பரையாகக் கல்வி பயின்று கொண்டே வந்தவர்கள். ஆனால் இப்பொழுது இருக்கின்றவர்களுக்கு 'ஹாண்டிகாப்ஸ்' என்று கொடுக்க வேண்டுமா? அவர்களை இந்த நிலைமையில் வைக்க வேண்டுமென்று சொன்னால், இந்த முன்னேறிய ஜாதி என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய தந்தையார் படிக்காதவர்களாகவும் இருக்கலாம். அவர்களுடைய தாத்தா படிக்காதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் உயர்ந்த ஜாதியில் தவறிப் பிறந்ததின் காரணமாக இடம் கிடையாது என்று சொல்வது மிகவும் துர்பாக்கிய மான நிலைமை ஆகும். இதில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட வேண்டும். அந்த மாறுதல் 'எகானமிகலி பேக்வேர்டு' என்ற அடிப்படையிலே அமைய வேண்டும். திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் மிக நன்றாகச் சொல்லியிருக்கிறார்கள். 'யார் ஏழைகளாக இருக்கிறார்களோ, அவர் களுக்கு சமுதாயத்திலே வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். மதிப்பு அளிக்கப்பட வேண்டும். யார் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும், பொருளாதாரத் துறையிலே மிகக் கீழான நிலைமையிலே இருப்பார்களானால், அவர்களுக்கு உதவி செய்யுங்கள்' என்று சொல்லி யிருக்கிறார்கள். பண்ணையாராக இருப்பவர்கள், வசதி படைத்தவர்களாக இருப்பவர்கள், 4 தலைமுறையாகப் படித்து வந்தவர்கள் அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், அவர்களுக்கு மாறுதல் செய்யக் கூடாது என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : மத்திய அமைச்சர் அவர்கள் சொன்ன கொள்கையைச் சொன்னார்கள். மத்திய அரசு அதை அமுல்படுத்தி யிருக்கிறதா?

__திரு ஜி. சுவாமிநாதன்:__ பல திட்டங்களை அமுல் படுத்தவில்லை. உதாரணமாக, இலவசக் கல்வி என்பதைப் பொறுத்தவரையிலே, அவர்கள் வைத்திருக்கிற பள்ளிகளிலே நான்கு மடங்கு வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். உங்களை விட அதிகமாக சோஷலிசம் பேசுகிறார்கள். சொல்வது ஒன்று. நடப்பது ஒன்று. இது எல்லாம் அரசியலிலே சர்வ சகஜம். நான் எதற்கு........

__திரு. எம். சங்கரலிங்கம்:__ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது....;

__திரு ஜி. சுவாமிநாதன்:__ உங்களுக்கும் நமக்கும் உடன்பாடு உண்டு. ஆனால் மத்திய அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் பேசினார்கள். அது அரசாங்கத்தினுடைய கொள்கை இல்லை. நம்முடைய கல்வி அமைச்சர் கூட சில சமயங்களிலே பொருளாதார அடிப்படையிலே போகலாம் என்று ஆலோசனை சொன்னார். அவர் எங்கே சொன்னார் என்று சொன்னால், அவர்கள் வருத்தப்படக்கூடும்—இவைகளையெல்லாம் இங்கே எழுப்புகிறேனே என்று. ஆகவே, இன்னும் 100 ஆண்டுகள் ஆனாலும், இந்த ஜாதிப் பைத்தியம் இருக்குமானால், முன்னேறிய சமூகத்தாருக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தாருக்கும் ஏற்படக்கூடிய இடைவெளி குறையாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே, அரசியலிலே என்ன நடக்கிறது என்று பார்த்தால், அரசியல் நிலைமைகள் மாறி, ஜாதிச் சண்டைகள் வருகின்றன. தஞ்சையிலே பின்தங்கிய மாணவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் சண்டை வருகிறது. என்னவென்று பார்த்தால், அரசாங்க அனுகூலங்களை யார் அதிகம் பெறுவது?—நீ பெறுவதா அல்லது நான் பெறுவதா?—இப்படியே நிலைமைகள் இருக்கின்றன. இன்னும் ஐந்தாறு ஆண்டுகளுக்குப்பின் தமிழகத்தினுடைய அரசியல் நிலைமை கட்சி ரீதியாக இல்லாமல் ஜாதி அடிப்படையிலே சென்று விடுமோ என்று எச்சரிக்கையாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அரசாங்கத்தினுடைய கொள்கை, மாணவர்களுக்குப் போடுகிற திட்டங்கள் பொருளாதார அடிப்படையிலே அமைக்கப்பட வேண்டுமே தவிர, ஜாதியினுடைய அடிப்படையிலே இருக்கக்கூடாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–40)

இன்னொன்று இந்த மாணவர்களிடம் ஒழுங்குக் கட்டுப்பாடு என்பது எந்தக் கல்லூரியிலும் இல்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வேன். முக்கியமாக அவர்களிடம் இந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாமல் போனதற்குக் காரணம் இந்த 'காலேஜ் ஸ்டூடென்ட்ஸ் யூனியன்'. 1946ஆம் ஆண்டிலே ஸ்டூடென்ட்ஸ் யூனியன் என்ற ஒன்றை வைத்து அவர்களுக்கு ஜனநாயகத்தைக் கற்றுக் கொடுக்கிறோம் என்று ஆரம்பித்தோம். 1946ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் ஜனநாயகத்தை எப்படிக் குலைப்பது என்பதைத் தான் கற்றுக்கொண்டார்களே தவிர, எந்த ஜனநாயகத்தையும் அவர்கள்

கற்றுக்கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. அதை அடிப்படைகாக வைத்துப் பார்க்கிறபோது, என்னுடைய தஞ்சையிலே இருக்கிற கல்லூரிகளிலே பல நாட்கள் அடிதடி ஏற்பட்டு, பிறகு பஸ் ஸ்டாண்டிலே வைத்து ஒருவரையொருவர் குத்தியிருக்கிறார்கள். அதே மாதிரி சேலத்தில் ஏற்பட்டிருக்கிறது. இப்படியே தமிழகத்தில் பல கல்லூரிகள் நாள் கணக்கிலே மூடப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் கணக்குப் பார்த்தால், பல நாட்கள் கல்லூரிகள் மூடப்பட்டிருப்பது தெரியும். என்னுடைய கருத்து எல்லாம், இந்த காலேஜ் ஸ்டூடெண்ட்ஸ் யூனியன் என்பதையே கலைத்து விடலாம் என்பதுதான். இதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்; அப்படி யூனியன் கட்டாயம் வேண்டுமென்று விரும்பினால் கூட, நல்ல முறையிலே மார்க் வாங்கியவர்கள், நல்ல முறையிலே கல்லூரிக்கு வந்தவர்கள் அவர்களைத் தான் அந்தக் கல்லூரி யூனியனுடைய பிரசிடெண்ட் ஆகவோ அல்லது செக்ரட்டரி ஆகவோ போட்டு அந்த யூனியனை நடத்தினால் நல்ல முறையில் நடக்கும். அதோடு அப்படிச் செய்தால் தான், அந்தக் கல்லூரியினுடைய மற்ற மாணவர்களுக்கும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படும். நல்ல முறையில் நடந்தால் தான் நாம் அந்தக் கல்லூரியினுடைய மாணவர் தலைவராக அல்லது செக்ரட்டரியாக ஆகலாம் என்ற ஒரு எண்ணத்திலே மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக ஆவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அடுத்து, இன்னொரு விஷயம் இந்தக் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலே 'அட்டென்டன்ஸ்' என்று சொல்லப்பட்டது. மொத்த 180 நாட்களிலே 75 சதவிகித நாட்களாவது அட்டென்டன்ஸ் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. குறைந்தது 120 நாட்களோ அல்லது 130 நாட்களோ ஆஜராகியிருக்க வேண்டுமென்று இருக்கிறது என்று நினைக்கிறேன். பல கல்லூரிகளிலே மாணவர்கள் சில சமயங்களில் 50 நாள் 60 நாள் என்று கூட வருவதில்லை. ஆனால் நடைமுறையில் இப்பொழுது என்ன நடக்கிறது என்று சொன்னால், வேதனையாகத்தான் இருக்கிறது. முன்பெல்லாம் 10 நாள் வரவில்லையென்று சொன்னால் 'கண்டோனேஷன்' என்ற முறையில் நம்முடைய வைஸ்–சான்சலருக்கு அந்த மாணவனைப் பற்றி அனுப்ப வேண்டும். இப்பொழுது அங்கு இருக்கக்கூடிய பிரின்சிபால்களே அங்கு இருக்கக்கூடிய புரபசர்களைப் பார்த்து 'நீங்கள் அவர்கள் வந்ததாகப் போட்டு விடுங்கள்' என்று சொல்லுகிறார்கள். இது மாதிரி நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு கல்லூரியை எனக்குத் தெரியும். அங்கு இருக்கக்கூடிய கல்லூரியினுடைய தலைவர் அங்கு இருக்கக்கூடிய பேராசிரியர்களையெல்லாம் பார்த்து 'நீங்கள் அவர்கள் வந்ததாக எழுதுங்கள்' என்று சொல்லுகிறார். அங்கு இருக்கக்கூடிய பேராசிரியர் ஒருவர் சொன்னார், வந்ததாகக் கருதப்படுகிற ஒரு நாளிலே இந்தப் பையன் எங்கேயாவது போய் ஒரு கிரிமினல் வழக்கு ஏதாவது செய்திருந்தால், நாளையதினம் நான் எப்படி மாட்டிக்கொள்வது, நான் எப்படி முதல்வர் சொல்லுவது மாதிரிப் போடுவது என்றெல்லாம் சொல்லும் அளவுக்கு, அந்தக் குறைபாடு கவனிக்கப்படவில்லை, என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடி, இந்த ஈவினிங் காலேஜ் என்று சொல்லப்படுகிற மாலை நேரக் கல்லூரிகளைப் பற்றி ஒருசில வார்த்தைகள் மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது இந்த மாலை நேரக்கல்லூரிகள் சரிவர நடைபெறவில்லை. 'போஸ்டல் டியூஷன்' வந்த பிறகு, ஒரு ஆண்டு பி.யூ.சி., மூன்று ஆண்டுகள் பட்டம் என்று இருக்கும் வசதியை அனுபவிக்காமல் நாம் என் இரண்டு ஆண்டு பி.யூ.சி., நான்கு ஆண்டுகள் பட்டம், படிக்கப் போக வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக மாணவர்கள் மாலை நேரக் கல்லூரிகளுக்கு வராத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களிலே உள்ள கல்லூரிகளில் இப்படித்தான் இருக்கிறது. எனக்குத் தெரிந்த ஒரு மாலை நேரக் கல்லூரியினுடைய கணக்கை இங்கே நான் சொல்லுகிறேன். பி.யூ.சி. number on rolls 9, ஆவரேஜாக வந்திருந்த மாணவர்கள் 4 பேர். இரண்டாம் ஆண்டு பி.யு.சி. மொத்தமுள்ள மாணவர்கள் 16 பேர், வந்தவர்கள் 6 பேர். பி.ஏ. டிகிரி முதல் வருடம் மொத்தம் மாணவர்கள் 10 பேர், வந்தவர்கள் 3 பேர். பி.ஏ. டிகிரி இரண்டாம் வருடம் மொத்தம் 20 மாணவர்களில் வந்திருந்த மாணவர்கள் 5 பேர். இதுமாதிரி எங்கேயும் நிலைமை இருக்கிறது. இதற்கு எவ்வளவு செலவு செய்கிறோம் என்று சொன்னால், ஒரு ஆண்டுக்கு 60 ஆயிரம் ரூபாய் அளவிலே இருக்கிறது. இந்த மாலை நேரக் கல்லூரிகளுக்கு இவ்வளவு செலவு செய்வது அனாவசியமானது, தேவையற்றது, அந்த முறையையே நீக்கிவிடலாம். அதுவும் 'மொபசில்' இல் நிச்சயமாக நீக்கி விடலாம். ஒருவேளை சென்னை போன்று இருக்கக்கூடிய இடங்களில் வேண்டுமானால் 'சயன்ஸ்' போன்ற சப்ஜெக்டுகளை எடுத்துப் படிக்க வேண்டுமென்று விரும்புபவர்களுக்கு வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு நீக்கிவிடலாமென்ற என்னுடைய கருத்தைப் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் செய்தால் நல்ல முறையிலே அரசுக்கும் பலன் உண்டு என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தமிழை மீடியமாக எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்கு அரசு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறது. ஒரு மாணவனுக்கு 150 ரூபாய், 50 ரூபாய் என்ற அளவில் கொடுக்கிறார்கள். இவ்வாறு கொடுக்கப்படும் பணத்தைக் கொண்டு பல மாணவர்கள் புத்தகங்கள் வாங்குவதே கிடையாது. அந்தப் பணம் எப்பொழுது வருகிறது என்று பார்த்துக் கொண்டு, வந்தவுடன் பல மாணவர்கள் சினிமாவுக்குப் போவதும், பல மாணவர்கள் ஓட்டலுக்குப் போவதும் போன்ற நிலைமைகள் தான் இருந்துகொண்டிருக்கின்றன. புத்தகங்களுக்காகக் கொடுக்கிற ஸ்காலர்ஷிப் பணத்தை அரசாங்கம் ஏன் பணமாகக் கொடுக்க வேண்டும்? புத்தகமாகவே அவர்களுக்குக் கொடுக்கலாமே! நம்முடைய பாடநூல் நிறுவனம் நல்ல முறையிலே, சிறந்த முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. சிறந்த முறையிலே பாராட்டத் தக்க முறையிலே அரசாங்கத்தாரால் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு நிறுவனம் இருக்குமானால், அது தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தான். அந்தப் பாடநூல் நிறுவனத்தைப் பற்றி சற்று பார்ப்போமானால், அது லாபகரமாக நடக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது எனக்கே ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு

சிறந்த முறையில் நல்ல புத்தகங்களை வெளியிட்டு நடத்துகிறார்கள். அந்தப் பாடநூல் நிறுவனத்தினுடைய புத்தகங்களை எடுத்து, இந்த மாணவர்களுக்கு 150 ரூபாய்க்குப் பதிலாக புத்தகமாகக் கொடுத்தால் அந்தப் புத்தகங்களையாவது மாணவர்கள் படித்துவிட்டுப் போவார்கள். அதை விட்டுவிட்டு ஸ்காலர்ஷிப் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்வேன்.

அடுத்தபடி, 1957-ஆம் ஆண்டிலே தஞ்சை சரபோஜி கல்லூரி அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்டபோது இருந்த பேராசிரியர்கள் கிட்டத்தட்ட 7, 8 பேர்களுக்கு அவர்கள் எந்த ஆண்டிலிருந்து எடுக்கப்பட்டார்களோ அந்த ஆண்டிலிருந்து சர்வீஸ் கணக்கிட்டுத் தான் பென்ஷன் கொடுக்கப்படும் என்று இந்த அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. அது நியாயமில்லை. அவர்கள் மொத்தம் எவ்வளவு வருடங்களுக்குப் பணியாற்றியிருந்தார்கள் என்பதைக் கணக்குப் பார்த்துக் கொண்டு, அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எம்.ஏ.எகனாமிக்ஸ் என்ற ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக நம்முடைய சட்டக் கல்லூரியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையிலே, அதாவது லா காலேஜைப் பொறுத்தவரையிலே, அங்கு ஒரு புக் பாங்க் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த புக் பாங்கில் என்னவிதி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு மாணவன் அல்லது அவனது தந்தையாருக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால் தான், அங்கிருந்து புத்தகம் எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. அதுமாதிரி ஒரு நிலைமை இருக்கலாமா? அப்படி வைத்திருப்பதன் மூலம் 10 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்த மாணவன், சாதாரண ஏழை மாணவன் அந்த வசதியை அனுபவிக்க முடியாத நிலையில், அவனுக்கு அதனாலே எந்தவிதமான பயனும் ஏற்படாது என்பதைச் சொல்லி, அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்</u>: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்தக் கல்வி வளர்ச்சி மானியத்திலே இதனுடைய புள்ளிவிவரங்களைப் பற்றி எல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லுவதற்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள், சுவாமிநாதன், கணபதி, முத்துசாமி, தாமஸ், அறிவழகன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் இருக்கின்றார்கள். இதைப்பற்றி எல்லாம் பேசுவதற்கு எனக்கு நேரமும் அவகாசமும் இல்லை. பொதுவாக எனது அனுபவத்திலிருந்து கல்வித் துறைக்கு என்று இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து இவ்வளவு பணம் வீண் விரயமாகின்றதே என்பதை நினைத்துத்தான் நான் வருத்தப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் கூட நான் இவ்வாறு கூறுவதைக் கேட்டு வருத்தப்படலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர் வருத்தப்பட மாட்டார் உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு தலைவரவர்களே, இப்படி கோடிக்கணக்கான பணத்தை ஆசிரியர்களுக்காகச் செலவு செய்தும் ஆசிரியர்களுடைய நிலையைப் பார்ப்போமானால், ரொம்பப் பரிதாபகரமாக இருக்கிறது. நான் இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். முதலில் கள் குடிப்பவர்களுக்கு ஆசிரியர் வேலை கிடையாது என்ற ஒரு நிலைமையை அரசாங்கம் உண்டாக்க வேண்டும். கள் குடிப்பவர்களுக்கு ஆசிரியர் வேலை கொடுக்கக் கூடாது. கள் குடித்துக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப் போய் பிள்ளைகளுக்கு என்ன போதனை பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, போதனை பண்ணவில்லை, போதை பண்ணுகிறார்கள்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு தலைவரவர்களே. இத்தனை கோடி ரூபாயை அரசாங்கம் கல்விக்காகச் செலவு செய்வது போதனை செய்வதற்காகவா, இல்லை போதை செய்வதற்காகவா? ஆசிரியர்களுக்கு நல்ல வசதிகளையும் வாய்ப்புகளையும் செய்து கொடுகக வேண்டும். அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் கடடிக்கொடுக்க வேண்டும். அவர்களுக்குத் தேவைப்படுகின்ற போக்குவரத்து வசதிகளை எல்லாம் பண்ணிக்கொடுக்க வேண்டும். அதைப்பற்றியெல்லாம் நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். ஆனால் அவர்கள் நடத்தை நல்லமுறையில் இருக்கவேண்டும். மெஜாரிட்டி ஆசிரியர்கள் தவறு பண்ணுகிறார்கள். ஆசிரியர் குடிப்பதோடு அவருடைய மனைவியையும் குடிக்க வைத்து தவறு பண்ணுகிறார்கள். அவைகளையெல்லாம் கவனிக்க வேண்டும். இரண்டாவது, இன்றைக்கு ஆசிரியர்களிலே இரண்டு பிரிவினர் இருக்கிறார்கள். ஒன்று கூட்டணி, மற்றொன்று கழகம். எதற்கு இந்தக் கழகம்? ஆசிரியர்களுக்கு உள்ளே இப்படி ஒரு கழகம் வேண்டுமா? எதற்காக இப்படிக் கழகங்களை உண்டுபண்ணவேண்டும்? இதனால்தான் கல்வியின் தரம் குறைந்துகொண்டே வருகிறது. நான் பெரியவன், நீ பெரியவன், கார் எடுத்துவா, எலெக்ஷன் வருகிறது என்றெல்லாம் வெறிபிடித்து ஆசிரியர்கள் அலைகிறார்கள். இந்த நிலைமையில் திரு. முத்துசாமி போன்றவர்கள் எல்லாம் அதற்கு ஒரு முயற்சி எடுத்து ஆசிரியர்களைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும். அவர்கள் வளரும் குழந்தைகளுக்கு நல்ல போதனைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை. பொதுவாக என்னுடைய பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், அங்கு 600 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள்.....

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர்களில் யாராவது குடிக்கிறார்களா?

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு தலைவரவர்களே, நான் அனுபவரீதியாகத்தான் சொல்லுகிறேன். என்னுடைய பஞ்சா

யத்து யூனியனிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள் எல்லாம் என்பேரில் ரொம்பப் பிரியமானவர்கள், என்னோடு ரொம்ப அன்பாகப் பழகுகிறவர்கள். அவர்கள் நான் பேசியதைக் கேள்விப்பட்டால் கூட, ரொம்ப வருத்தப்படக்கூடும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, அந்த ஆசிரியர்கள் போதையுடன் உறுப்பினர் அவர்களிடத்தில் நின்று பேசுகின்றார்களா, இல்லை போதை இல்லாமல் உறுப்பினர் அவர்களிடத்தில் நின்று பேசுகின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவரவர்களே, என்னிடம் அவர்கள் பேசும்போது போதையுடன் இருப்பதில்லை. என்னிடம் ரொம்ப அன்பு வைத்திருக்கிறார்கள். அன்புடன் பேசுகிறார்கள், பழகுகிறார்கள். கல்வித் துறையிலே சில திருத்தங்கள் வேண்டும். ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி கொடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது அந்த அறிக்கையை இன்னும் கொடுக்கவில்லை.

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு தலைவரவர்களே. அது பஞ்சப்படி யல்ல. 'பே கமிஷன் ரிப்போர்ட்'.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: மாண்புமிகு தலைவரவர்களே பொதுவாக ஆசிரியர்களுக்கு நலல வசதிகளைச்செய்து கொடுக்க வேண்டும், ஆசிரியர்களுக்கு என்று எங்குமே வீடுகள் கிடையாது. எனவே அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் நல்ல முறையிலே உதவிகள் செய்யவேண்டும். இவ்வளவு ரூபாய் செலவு செய்தும் இன்னும்கல்வித்துறை முன்னேறாமல்தான் இருக்கது வருகிறது. கல்வித்துறை நல்ல முறையிலே நடக்கவேண்டும்ல்ல அறிஞர்களை உருவாக்கி இந்த சபைக்கு அனுப்பினால் தான், வருங்காலத்தில் தேசம் நன்றாக இருக்கும். அவர்களை நல்ல, நிறைகளில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் நடத்தை நன்றாக இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். குடிக்கிற ஆசிரியர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் வேலை கொடுக்கக்கூடாது. 'குடிப்பவர்களுக்கு வேலை கொடுக்க மாட்டோம் என்று அரசாங்கம் சொல்ல வேண்டும். நாங்கள் அந்தக் கமிட்டி வைத்திருக்கிறோம். இந்தக் கமிட்டி வைத்திருக்கிறோம் என்று சொல்லாமல் ஆசிரியர்களை நல்லமாதிரி ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். இப்பொழுது அவர்கள் நல்ல ஒழுக்கமில்லாமல் இருக்கிறார்கள். பொதுவாக ஆசிரியர்களுக்கு உள்ளே யூனியன்கள் தேவையேயில்லை. கழகங்களும், கூட்டணிகளும் இருப்பதால்தான் எங்கே பார்த்தாலும் பெரும்பாலும் தகராறு நடந்துகொண்டிருக்கின்றது.

(பிற்பகல் 4-50)

ஆசிரியர்கள் எல்லாம் ஒரே இனம், ஒரே வகுப்பு என்ற முறையில் செயல்பட வேண்டும். அவர்களில் 5, 6 பிரிவு வேண்டாம், கட்சியும் வேண்டாம். ஆசிரியர்களுக்கு என்று ஒரு கட்சி வேண்டுமா? அவர்கள் குழந்தைகளை நல்ல முறையில் உருவாக்கி, நல்ல பயிற்சி கொடுத்து இந்த தேசத்திற்கு உதவுபவர்களாக உருவாக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு நல்ல முறையில் வீடுகட்டிக் கொடுக்க வேண்டும்,

மற்ற வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் மனது நோக விடக்கூடாது. நல்ல குழந்தைகளை உற்பத்தி பண்ணிக்கொடுத்தால், அந்தக் குழந்தைகளுக்கு நல்ல பயிற்சி கொடுத்து நல்ல முறையில் உருவாக்க அவர்கள் முன்வரவேண்டாமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உற்பத்தி பண்ணும்போதே எப்படி நல்ல குழந்தைகள் என்று தெரியும்?

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: அவர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும். அந்த நேரத்தில் குடிக்கிற ஆசிரியர்களுக்கு வேலையில்லை என்று சட்டம் போட வேண்டும். எத்தனையோ கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிடுகிறோம். அவர்கள் குடித்து விட்டு ரோட்டில் போவது சரியா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆசிரியர்கள் குடிக்கிறார்கள் என்ற பட்டம் வாங்குவதா? தமிழிலே எல்லாம் வரவேண்டும் என்று சொல்லும்போது தலைவர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். இது விஷயம்பற்றி அமைச்சர் அவர்களிடம்தான் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் நான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பாதி தான் படித்திருக்கிறோம். மீதிக்கு 'கை கர்ணம்' தான் காட்டுகிறோம். வேறு ஒன்றுமில்லை. சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அதனுடைய நகல் இங்கிலிஷில் இருக்கிறது. வெள்ளைக்காரன் கட்டி வைத்து விட்டுப்போன கட்டடத்தில்தான் இருக்கிறோம். அவன்விட்டு விட்டுப்போன புத்தகங்கள் அப்படியே இருக்கட்டும் என்று வைத்திருக்கிறார்களா? சும்மா, நாங்கள் தமிழை வளர்க்கிறோம் என்று பேசிக்கொண்டிருந்தால் பிரயோஜனம் இல்லை. 'தமிழக அரசு' என்று போட்டுவிட்டால் மட்டும் தமிழைவளர்த்து விட்டதாக ஆகுமா? நாங்கள் வந்துதான் பாதி அளவாவது நடந்திருக்கிறது தமிழில் காரியங்கள் என்கிறார்கள். தி. மு. க. ஆட்சியில் இருப்பதுபற்றி எங்களுக்குப் பொறாமை இல்லை. எதையும் செய்யாமல் எங்களுக்கு 'சர்' பட்டம் கொடுங்கள் என்று சொல்லுகிறார்களா? அவர்கள் வயிறாரச் சாப்பாடு போட்டால், போட்டார்கள் என்று சொல்லலாம். ஆனால் சாப்பாடு போட்டார்களா? பட்டினியாக வைத்துக்கொண்டு எப்படி மகாராஜாக்கள் சாப்பாடு போட்டார்கள் என்று சொல்ல முடியும்? ஆனதினாலே, அடுத்த எலெக்ஷன் வருவதற்குள்ளேயாவது, தமிழை 'கம்பிளீட்டாகக்' கொண்டு வந்துவிடவேண்டும். இதைக்கூடச் செய்யவில்லை என்றால், என்ன காரியம் நடக்கப்போகிறது? ஒன்றும் நடக்கவில்லை, சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள், அதைப்பற்றிப் பேசிப் பிரயோஜனம் இல்லை. தமிழக அரசு என்று லேட் போட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஏதோ வெளியே போகிறவன் படித்துக் கொண்டு போகிறான். அதனால் அரிசி விலை ஒரு படி 3 ரூபாய்க்கு விற்கிறதா? அதனால் அரிசி விலை ஒரு ரூபாய்க்கு வரப்போகிறதா? அது எல்லாம் இல்லை. அரசு ஒரு சட்டம் போட்டிருக்க வேண்டும். இந்த இந்த குவாலிபிகேஷன் இல்லாதவர்கள் எல்லாம் எம். எல். சி., எம். எல். ஏ., எம். பி. யாக வரக்கூடாது என்று. அப்படியில்லாதவனையெல்லாம் பிடித்துக்கொண்டுவந்து வைத்துக்கொண்டு கை தூக்கு என்று சொல்லுவது சரியல்ல......

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'எவனையெல்லாமோ பிடித்துக் கொண்டு வந்து வைத்து' என்று பேசக்கூடாது.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: நியாயமாகச் செய்வது என்றால் எல்லாமே தமிழில் ஏற்படுத்த வேண்டும். யாரோ கேட்டதற்குத் தலைவர் கூட வருத்தப்பட்டார்கள். வெள்ளைக்காரனை வேண்டாம் என்று போகச் சொல்லிவிட்டு, அவனுடைய இங்கிலீஷை மட்டும் புஸ்தகங்களில் வைத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வெள்ளைக்காரனைப் போகச் சொல்லிவிட்டு, அவன் விட்டு விட்டுப்போன ரயில், போன் எல்லாம் வைத்திருக்கிறோம்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: ஆதலால், கள்ளுக் குடிக்கின்ற ஆசிரியர்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் இருக்கக் கூடாது. வேறு வேலையில் வேண்டுமானால், இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் ஆசிரியர்கள், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியவர்கள். நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். ஆசிரியரை மாற்றி விட்டு, அவர் பெண்டாட்டியை அங்கேயே வைத்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்குத் தவறாக 'இன்பர்மேஷன்' கொடுத்திருக்கிறார்கள். இரண்டு பேரையும்தான் மாற்றிறோம். இருந்த ஊரிலேயேதான் இருப்பேன், அப்படி ஆர்டர் போட்டால் போடுங்கள், இல்லாவிட்டால் தகராறு பண்ணுவேன் என்று செய்கிறார்கள். இந்த மாதிரி பிடிவாதம் பிடிக்கிறவர்களுக்கு திரு. முத்துசாமி போன்றவர்கள் புத்திமதி சொல்லவேண்டும். கல்வி அமைச்சர் அவர்கள் ரொம்ப அதிகமாக விவரம் தெரிந்தவர்கள். அவர்கள் உறுப்பினர்கள் சும்மா விடுவதில்லை பஸ்கி எடுப்பது போல உட்கார்ந்து, எழுந்து பதில் சொல்லுவது என்றால் சாதாரண காரியம் அல்ல. வேறு யாரிடமாவது இந்த இலாகாவைக் கொடுத்துச் செய்யச் சொன்னால், என்ன ஆகும்? அதிகம் பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். கல்வித் துறையில் சிறந்தவர்கள் எல்லாம் பேசியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கல்வித் துறையில் நல்ல நல்ல காரியங்கள் செய்வதற்கு உதவி செய்ய வேண்டும். அந்தக் காரியத்தில் எங்களால் முடிந்தவற்றைச் செய்வோம் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆசிரியர்களில் பெரும்பாலோர் குடிக்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. ஒரு சிலர் இருக்கக்கூடும். இப்போது குடிப்பது சட்டப்படி தவறு. அப்படி யாராவது குடித்தால், போலீசார் பிடிக்கலாம், அவர்கள் மீது வழக்குத் தொடுக்கலாம். அப்படிப்பட்டவர்களை வேலையிலிருந்து நீக்கி விடலாம். அப்படிப்பட்ட முயற்சியில் எல்லோரும் உதவி செய்தாலொழிய, வெறும் அறிவுரைகள் கூறுவதன் மூலம் அந்தக் குறையைப் போக்க முடியாது. ஒரு சிலர் தவறு செய்யக்கூடும்

எல்லோரும் என்று சொல்லுவது சரியல்ல. தவறு செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழியிருக்கிறது. எல்லோரும் இதற்கு, ஒத்துழைப்புத்தர வேண்டும்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, எல்லோரும் குடிக்கிறார்கள் என்று சொல்லவில்லை. நல்லவர்கள் இல்லை என்று சொல்லவில்லை. பஞ்சாயத்து யூனியன் அளவில் பார்த்ததைச் சொல்லுகிறேன்......

* THIRU G. R. DAMODARAN : Mr. Chairman, Sir, all the Members of this House dealt with various problems in general.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

I would like to start with a problem about which all of us are concerned very seriously now and which is receiving the attention of our Government as well. That is generally the suggestion and recommendation to change over the educational structure from the existing 11 plus 1 plus 3 to 10 plus 2 plus 3. Sir, I would like to draw the attention of the hon. Members of this House—and I know some of the Members have different views—to the fact that as long back as 10 or 15 or 20 years ago, a Secondary Education Commission was constituted and one of our very eminent educationists, the late Dr. A. L. Mudaliar, one who had distinguished himself also as the Leader of the Opposition of this House, led that Secondary Education Commission; and in its own recommendations, the Pre-University Course was meant to be in the University only as a temporary measure. It was the general recommendation that ultimately as soon as possible when conditions improved, this one-year Pre-University Course should be transferred to the High Schools, upgrading them as Higher Secondary Schools. Therefore, Sir, I would like to stress the importance of having a large number of Higher Secondary Schools thereby reducing the pressure to a great extent in the Colleges which is partly responsible for creating some problems in the colleges. Sometimes some of us choose to have our own old Intermediate back here. There were also people who were thinking that we should have the two-year degree course which existed till about 15 years back. But, Sir, considering the knowledge explosion and the population explosion and the thirst for knowledge in the people and having committed ourselves to more or less compulsory

education till a certain stage, the rush for the colleges and also for the schools is increasing. In spite of the very good plans that our State Government have drawn up and implemented, I would on this occasion also like to congratulate the Government on the progress of education in our State till now. I think our Government and all the officers have certainly done their best. But, Sir, under the conditions of social and economic problems that are existing now, our best is not good enough. There should be certain amount of speed in transforming our educational system into a very effective and useful one so that this 10 plus 2 plus 3 is really beneficial. We can start from the Secondary School doing two year course in the Higher Secondary; perhaps until such time as we are able to upgrade enough number of schools or most of the Schools as Higher Secondary Schools, some Colleges can have two year Pre-Degree Course and perhaps, if acceptable, the Directorate of Technical Education may be involved by requesting them to provide two-year pre-degree course or pre-technical course, making sure at the same time that all these three, viz., two-year Higher Secondary, two-year pre-degree and two-year pre-technical are more or less equal and one who completes any one of these three two-year courses must be accepted for admission to the Degree Course. It needs enormous amount of thinking and I do hope that this will receive the attention of the Committee which is engaged in making recommendations. This two-year course coming in between the School Education and the Collegiate or University Education is going to be a very vital and important one. Any amount of money spent in transforming from 11 plus 1 plus 3 to 10 plus 2 plus 3 will not be money wasted but money invested for the welfare of humanity. This is something we should all bear in our mind, although right now we are undergoing severe financial resources problem.

(பிற்பகல் 5-00)

In the School Education, Sir, we see very many innovative measures have been taken. I would like to refer to only one or two of them now, because many friends have referred to many things. The constitution of the State Institute of Science Education as a wing of the State Institute of Education is a very significant reform and, at the same time, we also note that a

Director of Government Examinations has been appointed and the same Director also happens to be the Director of the State Institute of Education and the Director of Evaluation Unit. This is a very important measure. This State Institute of Education with the Institute of Science Wing and Evaluation Unit has to play a very, very important role in training particularly a large number of teachers to pick up the new syllabus that may be coming into the two-year Higher Secondary Course or the two-year Pre-Degree Course and this Institute may, therefore, need some technical assistance. I am not quite sure, if one Director can deliver all the goods. While on this subject, Sir, I would very much like to stress the importance of research on examinations. Our Hon. Minister for Education has, on many occasions, stressed the importance of reforms in our present educational system of having one question paper for about 2 lakhs of students all over the State. I am sure this State Institute of Education will be able to provide an answer to reform the examination system particularly at the School stage.

Having said this, Sir, now I would like to go to the area of Collegiate and University Education. I am sure all of us are very glad that we have heard the announcement made by our Chief Minister and the Education Minister about the decision taken to constitute more or less three new Universities. One of them is going to be a Technical University. Since I am more nearer to the technical and technological University, I would very much like to stress the importance of immediately starting the Technical University which is not going to involve any additional expenditure at all. We have one of the finest Engineering Colleges in Tamil Nadu—the Guindy Engineering College — which is second to none, although there is a very big Indian Institute of Technology more or less quite opposite to it, wherein crores and crores of rupees have been put and I understand that the annual receipts, charges and expenditure come to nearly Rs. 3½ crores. Without wasting so much money — I think I can use the word ' waste ' — in the name of deemed University, — I have not got the figures about the expenditure in the Guindy Engineering College and I do not think it will be more than 20 or 25 lakhs, I hope I am right and if I am wrong, the Hon. Minister

will kindly correct me — we can constitute the Technological University which is not going to involve any additional expenditure and there will not be any financial problems. We must act quickly by appointing a Vice-Chancellor and the Management Board and then go ahead with all the necessary formalities.

The next thing. We have also heard of two more Universities for our State. Considering all the previous reports of the expert educational bodies, it is said that the Madras University is now managing a very large number of Colleges and very many eminent educationists and former Committees have definitely said that no University under Indian conditions should consist of more than 40 or 50 Colleges. Therefore, the announcement that has come recently is very, very welcome and I think I will be very selfish if I say that I should have a University at Coimbatore immediately. I would, however, say that the Tiruchi University may be started immediately without any difficulty. We have some traditional faith and belief that a University means so many crores of rupees, hundreds of acres of land and multi storeyed buildings and all that. The present-day trend in other countries in Europe and even in Russia is that they do not think that they need money immediately. They appoint the Vice-Chancellor and Professors and give them a small building and as and when it develops, finance is provided by the State in the course of five or 10 years or even 15 years. In Tiruchi we have got a very vast campus in the Regional Engineering College and the Chairman of the Management Board is our own Hon. Education Minister. I do not think it is going to be very difficult at all, if we make up our mind to start it. It is only a question of making up our mind. If we go on thinking on old traditions, nothing will happen at all.

(பிற்பகல் 5-10)

I am very happy the Hon. the Chief Minister has just arrived. I am talking about the announcement made by the Hon. the Chief Minister about the two new Universities and I hope we will have them as soon as possible in Tiruchirappalli and Coimbatore.

Let me repeat again in his presence that I am not pressing for the Coimbatore University immediately because starting of two Universities may be difficult or it may be considered selfish from my point of view to ask for a University for my own town.

THIRU S. NARAYANASWAMY : The costs are low.

THIRU G. R. DAMODARAN : Sir however, I would like that, in the interest of education in our State and particularly in the interest of developing higher education, the new Universities should be started immediately or as soon as possible. It is one of the reasons why I stress the importance of not waiting any further to start the new Universities. The highest priority should be given to the Technological University and next should come the Tiruchirappalli University. I do not think the people of Coimbatore will blame me if I say that we do not mind waiting if there are any problems like finance or things like that.

Sir, we have heard a lot of comments about Government colleges and private colleges. I would like to refer to one place in the Note, where it is stated that most of the backward and socially backward students are trying to stick only to the Government Colleges because the fees are less. It is a fact that the fees are less but in my humble experience during the last 15 to 20 years I find that, in spite of the lower fees, even the socially and economically backward students always rush to colleges other than Government Colleges inspite of the higher fees. There is a small note in the Report, Sir, that a larger number of socially and economically backward students are in the Government colleges because of levying of higher fees by the private colleges.

Sir, we are talking about part-time evening colleges. One of our hon. Colleagues just now said that in some parts—I do not think it refers either to Madras or to Coimbatore—the strength of the evening colleges was coming down. Probably it may be so because of starting of the Correspondence Course in Humanities only by the Madurai University. But, however, it is a part of our duty to continue part-time education and create some incentive and motivation for it, because part-time and evening educa-

tion forms part of the non-formal education for those who are working. Therefore, special incentive and motivation is essential for part-time education. No doubt, Correspondence Course is one such but that cannot cover all the subjects, specialities and all the Sciences.

Sir, I would like to refer on this occasion, to one of the recommendations of the University Grants Commission—a very strong recommendation—to all the Universities and States about selecting a few well-developed institutions and giving the status of autonomy to the colleges. Sir, this is something very important. If we cannot open new Universities quickly, it is only fair that some well-developed institutions are given certain amount of freedom or flexibility in their own way to modernise courses, to have their own better examination-system, of course, under the supervision of the University. To encourage and promote such institutions gradually, perhaps there may be one or two or three autonomous colleges in the State. I think for this purpose it is necessary and essential to amend the University Act because there is no provision to have an autonomous college in the University Act from the point of view of the University. It is just a small amendment and a minor amendment. I hope the Hon. the Minister for Education will think about this.

We have very boldly launched on granting autonomy to two or three polytechnics from the Directorate of Technical Education for which I think we should all congratulate the Chairman of the State Board of Technical Education, not to forget the Director of Technical Education who is so keen and enthusiastic about giving this autonomy to polytechnics. The question of amending the Act does not come in there at all and I am sure this is going to be a very good innovation.

About sanctioning U.G.C. scales to college teachers, many of may hon. Friends have voiced their opinion. After all, the State Government have to bear only 20 per cent of the increased salary for a period of five years. I would also like to associate myself with all my hon. Friends in requesting the Government, the Hon. the Chief Minister and the Hon. the Minister for Education

to accept this recommendation of the University Grants Commission and sanction the U.G.C. scales of pay to all college and University teachers.

Sir, although I am speaking in English, I do hope people will not mind if I stress on this occasion the importance of medium of instruction and medium of education. I for one have been pleading for changing the medium of instruction from English to Tamil for a very long time, not excluding the study of English as a language properly and effectively. We have experimented in a large number of colleges and the experiment appears to be quite successful for a long time and in spite of that, there is lack of enthusiasm. Many people bring their children and ask for admission in English medium class. I think this thing must change. There appears to be a certain amount of rather lack of co-ordination between the University and the Directorate of Collegiate Education in enforcing and implementing these Tamil medium courses in the various colleges. I hope something will be done about it by the Hon. the Minister for Education. Recently a lot of discussion has taken place about this problem. Generally, Sir, Tamil medium students, in my experience, have fared well in some of their careers and in their professions and in their performance in English language because they have studied the language well enough.

Sir, I again go back and refer to the recent experiment that is going on very successfully in the Directorate of Technical Education in three polytechnics. They have introduced Tamil medium and their conclusions are more or less similar. I would like the Hon. the Minister for Education, if necessary, to check this up with the Directorate of Technical Education. Recently, the Madras University has instituted a large number of job-oriented courses. Although till now we had courses which were in a small way defective here and there, these job-oriented courses are all very good. I think the State Government should come forward to encourage the starting of these job-oriented courses in various colleges because it is hoped that with that experience and vocationalisation, as and when it comes, in the two-year Pre-

Degree or Higher Secondary or in the Pre-Technical courses these job-oriented courses may prove very successful in job-seeking and they may become job-creators.

(பிற்பகல் 5-20)

Sir, some of our Friends have stated some things about the Students' Union. In my experience, I do not think it is the fault of the Students' Union if anything goes wrong in the discipline of the Colleges. Suggestion has been made that the one who gets the highest mark must be made the Union Chairman. One who gets the highest mark happens to be highly academic, bookish and he tends to remain in his room and go on studying. If we want a Chairman for a good Union, he must be able to spend quite a lot of time to organise effectively activities of the Students' Union. Provided the College authorities, the Principal and some of the Faculty Members are able to guide them properly Students' Union is the best forum as one of the extra-curricular activities to keep the minds of the students away from indiscipline and from going astray.

I have already mentioned about the importance of Technological University and we need not wait. One more point and then I will finish. I want to impress on this occasion the importance of Polytechnic education. There are 38 Polytechnics in our State. Polytechnics are supposed to produce a large number of valuable manpower personnel, namely, technicians of different abilities, we need in our Industries and technical institutions, science laboratories, medical institutions and hospitals. Wherever there is any machine of any type, mechanical, electrical, electronic, hydraulic, whatever it is and when something goes wrong, I think, the services of the technicians are needed to repair it, to put it aright. We are also going to have educational television system very soon and when we have a large number of television receivers in our countryside and all over the place, we need also television technicians to service these sets. I hope this television education system is going to be very successful. It is a very good innovation and the sooner it is done the better it will be.

With these comments, I would like to commend the Minister's note and I do hope the Government will make sure of upgrading the qualitative standard of our education and provide sufficient incentives to our teachers and students. Thank you very much.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கை அறிக்கைமீது எனது கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், கல்வி வளர்ச்சி பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இவ்வவையில் அறிவிக்கப்பட்ட அந்த அறிக்கையில், தமிழகம் எந்த அளவுக்க கல்வித் துறையில் முன்னேறி பல மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்பது மிகத் தெளிவாக, புள்ளி விவரங்களோடு, ஆதாரத்தோடு விளக்கப்பட்டிருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர்கூட, நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்களும், இன்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களும் சில பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்றால், அந்த அளவுக்கு பள்ளிகளை விரிவுபடுத்தியிருக்கிறோம். எந்த அளவுக்கு தமிழகத்தில் கல்வி தேவையோ, அதை மிஞ்சியே விரிவுபடுத்தியிருக்கிறோம் என்பதை அது எடுத்துக்காட்டுகின்றது. நேற்றுப் பேசிய நண்பர் அவர்கள் சில பள்ளிகளில் 9 அல்லது 15 மாணவர்கள்தான் இருக்கிறார்கள் என்று கூறினார்கள். இரண்டு மூன்று பள்ளிகளை ஒன்றுசேர்த்து எக்கனமிக் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். புகுமுக வகுப்பிலே 10, 15 அல்லது பட்ட வகுப்பிலே 20 மாணவர்களுக்குள்ளாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இதிலிருந்து தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் கல்வியைக் கொண்டு சேர்த்திருக்கிறோம் என்பதிலே எந்தவிதமான ஐயமும் இல்லை. இது தமிழக அரசினுடைய வெற்றி. குறிப்பாக நமது கல்வி அமைச்சர் நாவலர் அவர்களுடைய அரிய பணியால் தமிழகம் முழுதும் கல்வி கொண்டு சேர்க்கப்பட்டு விட்டது. அதுவும் உயர்கல்வி கொண்டு சேர்க்கப்பட்டு விட்டது என்பதை நாம் நன்கு உணருகிறோம். அந்தப் பணியிலே, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமைகின்ற நிலைக்காகப் பாடுபட்ட அமைச்சர் அவர்களையும் மற்றும் அதற்குத் துணை நின்றவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் ஒரு செய்தியைச் சொன்னால், தவறு இல்லை என்று நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன்னால் பத்திரிகைகளில் கூட படித்திருக்கலாம், ஆந்திரப் பிரதேசத்திலே ஒரு கல்லூரி பல வருஷங்களாக மானியம் பெற்று வருகிறது. பிறகு அப்படிப்பட்ட கல்லூரி இல்லையென்று புகார் செய்யப்பட்டு அதன்பேரில், அந்தக் கல்லூரி இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்து, எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து வாருங்கள் என்று அங்கிருந்து ஒரு கமிஷன் போட்டு அனுப்பினார்கள். கமிஷன்

பலமுறை சென்று அந்தக் கல்லூரியைக் கண்டுகொள்ள முடியவில்லை அப்படி ஒரு கல்லூரி இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் ரிகார்டிலே இருக்கிறது. 'இந்து' பத்திரிகையிலே அதைப்பற்றிக் கட்டம்போட்டு 'ghost college' என்று போட்டிருந்தார்கள். 17 வருஷமாக கல்லூரி இல்லை, ஆனால் மானியம் பெறுகிறது என்று சொன்னார்கள். பிற மாநிலங்களிலே கல்வித்துறை இருக்கக்கூடிய நிலையையும் நமது மாநிலத்தில் கல்வித் துறையில் இருக்கக்கூடிய வளர்ச்சியையும், சிறப்பையும் பார்த்தால் உண்மையிலே அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய அத்தனை பேரையும் பாராட்டி மேலும் ஊக்குவித்து அவர்கள் நல்ல முறையிலே செய்வதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் ஆசிரியர்களுடைய நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். ஆசிரியர்களுடைய பிரதிநிதி என்ற முறையில் சில ஆசிரியர்கள் செய்கிற தவறுகளுக்கு நாங்கள் மன்னிப்புக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எதோ ஒரு சில இடங்களிலே நடந்திருக்கலாம். ஆனால் எல்லா ஆசிரியர்களும்— மெஜாரிட்டி—என்று சொன்னார்கள். அது எங்கோ நாலைந்து ஆசிரியர்களுடைய மத்தியிலே பார்த்திருப்பார்களே தவிர....

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதை அப்பொழுதே திருத்தி விட்டேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: எங்கோ ஒரு சில இடங்களில் நடக்கிறதே தவிர, பெரும் பகுதி, நூற்றுக்கு 99 ஆசிரியர்களும் அந்தப் பணிக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரியவர்கள் மனம் புண்படும்படி, அவர்கள் சொல்லுகிற நிலைமைக்கு, ஆசிரியர் சமூகம் ஆளாகி விடக்கூடாது என்பதை ஓர் எச்சரிக்கையாக, படிப்பினையாகக் கொண்டு, அவர்கள் போற்றுகின்ற நிலையிலே ஆசிரியர் சமூகம் தொண்டுபுரியக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேறு எங்கேனும் சில தவறுகள் நடந்தாலும் அதற்கான பொறுப்பை இங்கே இருக்கிற 7, 8 பேர்களும் ஏற்றுக் கொள்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வியினுடைய தரம் இன்று உயர்த்தப்பட வேண்டும் என்ற கருத்து வலிமையாக இருக்கின்றது. உண்மையில் அது உயர்த்தப்பட வேண்டும். ஆனால் மாணவர்களுடைய அறிவுத்தரம் குறைந்துவிட்டதாக யாராவது சொன்னால், அது தவறு என்பது என்னுடைய கருத்து. ஒரு போட்டிக்கு அல்லது இன்டர்வியூக்கு பலபேர் போகிறபோது, ஆங்காங்கே ஒருசில மாணவர்களைத் தவிர மற்றவர்கள் சரியான பதிலைச் சொல்லுகிறார்கள் இப்போது எட்டாவது படிப்பவனைப் பார்த்து சில வினாக்களைக் கேட்டுவிட்டு, எட்டாவது வகுப்பு படிக்கிற வயதிலே நாம் எப்படி இருந்தோம் என்று ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்களுடைய தரம், பரவலாகப் பெற்றிருக்கக் கூடிய அறிவினுடைய திறம்,

பொது அறிவினுடைய நுணுக்கம், நுண்மாண் நுழைபுலம், ஆகியவை இன்றைய கல்விமுறையாலும், உலக அமைப்பின் முறையாலும், பல்வேறு நிலையாலும் உயர்ந்திருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அது இன்னும் ஒழுங்குபடுத்தப்பட்டு, இன்னும் சிறப்புடையதாக ஆக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகள் 2,882 இருக்கின்றன. அதில் 50 சதவிகிதப் பிள்ளைகளுக்குத்தான் சிறந்த அறிவியற் கூடங்கள் இருக்கின்றன. ஏனென்றால் 767 பள்ளிகளுக்கு அறிவியல் கூடங் களுக்கு நிதி உதவி அளித்திருக்கிறோம். சுமார் 200, 300 தனியார் பள்ளிகளில் நல்ல அறிவியல் கூடங்கள் இருக்கின்றன. 50 சதவிகித உயர்நிலைப் பள்ளிகளில் சிறந்த அறிவியற் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. அதற்கு உடனடியாக அதிக நிதியை ஒதுக்கி அறிவியற் கூடங்களைச் சிறப்பான முறையில் அமைக்க வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-30)

இன்னொன்று அறிவியல் கூடங்கள் இருக்கிற பள்ளிகளிலே அட்டன்டர் கிடையாது. லேபரட்டரி அட்டன்டர் கிடையாது. சாங்ஷன் கொடுக்கவில்லை. ஹெட்மாஸ்டருக்கு ஒன்றிரண்டு பியூன், அட்டன்டர் எல்லாம் கொடுத் திருக்கிறார்கள். ஆனால் லேபரட்டரிக்கு ஒரு அட்டன்டர் இல்லையென்று சொன்னால், அந்த ஆசிரியர் ஒரு வகுப்பிலே கற்பித்துவிட்டு அடுத்த வகுப்புக்கு வந்து எக்ஸ்பெரிமெனட் கருவிகளை எல்லாம், எடுத்து துடைத்து விட்டுக் காட்டுவதற்குப் பதிலாக கண்ணாடி அறைகளில் இருப்பதைத்தான் காட்டிவிட்டுப் போக முடியும். பிராக்டிகல் என்று சொல்லுகிறபொழுது நேரடியாகச் சொல்லுவது தனி ரகமாகத்தான் இருக்க முடியும். ஆகவே சிறந்த அறிவியல் கூடங்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஓர் அட்டன்டர் பதவி சாங்ஷன் செய்ய வேண்டும், நிதி உதவி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது போலவே பெரிய நூலகங்கள் இருக்கின்றன. சிறந்த அறிவியல் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் எப்படி ஒரு லேபரட்டரி அட்டன்டர் தேவையோ, அது போலவே 10 ஆயிரம் நூல்களுக்கு மேல் இருக்கக்கூடிய நூலகங்களுக்கெல்லாம் ஒரு லைப்ரரி கிளார்க் தேவை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அப்போதுதான் அவைகளையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, உயர்தர தொடக்கப் பள்ளிகளில் எல்லாம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான முயற்சியை அரசு மேலும் ஊக்கப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வேன். இப்பொழுது நமது மாநிலத்தில் இருக்கக்கூடிய பள்ளிக் கூடங்களை எடுத்துக்கொண்டால், 50 சதவிகிதம் பள்ளிகளுக்குத்தான் கட்டட வசதி இருக்கிறது. இது இந்த அறிக்கையிலே கூட சொல்லப்

பட்டிருக்கிறது. ஆகவே இந்தக் கட்டட வசதிகள் பல உயர்நிலைப் பள்ளிகளில் இல்லை. ஆரம்பப் பள்ளிகளிலும், அரசுப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் அப்படியேதான் இருக்கின்றது. மாவட்டக் கல்வி அதிகாரிகளுடைய அலுவலகங்களில்கூட, சில வாடகைக் கட்டடங்களில்தான் இயங்குகின்றன. மேலும் டெபுடி இன்ஸ்பெக்டர் அலுவலகங்கள் கூட வாடகைக் கட்டடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் மத்திய அரசை அணுகி இந்தக் கல்விக் கூடங்களுக்கான கட்டட வசதிகளுக்கு 5-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதிக நிதி ஒதுக்கீடு செய்து ஒரு Phased Programme-ஆக ஓர் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாகவே எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் உரிய கட்டட வசதிகளைச் சிறப்புற அமைத்துக் கொடுத்தால்தான், அங்கு கல்வி மாணவர்கள் கற்பதற்குரிய சூழ்நிலை உருவாகும். பள்ளிகளைப் பார்த்த உடனேயே மாணவர்களுக்கு ஒரு கம்பீர உணர்வும், கல்வி கற்க வேண்டுமென்ற உணர்வும் தோன்ற வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே வற்புறுத்திக் கொள்ள ஆசைப்படுகின்றேன். இப்பொழுது கட்டட வசதிக்காக 39 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை இனிமேல் பெருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டு கோள்.

நமது அரசுப் பள்ளிகளிலே 'ஏ' விங் என்றும் 'பி' விங் என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அதை ஒன்றாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இதே அவையிலே பேசுகிறபொழுது, நானும் இதே கருத்தை வலியுறுத்திச் சொன்னேன். நான் சொன்ன கருத்து இரண்டு பிரிவாக இருக்கக் கூடாது, "கம்பிளீட் இன்டகிரேஷன்" வேண்டுமென்பது. 'ஏ' விங், 'பி' விங் என்று இரண்டு பிரிவாக இருக்கக்கூடாது என்று எடுத்துச் சொன்னேன். முழு இணைப்பு வேண்டுமென்று சொன்னேன். மூன்று நான்கு ஆண்டு களுக்கு முன்னால் பலமுறை நான் இந்தக் கருத்தை வற்புறுத்தி னேன். ஆனால் அதை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி செய்தபோது 'பி' விங் ஆசிரியர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை என்பதை நாம் இந்தச் சந்தர்ப்பத்திலே மறந்து விடக் கூடாது. நான் அந்தப் பழைய கதையை புதிதாக இப்பொழுது சொல்லு வதற்காக தயவு செய்து மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய தமிழகத்தை எடுத்துக் கொண்டால், 'ஏ' விங் பள்ளிகள் மிக மிகக் குறைவு. அதிலே பணியாற்று கின்ற ஆசிரியர்களுடைய எண்ணிக்கையும் மிக மிகக் குறைவு. ஆகவே இந்த இரண்டையும், வேலையில் சேர்ந்த நாளைக் கணக்கிடாக வைத்து, ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற கருத்தை நானும் வலியுறுத்தி வந்தேன். அப்பொழுதிருந்த பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களைக் கொண்டு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் 'பி' விங் ஆசிரியர் களையும் 'ஏ' விங் ஆசிரியர்களையும் பலமுறை சந்தித்துப் பேச வைத்து

பல மகாநாடுகள் கூட்டி, பல கூட்டங்கள் வைத்து இவ்வளவு எல்லாம் பண்ணியும் அத்தனை 'பி' விங் ஆசிரியர்களும் 'எங்களுக்கு முழு இணைப்புத் தேவையில்லை, நாங்கள் தனியாக இருக்கவேண்டும்' என்று சொன்னார்கள். வேலை மாற்றம் வந்துவிடும் 'ஏ' விங் என்று சொன்னால் கன்னியாகுமரியிலே இருக்கவேண்டியவர் தர்மபுரியிலே வேலை பார்க்கிறார், கிருஷ்ணகிரியிலே வேலை பார்க்கிறார், இதே மாதிரி மாற்றங்கள் வந்துவிடும் என்று அவர்களுக்கு பயம் வந்துவிட்டது. ஆகவே அந்தச் சமயத்திலே அவர்கள் அந்தந்த மாவட்டங்களின் அளவிலேதான் சீனியாரிட்டி இருக்க வேண்டுமென்று வலியுறுத்தி, கையெழுத்திட்டு வேண்டிக் கொண்டதன் பேரில்தான் இப்பொழுது இருக்கிற இந்த முறை அமுல்படுத்தப்பட்டது. இந்த முறை அமுல் படுத்தப்பட்டு 1970 முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இப்பொழுது அவை நடைபெற்று 5 ஆண்டுகள் கழிந்துவிட்டன. இவ்வாறு அமுல் படுத்தப்பட்டதன் மூலம் என்னென்ன நடந்து விட்டது என்று சொன்னால் 'ஏ' விங் ஆசிரியர்களிலே....

(திரு. செ. முத்துசாமி குறுக்கீடு)

என்னுடைய நேரத்தை நான் உறுப்பினர் அவர்களுக்கு விட்டுத்தரத் தயாராக இல்லை. தலைவரவர்கள் கூடுதல் நேரம் எனக்கு ஒதுக்கினால், நான் என்னுடைய பேச்சின் இடையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு எழுந்தால் விட்டுத் தரத் தயாராயிருக்கிறேன். உறுப்பினர்கள் அவர்கள் அவர்களுடைய கருத்தை....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடுதல் நேரத்தை ஒதுக்க நான் தயாராக இல்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தையும் கிளாரிபிகேஷனையும் சொல்லிவிட்டார்கள். நான் இப்பொழுது என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலில் விளக்கம் சொல்லுவார்கள்.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் எப்போது சொல்லுவார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் சொல்ல வருவதெல்லாம் 'ஏ' விங் ஆசிரியர்களுக்கு, அவர்கள் 17 வருடங்கள், 18 வருடங்கள் பணியாற்றியதற்குப் பிறகு கூட, செலக்ஷன் கிரேட் பதவிகள் கொடுக்கப்படவில்லை. ஆனால் 'பி' விங் ஆசிரியர்களில் 7 வருஷம் பணியாற்றியவர்களுக்குக்கூட செலக்ஷன் கிரேட் கொடுக்கப் பட்டது. நேற்றைக்குக்கூட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 10 வருஷத்துக்குக் குறை வாக சர்வீஸ் உள்ள 'பி' விங் ஆசிரியர்களில் செலக்ஷன் கிரேட் பெற்றவர்கள் திருச்சி மாவட்டத்தில் மட்டும் 34 பேர் உள்ளதாகக் குறிப்பிட்டார்கள். மேலும் அவ்வாறு 10 வருடத்துக்குக் குறைவாக சர்வீஸ் இருந்து செலக்ஷன் கிரேட் பெற்றிருப்பவர்களுக்கு இன்கிரிமென்டை நிறுத்தி வைத்து 10 வருட சர்வீசுக்குப் பிறகு தான் இன்கிரிமென்ட் வழங்கப்படுமென்ற ஒரு கருத்தையும் நேற்றையதினம் மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே 'பி' விங் என்ற ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தியதன் மூலம் 'பி' விங் ஆசிரியர்கள் 7 ஆண்டுகளில், 8 ஆண்டுகளில் செலக்ஷன் கிரேடைப் பெற்றுவிட்டு அதேமாதிரி 10 ஆண்டுகளுக்குள் கெஜட்ட் தலைமை ஆசிரியர் பதவி பெறும் நிலை இருக்கும்போது, கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரியும் 'ஏ' விங் ஆசிரியர்கள் 17 ஆண்டுகள், 18 ஆண்டுகளுக்குப் பிறகுதான் தலைமை ஆசிரியர் பதவியைப் பெறுகிறார்கள். அதே போல் தமிழகத்தின் பிற மாவட்டங்களில் பணிபுரியும் 'ஏ' விங் ஆசிரியர்களுக்கும் இதே மாதிரி நிலைமைதான் இருக்கிறது. அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்திலிருக்கக்கூடிய 'ஏ' விங் ஆசிரியர்கள் 15 வருடங்களுக்குப் பிறகு தான் செலக்ஷன் கிரேட் பெறுகிறார்கள். மற்ற எல்லா மாவட்டங்களிலும் அப்படித்தான். ஆகவே இப்படிப்பட்ட ஒரு வேறு பாடு இந்த 'பி' விங் ஆசிரியர்களில் பெரும்பான்மையோரின் வேண்டு கோளின்படி செய்யப்பட்டது. இதன் காரணமாக 'ஏ' விங் ஆசிரியர் களுக்கு பலவிதமான தீங்கு விளைந்தபிறகுதான், அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு ஏதோ அதற்கு ஒரு முடிவு வைத்து விட்டார்கள். அரசு எடுத்துக்கொண்ட முடிவு 1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்கள் அத்தனை பேருமே 'ஏ' விங்காகக் கருதப்படுவார்கள் என்பதுதான். 1970-க்கு முன்னால் நியமிக்கப்பட்டவர்கள் 'பி' விங்கில் இருந்தவர்கள் செலக்ஷன் கிரேட், கெஜட்ட் பதவி எல்லாம் 7 ஆண்டுகளில், 8 ஆண்டு களில் டிஸ்டிரிக்ட் கேடரிலே பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது 30 சதவிகிதம் கல்வி அதிகாரிகள் பதவியையும் அவர்களுக்குக் கொடுக் கிறோம். எனவே அதை இப்பொழுது மாற்றுவதனால் அந்தப் பதவிகள் எல்லாம் மீண்டும் ஒன்றுபடுத்தப்பட்டு, வாங்கியவர்களுக்கு அதே பதவி என்ற நிலையை மாற்றி, 1970-ல் இருந்த நிலையில் 'கம்ப்ளீட் இன்டகிரேஷன்' கொடுத்து, செலக்ஷன் கிரேடுக்குப் போனவர்களைக் கீழே கொண்டு வந்து, அதை விட்டு 'ஏ' விங்கிலே இருக்கக்கூடிய சீனியர்களுக்கு செலக்ஷன் கிரேட் கொடுத்து, கெஜட்ட் பதவியில் இருக்கக்கூடியவர்களை எல்லாம் நீக்கி அதற்கு முந்தியவர்களுக்கு அந்தப் பதவியை கொடுப்பதனால், அது ஒத்துக்கொள்ளப்படும். இல்லாவிட்டால் அது பெரிய பூதத்தைக் கிளப்பி விடும் என்பது என்னுடைய அச்சம். இது என்னுடைய கருத்து. இது சரியாக இருக்கலாம். இல்லை, தவறாக இருக்கலாம். நம்முடைய அரசைச் சார்ந்தவர்கள் இதை நன்றாக ஆராய்ந்து வழி வகை செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது கல்வி இலாகாவினுடைய அதிகாரத்தைப் பரவலாக்கியிருக்கிறார்கள். முதன்மைக் கல்வி அதிகாரிக்கு இப்பொழுது ஏறக்குறைய முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய கல்வி இலாகாவுக்கு உள்ளாக ஏற்படும் எல்லாவிதமான பதவி உயர்வுகள், மாற்றங்கள், ஆசிரியர்கள் சம்பந்தமாகவோ அல்லது பள்ளி சம்பந்தமாகவோ உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அங்கேயே

முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களாலேயே ஒரு முடிவு எடுப்பதற்குரிய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு தலைவரவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நான் இன்னும் நிறைய விஷயங்கள் சொல்லவேண்டும். நேரமில்லாததால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்பொழுது சொன்னதெல்லாம் போதும். சொல்ல நேரமில்லையென்றால் அடுத்த வருஷம் சொல்லுங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது கல்வித் துறையினுடைய அதிகாரம் பரவலாக்கப்பட்ட பிறகு, அதன் நிர்வாகம் மிகச் சீராக அமைந்து வருகிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். அடுத்தபடி நம்முடைய கல்வி விதிகளையும் கல்வித் துறை சுற்றறிக்கைகளையும் ஒழுங்கு படுத்தி, காலத்துக்கேற்ப அதை வெளியிட வேண்டுமென்று நான் கேட்டு கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லுவதற்கு மாண்புமிகு தலைவரவர்கள் என்னை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் 1946ஆம் ஆண்டிலே கட்டாயக்கல்வியை ஏற்படுத்தினார்கள். அப்பொழுது இருந்த தனியார் பள்ளிகள் எல்லாம் அரசால் எடுக்கப்பட்டு அரசுப் பள்ளிகளாக்கப்பட்டன. அவ்வாறு அரசுப் பள்ளிகளாக எடுக்கப்பட்டதன் காரணமாக அவர்களை "சரண்டர் ஸ்கூல் டீச்சர்ஸ்" என்று சொன்னார்கள். திருவாங்கூர்-கொச்சியிலுள்ள சட்டப்படி அவர்கள் 55 ஆண்டுகள் தான் அரசிலே பணியாற்றலாம். அவர்கள் 55 வயதுவரை வேலை பார்த்து விட்டு அதற்குப் பிறகு இன்கிரிமெண்ட் ஒன்றும் இல்லாமல் இருந்து, 60 வயதில் ஓய்வு பெற்றும் அவர்கள் எந்தவிதமான ஓய்வூதியம் பெறாமல் இருக்கிறார்கள். இப்பொழுது தனியார் பள்ளிகளிலே பணியாற்றி ஓய்வுபெற்றால் ஓய்வூதியம் உண்டு. அரசுப் பள்ளிகளிலே பணியாற்றி ஓய்வுபெற்றால், அவர்களுக்கு ஓய்வூதியம் உண்டு. ஆனால் 1505, 24—9—1968- நாளிட்ட ஓவூதிய ஆணையிலே 1955ஆம் ஆண்டிலே ஓய்வு பெற்றாலும் கூட அவர்களுக்கும் ஓய்வூதியம் கொடுக்கும்படி விதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி விதி செய்திருப்பதிலே இரண்டு மூன்று category ஆகப் பிரித்திருக்கிறார்கள். "Those who retired from schools in the transferred area" என்று கூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த சரண்டர் ஸ்கூல் டீச்சர்ஸுக்கு, 1946-ஆம் ஆண்டிலே கட்டாயக் கல்வி வந்ததன் காரணமாக, சர். சி. பி. ராமசாமி ஐயர் கட்டாயப்படுத்தி தனியார் பள்ளிகளை எல்லாம் எடுத்தபோது, அதிலே வேலை பார்த்து ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. அதற்குச் சொல்கிற காரணம் அரசுப் பள்ளிகளிலே 20 ஆண்டுகள் அவர்கள் வேலை செய்யவில்லை என்ற ஒன்றுதான். ஆனால் தனியார் பள்ளிகளிலே

வேலை செய்பவர்களுக்கு இப்பொழுது ஓய்வூதியம் கொடுக்கிறோம். தனியார் பள்ளிகளிலேயிருந்து ஓய்வு பெற்றாலும், அவர்களுக்கும் ஓய்வூதியம் இப்பொழுது கொடுக்கிறார்கள். ஆகவே அதையும் அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தலைவரவர்களே, கல்லூரிக் கல்வி பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பலவிதமான கருத்துக்களைச் சொன்னார்கள். 'இண்டிசிப்ளின்' இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு ஒரே ஒரு வழி, யூனியனை ஒழிப்பதுதான் என்றெல்லாம் சொன்னார்கள், ஆனால் அதற்கு அதுவல்ல வழி. 1,500 மாணவர்களுக்கு மேல் ஒரு கல்லூரியில் இருக்கக்கூடாது என்ற ஒரு விதியைக் கொண்டு வர வேண்டும். அதை ஒருவேளை பல்கலைக் கழகங்கள்தான் செய்ய வேண்டியிருப்பினும் கூட, மாநிலத்திலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களையும் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அழைத்து ஒரு மாநாடு கூட்டி அதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டும். எந்தக் கல்லூரியிலே மாணவர்கள் ஸ்டிரைக் செய்கிறார்களோ, எந்தக் கல்லூரியிலே மாணவர்கள் 'இண்டிசிப்ளிண்ட்' ஆக இருக்கிறார்களோ அந்தக் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய ஸ்டிரெங்தை வருஷத்திற்கு வருஷம் குறைக்க வேண்டும். 1,500 மாணவர்களுக்கு அதிகப்படாமல் ஒரு கல்லூரியிலே 'ஸ்டிரெங்த்' இருந்தால்தான் அக்கல்லூரியிலுள்ள மாணவர்கள் யார் யார் என்பது தெரியும். அது கூட, இப்பொழுது இருக்கும் நிலைமையில், தெரியாத அளவுக்கு சில கல்லூரிகள் இருப்பது தான் இந்தமாதிரியான 'இண்டிசிப்ளின்' வருவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்ல ஆசைப்படுகின்றேன்.

(பிற்பகல் 5–40).

தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் வரவிருக்கிறது. அது ஒரு சிறந்த வாய்ப்பு என்று நமது பெரியவர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள் காலதாமதம் இல்லாமல் அதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் இதை வரவேற்றுப் பேசியிருப்பதால், ஒப்புதல் வந்து விட்டதாகவே நான் நினைக்கிறேன். நண்பர்கள் திரு. அறிவழகன், திரு. தாமோதரன் போன்றவர்கள் வரவேற்றுப் பேசினார்கள். தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அதில் இருக்கிறார்கள்; துணைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். பல்கலைக் கழகமே இங்கே இருப்பது போல் இருக்கிறது. எல்லோரும் இருக்கிறதினாலே அதை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய பல்கலைக்கழகங்கள் என்று வரும்போது, முதலில் திருச்சியில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதலில் அங்கே ஆரம்பித்து, பிறகு கோயம்புத்தூருக்குக் கொடுத்து, அடுத்து 5-வது பல்கலைக் கழகம் என்று வரும்போது அதை திருநெல்வேலிக்குக் கொடுக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் 79, 80 கல்லூரிகள் இருக்கின்றன. 40 கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக் கழகம் என்ற முறையில் திருநெல்வேலி பல்கலைக்கழகத்தை 3-வது பல்கலைக் கழகமாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு ஒரு கருத்தைச் சொன்ன காரணத்தினால், அதைத் தெளிவுபடுத்தலாம் என்று ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அவர்கள் ஏ-பிரிவு, பி-பிரிவு இணைப்பைப்பற்றிச் சொல்லும்போது, பி-பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களை இணைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதால், அவ்வாறு செய்யப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு கல்வி அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏ-பிரிவில் இருப்பவர்களோடு பி-பிரிவில் இருக்கிறவர்கள் வந்தால், 'ஜூனியர் மோஸ்ட்' ஆகக் கடைசியில்தான் வைக்க வேண்டும், இல்லாவிட்டால் இணைக்கக் கூடாது என்று சொன்னதால்தான், அது எடுபடவில்லை. நியமனம் செய்யப்பட்ட தேதியில் இருந்தே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பி–விங்கில் இருக்கிற அத்தனை பேரும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேண்டாம் என்று சொல்லவில்லை. இதிலே தீர்வு காண முடியாததால்தான் செய்யப்படவில்லை என்பதை நான் திட்டவட்டமாக அறிகிறேன். அதைப் பொறுத்தவரையில், பி–விங்கில் இருப்பவர்கள் ஒன்றாக இணைவதற்கு எதிராக எந்தவிதமான கருத்தும் சொன்னதில்லை என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அதைப்பற்றி கல்வி அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபோது தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். சக்தி மோகன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின் முன் தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள நீண்ட நெடும் அறிக்கையை, அதில் குறிப்பிட்டிருக்கின்ற கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை, மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நேற்றிலிருந்து இந்த மாமன்றத்தில் கல்வித் துறையின் வளர்ச்சி பற்றி அதிலே அனுபவப்பட்ட பெரியவர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்; என்றாலும், நானும் சுருக்கமாக ஒரு சில கருத்துக்களை மட்டும் கூறி அமையலாம் என்று இருக்கிறேன்.

கல்வி மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியில் ஏறத்தாழ 88 சதவிகிதம் ஆசிரியர்களுக்குச் சம்பளமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு மாணவர்களிடத்திலே கல்வித்தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், செலவிடப்பட்டிருக்கின்ற அளவில் ஒரு பகுதிகூட, கல்வியின் தரம் உயரவில்லை என்பதை வருத்தத்துடன் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு, வேறு பல வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மனவேறுபாடு இருக்க முடியாது.

ஆசிரியர்கள் என்பவர்கள் இறைவனுக்குச் சமமானவர்கள். ஆனால், தற்போது ஆசிரியர்களில் பலர் கடமை உணர்வோடு செயல்படுகிறார்களா என்ற கேள்வியை எழுப்பிக் கேட்டால், எல்லோரும் அல்ல, நண்பர்கள் குறிப்பிட்டது மாதிரி சிலர் கடமையுணர்வோடு மாணவர்களுக்குப் போதிக்க வேண்டும் என்ற நிலையில் இல்லை. கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற அக்கறை, கடமையுணர்வு குறைவாக இருக்கும்போது, கோரிக்கைகளை அதிகமாக வைப்பதில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

குறிப்பாக ஆசிரியர் உத்தியோகம் என்றால், இன்றைக்கு ஒரு இலகுவான உத்தியோகமாக இருக்கிறது. பண்டைய காலங்களில் ஆசிரியர் வேலைக்கு ஆள் கிடைப்பது மிகக் கடினம். ஆசிரியர் வேலை என்றால், யாரும் விரும்பி வரமாட்டார்கள். ஆனால் இன்றைக்கு ஆசிரியர் வேலை பார்ப்பதற்கு ஏராளமான பேர் மனு போடுகிறார்கள். அதில்தான் குறைந்த பட்ச உழைப்பு, கூடிய பட்ச ஊதியம் கிடைக்கிறது. கல்வி வளர்ச்சிக்கு ஏராளமான பணம் ஒதுக்கப்படுகிறது. அதைப் பயன்படுத்தி கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற மனப்பான்மை ஆசிரியர்களிடம் இருந்தால், நமது நாட்டு மாணவர்களின் கல்வித்தரம் இவ்வளவு கீழ்மட்டத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அதோடு இன்றைக்கு இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால், பரீட்சை என்று ஒன்று வைக்க வேண்டுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. ஒரு இன்ஸ்டிடியூஷனுக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும் என்ற அளவில், தேர்ச்சி பெறும் மாணவர்கள் அதிகமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பரீட்சை நடந்து கொண்டிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. பரீட்சை சமயத்தில் ஆசிரியர்களே மாணவர்களிடம் சென்று, எங்கே எங்கே ஐயப்பாடு இருக்கிறது என்று கேட்டு, அதைச் சொல்லிக் கொடுப்பதன் மூலம், அந்த மாணவர்களைப் பாஸ் செய்ய வைக்கிறார்கள். 500 மார்க்குகள் வாங்க வேண்டிய இடத்தில் 50 மார்க்குகள் வாங்கினால்கூட 'பாஸ்' என்று போட்டு விடுகிறார்கள். மேல் நாடுகள் பலவற்றில் பள்ளிக்கூடத்தில் பரீட்சை என்று ஒன்று இடையாது. ஒவ்வொரு வகுப்பிலும் திறமைமிக்க மாணவர்களை மேல் வகுப்பிற்கு அனுப்பிவிட்டு திறமைக் குறைவாக உள்ள மாணவர்களை அந்த வகுப்பு ஆசிரியர்களே, படித்த வகுப்பிலேயே மறுபடியும் படிக்கச் செய்கிறார்கள். பரீட்சை வைப்பதில்லை. நமது நாட்டில் பரீட்சை முறையின் மூலம் திறமைமிக்க மாணவர்கள்கூட பரீட்சை சமயத்தில், ஞாபக சக்தி குறைவாகி பெயிலாகி விடுகிறார்கள். இதற்காக பெயிலாகிவிட்ட அவர்கள் திறமையற்றவர்கள் என்றோ, பாஸ் செய்தவர்கள் கெட்டிக்காரர்கள் என்றோ அர்த்தமில்லை. இதற்கு ஒரு மாற்று ஏற்பாடாக எஸ்.எஸ்.எல்.சி. அல்லது 10-வது ஸ்டாண்டர்டு வரை பரீட்சையின்றி மாணவர்களின் தரம், திறன் ஆகியவைகளை வைத்து 'பாஸ்' போடுவது என்பது நல்ல முறை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பள்ளி மாணவர்களுக்குப் பெரிய குழப்பம் உண்டாக்குவது இந்த 'நோட்ஸ்'. தற்போது இந்த நோட்ஸ் பெருகி விட்டன, படித்த பாடத்தில் இருந்துதான் கேள்வி வருகிறது. ஆனால்,

மாணவர்களுக்கு இன்ன இன்ன கேள்விகள்தான் வரும். இவைகளை மட்டும் படித்தால் போதும் என்று சொல்லுகிறார்கள் அதன் காரணமாக நோட்ஸ் அடித்து ஏராளமான அளவில் விற்பனையாகிறது. இந்த நோட்ஸைப் படிக்கிறவர்களுக்கு அதிலே உள்ள கேள்விகளைக் கேட்டால்தான் பதில் எழுத முடிகின்ற நிலையிலிருக்கிறது. அதில் இல்லாத கேள்விகள் பரீட்சையில் கேட்கப்படும்போது, அவற்றை எப்படி எழுதுவது என்று மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த நோட்ஸ் வெளியிடுவதை நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஓர் 'அளவுக்கு'க் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த மாணவர்கள் கல்லூரிக்குச் செல்வதற்கு 'எலிஜிபிள்' என்று அரசாங்கம் சான்று வழங்கி அனுப்புகிறார்கள். அங்கே கல்லூரிக்குப் போனால், மார்க் 400, 450 இருந்தால்தான் சேர்த்துக் கொள்ளப்படும் என்று சொல்லி பாஸ் மார்க் வாங்கி பாஸ் செய்த மாணவர்களுக்கு இடம் கொடுக்க மறுக்கப்படுகிறது........

(பிற்பகல் 5-50)

அந்த நிலை இல்லாமல், எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்தவர்கள் எல்லோரும் கல்லூரிக்கு 'எலிஜிபிள்' என்று போட்டு, அவ்வளவு மாணவர்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அல்லது எஸ். எஸ். எல். சி. மார்க்கை இப்போதுள்ள 220 என்பதை 400 என்று உயர்த்திவிட்டு, கல்லூரிகளில் சேர வேண்டும் என்று யார் யார் முதன்முதலாக வருகின்றார்களோ அந்த வரிசையில் இடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் கல்லூரிகளிலே என்ன நடக்கின்றது என்றால், ஒரு கல்லூரியில் 400 மாணவர்களுக்குத்தான் இடம் இருக்கின்றது என்றால், 4000 அல்லது 5000 அப்ளிகேஷன்களைக் கொடுக்கின்றார்கள். ஆனால் இறுதியாக இடமுள்ளவரைதான் மாணவர்களை எடுத்துக் கொள்ளுகின்றார்கள். இடம் கிடைக்காத மாணவர்கள் கட்டிய பணத்தையும் திருப்பித் தருவது இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு மதுரையின் சார்பிலே ஒரு வேண்டுகோள். இன்று ஆண்களை விட பெண்கள்தான் கல்லூரிப் படிப்பில் அதிக ஆர்வத்தினைக் காண்பிக்கின்றார்கள். மதுரையில் உள்ள பெண்கள் கல்லூரியில், அதன் முதல்வர் கல்வி ஆண்டின் துவக்கத்தில் அட்மிஷனுக்காக ஏற்படும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல், கண்ணீரே விட்டு விடுகின்றார். அந்த அளவிற்கு அதில் சேர வேண்டுமென்று பெண்கள் வருகின்றார்கள். சிபாரிசும் வருகின்றது. அவரால் ஒன்றும் செய்யமுடியாத நிலை. இப்போது மதுரை மீனாக்ஷி அம்மை பெயரால் மற்றொரு கல்லூரியினை தேவஸ்தானத்தில் துவக்கப்போவதாக அறியப்படுகின்றது. இதை உடனடியாகச் செய்து, அவசியமானால் மேலும் இரண்டு பெண்கள் கல்லூரிகளை, மதுரையில் இந்தக் கல்வியாண்டிலேயே நிறுவவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு எஸ். எஸ். எல். சி. கேள்வித்தாளில் மறவர் சமுதாயம் பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. அதிலே ஒரு கேள்வி— கேள்வி எண் 3-ல் cruel and heartless Maravars என்று குறிப்பிட்டு, அதைச் சுருக்கி எழுதச் சொல்லியிருக்கின்றார்கள். அது இன்றைக்குத் தேவைதானா? மறவர் என்று சொன்னால் தமிழர்கள் என்றுதான் பொருள். பாண்டிய மன்னர்கள் மட்டுமல்ல, மூவேந்தர்களே மறவர்கள்தான். மறவர்களுடைய குணாதிசயங்கள், பழக்க வழக்கங்கள், இலக்கிய காலத்திலே எப்படியோ நமக்குத் தெரியாது. எப்படி இருந்தாலும் இன்றைக்கு அந்த இனம் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்கள் heartless—இதயம் இல்லாதவர்கள் என்று எஸ். எஸ். எல். சி. வகுப்பு மாணவர்களுக்கு, கேள்விக்குப் பதில் எழுதச் சொன்னால், அது வருந்தத்தக்கதாக இருக்கிறது. மறவர்கள் என்று சொல்லும் நேரத்திலே, சரித்திராதிக்கம் பெற்ற மாவீரர்கள், தமிழ்ச் சங்கம் கண்டவர்கள் தேசத்திற்காகப் பாடுபட்டவர்கள், சிறப்புமிக்க மேதைகள் நாட்டிற்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள் எல்லாம் இருந்திருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் விவரிக்க வைத்து அக் குலத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடாதா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்தக் கருத்து, முன்பே என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஏற்கெனவே புத்தகங்களில், சங்ககால இலக்கியங்களில், இப்போதுள்ள மறவர்கள் என்று சொல்லப்படுகின்ற தேவர்களை இழித்தோ, பழித்தோ பேச வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதப்பட்டதில்லை. சங்க இலக்கியங்களில் புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு போன்ற பாடல்களிலே பாலைநில மக்களைப்பற்றிச் சொல்லும்போது, மறவர்—மறத்தியர் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் பாலைநில மக்களைப்பற்றிச் சொல்லும்போது, அந்த நூலை எழுதியவர்கள் மறவர்—மறத்தியர் என்றுதான் பாடியிருக்கின்றார்கள். இது பற்றி மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் அவரிடமும் கூறினேன். இப்போது இருக்கின்ற தேவர் குலத்தைச் சேர்ந்த மறவர்களைக் குறிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அது சொல்லப்பட்டதில்லை. ஆனால் சங்க இலக்கியங்களிலே இருப்பதையொட்டி இப்போது அதே வார்த்தைகளை உபயோகித்தால், ஐயப்பாட்டிற்கு இடம் தந்துவிடும் என்று சொல்லி, பாட நூல்களிலே எங்கெங்கெல்லாம் 'மறவர், மறத்தியர்' என்று வருகின்றனவோ அங்கெல்லாம், 'எயினர், எயித்தியர்' என்று மாற்றி எழுதவேண்டும் என்று சொல்லி, அதன்படி அந்தப் புத்தகம் புதிதாக மீண்டும் அச்சியற்றும் போது அது மாற்றப்பட வேண்டும் என்று சொல்லி மாற்றப்பட்டு விட்டது. ஆனாலும் கேள்வித்தாளில் இப்படிப் போட்டு விட்டார்கள். இனி அப்படிப்பட்ட தவறு நடைபெறாதவாறு, எங்கெங்கே மறவர், மறத்தியர் என்று வருகின்றனவோ—சங்க இலக்கியப்படி அது தவறு இல்லை என்றாலும் கூட, என்னதான் பனை மரத்தின் கீழ் நின்று பாலைக் குடித்தாலும், வேறு ஒன்றைக் குடிக்கதாக

தான் கருதுவார்கள் என்ற எண்ணத்தில்—அந்தப் பெயர் இருக்க வேண்டாம் என்று சொல்லி, எயினர், எயித்தியர் என்று போட்டு விடலாம் என்று இப்போது உத்தரவு போட்டிருக்கிறோம். இந்தக் கேள்வித்தாள் வந்துவிட்ட பிறகு ஒன்றும் செய்ய முடியாது என்ற காரணத்தினால், **இனி** அப்படி நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். **இதை எந்தப் புத்தகத்**திலிருந்து எடுத்துப் போட்டார்கள் என்று தெரியவில்லை. ஆகவே இனி கண்காணிப்பாக இருந்து, இப்படிப்பட்ட சொல்லுக்கு இடம் தரமாட்டோம் என்று உறுதி அளிக்கிறேன். எனவே இதுபற்றிச் சஞ்சலப்பட வேண்டாம். இதை மாற்றுவதற்காக உத்தரவிடப்பட்டிருக்கின்றது என்று கூறிக் கொள்ளுகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, சங்க இலக்கிய காலத்தில் மறவர் மறத்தியர் என்று சொல்லப்பட்டவர்களுக்கும் இந்தக் காலத்தில் இருக்கும் மறவர்களுக்கும் வேறுபாடுகள் பல இருக்கின்றன. அவர்கள் இந்த மறவர்கள் இல்லை என்று சொல்லுகின்றார்களே, அது உண்மைதானா?

திரு. ஆர். சக்தி மோகன்: அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு, அந்தக் குறிப்பினை எடுத்துவிடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பைப் பாராட்டவும் செய்கிறேன். ஆகவே இதைப்பற்றி அதிகமாகப் பேசுவதை விடுத்து, இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நூலக ஊழியர்கள் நீண்டகாலமாக பல கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அதிலே முக்கியமாக அவர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். அது நிறைவு பெறாமல் இருந்து வருகிறது. திரும்பத் திரும்ப அவர்கள் இந்தக் கோரிக்கையினை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் கால தாமதத்திற்கு உள்ளாக்காமல் உடனடியாக அரசு ஊழியர்களாக அவர்கள் மாற்றப்பட்டுவிட்டால்..........

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, நண்பர் திரு. சக்தி மோகன் பேசும்போது, 'மறவர், மறத்தி' என்ற வார்த்தைகளைப் போட்டதற்காக ஆட்சேபிக்கவில்லை. அது மறுக்க முடியாத ஒன்று. எனவே அதை ஆட்சேபிக்கவில்லை. 'ஹார்ட்லெஸ் மறவர்ஸ்' என்று போடப்பட்டிருக்கின்றதே, அதைத்தான் அவர் ஆட்சேபிக்கின்றார். மறவர் என்று போட்டிருப்பதை அவர் ஆட்சேபிக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சங்க இலக்கியங்களிலே 'பாலை நில மக்கள் முன் கோபம் கொண்டவர்கள். கொள்ளை அடிப்பவர்கள்' என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றது 'அப்படிப்பட்டவர்கள் மறவர்கள்' என்று அதிலே இருக்கின்றது. அதில் இருப்பதை அப்படியே போட்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த விளக்கங்களையெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் எடுத்து வைத்துக்கொண்டிருக்க

முடியாது. ஆகவே இது மாற்றப்படவேண்டும். ஏனென்றால் மறவர்கள் என்றால் இப்போதுள்ள மறவர்கள்தான் நினைவிற்கு வரும், ஆகவே அந்தப் பெயர் வேண்டாம், அதற்குப் பதிலாக எயினர். எயித்தியர் என்று போட்டுவிடலாம் என்று சொல்லியிருக்கிறோம். சங்க இலக்கியத்தில் உள்ளதை இப்போது ஒவ்வொரு இடத்திலும் விளக்கம் சொல்லிக் கொண்டு போக வேண்டாம், அந்தச் சொல்லையே எடுத்துவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மாற்றி இரண்டு மாதங்கள் ஆகின்றன. ஆனால் இந்தக் கேள்வித்தாள் 'செட் பண்ணி' ஆறுமாதங்கள் ஆகின்றன. ஆகவேதான் இது கேள்வித்தாளில் வந்துவிட்டது. இனி வராது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திரு. ஆர். சக்தி மோகன்: தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர்கள் எடுத்துச்சொல்வதைப்போல, மறவன் மறத்தி என்ற சொல்லை சரித்திரத்திலிருந்து எடுத்து விடமுடியாது. மறவன் என்றால் தமிழ் நாட்டிலே முன்தோன்றிய மூத்த குடிமகன் என்று சொல்லுவார்கள். ஆனால் இந்தக் கேள்வித்தாளில் வந்ததையொட்டித்தான் இப்படிப்பட்ட சில ஐயப்பாடுகள் வருகின்றன. நிறையப்பேர் பேச இருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வித் தாள்தான் ஆறு மாதங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்டது என்று சொன்னார்களே?

திரு. ஆர். சக்தி மோகன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் புறநானூற்றுப் பாடல்கள் பற்றிச் சொன்னார்கள். மறக்குல மன்னர்களின் வீரமும் தீரமும் மிக்க போர்ச் சரிதம்தான் புறநானூறே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதிலே மறவர்களைப்பற்றி அப்படிச் சொல்லியிருந்தாலும், அவர்கள் பற்றிப் பாராட்டுதல்களும் அதிலே இருக்கின்றன. கரிகால் சோழன் பற்றிக் குறிப்பிடும்போது, மறவன் என்ற சொல்லைப் பெருமைக்குரியதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இருந்தாலும் பாடப்புத்தகங்களில் வரும்போது, ஐயப்பாடு எழக்கூடும் என்று கருதி எயினர், எயித்தியர் என்று போட்டுவிடலாம் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. ஆர். சக்தி மோகன்: தலைவரவர்களே, மறவன், மறத்தி என்று குறிப்பிடாமலே விட்டுவிட்டால், தொன்மை கொண்ட அம்மக்களின் குலக்குறிப்பே அடியோடு எடுபட்டுப்போய்விடும். அப்படி ஒரு நிலையை ஏற்படுத்திவிட வேண்டாம். கட்டாயம் அது இருந்தாகவேண்டும். ஆனால் அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'இரக்கம் அற்றவர்கள்' என்ற சொல்தான் நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: உறுப்பினர் சொல்லுவது, மறவன்—மறத்தியர் என்ற பிரச்சினை பற்றி அல்ல. 'இரக்கம் அற்றவர்கள்' என்ற பெயரை எடுத்துவிடுங்கள் என்றுதான் சொல்லுகின்றார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சங்க இலக்கியங்களிலே போடப்பட்டுள்ள வார்த்தைகளைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும்? ஆகவே இப்போது அந்தப் பொருள்பட்ட தக்க அளவிற்கு அந்தச் சொற்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம்.

திரு. ஆர். சக்தி மோகன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி கூறி, நூலக ஊழியர்களை அரசு ஊழியர்களாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று மீண்டும் வேண்டி அமருகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 6-00)

* THIRU A. R. DAMODARAN: Sir, before I offer my remarks on the Policy Note that has been placed before this House, may I point out one clarification which I would like future Performance Budgets of the Education Department to contain, because I was trying to search for information particularly under University Education pertaining to the amount of money that was being spent for fee compensation for Pre-University Class as well as under scholarship concession and stipends, and I am afraid that in the object-wise classification of the financial requirements for Collegiate Education this information is not properly given, at least according to my opinion. In item 6 "Welfare Measures for students", it has been noted that Rs. 141 lakhs is being spent and obviously this includes scholarships, stipends, etc., and the element of fee compensation that is paid for students studying in the Pre-University Class is obviously contained in item 5 'Grants-in-aid to Private Colleges'. Sir, in an object-wise classification, Members of this House would be interested in knowing these detail in considering the outlay on education. What is the amount spent on investment in buildings? What is the amount spent by way of amenities to students? Considering the fact that the total budget of Unviresity Education is only Rs. 11.4 crores, out of a total outlay of Rs. 118 to Rs. 119 crores, Members of the House have to judge the outlay on these scholarships, stipends and fee concessions in the Budget and they would like to know the exact amount that is set apart in the Budget every year for this purpose. I shall refer to this at a later stage when I come to the question of University Education. But these performance Budgets have been framed only during the last two or three years on the recommendations of the Central Ministries and I would like that in the classification perhaps greater details or sub-divisions may be shown, because even under

Grants-in-Aid to Private Colleges, teachers' salaries, etc. have been included and although they have been shown separately, one does not get an exact idea of the details.

Sir, I would first like to thank the Hon. the Minister for Education, because since we met last about 3 or 4 months ago, in response to a non-official resolution, the Hon. the Minister for Education was requested to expedite the Government's decision on the question of reforms in University Education. Member after Member has spoken about this today and I am glad that the Minister has responded and appointed a Committee within a week which is now considering the question of what should be the pattern of education in our schools as well as in the Universities or Colleges as such. I would, however, without participating any of the recommendations of this Committee, the expert body consisting of Vice-Chancellors, Officials of the Education Department and some non-officials, say that I have a feeling that if this committee takes up the work of receiving too much of oral evidence, the recommendations of this Committee are likely to be delayed considerably and any decision that has to be taken in this academic year may not be possible, as it may take months before such evidence is recorded. While I certainly realise that in a democrcy we must permit the people to furnish their evidence, I would suggest that such calling for evidence should be restricted to representative associations and organisations and should not be extended to individuals, because this may also be an attempt chosen to defeat the very purpose for which the committee has been formed. This is for the information of the Hon. Minister and I am sure that he would set a time-limit. All the pros and cons of reforms in University and school education have been discussed countless number of times in both Houses of the legislature. Debates have gone on for a number of years; various views, opinions and representations have been given in the past. Therefore, I am sure that excepting for a few things which may require fresh evidence, it is neither necessary nor desirable to see that this Committee loads itself with too much of such work, as the whole recommendations may be delayed. My first suggestion, therefore, would be to set a time-limit for the recommendations of this Committee, so that when we meet next in August, we will have the pleasure and privilege of discussing the reforms which the Hon. Minister has in his mind.

Sir, in view of the limited time at my disposal, I hope you will permit me if I start from the reverse—University Education —and come down to School Education because there are one or two points which I would like to mention. One of those points is the question of starting more Universities in Tamil Nadu to which my distinguished colleague and Friend Thiru G. R. Damodaran referred. This is unobjectionable because I believe there are States in India which have more than 15 or 20 Universities and, therefore, Tamil Nadu has always been a little conservative in its attitude towards starting more Universities. But there is one aspect of this which I would like to bring to the attention of the Hon. Minister. We must be very clear in our mind whether we are thinking of area—wise Universities. The argument has been used that the Madras University has 120 or 130 Colleges affiliated to it—I do not know the exact number and possibly it may be 10 this way or that way. In view of the geographical size of the University, it was felt that there should be Universities in Tiruchirappalli, Coimbatore and other places. The other suggestion has also been made that there should be a different type of University, a Technical University which affiliates technical institutions in Tamil Nadu. Now, are we going to have both types of Universities ? In other words, are we going to have Technological Universities in Madras, as well as a Madras University of Arts and Science, and are we going to have similar Technological Universities in Madurai, Coimbatore, etc. which would imply that we would not only be having areawise Universities at Coimbatore and Tiruchirappalli but we would be knocking away many of the technological and technical institutions from the existing Universities resulting, in my opinion, in a complete denudation of the prestige and status of the existing Universities. I am not an authority on the formation of Universities but I would like this aspect to be considered, because the University of Madras has an international reputation and students from this University have been recognised as the students of the Madras University with its hoary reputation and past. While creating a number of Universities may give us a lot of emotional satisfaction and satisfy the Parkinsonian principle of work expanding to fill in leisure and posts being created at the same time. Sir, the sole and only criterion which should be the basis for the formation of Universities is whether this will lead to a better integration of activity that is contemplated

in the University and whether this will result in higher technological and qualitative standards being established in the University? If the Hon. Minister can satisfy himself on these two objective criteria, then none of us can have any objection to the formation of any number of Universities in our State.

Sir, the third point is about education in foreign countries. Of course, I am not mentioning this because education in our country can never be compared to education in any other country. The first thing we have to learn is that the numbers that come to our colleges and schools is equal to the population of countries like Sweden and Norway. The Hon. Minister has mentioned that almost 75 lakhs of pupils are coming to our primary, higher elementary and secondary schools and this, in itself, is a figure and number which will stagger the imagination of however great educational experts we may call from abroad, because they have never dealt with such a problem of numbers. That is why India is in a peculiar situation. Much controversy has been raised by hon. Members about admission of students on caste, the prevalence of sub-communal conditions in our hostels, whether the economic backwardness should be the criterion for admissions, whether we should have fee-levying institutions or non-fee-levying institutions, whether we should have free P.U.C. or whether we should have free degree course or whether we should have free education even up to the Post-graduate stage. All these arguments have been a time-consuming affair in our country. I would only like to stress at this stage and at this point of time one of the cardinal principles that has been mentioned by the Hon. the Minister for Education for the past three years—but obviously he has not been able to convince many people of the soundness of that argument—that the time has come for us at least in Tamil Nadu to stress the importance of qualitative standards of education in our State. I fully agree with this. I will not say that the way in which our educational system is functioning is a waste because education can never be a waste and only illiterates will say that it is a waste. It is only education that has built up nations and brought them into the modern forum and faculty of world powers. I feel that, in spite of the despondency that exists in our country at the lack of progress, we still have brilliant geniuses who will one day be able to pull our country out of the woods and show to the world, as we have done even in the case of the atomic blast at Pokaron,

that many of our scientists and technologists, provided they are given the necessary help, assistance and understanding of the Governments and the Universities, will be able to progress to that high level of intellectual and research activity which should be the aim of any University in any part of the world.

(பிற்பகல் 6-10)

Sir, the question of free P.U.C. has been made a subject of considerable controversy. I refer to this because there is no point in our glossing over this issue and we must face this issue. In fact, in the terms of reference of the new Committee that has been appointed, the Hon. the Minister for Education made a very objective analysis and said that these are the aspects which we want the Committee to study and to recommend to Government. But, if it is the declared policy of Government even at this stage that they are not going to reverse free education in P.U.C., then may I suggest, in all sincerity and humility, that this term of reference to the Committee be cancelled and the Committee need not waste its time on going over this deliberation ? Sir, it has been pointed out in the Demand for University Education that out of Rs. 11.42 crores, Rs. 3 and odd crores will be spent on free-concession for P.U.C. which is expected to be Rs. 2 crores and Rs. 1 crore for scholarships and stipends and the amount which we are going to spend on all the three Universities in our State amounts to hardly one crore of rupees. Is this improvement of the qualitative standards of University ? How will we have new Research Departments? We do not have a comprehension of the total requirements of Universities at all in this matter. Oxford and Cambridge receive millions of pounds from the Exchequer and there is no question of their dancing to the tune played by piper who is the person who gives the funds. Our Universities must be encouraged and it is from this aspect that some of us have been pleading that there should be a reconsideration of the concept of the fee-compensation that is being given to University colleges particularly in the Pre-University class. One of the dangerous consequences of the acceptance of this principle will be that when we have the 10 plus 2 plus 3 year system, when we have the Junior Intermediate colleges—it is only if this policy is accepted that P.U.C. will be free—then it necessarily means that the two year Junior Intermediate college course will also have to be free. If it is free, it means that the drain on the public Exchequer will not only be Rs. 2 crores but it is likely to be Rs. 3 or $3\frac{1}{2}$ crores in 1975

and it may very well be Rs. 7 crores or Rs. 8 crores in 1980. It would also mean that there will be no Junior College established by any private agency in our State because we are having the idea that the Junior College should be exclusively for the purpose of having a two-year course and this would imply that the entire capital investment required for the starting of Junior Colleges would also fall on the State and act as an additional burden.

Sir, there is a lot of emotion whipped up in this House—there is talk of socialism, there is talk as if the elite class wants to deprive the poorer sections of free education, etc. I am afraid it is a total misconception of the policy of the Government itself. Whereas in our Directive Principles it has been clearly stated that compulsory education and free education should be provided up to the age of 14, this State has gone ten steps further—or rather three steps further if you want the strict numerical figure—and made it free up to the P.U.C. stage. In my opinion, the terms of reference to the Committee are quite valid and I would like the Committee not to be overawed by any miscellaneous statements that are made but to give its very frank opinion on what reforms they consider are necessary. It is for the Government, as a matter of policy, to accept it or not. There is no harm in the Committee making its recommendations.

Sir, I would also like to refer to one matter which has been raised. This pertains to the question of grants given by the University Grants Commission to Universities in India. We have found that over the past ten years, a number of Central Universities are being started and a number of deemed Universities are also being created, with the result today that the University Grants Commission does not have adequate funds to give to the established Universities in the State and a greater preference is being shown to deemed Universities and Central Universities. I would like this very important policy matter to be studied by the Department of Education. A clear analysis of the grants, loans, etc., given by the University Grants Commission over a period of five years to Central Universities and to Universities in the State should be prepared and the Hon. the Minister for Education should take this matter up because, I

believe, he is shortly going to Delhi to attend the Education Ministers, Conference and he must make it clear that a definite percentage must be given to the existing Universities in the State and any funds that have to be given to Central Universities or deemed Universities should be obtained from funds other than those which have already been allotted to the States

One more point, Sir, about University Education and this relates to the general question of financial state of many of our educational institutions, particularly Colleges in the private sector and Polytechnics in the private sector. If you take the Pachaiappa's Charities, the endowment was created more than 100 years ago. I am referring to Pachaiappa's Charities only as an example. There are hundreds of other charities, Christian Missionary institutions and other Charities running educational institutions. In respect of them, endowments for about Rs. 3 lakhs, Rs. 5 lakhs and even Rs. 20 lakhs have been created. The income of these charities was assured to them at a certain rate and in keeping with the inflationary trend it has gone up to a certain extent. But the expenditure involved in providing higher education, particularly in our Polytechnics, private Engineering Colleges and even Arts and Science Colleges has gone up to such an extent, because of the revision of the pay scales of teachers and other maintenance expenditure, that today I am fairly certain in a period of five years, we would have reached a position when none of these private bodies will be able to run their institutions and all of them will be running to the Government asking for reimbursement of 99 per cent of their recurring expenditure. Therefore, Sir, it is necessary for us to liberalise the Grants-in-Aid policy to such institutions because there is one important saving to the Government in allowing private institutions and this relates to the construction of buildings. It has been clearly stated even in the Note that has been furnished to us that the Government do not have resources to put up enough buildings either to create new institutions or to develop existing institutions. Therefore, when a private institution comes forward to build a college with an amount of Rs. 10 or 15 lakhs, the Government should consider it as part of their programme in extending educational activity and this is one aspect which I would like the Hon. the Minister for Education

to bear in mind, because there is a pronounced feeling mentioned by many Members of this House and the other House that when the Government pay the major portion of the expenditure of the institution, why they should not themselves take it over. This is a very narrow outlook and I would like the Government to eschew it especially from the point of view of encouraging the growth of future educational institutions.

(பிற்பகல் 6.20)

Sir, two points more and I have done. Reference was made to the fact that we should have some reforms in education. My hon. Friend Thiru Ganapathi has become a hero with my daughter who is studying in the 7th Standard by his speech yesterday. She asked me, "Who is that colleague of yours who spoke that we should not have examination at all in the schools?" I would, however, plead that reforms in education do not mean that we should automatically promote students, from I to XI Standard. There are a lot of abuses in the Examination system but the remedy does not lie in automatically promoting people from I to XI Standard. It is a great reflection on the teaching community and I entirely agree — and Seminars are going on and discussions are goin on — and I plead there should be some type of internal as well as external assessment. The only plea that I would like to make to the Members representing the teaching profession is that a great responsibility rests on the teachers to do their work very seriously in this regard. I would like to state that if the teacher has to be given the task of internal assessment, then we will have to reduce the class-room strength, because with the existing strength, he will not have time to evaluate the performance of students in the internal assessment. The Hon. Minister has mentioned in his speeches that he has divided the number of students in a school by the number of teachers in that school and that the proportion is 1 : 35. As my hon. Friend Thiru Swaminathan has ponited out, in arriving at such a figure, the number of Drawing Masters, Music Masters, Physical Education Teachers have also been taken into account. We want the class-room strength to be reduced to 30 or 35. Unless this is done, it is impossible to have greater contact between the teacher

and the student. I realise that financial resources are not available and the Department of Education has had a very heavy cut—and I sympathise with the Hon. the Minister for Education—because of the drought relief, the introduction of Prohibition and various other things. In fact, the outlay on Education, even though the Education Minister has not plainly stated, has gone down from a higher percentage to 22 per cent of the total outlay which is the natural consequence of certain policies that we have followed—and there are four or five States which have made a higher percentage of outlay on Education—and for the same reason, we sympathise with the Hon. the Minister for Education and we want to help him to the maximum extent possible in seeing that needless controversies are not raised and his efforts at educational reforms are not blocked at every stage.

One more thing, Sir, on the question of educational reform. When I went to Delhi in the month of September in winter, even the primary school children were going to school at 7-30 a.m. I do not know why we have become lethargic, lazy, to go to offices and schools after 10 a.m. after having Thayir Sadham. I do not know why we should not take a light breakfast and have our heavy meals later in the day. I think a radical reform is required in our habits. If any educational reform is not be torpedoed, in the next 5 or 7 years, the School Authorities should make the fullest utilisation of the existing buildings and laboratories. This can only happen with some sort of shift system in our schools and colleges. The cost of education is so enormous and our country is so poor that we cannot afford the luxury of Universities abroad or even schools abroad. All of us will have to sacrifice something in this regard and it is, therefore, in this spirit that I welcome many of the reforms the Education Minister would like to implement and I hope that he will be successful in doing this. Thank you.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: நாளை காலை 10 மணிக்கு அவை மறுபடியும் கூடும். இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவாதம் இன்னும் முடியவில்லை. நாளையதினம் கேள்வி நேரம் இருக்காது. கல்வியைப்பற்றிய விவாதங்கள் மட்டும் நடைபெறும்.

<u>புலவர் ஒ. அறிவுடைநம்பி</u>: மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ் நாட்டு கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கைக் குறிப்பேட்டில் நானும் பேசுவதற்கான வாய்ப்பைக் கொடுத்தமைக்கு முதற்கண் நான் என்னுடைய

நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலுடைய மூலைமுடுக்கெல்லாம் கல்வியைப் பரப்பப்பாடுபடும் தமிழக அரசையும் குறிப்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வழக்கறிஞர்களையோ டாக்டர்களையோ பிற நல்ல அறிவாளர்களையோ உருவாக்குவது கல்வியினுடைய நோக்கம் அல்ல. நல்ல மனிதனை உருவாக்குவதுதான் கல்வியினுடைய நோக்கம் என்று சர் ஜான் என்ற பேரறிஞர் எடுத்துச் சொன்ன கருத்துக்கேற்ப ஈராயிரம் வருடத்திற்கு முன்னால் வாழ்ந்த நம்முடைய வள்ளுவப்பெருந்தகையும்

"அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்

மக்கள் பண்பு இல்லாதார்"

என்று சொன்னார். எனவே எவ்வளவு கூர்ந்த மதி படைத்தவராக இருந்தாலும் கூடப் பண்பு இல்லாத மனிதன் மரத்துக்குச் சமமானவனாகி விடுகிறான். எனவே பண்பு ஊட்டி வளர்க்கக்கூடிய கல்வியை வளர்த்து வருகின்ற பணி நம்முடைய தமிழக அரசுப் பணியாகும். எனவே அவ்வகையில் இன்றையதினம் அந்தப்பணியை மிகச் செவ்வனே செய்து கொண்டு வரும் நல்லாசிரியர்களும் நம்முடைய தமிழகத்திலே ஏராளமான பேர் உண்டு. முன்பு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில ஆசிரியப் பெரு மக்கள் குடிக்கிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை எடுத்துச்சொன்னார்கள். எங்கோ சிலர் அப்படிச் செய்யலாம். பலர் அப்படிப்பட்ட ஒழுக்கம் குறைந்தவர்களாக நிச்சயமாக இருக்க மாட்டார்கள் என்பதை ஆசிரியர்கள் சார்பில் வந்திருக்கிற பிரதிநிதி என்ற முறையிலே நான் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நேற்றைய தினம் நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் வினா ஒன்றுக்கு விடையளித்தார்கள். அந்த வினா திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வேலை தேடித்தரும் நிலையத்தில் பதிவு செய்துகொண்டிருக்கிற ஆசிரியர்களைப் பற்றிய வினாவாகும். அந்த விடையில் பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர், முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்கள் எத்தனை பேர், இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் எத்தனைபேர் என்கிற பட்டியலை எடுத்துச்சொல்கிற போது, இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர்கள் என்கிற பெயரால் 295 பேர் வேலை வேண்டுமென்று கேட்டு பதிவு செய்திருக்கிறார்கள் என்ற குறிப்பை எடுத்துச்சொன்னார்கள். இது ஒரு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மட்டும் பொறுத்தது. ஆனால் தமிழகம் பூராவும் எடுத்துக் கொண்டால், இவ்வாறு இருப்பவர்கள் 6-வது, 7-வது, 8-வது, 9-வது வகுப்புகளிலே படித்துவிட்டு 'என்டிரன்ஸ்' என்கிற பெயரால் கீழ்த்திசை பல்கலைக் கழகத்திலே ஒரு தேர்வு எழுதிவிட்டு அதற்குப் பிறகு நான்கு ஆண்டு தமிழ் படித்து விட்டு வந்திருக்கிற இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் ஏறத்தாழ 2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இன்றையதினம் வேலையற்று இருக்கிறார்கள். ஆனால் இனிமேல் வேலைக்கு அவர்கள் வரமுடியுமா என்று நினைத்துப் பார்த்தால், நம்முடைய தமிழக அரசே, நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களே ஒரு கருத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். இனி அவர்களுக்கு வேலை தரப்படமாட்டாது என்கிற செய்தியைச் சொல்கிறார்கள். தயவுசெய்து நாவ

வேண்டி விரும்பிக்கேட்டுக்கொள்கிறேன்; ஈராயிரம் பேர் தமிழை நம்பி வந்திருக்கிறார்கள். தமிழால் உயர்ந்தவர்கள் நாம். நம்முடைய தமிழக அரசும் டாக்டர் நாவலர் அவர்களும் அவர்களுக்குச் செய்யாவிட்டால் பிறகு யார்தான் செய்யப்போகிறார்கள்? எனவே நான் நாவலர் அவர்களுடைய திருவடி பாதங்களைப்பற்றி, வேண்டி விரும்பிக்கேட்டுக் கொள்வேன், தயவுசெய்து ஒரு கொள்கையை வகுத்து இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுடைய வாழ்விலும் ஒரு சிறப்பு நிலையை அடைவிக்க வழிவகையை உருவாக்க வேண்டுமென்று நான் மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இன்றைக்கு தொடக்கப் பள்ளிக்கூடத்தில் இடைநிலை ஆசிரியர்களாக இருக்கக்கூடியவர்கள் அங்கே மாணவர்களுக்குக் கற்பிக்கிறபோது மாணவர்கள் தமிழிலே தேர்ந்தவர்களாக முடிகிறதா என்று கேட்டால் ஏதோ ஒருசில குறைகள் வருகின்றன. அந்த இடத்தில் இந்த இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களை நியமிக்கலாமென்று நான் வேண்டி விரும்பி நம்முடைய பெரு மதிப்பிற்குரிய நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கூடவே நான் இங்கே இன்னொரு விஷயத்தை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு திரு. சங்கரலிங்கம் அவர்கள் ரொம்ப அனுபவமுடையவர்கள், அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வந்தவர்கள். அவர்கள் சார்ந்திருக்கிற பள்ளிக்கூடங்கள் அனைத்தும் அரசினரால் நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் என்கிற 'ஏ' விங்கைச் சார்ந்தவை. எனவே அவர்கள் 'பி' விங்குக்கு பரிவு காட்டாமல் பேசி விட்டார்களோ என்னவோ என்று நான் நினைக்கிறேன் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நானும் 1970-ஆம் வருடம் முதல் இந்த அவையிலே அங்கம் வகிக்கிறேன். 1970-ஆம் ஆண்டிலிருந்து இன்றைய வரையிலும் நம்முடைய 'பி' விங் ஆசிரியப் பெருமக்கள் தங்களை இணைக்க வேண்டுமென்று கேட்கிறபோது, 'ஏ' விங், 'பி' விங் என்கிற இரு பிரிவு வேண்டாம், ஒன்றாக இணைக்க வேண்டுமென்று சொல்கிற போது, தங்களுடைய பணிக்காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்களேயொழிய, தங்களுக்குத்தர வேண்டிய நியாயமான உண்ர்வில் பதவி உயர்வு தரவேண்டுமென்று கேட்கிறார்களேயொழிய, வேறு விதத்தில் அல்ல. அவர்களும் ஒப்பி வந்து இவர்களும் ஒப்பி வந்து இருவரும் ஒப்பி வந்தால் தான் இதற்கு ஒரு முடிவு என்று சொன்னால் இருவரும் ஒப்பி வரப்போவதில்லை. எனவே நான் நம்முடைய நாவலர் அவர்களை விரும்பிக் கேட்டுக்கொள்வேன். இதை ஒரு நடுவர் தீர்ப்புக்கு விட்டேனும் இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் என்னை உணர்ந்தவன் என்ற காரணத்தால், மாண்புமிகு தலைவரவர்களே, நான் இதைச் சொல்லுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் என்பது எனக்கு எப்படித் தெரியும்? (சிரிப்பு)

புலவர் ஓ அறிவுடைநம்பி: நான் 1970-ஆம் ஆண்டில் தேர்தலுக்கு நின்ற நேரத்தில் என்னோடு போட்டியிட்ட ஒருவர் பேரறிஞர். அவருக்குத் தராத வாக்கை எனக்குத் தந்தார்கள் என்றால், அதற்கு நான் நாவலர் அவர்களுடைய தொண்டன் என்ற ஒரே காரணத்திற்காகத்தான். எப்படியும் நான் 'ஏ' விங்கையும், 'பி' விங்கையும் இணைத்து விடுவேன் என்கின்ற நம்பிக்கையின் காரணமாகத்தான் எனக்கு வாக்களித்தார்கள். அந்த நம்பிக்கைக்கு எந்தவிதமான தீங்கும் வரவேண்டாமென்று நான் உங்கள் மூலமாக நாவலர் அவர்களுக்குச் சொல்வேன். அடுத்து, நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புவது தலைமையாசிரியர்களைப் பொறுத்த வரையிலேயும் அவர்களைப் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாக, கெஜட் பதவிகளாக, ஆக்க வேண்டுமென்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். சொல்லி ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இதுநாள் வரையில் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது நிறைவேற்றப்படவில்லை, ஆனால் நிறைவேற்றப்படாததற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால், பிறதுறைகளிலே இருக்கக்கூடிய கெஜட் பதவிகள் அத்தனையும் எடுக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்குத்தர வேண்டுமா என்று கேட்கிறார்கள். எடுக்கிறபோது எல்லோருக்கும் எடுத்துவிடலாம். இப்பொழுது கொடுத்துவிடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6–30)

அடுத்து, நான் கேட்டுக் கொள்வேன். 2,882 பள்ளிகளில் 50 விழுக்காடு பள்ளிகளில் தான் கட்டணம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆக மொத்தம் செலவு 30 லட்சம் ரூபாய். திட்டத்தில் நாம் கல்விக்கு ஒதுக்கியிருக்கிற தொகை 118 கோடி ரூபாய். இதிலே 39 லட்சம் என்பது மிகக் குறைந்த தொகை. அடுத்த முறையாவது இந்தத் தொகையைக் கூட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழக மானியக் குழு ஒரு ஊதிய விகிதத்தை அறிவித்து, அதனை வழங்க வேண்டுமென்று கேட்கிறது. வடபுலத்தில் இருக்கின்ற சில பல பல்கலைக் கழகங்கள் அதனை வழங்கிவிட்டதாக அறிகிறேன். தென் புலத்திலும் அது வழங்கப்பட வேண்டும். அது வழங்குவது மிகவும் நியாயம் என்பதையும் சொல்லுகிறேன். இங்கே தமிழ் வளர்ச்சித் துறை என்ற பெயரால் ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தலைப்பின் கீழ் இருக்கின்ற சில வாக்கியங்கள் என்னை வேதனைப்படுத்தியிருக்கின்றன. "தமிழ் தொன்மைச் சிறப்பும், புதுமை நலமும் ஒருங்கே அமைந்த மொழி" என்று இருக்கிறது. அடுத்த தொடர் "சமஸ்கிருத மொழியையொத்த, அல்லது அதனினும் மிகுந்த தொன்மைச் சிறப்புடைய தமிழ் இன்றும் இந்தியாவில் ஏறத்தாழ 4 கோடி மக்களால் பேசப்பட்டு வருவதுடன்" என்று இருக்கிறது. பேசப் பட்டு வருகிறதை விரும்புகிறார்களோ இல்லையோ தெரியவில்லை. "சமஸ்கிருத மொழியையொத்த" என்று சொல்லியிருப்பது ஒரு செத்த மொழியோடு நம்முடைய தமிழ் மொழியை ஒப்பிட வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு கூறியிருப்பதற்காக நான் வருந்துகிறேன். கூடவே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 75 லட்சம் ரூபாய் தமிழ் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு என்று சொல்லுகிறார்கள். இது மிகவும் குறைந்த தொகை. இன்னும் அதிகமான தொகை அதற்குச் செலவழிக்கப்பட வேண்டும்,

40 லட்சம் ரூபாய், கல்லூரிகளில் தமிழைப் பாட மொழியாக எடுத்துக் கொண்டுள்ள மாணவர்களுக்கு உதவித் தொகையாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். 15 லட்சம் ரூபாய், கல்லூரியில் நூல்களைத் தமிழாக்கம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது: 9 லட்சம் ரூபாய் தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது மொத்தத்தில் தமிழ் ஆக்கத்திற்காக செலவழிக்கப் படுகின்ற தொகை குறைவாகத்தான் இருக்கின்றது என்று சொல்ல விரும்புகிறேன்.

இப்போது துணைப்பாடங்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றை எழுதுவதற்கு ஆசிரியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைத் தந்து விடுகிறார்களாம். 500 ரூபாய் தருகிறேன் எழுதிக் கொடுத்து விட வேண்டும் என்கிறார்கள். உன்னுடைய தகுதியை உயர்த்தித் தந்திருக்கிறோம், 750 ரூபாய், 1000 ரூபாய். எழுதித்தர வேண்டும் என்கிறார்கள். அவர்களும் எழுதிக்கொடுத்து விடுகிறார்கள். அது புத்தகமாக அச்சிட்டு வந்தால், அதில் எழுதியவர் பெயரைக் காணோம். அவர் எதற்காக எழுதினார். என்ன சூழ்நிலையில் எழுதினார் என்று பார்க்கிறபோது, மெத்த வருத்தமாக இருக்கிறது. அத்தகைய நிலை மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, தமிழ் வளர்ச்சி என்ற தலைப்பில், தமிழை ஆட்சி மொழியாகச் செயல்படுத்த வேண்டும் என்ற கொள்கை, எல்லா மட்டங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. அரசுச் சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறைகள் தமிழில் வந்துள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான காரியங்கள் துரிதமாக நடந்து வருகின்றன என்று சொல்கிறார்கள். 'துரிதம்' என்ற வடமொழிச் சொல் வந்திருக்கின்ற காரணத்தாலோ என்னவோ, விரைவு அதில் இல்லை. இனியாவது அது விரைவாக வருதல் வேண்டும் என்று வருத்தத்தோடு சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் கூட, கேளுங்கள் என்று சொன்னார்கள். ஒரு காரியத்திற்காக இதைச் சொல்லுகிறேன் என்று கருதக் கூடாது. 1976-க்குள் இந்தக் காரியத்தை முடித்து விட வேண்டும் என்று திரு. தேவர் அவர்கள் சொன்னார்கள். எதை நினைத்துக் கொண்டு சொன்னார்களோ தெரியவில்லை. ஆனால், மத்திய அரசு போகின்ற போக்கைப் பார்த்தால், நிச்சயமாக அங்கே அதிகாரம் குவிந்து கிடக்கிறது. அந்த அதிகாரக் குவியலின் ஆதிக்க வெறி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. எங்கே, ஜனநாயகம் தேய்ந்து சர்வாதிகாரம் உருவாகி விடுமோ என்ற அச்சம் ஒவ்வொருவருடைய மனதிலேயும் படம் எடுத்து ஆடிக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக நான் நினைக்கிறேன். 1976-ல் பாராளுமன்றத் தேர்தலை ஒரு ஆண்டுக்குத் தள்ளி வைத்து விடுகிறோம் என்று தள்ளி வைத்து விட்டு சட்ட மன்றங்களைக் கலைத்துவிட்டால், நம்முடைய நிலை வருந்தத்தக்கதாக ஆகிவிடும். அப்படிச் சட்ட மன்றங்கள் கலைக்கப்படுமேயானால், நாம் சாதிக்க வேண்டியவைகள் குறைந்து விடும். எனவே 1976-க்குள், நிச்சயமாக இங்கே தரப்படுகின்ற மசோதாக்கள், எங்களை 'சோதாக்கள்' ஆக்காமல், வரைவுகள், சட்டங்கள் மற்றவைகள் தமிழிலேயே தரப்பட வேண்டும். எனவே, தலைவர் அவர்களே, நாவலர் அவர்களே, நாம் இங்கே எதற்காக வந்திருக்கிறோம்

என்பதை நினைத்துப் பார்த்து, உங்களுடைய திருவடிகளைப் பிடித்துக் கேட்கிறேன். தயவு செய்து......

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, நாட்டிலே தேர்தல் நடைபெறாது என்று கற்பனை செய்து கொண்டு, இந்த மன்றத்தில் ஒரு பீதியை உண்டாக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: தலைவரவர்களே, 1971-ல் முடிந்திருக்க வேண்டிய 'அவசர கால நிலை'யை இன்னும் நீட்டிக் கொண்டிருப்பது சரியல்ல என்று எடுத்துக் காட்டுவதற்காக, எதிர் கட்சிகள் அனைவரும் ஒன்றுகூடி, ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி ஒரு கண்டனக் கூட்டத்தைப் போட்டு, கண்டனம் தெரிவிக்கவிருப்பது, எதிர்க் கட்சி வரிசையில் மாண்புமிகு உறுப்பினர் இல்லாத காரணத்தால் தெரியாமல் இருக்கலாம். அவர் ஆளுகின்ற காங்கிரசுக்கு துணை போகின்றவராகிவிட்ட காரணத்தால், அவரால் இதைப் புரிந்துகொள்ள முடியாது போய் விட்டது.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, தேர்தல் என்பது வேறு, அவசரகாலச் சட்டம் என்பது வேறு. இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமல், மாண்புமிகு உறுப்பினர் தன்னைக் குழப்பிக் கொண்டிருப்பதோடு, சபையையும் குழப்பப் பார்க்கிறார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர் குழம்பாமல் இருந்தால் சரிதான்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: நான் குழம்புகிறேனோ இல்லையோ, ஆனால் நண்பர் குழம்பிப்போய்த் தான் எங்கேயோ போயிருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எனவே நாவலர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு இந்த தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக் குறிப்பை வரவேற்று அமைகிறேன்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இத்தகைய மசோதாக்களைக் கொடுத்து எங்களைச் 'சோதாக்கள், ஆக்காதீர்கள், என்று கூறினார்கள். 'சோதா' என்ற வார்த்தை பாராளுமன்ற முறைக்கு உகந்த வார்த்தை அல்ல......

மாண்புமிகு மேலவைத் தலைவர் 'சோதா' என்ற வார்த்தையே தமிழ் அல்ல.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள், நாளைய நிகழ்ச்சி காலை 10 மணிக்கு என்று வைத்ததற்கு, பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்துவது போல் எங்களை சோம்பேறிகள் ஆக்காதீர்கள் என்று சொன்னார்கள். காலை 7 மணிக்கே ஆரம்பித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர்கள் பள்ளிக்கூடத்திற்குத் தான் சொன்னார்கள், ஆனால், சபை காலை 10 மணிக்குத்தான்.

(பிற்பகல் 6-40)

திரு. ஆ. திராவிடமணி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே 1975–76-க்கான கல்விததுறைக் கொள்கைக் குறிப்பை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறாகள். 118 கோடி ரூபாயை கல்விக்காக நம்முடைய அரசு ஒதுக்கி, கல்வித்துறையில் இந்தியாவிலே தமிழ்நாடு முதல் நிலை பெற வேண்டும் என்ற அளவுக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தின் மொத்தச் செலவு 500 கோடி ரூபாயில் 118 கோடி ரூபாயை நாம் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம். இதிலிருந்து கல்வித் துறையில் நம்முடைய அரசு எந்த அளவுகது அக்கறை வைத்திருக்கிறது என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும்.

நம்முடைய மாணவர்கள் படிப்பிலே உற்சாகமாக இருக்க வேண்டும் என்பதற்காக பி.யூ.சி. வரையில் இலவசக் கல்விக்காக 2 கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை என்று நம்முடைய அரசு கொடுத்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் ஏழை எளிய மாணவர்கள் நல்ல முறையில் தொழிற் கல்வி பெற வேண்டும் என்று அக்கறை கொண்டு அதற்காக தொழிற் கல்வி பற்றி மிகத் தெளிவாக கொள்கைக் குறிப்பில் நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். தமிழகத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரியார்கள் பெயரால் நாம் பல கல்லூரிகளை அமைத்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் அவர்கள் பெயரால் அமைத்திருக்கிறோம். பாபநாசத்தில் திருவள்ளுவர் பெயரால் கல்லூரி அமைத்திருக்கிறோம். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பெயரால் கல்லூரி அமைத்திருக்கிறோம்.

(பிற்பகல் 6-20)

தமிழ்நாட்டின் சிங்கம் முத்துராமலிங்கத் தேவர் பெயரால் 3 கல்லூரிகளை அமைத்திருக்கிறோம். தென்னாட்டு சிங்கம், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பெயரால் ஒரு கல்லூரியை அமைத்து வருகிறோம். வீரபாண்டிய கட்டபொம்மன் பெயரால் ஒட்டப்பிடாரத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியினை வைத்திருக்கிறோம். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரத்தின் பெயரால் கல்லூரி ஒன்று தூத்துக்குடியில் நடைபெற்று வருகிறது என்றால், திருவள்ளுவர் பெயரால் நடைபெறும் ஒரு பள்ளியிலே மாணவர்க்ள் படிக்கின்றார்கள் என்றால் அம்பேத்கார் பெயரிலுள்ள பள்ளியில், காய்தே , மில்லத் பெயரிலுள்ள பள்ளியில், கல்லூரியில் படிக்கிறார்கள் என்று சொன்னால், அந்தப் பழம் பெரும் தியாகிகளிடம், பெரியோர்களிடம் ஏற்படும் மதிப்பின் காரணமாக, அவர்களுக்கு ஏற்படும் உணர்வுகள் இந்த மாணவர்களுக்கும் ஏற்பட வேண்டும், பிற்காலத்தில் சிறந்த மாணவர்களாக, சிறந்த குடிமக்களாக ஆக வேண்டும் என்ற எண்ணத்திலேதான் நாம் அப்படிப்பட்ட பள்ளிகளையெல்லாம் வைக்கிறோம். இதே போல, நெல்லை மாவட்டத்தில

சிவகிரி வட்டத்தில் உள்ள வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் நெற்கட்டும் செவல் என்ற சிற்றூரில், முதன் முதலாக வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்து, வீரமரணம் எய்திய புலித்தேவன் பிறந்த அந்த ஊரில், புலித்தேவன் பெயரால் ஒரு உயர்நிலைப் பள்ளியை வைக்க வேண்டும் என்று அந்த வட்டார மக்கள் கோரி, அவனுடைய பெயரால் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்குமானால், புலித்தேவன் எப்படி நாட்டின் விடுதலைக்காக தன் உயிரையே நீத்தான் என்ற உணர்ச்சி அங்கே படிக்கும் மாணவர்களுக்கு ஏற்படும் என்று அவர்கள் அவன் பெயரால் ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டும் என்று கோரி, அதற்காக அரசு எதிர்பார்க்கின்ற அவ்வளவு நிபந்தனைகளையும் ஏற்று, இப்போது அங்கே அவன் பெயரால் ஒரு உயர்நிலைப் பள்ளி வேண்டும் என்று கோரியிருக்கின்றார்கள். புலித்தேவனை நினைவுகூறும் வகையில் அந்த உயர்நிலைப் பள்ளி, இந்த ஆண்டிலேயே அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுவாமிநாதன் அவர்கள் பொருளாதாரத்தின் அடிப்படையில்தான் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இப்போது சமுதாயத்தின் அடிப்படையில் வழங்குகிறோம் என்றால், பின் தங்கிய சமுதாயம், மிகவும் பின்தங்கிய சமுதாயம் என்றெல்லாம் வைத்திருப்பதற்கான காரணம், அதிலுள்ள மாணவர்கள் படிக்க வேண்டும்; அவர்களும் பிற சமுதாயங்களிலுள்ள மாணவர்களைப் போல படித்து முன்னேற்றம் காணவேண்டும் என்று ஆசைப்பட்டாலும் அவர்களுக்கு வாய்ப்பு வசதி கிடையாது. அவர்களுடைய குடும்பத்தில்வேறு யாருமே படித்திருக்கமாட்டார்கள். அவர்கள் குடும்பத்தில் யாராவது படித்திருந்தால், அண்ணனோ, தகப்பனோ அல்லது தாயாரோ படித்திருந்தால், தம் குழந்தைகளையும் நல்ல முறையில் படிக்க வைக்க இயலும். வேண்டிய நேரத்தில் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் அவர்களால் முடியும். அந்தக் குழந்தைகளும் நல்ல மார்க்குகளை எடுப்பார்கள். ஆனால் இவர்கள் பின்தங்கிய குடும்பத்தில் உள்ள நிலை, இவர்களுக்கு வேலை செய்வதற்குத்தான் நேரம் சரியாக இருக்கின்றது. தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் அளவிற்குத் திறமை இல்லை. ஆகவே உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லக்கூடிய ஃபார்வர்டு கம்யூனிடியில் உள்ளவர்கள் படித்திருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வேண்டிய கல்வியை அளிக்கத்தக்க பயிற்சியினை, உணர்வினைப் பெற்றிருக்கின்றார்கள். ஆனால் பின்தங்கிய வகுப்பினரிடையே அது இல்லை. அந்தக் காரணத்தினால்தான் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் எப்படியும் படித்தாக வேண்டும் என்ற அடிப்படையில்தான், பின்தங்கிய மாணவர்களுக்கும், மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்து, உற்சாகப்படுத்தி அவர்களையும் படிக்கவைக்கவேண்டும் என்றுதான் நம் அரசு இந்த நடைமுறைக் கொள்கையை வைத்திருக்கின்றார்கள். ஆகவே பொருளாதார அடிப்படையில்தான் உதவித் தொகை வழங்கவேண்டும் என்று சொல்லுவது பொருத்தமானதாகத் தெரியவில்லை, சமுதாயத்தில் இன்றைக்கு மேல் ஜாதிக்காரர்கள் என்றும், கீழ் ஜாதிக்காரர்கள் என்றும் உள்ள காரணத்தினால், இப்படிப்பட்ட

பிரிவுகள். பேக்வார்டு வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் என்றெல்லாம் பிரிவுகள் இல்லை என்ற காலம் வரும்வரையில் இப்படிப்பட்ட சலுகைகளையும் உதவித் தொகைகளையும் கொடுப்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். அவைகள் நீடிக்கும் வரையில், இப்போது இருக்கும் முறையில், பின்தங்கிய வகுப்பினருக்குக் கொடுத்து வருகின்றதை; உதவித் தொகையின் சலுகைகளை நீடிக்கத்தான் வேண்டும், அதுவரையில் இவை நிலைத்து நிற்கும் என்று நான் நம்புகிறேன்.

பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றவர்களுடைய நிலை உயர்ந்திட வேண்டும் என்று அவர்களுக்கு ரூ. 90 என்று இருந்த அடிப்படைச் சம்பளத்தை ரூ. 210 என்று உயர்த்தியது நமது அரசு. ஆசிரியர்கள் வைத்த பல கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு நிறைவேற்றியிருக்கின்றது. அந்த அளவுக்கு கல்வித் துறை நல்ல சாதனைகளைப் புரிந்திருக்கின்றது. மேலும் மேலும் பல அபிவிருத்திகளைச்செய்து, தொழிற் கல்வியினை மேலும் பரவலாக்குவதன் மூலம் நமது அரசு நமது மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்து, பேச வாய்ப்பினை அளித்தமைக்காக, நன்றி கூறி அமருகின்றேன், வணக்கம்.

* <u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்</u>: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு அரசின் கல்வி விளக்க அறிக்கை குறித்து, அடியிற் கண்ட சில கருத்துக்கள் பற்றிப் பேச விரும்புகிறேன்.

பொதுவாக நம்முடைய நாட்டில் இலவசக் கல்வியினை எடுத்து விடுவதா அல்லது வைத்துக்கொள்ளுவதா அல்லது வசதி உள்ளவர்களிடத்தில் மட்டும் சம்பளம் வாங்கலாமா என்பது போன்ற சர்ச்சை இப்போது பெருகி வளர்ந்திருக்கின்றது. ஆனால் நமது நாடு விடுதலை பெற்றவுடன், எல்லோருக்கும் 'இலவசக் கல்வி' என்று அறிவிக்கப்பட்ட கொள்கையிலிருந்து நாம் இப்போது மாறுவது அவ்வளவு சிறப்பாக இருக்க முடியாது. ஆனாலும் நிதியின்மை காரணமாக, கல்வித் துறைக்குப் போதிய நிதியின்மை காரணமாக இதை இப்போது மீண்டும் பரிசீலனை செய்வது பற்றி நாம் ஆராயவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்து, ஜாதிய முறைகள் பற்றிக் கல்வித் துறையில் இன்று இருக்கும் நிலை பற்றி நினைவுகூரும்போது, சில நாட்களுக்கு முன்னர் இந்த அவையில்கூட ஒரு கேள்விக்கு விடையளிக்கும் முறையில், ஜாதியின் பெயரைச் சொல்லாததால் ஒரு மாணவிக்கு இடமே பள்ளியில் கொடுக்காமல் அல்லல்பட்டு, திரும்ப மாநிலக் கல்வி இயக்குநரிடம் விண்ணப்பம் செய்து கொண்டு, அதற்குப் பிறகு முடிவு காணப்பட்டதாக அறிய முடிந்தது. ஜாதி முறைகள் ஒழிந்திட வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, இப்படிப் பள்ளித் துறையில் ஜாதிப்பெயர்களை நினைவு கூருவது என்பது நமது உயர் பண்புகளை மறந்து நாம் பின்னோக்கிச் செல்லுகிறோமா என்ற ஐயப்பாட்டிற்கு இடமளிக்கின்றது. இதனால் இந்தியர்கள் என்றோ; தமிழர்கள் என்றோ எண்ணிப்பாராமல், இனவழியாக எண்ணிடும் போக்கு, மனப்பான்மை வளர்ந்து வருகின்றது. இப்படி ஜாதிப் பெயர்களைக் கொள்ள வேண்டும் என்பது ஒற்றுமை

உணர்வினை, ஒருமைப்பாட்டை வெகுவாகப் பாதிக்கும் நிலையில்; நாம் முன்னேறக்கூடிய வாய்ப்பினை இழந்துவிடக்கூடாது. எனவே இது பற்றி நமது அரசு ஆராய்ந்திடக் கடமைப்பட்டிருக்கின்றது.

அடுத்து; ஆசிரியர்கள் பற்றிக் குறிப்பிடும்போது; இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சில குறைபாடுகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். பொதுவாக நான் கருதுவது; கண்ணியம் மிக்க பதவியில் உள்ளவர்களை இவ்வளவு கடுமையாக, நாடறிய பாரறிய நாம் விமரிசனம் செய்வதன்மூலம், 'இப்படித்தான் பலரும் இருப்பார்கள் போலிருக்கின்றது' என்ற எண்ணம் பலருக்கும் ஏற்பட்டு, அந்தப் பதவியின் தரம் குறைவாக மதிப்பிடப்பட்டு, காலப்போக்கில் வீழ்ச்சி உண்டாகும். ஆகவே அப்படிப்பட்ட குறைகள் இருந்திடின்; உடனடியாக நம் மாநிலக் கல்வி இயக்குநரிடம் அறிவித்தால்; இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அந்த ஆசிரியர் பேரிலே நடவடிக்கை எடுப்பதைப்போன்ற சில முறைகளைக் கையாளலாமே தவிர, யாரோ சிலர் சொல்லுகின்றார்கள் என்று அதைச் சட்டசபையில் மிகப் பகிரங்கமாக விவாதிப்பதின் மூலம் ஆசிரியர்களின் சமூக அந்தஸ்திற்கு பெரும் தீங்கு செய்கின்றோமோ என்று ஐயுறுகின்றேன். காரணம் அவர்கள் பெற்றோர் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் மதிப்புமிக்கவர்களாக இருந்தால்தான், அவர்கள் மதிக்கப்படுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட சம்பவங்களைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய தவறுகளைத் திருத்த கண்ணியமிக்க முறைகளை நாம் கையாள வேண்டும். அப்படிப்பட்ட முறைதான் தேவை என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆசிரியர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், இரண்டொருவர் தவறிழைத்தாலும்; பொதுவாக அவர்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து தங்கள் பணிகளைச் செய்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-50)

அடுத்து; இந்த கல்வித் துறையிலே நிறைந்த சேதாரம் இருக்கின்றது என்பதை நான் கவனிக்க முடிகிறது. பள்ளி இறுதித் தேர்விலே 50 விழுக்காடு தான் தேர்வு பெறுகிறார்கள். 50 விழுக்காடு தேர்ச்சி பெறாதவர்கள் இருக்கின்றார்கள் என்று நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் நினைவுக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பின் தங்கியவர்கள், கிராமங்களில் வேலைவாய்ப்பு பெற முடியாதவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள் குடிமக்களாகத்தான் இருக்கின்றார்கள். அவர்கள் புகுமுக வகுப்பில் இதைவிடக் குறைந்த விழுக்காடுகள் தேர்ச்சியடைகிறார்கள். ஆக 8-வது வகுப்பு முதல் புகுமுக வகுப்பு வரை கல்வியில் எவ்வளவு சேதாரம் மாணவர்களிடத்திலே ஏற்படுகிறது என்று கணக்கில் எடுத்துப் பார்த்தால், அவர்கள் எல்லோரும் எங்கே சென்று பிழைப்பது, எப்படிப் பிழைப்பது என்று தெரியாமல் மிகுந்த அல்லல்படுகிறார்கள்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சில நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். உயர்நிலைப் பள்ளியிலே தொழிற் கல்வி சேர்க்கப்படும் என்கிறார்கள். இப்போதும் அப்படி ஒரு கல்விமுறை இருக்கின்றது. ஆனால், அந்த முறை சர்ட்டிபிகேட் கோர்ஸ் ஆக இல்லாமல் ஒய்வு நேர

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்) [1975 ஏப்ரல் 2

கல்வி போலத்தான், கைத்தறி நெய்வான் அல்லது விவசாயம் செய்வான் என்பது போல இருக்கின்றது. அதை இன்னும் கொஞ்சம் உயர்நிலைப் பள்ளிகளிலே முழுநேர சர்ட்டிபிகேட் கோர்ஸ் என்று சொல்வதுபோல தீவிரமானதாக ஏற்படுத்தி அவன் அந்தத் துறையில், எஸ்.எஸ்.எல்.சி.யிலே தோல்வி அடைந்திருந்தாலும் கூட, அந்த சர்ட்டிபிகேட் கோர்ஸ் படித்து ஒரு வேலையைப் பெறுகின்ற அளவுக்கு மாணவர்களுக்கு நல்ல வாய்ப்பை உண்டாக்கித்தரவேண்டும். கல்வித் துறையிலே ஏற்படுகின்ற சேதாரங்களை மையமாக வைத்துக்கொண்டு நம்முடைய வேலைவாய்ப்பு முறையை அல்லது தொழில் கல்வியை வளர்க்கிற துறையை நாம் அதிகமாகக் கடைப்பிடிக்கவேண்டும். அந்தச் சேதாரம்கூட, நான் மிகுந்த அடக்கத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிலர் தாழ்த்தப்பட்ட; பின்தங்கிய சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். காரணம் அவர்களுக்குக் கல்வி பெறும் சூழ்நிலையில்லை. கிராமப்புறங்களிலே அந்த வாய்ப்பு குறைவாக இருக்கிறது. மேல்நிலை வரையில் எட்டிப் பிடிக்க முடியாது. இடையிடையே தேங்கியிருப்பவர்களைப்பற்றி கல்விக் கொள்கை விவாதிக்கப்பட்டு அதற்கு ஏதாவது விடிவெள்ளி காணவேண்டும், தக்க வழிவகை காணவேண்டும். இதிலே நம்முடைய அரசு அதிக அக்கறை காட்டவேண்டும். 8-வது வகுப்பில் தோல்வி அடைந்து, 10-வது வகுப்பு வரையில் வந்தவர்கள், பள்ளி இறுதித் தேர்வில் தோல்வி அடைந்தவர்கள், பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் எந்த வழியில்; எங்கே போவது என்பதைப்போல் இருக்கின்றார்கள். அந்தச் சேதாரத்தை நாம் இன்னும் குறைக்க வேண்டும். இன்னும் தெளிவாகவே சொல்ல வேண்டுமென்றால், அவர்கள்தான் சமுதாயத்தின் அடிமட்டத்திலே இருக்கின்றவர்களாக இருக்கின்றார்கள் என்பதிலே கூட கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அடுத்து, கல்வித்தரம் உயரவேண்டுமென்றால், நான் முன்னரே சொன்னதுபோல், ஆசிரியர்களுடைய தரம், அவர்களுக்கு இருக்கின்ற மதிப்பு சமுதாயத்திலே உயரவேண்டும். அவர்களுக்கு நிறைந்த உத்தரவாதங்கள், பாதுகாப்புகள் கொடுக்கப்படவேண்டும். அதேபோல் சமுதாயத்திற்கு அல்லது அரசுக்கு அவர்களுடைய போதனையின் தரத்தில் பூரண உத்தரவாதத்தை எதிர்பார்க்க நமக்கு உரிமையுண்டு, கடமையுண்டு. அவர்களும் 'கொண்டோம் கொடுத்தோம்' என்று சொல்வதுபோல செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். காரணம் எந்தப் பக்கத்தில் யார் தவறு செய்தாலும் தேசம் ஒன்றும் தலைகீழாகப் போய்விடாது. ஆனால் ஓர் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் தன்னுடைய கடமையில் தவறு செய்வாரானால், ஒரு தலைமுறையினுடைய வரலாற்றிலேயே கூட திசை திருப்பப்பட்டுவிடும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தத் துறையில் நாம் அனைவருமே ஆழமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாச்சார எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் ரொம்ப அருமையாகவே குறிப்பிட்டார்கள். திரு. சுவாமிநாதன் அவர்களும் குறிப்பிட்டார்கள். ஒட்டு மொத்தமாக மாணவர்கள் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டு சராசரியாக விகிதாசாரத்தை வைத்து

1975 ஏப்ரல் 2] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

தீர்மானிப்பது மிகுந்த வேதனைக்குரிய செய்தி. அதிலே நம் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பள்ளிக்கூடத்திலே பிள்ளைகளை பௌண்டிலே அடைப்பதுபோல் இருக்கின்ற நிலைமையில, கண்களிலே நீரோடச் சொல்கின்றேன், மிகுந்த வேதனைப்படுகின்றார்கள் அந்த சின்னஞ்சிறு சிறுவர்கள். மேலும், கல்லூரியில் படிக்கின்றபோது, 4 பேர்கள் படிக்கின்றார்கள், புரொபசர் ஒருவர் உட்கார்ந்துகொண்டு பாடம்சொல்லித் தருகிறார். 70 பிள்ளைகளை ஒரு வகுப்பிலே வைத்துக்கொண்டு, அந்தப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து, அவர்களையும் சொல்ல வைத்து, ஆசிரியர் அவர்கள் கூடவே எழுதி, அவர்களையும் எழுதச் சொல்லி, இவ்வளவு கடுமையான முயற்சி செய்கின்ற ஆரம்பப் பாடசாலைகளிலாவது, அன்புகூர்ந்து எந்தத் தியாகத்தையாவது அரசு ஏற்றுக்கொண்டு, அல்லது எந்த ஒரு வரியையாவது போட்டு, இந்த விகிதாசாரத்தை மாற்றி நிர்ணயித்துத் தரவேண்டும் என்றும், இந்தக் கொள்கையிலேயிருந்து அரசு தடம் புரளுமானால், அதை செயற்பாடாக்கவில்லை என்றால், எதிர்கால வரலாறு மிகவும் பாதிக்கப்படும். தாம் தெரிந்து சிந்திக்க வைக்கின்ற பயிற்சி வகுப்பு அங்கேதான் தொடங்குகிறது. அதற்குப் பிறகுதான் மேல் மாடிக் கட்டிடம் கட்டுகிறோம். சிந்திக்க வைக்கின்ற பழக்கம், உச்சரிப்புப் பழக்கம் எல்லாம் பெறுகின்ற அடித்தளமாக இருக்கின்ற ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களைக் கூட்டமாகக் கூட்டி வைத்துக்கொள்வது மிகுந்த வேதனையைத் தரும்.

ஆகவே இந்த அரசு முயற்சி எடுத்து—உயர்நிலைப் பள்ளிகளிலாவது இப்போது முடியாமல் போனாலும் பிறகு யோசிக்கலாம்—5-வது வகுப்பு வரையில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளுக்கு வகுப்பு விகிதாசாரத்திற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். நான் அடக்கத்தோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், அந்த வகையில் செய்யாது போனால், நாம் செலவு செய்கின்ற பணம், எவ்வளவு செய்தும் பலன் இல்லாமல் வீணாகப் போய்விடுமோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. இதை நம் அரசு எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்து, 6, 7, 8-வது வகுப்புகளைப் பொறுத்தவரையில், தமிழர்களாக நம்முடைய மக்களை வளர்க்க விரும்புகிறேன். ஒரு மனிதனை மொழி உணர்வோடு வளர்ப்பது என்பது அவ்வளவு எளிதன்று. மொழி உணர்விலே அவன் வளரவேண்டுமென்றால், தமிழ் நாட்டில் படிக்கின்ற மாணவர்களை தமிழ் படிக்கச் செய்யும்போது, நல்ல தமிழ் ஆசிரியர்களை, அந்த மொழியை நல்ல உச்சரிப்போடு, இலக்கிய, இலக்கணப் பிழை இல்லாமல் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களை நியமனம் செய்வோமானால், அவன் சிறந்த தமிழ் உணர்வு பெற்றவனாக இருக்க முடியும். அவனுடைய தமிழ் எப்படி சிறந்த வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும் பார்க்கலாம். நாம் கங்கையென, காவிரி என, தமிழ் ஆர்வம் பொங்கித் ததும்பி வருகிறது என்று 1962, 1963, 1964, 1965, 1966-ல் எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தோம். ஆனால் நம் நாட்டில் இந்திப் படங்கள் பல நூற்றுக்கணக்கான நாட்கள் ஓடுகின்றன என்று சொன்னால், அது இங்கே மொழி உணர்வு சாம்பிப்போவதுபோல் தெரிகிறது, மங்கி மறைவதுபோல் தெரிகிறது. எனவே, இளம்

தலைமுறையினரிடம் நல்ல தமிழ் உணர்வை வளர்க்க வேண்டும் என்றால் உயர் தொடக்க வகுப்பில் 6-வது, 7-வது, 8-வதிலாவது தமிழாசிரியர்களை நிச்சயமாக நியமிக்க வேண்டும். தொழில் ஆசிரியர்களுக்குத் தொழிற் கருவிகளை வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான செய்தி. ஆசிரியர்கள் ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில், தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையிலே, அரசு அவைகளை இரண்டாம் தரப் பள்ளிகளாகக் கருதுவது போலத் தெரிகிறது. பொதுவாக ஆசிரியர் ஒதுக்கீடு வந்தவுடன் அரசப் பள்ளி களுக்கும், அடுத்து இரண்டாம் தரப் பள்ளிகள் போல கருதி, தனியார் பள்ளிகளுக்கு இருந்தால்தான் கொடுப்பது என்று எண்ணுகின்றார்கள். தனியார் பள்ளிகள் கொஞ்சம் சிறப்பாக நடக் கின்றன என்று பெயர் வாங்குவதால், அரசுப் பள்ளிகளை அவைகளை விட உயர்த்த வேண்டும் என்பதற்காக, மறைமுகமாகச் செய்கின்ற னரோ என்றே கூட நமக்குத் தோன்றுகிறது. ஆகவே, ஆசிரியர்கள் விகிதாசாரத்தை ஒதுக்குகின்றபோது, அன்புகூர்ந்து தனியார் பள்ளி களுடைய தேவைகளுக்கும் தகுந்தவாறு செய்ய வேண்டும். நாம் எல்லோருக்கும் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துவிட முடியாது. அரசுக்கு, குறிப்பாக நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்கு, இருக்கின்ற நிதி நிலைமை, நெருக்கடியை அறிந்தே சொல்கிறேன். கிடைக்கின்ற ஒதுக்கீட்டில் நூறு கிடைக்கிறது என்று சொன்னால், 20 அல்லது 25 விழுக்காடு என்று தனியார் பள்ளிகளுடைய எண் ணிக்கைகளுக்குத் தகுந்தவாறு கொடுக்க வேண்டும் என்பதையும் சொல்ல வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கொஞ்ச நாட்களாக விஞ்ஞானக் கருவிகள், தேவை யான பொருள்கள் வாங்குவதற்கு மானியக் கோரிக்கைகள் பெரிய அளவில் இருந்தாலும், அது பெரும்பாலும் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குத்தான் கொடுக்கப்படுகின்றது. யாராவது இரண்டொருவர் தான், கேட்டு வாங்க முடிந்தவர்கள்தான் வாங்க முடிகிறது. பொது வாக பள்ளிகளுக்கு என்று போகின்ற சலுகைகள், பொருட்கள் சாக்பீஸ் சிலேட், சுழற்சி முறை வைத்து ஆண்டுக் கணக்கில் வைத்து, மாணவர்கள் எண்ணிக்கைக் கணக்காவது வைத்து, எல்லாருக்கும் கொடுக்கின்றது போல வழங்க வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் உணர்வு பற்றி நம்முடைய நண்பர் திரு. அறிவுடைநம்பி அவர்கள் தமிழால் வளர்ந்தோம் தமிழால் வளர்ந்தோம், தமிழால்தான் இவ்வளவு பெருமை வந்தது என்றெல்லாம் கூடச் சொன்னார்கள் ஆனால் இந்த 30 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் நாட்டினுடைய கல்வி நிறுவனங்களின் பட்டியலைப் பார்த்தால், இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்கள் எண்ணிக்கைதான் மிகுதியாக வளர்ந்துகொண்டு வரு கின்றது. அதனுடைய வளர்ச்சியைப் பார்க்கும்போது, இனி மேட்டுக்குடி முழுவதும் தமிழால் பலனில்லை என்று கருதி இங்கிலீஷ் மீடியத்திலே சேர்ந்துவிடுவார்கள். தங்களுடைய தரத்தை உயர்த்திக் கொள்ள

முயற்சிக்கின்றார்கள். ஆங்கிலம் நிச்சயமாக நடுவண் அரசினுடைய ஆட்சி மொழி ஆதலாலே மத்திய அரசினுடைய சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குப் போவதற்கு ஏற்றாற்போல் அவர்கள் தங்களுடைய தரத்தைப் பாதுகாத்துக் கொண்டு வருகின்றார்கள். ஆனால், கீழ்க் குடியினராகத் தாழ்த்தப்பட்டிருக்கின்ற மக்கள், பின் தங்கிய மக்கள் இப்படிப்பட்டவர்கள் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்களுக்குப் போகின்ற வாய்ப்பு இன்மை காரணமாக, வசதியின்மை காரணமாக, அவர்கள் பின் தங்கியிருக்கின்றார்கள். உடனடியாக அரசு இதைக் கவனத்தில் கொண்டு தமிழைக் கல்வி மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் செய்ய வேண்டும். இங்கிலீஷ்மீடியம் பள்ளிகளைப் பொறுத்து, ஏதாவது சிறந்த வழி முறைகளை வகுத்து ஒரு எல்லைக் கோடு நிர்ணயிக்க வேண்டும். அப்படி நிர்ணயித்தால் மட்டும் போதாது. நூறு மாணவர்கள் அங்கே இருந்தால், குறைந்தபட்சம் சாதாரண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கேயும் சேர்ந்து படித்து முன்னேற அரசு மான்யம் கொடுத்து அவர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவர் களுடைய தரம் உயர முடியும். இந்த இங்கிலீஷ் பள்ளிகளிலேயே சாதாரண ஒரு அரிஜன சகோதரர் போய்ப்படித்து வருவது என்பது அவ்வளவு சாத்தியமில்லை, காரணம் பொருளாதார வசதி இருப்ப தில்லை. அந்தச் சூழ்நிலையை அவர்களால் கடைப்பிடிக்க முடிய வில்லை. இவைகளையெல்லாம் நம்முடைய அரசு எண்ணிப்பார்க்க வேண்டும்; அதற்கு ஏற்றவாறு தமிழ் மொழியினுடைய வளர்ச்சி இருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னது போல, ஊக்கம் கொஞ்சம் தளர்ந்திருக்கின்றது, உற்சாகம் குறைந்து கொண்டு வருகிறது. அது எதனாலே என்பது பற்றி நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழைப் பயிற்சி மொழியாக வளர்க்க வேண்டும் என்பது நாம் 15 ஆண்டுகளாகக் கொண்டிருக்கின்ற கொள்கையாகும். தமிழினைப் பயிற்சி மொழியாக வளர்ப்பதன் மூலம் தமிழ் வளரும் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இல்லை. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் விவ சாயப் பல்கலைக் கழகத்திலே பேசுகின்றபோது, சொன்னார்கள். "தமிழ் வளர வேண்டும் என்பதற்காக நாம் தமிழைப் பயிற்று மொழி யாக்கச் சொல்லவில்லை. தமிழ் மூலம் பயின்றால், அறிவு வளர வேண்டும் என்பதற்காகத்தான்" என்று. காரணம் விரைவாக அறிவு வளரும், காரணம் சிந்திக்கின்ற மொழி நமக்கு தமிழ்தான். யாரோ ஒருவர் இருவர் ஆங்கிலத்திலேயே சிந்திக்கலாம். திரு. தாமோதரன் போன்றவர்கள் ஆங்கிலத்திலேயே சிந்திப்பார்கள். தமிழ் நாட்டிலே அப்படிப்பட்டவர்கள் குறைவானவர்களாகத்தான் இருப்பார்கள். இரண்டு மூன்று தலைமுறைகள் ஆங்கிலத்திலே சிந்தித்துப் பேசக் கூடியவர்களாக இருந்தால்தான் ஆங்கிலத்தில் சிந்திக்க முடியும். ஆகவே சாதாரண மாணவனுக்கு சிந்தித்து உணரக்கூடிய வகையில் அதைச் சொல்லிக் கொடுத்தால், அது சீக்கிரமாகப் புரியும். சாதாரண மாக அவர்களுக்குச் சிந்தனை மொழியிலேயே சொல்லிக் கொடுத்தால் சீக்கிரம் மனதில் பிடிக்கும். நாம் வகுப்பறையிலே கூடப் பார்க்கலாம். தமிழ் வகுப்பிலே ஆசிரியர்களைக்கூட திக்குமுக்காட வைக்கின்ற அள

னுக்கு மாணவர்கள் கேள்விகளைக் கேட்பதுபோல், பிற மொழி வகுப்புகளிலே கேள்விகளைக் கேட்பதில்லை. காரணம் என்னவென்றால் அவனுக்குப் புரிவதில்லை. அவன் கேட்பதில்லை. இந்த அடிப்படையிலே இருப்பதை நாம் பார்க்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நேரம் அதிகமாகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தமிழ் பயிற்சி மொழியை அன்புகூர்ந்து வளர்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், அதற்குக் கொடுக்கின்ற உதவி நிதியெல்லாம் வீணாகிறது என்று சொன்னார்கள். அன்புகூர்ந்து அவர்கள் அப்படிச் சொல்லக் கூடாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். ரூ. 50, ரூ. 100 என்று கொடுக்கின்றோம். அதைத் தமிழ் புத்தகங்களாகக் கொடுங்கள். ஸ்காலர்ஷிப்பாகக் கொடுக்கின்றபோது அந்தப் பணத்தை அவர்கள் 'வேஸ்ட்' பண்ணுகின்றார்கள் என்றுதான் சொன்னேன்.

(பிற்பகல் 7—00)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: சாதாரணமாக மாணவர்களுக்குப் பணம் கொடுப்பதிலேயும், பின்தங்கியவர்கள் படிக்கக்கூடிய உதவித் தொகைகள் மாணவர்களுக்குக் கொடுக்கப் படுவதனாலேயும்தான் அந்த மாணவர்கள் அந்தப் பணத்தை யூனியன் தேர்தலிலே எல்லாம் செலவு செய்துவிடுகிறார்கள். இதற்கு வேறு வழி வேண்டும் என்பது சிறந்த ஆலோசனை. அதுமட்டுமல்ல, நிதி வழங்கப்படுவது பற்றி அண்மையிலே அரசு ஓர் உத்தரவு பிறப்பித்தது. அது எனக்கே மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. தமிழிலே பயிற்சி பெறுகிறவர்கள் தமிழிலே தேர்வு எழுதாது போனால், தான் பெற்ற உதவித் தொகையைத் திருப்பித் தந்துவிட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. என்ன விவகாரம் என்று நாம் ஆலோசிக்கிற போது, தமிழிலே பயிற்சி பெறுகிறவர்கள் தமிழிலேயே தேர்வு எழுத வேண்டும் என்ற நிபந்தனையை அரசு விதிக்கவில்லை. பல்கலைக்கழகம் சொல்கிறது, இன்ன மொழியில்தான் தேர்வு எழுத வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்த முடியாது. அப்படி அவர்களை நிர்ப்பந்தப் படுத்தினால், அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குப் போவார்கள். ஆகையினாலே அரசு ஒரு சலுகையைக் கொடுப்பதனாலேயே அந்தச் சலுகையின் காரணமாகவே, தமிழிலேதான் தேர்வு எழுத வேண்டும் என்று அரசு வலியுறுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இதில் இருக்கிற சிக்கலை எல்லாம் தீர்த்து பயிற்சி மொழி இயக்கத்தை மேலும் தெளிவாக வலியுறுத்தி, குறிப்பாக, நம் தமிழ் மொழி அறிவியலில் சிறந்த மொழியாக வளர்க்கப்பட வேண்டும் தமிழ் மொழி காலத்திற்குக் காலம் வளருகிறது என்று சொன்னால், அது இன்னும் புறநானூற்றையும், அகநானூற்றையும் ஐங்குறுநூற்றையும் பிற இலக்கியங்களையும் பெற்றிருக்கிற மொழியாக இருக்கிறது என்று

சொல்லுவதற்குப் பதிலாக, தமிழர்களும் விண்வெளிப்பயணத்திற்கு போகிறார்கள்; தமிழர்களாலேயும் இந்தத் துறையில் ஆய்வு செய்ய முடியும் என்ற நிலை வர வேண்டும். அந்த வகையில் 'மெத்த வளர்ந்த மேற்கே புத்தம் புதிய கலைகள்' என்று பாரதி சொன்னானே அந்தப் புதிய கலைகளைத் தமிழிலே கொண்டு வருகிற முயற்சியை விரைவுபடுத்த வேண்டும். பாவேந்தன் பாரதிதாசன் சொன்னான் "சாதாரணமாக நாட்டுமக்கள் கடை வீதியிலே சந்திக்கும்போது, என்றைக்கு அறிவியலையும்" பொருளியலையும், சமூகவியலையும் தன்னிச்சையாகக் கலந்து பேசுகிறார்களோ, அன்றைக்கு அறிவு வெள்ளம் வரும், சமுதாயம் நிச்சயமாக புரட்சி மாற்றத்தை அடையும்' என்று இன்றைக்கு அப்படிப்பட்ட பேச்சுக்கு வாய்ப்பு இல்லை, ஒன்று அரசியலைப்பற்றிப் பேசுவார்கள் அல்லது திரைப்பட விமரிசனம் செய்வார்கள். இந்த இரண்டைத் தவிர நான்கு பேர் கூடினால், அவர்கள் பேசுவதற்கு எந்தப் புதிய செய்திகளும் கிடைப்பதில்லை. கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையைக்கூட நம்முடைய நாட்டிலே படித்தவர்கள் வளர்ப்பதில்லை, இந்தக் குறையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அந்த வகையில் தமிழ் பயிற்சி மொழி இயக்கத்தை மேலும் வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நேற்று முன்தினம்கூட நம்முடைய உறுப்பினர் அவர்கள் நினைவூட்டினார்கள் கல்லூரிகளைத் திடீரென்று மூடி விடுகிறார்கள். தமிழைப் பயிற்சி மொழியாகப் பெற்றுக் கற்க மாணவர்கள் வருகிறார்கள். ஆனால் அவர்கள் பயிற்சி மொழி பற்றி பயிற்சி பெற வேண்டுமென்று சொன்னால் அதற்குரிய வகுப்புகள் கிடைப்பது இல்லை. திருநெல்வேலி, பாபநாசம் முதலியவைகளைப்பற்றி நண்பர் திரு. திராவிடமணி அவர்கள் சொன்னார்கள். தமிழிலே பயில்கிற கல்லூரியிலிருந்து அவர்கள் பயின்று வந்த பிறகு அவர்களுக்கு போதனா மொழி வகுப்பு கிடைப்பதில்லை. தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியிலே இருந்தது. இருந்தது அங்கே இருந்த முதல்வருக்குப் பிடிக்கவில்லை. மூடிவிட்டார்கள். இப்படித் தனிமனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்றவாறு வகுப்புகளை மூடுகிற அளவுக்கு கல்வியினுடைய சுதந்திரம் பறிக்கப்படக்கூடாது என்று நினைவூட்டிக் கொள்கின்றோம். சில அரசாங்கக் கல்லூரிகளைப் புதிதாகத் தொடங்குகிறார்கள். அங்கே நிர்வாகிகளாக வருகிறவர்கள் அனுபவமின்மையின் காரணமாக சில தவறுகளைச் செய்கிறார்கள். 1970ஆம் ஆண்டிலிருந்து பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரிக்கு கட்டிட மானியம் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏதாவது ஒரு குறையைச் சொல்லி அதைத் திருப்பி விடுகிறார்கள். சாதாரணமாக ஜனநாயக நாட்டில் எல்லா மக்களும் ஆளுகிறவர்களாகவும், ஆளப்படுபவர்களாகவும் ஆக்கப்படுவதுதான் அதனுடைய கோட்பாடே. அதனால் சாதாரண மக்கள்கூட சிறந்த நிர்வாகிகளாக்கப்பட வேண்டும். அப்படி அவர்களுக்குச் சிறந்த வழிவகைகளைக் கற்றுக் கொடுத்து வழி நடத்தி இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லி, சாதாரண அப்ஜக்ஷனைச் சொல்லித் திருப்பி விடாமல் இந்தக் கல்லூரிக்கு சம்பந்தப்பட்டவர்களை எல்லாம் வளர்க்க வேண்டும் என்று கூறி, கல்வியினுடைய அருமையைக் குறித்து வேறு சில முக்கியமான ஆலோசனைகளை மட்டும் கூறி முடிக்க நான்

ஆசைப்படுகிறேன். தலைவர் அவர்கள் அதற்கு அனுமதி அளிக்க வேண்டுகிறேன். அடுத்து, தமிழைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு அதற்கு ஒரு தனித் தலைப்பு கிடைத்திருக்கிறது, அந்த அளவுக்கு மகிழ்ச்சியடையலாம். அதைவிடச் சிறப்பாக, அருமை நண்பர் திரு. அறிவுடைநம்பி சொன்னதைப்போல்; இன்னும் பல்வேறு தலைப்புகளிலே தமிழ் வளர்ச்சிக்கு நிறையப் பணம் ஒதுக்கப்பட வேண்டும். தமிழ் இன்னும் ஒரு அறிவியல் மொழியாக வளரவில்லை. பல்கலைக்கழகம் திருக்குறளைப்பற்றி, எங்கெங்கெல்லாம் இலக்கியங்களிலே கையாளப்பட்டிருக்கிறது என்று ஏதோ ஒரு அகராதிக்குறிப்பை ஆராய்ச்சிக் கழகங்களில் செய்து கொண்டிருக்கிறது. சில பணிகள் நல்ல பணிகளாக இருந்தாலும், பல பணிகள் நமக்குப் பயன்பட வேண்டும். இந்திய அரசியல் சட்டத்திலே திருக்குறள் எந்த வகையிலே இசைந்திருக்கிறது? எந்தெந்த இடங்களுக்கு எந்தெந்த குறள் இசைந்து வருகின்றது? அதை ஒரு வாழ்வியல் நூலாக ஆக்க முடியுமா முடியாதா? திருவள்ளுவரை நிறைந்த புகழ் உணர்ச்சியோடு போற்றிப் பேசுகின்ற நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருக்கிற காலத்தில், தமிழ் வளர்ச்சித் துறையில் திருவள்ளுவருடைய நூலை வாழ்வியல் நூலாக ஆக்க முடியும் என்று நாம் செய்ய முடியாதுபோனால், நாம் செய்கிற சட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் திருக்குறள் தலைப்பிட்டு இன்ன திருக்குறளின் கருத்துப்படி இந்தச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது என்று நாம் வலியுறுத்த முடியாது போனால், நாம் இந்தத் தலைமுறையில் செய்யத் தவறினால் வேறு யார் செய்வார்கள்? இரண்டாயிரம் ஆண்டுகள் ஆயின, திருவள்ளுவரின் திருக்குறளைப் பாராட்டுகிறவர்கள் அரசுக் கட்டிலுக்கு வருவதற்கு. அவர்கள் வந்தபோதும்கூட அது ஒதுக்கிடத்திலே இருந்துவிடுமானால், அது எப்போதும் அரியணை ஏற முடியாது. அந்த வகையிலேகூட நம்முடைய அரசு சிந்தித்துப்பார்க்க வேண்டும். இந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி தொகுக்கிற பாவாணர் அவர்களுக்கு ஒரு புலவர் துணைக்குச் சமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். பெரிய பொறுப்புள்ள பணி. ஒருவராகச் செய்ய முடியாது. ஆகையால் இன்னொரு புலவரைக் கேட்டிருக்கிறார்கள். அன்புகூர்ந்து அதை அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனித்தமிழ்க் கல்லூரிகள் நம்முடைய நாட்டிலே 12 தான் இருக்கின்றன. அதிலே பணி செய்கிற ஆசிரியர்கள் 65 பேர்கள். ஆனால் அவர்களுக்கு மருத்துவ உதவி கிடையாது. அங்கே ஆசிரியர்களாக வேலை பார்க்கிறவர்கள் எந்த விதமான பதவி உயர்வுகளுக்கும் போக முடியாது. அவர்களுக்குத் தேர்வு நிலையும் இல்லை. அவர்கள் புலவராக இருந்து கல்லூரிகளிலே பாடம் சொல்லிக் கொடுத்தாலும், உயர்நிலைப்பள்ளிப் புலவருக்குள்ள சம்பளமே பெறுகிறார்கள். இப்படி மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள். தமிழே மூச்சுக்காற்றாக இருக்கக்கூடிய அரசு அமைந்திருக்கிறபோது, தனித் தமிழ்க் கல்லூரி ஆசிரியர்களுடைய நிலைமைகள் மிகுந்த வருத்தத்திற்குரியனவாயிருக்கிறது. ஆனால் அவர்கள் நல்ல காலம், சில ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடியதில் அங்கே இருக்கிற பேராசிரியர்களுக்கு ஊதிய விகிதங்களை மாற்றி அண்மையில் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இன்னும் அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதில்....

புலவர் ஓ. அறிவுடைநம்பி: அந்தக் கல்லூரிகள் பட்டம் தருகிற கல்லூரிகளாக அடுத்த ஆண்டிலிருந்து மாறுகிறது. அப்பொழுது....

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: அதை நான் சொல்லலாமா வேண்டாமா என்று நினைத்துக் கொண்டிருந்தேன். சென்ற இரண்டு ஆண்டுகளாக வித்வான் பட்டத்தை டிகிரி ஆக்க வேண்டுமென்று இங்கே தொடர்ந்து பேசப்பட்டது. நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் அதுபற்றி நல்லவிதமாக முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது, அநேகமாக வித்வான் பட்டத்தை டிகிரி பட்டமாக ஆக்கும் என்று. அதற்குப் பிறகாவது அதனுடைய தரங்கள் உயர்த்தப்பட வேண்டும். தனித் தமிழ் கல்லூரி ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதங்கள் கொடுக்கப்பட வேண்டும். மருத்துவ உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வகையில் கருத்துக்களைத் தருவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-00 மணிக்குக் கூடும். பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-07)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders*

159. Notification issued with G.O. Ms. No. 1931, Rural Development and Local Administration, dated the 29th August 1974, in regard to framing of certain rules under the Tamil Nadu Panchayats Act, 1958. (*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958)).

160. Notification issued with G.O. Ms. No. 2456, Rural Development and Local Administration, dated the 20th November 1974 in regard to amendments to the Tamil Nadu Municipal Medical Service Rules, 1970 (in part III-Special Rules Section 4 of the Tamil Nadu Municipal Services, 1970). [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920)].

B. Reports, Notifications and Other Papers.

123. Policy Note on Demand No. 31, relating to Welfare of Scheduled Castes and Scheduled Tribes, 1975-76. (English and Tamil).

124. Performance Budget on Harijan Welfare 1975-76.

125. Housing in Tamil Nadu, 1974-75 (English & Tamil)

126. Slum Clearance in Tamil Nadu, 1974-75 (English and Tamil).

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

வியாழக்கிழமை, 3 ஏப்ரல் 1975

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில முற்பகல் 10 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. சி.பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

தமிழ்நாட்டில் கல்வி முன்னேற்றம் குறித்த கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின் முன்பாக கல்வி வளர்ச்சி குறித்து கல்வி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கக் கூடிய அறிக்கையின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். பொதுவாக இந்த நிதி ஆண்டிலே, 1975-76-வது நிதி ஆண்டிலே 118 கோடி ரூபாயை கல்விக்காக ஒதுக்கியிருப்பதாக கல்வி அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஒரு நாட்டு கல்வியினுடைய தரத்தை, கல்விக்காக எவ்வளவு செலவு செய்கிறோம் என்ற தொகையை வைத்து நிர்ணயிப்பது சாலச்சிறப்புடையதல்ல என்ற கருத்தை நான் இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக நான் கல்வி பயிலுகின்ற நேரத்திலே நான் பள்ளி இறுதிக் கல்வியைப் பெறுவதற்காக என்னுடைய பெற்றோர் செலவு செய்த தொகையையும் இன்றைய தினம் என்னுடைய பிள்ளைகள் கல்வி இறுதி வகுப்புக் கல்வியைப் பெறுவதற்காக நான் செலவு செய்யக்கூடிய தொகையையும் ஒப்பிட்டு, என்னுடைய குழந்தைகளைப் பார்த்து, "நான் பள்ளி இறுதி வகுப்பு வரையிலே கல்வி பயில்வதற்கு என்னுடைய தந்தை ஆயிரம ரூபாய் செலவு செய்தார். ஆனால் உனக்காக இப்பொழுது 10 ஆயிரம் ரூபாயைச் செலவு செய்திருக்கிறேனே" என்று நான் சொன்னால், அவன் என்னைக் காட்டிலும் அதிகம் அறிவு படைத்தவன் என்று பொதுமக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே 1967-க்கு முன்பாக கல்விக்காக தமிழகத்திலே இவ்வளவு செலவு செய்யப்பட்டது, இன்றைய தினத்திலே 118 கோடி ரூபாயை கல்விக்காக செலவு செய்கிறோம் என்று சொன்னால், கல்விக்கான செலவுத்தொகையை வைத்து இந்த நாட்டிலே கல்வி அதிகமாக வளர்ந்து விட்டது என்று நம்மால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் இந்திய அரசியல் சட்டம் என்ன சொல்கிறது என்று நாம் பார்க்கின்ற நேரத்திலே, 14 வயது வரை அத்தனை பேர்களுக்கும் கட்டாயமாக கல்வியை, ஆரம்பக் கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று கூறுகின்றது. மற்ற மாநிலங்களைக்காட்டிலும் இந்த மாநிலம் மிக அதிகமாக முன்னேறியிருக்கிறது என்று பெருமைப் பட்டுக் கொண்டாலும், என்னைப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களுக்

காக வாதாடுவதற்காக இந்த அவை இல்லை. இந்தத் தமிழ் மாநிலத்தைப்பற்றி வாதாடுவதற்காகத்தான் இந்த அவை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மற்ற மாநிலங்களுக்காக வாதாடவில்லை. மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டுகிறார்கள்.

திரு. வி. வெங்கா: உதாரணம் காட்டுகிறார்கள் என்று தலைவரவர்கள் சொல்லுகிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில், கல்வியைப் பொறுத்த வரையில், எப்படி உதாரணம் காட்ட வேண்டுமென்று நம்முடைய சங்க இலக்கியங்களில் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அதிகம் செல்வம் படைத்தவன், அவனை விட செல்வம் குறைவாகப் படைத்திருக்கிறானே அவனைப் பார்த்து அவனை விட அதிகம் செல்வம் படைத்திருக்கிறோம் என்று திருப்தி அடைய வேண்டும்; அதே நேரத்திலே கல்வி அறிவு படைத்தவர்கள் மற்றவர்கள் அதிகம் அறிவு படைத்திருக்கிறார்கள், நாம் குறைவாகத்தானே கல்வி அறிவு பெற்றிருக்கிறோம் என்று பொறாமைப்பட வேண்டுமென்று நம்முடைய சங்க இலக்கியங்கள் சொல்லுகின்றன. சங்க இலக்கியங்களிலே அக்கறை இருக்கக்கூடிய நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும், தலைவர் அவர்களும் இதை ஒப்புக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே மற்ற மாநிலங்களை விட நாம் முன்னேறியிருக்கிறோம் என்று வாதம் செய்வதைக் காட்டிலும், அரசியல் சட்டத்திலுள்ள குறியீட்டை நாம் எய்தியிருக்கிறோமா என்று பார்ப்பதுதான் இன்றையதினம் முக்கியமான கேள்வி என்று நான் கருதுகிறேன். சுதந்திரம் எய்தி 27 ஆண்டுகளாகி விட்டன. அதிலே இந்த அரசு அமைந்து ஏறத்தாழ 8 ஆண்டுகள் முடிந்து 9-வது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றையதினம் 14 வயது வந்த அனைத்து பிள்ளைகளுக்கும் நாம் கல்வியைப் படைத்திருக்கின்றோமா என்று பார்க்கின்ற நேரத்திலே, இந்த அறிக்கையிலே 6 வயதிலேயிருந்து 11 வயதுவரை இருக்கக்கூடிய பிள்ளைகள் 90 சதவிகிதம் பேர்கள்தான் கல்வி பெறுகிறார்கள் என்று புள்ளிவிவரத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதேமாதிரியாக 11 வயதிலேயிருந்து 14 வயதுவரை இருக்கக்கூடிய பிள்ளைகளில் 52·6 சதவிகிதம் பேருக்குத்தான், ஏறக்குறைய சரிபாதி பேருக்குத்தான், கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆக 8-வது வகுப்பு வரையிலே இன்னும் சரியான கல்வி இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்குக் கொடுக்கவில்லை. இன்னும் சரிபாதி மாணவர்கள், பிள்ளைகள் 8-வது வகுப்பு வரையிலே கல்வி பயிலாமல் இருக்கிறார்கள். ஆனால் இந்த நிதியாண்டிலே இவர்கள் எத்தனை பேரைச் சேர்ப்பதாக இந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், ஏறக்குறைய 50 ஆயிரம் பேரைத்தான் சேர்ப்பதற்காக வழி வகுத்திருக்கிறார்கள். ஆக இந்திய அரசியல் சட்டத்திலே 14 வயது வரையிலே இருக்கக் கூடியவர்களுக்கு கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கக்கூடிய அந்த இலக்கினை தமிழக அரசு இன்னும் எய்தவில்லை என்பதைத்தான் இந்த அறிக்கையிலேயிருந்து என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

அதையடுத்து கொடுக்கப்படக்கூடிய கல்வியானது தரமான கல்வியாக இருக்கிறதா என்று பார்க்கிற நேரத்தில், நிச்சயமாக இல்லையென்ற முடிவுக்குத்தான் என்னால் வரமுடிகிறது. இங்கே கூட புள்ளிவிவரம்

கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர் மாணவர் விகிதாசாரத்தை இங்கே எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துப் பேசினார்கள். அதிலே ஓர் ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற விகிதாசாரத்திலே பணியாற்றுகிறார்கள் என்பதை இந்தப் புள்ளிவிவரத்தைக் கொடுத்த இலாகாவினர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சுவாமிநாதன் அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும் சொல்லியது போன்று, இது போதிக்கக்கூடிய ஆசிரியர்களை மட்டுமல்லாமல் மற்ற ஆசிரியர்களையும் சேர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஒரு கணக்காக இருக்கிறது. ஆகவே அதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் அரசு ஆணை இருக்கிறது. 250 எண்ணுடைய அரசு ஆணையைப் போட்டிருக்கிறார்கள். அந்த அரசாணையில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? ஒவ்வொரு வகுப்பிலேயும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் எவ்வளவு மாணவர்கள் இருக்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதை அமுல்படுத்தக்கூடிய அதிகாரத்தை உள்ளாட்சித் துறைகளுக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை. அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இப்பொழுது அறிக்கையிலேயே ஒரு சாட்சியத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது 6 வயது முதல் 11 வயது வரை இருக்கக்கூடிய மாணவர்களுக்கு இந்த ஆண்டு 400 புதிய ஆசிரியர்களைக் கூடுதலாக நியமித்திருக்கிறார்கள், அதுமாதிரி 11 வயது முதல் 16 வயது வரை இருக்கக்கூடிய மாணவர்களுக்காக 600 ஆசிரியர்களை இந்த 1975–76 ஆம் நிதியாண்டிலே நியமிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். ஆக இந்த நிதியாண்டு பூராவுக்கும் ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இது அரசினுடைய உத்தரவுகளுக்கு நேர் முரணான உத்தரவுகளாக இருக்கிறது. அரசினுடைய 250 ஜீ.ஓ. என்ன சொல்கிறது என்று சொன்னால், ஒரு பள்ளியிலே இத்தனை மாணவர்கள் இருந்தால், இத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற ஒரு வரையறை செய்திருக்கிறார்கள். அவ்வாறு அரசு ஒரு வரையறையைச் செய்ததற்குப் பிறகு அந்தப் பள்ளியை நிர்வகிக்கக் கூடிய நிர்வாகிகள் தகுந்த ஆசிரியர்களை நியமித்துக் கொள்வதிலே என்ன தவறு இருக்க முடியும்? பொதுவாக ஊராட்சி ஒன்றியத் தலைவனாக இருக்கக்கூடிய நான் என்னுடைய அனுபவத்திலே ஒன்றைமட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன், எங்கள் ஊரிலே இருக்கக்கூடிய ஒரு பள்ளியிலே மாணவர்களுடைய விழுக்காடு அதிகமாக இருந்தது. அதற்கு உரிய ஆசிரியர்கள் எத்தனை பேர் என்று சொன்னால், பொதுவாக நான் இருக்கிற ஊராட்சி ஒன்றியத்திற்கு கடந்த ஆண்டிலே 25 ஆசிரியர்கள் தேவைப்பட்டார்கள். சட்டப்படி 25 ஆசிரியர்கள் தேவை என்று நான் அங்கே இருக்கக்கூடிய பள்ளி ஆய்வர் மூலமாக டி.இ.ஓ அவர்களுக்கு அதாவது மாவட்டக்கல்வி அதிகாரி அவர்களுக்கு அறிக்கை அனுப்பினேன். எனக்கு இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. நேராகப்போய அவரைச் சந்தித்துக் கேட்ட நேரத்திலே. தனிப்பட்ட முறையிலே அவர்கள், எங்களுக்கு 'அலாட்மெண்ட்" இல்லையென்று சொல்லுகிறார்கள். எனவே கொடுக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். நீங்கள் சொல்லுவதை அப்படியே எழுத்து மூலம் கொடுங்கள் என்று சொன்னால், "நாங்கள் எப்படி கொடுப்பது? பரிசீலனையிலே இருக்கிறது என்று வேண்டுமானால்

கொடுக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஒன்றுக்கு ஒன்று நேர் முரணானதாக இருக்கிறது. இங்கே ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கப் போகிறோம் என்று பெருமையாகச் சொல்லுகிறார்கள். அங்கே 'அலாட்மெண்ட்' இல்லையென்று இலாகாவைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். நாட்டிலே இருக்கக்கூடிய உண்மை நிலைமை என்னவென்றால், ஆசிரியர் தொழிலுக்குப் பயிற்சி பெற்றவர்கள் என்னுடைய உள்ளாட்சி ஒன்றிய எல்லைக்குள்ளாகவே ஏறக்குறைய 500 பேர் வேலையில்லாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒன்றுக்கொன்று முரணான சூழ்நிலைதான் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றது.

(முற்பகல் 10–10)

அதே மாதிரியாக, உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், நடுநிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், 6-வதிலிருந்து 8-வது வரை தமிழ்ப் பாடங்களை மற்ற ஆசிரியர்கள்தான் சொல்லிக்கொடுக்கிறார்கள். அந்த மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க, தமிழ் ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று விதிமுறைகளை அரசு வகுத்திருக்கிறது. அது மாதிரி உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஆரம்பக் கல்வி கொடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தகுந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. ஆசிரியர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் தான் சம்பளம் கொடுக்க வேண்டும் ஊராட்சி ஒன்றியங்கள் அந்த விதிகளுக்கு முரணாக நியமனங்கள் செய்திருந்தால், 'அலாட்மெண்ட்' கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இன்னொரு முரண்பாட்டையும் சொல்லுகிறேன். ஜி.ஓ. 250-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், இத்தனை மாணவர்களுக்கு இத்தனை ஆசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று. அதன்படி நியமிக்கிறோம். அடுத்த ஆண்டும் அதே அளவு மாணவர்களின் எண்ணிக்கை இருக்குமா? இருக்கும் என்று நிரந்தரமாகச் சொல்ல முடியாது. எண்ணிக்கை உயரலாம், குறையலாம். மாணவர்களின் எண்ணிக்கை குறைகின்ற நேரத்தில், ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்று அந்த ஜி.ஓ. சொல்லுகிறது ஒரு செக்ஷனில். அடுத்த செக்ஷனில், அப்படிக் குறைகின்ற நேரத்தில் ஆசிரியர்களை வேலை நீக்கம் செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்கள் நியாயம், நான் ஒத்துக்கொள்கிறேன் நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்போது, ஏற்கெனவே இருப்பவர்களை எடுத்துவிடக்கூடாது என்பது அரசின் நோக்கம். அதைப் புரிந்துகொள்ள முடியும். அதற்கு அடுத்தாற்போல் என்ன சொல்லுகிறார்கள்? அப்படிச் சம்பளம் கொடுத்தால், அதற்கு சர்க்கார் மான்யம் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். ஒரே ஜி.ஓ.வில் உள்ள இந்த முரண்பாடான கருத்துக்களை கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் தலைவராக இருக்கின்ற அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் இந்த மாதிரி நிலைமையேற்பட்டு, ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் திருப்பிக்கட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். என்னுடைய ஒன்றியத்திற்கு மட்டுமல்ல, அத்தனை ஒன்றியங்களுக்கும் பாதகம் விளைவிக்கும் ஜி.ஓ.வாக இருக்கிறது. அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, ஏதோ அரிசன நலப் பள்ளிகள் என்று இருக்கின்றன. அவை தேவைதானா என்பதை இந்த மன்றம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, அரிசன நலப் பள்ளி தேவை தானா என்ற கேள்வியை உறுப்பினர் கேட்டிருக்கக் கூடாது. இந்தியாவிலே, புறக்கணிக்கப்பட்ட இந்தச் சமுதாய மக்களுக்காக, இந்த நாட்டின் பல பெரியார்கள், இப்படிப்பட்ட ஒரு அமைப்பு இருக்கவேண்டும் என்று முடிவு எடுத்து, அரசியல் சட்டத்தில் இடம் பெற்று விட்ட அமைப்பு இதுவாகும். இந்தப் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகை இருந்தாக வேண்டும் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டாம் என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, அரிசன நலப் பள்ளிகள் இருக்கலாமா என்ற கருத்தைக்கூட எழுப்பக்கூடாது என்று சொல்லுகிறார்கள். என்னுடைய கருத்தை, தலைவரவர்களே, உங்கள் மூலமாகச் சொல்லுவதற்கு உரிமைபெற்றவனாக இருக்கிறேன் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அவசரப்பட்டு பதில் சொல்ல முற்பட்டு விட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அப்போதைக்கப்போது சொல்லாவிட்டால், பிறகு மறந்து விடலாம் என்பதற்காகச் சொல்லியிருக்கலாம்.

திரு. வி. வெங்கா: அரிசன மக்களுக்கு, அந்தச் சலுகை கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. அங்குள்ள அரிசன நலப் பள்ளிகளில் உண்மையிலேயே தரமான கல்வி போதிக்கப்படவில்லை. டான் பாஸ்கோ, சர்ச் பார்க் கான்வெண்ட் போன்ற பள்ளிகளில் கொடுப்பது போன்று, அங்கும் தரமான கல்வி கொடுக்கப்பட வேண்டும். அரிசன மாணவர்கள் படிப்பதற்கு எல்லாவிதமான வசதியும் கொடுக்கப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கம். இப்போது அரிசன நல அமைச்சராக இருப்பவர், புதியவர். அவர்கள் இந்த முயற்சியில் வெற்றி பெற வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, நான் புதிதாக வந்தவன் அல்ல, அமைச்சர் பதவியிலே வேண்டுமானால் புதிதாக இருக்கலாம். அறிவிலே புதியவன் அல்ல. மாணவப் பருவத்திலிருந்தே இந்தப் பணியில் ஈடுபட்டிருப்பவன். இந்த இலாகாவுக்கு இருந்த பண ஒதுக்கீடு ரூ. 3 லட்சத்திலிருந்து ரூ. 10½ கோடியாக உயர்ந்திருக்கிறது என்ற அளவுக்கு விஷயங்களை அறிந்து வைத்து அனுபவம் பெற்றவன் எதிலேயும் நான் புதிதல்ல. அரிசன நலப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால், உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் அதில் அந்த மாணவர்கள் அதிக சதவிகிதம் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். வெற்றி பெற்ற பள்ளிகளில், 86, 87 சதவிகிதம் என்ற அளவுக்கு ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: டான் பாஸ்கோ பள்ளி மாதிரி அரிசன நலப் பள்ளிகளும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று சொல்லுகிறார்; அவ்வளவுதான்.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அரசியலில், கட்சியில், அனுபவம் உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். என் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒரு கிராமத்தில் அரிசன நலப் பள்ளி என்று ஒன்றும், ஊராட்சி ஒன்றியப் பள்ளி என்று ஒன்றும் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் இருக்கின்ற தரம் கூட, அரிசன நலப் பள்ளியில் இல்லை என்பதுதான் என்னுடைய வாதம். சாதிகள் இல்லை என்று இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கும்போது, பிறகு எதற்கு அரிசனங்களுக்கு என்று ஒரு பள்ளியும், மற்றவர்களுக்கு என்று ஒரு பள்ளியும் என்றுதான் கேட்கிறேன். இப்படித் தனித்தனியாகப் பள்ளிகளை வைத்து போதிப்பதைக் காட்டிலும், ஆரம்பப் பள்ளி என்றால், அதை ஒரு இன்ஸ்டிடியூஷன் கையில் கொடுத்து விடவேண்டும். இந்த மன்றத்தில் கூட அதுபற்றி விவாதிக்கப்பட்டது. ஆரம்பக் கல்வியை ஊராட்சி ஒன்றியங்கள் கையில் ஒப்படைப்பதா அல்லது அரசு அதற்காக என்று ஒரு தனி வாரியம் வைத்து நடத்துவதா அல்லது தனியாரிடத்தில் ஒப்படைப்பதா என்ற பிரச்சினை வந்தது. நான் இப்போது அந்தச் சிக்கலில் போக விரும்பவில்லை. ஏதாவது ஒரு ஏஜென்ஸி கையில் ஆரம்பக் கல்வியை ஒப்படைக்க வேண்டும். பல ஏஜென்ஸிகள் இருப்பதை ரத்து செய்ய வேண்டும். நகரத்தில் இருக்கின்ற பிள்ளைகளுக்குக் கிடைப்பது போன்ற தரமான கல்வி, கிராமத்தில் இருக்கின்ற ஏழை அரிசனக் குழந்தைகளுக்கும், விவசாயக் குழந்தைகளுக்கும் கிடைக்கச்செய்ய வேண்டும். சென்னையில் இங்கே முத்தையா செட்டியார் பள்ளியில் கொடுக்கப் படுகின்ற கல்வித்தரம் கிராமத்தில் உள்ள சாதாரண விவசாய அரிசன மகனுக்குக் கிடைக்கிறதா என்பதை இந்த மன்றம் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பாகுபாடு நீங்கி, கிராமத்தில் இருக்கின்ற அரிசன மக்களுக்கும் தரமான கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். எனவே ஒரே ஒரு பள்ளியை நிறுவி அதன் மூலம் தரமான கல்வியைத் தர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்து. சோஷலிஸத்தில் நம்பிக்கை உள்ளது இந்த அரசு. சோஷலிஸ நாடுகளில், தங்களுடைய கொள்கையை கல்வியின் மூலம்தான் நிலைநாட்டுகிறார்கள். பொதுவாக, இன்று நாட்டிலே உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மதிய உணவுத் திட்டம் என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். அதற்கு முன்பு ஒரு மாணவனுக்கு 6 பைசா கொடுக்கப்பட்டதை 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதோடு ஊராட்சி 5 பைசா கொடுக்கிறது. மொத்தத்தில் 15 பைசா கொடுப்பதாக அறிக்கையில் பார்க்கிறேன். தலைவா அவர்களே, இப்போதெல்லாம் ஒரு இட்லியின் விலையே 15 பைசாவாக இருக்கிறது. அதுவும் இலைபோல் இருக்கிறது. அப்படியிருக்கும்போது ஒரு மாணவனுக்கு 15 பைசாவில் என்ன உணவு வழங்க முடியும் என்பதை

அரசு யோசித்துப்பார்க்க வேண்டும். இந்த மதிய உணவு அந்த 5 வயது பிஞ்சு உள்ளங்களில் என்ன உணர்வை ஏற்படுத்துகிறது? ஒருவன் முற்போக்கு சாதிப் பையன், வசதி படைத்தவன், அவன் வீட்டிலே பெற்றோர்களோடு தரமான சாப்பாடு சாப்பிடுகிறான். நான் அரிசன குடும்பத்தைச் சேர்ந்தவன், என்னுடைய பெற்றோர்கள் வசதியில்லாதவர்கள், ஆகவே தான் எனக்கு இந்த 15 பைசாவுக்கு ஆசிரியர் போடுகின்ற சாப்பாட்டைச் சாப்பிடவேண்டும் என்று அந்த 5 வயதிலேயே பிஞ்சு வயதிலேயே பேதத்தை உருவாக்கி விடுகிறது. ஒரு நாட்டின் நிலைமை முன்னேறவேண்டுமென்றால், முதலில் பிஞ்சு உள்ளங்களில் உள்ள ஏற்றத் தாழ்வைப் போக்கவேண்டும்.

நான் ரஷ்ய நாட்டிற்குச் சென்று வந்திருக்கிறேன். அங்கே இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் போக்கப்பட்டிருக்கின்றன. அங்கே அரசாங்கம் கல்வியை தன்னுடைய கையில் எடுத்துக்கொண்டுள்ளது. எடுத்துக் கொண்ட பிறகு, அவர்கள் சோஷலிஸ எண்ணங்களை, பகுத்தறிவு எண்ணங்களை கல்வியின் மூலம் பிஞ்சு உள்ளங்களில் முதலில் புகுத்தி விடுகிறார்கள். வளர்ந்த பிறகு அந்த ஏற்றத்தாழ்வு நீக்கப்படுகிறது. இந்த நாட்டிலே அதைச் செய்ய முடியாதா என்றால், செய்ய முடியும். என்னுடைய பிள்ளையும் பள்ளியில் மதிய உணவு சாப்பிடட்டும், ஏழை அரிசன மாணவனும் பள்ளியில் மதிய உணவு சாப்பிடட்டும். என்னுடைய பிள்ளைக்குள்ள பணத்தை என்னிடம் வசூல் செய்து கொள்ள வேண்டும். ஏழைப் பிள்ளைகளுக்கு ஆகும் செலவை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும். அனைத்துப் பிள்ளைகளும் சரிசமமாக இலை போட்டுச் சாப்பிடுகின்ற அளவுக்குத் திட்டத்தை அரசு வகுத்தால், பிஞ்சு உள்ளங்களில் உள்ள ஏற்றத்தாழ்வு மனப்பான்மையைப் போக்க வேண்டும். இன்றைய பிஞ்சு உள்ளங்கள்தான் நாளைக்குப் பெரியவர்கள் ஆகிறார்கள். ஒரு நாட்டின் செல்வம் எதிலே இருக்கிறது என்றால், தொழிற்சாலைகளைக் கட்டுவதில் இல்லை, அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில்தான் இருக்கிறது. ஒரு நாட்டின் செல்வம் வருங்கால சமுதாயம் எப்படியிருக்கிறது என்பதில்தான் இருக்கிறது. அந்த வருங்காலக் குழந்தைகள் அத்தகைய மனவளத்தைப் பெற்றிருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும்.

நாம் கூட கடந்த ஆண்டு பார்த்தோம் மேற்கு ஆசியப் போர் நடந்தது. அரபு நாடுகள் பெரியவை. இஸ்ரேல் சின்னஞ்சிறிய நாடு. இருந்தும் அரபு நாடுகள் இஸ்ரேல் நாட்டோடு மோத முடியவில்லை. எப்படி இஸ்ரேல் நாடு அதில் வெற்றி பெற்றது? மனவளமும் தேசிய உணர்வும் படைத்தவர்களாக அவர்கள் இருந்தார்கள். அந்த உணர்வு அவர்களுக்கு எப்போது போதிக்கப்பட்டது? மாணவர்களாக இருக்கின்றபோதே, பிஞ்சு உள்ளங்களாக இருக்கும்போதே, அந்த உணர்வு ஊட்டப்பட்டதால் தான், அவர்களால் சிறந்து விளங்க முடிகின்றது. அத்தகைய உணர்வு இங்கே இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

இந்த அரசு பெரியார் வழி வந்த அரசு என்கின்றார்கள். ஒப்புக் கொள்ளுகிறேன். அந்தப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் இந்த நாட்டிலே 40 ஆண்டுக்காலம் சுயமரியாதைக் கருத்துக்களைப் போதித்து வந்த பெரியார் வழி வந்தவர்கள், இந்த நாட்டிலே அரசுப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த உணர்வுகளை வெளியிட்டார்களா, அந்த உணர்வுகளை வளர்த்திருக்கின்றார்களா என்றால், இல்லை அப்படிப்பட்ட கருத்துக்கள் இந்த நாட்டில் வேரூன்ற நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டதா என்றால், இல்லை. ருஷிய நாட்டில் நான் சென்றிருந்த போது கண்டறிந்த வகையில், ஜார் மன்னன் ஆட்சிக் காலத்திலே பழங்காலத்திலே மூடப் பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுக்காலத்தில், விடுதலை வாங்கித் தந்த லெனினைத்தான் போற்றுகின்றார்கள், புகழ்கின்றார்கள். சர்ச்சுகளுக்குப் போகும் நபர்கள் கிடையாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சர்ச்சுகள் இருக்கின்றன. அரசாங்க மானியம் இல்லை. அவ்வளவுதான்.

திரு. வி. வெங்கா: சர்ச்சுகள் இருக்கின்றன. ஆனால் தொழுகைக்குச் செல்லும் மனிதன் இல்லை அரசாங்கம் அவற்றுக்காக எதையும் செலவிடுவதில்லை. ஆனால் இந்த நாட்டில் நமது விடுதலைக்குப் பிறகு, இப்போது சுயமரியாதை இயக்கத்தில் வளர்ந்தவர்கள் ஆட்சியில் இருக்கும்போது......

திரு. ம. பொ. சிவஞானம்: நான் அங்கே நேராகச் சென்று பார்த்து விட்டு வந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன். அங்கே ஜார் மன்னர் ஆட்சியில் சர்ச்சுகளுக்கு, மசூதிகளுக்குச் சொத்து வைத்துக் கொள்ளும் உரிமை இருந்தது. ஆனால் கம்யூனிஸ்டு ஆட்சியில் பிறருக்கு உள்ளதைப் போலவே சர்ச்சுகளுக்கும், மசூதிகளுக்கும் சொத்துக்கள் இருக்கக்கூடாது என்று எடுத்துவிட்டனர். ஆனாலும் மனித உரிமைகளில் தலையிடவில்லை. ஆனால் மத மந்திரிகள் இருக்கின்றார்கள். சர்ச்சுகளை, மசூதிகளைப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் உதவி அளிக்கிறது. சர்ச்சுகளுக்கும் மசூதிகளுக்கும் மக்கள் வருகின்றார்கள், வழிபடுகின்றார்கள் என்று அன்பருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. வி. வெங்கா: மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் சொல்லும் கருத்துக்குத்தான் வருகின்றேன். அங்கே இதற்காக அமைச்சர் இருக்கின்றார்கள். மானியம் கொடுக்கின்றார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அங்கே சென்று வந்த அடிகளார் அவர்களுடைய கருத்து இதில் என்ன என்பதை அறியலாமா?

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, துணைத்தலைவர் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. அங்கே அரசாங்கம் அதற்காக மானியம் வழங்குகின்றது. மதவழிபாட்டிற்கு அங்கே உரிமை

இருக்கின்றது. இங்கே நம் உறுப்பினர் போன்றவர்கள் வருவதில்லை. ஆனால் அந்த நாட்டு மக்கள் மத வழிபாட்டு இடங்களுக்குச் செல்லுகின்றார்கள், பாராட்டுகின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: (திரு வெங்காவைப் பார்த்து) நீங்கள் அங்கு சென்று வந்தீர்களா இல்லையா என்பதே இப்போது சந்தேகத்திற்கு வந்து விட்டது.

திரு வி. வெங்கா: தலைவரவர்களே, நமது திரு. ஆறுமுகசாமி போன்றவர்கள், நமது தோழர் திரு. அய்யணன் அம்பலம் போன்றவர்கள் உடன் வந்திருக்கின்றார்கள். நான் சொல்ல வந்தது, அங்கே அரசு மானியம் கொடுக்கின்றது. அங்கே உள்ள கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் வருவதில்லை, விரும்பினால் மற்ற மக்கள் தொழலாம் என்றுதான் சட்டம் இருக்கின்றது. நான் கூட அவர்களை, 'இங்கே உள்ளவர்கள் சர்ச்சுகளுக்கே செல்லக்கூடாது என்று சட்டம் இருப்பதாக இந்தியாவில் சொல்லுகின்றார்களே?' என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்: "இந்தியாவில் உள்ளவர்கள் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள்". எங்கள் நாட்டில் கூட, "இந்தியாவில் உள்ள அவ்வளவு பேரும் பிச்சைக்காரர்கள்தான் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள், அது உண்மையா என்றால் இல்லை. அதைப் போன்றதுதான்" என்றார் அவர். அவர் மேலும் குறிப்பிட்டார், 'நாங்கள் உரிமை கொடுத்திருக்கிறோம், அதே நேரத்திலே பகுத்தறிவு வளர்வதற்கான அடிப்படையில் வேறு கருத்துக்களையும் போதிக்கிறோம்' என்று. இதைத்தான் 'ப்ரெயின் வாஷ்' என்கின்றார்கள். ப்ரெயின் வாஷ் என்றால், எந்த மெஷினிலும் போட்டு வாஷ் செய்வதில்லை. கல்வியினைப் போதிக்கும் அளவில் இந்த மன மாற்றத்தை மக்களிடத்திலே ஏற்படுத்துகின்றார்கள் அவர்கள். பகுத்தறிவு எண்ணங்களைக் கல்வியின் மூலம் அவர்களுக்கு ஊட்டுகின்றார்கள். ஆனால் இந்த அரசு, பகுத்தறிவு இயக்கத்தின் வழி வந்த அரசு அதைச் செய்யத் தவறி விட்டது. ஆகவே இந்த அரசு சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக இருப்பதால், இது நாட்டிற்கு ஏற்ற கொள்கை இல்லை என்று சொல்லி, பேச வாய்ப்பினை அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமருகிறேன், வணக்கம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அரசின் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பொதுக் கல்விக்காக ரூ. 128 கோடியும் மொத்தத்தில் கல்விக்காக ரூ. 148 கோடியும் செலவிடத் திட்டமிட்டிருப்பதாக இந்தக் குறிப்பில் கூறப்பட்டிருக்கின்றது. நாட்டின் வருவாயில் பெரும்பகுதியை கல்விக்கென செலவிடுகிறோம் என்ற பெருமையை நாம் ஏற்றுக்கொண்டாலும், நாட்டின் சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபடும்போது, அது கல்வியின் காரணமாகத்தான் ஏற்பட முடியும் என்று எல்லோரும் உணர்ந்திருந்தாலும், போடப்பட்டுள்ள திட்டம் அதை உள்ளிட்டிருக்கின்றதா என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையில் உறுப்பினர்கள் பேசாமல் இருந்தால், மற்றவர்கள் பேசுகின்றதைக் கேட்க முடியும். நான் யார் பேச்சைக் கேட்பது என்று தெரியவில்லை.

திரு எல். பலராமன்: நாம் எப்படித் திட்டமிடவேண்டும் என்பதில் தான் பிரச்சினை இருக்கிறது. நாம் சுதந்திரத்திற்கு முன்பு, அடிமைப் பட்டிருந்த நாட்டில் கல்வி அறிவு அறவே இல்லாத ஒரு நிலை இருந் தாலும், சுதந்திரத்திற்குப் பிறகு நாம் கல்விக்காகத் திட்டமிடும்போது, காலத்திற்கும் ஏற்பட்ட மாறுபட்ட சூழ்நிலைக்கும் ஏற்றவாறு கல்வி பற்றிய கொள்கையையும் மாற்றிக்கொண்டு போவதுதான் முறையாக இருக்க முடியும் என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். ஆனால் அந்த முறைப்படி நாம் நமது கல்வி பற்றிய கொள்கையை மாற்றிக்கொண்டு போகிறோமா என்றால், அங்கேதான் சற்று யோசிக்கவேண்டியிருக்கிறது. காலத்திற்கு ஏற்ப நாம் நமது கல்வி பற்றிய கொள்கைகளை மாற்றிக் கொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

ஆங்கிலேயர்கள் காலத்தில் இருந்த கல்விமுறையானது, அவர்கள் கீழ் உத்தியோகங்களைப் பெறுவதற்கு, பணி புரிவதற்காக ஆரம்பிக்கப் பட்ட கல்வி முறையாக இருந்தது. ஆனால் அந்தக் கல்வி முறையையே நாம் இன்னும் தொடர்ந்து வைத்துக்கொண்டுள்ளதன் காரணமாக இன்று நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம், படித்த இளைஞர் மத்தி யிலே ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இது இப்படியே போய்க்கொண் டிருந்தால், ஒரு புரட்சியே வெடித்து விடுமோ என்ற நிலையில்தான் பயப்படவேண்டியிருக்கிறது. இதற்கு மாற்றுத் திட்டம் என்று ஏதாவது மாநில அல்லது மத்திய அரசிடம் இருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை. அதற்காக ஒரு குழுவினை அமைத்திருக்கின்றோம் என்று ஏதாவ தொரு குழுவின் மீது பளுவைப் போட்டு, ஏற்பட்டுள்ள சூழ்நிலையிலிருந்து ஒதுங்கிவிடப் பார்க்கின்றார்களே தவிர, வேறு இல்லை. எனவே புதிதான ஒரு கொள்கையை உருவாக்கி, அந்தக் கொள்கையில் தீவிரம் காண்பிக்கவேண்டும் என்று மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்று நாட்டிலே தொழிற்கல்வி பெருமளவிற்கு வளர்ச்சியடைந்திருந்தால் அது சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் கல்வி முடியும்போது, ஏதாவதொரு தொழிலைத் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தோமா என்றால் இல்லை. அதற்கான திட்டமும் இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ளுகிறேன். இதன் காரணமாகப் பொதுவாக இன்று மாணவர்கள் மத்தியில் ஒரு அமைதியற்ற சூழ்நிலை எங்கும் ஏற்பட்டிருக்கிறது. இங்கே மாணவர்கள மத்தியில் அமைதி இல்லை என்றால், இங்கே மட்டும்தானா, அடுத்த மாநிலங்களில் இல்லையா என்றும், அதைச் சுட்டிக் காண்பித்தும் பேசினால், மத்திய அரசிலுள்ளவர்கள் பிற நாடுகளைச் சுட்டிக்காண்பித்து, இந்த நாட்டில் மட்டும்தானா மாணவர்கள் அமைதியின்றி இருக்கின்றார்கள் அந்த நாட்டில் இல்லையா, என்று பிற நாடுகளைக் காண்பித்து பிரச்சினையி லிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றார்கள். பிற நாடுகளிலே அல்லது பிற மாநிலங்களிலே எப்படி இருந்தாலும், நமது மாநிலத்தில் நமக்காக ஒரு பண்பாடு, ஒரு வழி முறை இருக்கின்றது. அந்த அடிப்படையில் நமது மாணவர்களின் எதிர்காலத்திற்காக நாம் திட்டமிட வேண்டும். அவர்களை வாழ வைக்கத் திட்டமிடுவது நமது முக்கிய கடமை என்பதை உணர்ந்து அதற்காக வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்களிடையிலே கடந்த சில நாட்களாக அமைதி யில்லாத ஒரு நிலைமை இருந்து வருகின்றது. இது எதனால் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிப்படையாக, இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்த நேரத்தில் விளக்கினார்கள். இது வேதனைக்குரியதாக இருக்கின்றது. இது போன்ற நிலை இல்லாமல், எதிர்காலத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்களாக நமது பிள்ளைகள் உருவாக வேண்டும், அதற்கான வழி முறைகளைக் காண வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளுகிறேன். நாம் நமது குழந்தைகளிடையிலே கட்டுப்பாடற்ற தன்மை ஏற்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதால்தான் இந்த ஒரு சூழ்நிலை தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இதெல்லாம் கல்வியின் தரம் வளராததன் காரணத் தினால்தான் ஏற்படுகின்றது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். கல்வியுடன் கட்டுப்பாடும் மிகவும் அவசியம். குழந்தைகளுடைய எதிர்காலம், கட்டுப்பாடான முறையிலும், ஒழுக்கமான முறையிலும் இருக்க வேண்டும், அப்போதுதான் இந்த நாட்டின் எதிர்காலப் பிரஜை களான அவர்கள் நல்ல முறையில் வளர முடியும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக தொடக்கப்பள்ளி நிலையில், ஆறாவது, ஏழாவது, எட்டாவது வகுப்புகளில் படிக்கும் குழந்தைகள் பற்றிய வரையிலும் சரி, அதற்கு முன்னதாக ஐந்தாவது வகுப்பு வரையில் படிப்பதற்கான முறையை கட்டாயக் கல்வி முறையாகச் செயல்படுத்தினோம். அதன் காரணமாக 1974-75ஆம் ஆண்டில் 61·6 இலட்சம் மாணவர்கள் வரையில் பயன் பெற்றிருக்கின்றார்கள் என்று இந்தப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

(முற்பகல் 10-30)

ஆனால் 6 முதல் 11 வயது வரையில் உள்ள குழந்தைகள் கிராமப் புறங்களில் அதிகமாக இருக்கின்றன. அந்த ஆசிரியர்கள் சரியானபடி கணக்கு எடுக்கின்றார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூற முடியும் அந்தக் கணக்கு ஏதோ தப்புக்கணக்காகத்தான் இருக்கும் என்பதை இந்த அவைக்கு நான் ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். அதற்காக ஒரு குழுவைக்கூட அமைத்தார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து மட்டத்திலும் ஏற்படுத்தினார்கள். இந்தக் கல்விக் குழு, பள்ளிக்கு வரக்கூடிய வயது வந்திருப்பவர்களில் எத்தனை பேர்கள் வருபவர்கள், எத்தனை பேர் வராதவர்கள், அவர்கள் வராமைக்குக் காரணம் என்ன என்று பரிசீலித்தது. வராதவர்களுக்கு அபராதம் விதிக்கலாம் என்றெல்லாம் முறைகள் வகுத்து சட்டத்தைப் போட்டும், அது நடைமுறையில் இருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் கூற முடியும். நாம் சோஷலிஸத் தைப் பற்றிக் கூறுகிறோம். சோஷலிஸம் என்ற அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு நிலைமையைக் கடைப்பிடிக்கின்றது. ஒரு நல்ல அடிப்படையில் எல்லா மக்களுக்கும் கல்வி தரவேண்டும், எல்லோரும் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கம் இருந்தாலும், அதை அமுல் படுத்துவதிலே காலதாமதம் காட்டப்படுகிறது. அது சரியான முறையிலே அமுல் நடத்தப்படவில்லை என்று இந்த அவையில் குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய 61·6 லட்சம் மாணவர் களிலே 90·3 விழுக்காடு அளவுக்கு 56·6 லட்சம் சிறார்கள் பள்ளிக்கு

வந்ததாக இங்கே கூறுகிறார்கள். ஆனால் அதிலே தவறு இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே அனுபவ பூர்வமாகக் கூறவேண்டுமென்றால், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் வயது வந்த குழந்தைகள் என்று ஆசிரியர்கள் கணக்கிடும்போது, 11 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள், 7 வயதுக் குழந்தைகள் என்று குறிப்பிடுவது சர்வ சாதாரணமாக நடைமுறையில் இருக்கின்றது. இதை உணர்ந்து சின்னஞ்சிறுவர்களுக்கு ஏற்ற அத்தியாவசியமான கல்வியை, அடிப்படைக் கல்வியை அளிக்க ஒரு திட்டத்தை அமுல்படுத்துவது எப்படி என்ற முறையில் சிந்திக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய சமுதாயத்திலே ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், அடிப்படைக் கல்வியை நாம் தரவில்லை என்றால் எதிர்காலத்திலே நாம் தரம் குறைந்தவர்களாகவும், பண்பாடு இல்லாதவர்களாகவும் ஆகிவிடுவோம் என்பதை உணர்ந்து அக்கல்வியை அளிக்க வழிவகைகளைக் காண வேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தக் கல்வியைப் பரப்புவதற்காக பஞ்சாயத்து யூனியன் மட்டத்தில் (எஸ். ஈ. ஓ.) சமுதாய கல்வி வளர்ச்சி அதிகாரி என்று ஒருவரை நியமித்தோம். அவர் பணி என்ன, அவர் பணியாற்றுகின்றாரா, அவருடைய நிலை என்ன என்பதையெல்லாம் பார்க்கும்போது, அவர் அங்கே ஒரு வேலையும் அற்ற அதிகாரியாக இருந்து கொண்டிருக்கின்றாரே தவிர, அவருக்கென பொறுப்பு கொடுத்திருக்கின்ற சூழ்நிலை இல்லை. அவருக்கென ஒரு பொறுப்பைக் கொடுத்து இளைஞர்கள், குழந்தைகள் பள்ளிக்கு வருகிறார்களா, அவர்களுக்கு நல்ல முறையில் ஆசிரியர்கள் போதிக்கின்றார்களா என்ற நிலையைக் கண்காணிப்பதற்காக ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதிகமான பிள்ளைகள் இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்களுக்கு எஸ். ஈ. ஓ. என்று சொல்லக்கூடியவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டு நியமனம் செய்யப்பட்டு, ஆரம்பப் பள்ளிகளைக் கண்காணிக்கலாம். அப்படி இருந்தால் நல்ல முறையில் இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு பஞ்சாயத்துப்பள்ளிகள் மட்டுமல்லாமல், ஆரம்பக் கல்வி நிறுவனங்களுக்கு பள்ளிக்கட்டிடங்கள் இல்லாத ஒரு நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். பழைய ஆஸ்ரமம் போன்று மரத்தடியிலே கீத்துக் கொட்டகையிலேதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது. கட்டிடங்கள் கட்ட ஒதுக்கப்பட்ட தொகை மிகமிகக் குறைவாக இருக்கின்றது. அந்தத் தொகையை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் பூர்த்திசெய்ய முடியுமா என்று பார்த்தால், அந்த நிர்வாகத்தில் முடியாது என்ற நிலைதான் இருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும். இந்த நிலையில் கல்லூரிகளை நாம் ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றோம். கல்லூரிகளை ஆரம்பிக்க அதிகச் செலவுகளைச் செய்யும்போது, அடித்தளம் இல்லாத கட்டிடங்களைக் கட்டுகிறோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்தக் கட்டிடம் இடிந்துதான் விடும். ஆரம்பக்கல்விக்காக அதிகச் செலவு செய்து அதிகமாகக் கண்காணிக்க வேண்டும் என்பதை இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த நிலைப் பிரகாரம் உயர்நிலைப்பள்ளிகளிலே எத்தனை மாணவர்கள் படிக்கின்றார்கள் என்று பார்த்தால், அதுவும் இந்தப் புள்ளிவிவரப்படி குறைவாகத்தான் இருக்கின்றது என்ற நிலையைக் காண்கின்றோம். 11 வயது முதல் 14 வயது வரை படிக்கக்கூடிய மாணவர்கள் எல்லாப்

பள்ளிகளுக்கும் 27·7 லட்சம் என்று இருக்கிறது. 6 முதல் 11 வயது வரை 61·6 லட்சம், 11 முதல் 14 வயது வரை 27·7 லட்சம் என்று கூறும்போது, 6 முதல் 8ஆவது வரையில் படிக்கக்கூடிய நிலை இல்லாமல் இருப்பது, இப்படிப் பின்தங்கியிருக்கக்கூடிய நிலை வருத்தத்திற்குரியதாக இருக்கிறது. இந்த இளம் சிறார்கள் போக முடியாத அளவுக்கு இருக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன என்று பார்க்கும்போது நம்முடைய கொள்கை தான் என்பதை நான் கூற ஆசைப்படுகிறேன். அந்த மாணவர்கள் படித்து என்ன செய்யப்போகிறார்கள்? ஏதோ 5ஆவது படித்தால் போதும், அ, ஆ தெரிந்தால் போதும் என்ற நிலையில்தான் கிராமப்புற பெற்றோர்கள் இன்றைக்கு இருக்கின்றார்கள். இன்றைக்கு இரண்டு ஆண்டு காலமாக உயர்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 7 ஆம் வகுப்பு வரை மாணவர்களுடைய விகிதாசாரம் குறைந்து கொண்டிருக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்குத் தெரியாது. அந்த மாணவர்கள் படித்துவிட்டு என்ன செய்யப்போகிறார்கள் என்று ஒரு பயங்கரமான சூழ்நிலைதான் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கின்றேன். இந்த முறையில் தான் விகிதாசாரம் இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். நம்முடைய கல்விக் கொள்கையை மாற்றவேண்டும். அவர்கள் பிழைப்புக்காக வருவாய் உண்டாக்குவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கக்கூடிய கல்வியாக அது இருக்க வேண்டும். 13 வயது 14 வயதிற்கு மேற்பட்ட வயதிலே அவர்களுக்குத் தொழிற் கல்வியை உருவாக்குவதற்கு வேண்டிய அளவில் நம் அரசு திட்டமிடவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப்பள்ளிகளிலே தமிழாசிரியர்களுக்கு முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற ஒரு நிலையை உண்டாக்கியிருக்கின்றார்கள். இந்த இரண்டு நிலையும் போகவேண்டுமென்று நீண்ட நாட்களாக விட்ட கோரிக்கையை அரசு பரிசீலிப்பதாகக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழுக்காகத்தான் நாங்கள் இருக்கின்றோம் என்று இன்றைக்கு இருக்கக் கூடிய ஆளும்கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் கூறும்பொழுது, தமிழ் படித்த தமிழாசிரியர்களிடையே அந்த இரண்டு நிலைகள் இருக்கக்கூடாது என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

பஞ்சாயத்துப் பள்ளிகளிலும் நடுத்தரப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்களை அமர்த்துவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கினால், நல்லதாக இருக்கும். அதற்கான ஒரு திட்டம் இடவேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே தமிழ் வளர்ச்சிக்காக சில லட்ச ரூபாய்களை ஒதுக்கியிருக்கின்றார்கள். தமிழ் நாட்டிலே தமிழ் ஆராய்ச்சி என்பது இருக்க வேண்டும் தான். தமிழ் தொன்மையான மொழி என்று இருந்தாலும், அதை அரசுத் தரப்பில் அணுகும்போது, அது உணர்வாக இருக்க வேண்டுமே தவிர, வெறியாக இருக்கக்கூடாது.

மாண்மிகு மேலவைத் தலைவர்: அந்த உணர்வு என்ற வார்த்தைக்கும் வெறி என்ற வார்த்தைக்கும் என்ன பொருள் வித்தியாசம் இருக்கிறது?

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, உணர்வு என்பது........

திரு. ம. பொ. சிவஞானம்: உண்மையாகப்பற்று காட்டுவது வெறி என்றும் லேசாகப்பற்று காட்டுவது பற்று என்றும் நினைக்கின்றார்.

திரு. எல். பலராமன்: தமிழ் வெறி என்று கூறும்போது, அந்தத் தமிழ் வெறியின் காரணமாக நம்முடைய நல்ல நோக்கங்கள் எல்லாம் சீரழிக்கப்படுகின்றன என்பதை நாம் உணர்கிறோம். அனுபவபூர்வமாக..

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, உணர்வுகளின் காரணமாக சில அடிப்படை நெறிகள், பண்பாடுகள் சீரழிக்கப்படுகின்றன என்று சொல்கின்றார்கள். தமிழ் உணர்விலுலே எந்த நெறிகள் சீரழிக்கப்படுகின்றன என்று உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. எல். பலராமன்: உணர்வினால் சீரழிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அடிகளார் அவர்களுக்குக்கூற ஆசைப்படுகிறேன். அந்த உணர்வு உச்ச கட்டத்திற்கு வரும்போது, வெறியாக மாறிவிடுகிறது. அந்த மாதிரி வெறி இருக்கக்கூடாது என்பதை நான் அவர்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் என்று எனக்கும் புரியவில்லை. ஆதரிக்கச் சொல்கின்றீர்களா அல்லது வேண்டாம் என்று சொல்கின்றீர்களா? நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? தெளிவாகச் சொல்லுங்கள். எங்களுக்கு எல்லாம் விளங்கச் சொல்லுங்கள்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்கள் கேட்டதற்கு நன்றி........

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, சகிப்புத் தன்மையை உணர்வு என்று சொல்கின்றார்களா? வெறி என்பதற்கு அவரே விளக்கம் சொன்னால் நன்றாக இருக்கும்

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, நேற்று இந்த அறிக்கையிலே கூறும்போது மாண்புமிகு அங்கத்தினர் கூறினார்கள், சமஸ்கிருத வார்த்தை வந்திருக்கிறது என்று. சமஸ்கிருத மொழியுடன் இதை ஒப்பிடலாமா என்ற ஒரு உணர்வை ஆவேசமாகக் கூறும்போது, அது ஒரு கட்டத்தை மீறிவிட்டது என்றுதான் பொருள் கொள்கிறோம். அந்த அளவுக்கு இருக்க வேண்டாம். அது வெறியாக மாறக்கூடாது என்பதை நான் கூறிக்கொள்கின்றேன்.

புலவர் ஒ. அறிவுடை நம்பி: தலைவரவர்களே, என்னுடைய பற்றை அவர் ஒரு வெறி என்று சொல்கின்றார்களா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உங்களுக்கு பற்றுதான் இருக்கின்றது. நீங்கள் தமிழிலே எத்தனை புத்தகங்கள் எழுதியிருக்கின்றீர்கள்?

(முற்பகல் 10-40)

புலவர் ஒ. அறிவுடைநம்பி: நான் படித்துக் கொண்டிருப்பவன். மாணவன்தான்......

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தெலுங்கு 10ஆவது படித்துவிட்டு தமிழிலே 26 புத்தகங்களை நான் எழுதியிருக்கிறேன்.

திரு. எல். பலராமன்: இந்த மாநிலத்திலே தோன்றிய அனைத்து மக்களுக்கும் தமிழ் உணர்வு இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த மாநிலத்திலே இருக்கிறவர்கள் பல கலாசாரங்களையும், பல கலைகளையும் கொண்டவர்கள். அந்த வகையில் மாண்புமிகு தலைவர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என கருதுகிறேன். தமிழை யாரும் வளர்க்க முடியாது. வளர்ந்த தமிழை மேலும் பாராட்டி உலக அரங்கின் உச்ச கட்டத்தில் நாம் நிறுத்திவைப்போம் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இளம் சிறுர்களுக்கு தமிழ் உணர்வை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். இன்றைக்கு சமுதாயத்திலே பல தரக்குறைவான பத்திரிகைகளை குழந்தைகள் மத்தியிலே விட்டிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகைகளை எல்லாம் கட்டுப்படுத்தி, நல்ல தரமான, நெறிமுறையில் புத்தகங்களை நாம் உருவாக்க திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கூறிக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழை யாரும் வளர்க்க முடியாது. தமிழ் வளர்ந்திருக்கிறது.

"Tamil flourishes itself without the aid of any other language"—Caldwell.

அதை பலராமன் அவர்கள் சொல்லுகிறார்கள் "இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்யுங்கள். வெறி வேண்டாம்" என்று சொல்கிறார்கள். அதிலே ஒன்றும் தப்பு கிடையாது.

***திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவைமுன் அரசு கல்வித்துறை சார்பில் தயாரித்து வைத்துள்ள கல்விக் கொள்கையின்மீது தமிரசுக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு தனக்குக் கிடைக்கிற வருமானத்திலே 22 விழுக்காட்டை கல்வித்துறையிலே செலவழித்து வருவது எல்லோருமே பாராட்டிய விஷயம். நானும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இதற்கு எதிராக அல்லது இதில் மனநிறைவு கொள்ளாமல் இரண்டு கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஒன்று, "முன்பு இருந்த அரசுக்கு இவ்வளவு வருவாய் இல்லையாதலால் இவ்வளவு காரியம் செய்யவில்லை; இந்த அரசுக்கு வருவாய் உயர்ந்து வருவதால் செய்கிறது" என்பதாகும். இதில் நான் அதிருப்தி அடையவில்லை. வருவாய் உயர்ந்து விடுவதால் மட்டுமே ஒரு ஆட்சி கல்வித்துறையில் அதிகம் செலவழிப்பதற்கு வாய்ப்பு வந்துவிடாது. ஆர்வமும் அக்கறையும் இருந்தால்தான், தனது வருவாயில் கணிசமான ஒரு பகுதியை கல்வித்துறையில் கூடுதலாகச் செலவழிக்க வேண்டும் என்ற முறையில் ஒரு அரசு செயல்படமுடியும். ஆண்டாண்டுதோறும் தான் வருவாய் உயர்ந்து வருகிறது என்ற சமாதானத்தை பிரிட்டிஷ் ஆட்சி கூடத்தான் சொல்ல முடியும். "அப்போது எங்களுக்கு எல்லாம்

இவ்வளவு வருவாய் இல்லை. நாங்கள் வரிபோடும்போது எல்லாம் அதை எதிர்த்து நீங்கள் போராட்டம் நடத்தினீர்கள். அதனால் நாங்கள் இலவசமாகக் கல்வி தரமுடியவில்லை, சுதந்திரம் பெற்ற பிறகு நீங்கள் இஷ்டப்படி வரிபோடுவதால், இலவசக்கல்வி தர முடிகிறது" என்று பிரிட்டிஷ் ஆட்சிகூட லண்டனிலிருந்து சமாதானம் சொல்லமுடியும். ஆகவே இப்போது இருக்கிற ஆட்சி, முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சியைவிட நம் கல்விக்காகக் கூடுதலாகச் செலவு செய்கிறது. முன் இருந்த ஆட்சி செய்யவே இல்லை என்று யாரும் சொல்லவில்லை. ஆகவே, வருவாய் கூடுதலானது மட்டுமே, இப்போது ஆட்சி தருகிற கல்விவசதிகளைக் குறைத்து மதிப்பிடுவதற்குக் காரணம் ஆகாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. "அதிகமாகச் செலவழிப்பத னாலேயே கல்வித்துறை பாராட்டப்படக்கூடியதாக ஆகிவிடாது" என்ற கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. வருவாயிலிருந்து அதிகம் செலவழித்துவிடுவது மட்டுமல்லாமல் அதைப் பயன் உள்ளதாகவும் செலவழிக்க வேண்டும் என்ற கருத்து வரவேற்கத்தக்கதுதான்.

இந்தக் கொள்கை அறிக்கையிலே பார்க்கிறோம்—பள்ளிகள் பெருகி வருகின்றன; கல்லூரிகள் பெருகிவருகின்றன; பல்கலைக்கழகங்கள் வளர்ந்து வருகின்றன. படிப்பவர்கள் எண்ணிக்கை வளர்ந்து வருகின்றது; படிப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகிற மதிய உணவு, சீருடை, புத்தகங் கள், மற்ற சலுகைகள் எல்லாம் வளர்ந்து வருகின்றன. மாணவர் விடுதிகள் பெருகி வருகின்றன. இப்படி, பல வகையிலேயும் அதிகம் செலவழித்து வளர்ச்சி கண்டு வருகின்றது இந்த அரசு. செலவு கூடுதல் ஆவது மட்டும் போதாது என்றால் வளர்ச்சியும் கூடுதலாக வந்திருக்கிறது என்பதும் கூடவே எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. ஆரம்பக்கல்வி பெறக்கூடிய வயதுடைய பிள்ளைகளை கட்டாயமாகப் பள்ளிகளில் சேர்த்தாக வேண்டும். அரசியல் சட்டத்தில் அதற்கு 10 ஆண்டு வரம்பு விதிக்கப்பட்டது. ஆனால், அந்த 10 ஆண்டு வரம்பு சரியாகப் பயன்படுத்தப்படவில்லை, அதை விதித்தவர்கள் ஆட்சிக் காலத்திலே. அதை நிறைவேற்றுவதற்கு இன்றைய ஆட்சி கடுமையான முயற்சி எடுத்து 90 சதவிகிதம் பிள்ளைகளைப் பள்ளி களுக்குக் கொண்டுவந்திருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. வறுமை மிகுந்த இந்த நாட்டிலே 8 வயதுக் குழந்தையைக்கூட வேலைக்கு அனுப்பி, அதனால் கிடைக்கிற ஒன்றரை ரூபாய் வருமானம் கூட குடும்பத்திற்குத்தேவை என்று எண்ணுகிற நாட்டில் கட்டாயக் கல்வியை அமல் நடத்துவதிலே கஷ்டமிருக்கிறது. அரசுடன் ஒத்துழைக்கிற மனப்பான்மை, சூழ்நிலை நாட்டிலே இல்லை. இந்த நிலையிலே நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதப் பிள்ளைகளை பள்ளிக்குக் கொண்டுவந்திருக்கிறது இந்த அரசு என்றால், இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு இதை நாம் பாராட்டத்தான் வேண்டும். இதை நூற்றுக்கு நூறாக ஆக்கவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்காது. ஆள்வோருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆகவே, இது விரைவில் நிறைவேற வேண்டும். மக்கள் மனப்பான்மை இதற்குக் கைகொடுத்து உதவ

வேண்டும். கல்வித்துறையில் அரசு கண்டுள்ள முன்னேற்றங்களை, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள—ஆயிரம் ஆண்டுகளாக ஒதுக்கப்பட்ட—மக்களுடைய கல்வி நலத்தையும், உத்தியோக நலத்தையும் வளர்த்து வருவதிலே ஒரு தனி அக்கறையை இந்த அரசு காட்டுகிறது. அதற்காக நான் காட்டி வருகிற அக்கறையை நான் பாராட்டுகிறேன். பாராட்டுகிறேன்.

இலவசக் கல்வியைப்பற்றி கொஞ்சம் சூடாகவே அடுத்தடுத்து பலர் சொல்லக்கேட்டுக்கொண்டிருந்தேன். இது மிகவும் சங்கடமான பிரச்சினைதான். நம்முடைய கல்வி அமைச்சர் எங்கோ, "இலவசக் கல்வி வேண்டாம். சம்பளக்கல்வி வேண்டும்" என்று சொன்னதாக இங்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அவர் அப்படிச் சொன்னதன் நோக்கத்தை பின்னால் அவரே விளக்கியிருக்கிறார். இலவசக் கல்வியைக் கைவிடும் நோக்கம் இல்லை என்று உறுதியாக, தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆட்சியைப் பொறுத்தவரை, இலவசக் கல்வியைக் கைவிடும் நோக்கம் இல்லை' என்பதும் முதலமைச்சர் அவர்களாலும் —கல்வி அமைச்சர் அவர்கள் பேசிய இரண்டொரு நாட்களுக்குக் குளளேயே—உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. இருந்தும், தொடர்ந்து விவாதம் நடந்து வருகிறது. அப்படி அவர் சொல்லியதற்காக, அவருக்கு வரவேற்பு கொடுக்கப்படுகிறதை, பத்திரிகைகள், தலையங்கங்களின் மூலமே, 'விடாதீர்கள், உறுதியாக இருங்கள் அதிலே' என்றும் 'விட்டுவிடுவாரோ என்றுதான் நாங்கள் பயப்படுகிறோம்' என்றும் 'நாங்கள் முன்னர் சொன்னதைத்தான் அவர் இப்போது சொல்லு கிறார்' என்றும் தற்பெருமை தம்பட்டமும் அடித்து எழுதப்படுவ தெல்லாம் பார்த்தோம். உண்மையில் கல்வி அமைச்சர் நல்ல எண்ணத்தோடு சொல்லியிருந்தாலும், அவர்களைப் பாராட்டுவோர்கள் உற்சாகத்தால்தான் சந்தேகிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. அந்த உற்சாகிகள் அவ்வளவு தூரம் உற்சாகம் காட்டாமல் இருந்தால் கொஞ்சம் நடுநிலையுடன் சிந்திப்பதற்குப் பயன்பட்டிருக்கும்—பயப்பட வேண்டும்கூட. உண்மையில் நானும் ஒரு பிற்படுத்தப்பட்டவன்தான் என்று எண்ணிக்கொள்வதனால் சொல்லுகிறேன்; 'நான் தாழ்ந்த ஜாதி, நான் பிற்பட்ட ஜாதி, நான் மிகத் தாழ்த்தப்பட்ட ஜாதி' என்று சொல்லிக்கொள்ளுவதிலே சந்தோஷம் அடைகின்ற மனிதன் இன்னும் பிறக்கவில்லை. உங்களுக்கு எல்லாம் தெரியும்; இந்தக் கல்விச் சலுகை வருவதற்கு முன்பு, உத்தியோகச் சலுகை ஜாதியின் பெயரால் கொடுக்கப்படுவதற்கு முன்பு, தாழ் ஜாதிக்காரன், கீழ் ஜாதிக்காரன் எல்லாம் தன்னுடைய ஜாதியின் பெயரை மறைத்துக் கொண்டான். அவன் தாழ் ஜாதியாக இருக்க, கீழ் ஜாதி என்று அறிமுகப்படுத்திக்கொள்ள முடியவில்லை என்பன அவனுடைய தன்மான உணர்ச்சியைக் காட்டுகிறது. "பிள்ளை" என்ற பெயரிலே எத்தனையோ ஜாதிகள் மறைந்துகொள்ளவில்லையா ? தாழ்த்தப்பட்டவர்கள் எல்லாம் பிள்ளை என்று வைத்துக்கொண்டதால்தான் ஜாதியை மறைக்க முடிந்தது. எனக்கு துரதிருஷ்டவசமாக இரண்டு திருமணம் நடந்தது. ஒன்று போய்தான் மற்றொன்று. முதல் திருமணத்தில் என் பெயரை பிள்ளை என்று என் தந்தை போட்டார். ஏனென்றால் என் ஜாதி

தெரிந்துவிடக்கூடாது வெளியில் என்று. இரண்டாவது திருமணத்தை நானே செய்து கொண்டேன். அதில் "கிராமணி" என்று போட்டேன். இப்பொழுது அதையும் விட்டுவிட்டேன். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன ? ஜாதியைச் சொல்லிக்கொள்ள ஒருவன் முன்வருகிறான் என்றால், அதற்குக் காரணம் கல்வியில் கொண்டுள்ள ஆர்வம்தான்; முன்னேற வேண்டும் என்பதில் உள்ள அக்கறைதான்; ஒரு ஜாதிக்கு கல்வி இல்லையானால், அந்த ஜாதி மிருகத்திலும் கீழாக நடத்தப் படுகிறது. இந்தப் பரிதாபகரமான நிலைக்கு நாம் வெட்கப்பட வேண்டுமே ஒழிய, இதை எடுத்துக்காட்டி இலவசக் கல்வியைக் கைவிட வேண்டுமென்ற நிலை இல்லை. அதே நேரத்தில், இங்கே இலவசக் கல்வித் திட்டத்தை எதிர்த்துச் சொன்னார்களே, அவர்களை—அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. ஜாதி இல்லாத சமுதாயம் படைக்க வேண்டும் என்ற லட்சியத்துக்குக் கேடு இல்லாமல் இதை அமல் நடத்த வேண்டுமென்று இங்கே சொல்லப் பட்டது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், எப்படிப் படைக்க முடியும் ? ஜாதி இல்லாத சமுதாயத்தைப் படைக்க வேண்டுமானால், அது, ஆண்டானுக்கும் அடிமைக்கும் உள்ள உறவாக இருந்து விடக்கூடாது. அது சுரண்டுபவனுக்கும், சுரண்டப்படுபவனுக்கும் உள்ள உறவாக இருந்து விடக்கூடாது. ஜாதிகளைச் சமப்படுத்துவதன் மூலம்தான் ஜாதியற்ற சமுதாயம் அமைய முடியும். நேற்றுகூட ஒரு நண்பர் சொன்னார், இலவசக் கல்வித் திட்டத்தை எதிர்த்துச் சொல்வதற்காகத் தங்களைச் சந்தேகிக்கிறார்கள் என்று. 'ஐயா, முதலி யாரா?' என்று பார்க்கிறார்கள் என்பதாக. நான் ஒன்று சொல்கிறேன்; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் சந்தேகிக்கிறார்கள் என்பது உண்மைதான். அதற்குக் காரணம் என்ன ? சொல்லும் வட்டாரத்தை பொறுத்து அந்தச் சந்தேகம் அவர்களுக்கு ஏற்படுகிறது. முதாலளித்துவ சமுதாயத்திலே, நிலப்பிரபுக்கள் கூட்டத்திலே "எல்லோருக்கும் ஏன் கொடுக்கப்பட வேண்டும்?" என்று கேட்டுக்கொண்டிருக்கிற புத்திசாலிகளும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். 'சம்பளம் கொடுத்துப் படிப்பவன் கூட எழுத்தறிவு பெற்றால் போதாதா ? பட்டங்கள் தேவையா ?' என்று எல்லாம்கூடச் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் அனுபவித்து வந்த மக்களுக்கு யாரைக்கண்டாலும் ஐயப்பாடு ஏற்படுவது, எதைக் கேட்டாலும் ஐயப்பாடு ஏற்படுவது இயற்கை. ஆனால், அந்த ஐயப்பாட்டுக்கு நாம் ஆறுதல் சொல்லி, தாழ்த்தப் பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒப்புக்கொள்ளக் கூடிய நிலை வரும்போது, இதைக் கைவிட வேண்டுமே ஒழிய, சந்தர்ப்ப நிர்பந்தங்கள், பத்திரிகைத் தலையங்கங்கள் மூலம் விட்டுவிடுவது சரியல்ல.

(முற்பகல் 10-50)

ஓட்டுக்குப் பயந்து இந்த மாதிரி இலவசக்கல்வி கொண்டுவரப்படுகிறது என்ற ஒரு வாதம் சொல்லப்பட்டது. ஜனநாயக சமுதாயத்திலே அது ஒன்றும் தப்பல்ல. ஓட்டுக்குப் பயப்படுவது என்பது சரியல்ல; ஓட்டர்களுக்கு—அதாவது, வாக்காளர்களுக்கு பயப்படுவது என்பதுதான் உண்மை. ஏழைக்குக் கிடைத்த ஒரு சிறு வாக்குச் சீட்டுத்தானே

சமுதாயத்திலே இத்தனை புரட்சிகள் ஏற்படுவதற்குக் காரணம் ? அந்த வாக்குச் சீட்டு உரிமை 21 வயது வந்தவர்களுக்குக் கிடைத்திருக்கவில்லையானால், இத்தனை புரட்சிகள் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்குமா ? ஏற்படுத்தத்தான் விட்டிருப்பார்களா ? ஆகவே, நாம் வாக்களர்களுக்காகப் பயப்படுவது தவறல்ல,

இன்னொரு கோணத்திலிருந்து இந்த ஜாதி வழிச் சலுகைகளைச் சீக்கிரம் கைவிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தமிழன் என்ற உணர்வையே கொண்டு வருவது இந்த ஜாதி உணர்ச்சிதான். இந்திய நாட்டில் எல்லோருக்கும் இன உணர்ச்சி இருக்கிறது. ஆந்திரன் ஆந்திரனாக எண்ணுகிறான்; மலையாளி மலையாளியாக எண்ணுகிறான். நம் நாட்டிலேயே மருத்துவ மனைகள் வைத்து நம்மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள் நம்மை நம்பிப் பிழைக்க வந்தவர்கள். ஒரு அரசையே தோற்கடிக்கக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆனால், தமிழனுக்கு அந்த இன உணர்வு இல்லை. எல்லைக் கிளர்ச்சி நடத்தியபோது, 'தமிழ்நாடு' பெயர் கிளர்ச்சி நடத்தியபோது, பயிற்சி மொழிக் கிளர்ச்சி நடத்தியபோது நான் பார்த்தேன், மற்றவர்களை விட இன உணர்வில் நாம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறோம் என்பதனை. இதற்குக் காரணம் ஜாதி வெறியால் நாம் பிளந்து பிளந்து போய்விட்டதுதான். இந்தப் பிளவு மனப்பான்மைகள் நீங்கத்தான் வேண்டும். ஆனால், அதறகு கொஞ்சம் பொறுக்கவேண்டும். பிளவு மனப்பான்மையை நீக்குவதற் கான ஒரே வழி—முதலும் முடிவுமான ஒரே வழி இலவசக கல்வியைத் தடுத்துவிடுவதல்ல. கல்வி உலகத்துக்கு வெளியேயும் நாம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோமே, அந்த ஜாதி வேற்றுமைகள் எல்லாம் போக வேண்டும். ஜாதிகளை ஏன் வளர்க்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். என்ன செய்வது? கோயில் அண்டையில் வந்தவர்களைத் தடுத்தோமே, ஜாதியின் பெயரால்தானே ? குளத்திலே குளிக்க வந்தவனைத் தடுத்தோமே,ஜாதியின்பெயரால்தானே?குழாயண்டை தண்ணீர் பிடிக்க வந்தவனைத் தடுத்தோமே, ஜாதியின் பெயரால் தானே ? வீதியிலே நடந்து போகிறவர்களைத் தடுத்தோமே, ஜாதியின் பெயரால்தானே? பள்ளிக்கூடத்திலே இடம்தர மறுத்தோமே, ஜாதியின் பெயரால்தானே? உயர் சாதியினர் கை ஓங்கியிருந்த காலத்திலே ஜாதி வேற்றுமை தேவைப்பட்டது; ஏற்றத்தாழ்வுகள் சாஸ்திர சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், ஒடுக்கப்பட்டவன் கை உயர்ந்து வரும் இப்போது ஜாதி வேண்டாமென்று சொல்லப்படுகிறது. எப்படியோ அந்த நிலைக்கேனும் மற்றவர்கள் வந்ததற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஜாதியற்ற சமுதாயம் படைத்தால்தான் தமிழன் என்ற இனம் வாழும். எனக்கு சுய ஜாதி பற்றும் கிடையாது. பிற ஜாதி பகைமையும் கிடையாது என்பதை நான் அழுத்தமாகச் சொல்கிறேன். காரணம், தமிழன் ஒன்றுபடுவதற்கு தமிழன் என்ற இனஉணர்வு வருவதற்கு, பிற இனத்தோடு போட்டியிட்டு முன்னேறுவதற்கு இந்த ஜாதி வேற்றுமையற்றுப் போனால்தான் முடியும் என்று நம்புகிறேன். ஆனால் ஒரு இடத்திலே ஜாதி வழிச் சலுகை கொருவதைத் துவக்கி வைத்தவர்கள் விளைவுகளுக்கு

பயந்து ஓடக்கூடாது. பிராமணர்—பிராமணரல்லாதவர் என்ற பிரிவை ஒரு காலத்தில் ஏற்படுத்தினோம். அன்று அது தேசிய உணர்வாகக் கூடக்கருதப்பட்டது. முற்போக்கு உணர்ச்சியாகக்கூட கருதப்பட்டது. பகுத்தறிவுணர்ச்சியாகக் கூடக் கருதப்பட்டது. அந்த பிராமணரல்லாதவர் அணிக்கு தலைமை தாங்கிய முன்னணி ஜாதியினர், அதிலேயுள்ள பின்னணியினரின் நம்பிக்கைக்குரியவர்களாகி, அவர்களை முன்னேற்றி யிருந்தால், உபஜாதித் தன்மை வந்திருக்காது. அப்படிச் செய்யாததால், பிராமணரல்லாதார் அணி பிளவுபட்டு அதிலே பிற்பட்டோர் அணி வந்தது. பிற்பட்டவர்களில் முன்னணி சாதியினர் தங்களுக்குப் பின்னே இருந்தவர்களைக் கவனிக்கத் தவறியதால், மிகப் பிற்பட்டோர் அணி பிறந்தது. அந்தத் தாழ்த்தப்பட்டவர்களிலும் சத்திரியர், தோட்டியர், மருத்துவர் போன்றவர்கள் முன்னேறியிருந்தால், அவர்களுக்கு என்று தனிப் பிரிவுகள் வந்திருக்கா. அவர்களிலிருந்து மலைவாழ் தாழ்த்தப்பட்டவர்களென்றும் ஒரு பிரிவு வந்தது. ஆகவே, முன்னேறிய ஜாதியினுடைய ஆதிக்க புத்தி—அது அந்தணராக இருந்தாலும் அல்லாதாராக இருந்தாலும் பிற்பட்டோராக இருந்தாலும்—அவரவர் கையில் கிடைத்ததை அவரவர் அனுபவிக்கப் புகுந்ததன் விளைவு, துண்டு நூறாக தமிழ் ஜாதி உடைந்து விட்டது. இதைச் சொல்வதற்கு நான் வெட்கப்படத் தேவையில்லை. ஒப்புக்கொள்வதற்கு மற்றவர்களும் வெட்கப்படத் தேவையில்லை. இதை எடுத்துச் சொல்லி, ஒப்புக்கொள்ளவும் முன்வருகிறபொழுதுதான் நாம் ஜாதியற்ற ஒரு சமுதாயத்தைப் படைக்க முடியும். ஆகவே, நான் திரும்பவும் சொல்கிறேன், இலவசக் கல்வி நீடிக்க வேண்டும். 'பணக்காரனிடமிருந்து சம்பளம் வாங்க வேண்டுமென்று தானே சொல்கிறோம், அதிலே என்ன தவறு இருக்கிறது?" என்று கேட்கிறார்கள். அது சரியான வாதம். அதை நான் மறுக்க முடியாது. ஆனால், அது ஒன்றும் புதிய கருத்தல்ல. முன்னர் நடைமுறையில் இருந்ததுதான். 1963–ஆம் ஆண்டு வரை 300 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் உடையவர்களின் பிள்ளைகளுக்குத்தான் இலவசக் கல்வி; அதற்கு மேல் வருவாயுடைய குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் சம்பளம் கட்டித்தான் படிக்க வேண்டுமென்றிருந்தது. இது, 1964-ல் கைவிடப்பட்டது. அது, இனிமேல் புதிதாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்பதல்ல; ஏற்கெனவே கடைப்பிடிக்கப்பட்டு அது பயனற்றதாய்ப் போய், கைவிடப்பட்டது. 300 ரூபாய்க்குக் குறைந்த சம்பளமுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளைக்கு மட்டும் இலவசக் கல்வி என்று சொன்னபோது, 83 சதவிகிதம் பேர் 300 ரூபாய்க்குக் குறைந்த சம்பளமுள்ளவர்கள் என்று கணக்குக் காட்டினார்கள்—இது சரியாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்கலாம்—மிச்சம் 17 சதவிகிதத்தினரிடமிருந்துதான் சம்பளம் வாங்க வேண்டியிருந்தது. இந்த 17 சதவிகிதத்தினரிடமிருந்து சம்பளம் வாங்கியதன் விளைவு என்னவென்றால், இதற்கு ஏற்படக்கூடிய செலவைப் பார்க்கிறபோது, இந்த 17 சதவிகிதம் பிள்ளைகள் கொடுக்கிற சம்பளத்திற்கும் கூடுதலாகவே செலவாகிறது. ஆகவே, கொடுத்தால் எல்லோருக்கும் இலவசக் கல்வி; இல்லையெனில், எல்லோரும் சம்பளம் கட்டிப் படிக்கும் நிலை என்ற ஒரு முடிவுக்கு அரசு வர வேண்டியிருந்தது. ஆகவே, வசதியுள்ளவர்களிடமிருந்து சம்பளம் வாங்குவது என்பது இனி கடைப்பிடிக்கப்பட வேண்டிய புதிய வழியல்ல, ஏற்கெனவே கடைப்

பிடிக்கப்பட்டு பயனற்றுப் போய்விட்டது. இதிலே இன்னொரு கேடு என்னவென்றால், மாதம் 300 ரூபாய்க்குக் குறைந்த வருவாயுடைய குடும்பத்தில உள்ளவர்களுக்கு இலவசக் கல்வி என்றால், அதை நிரூபிப்பதற்கு கெஜடட் அதிகாரியின் சான்று தேவைப்படுகிறது. கிராமத்திலுள்ள கர்ணம் முதலில் பரிந்துரை தரவேண்டும். அதற்கு மேலே கெஜடட் அதிகாரி சான்றிதழ் தரவேண்டும். அந்த கெஜட்ட் அதிகாரி டி.எஸ்.பி.யாகவோ, மாவட்டக்கல்வி அதிகாரியாகவோ அல்லது மாவட்ட கலெக்டராகவோ இருக்கலாம். ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தின் பிள்ளை மிகப் பிற்பட்ட குடும்பத்தின் பிள்ளை பரம தரித்திரத்தின் பிள்ளை அந்த உயர் அதிகாரிகளிடம் போய் அந்தச் சான்றிதழை வாங்க பட்டபாடு கொஞ்சமல்ல. பாடுபட்டாலும் கூட கிடைக்காத நிலை. "எண்டா படிக்கிறே; வேலைக்குத் தொலைஞ்சு போ; சர்ட்டிபிக்கேட்டா? போ போ" என்று சொல்லி விரட்டிய தாவான்கள் எவ்வளவோ பேர் இருந்தார்கள். (சிரிப்பு). அதையெல்லாம் பார்த்துத்தான் சான்றிதழ் கிடைப்பதற்கு அரிதாக இருந்ததால்தான் எல்லாருக்கும் இலவசக் கல்வி தரும் திட்டம் வந்தது. ஆகவே, திரும்பவும் ஏழைகளுக்கு மட்டுமே இலவசக் கல்வி என்ற முறையைக் கொண்டு வந்தால், பழைய விஷப் பரீட்சையிலே போய் அகப்பட்டுக் கொள்ளுகிறோம். இதை விட எல்லோருக்குமே சம்பளம் என்று சொல்லிவிடுவது கூட நல்லது தான். ஆகவே, நான் திரும்பவும் சொல்கிறேன்; இது இடைக்கால ஏற்பாடாகத் தான் இருக்க முடியும், இருக்க வேண்டும். பிற்பட்ட, மிகப் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர், சீக்கிரம் இதைக்கூட விட்டு, "இந்த ஜாதி வழிச் சலுகை இல்லாமலே நாங்கள் கல்வி கற்று முன்னேறத் தயார்" என்று தாங்களாகவே முன் வருவார்கள். அந்த நாள் விரைவில் வர வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

கல்வி இலாகா தந்துள்ள அறிக்கையிலே கல்லூரிப் பயிற்சி மொழி பற்றியும் தகவல் இருக்கிறது. நான் போன ஆண்டு கல்விக் கொள்கையைப் பற்றிப் பேசிய போது கேட்டேன்; கல்லூரிகளிலே தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் எப்படி நடைபெறுகிறது என்ற விவரம் இல்லையே?" என்று நான் கேட்ட விவரம் இந்த ஆண்டு ரொம்பச் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. அவ்வளவு விவரமாக இல்லை. ரொம்பச் சுருக்கமாக இருக்கிறது. 80 ஆயிரம் பிள்ளைகள் புகுமுக வகுப்புகளிலே படிக்கிறவர்கள். அவர்களிலே தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துக்கொண்டிருப்பவர்கள் 18 ஆயிரம் பேர் என்று அரசு கூறுகிறது. இது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட உயர்ந்ததல்ல குறைந்தது கூட, இதில் தளர்வு ஏன் ஏற்பட்டது? தமிழைப் பயிற்சி மொழியாக்குவதில் உங்களுக்கு இருக்கிற சங்கடங்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அந்தச் சங்கடங்களைச் சமாளிப்பதற்கு உங்களோடு சேர்ந்து இருந்தே நான் பாடுபடத் தயாராக இருக்கிறேன். தமிழகத்திலே தமிழில் படிப்பதுதான் முறை நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற கொள்கையிலே உறுதியுடையவர். ஊரெல்லாம் சுற்றிச் சுற்றி அதைச் சொல்லி வருபவர். ஆனால், எப்படி எப்போது அதை முழுமையாக அமுல் நடத்தப்போகிறார்கள்? மாணவர்கள் முன்வரவில்லை என்று

சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன? தமிழ் மீடியத்தை எடுத்துப் படிப்பவருக்கு உத்தியோகம் கிடைக்காது என்று பயமுறுத்தப்படுகிறது கல்லூரி முதல்வரிடம் போய், 'தமிழ் மீடியம் எடுத்துக் கொள்கிறேன்' என்று ஒரு மாணவர் சொன்னால் 'எண்டா உருப்படுவது இல்லையென்று முடிவு கட்டிவிட்டாயா'? என்று சொல்கிறவர்கள் இன்றையதினம் அரசாங்கக் கல்லூரிகளிலேயே முதல்வர்களாக இருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது மாணவருக்கு, 'அப்படித்தான் ஆகிவிடுமோ' என்ற பயம். மாணவர்கள் எல்லோரும், புத்தகத்தைக் கையில் எடுக்கிறபோது உத்தியோகத்தைத்தான் நினைக்கிறார்கள். அறிவை நினைத்து எவர் புத்தகம் எடுக்கிறார்? ஆங்கிலத்தை மீடியமாக எடுத்துப் படித்தே வேலையில்லாமல் தெருவிலே சுற்ற வேண்டியிருக்கிறது என்று சொன்னால், தமிழிலே படித்துத் தேறி வந்தால், மைதானத்தைத்தான் சுற்றி வரணும், என்று மாணவர்கள் முடிவு கட்டுகிறார்கள். இந்த நிலையில் தமிழ் மீடியத்தை யார் எடுப்பார்கள்? நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழி கொடுத்தார்கள். தமிழ் மீடியத்தில் படித்துத் தேறி வருபவர்களுக்கு அறத் துறையிலே, உள்ளாட்சித் துறையிலே உத்தியோகத்துக்கு உத்தரவாதம் தரப்படுமென்று. அதுவே எனக்கு மன நிறைவைத் தரவில்லை. அறத் துறையிலேயும் உள்ளாட்சித் துறையிலேயும் மட்டும் தருவது என்றால், தமிழ் மீடியத்தில் படித்தவன் எதோ தரக் குறைவானவன் போலவும், அவன் வேறு துறைகளுக்கு நிதித் துறையிலே கிளார்க் வேலை பெறுவதற்கு தகுதியில்லை போலவும் ஒரு எண்ணத்தை ஏற்படுத்தியது. கொடுப்பதைக் கொடுக்கட்டும் என்று நான் சும்மா இருந்தேன். அதுகூட சொல்லப்பட்டதே தவிர, இன்னும் அமுல் படுத்தப்படவில்லை. தமிழ் மீடியத்தில் படித்தவர்களுக்கு உத்தியோகத்துக்கு உத்தரவாதம் என்ற ஒரு உத்தரவைப் போட்டு, அதை அமுல்படுத்துவதற்கு ஆட்சி துணிந்து நிற்குமேயானால், நிச்சயமாக தமிழ் மீடியம் எடுத்துப் படிக்க இன்னும் அதிகமான மாணவர்கள் முன் வருவார்கள்.

நான் தாய் மொழிப் பற்றால் கூட இதைக் கேட்கவில்லை. என்னுடைய அருமை நண்பர் திரு பலராமன் 'மொழிவெறி' என்று சொன்னார். என்னை நினைத்துச் சொல்லியிருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். இருந்தாலும், தமிழ்ப் பற்றுடைய யாரையும் வெறியன் என்று சொல்லிக் கேட்க என்னுடைய காதுகள் தயாராக இல்லை. தமிழ்ப்பற்றிலே ஒரு புள்ளி கூடுதலாக இருக்க முடியும் என்னைவிட புலவர் அறிவுடைநம்பி. அவரை விட இன்னொருவர் ஒரு புள்ளி கூடுதலாக இருக்க முடியும். காரணம் என்ன? தமிழ் அடிமைப்படுத்தப்பட்டுள்ளதன் விளைவு, ஆவேசம் தானாக வருகிறது. நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியபோது "வந்தேமாதரம்" என்று சொன்னோம். "தாய்நாடு வாழ்க" என்று சொன்னோம். இப்போது யாரும் சொல்கிறதேயில்லை 'வந்தேமாதரம்' என்று. அப்போது சொன்ன வாய்கள் எல்லாம் இப்போதும் இருக்கின்றன. ஆனால் சொல்வதில்லை. ஏன்? அந்நியன் ஆட்சி செய்தபோது பட்ட அவஸ்தையின் விளைவு, காரணமாக நாம் "வாழ்க இந்நாடு" என்றோம்.

அதுபோல, "தமிழ் வாழ்க" என்று கொஞ்சம் வெறியோடு சொல்லுகிறோம். ஆங்கில ஆதிக்கம் இருக்கிறவரை இந்த வெறி இருக்கும். ஆங்கில ஆதிக்கத்தின் ஆணி வேர் அறுகிறபோது இந்த வெறி அழியும். இது, தற்காப்பிற்கே ஒழிய பிற மொழிகளைத் தாக்குவதற்கு அல்ல. நண்பர் சொன்னார், வடமொழிச் சொல் வெறுக்கப்படுகிறது என்று. நான் பிற மொழிச் சொல் கூடாது என்று சொல்லுபவனல்ல. மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு அன்றே நான் சொன்னேன். "தமிழ் மொழியைத்தான் நான் விடுதலை செய்ய விரும்புகிறேனேயொழிய, சொல்லையல்ல" என்று. பிறமொழிச் சொல் இங்குமங்கும் வருவது பற்றி நான் கவலைப்படவில்லை. இங்கு ஒரு தகவல் தருகிறேன். அகில உலக இந்தி மாநாடு நாகபுரியில் நடந்தது. அந்த இந்தி மாநாட்டிலே, அகில இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் கலந்து கொண்டார். அவர் கேட்டார் "இது என்ன இந்தி மாநாடா? இல்லை, சமஸ்கிருத மாநாடா" என்று. அது பத்திரிகையிலே கூட வந்தது. ஏனென்றால் சமஸ்கிருத மொழியைக் கூடுதலாகப் பயன்படுத்திப் பேசினார்கள் இந்திப் பேச்சாளர்கள். அந்தக் காரணத்தால்தான் "இது இந்தி மாநாடல்ல; சமஸ்கிருத மாநாடு" என்று அவர் சொன்னார். சமஸ்கிருதத்துக்குரிய லிபி வடிவத்தையே பெற்றதுதான் இந்தி. இந்தியிலிருக்கிற சமஸ்கிருத வார்த்தைகளை எடுத்துவிட்டுவிட்டால், அப்புறம் இந்தி என்ற ஒன்று கிடையாது. அறவே சமஸ்கிருதச் சொற்களை எடுத்துவிட்டால் இந்தியே இல்லை. அப்படிப்பட்ட மொழியின் பெயரால் நடந்த மாநாட்டிலேயே, பிராமணரான அகில இந்திய ஆளும் காங்கிரசினுடைய பொதுச் செயலாளரே—சமஸ்கிருதத்திலே பண்டித பட்டம் பெற்றவரே சொன்னார், "இது, இந்தி மாநாடா அல்லது சமஸ்கிருத மாநாடா", என்று. "ஏன், அதிக சமஸ்கிருத சொற்களைப் பயன்படுத்துகிறீர்கள்?' என்று கேட்டார். ஆகவே, ஒரு மொழியினுடைய தனித் தன்மையை அழிக்கிற அளவுக்கு பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவது தவறு. ஆனால், அந்தத் தவறு நடப்பதால்தான் ஒரு சொல் கூட வேண்டாமென்ற உணர்வு ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் தவறுகள் நீக்கப்பட்டால், பிறமொழிச் சொல்லே வேண்டாமென்ற உணர்வும் நீக்கப்பட்டுவிடும்.

(பிற்பகல் 11-00)

ஆகவே, இந்தத் தவறுகள் நீக்கப்படாததால், பிறமொழிச் சொல்லே வேண்டாம் என்ற உணர்வு நீடிக்கட்டும். அதற்கு நண்பர் திரு. பலராமன் அஞ்ச வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீவிரமாக தமிழ் மீடியம் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு என்ன செய்யப்போகிறது, இதை நான் ஆண்டாண்டுதோறும் கேட்கிறேன். இதற்கு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் கிடைக்கவில்லை. எனக்கு அதிர்ஷ்டம் இருந்தால், இந்த ஆண்டாவது விளக்கம் கிடைக்கும் என்று நம்புகிறேன். தடை இருக்கிறது; எதிர்ப்பு இருக்கிறது. அதை நீக்கி தமிழைப் பயிற்சி மொழி ஆக்குகின்ற சூழ்நிலையை எப்படி உருவாக்கப்போகிறீர்கள்? அதற்கு ஆட்சியின் கையில், ஆளும் கட்சியின் கையில் என்ன வேலைத் திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1975 ஏப்ரல் 3

அடுத்தபடியாக, ஆட்சி மொழிப் பிரச்சினை. தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும். பயிற்சி மொழி விஷயத்தில் ஏற்படுகின்ற தயக்கம் தான் ஆட்சி மொழி விஷயத்தில் தடையாக நிற்கின்றது. ஒன்றில் இருக்கிற தயக்கம் இன்னொன்றுக்குத் தடையாக வளர்கிறது. சட்டக் கல்லூரியில் தமிழைப் போதனு மொழியாக எடுத்துப் படித்துப் பாஸ் செய்து வந்தால்தான் நீதி மன்றத்தில் தமிழில் நடவடிக்கைகளை நடத்த முடியும். கலைக் கல்லூரிகளில் தமிழைப் போதனு மொழியாக எடுத்துப் படித்தால்தான் அரசாங்கத் துறைகளில் தமிழை உபயோகிக்க முடியும். கல்லூரிகளில் தமிழ் மீடியம் இல்லையென்றால், நீதிமன்றத்தையும், அரசுத் துறைகளையும் தமிழில் நடத்த முடியாது. ஆங்கிலத்தில் படித்துவிட்டு வெளியே வருபவர்கள், ஆட்சி மொழி தமிழாக இருப்பதை ஆட்சேபிப்பார்கள். ஆட்சி மொழிப் பிரச்சினை வேறு, பயிற்சி மொழிப் பிரச்சினை வேறு என்று ஆட்சியாளர்கள் கருத வேண்டாம்.

இன்னொன்றையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டசபையில் நிகழ்ச்சி நிரலும் குறிப்புகளும் தமிழிலும் தரப்படுகின்றதேயொழிய, தமிழில்தான் தரப்படுகின்றது என்ற நிலை இல்லை. ஆட்சி மொழிச் சட்டம் என்ன சொல்லுகிறது? ஆங்கிலத்திற்குப் பதில தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்றுதான் ஆட்சி மொழிச் சட்டம் சொல்லுகிறது. ஆனால் ஆங்கிலத்திற்குப் பதிலாக அல்லாமல் ஆங்கிலம் தெரியாதவர்களுக்காகத் தமிழிலும் கொடுக்கப் படுகின்றது. சில துரதிருஷ்டசாலிகளுக்காக ஆங்கிலம் தெரியாதவர்களுக்காக போனால் போகட்டும் என்ற அளவில்தான் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுக்கப்படுகிறதே தவிர வேறில்லை. இந்தச் சலுகையைத் தவிர உரிமை கிடைக்கிறதா? நான், என்னுடைய தாய் மொழிக்குச் சலுகை கேட்கவில்லை. உரிமையைக் கேட்கிறேன்.

உங்களுடைய ஆட்சி வந்த பிறகும் தமிழுக்கு உரிமை தரப்படவில்லை, சலுகைதான் தரப்பட்டு வருகிறது. அந்தச் சலுகை கூட எப்படித் தெரியுமா? ஆங்கிலத்தோடு சமமாக நிற்கவில்லை தமிழ் மொழி. நம்முடைய சட்டமன்ற மேலவையின் விதி சொல்லுகிறது. நானும் சேர்ந்து அதைத் தயாரித்தவன் "தமிழ், ஆங்கிலம் அல்லது தமிழும் ஆங்கிலமும், இந்த மன்றத்தின் நிர்வாக மொழிகளாகக் கருதப்படும்" என்று. இங்கே என்ன நடக்கிறது? உறுப்பினர்களுக்கு அனுப்புகிற நிகழ்ச்சிக் குறிப்புகளிலே, "ஆங்கில நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி" என்று அடிக்குறிப்பு இருக்கிறது. இதைவிடத் தமிழுக்கு வேறு என்ன அவமானம் ஏற்பட வேண்டும்? அந்த வரியை நாளையிலிருந்தாவது எடுத்துவிடுங்கள். "நந்தா, உனக்கில்லையடா சிதம்பர தரிசனம் என்று அன்று வைதீக அந்தணர் சொன்னதற்கும்" "தமிழா, இது ஆங்கிலத்தின் நகல்தான், நினைவில் வை" என்று இங்கு சொல்வதற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? இப்படி ஒரு இழி நிலையா, தமிழுக்கு? ஆகவே, தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் இன்னமும் அமுலாக்கப்படவேயில்லை. அரசுத் துறைகள் பல அந்தத் துறைகளில் அலுவலகங்கள் ஆயிரம் ஆயிரம்.

1975 ஏப்ரல் 3] [திரு. ம. பொ. சிவஞானம்]

அந்த ஆயிரமாயிரம் அலுவலகங்களில், ஒரு அலுவலகத்திலாவது ஆங்கிலத்தை விலக்கி தமிழ் மட்டும் ஆட்சி மொழியாக்கப்பட்டுள்ளதா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் அறிந்தவரை இல்லை என்பதுதான். 19 ஆண்டு காலமாக ஆட்சி மொழிச் சட்டம் கிடப்பில் தூக்கிப் போடப்பட்டிருக்கிறது. ஆட்சி மொழித் துறை இருக்கிறது, இயக்குநர் இருக்கின்றார், அவருக்குக் கீழ் சிப்பந்திகள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் வெட்டிக்கு ஏன் சம்பளம் கொடுத்து வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? ஒரு நாடகத்தை நடத்திக்காட்டவா அந்தத் துறை இருக்கிறது? ஒரு அலுவலகத்தில்கூட ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழ் வரவில்லையே. இங்கே தமிழ் நூல் விலைப்பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது. கல்லூரி பாட நூல் நிறுவனத்தின் சார்பில், கல்லூரிகளுக்காக என்ன என்ன நூல்கள் தமிழில் போட்டிருக்கிறார்கள் என்று அதில் தகவல் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் தொண்டை நான் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். இந்த விலைப்பட்டியல் நூலின் முகப்பிலே முதலில் தமிழிலும், அதன் கீழே ஆங்கிலத்திலும் தரப்பட்டிருக்கிறது. இரண்டும் சமமாக இருப்பதை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை—ஒப்புக்கொள்கிறேன். ஆனால், உள்ளே புகுந்து பார்த்தால் தலைப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில் மட்டும்; எழுதிய ஆசிரியரின் பெயரும் ஆங்கிலத்தில் மட்டும்; மொழி பெயர்த்தவர் பெயரும் ஆங்கிலத்தில் மட்டும்; நூல்களின் பெயர்களை ஆங்கிலத்தில் கொடுத்து அடைப்புக்குள் தமிழில் தரப்பட்டுள்ளது. இன்பத் தமிழ்த் தாயே! உன்னை அடைப்புக்குள்தான் பார்க்கவேண்டுமோ? அதற்கான குறையை இந்த அரசுமீது சொல்லவில்லை. கல்வி அமைச்சர் மீது சொல்லவில்லை. ஓர் இலாகாவின் தலைவரோ, கல்வி அமைச்சரோ ஒவ்வொரு வரியாக இதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. நேரமிருக்காது. இதற்குக் காரணமாக இருந்தவருக்கு தான் தமிழன் என்ற உணர்வு ஏற்பட்டிருந்தால், இந்தத் தவறு ஏற்பட்டிருக்க முடியாது. தமிழ்ப் பெயரை முதலில் போட்டுவிட்டு அதன்கீழ் ஆங்கிலத்தை அடைப்புக்குள் போட்டிருந்தால் என்ன?

சட்டக் கல்லூரியில் தமிழ் பயிற்று மொழிவகுப்பு துவக்கப்பட்டுள்ளது. விரும்புவோர் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கிறார்கள். ஆனால், தேர்வுக்கு வரும்போது வினத்தாள் தமிழில் இல்லை. ஆங்கிலத்தில்தான் தரப்படுகிறது. தமிழில் தேர்வு எழுத அனுமதி கொடுக்க வேண்டும் என்று மாணவர்கள் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். தமிழில் எழுதுவதாகச் சொல்லி சம்பளச் சலுகை வாங்கிவிட்டு, ஆங்கிலத்தில் எழுதுவதற்கு அனுமதி கேட்பவர்கள் கொஞ்சம் தான். தமிழ் பயிற்சிமொழித் திட்டம் சட்டக் கல்லூரியில் கைவிடப்பட்டுவிட்டதா? அரசாங்கக் குறிப்பின்மேல் கைவிடப்பட்டதாக பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது. அந்தக் குறிப்பை அரசு ஏன் அனுப்பியது? தமிழில் பாடநூல்கள் இல்லை. ஆகவே, அனுப்பப்பட்டதாக நான் கேள்விப்படுகிறேன். இரண்டு ஆண்டு ஆகியும், ஏன் சட்டக் கல்லூரிப் பாடநூல்களை வெளியிட அக்கறை செலுத்தவில்லை. மொழிபெயர்ப்பு நூலாக 3 மாதங்களில்

கொடுக்க முடியாதா? அப்படி ஒரு நிலை இருக்குமா? இந்த நிலையை என்னால் சகித்துக்கொள்ள முடியாது. பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நான் ஆட்சியாளரிடம் திரும்ப வேண்டுகிறேன், உங்களிடம் அல்லாமல் வேறுயாரிடம் போய்ச்சொல்லி நான் அழுவது? அவர்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை. நான் உறுதியாகச் சொல்லுகிறேன். தி. மு. க. ஆட்சி என்றும் நீடித்து நிலைக்க வேண்டும் என்று நினைப்பவன் நான். அதற்காக ஏச்சுக்களும், பேச்சுக்களும் கேட்டுக் கொண்டிருப்பவன். அதற்காக என்னைக் கிண்டல் பண்ணி பத்திரிகைகளில் கார்ட்டூன் போடுகிறார்கள். என்னிடமிருந்து சிலப்பதிகாரத்தை தி. மு. க. வும், அதன் தலைவர்களும் எடுத்துக் கொண்டார்களாம். கட்டபொம்மனையும் எடுத்துக் கொண்டுவிட்டார்களாம். ஆகவே "இனி என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். "உங்களுடைய மாநில சுயாட்சிக் கொள்கையை எடுத்துக்கொண்டு விட்டார்களே, இனி என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். தி. மு. க. தலைவரான கலைஞர் என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாத ஒன்று என்னுடைய மீசை. அதையும் கலைஞருடைய முகத்தில் ஒட்டி ஒரு பத்திரிகையில் படம் போட்டிருக்கிறார்கள். அப்படிப் படம் போட்டுக் காட்டுகிற அளவுக்குப் போய்விட்டார்கள். என்னுடைய 50 ஆண்டு கால பொதுவாழ்வில், ஜாதிப்பகைமை என்ற தீமையைத் தீண்டமறுத்த நிலையில் அரசியல் வாழ்வு நடத்தி வருகிறேன். பத்திரிகை உலகத்தின் இருட்டடிப்பையும் சகித்துக்கொண்டுதான், தமிழுக்கு, தமிழனுக்கு இந்த ஆட்சிதான் அடைக்கலம் என்று நான் இந்த ஆட்சியை ஆதரித்துக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய ஆட்சி காலத்திலும், தமிழின் நிலை இது என்றால், அதை நான் அடித்துக் கேட்கவில்லை என்றால், நான் மனச்சாட்சியை விற்றுவிட்டவன் என்றுதான் அர்த்தம். மனச்சாட்சியை விற்றுவிட்டு யாரையும் ஆதரிக்க நான் தயாராக இல்லை. இந்த நிலையில் தமிழ் வளர்ச்சிக்காக நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதைச்செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நூலகங்கள் ஆங்காங்கே நடக்கின்றன. மாவட்ட நூலகக் குழுவின் தலைவர் என்று இருக்கின்ற வேறு எவரையும்விட, ஓரளவு கூடுதல் அனுபவம் பெற்றவன் நான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். இருமுறை தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவனாக இருந்திருக்கிறேன். நூலகத் துறைக்கெனத் தனி இயக்குநர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். கல்வி அமைச்சர் அவர்கள் முதலில் சிறிது தயங்கினார்கள். பிறகு என் வேண்டுகோளுக்கு இணங்கி நியமித்தார்கள். 3 காசாக இருந்த நூலக வரியை.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சட்டக் கல்லூரியில் சென்ற இரண்டு ஆண்டு காலமாக 40, 40 மாணவர்களுக்கு தமிழிலே பயிற்சி தரப்பட்டது. அது கைவிடப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் பல்கலைக் கழகத்திற்கு

அனுப்பப்படவில்லை. அதனால் கைவிடப்படவும் இல்லை. பல்கலைக் கழகம் போதுமான அளவு நூல் இல்லை என்பதற்காக ஆங்கிலத்தில் வினாத்தாள் தயாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அண்மையில் நாம் எடுத்துச் சொன்னோம். வினாத்தாள் ஆங்கிலத்தில் இருந்தாலும், இந்த ஆண்டு மாணவர்களுடைய கோரிக்கையை ஏற்று தமிழிலே எழுதுவதற்கு அனுமதிக்கவேண்டுமென்று தெரிவித்தோம். பல்கலைக்கழகமும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு வினாத்தாள் தமிழிலே தயாரிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். ஆகவே அது கைவிட்டுவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: மிக்க மகிழ்ச்சி. வெளியில் ஒரு விஷமப் பிரச்சாரம் இது குறித்துச் செய்யப்படுகிறது என்பதனால் தெளிவு தரவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். தனிப்பட்ட முறையிலும் அமைச்சர் அவர்களோடு இதுகுறித்துப் பேசியிருக்கிறேன். ஆகவே வெளியில் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் கேட்டேன்.

நூலக வரி 3 காசாக இருந்ததை 5 காசாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். நான் தலைவனாக இருந்த சென்னை மாவட்ட நூலகத் துணைக்குழுவுக்குப் பணப்பஞ்சம் இல்லை. மற்ற மாவட்டங்களில் உள்ள நூலகங்களுக்கோ, புத்தகங்கள் வாங்கவும் பணம் இல்லை. எனது கோரிக்கையை ஏற்க முதலில் நிதியமைச்சராக உள்ள முதலமைச்சர் அவர்கள் சிறிது தயங்கினாலும், பிறகு அதை ஏற்றுக்கொண்டு, நூலக வரியை 5 காசாக உயர்த்தியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 11-10)

இந்த இரண்டும் நடந்த பிறகும் நூலக இயக்கம் வளரவில்லை. இந்த ஆண்டு கல்வித்துறை பற்றிய கொள்கைக் குறிப்பில், நூலக இயக்கம் ஆண்டாண்டுதோறும் எப்படி வளர்ந்து வந்திருக்கிறது என்ற விவரம் காணப்படவில்லை. முன்பெல்லாம் காண்பித்தார்கள். ஆனால் கடந்த இரண்டாண்டு காலமாக அதுபற்றிய விவரம் காண்பிக்கப்படவில்லை. நூலக இயக்கம் வளர்ச்சி அடையவில்லை என்றால், வளர்ச்சி இல்லாததை எடுத்துக்காட்டுவதன் மூலம் மேலும் வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கான யோசனைகளை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தலாம். ஆனால் அது பற்றி குறிப்பிடவில்லை என்றால், உறுப்பினர்களும், அதுபற்றி எடுத்துக்காட்டி இந்த இந்த மாற்றங்களை, இந்த இந்த வழிமுறைகளைக் கையாண்டு வளர்ச்சியினை மேம்படுத்த வேண்டும் என்று எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. வளர்ச்சி இல்லாததை குறிப்பில் எடுத்துக் காண்பிக்காமல் விட்டுவிடுவது இலாகாவின் திறமையாக இருந்தாலும், அது நூலக இயக்கம் வளர வழி செய்யாது என்பதை நான் சற்று வேதனையுடன் எடுத்துக்காட்டத்தான் வேண்டும். ஆக, நூலக இயக்கம் இன்னும் வளர்க்கப்பட வேண்டும்

என்று மீண்டும் எடுத்துச்சொல்லுகிறேன். தமிழ் எழுத்தாளர் என்று என்னைத் தலைவரவர்கள் எடுத்துச்சொன்னார்கள். எத்தனையோ நூல்கள் எழுதியிருக்கிறேன். கிட்டத்தட்ட 82 நூல்கள் எழுதியிருக்கிறேன். ஆனால், எவ்வளவு பணம் கிடைத்தது ?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வந்திருந்தால் இன்னும் எழுதியிருப்பீர்கள்.

திரு. ம. பொ. சிவஞானம்: உண்மை, வந்திருந்தால் மேலும் எழுதியிருப்பேன். ஆனால், இவ்வளவு நூல்களையும் எழுதிய எனக்குக் கிடைத்தது எவ்வளவு? எனக்கே தெரியாது. ஒரு ஆயிரம் பிரதிகள் என்ற அளவிற்காவது தமிழ்நூல் விற்கிறதா ? இல்லை, இரண்டாம் பதிப்பு போடவேண்டிய அளவிற்காவது விலை போகிறதா என்றால் இல்லை. இதன் பெயர்தான் தமிழ் வளர்ச்சி. 1948-லிருந்து நூலக இயக்கம் இருந்து வருகிறதென்றாலும், ஒரு நூல் ஆயிரம் பிரதிகள் விலைபோகும் என்ற நம்பிக்கை தரும் அளவுக்கு இயக்கம் வளர வில்லை. அதனைப் பயன்படுத்தி—எழுதுகோலைப் பயன்படுத்தி நூலை எழுதினால், அவை விலை போகாத நிலையைத்தான் சற்றுமுன் சொன்னேன்.. தமிழ் வளர வேண்டுமானால், அறிவு நூல்கள் பெருக வேண்டும். அறிவு நூல்கள் பெருகினால்தான் தமிழ் எழுத்தாளர் தமிழைக் கொண்டு வாழ முடியும். அதற்கான முயற்சிகளை கல்வி அமைச்சர் எடுத்துக்கொள்ள வேண்டும். எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

இறுதியாக, இந்தக் கல்வி அறிக்கையை முழுதுமாக எடுத்துக் கொண்டு அரசைப் பாராட்டுகிறேன். இலவசக் கல்வி நீடிக்க வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்துள்ள நேரத்தில் அதை கைவிடக்கூடாது என்று நான் வேண்டுகிறேன். இதுகாறும் நாம் அளித்து வந்த இலவசக் கல்வியின் பயன் என்ன என்பதைக் கண்டறிய ஒரு ஆய்வுக் குழுவினை அமையுங்கள். அவர்களுடைய அறிக்கை நமக்கு வரட்டும். பின்தங்கிய வகுப்பினருக்குச் சலுகைகள் பல தருகிறோம். இதனால் அவர்கள் அடைந்த பலன்கள் என்ன ? அவர்களில் எவ்வளவு பேர் முதல் வகுப்பில் தேர்வு பெற்று வருகின்றார்கள் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து நமக்குத் தெரிவிக்கட்டும். அதை நிறுத்தி விடுவதற்காகச் சொல்லவில்லை. அதன் பலன்களை மேலும் பலருக்கு அளிக்க இவை நமக்கு வழிகாட்டியாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான் சொல்லுகிறேன். இலவசக்கல்வி அளிப்பதைப் பலர் எதிர்த்தார்கள். எதிர்ப்பவர்கள் நல்லெண்ணத்தோடு எதிர்க்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆனால் இந்த நாட்டில் எதை எடுத்தாலும் ஜாதிக்கண் கொண்டு பார்க்கின்றார்கள், அல்லது கட்சிக் கண்கொண்டு பார்க்கின்றார்கள். தமிழர்கள் என்ற இனக்கண்ணோட்டத்தோடு அல்லது இந்தியர்கள் என்ற கண்ணோட்டத்தோடு பார்க்கவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளுகிறேன். சாதி வழி சலுகைகள் இல்லாமல் நாடு முன்னேறும் நாள் விரைவில் வர வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, கல்வி சம்பந்தமான கொள்கைபற்றி கடந்த மூன்று தினங்களாக இங்கே நாம் விவாதித்துக்கொண்டு வருகிறோம்.

பொதுவாகப் பார்த்தால், மொத்த வருவாயில் அதிகமான பணத்தைச் செலவழித்துக்கொண்டிருக்கும் துறை கல்வித் துறைதான். தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைக் கல்வி, பட்டப்படிப்பு வரையில் பார்க்கும்போது, கிட்டத்தட்ட ரூ. 148 கோடிக்குச் செலவழிக்கிறோம். ஆகவே பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி, இதை ஆழ்ந்து பரிசீலிக்கவேண்டிய பொறுப்பு உறுப்பினர்களுக்கு இருக்கின்றது. ஏதோ மேலெழுந்தவாரியாக இதைப் பார்த்துவிட்டுப் போய்விடக் கூடாது நாம். மூன்று தினங்கள் இல்லை, அவசியமானால் நான்கு தினங்கள் கூட இதைப்பற்றி விவாதம் செய்வதில் தவறு எதும் கிடையாது. கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. பொதுவாகக் கல்லூரிக் கல்வியை நான்காண்டுகளாக ஆக்கிவிடுவது நலம் என்றும், அதிலே டிகிரி கோர்ஸ் இப்போது மூன்று ஆண்டுகள் என்று இருப்பதால் பல சங்கடங்கள், ஸ்ட்ரைக்குகள் எல்லாம் ஏற்படுகின்றன என்றும், ஆகவே இரண்டாண்டு காலம் இண்டர்மீடியட் என்று முப்பது வருஷத்துக்கு முன்பு இருந்த மாதிரி இரண்டாண்டு அதற்கும் அடுத்த இரண்டாண்டு காலம் டிகிரி படிப்பிற்கு என்றும் இருக்க வேண்டும் என்று பலர் அபிப்பிராயப்பட்டார்கள். நமது நண்பர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் இதிலே அனுபவம் வாய்ந்தவர்கள். அவரைப் போன்றவர்கள் அரசாங்கத்திற்குச் சரியானபடி யோசனைகளை எடுத்துச்சொல்ல வேண்டும். இன்னும் அவரைப் போன்ற பல அனுபவஸ்தர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் இதிலே அக்கறை செலுத்த வேண்டும். நாங்கள் எல்லாம்பெற்றோர் வகையில்தான் இருப்பவர்கள். ஆகவே கல்வியில் திறமைசாலிகளாக இருப்பவர்கள் நம் பிள்ளைகள் எப்படி எப்படி கல்வி கற்க வேண்டும் என்று சொல்லி அதற்குத் தக்கபடி கல்வி முறைகளை மாற்றுவதற்கான நல்ல யோசனைகளைத் தெரிவிக்க வேண்டும். நாங்கள் எல்லாம் பொதுவான, சில கருத்துக்களைச் சொல்லலாமே தவிர, விஞ்ஞானரீதியில் சொல்லக்கூடியவர்கள் இல்லை. எனவே இந்தத் துறையில் உள்ளவர்கள் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து ஒரு முடிவிற்கு சீக்கிரமாக வந்தால் நலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப்பள்ளிகளிலே தொழிற் கல்விப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தில் முடிவெடுத்து இப்போது அதிலே ஓர் ஆரம்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏற்கனவே 19 உயர்நிலைப் பள்ளிகளிலே அத்தகைய பயிற்சி அளிக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார்கள். நல்ல ஆரம்பம். புள்ளி விவரங்களைப் பார்த்தால், தற்போது ஏராளமான பிள்ளைகள் தோல்வியுற்றோ அல்லது தேர்வு பெற்றவர்கள் மேலேயும் புகுமுக வகுப்புக்கும் போகாமலோ நின்று விடுகிறார்கள். இதற்கு எவ்வளவோ குடும்பக் காரணங்கள் இருக்கின்றன. எனவே எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் ... போதுமான அளவிற்கு வாழ்க்கைக்கு

உதவக்கூடியதாக இருந்தால் நல்லது. அதற்கான கல்வியை ஏற்பாடு செய்துதர வேண்டும். இப்போதுள்ள எஸ். எஸ். எல். சி. திட்டம் அந்த அளவிற்கு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இப்போது பி. ஏ. படித்தால்கூட போதுமான படிப்பு என்று கருதாமல், பி.ஜி. கோர்ஸ் படித்திருக்கிறீர்களா என்று கேட்கும் நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையில் தொழில் நுட்பக்கல்வியை மாணவர்களுக்குக் கொடுத்தால், அவர்கள் ஏதேனும் ஒரு தொழில் ஈடுபட்டு பிழைக்கக் கூடிய அளவிற்குஎஸ்.எஸ்.எல்.ஸி. படிப்புத் திட்டம் அமைய வேண்டும். கொள்கை அளவில்இதைஅரசாங்கம் ஏற்றுக்கொண்டு 19பள்ளிக்கூடங்களுக்கு இதற்காக பணம்ஒதுக்கியிருக்கின்றார்கள். வெகுவேகமாக இதிலே முன்னேற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர கல்வி என்றால், பொதுவாக ஓர் அபிப்பிராயம் என்னவென்றால், படித்துவிட்டால் உடனே உத்தியோகத்திற்குப் போக வேண்டும், படித்தால்தான் உத்தியோகத்துக்குப் போக முடியும். அதிலும் சர்க்கார் உத்தியோகம்தான்; மனிதனுடைய இலட்சியமே சர்க்கார் உத்தியோகம்தான் என்ற அளவில் இப்போது இருக்கிறது. இந்த எண்ணத்தோடு கல்வி கற்றால், மாணவர்களுடைய கதி என்னவாகும்? எல்லோருக்கும் சர்க்கார் உத்தியோகம்தான் வேண்டுமென்றால், சர்க்கார் உத்தியோகத்துக்கு எவ்வளவு பேர் தேவையோ அவ்வளவு பிள்ளைகளுக்கும் கல்லூரிகளில் போதுமான இடத்தை வைத்துக்கொண்டு பாக்கிப் பேருக்கு இடமில்லை என்று சொல்லிவிடலாம். அறிவை வளர்த்துக்கொண்டு, பல துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற எண்ணத்தோடு கவனம் செலுத்தாமல், அரசாங்கத்திலே உத்தியோகம் வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மட்டும் படித்தால் என்ன பலன் ஏற்படும்? பி. ஏ., எம். ஏ. படிப்பதெல்லாம் சர்க்கார் உத்தியோகத்துக்குத்தான் என்ற எண்ணத்தோடு படிப்பது தேசத்தின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். அது நல்லதில்லை. அப்படியானால் பள்ளிக்கூடத்தின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு சர்க்கார் உத்தியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு நின்றுவிடும் அளவிற்கு ஒரு பயிற்சிப் பள்ளிக்கூடம் போல இருந்துவிடும். இது தவறான ஒரு கொள்கை. இதைப் பெற்றோர்களும் மாணவர்களும் விட்டுவிட்டு, பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி முக்கியம் என்ற எண்ணத்தில் படிக்க வைக்க வேண்டும். அதற்குத் தகுந்த முயற்சியை எல்லோரும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-20).

இலவசக் கல்வி, மைய மதிய உணவுத் திட்டம். இந்த இரண்டும் காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்டிருந்தாலும் கூட, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், எதிர்ப்பு இல்லாமல் அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரிக்கின்ற ஒன்று. இலவசக் கல்வியால் எல்லோருக்கும் பயன் ஏற்பட பணத்தைப்பற்றி லட்சியம் இல்லாமல் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்ட பின் பேசலாம். பள்ளிக்கூடத்திற்குச் சம்பளம் கட்ட முடியாமல் கிராமப்புறங்களில் எவ்வளவு பேர் கஷ்டப்படுகிறார்கள் என்பது கிராமங்களில் தொடர்புடையவர்களுக்குத் தெரியும். அதைப் போக்கத்தான்

இந்த இலவசக் கல்வி கொண்டுவரப்பட்டது. அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றது. ஆகவே அதை மொத்தமாகக் கைவிடவேண்டும் என்று யாராவது அதைப் பற்றி நினைத்தால், அந்த எண்ணம் நிறைவேறாது. மக்களும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைய சமையல்கூடம். இது ஒரு நல்ல திட்டம். 'கேர்' உதவியுடன் இந்தத் திட்டம் இப்போது மூன்று ஜில்லாக்களில், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் அமுல் நடத்தப்படுகிறது. இதை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் அங்குள்ள ஆசிரியச் சமுதாயத்திற்கு விடுதலை ஏற்படும். இதை விஸ்தரிப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு விஷயம் ஏதோ மதிய உணவு என்பது நம் தமிழ்நாட்டில்தான் கொடுக்கிறோம் என்று நினைக்க வேண்டாம். அமெரிக்கா சென்று வந்த நண்பர்கள் எல்லாம் சொல்லுகின்றார்கள். ஆரம்பப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அமெரிக்காவில்கூட மதிய உணவு கொடுக்கிறார்கள். பணக்கார நாடாக அமெரிக்கா இருந்தும், அங்கும்கூட மதிய உணவு இலவசமாகப் போடுகிறார்கள். கோடீஸ்வரரின் வீட்டுப் பிள்ளைகளும் கண்டிப்பாக அந்த உணவைச் சாப்பிட்டாக வேண்டுமென்று அந்தப் பள்ளிகளில் வற்புறுத்துகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட பணக்காரர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குத் தெரியாமலேயே பண உதவியை கல்வி ஸ்தாபனங்களுக்கு, இன்ஸ்டிடியூஷன்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். பணத்தைக் கொடுத்துவிட்டு பிள்ளைகளைச் சாப்பிட அனுப்புகிறார்கள். ஆனால் இது அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தெரியாது, பெற்றோர்கள் அப்படி அனுப்பிவிடுகிறார்கள் அவர்களுக்கு மாணவர்கள் மத்தியிலே தாழ்வு மனப்பான்மை ஏற்படாமலிருப்பதற்கு இந்தத் திட்டத்தை வைத்திருக்கின்றார்கள். பணக்காரர்களானாலும் சரி, ஏழைகளானாலும் சரி, மற்ற பிள்ளைகளோடு மதிய உணவு அவர்கள் சாப்பிட வேண்டுமென்று வைத்திருப்பதாகச் சொல்லுகின்றார்கள். அது நல்ல பழக்கம். மதிய உணவு எல்லோருக்கும் பொதுவாகப் போடுவது என்று ஏற்பாடு செய்வது மிகவும் நல்லது.

ஏ பிரிவு, பி பிரிவு என்பதில் உள்ள சிக்கல்கள் எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் அந்தச் சூழ்நிலைகளையெல்லாம் நாம் சமாளித்தாக வேண்டும். அதை எப்படியும் ஒன்றாக ஆக்கிவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இதிலே உள்ள கஷ்டம்பற்றி ஒரு நண்பர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். இப்போதுள்ள நிலவரப்படி, 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இரண்டும் அரசாங்கப் பள்ளிகள். 'ஏ' பிரிவில் உள்ள பி. டி. ஸ்தானத்திற்கு காலி ஏற்பட்டால், 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் மத்தியிலே ஆளில்லை என்றால், 'பி' பிரிவிலிருந்து பி. டி. படித்த செகண்டரி கிரேடு காலி ஸ்தானத்தில் வேலை பார்த்து வரும் ஒருவருக்கு அந்த சான்ஸ் கொடுக்க வேண்டும். ஆனால் இப்போதுள்ள பழக்கம் 'ஏ' பிரிவில் பி. டி. ஸ்தானம் காலியிருந்தால் உடனே 'டிரெக்ட் ரெக்ருட்மெண்ட்' செய்கிறார்கள். பி. டி. படித்துவிட்டு

3 ஆண்டுகள் 4 ஆண்டுகள் 'பி' பிரிவில் பணியாற்றிக்கொண்டிருப்பவர்களுக்கு, குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டிருப்பவர்களுக்கு அந்த ஸ்தானத்தை ஏன் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறார்கள். இது மிகவும் சரியான கேள்விதான். ஓர் ஆசிரியர் மனம் நொந்து எழுதியிருக்கின்றார்கள். "நாங்கள் எல்லாம் செகண்டரி காலி ஸ்தானங்களில் பி. டி. ஆசிரியர்களாயிருந்தும் வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் 'ஏ' பிரிவில் பி. டி. காலி ஸ்தானங்களுக்கு வெளியிலே இருந்து ஆள் எடுக்கின்றார்கள். இங்கே இருந்து ஆட்கள் எடுத்தால் என்ன?" என்று கேட்கிறார்கள். அது நியாயமான கோரிக்கை என்று நான் நினைக்கின்றேன்.

அடுத்தபடியாக, பல்கலைக்கழகம் இன்னும் இரண்டு நிறுவுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருகிறது என்பது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். கூடிய சீக்கிரம் இன்னும் ஒன்று, இரண்டு, மூன்று பல்கலைக் கழகங்கள் வருவதானால், நமக்கு நிர்வாகத்திற்கு மட்டுமல்லாமல், அனைத்துக்கும் அது வசதியாக இருக்கும் என்று சொல்வதனால், சீக்கிரம் ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிகளில் பரீட்சையில் தேர்வுகளில் மார்க்குப் போடும்போது, நன்னடத்தைக்காக என்று 20 பெர்செண்ட், 15 பெர்செண்ட் போட்டால் என்ன? அதை ஏன் போடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல நடத்தைக்குக் கொஞ்சம் மார்க்கு அதிகமாக, 20 பெர்செண்ட் கொடுக்கிறோம் என்று சொன்னால், பிள்ளைகள் ஆசிரியர்களிடத்தில் நல்ல முறையில் நடந்துகொள்வார்கள், பள்ளிக்கூடத்தில் ஒழுங்காக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் அதைப்பற்றி கவனிக்கவேண்டும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவரவர்களே, பிள்ளைகள் முழு மார்க்குகளையும் போடவேண்டும் என்று ஸ்டிரைக் பண்ணுவார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அந்த மாதிரி ஸ்டிரைக் பண்ணுபவர்களுக்கு, அப்படி மார்க் கொடுக்கக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதே சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தினுடைய அடிப்படையிலேதான் இப்போது பள்ளிகளில் எல்லாம் 600 எண்கள் என் இருக்குமானால், அதோடு கூட 200எண்களாக— காண்டக்ட் கேரக்டர் என்பதற்கு 50 எண்கள்; ஹேண்ட்ரைட்டிங் மற்றவைகளுக்கு 50 எண்கள், நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு 50 எண்கள், கேம்ஸ் அண்டு ஸ்போர்ட்ஸ் 50 எண்கள்—ஆக 200 எண்களைக் கூட்டி அவர்களுடைய வகுப்புத் தேர்வை நடத்தவேண்டும் என்பதை 250 பள்ளிகளிலே புகுத்தியிருக்கிறோம். அதை மெல்லமெல்லப் புகுத்துவதுதான் இந்த அரசின் திட்டமாகும். இத் திட்டம் ஓரளவுக்கு உற்சாகத்தை அளிப்பதோடு வெற்றியும் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. விரைவுபடுத்துகின்ற நோக்கத்தை அரசு கொண்டிருக்கின்றது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்த அரசு ஏற்கெனவே இந்த முறையில் செயலில் இறங்கிவிட்டது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. பொதுவாக மாணவர்களிடையே முக்கியமாக ஒழுக்கத்தைப் பரப்ப வேண்டும். கல்வி கற்பிப்பதே அதற்காகத்தான். அதற்காகத்தான் கல்வி கற்கிறான் மனிதன். அறவைக் கொடுப்பது ஒழுக்கம். ஒழுக்கமற்ற கல்விக்கு இடம் கொடுக்கக்கூடாது. படிக்கும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் வந்துதான் ஒழுக்கத்தைப் பெற வேண்டும். அவர்கள் கெட்ட வழியில் ஈடுபடாமல் இருப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை நாம் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில், தொடக்கப் பள்ளிகளில் கண்டிப்பாக தமிழாசிரியர்கள் இருக்க வேண்டும் என்ற சர்க்காரின் கொள்கையை இந்த ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அமுல்படுத்த வேண்டும். இப்போது 6, 7, 8-வது வகுப்புகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மற்ற அரசுப் பள்ளிகளில் எல்லாம் கண்டிப்பாக தமிழாசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் அந்தக் கண்டிப்பு கிடையாது. தமிழாசிரியர்களே இல்லை என்று சொல்லலாம். தமிழாசிரியர்களை 6, 7, 8-வது வகுப்புகளுக்கு நியமிப்பது நல்லது. தமிழை தமிழ் அறிந்தவர்கள்தான் சொல்லிக் கொடுக்கவேண்டுமே ஒழிய எல்லோரும் சொல்லிக் கொடுப்பது சரியல்ல. ஆகவே அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே இரண்டு நிலைகள்— 200 பேர்கள்தான் இரண்டாம் நிலை ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். எல்லோரையும் ஒரு நிலை ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே கல்வி அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதாலும், இன்று நான் அதை மேலும் சொல்லாமல் விட்டுவிடுகிறேன்.

(முற்பகல் 11-30)

மற்றொன்று, செலக்ஷன் பரீட்சை நாங்கள் எல்லாம் படிக்கும் காலத்தில் இருந்தது. இப்போது அது இல்லை. அநேகமாக ஹைஸ்கூலிலே கிடையாது. திருச்சி சீதாலட்சுமி ராமசாமி பெண்கள் கல்லூரியிலும், ஹோலி கிராஸ் பெண்கள் கல்லூரியிலும், இன்னும் இரண்டொரு கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் செலக்ஷன் வைக்கிறார்கள் என்று எக்ஸ்.-எம். பி., எக்ஸ்.-எம். எல். ஏ. இன்னும் பலர் சேர்ந்து எனக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தினுடைய கொள்கை........

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது முழுதும் உண்மை, அதுமட்டுமல்ல. பி. யு. சி. இலவசப்படிப்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு டேர்முக்கும் பி. யு. சி. மாணவர்களிடம் 25 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இது உண்மை.

Thiru A. R. DAMODARAN : Sir, the rule regarding promotion, if it is pursuant to a Gover'nment Order, can apply only to Government colleges and it cannot apply legally to private colleges. It is my interpretation. Probably the Hon. the Minister for Education may clarify.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தத் தேர்வு நடத்துவது, மற்றும் எல்லாம் பல்கலைக் கழகத்தின் கீழே இருக்கிறது. தேர்வு நடத்துவதும் நடத்தாததும் கல்லூரி முதல்வர்கள், பள்ளித் தலைமையாசிரியர்களுடைய பொறுப்பு. நடத்த வேண்டாம் என்று நினைத்தாலும் நினைக்கலாம். நடத்த வேண்டும் என்று நினைத்தாலும் இப்பொழுது இருக்கிற பல்கலைக்கழக விதி அதற்குத் தடையாக இல்லை. இதைச் சீர்படுத்த வேண்டியது பல்கலைக் கழகம்தான்.

திரு. கே. ராஜாராம்: பல அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் எனக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ஒருவர் கம்யூனிஸ்டு கட்சி எக்ஸ் எம்.பி. அனந்தன் நம்பியார்.

மாண்புமிகு வேலவைத் தலைவர்: அந்தப் பெயர்களையெல்லாம் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: அதுதான். ஆகவே இன்னும் பல பிரமுகர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆகையால் நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்டிலே இருப்பதால் இந்த இரண்டொரு கல்லூரிகளில் மட்டும் என் இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக வருடா வருடம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களில் இவ்வளவு ஆசிரியர்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக்க முடியும் என்று, அதற்காக நிதியை ஒதுக்கி அந்த ஜில்லா வாரியாகப் பிரித்து, டி. பி. ஐ. ஒவ்வொரு ஜில்லா கல்வி அதிகாரிக்கும் எழுதி அனுப்பி விடுகிறார்கள் இதை வினியோகிப்பதிலே ஒரு கொள்கை வேண்டும். இப்போது இது இல்லை என்று நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். சில தனியார் பள்ளிகளுக்கு நாலைந்து வருஷங்களாக ஓர் ஆசிரியர் கூட அதிகமாகக் கொடுக்கவில்லை. சில தனியார் பள்ளிகளுக்கு வருஷா வருஷம் ஒன்று இரண்டு என்று அதிக ஆசிரியர்களைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். அதைப்பற்றிய புகார்க் கடிதம் அமைச்சர் அவர்களுக்கும், டி. பி. ஐ-க்கும் எழுதிய நகல் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். மதுரையில் தல்லாகுளத்தில் ஒரு பள்ளியில் அதிகமான மாணவர்கள் படிக்கிறார்கள். கடந்த 4, 5 வருஷங்களாக ஓர் ஆசிரியர் கூட தனக்குக் கொடுக்கவில்லை என்று குறைப்பட்டு எழுதியிருக்கிறார்கள். முதலமைச்சருக்கும், டி. பி. ஐ.-க்கும் எழுதிய நகலை நான் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து விடுகிறேன். அவர்கள் இதைப் பார்த்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடிக்கடி உத்தியோகஸ்தர்களிடம் போய் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கக் கூடாது. அரசாங்கத்துக்கு ஒரு கொள்கை வேண்டும். ஆயிரம் ஆசிரியர்கள் அதிகமாகக் கொடுக்கிறோம் என்றால், பஞ்சாயத்து யூனியனுக்குச் சில, தனியார் பள்ளிக்குச் சில, போன வருஷம்

கொடுத்தவர்களுக்கு இந்த வருஷமும் கொடுப்பது, 3, 4 வருஷமாக ஒருவருக்குமே கொடுக்காமல் இருப்பது, இப்படி எல்லாம் இருக்கக் கூடாது. ஆகையால் அரசினுடைய நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும், அதைச் செயல்படுத்துகிற கீழே உள்ள அதிகாரிகளும் நல்லபடியாக நிறைவேற்ற வேண்டும்.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவதில் சில விஷயங்கள் இருக்கின்றன. அவர்கள் கூறுவதைப்போன்று ஒரு முறை வகுப்பது நல்லதுதான். அரசினர் துறையிலும் தனியார் துறையிலும் மொத்தம் இவ்வளவு ஆசிரியர் என்று கணக்கிட்டு, இவ்வளவு இடங்கள் தேவைப்படுகின்றன என்று கணக்கிட்டு, அதற்காக ஒரு 'ரேஷியோ' வகுத்து நாம் கொடுக்கின்ற இடங்களுக்குத் தகுந்தாற்போல் அந்த இடங்களை ஒதுக்கி பிறகு அந்த அடிப்படைத் தன்மையைக் கொண்டு இருக்கிற பள்ளிகளுக்கு கொடுக்கலாம் என்று வகுத்துக்கொண்டு, ஒரு முறையைச் செய்வதிலே சங்கடம் இருக்காது. அப்படிப்பட்ட முறையை வகுப்பதற்கான முயற்சியை எடுப்பேன் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: ரொம்ப நல்லகாரியம். ஏனென்றால், நம்முடைய அதிகாரிகளுடைய திறமையை என்றுமே நான் குறைத்து மதித்தவன் அல்ல. அரசாங்கத்தினுடைய நோக்கம் என்ன என்று டி. பி. ஐ.-க்குச் சொல்லி விட்டால், அதற்குத் தகுந்தபடி அவர்கள் கணக்கிட்டு ஒதுக்கி விடுவார்கள். ஆகையால் அதற்குத் தகுந்தபடி செய்து, இந்தப் புகாருக்கு இடம் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறை மிகப்பெரிய துறை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் ஆந்திரா, கேரளா, கர்நாடகம் இந்த மூன்று பிரதேசங்களையும் சேர்ந்து கல்விக்காகச் செலவழிக்கும் தொகை மொத்தமே வருஷத்துக்கு 3 கோடி ரூபாய்தான். மொத்த வருமானம் 13 கோடி ரூபாய் தான். 1934, 1935-லே இருந்தது. அப்படி இருந்த ஒரு மாநிலத்தில் இப்பொழுது 148 கோடி ரூபாய் கல்விக்காக மட்டும் செலவழிக்கப் படுகிறது என்றால், அது நல்ல முறையில் பயன் தர வேண்டும் என்ற முறையில் உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எத்தனையோ துறைகள் அமைச்சர்களிடத்திலே மாறியிருக்கின்றன. ஆனால் இந்தக் கல்வித் துறை மட்டும் மாறாமல் அப்படியே இருப்பதைப் பார்த்து எனக்கு ஆறுதல். அந்த அனுபவத்தைக்கொண்டு அவர்கள் எவ்வளவோ செய்திருக்கிறார்கள். இன்னும் செய்யவேண்டும், செய்வார்கள் என்று நம்பி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை ஆற்றி வந்திருக்கிற பல்வேறு சீரிய பணிகளைக் குறிப்பிட்டு, இனி ஆற்ற வேண்டிய பணிகளுக்கு வழிவகைகளை எடுத்துச் சொல்லி கருத்துக்கள் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறை எவ்வளவு முக்கியமானது என்பதும், இதிலே எல்லோரும் எவ்வளவு நாட்டம் கொண்டு, தொடர்பு கொண்டு கருத்துக்களை வழங்குவதில் எவ்வளவு ஆர்வம் காட்டினார்கள் என்பதையும் சென்ற மூன்று நாட்களாக இந்த விவாதம் நடைபெற்றதிலிருந்து யூகித்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், "சட்டமன்ற மேலவை என்று பெயர் வைப்பதை விட கல்வித் துறை மேலவை என்று வைத்துவிடுவார்களானால் மிக மிகப் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் பெரும்பகுதி நாம் கல்வித் துறை கருத்துக்களைப் பரிமாறுவதற்காகத்தான் இது பயன்படுகிறது" என்று. அதற்குக் காரணமும் இருக்கிறது. அந்த அளவுக்கு உறுப்பினர்கள் எல்லாம் ஆர்வம் காட்டி, இந்தத் துறை எந்தெந்த வகையிலே சிறப்புறத் திகழ வேண்டும் என்பதற்கான கருத்துக்களை எல்லாம் சிறப்பாக வழங்கியிருக்கிறார்கள். இதிலே. எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியிலே பலரும் ஆதரவு காட்டி மேலும் வளர வேண்டும் என்பதற்கான சீரிய கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் கவனத்திலே கொள்ளப்படும் என்பதையும் நான் முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வித் துறை மேலும் மேலும் வளர வேண்டிய அளவுக்கு இருக்கிறது. அதற்கென செலவழிக்கப்பட்ட தொகை பெரிது என்றாலும்கூட, இங்கே உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் வைத்துப்பார்க்கின்றபோது, இது போதுமா என்று கேட்டால், போதாதுதான். இவ்வளவுதான் முடியுமா என்று கேட்டால், அவ்வளவுதான் முடியும். ஆனால், பிற நாடுகளுடைய வரவு-செலவுத் திட்டத்திற்கும் நம்முடைய நாட்டினுடைய வரவு-செலவுத் திட்டத்திற்கும் என்ன வேறுபாடு என்று கேட்டால், அங்கு தேவைகளை ஒட்டி நிதிகளை ஒதுக்குகிற நிலையை பல்வேறு வளர்ந்த நாடுகள் பெற்றிருக்கின்றன. இங்கே, நிதியை ஒதுக்கி தேவைகளை எவ்வளவு பூர்த்தி செய்யலாம் என்ற அளவிலே நாம் இருக்கிறோமே தவிர, நம்முடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவுக்கு திட்டங்களை வகுப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்படவில்லை. ஆகையால்தான் உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன பல்வேறு கருத்துக்களை எல்லாம் ஏற்றுக் கொள்வது என்றால், இன்னும் எவ்வளவு நிதி வேண்டும் என்பதையெல்லாம் நாம் மனதிலே உள்ளடக்கிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் இந்தத் துறையைப் பொறுத்த வரையிலே, என்னென்ன வேண்டும் என்பதற்கான காரண காரியத்தை உறுப்பினர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்ன வேண்டும் என்று விரும்புவதையும், என்ன இயலும் என்று ஆராய்வதற்கும் இடையில் ஒரு பெரிய தன்மை இருக்கிறது. அந்த இடத்திலே நகருவதற்குத்தான் எல்லோருடைய ஒத்துழைப்பும் ஆதரவும் மிகமிகத் தேவைப்படுகிறது.

(முற்பகல் 11-40)

அந்த வகையிலே இதனுடைய நிதி ஆதாய நிலையை மேலும் மேலும் வளர்க்கின்ற நிலையை கையாளும்பொழுது மெல்ல நாம

வளர்ச்சியடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். கூடுமானவரை கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டுமென்பதற்காகத்தான் 530 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிற நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட கால் பாகத்தை, அதாவது 118 கோடி ரூபாயை பொதுக் கல்விக்காகவும் தொழில் நுட்பக் கல்விக்காகவும் ஒதுக்கியிருக்கின்றோம். அதோடு தமிழகத்தினுடைய கல்வித்துறை அடங்கவில்லை. பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். கட்டடங்கள், கடன் முதலியவற்றிற்கு, வேறு பல வழிகளிலே நாம் ஒதுக்கியிருப்பது 5 கோடியே 52 இலட்சம் ரூபாய். தொழில் கல்வித் திட்டச் செலவு, கடன் முதலியவற்றுக்காக எல்லாம் 5 கோடியே 79 இலட்சம் ரூபாய் வேறு கணக்கிலே வருகிறது. அதைத் தவிர அரிசனங்கள், பின் தங்கிய வகுப்பினர், பழங்குடி மக்கள், விடுதிகள் கட்டுதல், நல பள்ளிகள், உதவித்தொகை, கடன்கள் ஆகிய அத்தனைக்கும் சேர்த்து 17 கோடி ரூபாயைத் தனியாக ஒதுக்கியிருக்கிறோம். மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றுக்காக ஒரு 7 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். எல்லாவற்றையும் சேர்த்து கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு என்று பார்ப்போமானால், 153 கோடியே 62 இலட்சம் ரூபாய் வருகிறது. இது தவிர உள்ளாட்சித் துறை மட்டும் செலவு செய்கின்ற கணக்கு ஒரு 7 கோடி ரூபாய் வருகிறது. இதைத் தவிர தனியார் துறை அறக்கட்டளைகள் எல்லாம் வைத்து கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகள் என்று வைத்து அத்தனை பேரும் செய்கின்ற செலவை, சராசரி அவர்களுடைய வருமானத்தை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால், மாநிலம் பூராவும் ஒரு 5 கோடி ரூபாய் வருகிறது. அத்தனையையும் விட்டுவிட்டு மாணவன் கல்லூரியில் படிக்கிற காலத்தில் மாணவனின் கல்வியின் நிமித்தம் பெற்றவர்கள் சராசரி செலவு செய்வதை ஆண்டு ஒன்றுக்கு மிகக் குறைந்த அளவு என்று வைத்து 50 ரூபாய் வீதம் கணக்கிட்டுப் பார்த்தாலும், அது ஒரு 40 கோடி ரூபாய் வருகிறது. ஆக மொத்தத்தில் எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டால் 205 கோடியே 60 லட்சம் ரூபாயிலே 1975-76ஆம் ஆண்டு கல்வித் துறை, தமிழகத்தைப் பொறுத்தவரை, நகர இருக்கிறது. அதிலே பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றைப் பொறுத்தவரையிலே எந்த அளவுக்கு செலவழிக்கிறோம் என்று சொன்னால், சாதாரணமாக 103 கோடி ரூபாய் பள்ளிக் கல்விக்காக அதாவது உயர்நிலைப் பள்ளி, துவக்கப் பள்ளி ஆகியவற்றுக்குச் செலவழிக்கிறோம் என்றாலும் கூட, இதில் ஆசிரியர்களுக்குச் சம்பளம், படி முதலியவற்றிற்கு மட்டும் 85 கோடி ரூபாய் போய் விடுகிறது. அதிலே 2 கோடியே 45 லட்சம் ரூபாய் நிர்வாகச் செலவுக்காகப் போய் விடுகிறது. ஆகவே கிட்டத்தட்ட 88 கோடி ரூபாய் அளவுக்கு இந்தச் செலவுகள் எல்லாம்போக மீதியை வைத்துக்கொண்டுதான் மற்றவைகளுக்கெல்லாம் நாம் செலவழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கல்லூரிக் கல்விக்கு நாம் கிட்டத்தட்ட 10 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவழித்தாலும் அதிலே சம்பளம் 7 கோடியே 72 இலட்சம் ரூபாயும், நிர்வாகச் செலவு 14 இலட்சம் ரூபாயும் போக மீதியை வைத்துக் கொண்டு

தான் நாம் வளர்ச்சியை காட்ட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். தொழில் நுட்பக் கல்விக்கான செலவு கிட்டத்தட்ட 4 கோடியே 23 இலட்சம் ரூபாய் என்றாலும், அதிலே சம்பளம் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய், நிர்வாகச் செலவு 23 இலட்சம் ரூபாய்—இதை நீக்கிவிட்டுத்தான் மற்றவைகளுக்குச் செலவழிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். என்னைக் கேட்டால் "சட்டியிலே என்ன இருக்கிறதோ அதுதான் அகப்பையிலே வரும்" என்பது போல இங்கே நாம் இருப்பதைப் பகிர்ந்து தர வேண்டிய தன்மையில் இருக்கிறோம், இருப்பவர்களுக்கு எல்லாம் தர முடியாது. ஆகவே கோயிலில் கொடுக்கப்படுகின்ற பொங்கல் உருண்டைமாதிரி இருக்கிற பக்தர்களுடைய எண்ணிக்கைக்குத் தக்க மாதிரி பங்கிட்டுத் தர வேண்டியிருக்கிறது. இருக்கிற உருண்டை ஒன்றுதான். ஆனால் பக்த கோடிகள் 4 பேர் என்றால், நான்காகத் தரலாம். பக்தகோடிகள் 16 ஆக இருந்தால் அந்த ஒரு உருண்டையையும் அந்த 16 பக்தகோடிகளுக்கும் பிரித்துத் தரலாம். ஆனால் பக்தகோடிகள் 32 பேராக இருந்தால், அந்த ஒரு உருண்டையையும் கையில் பட்ட மாதிரி படாதது மாதிரிதான் தர வேண்டி வரும். அப்படிப்பட்ட சங்கடங்கள் எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுப் பேசிய மாதிரி ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் முடிந்த அளவுக்கு கல்வித் துறைக்கு என்று அதிகமாகச் செலவழிக்க வேண்டும். இதற்குக் காரணமே இதற்குச் செலவாகிறது என்பது கூட அல்ல. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்ட மாதிரி, "இன்வெஸ்ட்மென்ட் இன் எஜுகேஷன்" என்று சொல்லத் தக்க அளவுக்கு கல்வியிலே முதலீடு செய்வதன் மூலமாக நமக்குப் பணமாக நிச்சயமாக முதல் கிடைக்காவிட்டாலும் கூட, அதன் மூலம் பெறுகிற அறிவும் ஆற்றலும் இந்த நாட்டுக்குப் பயன்பட்டு நாட்டினுடைய பொது நிலைமை வளர, பொருளாதார நிலையை வளர்வதற்குப் பயன்படும் என்ற முறையிலேதான் இந்த வரவு—செலவுத் திட்டத்திலே எவ்வளவு தூரம் கல்விக்காக அதிக அளவுக்குப் பணம் ஒதுக்க முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறோம். இது போதுமா என்று கேட்டால், போதாது. ஆனால் கல்வியினுடைய தன்மைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துப் பேசிய உறுப்பினர்களில் பரவலாக கல்வியினுடைய தரத்தைப் பற்றிப் பேசினார்கள். கல்வியினுடைய தரம் குறைந்து விட்டது என்று எடுத்துச் சொல்லுகிற அளவுக்கு பரவலாகக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்கிறேன், தரம் குறைந்திருக்கிறது என்கின்ற நிலை இங்கில்லை. சில இடங்களில் தரம் வளரவில்லையென்று வேண்டுமானால் சொல்லுங்கள். ஆனால் ஏற்கெனவே ஒரு தரம் இருந்தது. அது இமே போய்விட்டது" என்று சொல்வதற்கில்லை. எந்த வகையிலே பார்த்தாலும் கூட, குறிப்பிட்ட வகுப்புகளிலே தரம் கணக்கிட்டுப் பார்க்கலாமே தவிர, பொதுவாக கல்வியினுடைய தரம் குறைந்து விட்டது என்று சொல்வதற்கில்லை. 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பாடப் புத்தகங்களுடைய பாடத் திட்டத்தையும் இப்பொழுது இருக்கிற பாடப் புத்தகங்களுடைய பாடத் திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், எந்த வகையிலேயும் 20 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த சிலபஸைச் விட இப்பொழுதுள்ள சிலபஸ் உயர்ந்த

தாகவே இருக்கும். அதைவிட இது தாழ்ந்து விட்டதா என்று சொன்னால், அதுதான் இல்லை. இப்பொழுது ஓரளவுக்கு மாற்றம் செய்துகொண்டே வருகிறோம். ஆனால் அந்த வகையிலும் கூட தரம் தாழ்ந்து விட்டதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை. இப்பொழுது பொறியியல் துறையை எடுத்துக் கொண்டால், அதில் கூட தரம் தாழ்ந்திருக்கிறதா என்று பார்த்தால், இப்பொழுது பொறியியல் துறையிலே படித்து வருபவர்களுடைய தரம் எந்த வகையிலும் தாழ்ந்துவிடவில்லை. பொறியியல் படித்து வருகிறவர்களுடைய தரம் அகில இந்திய அடிப்படையிலே தாழ்ந்து விட்டதா என்று கேட்டாலும், அப்படியும் தரம் தாழ்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. தொழில் நுட்பத் துறையிலே தரம் தாழ்ந்து விட்டதா என்று கேட்டால், அதிலும் சொல்ல முடியாது. ஐ. டி. ஐ. படிக்கிறவர்கள் அதிலே பயிற்சி பெறுகின்ற முறைகளிலே தரம் குறைந்து விட்டதா என்று சொன்னால் எந்த வகையிலும் குறைவதற்கில்லை. அண்மையிலே கூட நடைபெற்ற அகில இந்திய தொழிற்சங்க தொழில் பயிற்சிக் கழகங்கள் மற்றும் நிலையங்களுக்கான 11-வது அகில இந்திய திறமைப் போட்டியில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்போட்டி நவம்பர் மாதம் நடந்தது. தமிழ்நாட்டு பயிற்சி நிலைய மாணவர்கள் போட்டியில் மிக அதிகமான மதிப்பெண்களைப் பெற்று அதன் காரணமாக தமிழ் நாட்டிலிருந்து ஐ. டி. ஐ. சார்பில் சென்ற மாணவர்கள் தான் ராஷ்டிரபதியினுடைய கேடயத்தை வாங்கிவந்தார்கள். ஆக அதிலும் தரம் தாழவில்லை.

(கைதட்டல்)

கணக்கியலிலும் தரம் தாழவில்லை. எம். எஸ்ஸி. யிலும் தரம் தாழவில்லை. அறிவியல் பாடங்களிலும் தரம் தாழவில்லை. பின் எதில் தான் தரம் தாழ்ந்து விட்டது? தமிழிலே தரம் தாழ்ந்து விட்டதா என்று பார்த்தால், 20, 25, ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழ் அறிவை விட, தமிழ் உணர்ச்சியை விட, தமிழிலே எடுத்துத் தெரிவிக்கின்ற ஆற்றலை விட இப்பொழுது எல்லா வகையிலும் தமிழின் ஆற்றல் வளர்ந்து தான் இருக்கிறது. ஆனால் எதிலே குறைந்திருக்கிறது என்று சொன்னால், அப்பொழுதிருந்த அளவுக்கு ஆங்கிலம் சரளமாகப் பேச வரவில்லையே என்ற நிலைமை மட்டும் வேண்டுமானால், அதுவும் சில பல இடங்களில் மட்டுமே, இருக்கலாம். அதுகூட எந்த அடிப்படையிலே வருகிறது? இப்பொழுது நாம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்கெல்லாம் அதிகமான நேரம் இல்லாவிட்டாலும் கூட அடிப்படையிலிருந்தே நாம் புதிய பாடத் திட்டங்களை துவக்கப் பள்ளியில், உயர் துவக்கப் பள்ளியில், உயர் நிலைப் பள்ளியில், கல்லூரியில் தொழில் நுட்பக் கல்லூரியில், பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிப்பதற்கான ஏற்பாடுகளை நாம் அன்றாடம் செய்து கொண்டே வருகிறோம். ஆனால் அத்தகைய ஏற்பாடுகளை எல்லாம் நாம் செய்து, அதற்கேற்ற படி மாணவர்களை உருவாக்குகின்ற முயற்சியிலும் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் ஆங்கிலத்தில் இதுமாதிரியான நிலைமை எந்த வகையிலே எங்கே வருகிறது என்று பார்ப்போமானால் கட்டுப்பாடோ, கடுமையான உழைப்போடு கடமையாற்றுகிற இயல்போ இல்லாத மாணவர்களிடம்

தான் இத்தகைய நிலையை நாம் காண முடியும். யார் கட்டுப்பாடு இல்லாமல், கடுமையான உழைப்பு இல்லாமல், ஆர்வம் காட்டாமல், படிக்காமல், அலட்சியமாக இருக்கிறார்களோ அவர்களுடைய தரம் மட்டும் தான் தாழ்ந்திருக்கிறதேயொழிய இப்பொழுதிருக்கும் இந்த சிலபசை வைத்துக்கொண்டு பள்ளியாகட்டும், கல்லூரியாகட்டும், பல்கலைக் கழகங்களாகட்டும், இல்லை தொழில்நுட்பக் கல்வியாகட்டும், எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு ஆர்வத்தோடு, கடமை உணர்வோடு, கடுமையான உழைப்போடு தன்னுடைய கடமையை ஆற்ற வேண்டுமென்று இருக்கிற எந்த ஒரு மாணவனும் உலகத்திலே இருக்கிற எந்த ஒரு மாணவனோடும் போட்டியிடக்கூடிய அளவுக்கு தரம் தாழ்ந்து விடவில்லை என்பதையும் இத்தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மருத்துவக் கல்லூரி மாணவர்களை எடுத்துக் கொண்டால்கூட, அவர்களையும் தரம் தாழ்ந்தவர்கள் என்று எந்த வகையிலும் சொல்ல முடியாது, அக்கறையோடு ஆர்வத்தோடு கட்டுப்பாடோடு படித்தவர்கள் தரம் தாழாமல் இருக்கிறார்கள். புத்தகமும் வாங்காமல், படிக்காமல், 75 சதவிகிதம் நாட்கள் கூட கல்லூரிகளுக்குப் போகாமல, அப்படிப் போவதாக இருப்பவர்களிலும் பாதிக்கு மேல் மற்றவர்கள் கொடுத்த அட்டெண்டன்சில் இருந்து தங்களுடைய நேரத்தைச் செலவழித்தவர்கள் இப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டு தரம் தாழ்ந்துவிட்டது என்று சொன்னால், நான் அத்தகைய கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. அத்தகைய குறைபாடுகள் இருக்கின்றனவா என்று கேட்டால், பரவலாக இருக்கின்றது. வசதியும் வாய்ப்பும் உடைய ஒருசிலர் மட்டுமே படிக்க வேண்டிய சூழ்நிலை இருந்த காலத்தில், அதிலே படிப்பவர்களுடைய விழுக்காடு அதிகமாகத்தான் இருக்கும். இதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் நாம் பரவலாகக் கல்வியைத் தர வேண்டும், எல்லோருக்கும் கல்வி அறிவைத் தர வேண்டும், பரம்பரை பரம்பரையாக கல்வியறிவு வாசனையே இல்லாதவர்களுடைய குடும்பத்திற்கும் கல்வி நலத்தை எந்த வகையிலும் தர வேண்டும் என்ற இலட்சியத்தில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறோம். இந்தத் தலைமுறையில் இருக்கிறவர்கள் குறைவாகக் கல்வியைப் பெற்றால், அடுத்த தலைமுறையில் இருக்கிறவர்கள் முழுமையான கல்வியைப் பெறுவார்கள் என்ற அளவில் கல்வியை நாம் பரவலாக ஆக்கும்போது, எண்ணிக்கையினுடைய விழுக்காட்டை நாம் பார்க்கின்றபோது, ஓரளவுக்குக் குறைந்திருக்கலாம்; அந்த விழுக்காடும் இப்பொழுது ஏறி ஏறி வருகிறது. இப்பொழுது கூட சென்னை மாநகரை மட்டும் நாம் தனியே எடுத்து வைத்துக்கொண்டு தரத்தைப் பார்ப்போமானால், தரம் சற்று அதிகமாகத் தான் இருக்கும். டெல்லியை மட்டும் வைத்துக்கொண்டு சிலர் தரத்தைக் கணக்கிடுகிறார்கள். அதுபோல சென்னை மாநகரை மட்டும் வைத்துக்கொண்டு, அடையாறை மட்டும் வைத்துக்கொண்டு, மாம்பலத்தை மட்டும் வைத்துக்கொண்டு, தியாகராயநகரை மட்டும் வைத்துக்கொண்டு கணக்கிட்டு நமது கல்வியினுடைய தரம் உயர்ந்திருக்கிறதா இல்லையா என்று என்னைக் கேட்டால், நமது டெல்லியை விட உயர்ந்திருக்கிறது என்று கூட நாம் வாதாட முடியும். நாம் தரத்தை ஐயங்கார் பேட்டையையும், இங்கே இருக்கின்ற மறவர் காட்டையும் வைத்துக்கொண்டு மற்றும் இங்கு இருக்கிற சிறு சிறு ஊர்களையும் இணைத்துக் கொண்டு

அவர்களோடு சேர்த்துக் கணக்கிடுவது என்று சொல்கிறபோது, அகில இந்திய அளவிலே வருகின்ற விகிதாசாரங்களை விடக் குறைவாக இருக்கின்றது. ஆனால் இதிலே பல மாற்றங்கள் செய்ய வேண்டுமென்கிற அளவுக்கு முன் வருகிறார்கள். ஆனால் அந்தத் தன்மைகளில் இப்பொழுது இருக்கிற கல்வி நம்முடைய கல்வியினுடைய தரத்தைத் தாழ்த்தி விட்டது என்று சொல்ல முடியாது. எந்த வகையிலேயும் நல்லமுறையில் பயிற்சி தருகிற அக்கறையோடு இருக்கிறார்கள். அந்த வகையிலே நாம் பார்த்தாலும், பயிற்சி கொடுக்கிற தன்மையில் தரம் தாழ்ந்துவிட்டது என்றும் சொல்வதற்கில்லை. இப்பொழுது என்.சி.சி, பயிற்சியை எடுத்துக்கொண்டால் கூட, அகில இந்தியாவில் நம்முடைய தமிழகத்தினுடைய பயிற்சி மிகச் சிறப்பாக இருந்து வருகிறது. நாம் இடையிலே இரண்டு ஆண்டுகள் என்.சி.சி. பயிற்சியை இந்தி சொற்களை அங்கே பயிற்சி மொழியாக அவர்கள் வைக்க வேண்டுமென்று சொன்ன காரணத்தால், அதை எதிர்த்து ஆங்கிலம்தான் இருக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்திய காரணத்தால், நிறுத்தி வைத்திருந்தோம். அதற்குப் பிறகு ஆங்கிலத்தில் ஆணை மொழிகள் இருக்கலாம் என்று மத்திய அரசினர் அனுமதித்த காரணத்தால், அதற்குப் பிறகு நாம் என்.சி.சி.யை மறுபடியும் தொடங்கினோம். துவங்கிய ஆண்டிலிருந்து தொடர்ந்து 4 ஆண்டுகளாக குடியரசு தின விழாவையொட்டி நடைபெறுகின்ற அகில இந்தியப் போட்டியில் தமிழகத்தினுடைய என்.சி.சி. மாணவர்கள்தான் அகில இந்திய பானர்களையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் சக்ஸஸிவாகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக இத்தகைய அகில இந்திய பானர் நமக்குத்தான் வந்திருக்கிறது என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அந்த வகையிலும் நாம் தரம் தாழவில்லை.

(முற்பகல் 11-50)

அது மட்டுமல்லாமல், சாரணர் இயக்கத்தைப் பொறுத்தவரையில், எந்த மாநிலத்தையும் விட நம்முடைய மாநிலம் சிறப்பாக வளர்ந்திருக்கிறது. அதில் 45 ஆயிரம் என்று இருந்தது, 75, 80 ஆயிரம் பேர் இன்று இருக்கிறார்கள். அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, தமிழ் நாட்டு சாரணர், சாரணியர் இயக்கம் மிகச் சிறப்பாக வளர்ந்திருக்கிறது, சிறப்பான முறையில் விளங்கியிருக்கிறது. அதன் காரணமாக, அகில இந்திய ரீதியில், நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த அகில இந்திய 'ஜாம்பொரி' யில் தமிழ் நாட்டின் கல்வி அமைச்சர் என்ற முறையில், சாரணத் தலைவர் என்ற முறையில், மிகப் பெரிய 'சில்வர் எலிஃபெண்ட்' என்ற அவார்டை வேறு எந்த மாநிலத்திற்கும் தராமல், இந்த மாநிலத்திற்குத் தந்தார்கள் என்பது நம்முடைய தரம் தாழவில்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்ற ஒன்றாகும். இப்போது வெளி நாட்டுக்கு — சிங்கப்பூருக்கு — போய் பரீட்சை எழுதிவிட்டு வந்தவர்களிலே கூட, நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் சிறந்த இடத்தைத்தான் பெற்றிருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்து, பல் வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து, தொழில் நுட்ப பல்கலைக்கழகங்களிலிருந்து வருகிறவர்களுக்கு ஆங்கிலம் கற்றுக்கொள்வதில், பல்

வேறு நாடுகளில்—தூரக்கிழக்கு ஆசிய நாடுகள், மத்தியகிழக்கு ஆசிய நாடுகள் இவைகளிலிருந்து வருகிறவர்களுக்குச் சங்கடம் இருக்கிறது. இந்தியாவிலிருந்து வருகிறவர்களைப் பொறுத்தவரையில், ஆங்கிலத்தில் இங்கேயிருந்து போகிறவர்களிடத்திலே அதிக அளவு ஐயப்பாடு கொள்ளாத அளவில் இருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால், பரவலாகப் பார்க்கின்றபோது நம்முடைய மாணவர்கள் எந்த விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்பது தெரிகிறது. அதிக அக்கறை காட்டுவது எப்படி, அவர்களை முழுவதுமாக ஈடுபடுத்துவது எப்படி என்று பார்க்கும் போது, அத்தனை பேருக்கும் இதிலே அக்கறை வரவேண்டும். வேறு துறையாக இருந்தால், ஒரு இடத்தை மட்டும் பழுதுபார்த்தால் போதும், ஒருவரை மாற்றி விட்டால் போதும், சட்டங்களை மாற்றியமைத்து விட்டால், சிலபல குறைகளைச் செம்மைப்படுத்த முடியும்; 2, 3 பேரை மாற்றி அந்தக் காரியத்தைச் செய்துவிட முடியும். இந்தத் துறை அப்படிப்பட்டதல்ல. 2 லட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றனர். 80 லட்சத்துக்கு அதிகமான மாணவர்கள் இருக்கிறார்கள் 4½ கோடி மக்கள் தொகையிருக்கிறது. அத்தனை பேருடைய உழைப்பின் அடிப்படையில், முயற்சியின் அடிப்படையில் தான் இந்தத்திட்டம் வெற்றி பெற முடியும். இந்தக் காலத்து மாணவர்கள் சரியாக இல்லை. அந்தக் காலத்து மாணவர்கள் நன்றாக இருந்தார்கள் என்பதல்ல. எல்லாம் ஒன்றாகத்தான் இருக்கிறது. அது சமுதாய அமைப்பைப் பொறுத்தது. 2,500 ஆண்டுகளுக்கு முன்பு, சாக்ரடீஸ், அவர் காலத்து இளைஞர்கள் மாணவர்கள்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். கிரேக்க நாட்டிலே வாழ்ந்த இளைஞர்கள்பற்றி சாக்ரடீஸ் இவ்வாறு சொல்லுகிறார்: "நம்முடைய இளைஞர்கள் சமுதாயத்தில் ஆடம்பரம் நீடிக்கிறது. கட்டுப்பாடுகள் மீறப்படுகின்றன, பெரியவர்களை மதிப்பதில்லை, இந்தக் குழந்தைகள் எதேச்சாதிகாரிகளாக விரும்புகின்றனர், பெற்றோர்களை எதிர்த்துப் பேசுகின்றனர், இவைகள் சாக்ரடீஸின் குற்றச் சாட்டு. 2,500 ஆண்டுகளுக்கு முன்பே," சாக்ரடீஸ் இளைஞர்கள் பெற்றோர்களை மதிப்பதில்லை, அவர்களை மீறி நடக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய தந்தைமார்கள் நம்மைச் சொன்னால், நாம் நம்முடைய பிள்ளைகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலை, சமுதாய அமைப்பு, அரசியல் அமைப்பு, வேறு பல சூழ்நிலைகள் காரணமாக மாறுதலை அடையலாமே தவிர இத்தகைய குற்றச்சாட்டு எப்போதும்தான் இருக்கிறது. 16, 18 வயதில், காதலை அன்பு என்கிறான். அவனே தாத்தா ஆகும்போது, பேரன் அதே காதலை அன்பு என்று சொன்னால், வெறி பிடித்து அலைகிறான் என்கிறான். அதே தாத்தாவுக்கு, இளைஞனாக இருந்த காலத்தில் காதல் என்பது அன்பாகத் தோன்றியது. 50 வயது ஆகிய பிறகு, காதல் என்பதற்கு, அன்பு என்ற பெயரிடாமல், வெறி பிடித்து அலைகிறான் என்று சொல்லுகிற அளவுக்கு வருகிறது. அந்த அடிப்படையில்தான் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. என்றாலும் கூட நாம் ஓரளவுக்குக் கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறோம். பள்ளி ஆசிரியர்கள் ஓரளவு கட்டுப்படுத்துகிறார்கள். மாணவர்கள் பள்ளிக்கூடத்தில், 4½ மணி நேரம், 5 மணி நேரம் இருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு ஆசிரியர்கள், ஒழுக்க நூல்களைப்பற்றி, அறநெறிகளைப்பற்றி கூடியவரை சொல்லுகிறார்கள். 4½ மணி நேரம் அவர்கள் பள்ளியில் கற்றுக்கொடுத்

ததை, வீட்டுக்குச் சென்று 12 மணி நேரத்தில் கெடுத்துக்கொண்டு மறுநாள் 'ஜீரோ' பாயிண்டோடு திரும்பவும் வருகிறார்கள். வீட்டிலே கெடுக்காவிட்டாலும், தெரு கெடுக்கிறது, தெரு முச்சந்தி கெடுக்கிறது, சூழ்நிலை கெடுத்து விடுகிறது. எவரும் தனிப்பட்ட முறையில் அதைக் கட்டுப்படுத்த முடியாது. இந்தச் சமுதாயமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஒரு ஆசிரியர் மட்டுமோ, ஒரு அதிகாரி மட்டுமோ ஒரு ஆணை போட்டோ இதனை நிவர்த்திக்க முடியாது. பொறுப்பேற்கிற நிலைமை வரும் வரை இந்த நிலை வளரும் என்பதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். இந்தத் தன்மை மாற வேண்டும். எல்லோருக்கும் உணர்வு இருக்கிறது. அதை 80 சதவிகிதம் பயன்படுத்த வேண்டும். எந்த அளவிற்குத் தேவைப்படுகிறதோ அந்த அளவுக்கு ஒத்துழைக்க வேண்டும். பல்வேறு நாடுகளில் பல்வேறு மாற்றங்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் 7 வது வகுப்புவரை ஒரு புதிய பாடத்திட்டத்தை வைத்திருக்கிறோம். அறிவியல் அடிப்படையில் சொல்லிக்கொடுக்கச் சொல்லுகிறோம். கணிதத்தை புதிய முறையில் சொல்லிக்கொடுக்கச் சொல்லுகிறோம். அதற்காக ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட பயிற்சி தருகிறோம். பட்டதாரி ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் பணியிடை பயிற்சி கொடுக்கிறோம். சென்ற ஆண்டிற்கு 53 லட்சம் ரூபாய் ஒதுக்கி பணியிடை பயிற்சிக்கு ஏற்பாடு செய்தோம். 11 லட்சம் ரூபாய் செலவழித்து இந்தப் பயிற்சியை மேலும் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். புதிய கணித வகை, அறிவியல் எல்லாம் சொல்லிக்கொடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். 7 ஆம் வகுப்பு வரை ஓரளவுக்கு பாடத்திட்டங்களை மாற்றியிருக்கிறோம். 8, 9 வகுப்புக்களில் சில பல திட்டங்களை, மாற்றங்களைக் கொண்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. சில அறிவியல் புள்ளி விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்ல நான் இங்கே விரும்பவில்லை.

அறிவியல் ஆய்வுக்கூடங்கள் ஒவ்வொரு பள்ளியிலும் இருப்பது நல்லது. எல்லாப் பள்ளிகளிலும் அதைக் கொண்டுவர முடியாவிட்டாலும், 15 உயர்நிலைப் பள்ளிக்கு ஒன்று என்ற அளவிலாவது, ஒரு 'இயங்கு அறிவியல் ஆய்வுக்கூடத்தை' வைத்து மாதத்திற்கு 2 தடவையாவது ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று காலையில் ஒரு பள்ளியிலும் அங்கிருந்து மாலையில் ஒரு பள்ளியிலும் அதிலே ஒரு சயன்ஸ் அசிஸ்டெண்ட் சென்று மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரே பள்ளியில் இருக்கவேண்டாம் என்ற அடிப்படையில், 17 இயங்கு ஆய்வுக்கூடங்களை வைத்து, 17 கல்வி மாவட்டங்களுக்கும் ஒன்று என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருகின்ற ஆண்டில் மேலும் 8 இயங்கும் ஆய்வுக்கூடங்களைக் கொண்டு வர முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். 48 கல்வி மாவட்டங்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு இயங்கு ஆய்வுக்கூடம் இருக்குமாறு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். துவக்கப் பள்ளியில் அறிவியல் கல்வி கொடுக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது. தொழிற் கல்வி வளர வேண்டுமென்றால், அதற்கான ஆர்வமும் அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வும் ஏற்பட வேண்டும். நாம் டெக்னிகல் ஸ்கூல் வைத்திருக்கிறோம். 6 வது வகுப்பிலேயிருந்து

சொல்லியும் கொடுக்கிறோம். குறைந்த அளவுக்குத்தான் மாணவர்கள் இருக்கிறார்கள். 'பைபர்கேட் கோர்ஸ்' என்று 296 பள்ளிக்கூடங்களில் வைத்து அதை விருப்பப் பாடமாக வைத்திருக்கிறோம். அப்படி வைத்தும் கூட, அதில் ஒரு வகுப்பில், 3, 4, 6, 8 மாணவர்கள் என்ற அளவில் தான் சேருகிறார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் சொன்னது போல், 'காம்ப்ரகென்சிவ் ஸ்கூல்' என்ற அளவில், 11 உயர்நிலைப் பள்ளிகளில் ரேடியோ இன்சினியரிங், எலக்டிரிக் மோட்டார் வைண்டிங் போன்ற பாடங்களும், 11 உயர்நிலைப் பள்ளிகளில் மோட்டார் கார் மெக்கானிக் கோர்ஸும், 3 உயர்நிலைப் பள்ளிகளில் விவசாயப் பொறியியல் பயிற்சியும் புகுத்தி இருக்கிறோம். மேலும் இவற்றை விரிவு படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இதற்கு மட்டும் 13, 14 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. 8 வது வரை படித்த மாணவர்களுக்கு தொழிற் கல்வி பெறுவதற்காக ஐ.டி.ஐ. வைத்திருக்கிறோம். படித்த இன்சினியர்களுக்கு வேலை கிடைப்பதை விட, பாலிடெக்னிக்கில், ஐ.டி.ஐ.யில் படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு இருக்கிறது. 10-வதோடு நிறுத்திவிட்டால், அவர்கள் தொழிற் கல்வி கற்றுக்கொள்ள வசதியாக 38 பாலிடெக்னிக்குகள் வைத்திருக்கிறோம். இதில் படிக்கின்ற ஒரு மாணவனுக்குச் சராசரியாக அரசு ரூபாய் 3400 வரை செலவு செய்கிறது. அதே சமயத்தில் கல்லூரியில் படிக்கின்ற மாணவனுக்கு 600 ரூபாய் அளவில் தான் செலவாகிறது. இருந்தும், பாலிடெக்னிக்கில் சேர்ந்து படிக்க மாணவர்கள் முன்வராத நிலைதான் இருக்கிறது. இதில் படித்த மாணவர், பி.இ. வரை மேலே படிக்கலாம் என்று வைத்திருக்கிறோம். அப்படியிருந்தும், 90 மார்க்குகள் வாங்கினால் போதும் என்று சொன்னாலும் படிக்க முன்வருவதில்லை.

(நண்பகல் 12-00)

முடிவெடுத்த பிறகு, அதற்குப் பிறகு நாம் சந்தேகப்படாமல் உறுதியாக திட்டவட்டமாக அதைச் செயல்படுத்துவதற்காக, இப்போதே பத்தாண்டு காலப் பாடத் திட்டத்திற்கான நடை முறைகளை உருவாக்கி வருகிறோம். ஆனால் இடையில் காலத்தாழ்வு ஏற்பட்டால் என்ன செய்வது என்பதற்காக, பதினொரு ஆண்டுகாலப் படிப்பு என்றால், என்ன செய்வது என்று திகைக்காமல் இருப்பதற்காக, இதை இடைக்கால ஏற்பாடாகத்தான் எண்ணுகிறோமே தவிர, அந்த முடிவினை எடுத்த பிறகு அதற்கான முறையில், அதற்கு ஏற்றபடி அதை மாற்றியமைக்க வேண்டும் என்பதனையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி கல்லூரி கட்டத்திலும் மற்ற கட்டத்திலும் பல்வேறு தன்மைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்: புதிய புதிய வகுப்புக்களைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் கற்றுக்கொடுக்கும் பாடத் திட்டத்தில் கிட்டத்தட்ட 90 வகையான தன்மைகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். 'ஜாப் ஓரியண்டட் எஜுகேஷன்' என்ற முறையில்,

வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித்தர தக்க முறையில் புதிய கல்வி முறைகள், புதிய ஏற்பாடுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பிலும் மதுரை பல்கலைக்கழகத்தின் சார்பிலும் புகுத்தப்பட்டிருக்கின்றன. இப்போது பி.ஏ. வகுப்பில், 'புக் இண்டஸ்ட்ரி,' 'பப்ளிக் ரிலேஷன்,' டூரிஸம், 'கார்ப்பொரேஷன் செக்ரடிரிஷிப், ஆகியவற்றினை பி.ஏ. பட்டப்படிப்பிலும், பி.எஸ்ஸி. பட்டப்படிப்பிலும் 'நியூட்ரிஷன் அண்டு டையடெடிக்,' 'ஃபேமிலி அண்டு ஸோஷியல் வெல்ஃபர், 'இவை ஒரு பாடமாகவும், 'ஃபுட் ப்ரஸர்வேஷன்,' ஒரு பாடமாகவும், இண்டீரியர் டிஸைனிங் ஒரு பாடமாகவும் வைக்கலாம் என்று ஒரு திட்டத்தினை மேற்கொண்டிருக்கின்றார்கள். புதிதாக ஆரம்பிக்கப்படும் கல்லூரிகளிலே இந்தப் பாட திட்டங்களைப் புகுத்தி, இந்த வகுப்புகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டால், பல்கலைக் கழகமும் அதற்கு ஆதரவு தருவதாக சொல்லியிருக்கின்றார்கள். அரசும் ஆதரவு தரும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கான முயற்சிகளிலே அவர்கள் ஈடுபடலாம். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளில் மட்டுமன்றி ஏற்கனவே நடந்துவரும் கல்லூரிகளிலும் இவற்றை ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொண்டால், அவற்றுக்கு பல்கலைக்கழகம் வேண்டிய ஆதரவினைத் தரும். அரசும் ஆதரவளிக்கும். புதிய பாடத் திட்டங்கள்பற்றி பல்கலைக் கழகம் யோசித்துக்கொண்டுள்ள நிலையில், ஆசிரியர்களுடைய தரத்தினை, நிலையினை உயர்த்துவதற்கும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களும் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் இங்கே எடுத்துச்சொல்லி, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்களும் அதுபற்றி எடுத்துச்சொல்லி, அதை வரவேற்று பேசினார்கள். தமிழகத்தை பொறுத்த மட்டில், ஒரு பல்கலைக் கழகம் என்றால், கிட்டத்தட்ட 40, 50 கல்லூரிகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது என்றாலும் பிற மாநிலங்களிலே எட்டு, ஒன்பது அல்லது ஆறு கல்லூரிகளை உள்ளடக்கியதாகக் கூட பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. தமிழகத்தில் சென்னையிலும் மதுரையிலும் கலைக்கல்லூரிகளை உள்ளடக்கிய, மருத்துவ தொழிற் கல்லூரிகளை உள்ளடக்கியதாக பல்கலைக்கழங்கள் இருக்கின்றன. தனித்து இயங்கும் ஒன்றாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கின்றது. ஆனால் கல்லூரிகளை இயக்குவதற்கு ஏற்றவகையில் இரண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால், திருச்சி, தஞ்சை, தென்னார்காடு, புதுக்கோட்டை, ஆகிய இந்த நான்கு மாவட்டங்களில் கிட்டத்தட்ட 35 அல்லது 40 கல்லூரிகளில் அதற்கு உள்ளடக்கியதாக இருக்கக்கூடும்: இவற்றை உள்ளடக்கக்கூடிய வகையில் திருச்சியிலே ஒரு பல்கலைக் கழகத்தினை ஏற்படுத்தலாம். அதைப் போன்றே கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளை உள்ளடக்கியதொரு பல்கலைக்கழகத்தினை கோவையில் ஏற்படுத்தலாம், என்ற அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிடும்போதுகூட, இப்படிப் பல்கலைக் கழகங்கள் என்று புதிதாக ஏற்படும்போது, அவை பொருள்வாரியாக, 'ஸப்ஜெக்ட்' அடிப்படையில் இருக்குமா அல்லது எல்லா 'ஸப்ஜெக்ட்'களும் இணைந்து செயல்

படக்கூடிய வகையில் அமையுமா என்று கேட்டார்கள். என் எண்ணம் கூட தொழில் நுட்பக் கல்விக்கென, தொழில் நுட்ப பல்கலைக் கழகம் என்று தனியாக ஏற்பட வேண்டும் என்பதுதான். கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக இதற்காக முயற்சி செய்து வருகிறோம். யு. ஜி. சி. அதற்கு ஆதரவளிக்க வேண்டும். மத்திய அரசு அதற்கு ஆதரவளிக்க வேண்டும். இதற்காக கடந்த எழெட்டு ஆண்டுகளாக செயற் குறிப்புகள் அனுப்பப்பட்டு அனுப்பப்பட்டு வாதிட்டு வருகிறோம். என்னுடைய எண்ணம், தமிழகத்திலுள்ள எல்லா தொழில் நுட்பக் கல்லூரிகளும், இன்னும் பாலிடெக்னிக்குகளும் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் அடிப்படையில் வருமேயானால், அவற்றை உள்ளடக்கிய அந்தப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு அமைப்பினைப்பற்றிச் சிந்திக்கும்போது, உள்ள பன்னிரண்டு சிண்டிகேட் உறுப்பினர்களும் தொழில் நுட்ப அறிவு பெற்றவர்களாக, வல்லுனர்களாக இருந்தால் அவர்களுடைய அனுபவத்தில் அடிப்டையில், ஆலோசனைகளின் அடிப்படையில அத்தகையதொரு பல்கலைக் கழகம் மிகச் சிறப்பாக அமையும் என்பதுதான். இதற்காக வாதாடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் என்ன சொல்லுகின்றது என்றால், ஏதாவதொரு தொழில்நுட்பக் கல்லூரியை பல்கலைக் கழக அந்தஸ்திற்கு மாற்றி அதோடு மற்ற தொழில் நுட்பக் கல்லூரிகளை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். ஆனால் வருவது வரட்டும் என்று இப்போது கிண்டியிலுள்ள பொறியியற் கல்லூரியை தனித் தொழில் நுட்பக் கல்லூரியாக, பல்கலைக் கழகமாக மாற்றி அத்துடன் அழகப்பா காலேஜ் ஆஃப் டெக்னலஜியில் உள்ள நான்கு பிரிவுகளைச் சேர்த்து விடலாம். அந்த அளவிற்கு வந்தால் இப்போது எடுத்துக் கொள்ளாவிட்டாலும், எதிர்காலத்திலே அது முற்றுப்பெற, வளர்ச்சியுற வழிவகைகளைச் செய்ததாக அமையும் என்ற கருத்தில் அதற்கு இசைவு தரவேண்டும் என்று எழுதியிருக்கிறோம். ஒப்புதல் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அந்த வகையில் பல்கலைக் கழகத்தின் முடிவினை எதிர்பார்க்கிறோம். அந்த வகையில் இல்லாமல், நான்கு பல்கலைக் கழகங்களும் இதேபாணியில் தான் இருக்க வேண்டுமென்றால் இப்போது முப்பது கல்லூரிகளுக்குத் தயாரிக்கும் கேள்வித் தாள்களை 70க்குத் தயாரித்தால்தான் என்ன 120க்குத் தயாரித்தால்தான் என்ன? வேண்டியது பிரிண்ட் ஆக வேண்டும். வேறு ஒன்றும் இல்லை.

அவர்கள் சொல்லுவதைப்போல், வேளாண்மை, மருத்துவக் கல்வி தொழில் நுட்பக் கல்வி இவற்றுக்கான பல்கலைக் கழகங்கள் தனித் தனியாக இயங்குவதுதான் மிகப் பொருத்தமானது. இப்போது நான்கு பல்கலைக் கழகங்களை அமைப்பது, திருச்சியிலும் கோவையிலும் புதிதாக பல்கலைக் கழகங்களை அமைப்பது என்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம், அதை நிறுவுவதற்கும் விரும்புகிறோம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, எடுத்த எடுப்பிலேயே அதற்கு பதினைந்து கோடி செலவழித்து, ஒரு ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இதை ஆரம்பிக்க வேண்டும் என்பது போன்ற எண்ணங்கள் இருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய கொள்கை. அதைத்தான் அவர்களும் குறிப்பிட்டுக் காண்பித்தார்கள். வெளிநாடுகளிலும் அந்த அளவில்தான் இருக்கின்றன. படிப்படியாக வளர்த்துக்கொள்ளலாம். இந்த நான்கு பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தினாலும், இப்போது கொள்கையளவில் உள்ள இதற்கு மத்திய அரசும் யு. ஜி. ஸி-யும் ஒப்புதல் தந்த பிறகு, திருச்சியிலும் கோவையிலும் இவற்றை ஏற்படுத்த இருக்கிறோம். இதற்கு எடுத்த எடுப்பிலேயே பெருந்தொகையோ பெரும் நிலப்பரப்போ இருக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது மத்திய அரசோ, யு. ஜி. ஸி-யோ அதற்கு அனுமதி வழங்காமல் இருக்கலாம், தொழில் நுட்பக் கல்விக்கான ஒரு பல்கலைக் கழகம் துவக்குவதுபற்றி. ஆனால் எதிர்க்காலத்தில் இதற்கு ஒரு வழி பிறக்காதா? அங்கே உள்ள அமைச்சர் மாறாமல் இருந்து விடுவாரா அல்லது கொள்கைதான் மாறாமல் இருக்குமா அல்லது யு. ஜி. ஸி. சேர்மன் மாறாமல் இருக்கப்போகின்றாரா என்ற எண்ணத்தில்தான் இப்போது வருவது வரட்டும் என்று பல்கலைக் கழகத்திற்கு எழுதி ஏ. சி. காலேஜ் ஆஃப் டெக்னலஜியில் நான்கு பிரிவுகளை கிண்டி பொறியியற் கல்லூரியுடன் இணைக்கலாமா என்று கேட்டிருக்கிறோம். இடையிலே இப்போதுள்ளபடி நான்கு பல்கலைக் கழகங்கள் என்று ஆரம்பிக்கப்பட்டாலும், இவற்றில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட விதத்தில் ஆராய்ச்சித் துறை, மேல் பட்டப்படிப்பு இவை இருக்க வேண்டும் என்று நான்கு பல்கலைக் கழக துணை வேந்தர்களும் கூடிக் கலந்து பேசி, எந்தெந்தப் பல்கலைக் கழகம் எந்தச் சிறப்புத் துறையை எடுத்துக்கொள்வது என்ற முடிவிற்கு வந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நல்ல நிலை ஏற்படுவதற்கு வகை ஏற்படும். மேலைநாடுகளிலே ஒவ்வொரு துறைக்கு ஒவ்வொரு பல்கலைக் கழகம் என்ற முறையில், ஆசிரியர் பயிற்சிக்கு என்று கொலம்பியா பல்கலைக் கழகம் என்றும் கட்டிடக் கலைக்கு, பிளானிங் அண்டு டிசைனுக்கு என்று ஒரு பல்கலைக் கழகம் என்றும் இப்படி ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பல்கலைக் கழகத்தை வைத்திருக்கிறார்கள். அந்த நிலையை தமிழகத்தில் ஏற்படுத்தத்தக்க விதத்தில், இந்த நான்கு பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும், உறுப்பினர்களும்கூடி, ஆலோசித்து நல்ல முடிவுகளை எடுப்பார்களானால், தமிழகம் சிறப்பான தன்மை பெறும் என்று கூறிக்கொண்டு, என்ஜினியரிங் கல்லூரியைப் பொறுத்தவரையில், அங்குள்ள நிலையை காலத்துக்கு ஏற்றபடி மாற்றிக்கொண்டு வருகிறோம். எந்தெந்த வகையில் மாற்றங்கள் தேவைப்படுகின்றனவோ அந்த அளவிற்கு அவற்றைப் புகுத்திவரும் சூழ்நிலையைப் பெற்று வருகிறோம். ஏற்கனவே பி. ஈ.-இல் ஃபுல் டைமில் 1966 க்கு முன்பு பத்தாக இருந்ததை இப்போது பன்னிரண்டாக ஆக்கியிருக்கிறோம். ஸாண்ட்விச் கோர்ஸைக்கூட கொண்டுவருவதற்கு முயற்சி செய்து வருகிறோம். பார்ட் டைமாக உள்ளதில் இப்போது மூன்று கோர்ஸைக் கொண்டு வந்திருக்கிறோம். அது மட்டுமில்லாமல், போஸ்டு-கிரேஜுவேட் கோர்ஸில் ஒன்பது பாடத்திட்டங்கள் என்று இருந்ததை இப்போது கிட்டத்தட்ட 24 என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறோம். வரும் ஆண்டுகளில் மேற்கொண்டும் இவற்றை அதிகரிக்கத்தக்க அளவிற்கு சூழ்நிலைகளை

உருவாக்கி வருகிறோம். இன்னும் அப்ளேடு ஸயன்ஸ் போன்ற திட்டங்களை போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸில் கொண்டு வந்து, கிட்டத்தட்ட 26 பிரிவுகளை இன்றைக்கு மேற்பட்டப்படிப்பு நிலையில் கொண்டு வருவதற்கான சூழ்நிலையினை நாம் பெற்றிருக்கிறோம். போஸ்ட் கிராஜுவேட் டிப்ளோமோ கோர்ஸில் கூட, ஏற்கனவே இல்லாமல் இருந்து இப்போது புதிதாக பல திட்டங்களைக் கொண்டுவர இருக்கிறோம்.

இன்று பாலிடெக்னிக் கோர்ஸ் படித்துவிட்டு வருகின்றவர்கள், தொழில் நுட்ப அறிவினைப் பெற்று வருகின்றவர்கள், முன்பு 19 வகையான பாடத் திட்டங்களைக் கற்று வந்தார்கள் என்றால், இப்போது ஆண்டுக்கு ஆண்டு அது படிப்படியாக வளர்ந்து, இப்போது 55 வகையான கோர்ஸ 1974-1975 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதேபோல செர்டிஃபைடு கோர்ஸ் ஏழாக இருந்ததை இப்போது பதினொன்றாக மாற்றியிருக்கிறோம். இன்னும் தேவைப்பட்டதைப் புகுத்தலாம் என்று அதற்காகத் தனியாக ஒரு போர்டு இருக்கின்றது. அவர்கள் அதுபற்றி ஆராய்ந்து அவ்வப்பொழுது சீரிய யோசனைகளையெல்லாம் சொல்லிக்கொண்டு வந்திருக்கின்றார்கள்.

(பிற்பகல் 12-10)

டெக்ஸ்டைலிலேகூட சாண்ட்விச் கோர்ஸ் கொண்டுவர முயற்சி எடுத்து மதுரையிலே இருக்கின்ற தியாகராயா கல்லூரியில் பட்டப்படிப்பாகக் கொண்டுவருவதற்கான முயற்சியையும் நாம் எடுத்து அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்குக் கொண்டு வந்திருக்கின்றோம். இதிலேயெல்லாம் நாம் தாம் தாழ்ந்து விட்டோம் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் 1947-ல் நாம் விடுதலை பெற்ற பிறகு, இந்திய நாடும் நகரங்களும் எப்படி இருந்தன என்பதை நாம் அறிவோம். அதன் பிறகு கடந்த 27, 28 ஆண்டுகளில் இவ்வளவு வளர்ச்சி அடைந்திருப்பதற்குக் காரணம் இங்கே இருக்கின்ற அறிவாற்றல் தான். இதனால் தான் இந்த நிலைமை அவ்வளவும் உருவாகியிருக்கிறது. இது அத்தனையும் வெளிநாட்டுக்காரர்களுடைய முழு அறிவின் அடிப்படையிலேயே அல்ல. நான் முதலிலே எடுத்துச் சொன்ன மாதிரி, கடமையுணர்வோடு, கட்டுப்பாட்டோடு கடும் உழைப்பினால் நாம் தரத்தில் உயர்ந்திருக்கின்றோம். அதன் காரணமாக ஆவடி, அம்பத்தூர், கிண்டி, கோயம்புத்தூர் முழு அளவுக்கு வளர்ந்திருக்கின்றன. 500 சில்லரை இன்சினியரிங் கல்லூரிகள் வளர்ந்திருக்கின்றன சிவகாசியிலே எத்தனையோ லித்தோ பிரஸ்கள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன என்று சொன்னால் பெரிய பாலங்கள் எல்லாம் எழுப்புகிறோம், பெரிய பெரிய கட்டிடங்கள் எல்லாம் கட்டுகிறோம், இப்படி நாம் வளர்ந்திருக்கிறோம். நாட்டிலே உள்ள அத்தனை பேரும் கல்வி கற்பதற்காக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்களால் நாட்டில் பயன் ஏற்பட 10 சர் சி. வி. ராமன்கள் வேண்டும், 10 ஜகதீஸ் சந்திரபோஸ் போன்றவர்கள், 10 டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள், டாக்டா சேத்னா போன்றவர்கள் வேண்டும். அந்த அளவுக்கு வந்தால், இந்த நாட்டின் 56 கோடி மக்களுக்கும் அவர்களின் அறிவு பயன் தர முடியும். அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்ற முறையிலே நாம்

பல முயற்சிகளை எடுத்திருக்கிறோம். அதிலே நாம் யாரும் சோர்ந்து விடவில்லை, தாழ்ந்து விடவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆறாவது நாடாக நமது நாடு அணுகுண்டு தயாரிப்பதிலே இருக்கின்றது. வேறு எந்த நாடும் நமக்கு அந்த ரகசியத்தைத் தரவில்லை. ரஷ்யாவோ அமெரிக்காவோ எந்த ரகசியக் குறிப்பையும் தரவில்லை. இந்திய விஞ்ஞானிகள் அதைக் கண்டு பிடித்துத் தந்திருக்கின்றார்கள். அந்நிய நாடுகள் கூட இதைக் கண்டு பொறாமை அடைந்திருக்கின்றார்கள். அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளை எல்லாம் கூட நாம் தந்திருக்கின்றோம்.

மற்றொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ரிசர்ச் ஆராய்ச்சிக்கு நாம் அதிகம் செலவழிக்கவில்லை என்று குறைபட்டுக்கொண்டார்கள். நாம் எவ்வளவு தான் செலவழிக்க வேண்டுமென்று முயற்சி செய்தாலும்கூட, ஆராய்ச்சிக்கு என்று சில பல இலட்சங்கள் தான் செலவழிக்கின்ற அளவுக்கு இருக்கின்றோமே தவிர வேறொன்றுமில்லை. எவ்வளவுக்கெவ்வளவு ஆராய்ச்சிக்கு என்று அதிகம் செலவழிக்க வேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு செலவழிக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணமும். அதற்கு நம்முடைய நிதிநிலை இடம் தரவில்லை. யாரோ ஒரு மாண்புமிகு உறுப்பினர் ஆராய்ச்சிக்கு என்று அதிகமாகத் தேவைப்படும் பணத்துக்கு வரி போட்டு அதற்குரிய பணத்தை வாங்கலாமென்று சொன்னார். நீங்கள் இதற்கு என்று ஒரு வழியைக் கண்டுபிடித்து அதை இந்த வகைக்கென்று வரி மூலம் வாங்கிக்கொள்ளலாமென்ற தன்மையும் சொல்வார்களேயானால் அந்த வரியைப் போட்டு இந்த வகைக்கென்று செலவிடுவோமானால், அது கூட நாட்டுக்கு நலன் பயக்கக்கூடிய வகையில் அமையும். அதற்கான முயற்சியையும் எடுத்துக்கொள்ளலாம் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும், பலரும் பலவிதமான கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். கூடுமானவரை தமிழை ஆட்சி மொழியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு துணைத்தலைவரவர்கள் இங்கே அவருடைய கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அவருடைய ஆர்வத்தை நான் மதிக்கிறேன். ஆக அந்த நிலைமைக்குக் கொண்டு வர வேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணமும். அதற்கு அத்தனை பேர்களையும் இழுத்துச் செல்ல வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அத்தனை பேர்களுக்கும் ஆக்கம் தர வேண்டியவர்ளாக இருக்கிறோம். கூடுமானவரையில் அவற்றையெல்லாம் கொண்டு வருவதற்கான முயற்சியை அத்தனை பேர்களுடைய ஆதரவிலும் தான் நாம் மெல்ல மெல்ல மேற்கொள்ளவேண்டிய நிலைமையிலே நாம் இருக்கிறோம். சாதாரணமாக புகுமுக வகுப்பிலே இன்றையதினம் 18 ஆயிரம் பேர் தான் தமிழை எடுத்துப் படிக்கிறார்கள். அதுமாதிரி 1974-75ஆம் ஆண்டில் 19,542 பேர் எடுத்துப்படித்தார்கள். அதே மாதிரி பட்டப்படிப்பிலே 15,834 பேர் தமிழை எடுத்துப்படிக்கிறார்கள். அவர்களுக்கு மேலும் ஊக்கம் தர வேண்டும். இப்படிப்பட்டவர்கள் இன்னும் அதிகமாக வர வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே அவர்கள் புகுமுக வகுப்பிலே படிக்கின்றவர்களாக இருந்தால், அவர்களுக்குப் புத்தகம் வாங்கிப்படிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே 50 ரூபாயும் பட்டப்படிப்பிலே படிக்கிறவர்கள் சிறப்பான

நூல்கள் எல்லாம் வாங்கிப்படித்துப் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு புத்தகம் வாங்குவதற்காக 150 ரூபாயும் தருகிறோம். ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் நாம் இவர்களுக்கெல்லாம் உதவித்தொகையாகத் தருகிறோம். 40 இலட்சம்ரூபாய் தருகிறோமே இதைத்தவிர 640 புத்தகங்களை நாம் கல்லூரிகளுக்கும் மற்றவைகளுக்கும் பாடப்புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறோம். அண்மையில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே, இந்திக்காகத்தான் அதிகம் செலவழிக்கிறீர்கள். இதர மொழிகளின் வளர்ச்சிக்கும் நீங்கள் ஆதரவு தர வேண்டும் என்று பல மாநிலங்களிலிருந்து வந்திருந்த கல்வி அமைச்சர்களும் எடுத்துச் சொன்னோம். நானும் கல்வி அமைச்சர் என்ற முறையில் என்னுடைய கருத்தை வற்புறுத்தினேன். அவ்வாறு வற்புறுத்தியதன் காரணமாக, மாண்புமிகு திரிகுணசென் அவர்கள் மத்தியில் கல்வி அமைச்சராக இருந்தபொழுது, ஒவ்வொரு மாநிலத்துக்கும் அந்தந்த வட்டார மொழிகளில் கல்லூரி நூல்கள் வெளியிடுவதற்காக பண உதவி தருகிறேன் என்று வாக்குறுதியளித்தார்கள். ஆனால் இந்திக்கு மட்டும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 7 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். பிறகு 4 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அதன் பிறகு 7 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள், பிறகு 14 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். இப்பொழுது ஐந்தாண்டுத் திட்டத்திலே 22 கோடி ரூபாய் அந்த ஒரு மொழிக்காக மட்டுமே ஒதுக்கி இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 50 கோடி ரூபாயை ஒரே ஒரு மொழிக்கு மட்டும் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்திலே நூல்கள் எல்லாம் வெளியிட்டுவிட்டு, கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் கழித்து இந்தியிலே வெளிவந்திருக்கும் அளவுக்கு புத்தகங்கள் வேறு எந்த மொழியிலுமே இல்லை என்று கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதற்காக இதையெல்லாம் நாங்கள் கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச் சொன்னோம். 40 கோடி ரூபாயை ஒரே ஒரு மொழிக்குத் தந்து விட்டு அதிலே எல்லாவிதமான வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்போதும் கூட ஒரு கோடி ரூபாய் வீதம் மாநிலங்களுக்குத் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் கூட பீகார், ஒரிசா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கும் 4 கோடி ரூபாய் தருவதில் நான்கு மாநிலங்களும் சேர்ந்து இந்தியில்தான் புத்தகங்களை வெளியிடுகிறார்கள். அந்த வகையிலே பார்த்தாலும் கூட, 4 கோடி ரூபாய் ஒரே ஒரு மொழிக்காகப் போகிறது. நமக்கு தமிழுக்கு ஒரு கோடி ரூபாய், மைசூருக்கு ஒரு கோடி ரூபாய், மலையாளத்துக்கு ஒரு கோடி ரூபாய், ஆந்திராவுக்கு ஒரு கோடி ரூபாய் என்று பார்க்கும்போது, ஒவ்வொரு மாநிலத்து மொழிக்கும் ஒவ்வொரு கோடி ரூபாய் தான் வரும். ஏனென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனி மொழி. அந்த அளவுக்கேனும் தந்தார்களே என்பதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. அந்த வகையிலே நாம் ஒரு 59 கோடி ரூபாய்க்கு இப்பொழுது புத்தகங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இல்லையில்லை 59 இலட்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறோம். இன்னும் 41 இலட்சத்துக்குக் கொண்டு வர வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் 640 புத்தகங்களை இங்கே நாம் கொண்டு வந்திருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்போமானால், அவர்கள் எல்லாம் அந்த ஒரு கோடி ரூபாய்க்கு 250 புத்தகங்கள், 300 புத்தகங்கள்

என்ற அளவிலே தான் வெளியிட்டிருக்கிறார்கள். 250 புத்தகங்களை வெளியிட்டு ஆந்திரா அனைத்துப் பணத்தையும் முடித்து விட்டார்கள். ஒரு கோடி ரூபாயையும் செலவழித்துவிட்டார்கள். நாம் பாதித் தொகையைத்தான் செலவழித்திருக்கிறோம். ஆனால் செலவழித்த தொகைக்கு மட்டும் 640 புத்தகங்கள் கொண்டு வந்திருக்கிறோம். முதலிலே புத்தகங்கள் வெளிவருவது கடினம். எழுதச்சொல்வது, அச்சடிப்பது என்று இப்படியெல்லாம் சிரமம். ஆனால் இனிமேல் கொண்டு வருவது ரொம்ப எளிது. அந்த முறையிலே நாம் அதிகமான நூல்களைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். மறு பதிப்பு கொண்டு வரும்போது தேவையானபோது கொண்டு வரலாம் என்று நாம் பல திட்டங்களை எல்லாம் வைத்திருக்கிறோம். எதற்காக இதையெல்லாம் நான் சொல்கிறேன் என்று கேட்டால், 40 இலட்சம் ரூபாய்க்கு நாம் புத்தகங்கள் வாங்குங்கள் என்று கொடுத்தாலும் கூட நூல் நிலையங்கள் எல்லாம் சேர்த்து வாங்குவதானாலும், கணக்கிட்டால் 3 இலட்சம் ரூபாய்க்குத் தான் புத்தகங்கள் போய் நிற்கும். அதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் என்று நான் கருதுகிறேன்—மற்றவர்கள் குறிப்பிட்டார்கள், கொடுக்கிற தொகை புத்தகங்கள் வாங்கிப்படிக்க என்று சொன்னால், 40 லட்சம் ரூபாய் தந்து 2¼ லட்சம் ரூபாய்க்குத்தான் புத்தகங்கள் வாங்கி வந்திருக்கிறார்கள். மீதியுள்ள தொகையையும் புத்தகத்திற்காகச் செலவழிக்க வேண்டுமென்று வரும் ஆண்டிலே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையை ஏற்று மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ரூ 50-க்கும் ரூ. 150-க்கும் நூல்களாகவே, அவர்களுக்குத் தேவையான நூல்களாகவே, வாங்கித்தந்து அதையே படிக்கச் சொல்லலாமா, அந்த வகையில் ஊக்கம் தரலாமா என்பதுபற்றி அரசு முடிவு எடுக்க இருக்கிறது. அதை நடை முறைப் படுத்தலாமா என்பதைப் பற்றியும் எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ம. பொ. சிவஞானம்: மன்னிக்க வேண்டும். தமிழை பயிற்சி மொழியாக எடுத்துப் படிப்பவர்களுக்கு உத்தியோகம் பெற முடியாதோ என்ற பயம் இருக்கிறது. அதற்கு ஏற்கனவே அரசு உத்தரவாதம் தந்தது. அது அமுல் நடத்தப்படுகிறதா அல்லது இனியாவது அமுல் நடத்தப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்த எண்ணம்தான் எனக்கும் இருக்கிறது. ஆகவே தமிழை எடுத்துப்படிப்பவருக்கு குறிப்பிட்ட துறைகளில் முன்னுரிமை தரவேண்டுமென்பது தான் நோக்கம். அது அந்த நிலையிலேயே இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்ந்து அதற்கான முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்களுடன் கலந்து எந்த அளவுக்கு எடுக்க இயலுமோ அந்த அளவுக்கு எடுக்க முயலலாம். அதை எடுக்கத்தான் வேண்டும் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இவ்வளவு பெரிய துறைகள் இருக்கின்றபோது, தமிழ் படித்தவருக்கு முன்னுரிமை தந்து அதிலேயே வேலைக்கு வருகின்றவர்களுக்கு முன்னுரிமை தரத்தான் வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துப் பரிசீலனை செய்து இரண்டு, மூன்று

துறைகளிலே எடுத்துக்கொள்ளலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன். அதற்கு ஆணையில்லாவிட்டால், ஆணை போட இயலுமா என்று பார்த்து ஆணை கூட போடலாம். இயலுமா என்று கூட இல்லை. நினைத்தால் போடலாம். அதைச்செய்வதற்கு ஆயத்தமாக அரசு இருக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

Thiru G. R. DAMODARAN: May I know the Government's views and the Hon. Minister's views on the constitution of autonomous Colleges about which I mentioned in my speech yesterday? This does not involve any additional expenditure in any way but it only involves the amendment of the University Act.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சில கல்லூரிகளை சுயாட்சி கொண்ட கல்லூரியாக மாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருந்து வந்தது. பல்கலைக் கழகக் குழு கூட அந்தக் கருத்துக்கு ஆதரவு தந்தது. கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் மத்திய கல்வி அமைச்சர் அவர்கள் கூட இதற்கு ஆதரவு தந்திருக்கிறார்கள். ஆக அந்தக் கொள்கையை ஓரளவுக்கு நாம் ஏற்றுக்கொண்டு 183 கலை கல்லூரிகள் இருந்தாலும் கூட, சிலபல வசதி வாய்ப்புடைய, சில நல்ல தன்மைகளை நிலை நாட்டி வந்திருக்கின்ற, குறிப்பிட்ட 3, 4 கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து அந்தக் கல்லூரியை நாம் சுயாட்சி கொண்ட ஒருகல்லூரியாக மாற்றி, எந்த அளவுக்கு பல்கலைகழகத்தினுடைய மேற்பார்வை, கண்காணிப்பு இருக்கலாம், எந்த அளவுக்கு அந்தக் கல்லூரிகள் தங்களுடைய சுயாட்சித் தன்மையை நிலை நாட்டுவதற்கு இடம் கொடுக்கலாம் என்ற அளவுக்கு ஆராய்ந்து அதை நடைமுறைப் படுத்துகின்ற அளவுக்கு கொண்டு வரலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அதை 3, 4 கல்லூரிகளிலாவது கொண்டுவருவதற்கு அரசு இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. முடியுமானால் வரும் ஆண்டிலிருந்தாவது கொண்டு வரலாமா என்று கருதுகிறேன். அந்தந்தப் பல்கலைகழகங்களும் மற்றவர்களும் ஒத்துழைப்புத்தருவார்களானால், அந்த நிலைமைகளை தனியார் கல்லூரிகள் இரண்டிலும், அரசினர் கல்லூரிகள் இரண்டிலும் கொண்டு வரலாமா என்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதிலே எந்தவிதமான இழுக்காவது ஏற்பட்டுவிடுமானால், பிறகு அந்த நிலைமையை ஆராயவேண்டியவர்களாக இருக்கிறோம். மார்க்குப்போட்டு சரிசமமாகக் யும் கொண்டு வந்து விட்டார்கள் என்ற குறைபாடுகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இப்போதே குறிப்பிட்ட கல்லூரிகளிலே, கல்லூரியின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை, மாணவர்கள் அதிக எண்கள் வாங்க வேண்டும் என்று மாணவர்களுக்கு போர்டிலேயே ஆன்சரையெல்லாம் எழுதிப்போட்டு, நீங்கள் எழுதுங்கள் என்று சொல்லி மார்க்குகளை தூக்கிவிட்டு கொண்டுவந்திருக்கிற சூழ்நிலை மதுரை பல்கலைக்கழகத்தின் சார்பாக ஒரு பெரிய பிரச்சினைக்கு ஆளாகியது. அப்படிப்பட்ட ஒரு சில கிரைடிரீயா, வழிமுறைகளை வகுத்து ஒரு சில குறிப்பிட்ட கல்லூரிகளுக்குத் தரலாம். அப்படித் தந்தால், தன்னிச்சையாக நடக்கிற அளவுக்கு போட்டா போட்டி ஏற்படுகின்ற சூழ்நிலையில் கல்வி சொல்லிக் கொடுக்கிற தன்மை

ஏற்படுமானால், ஆற்றலுக்கு மதிப்பு வேண்டும். அப்படித்தரவேண்டு மென்றால் சுயாட்சி நிலைமைகள் வரவேண்டும். கொள்கையளவிலே அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை ஆராய்ந்து அறிந்து எந்தெந் தக் கல்லூரிக்குக் கொண்டு வரலாம் என்பது பற்றியும் நாம் முடிவெடுத் துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே புதிய கல்லூரிகளுக்கு நாம் எந்த நிதியும் ஒதுக்கவில்லை. காரணம் இருக் கிற கல்லூரிகளையே ஸ்டெபிலைஸ், நிலைபடுத்துவதற்கான வாய்ப்பு வசதிகளைச்செய்ய முடியாத அளவுக்கு நாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது, புதிய புதிய கல்லூரிகளைத் தொடங்க வேண்டியதில்லை. ஏற்கனவே இருக்கிற கல்லூரிகளைப் பார்த்தால், இடம் இருந்து கொண்டுதானிருக்கிறது.

(பிற்பகல் 12–20)

குறிப்பிட்ட சில கல்லூரிகளிலேதான் இடம் வேண்டுமென்று கேட்கிறோமே தவிர, பல்வேறு கல்லூரிகளிலே இடங்கள் ஏராளமாக இருந்து கொண்டுதான் இருக்கின்றன. சென்ற ஆண்டிலே மட்டும் புகுமுக வகுப்பிலே தமிழ்நாட்டிலே 14,278 இடங்கள் காலியாக இருந்திருக்கின்றன. அதில் தமிழ் வகுப்பிலே 4,507 இடங்களும் —ஆங்கிலத்திலே மோகம் என்று சொல்லிவிடவும் முடியாது—ஆங்கிலத் திலே 10,221 புகுமுக வகுப்பு இடங்களும் காலியாக இருந்திருக் கின்றன. பட்டப் படிப்பிலே கூட 9,562 இடங்கள் காலியாக இருக்கின்றன. தமிழில் 3,044, ஆங்கிலத்தில் 6,518 இடங்கள். பல்வேறு கல்லூரிகளிலும் காலியாக இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக் கொண்டு மாணவர்கள் அதிலே சேருவார்களானால், அரசுக்கு அதிக நஷ்டமில்லை. கல்லூரிப் பேராசிரியர்களுக்கும், முதல்வர்களுக்கும், மற்றவர்களுக்கும் சொல்கிறோம். இதிலே சேர்த்துக் கொள்ளப்படுவதிலே அதிகச்செலவு ஏற்படாது. அந்த இடங்களையெல் லாம் பயன்படுத்திக்கொண்டு வருவார்களானால், இப்போது இருக்கிற கல்லூரிகள் 20 ஆயிரத்துச் சில்லறை மாணவர்களை ஏற்றுக்கொள்ளுகிற அளவுக்குத்தான் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முறையில்தான் வருகிற ஆண்டில் புதிய கல்லூரி வேண்டாம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் சொல்லியது மாதிரியும், மற்ற உறுப்பினர்கள் சொல்லியது மாதிரியும், 'ஷிப்ட் சிஸ்டம்' வரவேண்டுமென்றுதான் நான் பல்லாண்டு காலமாக வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

Thiru A. R. DAMODARAN: One thing I want to mention in regard to the Shift system, because it is likely to be mistaken by teachers. When we want the shift system, it will imply that more teachers will be appointed and it is not as if the existing teachers will be given additional work-load. Since my teacher friends here may misunderstand on this point, I want the Minister also to clarify.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : இருக்கிற கட்டிடத்திற்கு 30 லட்சம், 40 லட்சம் என்று செலவழித்துவிட்டு, மூன்று மணி நேரம், 4 மணி நேரம் பயன்பட்டு மீதி 15 மணி நேரம் அது கோபித்துக் கொள்ளப்போவது இல்லை. என்னை ஏன் இவ்வளவு கடுமையாகப் பயன்படுத்துகிறீர்கள் என்று எந்த மேஜையும், எந்த நாற்காலியும், எந்த லெபாரட்டரியும் கோபித்துக் கொள்ளாது. இருக்கிற கல்லூரிகளிலே அதே இட வசதியைக் கொண்டு ஆயிரம் மாணவர்களை வைத்துக்கொண்டு, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒத்துழைப்புத் தருவார்களானால் இரண்டு பங்கு மாணவர்களைக்கூட பயிற்றுவிக்க வாய்ப்பாக இருக்கும். மேலை நாடுகளிலேகூட உண்டு. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியது மாதிரி டெல்லியில்கூட அப்படி இல்லை. இங்கே மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையிலே மூன்றாயிரத்துச் சில்லரை மாணவர்கள் இருக்கிறார்கள். இரண்டாயிரத்துச் சில்லறை மாணவர்கள் இருக்கிறார்கள் இப்படிப்பட்ட பள்ளிகளிலே ஷிப்ட் முறை வைத்திருக்கிறோம். ஐந்தாறு பள்ளிகளுக்கு மேல் ஷிப்ட் முறை இருக்கிறது. அதைக் கொண்டு வந்தால் கட்டிடத்திற்கு அதிகம் செலவு இல்லை. தேவைப்பட்டால் ஆசிரியர்களை அதிகமாக நியமித்துக்கொண்டு, அதிகமாக ஊதியம் தந்துகூட அதிகமான மாணவர்கள் இடம் பெறுவதற்கு வழிவகை செய்யலாம். அந்த நல்ல கருத்துக்களை வற்புறுத்தி வருகின்றோம். ஆனால் அதைக் கடைப்பிடிக்கின்றவர்கள் யாரும் வரவில்லை. ஏதோ சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மாற்றுத் திட்டத்தையும் அவர்கள் குறிப்பிட்டார்கள், காலையிலே பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்று. நானும் 6, 7 ஆண்டுக் காலமாக வேண்டுகோள் விடுத்து வருகிறேன். சொல்லிக்கொண்டு வருகிறேன். கட்டாயப்படுத்த முடியாது. காலை நேரம் அருமையான நேரம். படிப்பதற்கேற்ற நேரம். நினைவிலே தங்குகிற நேரம். சுறுசுறுப்பாக வேலை செய்கிற நேரம். அந்த நேரம் முழுவதையும் பயன்படுத்தி விட்டு, மாலை நேரத்தை வேறு தொழில் பார்க்க—வேறு தொழில் கற்றுக்கொள்ள—வேறு வகைக்குக்கூட பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும். ஒவ்வொரு ஆசிரியரும எவ்வளவு மணி நேரம் எடுக்க வேண்டுமென்று இருக்கிறதோ அவ்வளவு மணி நேரம் எடுத்தால் போதும், அதற்குமேல் எடுக்க வேண்டிய தன்மைகள் வருமானால் அதற்குத் தனி ஆசிரியர்கள் போட்டுக் கொள்ளுகிற நிலைமையே தவிர, 25 மணி நேரம் வேலை செய்கிற ஆசிரியர்களை 35 மணி நேரம், 40 மணி நேரம் வேலை செய்யுங்கள் என்று வற்புறுத்த முடியாது...

திரு. எஸ்.ஏ. ராஜமாணிக்கம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தர வேண்டும். சென்னை நகரத்தில் உள்ள மாணவர்கள் மட்டும்தான் காலை நேரக் கல்லூரிக்கு வர மறுக்கிறார்களா? மற்ற நகரங்களில் உள்ளவர்கள் மறுக்கிறார்களா? மற்ற நகரங்களில் உள்ளவர்கள் ஒத்துக்கொண்டால் அங்கே காலை நேரக் கல்லூரி ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைத்தான் நானும் ஆதரிக்கிறேன். எல்லா இடங்களிலும் வரவேண்டுமென்றுதான் விரும்புகிறோம். அதை சென்னையில் மட்டும்தான் பரீட்சார்த்தமாகப் பார்த்தோம். ஆனால் அது நடைபெறவில்லை. அதனால் மறுபடியும் பழைய முறைக்குக் கொண்டு வந்து விட்டோம்.

அது இங்கே வந்தால் மாணவர்களுக்கும் நல்லது, ஆசிரியர்களுக்கும் நல்லது, கல்வித் துறைக்கும் நல்லது. இங்கே மேலை நாடுகளுக்குப் போய்விட்டு வந்த பலர் இருக்கிறார்கள். எந்த நாட்டிற்குச் சென்றாலும்கூட, இந்தியாவைத் தவிர, 8 மணிக்குப் பிறகு ஆரம்பிக்கிற கல்லூரிகளோ, பள்ளிகளோ வேறு எந்த நாட்டிலும் கிடையாது. ஆகையால்தான் அந்த முறை இங்கு வருமானால் நல்லது. ஆகையால்தான் அதற்கான மாற்றங்களுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். 'சேஞ்சுக்கு'த் தயாராக இருக்க வேண்டும். உணவு முறையிலே மாற்றம் வேண்டும். நம்முடைய பழக்க வழக்கங்களிலே மாற்றம் வேண்டும். அது வந்தால் மிக மிக நல்லது என்பதை அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். அதைத்தான் மீண்டும் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

அடுத்து, தனித்தனியாக பல பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பினார்கள் என்றாலும்கூட, அவ்வப்போது விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. இனிமேலும் விளக்கங்கள் தரப்பட வேண்டியிருக்கிறது. வினா-விடைகள் மூலமாக பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன என்றாலும்கூட, மேலெழுந்தவாரியாக பொதுவான கருத்துக்களுக்கு மட்டுமே எடுத்துச் சொல்லுகின்ற சூழ்நிலையில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். 'ஏ', விங், 'பி' விங் ஆசிரியர்களை ஒன்றுபடுத்த வேண்டும் என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களும், திரு சங்கரலிங்கம் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் எடுத்துக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். 'டிஸ்ட்ரிக்ட் போர்டு' ஒழிக்கப்பட்ட பிறகு அது தனியாக வைக்கப்பட்டிருந்தது. 1966-லிருந்து அரசாங்கத்தின் பள்ளிகள் என்று ஆக்கப்பட்டது. பல்லாண்டு காலமாகவே 'ஏ' விங், 'பி' விங் என்று வைத்துக்கொண்டு வந்தார்கள். இரண்டாக இருந்ததை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் நான் அமைச்சர் பொறுப்பை ஏற்ற காலத்திலிருந்தே, அதைச் சிந்தித்து, இரண்டு சாராரையும் கூட்டிப் 'பேசுங்கள்,' பேசுங்கள் என்று பல வகையாக நான் அவர்களிடத்திலே சொன்னேன். ஆனால் அவர்கள் பல்வேறு வகையிலேயும் தனித்தனியாகப் பேசி ஒரு ஒருமித்த கருத்துக்கு வரவே முடியவில்லை. ஆகவே 1970 ஆம் ஆண்டிலிருந்து நாம் சட்டம் போட்டு ஒன்றாக ஆக்குகிற சூழ்நிலையைக் கூட கொண்டு வந்தோம். கொண்டு வந்ததற்குப் பிறகும் கூட, ஒன்றாக அமைப்பதற்கான சூழ்நிலைகள் ஏற்படாததன் காரணமாகத்தான் 1974-லிலே இரண்டையும் தனித்தனியாக வைப்பது என்ற முடிவுக்கு வந்ததன் காரணமே

ஒற்றுமை ஏற்படாததுதான். இரண்டு சாராரும் ஒப்புக் கொள்வார்களானால், அதிலே நமக்குச் சங்கடம் இல்லை. ஆனால் ஒப்புக் கொள்ள முடியாத சூழ்நிலையில், ஒருவருக்கு ஒன்று சொல்லும் போது மற்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தங்களுக்கு இருக்கின்ற வசதிகள் அத்தனையும் காப்பாற்றப்பட வேண்டுமென்று இரண்டு சாராரும் பேசி, இரண்டு சாராரும் இணையவேண்டுமென்று சொல்லும்போதுதான் சங்கடங்கள் வருகின்றன. அந்த நிலைமையில், 'ஏ' விங் என்பது தொடர்ந்து இருந்து வருகின்ற ஒன்று. இணைவது 'பி' விங். ஒன்று சேருவது 'பி' விங். ஆக, காப்பாற்றப்பட வேண்டியவர்கள் 'ஏ' விங்கிலே இருப்பவர்கள். 'ஏ' விங்கோடு 'பி' விங்கை இணைக்கும்போது, இங்கே இருப்பவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்று அவர்கள் கருதுகிறார்கள். 'ஏ' விங், 'பி' விங் என்று ஆசிரியர்களைச் சேர்க்கும்போது, பல்வேறு பிரிவுகள் எல்லாம் இருக்கின்றன. ஆசிரியர்கள் சேர்க்கப்படும்போது 'ஏ' விங்கிலே இருப்பவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போய்த்தான் வரவேண்டும். அதிலே 'புரொபேஷன்' பீரியட் 2 வருடம், 3 வருடம், 4 வருடம் கூட ஆகிவிடுகிறது. அது மாத்திரமல்லாமல், 'ஏ' விங்கிலே இருப்பவர்கள் இரண்டு மூன்று டெஸ்டுகள் எழுதி அவைகளிலே வெற்றி பெற்றால்தான், புரபேஷன் முடியும். புரபேஷன் முடிக்கும் அந்த இரண்டு மூன்று வருடங்களும் அவர்களுக்கு சர்வீஸிலே போய் விடுகிறது. அந்த வகையில் அவர்கள் தனியாக டெஸ்டுகள் எழுதி, பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநில அளவிலே மாறுதல் கொண்டு இருக்கிற அளவிலே 'ஏ' விங்கிலே அவர்களுக்குத் தனியான தன்மைகளில் தனியாக இயங்கி வருகின்றன. 'பி' விங்கிலே இருப்பவர்கள் டிஸ்டிரிக்ட் போர்டு கீழ் இருந்ததன் காரணமாக, டிஸ்டிரிக்ட் போர்டு நேரடியாக நியமித்து, அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து அவர்களுடைய சர்வீஸ்களும் சேர்ந்து விடுகின்றன. அவர்களுடைய மாறுதல் எல்லாம் அந்தந்த மாவட்ட அளவிலே அமைந்து விடுகின்றது. 'ஏ' விங்கிலே உள்ள தன்மைகளை இன்னின்ன டெஸ்டுகள் பாஸ் பண்ணினால்தான் பெற முடியும். புரபேஷன் முடிந்தால்தான் சர்வீஸ் வரும் என்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆக இரண்டையும் ஒன்றாக ஆக்குவதற்கு அவர்களுடைய சர்வீஸ் காலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து புரபேஷன் முடிந்த காலத்திலிருந்து அங்கே தன்மைகள் மாறுகின்றன. அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து நாம் கொண்டு வந்து சேர்க்கலாம் என்று நாம் நினைத்தாலும், அதற்கு, அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து சர்வீஸைக் கணக்கிடுகிறோம் என்று சொன்னால் யார் யார் அதிகமான அளவுக்கு சர்வீஸ்களை வைத்திருக்கிறார்களோ அந்த அடிப்படையில் தலைமை ஆசிரியர்களை நாம் நியமிக்க வேண்டும். அப்படி நியமித்தோம் என்றால், அப்படி நியமிக்கிற போது இப்போது இருக்கிற சிலபேரை கீழே இறக்க வேண்டிய அவசியம் வருகிறது. ஆக அந்தக் காரணம் மட்டும்தான்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, இதற்காகத்தான் நேற்று முன்தினம் நான் பேசும்போது Supernumerary Post

கொண்டு வருவதாலே இது தவிர்க்கப்படலாம் என்று சொன்னேன். அரசாங்கத்துக்கும் அதிகமான செலவுகள் ஏற்படாது. எற்கெனவே அவர்கள் வாங்கும் ஊதியம் பாதிக்கப்படாது. Supernumerary post கொண்டு வருவதாலே இது தவிர்க்கப்படலாம் என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதற்குத் தனியாகச் செலவாகும். பல்வேறு நிலைமைகளுக்கும் அவர்கள் கட்டுப் பட்டாக வேண்டும். அதே சமயத்தில் அவர்களுடைய உரிமைகளும் காப்பாற்றப்பட வேண்டும். ஆகவேதான் நாளடைவில் 'ஏ' விங்காக மாறட்டும் என்ற நிலைமையிலே வைத்திருக்கிறோம்.

(திரு. செ. முத்துசாமி எழுந்தார்....)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் அடிக்கடி எழுந்து அமைச்சரவர்கள் பேச்சுக்கிடையே குறுக்கிடக் கூடாது. முதலில் கல்வி அமைச்சரவர்கள் பேசி முடியட்டும். பிறகு உறுப்பினரவர்கள் பேசலாம்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இப்போதைய நிலைமையிலே 'பி' விங்கானது அழிந்து போகக்கூடிய ஒரு பிரிவாகவும் 'ஏ' விங்கானது வளர்ந்து வருகிற ஒரு பிரிவாகவும் இருக்கிறது. 'பி' பிரிவிலே இருக்கக் கூடிய பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்வுகளும் கிடையாது, வளர்ந்து வரக்கூடிய எந்தவிதமான வாய்ப்பும் கிடையாது, மேல் உயர்வுகளும் கிடையாது. 'பி' பிரிவை அழிந்து போகக்கூடிய அளவிலே வைத்துவிட்டு 'ஏ' பிரிவை வளர்ந்து போகக் கூடிய அளவிலே வைத்து சலுகையளித்திருக்கக் கூடிய அளவிலே ஒரு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று இரண்டையும் தனித்தனியாக வைக்க வேண்டும். அல்லது இரண்டும் முழுக்க முழுக்க ஒன்றுபடுத்தப்பட வேண்டும். இரண்டும் கெட்டான் நிலைமையிலே இன்றைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதை நான் கல்வி அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரும் நேரத்திலே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்று இதை தனியாகவே வளரும் பகுதியாக வையுங்கள் அல்லது அழிந்து போகக் கூடிய பகுதியாக இருப்பதை எடுத்து விடுங்கள் அல்லது இரண்டையும் ஒன்றாக்குங்கள். அத்தகைய ஒரு முடிவெடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சங்கடங்கள் வரும்போது ஏதேனும் ஒரு முடிவுக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. கடைசியில் கூடுமான வரையில் குறைந்த அளவுக்குப் பரிசீலித்துக் கண்ட முடிவு இதுதான். 'பி' விங்கை சேர்ந்த தலைமை ஆசிரியர்கள் இப்படியே இருக்க வேண்டுமென்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் ஒன்றாக இணையுங்கள் என்று சொல்கிறார்கள். 'ஏ' விங்குகாரர்கள் இதை இணைக்கவே இணைக்காதீர்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரு உத்தரவைப் போட்டு இணையுங்கள்

என்று உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். உத்தரவிட்டு நிறைவேற்றினால் என்ன நடக்கும், ஒவ்வொருவரும் தாங்கள் பாதிக்கப்பட்டோம், தாங்கள் பாதிக்கப்பட்டோம் என்று சொல்லுவார்கள். ஆகவே இரு பிரிவினரையும் தனித்தனியாக வைத்து இனிமேல் 'ஏ' விங்தான் வரும். ஆனால் 'பி' விங்குக்கு இருக்கக்கூடிய உரிமைகள் தனியாக கவனிக்கப்பட்டு, சமமாக கவனிக்கப்பட வேண்டும். மாற்றங்கள் வேண்டுமானால்தான் நாம் ஆராய்ந்து சிலபலன்களைச் செய்து கொள்ளலாம். ஏற்கெனவே டி.ஈ.ஓ. 'பி' விங்கிலிருந்து வர முடியாது 'ஏ' விங்கிலிருந்துதான் வரவேண்டும். இப்பொழுது நாம் ஒரு கணக்கை வைத்து 30 சதவிகிதத்தினர் 'ஏ' விங்கிலிருந்து வந்தவர்கள் இருக்கலாம், 40 சதவிகிதத்தினர் 'பி, விங்கிலிருந்து இருக்கலாம் என்று வைத்திருக்கிறோம். இந்த முறையே நிரந்தரமாக இருக்கக்கூடிய ஒன்றல்ல. போகப் போக மாற்றி மாற்றி இதை ஒரு சுமுகமான சூழ்நிலைக்குக் கொண்டு வரலாம். என்னைப் பொறுத்த வரையில், இரண்டு விங்கும் ஒன்றாக இருந்தால்தான் எல்லோருக்கும் நல்லது. அரசாங்கத்துக்கும் நல்லது. ஆனால் அதற்கான சூழ்நிலைகளை நான்கு ஆண்டுகளாகப் பேசி 1958-ம் ஆண்டிலே ஆரம்பித்து, 1966 ஆம் ஆண்டிலே எடுத்து, 1970 ஆம் ஆண்டிலே அமுலுக்கு வந்து, 1974 ஆம் ஆண்டிலும் முடியாத ஒரு தன்மையிலேயே இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான், இந்த நிலைமைகளைப் பற்றியெல்லாம் தனியாக ஓரளவுக்கேனும் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்ற எண்ணத்தில் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருந்தது. ஆகவே இரண்டு சங்கத்தாரும் தாங்களாக முன் வந்து இந்த வகையிலே நாங்கள் இணைகிறோம் என்ற வகையிலே ஒரு பிரச்சினைக்கே இடமில்லாமல் நல்ல யோசனையைக் கூறுவார்களேயானால், அரசு அதை நிச்சயமாக ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அப்போதும் கூட ஒரு சாரார் வேண்டுமென்றும் மற்றொரு சாரார் வேண்டாமென்றும் சொல்கிற பொழுது, நாம் ஏதேனும் ஒரு முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாங்கள் எல்லாம் இப்பொழுது ஆராய்ந்து எடுத்திருக்கும் முடிவானது குறைந்த அளவுக்குக் கூடிய வரை யாருக்கும் பாதகம் அல்லாத வகையில் இருக்கும். இதையும் மீறி அதில் ஏதாவது பாதகங்கள் இருக்குமேயானால், தனிப்பட்ட முறையில் கவனித்து அந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பதற்கு தனியாக யோசிக்கலாம் என்பதையும் அந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு தலைவரவர்களே, 'ஏ' விங், 'பி' விங் இணைப்பை முடிவு பெற்ற ஒன்றாக அரசு கருதக்கூடாது. இணைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுமானால் அந்தக் கருத்தைப் பரிசீலிக்கலாமென்ற ஒரு யோசனையைத்தான் உறுப்பினர்கள் எல்லாம் கூறுகிறார்கள். அந்த அடிப்படையிலே முடிந்து விட்ட ஒன்றாக அதைக் கருதாமல் 'ஏ' விங், 'பி' விங் இரண்டையும் சார்ந்தவர்கள் தங்களுடைய ஒப்புதலை ஒருமித்துத் தெரிவிப்பார்களேயானால், இணைக்கும் வகையிலே அதை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே அரசு முடிவெடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முதலிலேயே கூட நான் அதைத்தான் குறிப்பிட்டேன். இந்த இரண்டு சாராருக்கும் கருத்து வேறுபாடு இல்லாத அளவுக்கு இன்னின்ன வகையில் கொண்டு வரலாமென்று அரசுக்கு வழிவகை கூறுவார்களேயானால், அதை அரசு ஏற்றுக் கொள்ளும். உறுப்பினர் அவர்கள் உத்தரவிடுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உத்தரவிட்டால் மறுபடியும் ஒரு சாரார் கிளம்புகின்றபோது தகராறுகள் வருகின்றன. அதைத்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன்.

புலவர் ஓ. அறிவுடை நம்பி: மாண்புமிகு தலைவரவர்களே இந்தப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கல்வித்துறையிலே மிகுந்த அனுபவமுள்ளவர்களாலேயே ஆராய்ந்து இது குறித்து ஒரு நல்ல முடிவுக்கு வர முடியாதபோது, நடுவர் தீர்ப்புக்கு விட்டுவிடுவோமேயானால், ஏதேனும் ஒரு தீர்ப்பை அவர்கள் வழங்கி விடுவார்கள். பிறகு அதில் இருக்கிற தன்மைகளை யார் போக்குவது? இப்பொழுது பல்வேறு தீர்ப்புகள் வருகின்றன. அவர்கள் சட்டத்தின் அடிப்படையிலே தீர்ப்புகள் வழங்கி விட்டுப் போய்விடுகிறார்கள். நடைமுறையில் பார்க்கும்போது, எவ்வளவு சங்கடங்கள் அதில் வருகின்றன என்பதை நான் பார்க்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது டி. இ. ஓ. க்களுடைய பதவி உயர்வைப் பற்றி மட்டும்தான் குறிப்பிட்டார்கள். தலைமையாசிரியர் பதவிகள் நான்கு வருடத்துக்கு ஒரு முறை ஐந்து வருடத்துக்கு ஒரு தடவைதான் வருகின்றன. மேலும் அதுமட்டுமல்ல இப்பொழுது இருக்கிற பிரச்சினை. மேலே நான் சொன்னது தலைமை ஆசிரியர்களுக்கு மட்டுமே இருக்கக்கூடிய பிரச்சினை. அப்படி ஒரு நான்கு, ஐந்து ஆசிரியர்கள் பதவி உயர்வில் சென்றால் கூட 'பி' பிரிவில் இருக்கிற ஆசிரியர்கள்தான் செல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் பெரும்பான்மையினராக இருக்கக்கூடிய செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், அவர்களுடைய நிலைக்கு ஒத்தவர்கள், பட்டதாரி ஆசிரியர்களில் ஊழிய காலம் குறைந்தவர்கள் ஆகிய அத்தனை பேர்களையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே பெரும்பான்மையினருடைய நலம் கருதி கீழே இருக்கக்கூடியவர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் போன்றவர்கள் புலவர் தேர்வு எழுதும்பொழுது அல்லது பட்டதாரி ஆசிரியர்களாக ஆகும்போது அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு கிடைப்பதில்லை. 'ஏ' பிரிவிலே இருக்கக்கூடியவர்கள் ஜூனியர்களாக இருந்தாலும், நேற்று வந்து பதவியிலே சேர்ந்தாலும், அவர்களுக்கு உடனடியாக வாய்ப்பு கிடைத்து விடுகிறது. இப்படிப்பட்ட வாய்ப்பின்மைகள் இருக்கிற காரணத்தால் தான், இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று பெரும்பான்மையினருடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதிலே சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற கருத்து வேறுபாடு இருக்கிறது என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டேன். 'ஏ' விங்கில் இருக்கிற முழு வசதியையும் இவர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள், எங்களோடு வந்து இணைக்கும் போது, எங்களுடைய உரிமைகள் அத்தனையும் காப்பாற்றுங்கள் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். கொண்டுவந்து இணைக்கப்படுவது 'பி'விங். இணையாமல் நிற்பது 'ஏ'விங். போட்டி சூழ்நிலைகள் வரும்போது, சட்டப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. அப்படி இருக்கும் பொழுது, அவர்கள் ரிட்டுக்குப் போவார்களேயானால், அவர்களும் ஒரு தீர்ப்பை அளித்து விடுகிறார்கள். இத்தகைய நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, ஒரு சுமுகமான சூழ்நிலையை, ஒத்த உரிமையை தன்மையை ஏற்படுத்துவதற்க ஆசிரியர்கள் சமுதாயம் முன் வர வேண்டும். அதிலே அவர்களுக்கு பாதகம் ஏற்படுமேயானால், அதை ஆராய்ந்து சரி செய்வதற்கு என்ன செய்யலாம் என்பதுபற்றி அரசு யோசிக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்லிய மாதிரி, எல்லோரும் சேர்ந்து ஒருமித்து ஒரு முடிவுக்கு வந்து, ஒரு திட்டத்தை வகுத்துத் தருவார்களானால், அதை அரசு ஏற்று நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது. இது முடிந்து விட்ட முடிவான பிரச்சினை கூட அல்ல. இது அரசால் இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிற முடிவேயொழிய முடிந்த முடிவல்ல. இதிலிருந்து மாறி வேறு ஒருவகை........

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, 'ஏ' விங்குக்கு ஏதாவது ஒரு இடம் காலியானால், அந்த இடத்துக்கு நேரடியாக நியமிக் ப்படுகிறார்கள். எந்த இடத்திலிருந்தும் பதவி உயர்வு கொடுக்கப்படாமல், கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லுகிறார்கள். எனவே 'ஏ'விங்கில் காலியாகும் எந்த ஒரு காலி இடத்துக்கும் டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் செய்யாமல், 'பி'விங்கிலிருந்து நியமிப்பதற்கு அரசு வழி வகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகளும் என்னிடத்தில் இல்லை, அதனுடைய நிலைமைகளைப் பற்றியும் எனக்குத் தெரியவில்லை. அதுபற்றித் தனியாக ஆராயலாம்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த 'ஏ'விங், 'பி'விங் பிரச்சினையில் நான் ஒரு யோசனையைத் தெரிவித்தேன். கடந்த எட்டு ஆண்டுக் காலமாக இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்க முயன்றும் அது முடியாத காரணத்தால், இங்கிலாந்து நாட்டிலே இருப்பது போல் இதே 'பி'விங் பள்ளிகளை மட்டும் ஒன்றாக இணைத்து ஒரு வாரியமாக, ஒரு போர்டாக அமைத்து, அதை ஒரு தனி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தால் இந்தப் பிரச்சினை, சிக்கல் எதுவும் இருக்காது என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொண்டு வருகிறேன். என்னுடைய அந்தக் கருத்து ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகமாகச் சிக்கல் வராது என்கிறார். அதிகமாகச் சிக்கல் வருமென்று நான் கருதுகிறேன். சிக்கல் அதிகம் வருமென்று நான் கருதுகிற காரணத்தால், அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது அவர்கள் பி'விங்குக்காக தனியாக ஒரு சங்கத்தை வைத்துக்கொண்டு வழக்கு மன்றத்துக்குக் கூட செல்லுவதற்குத் தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி எல்லாம் செய்ய வேண்டாம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எப்படியாவது இதற்கு ஒரு தீர்வு காணுவார்கள், மேலும், நான் ஆசிரியர்கள் பிரதிநிதியாக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் இதை எப்படியாவது பேசி ஒரு தீர்வு காணலாம் என்றெல்லாம் அவர்களிடத்தில் நான் சொல்லியிருக்கிறேன். ஆகவே இன்றைக்கு 'ஏ'விங்கில் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டும் நன்மை கெட்டுவிட்டது என்று வழக்கு மன்றத்திற்குச் செல்லக் கூடிய நிலைமை இருப்பதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது எதிர் காலத்திலே 'பி' பிரிவிலே இருக்கக்கூடியவர்களுக்கு எவ்விதமான வாய்ப்பும் இல்லாமல் போய்விடுகிறது, இவ்வளவு காலம் இந்த அரசை நம்பி பணியாற்றியும் ஒரு நன்மையும் இல்லையே என்று சொல்லக் கூடிய அளவுக்கு அவர்களும் மனம் நொந்திருக்கிறார்கள். அவர்களும் அந்த எண்ணத்திலே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி அவற்றை எல்லாம் கருத்திலே ஏற்றுக்கொண்டு அது சம்பந்தமாக ஒரு சுமுகமான முடிவெடுப்பதற்கு கல்வி அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவரவர்களே, உறுப்பினர்கள் கேள்வி கேட்டு பதில் வாங்கும் முறையிலும், மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவுற பதில் சொல்லும் முறையிலும், இந்த அவையினுடைய அலுவல் மாலையிலும் நீட்டிக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன். அரசு இரண்டு தரப்பினரையும் உட்கார வைத்து, பல தரம் பேசி, பலரோடு பேசி கடைசியிலே தான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. இது தான் அரசு குறைந்த அளவுக்கு வரக்கூடிய முடிவு என்பதை நான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதிலே ஏதாவது சீர்திருத்தமான முறையிலே நல்ல யோசனைகளை எடுத்துச் சொல்வார்களானால், அரசு ஆராய்ந்து பார்க்கும் என்றும் சொல்லியிருக்கிறேன். இந்த அளவுக்குத் தான் என்னால் பதில் சொல்ல முடியுமே தவிர, இரண்டையும் இணையுங்கள் இணையுங்கள் என்று சொன்னால், அதிலே வரக்கூடிய சங்கடங்களை நாளைக்கு இந்த அரசும் இந்த அரசிலே இருக்கக்கூடிய கல்வித் துறையும் தான் சமாளிக்க வேண்டிய நிலை இருக்கும். ஆகவே தான் இரண்டு சாராரும் ஒருமித்து ஒத்து வர வேண்டும். அரசைப் பொறுத்தவரையில், ஒருசாரார் வேண்டி

யவர்கள், மற்றொரு சாரார் வேண்டாதவர்கள் என்ற பாகுபாடே கிடையாது. இந்த அரசின் எண்ணமெல்லாம் இருக்கிற நிலைமைகளை நல்லபடியாக சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்பது தான். இப்பொழுது இருக்கிற சூழ்நிலைக்கேற்றவாறு எடுக்கப்பட்டிருக்கும் முடிவு தான் நாங்கள் எடுத்திருக்கும் முடிவு. இதிலே ஏதாவது சீர்திருத்தத்தோடு வேறு நல்ல பல நிலைமைகளை ஆராய்வதற்கான வழிவகைகளை எடுத்துச் சொல்வார்களே யானால், அரசு அதை ஆராயும் என்பதை மட்டும் நான் திரும்பவும் கூறிக்கொள்கிறேன்,

அடுத்து, பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகளைப் பற்றியும், அடிப்படையிலேயே சம்பளங்கள் மாற்றி வழங்க வேண்டுமென்றும், இன்னும் பல்வேறு விஷயங்களைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். அதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன. பல்கலைக் கழக மானியக் குழுவானது கல்லூரிகளிலே, பணியாற்றும் பேராசிரியர்களுக்கெல்லாம் சம்பளங்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற முடிவெடுப்பதற்கு முன்னதாக மாநில அரசைக் கலந்து கொண்டு முடிவெடுக்கவில்லை. ஆனால் அவர்கள் சொல்லுகிறபடி பார்த்தால், பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் மாநில அரசைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே அவ்வளவு கல்வி அமைச்சர்களும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இதன் மூலமாக எவ்வளவு செலவுகள் ஏற்பட்டாலும், எந்த வழியிலே ஏற்பட்டாலும், அதை வழங்க வேண்டுமென்ற முழுத் தொகையையும் மத்திய அரசு தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பலரும் எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்தின் சார்பாக நானும் அக் கருத்தை எடுத்துச் சொன்னேன். அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். 1—1—1973 ஆம் நாளிலிருந்து அவர்களுடைய சம்பள விகிதங்களை உயர்த்துவதற்கு சிலபல வரன்முறைகளை வைத்திருக்கிறார்கள். கூடுதல் சம்பளம் தர வேண்டுமென்று அவர்கள் சொல்லுவதோடு கூட, அதை யாருக்கு வழங்க வேண்டுமென்ற அவைக்கு தன்மைகளை எல்லாம் சொல்லி 'குவாலிபிகேசனை'க் கூட அதிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே அவர்கள் யாருக்கு வழங்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், டாக்டரேட் பட்டம் பெற்றவர்களுக்கும், எம்.ஏ., எம்.எஸ்ஸி., யில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கும் மட்டும் தான் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் வழங்கும் முறையைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முறையை நடைமுறைக்குக் கொண்டுவந்த பிறகு, அவர் முன்னால் ஏற்கனவே எவ்வளவு ஊதியம் பெற்றுவந்தாரோ அந்த ஊதியத்தைக் கணக்கிலெடுக்காமல் அதற்கு கூடுதலாக அவருக்கு எவ்வளவு தொகை வருகிறதோ அந்தத் தொகையில் 80 சதவிகிதத்தைத் தான் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும். 20 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். அதிலும் இன்னொன்று 1—1—1973-ல் இருக்கிற பேராசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் தான் தருமே தவிர, 1—1—73-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட பேராசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் மாநில நிதியிலிருந்து கொடுப்பதற்கு மாநில அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

(பிற்பகல் 12-40)

முழுச் செலவையும் மாநில அரசு தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் 5 ஆண்டு காலத்திற்கு இதைத் தான் தருவார்கள். இதைத் தருகின்ற போது, இவர்களுக்கு மட்டும் தான் தரவேண்டும், குவாலிபிகேஷன் இல்லாதவர்களுக்கு மாநில அரசு விரும்பினால் தரலாம். 5 ஆண்டு காலத்திற்குத் தரலாம், அவர்கள் டாக்டரேட் பட்டம், அல்லது முதல் வகுப்புப் பட்டம் பிறகு பெற்றுக்கொள்ளலாம். 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு அவர்களை அந்தச் சம்பளத்தில் நிறுத்தி விடலாம். அந்தச் சம்பளம் கொடுக்கும் போது எக்சாமினேஷன் பேப்பர் செட் பண்ணுவது, தேர்வுத் தாள்களைத் திருத்துவது, இன்னும் பல இன்சென்டிவ் பணம் தருவதை நிறுத்தி விடலாம் என்று இவ்வளவு குழப்பமான சூழ்நிலையை வைத்து விட்டு, நிறைவேற்றுங்கள் என்று சொன்னால், எப்படி நிறைவேற்ற முடியும்? ஒரே ஒரு மாநிலம்தான், உ. பி. மட்டும் தான நிறைவேற்றியது. ஏன் நிறைவேற்றியது என்றால், தேர்தலுக்கு முன்பு நிறைவேற்றியது. அந்த சந்தர்ப்ப சூழ்நிலை எல்லாம் நாம் நன்றாக அறிவோம். இப்போது அங்கே பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டு, அவற்றையெல்லாம் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு என்று வரும்போது, நாம் எல்லாவற்றையும் திரும்பிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் கேட்டார்கள். பல்கலைக் கழக மானியக்குழு சொல்லுகிறபடி செயல்படும் போது, பட்டதாரி ஆசிரியர்களுடைய நிலை என்ன, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுடைய நிலை என்ன என்ற நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலைமை தான் இப்போது உ. பி. மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலைமை இங்கேயும் வரும். அந்த விகிதத்தில் கொடுக்க வேண்டுமென்றால், அதற்கான கூடுதல் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அப்படித் தயாராக இருந்தால், அதைப் பற்றி யோசிக்கிறோம் என்று கடிதம் எழுதியிருக்கிறேன். கூடி மறுபடியும் பேசலாம் என்று புரபெசர் நூருல் ஹாசன் தெரிவித்திருக்கிறார்கள். எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இப்போது இதற்கு மேல் போகாமல் எப்படி வேண்டுமானாலும் நீங்கள் நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஒரு சாராருக்குத் தகுதி அடிப்படையில் சம்பளம் கொடுத்து விட்டு, சி பிளஸ் ஒன் என்று வாங்கியவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டி வரும்போது அது ஒரு குழப்பத்தை உண்டாக்கும். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தும் போது, பட்டதாரி ஆசிரியர்கள், மற்றவர்களுடைய பிரச்சினை வரும். 2,500 ரூபாய் சாதாரண கல்லூரி பிரின்ஸ்பாலுக்கும், எமிரிடஸ் புரஃபொசர் போன்றவர்களுக்கு 3,000 ரூபாய் வரையிலும் போகலாம். அவர்களுக்கு 3,000 ரூபாய் என்று இருக்கும் போது, இங்கே பள்ளிக் கல்வி இயக்குநருக்கும், கல்லூரிக் கல்வி இயக்குநருக்கும் சம்பளம் ரூ. 1,700-ல் இருந்து ரூ. 2,000 வரைதான் இருக்கிறது. கீழே உள்ளவர்களுக்கு 2,500, 3,000 ரூபாய் என்று வைத்து விட்டு, அவர்களை ஆட்சி செலுத்துவோர்க்கு ரூ 2,000-க்குள்ளேதான் என்றால்—அவர்களுக்குக் கொடுப்பதைப் பற்றி மறுப்பு தெரிவிக்கமாட்டார்கள்—தங்களை அந்த நிலைக்கு மேல் உயர்த்தி வைக்க வேண்டும் என்று

கேட்பார்கள். ஒரு இயக்குநருக்கு ஊதியத்தைத் தூக்கினால். இன்னொரு இயக்குநருக்கு எப்போது தூக்குவார்கள் என்று பார்த்துக் கொண்டு மற்றவர்கள் இருப்பார்கள். இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன.

(மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் தலைமை)

1966-ல் பல்கலைக்கழக மான்யக் குழு ஒரு சம்பள விகிதத்தை நிர்ணயித்தது 1970-ல் இரண்டாவது சம்பளக் குழு வைத்து, அந்தச் சம்பள விகிதத்தை மாற்றியமைத்தோம். எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்போது பல்கலைக்கழக மான்யக் குழு நிர்ணயித்திருப்பதை நிறைவேற்ற வேண்டுமென்றால், கூடுதலாக ஏற்படுகின்ற செலவை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இரண்டு தடவை நான் கடிதம் எழுதியிருக்கிறேன். எந்த மாநிலமும் அதை அமுல்படுத்தவில்லை, நடைமுறைப்படுத்தவும் இல்லை. அதில் அவ்வளவு சங்கடம் இருக்கிறது. எல்லாவற்றையும் ஒருமுறைப்படுத்தி, கூடுதல் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதில் ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் இந்தப் பிரச்சினையில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். புரொஃபசர் நூருல் ஹாசன் அவர்கள் இதில் என்ன சங்கடம் இருக்கிறது சொல்லுங்கள், யோசிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அழைப்பு நானே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்குப் பிறகுதான் இதில் ஒரு விரைவான முடிவு எடுக்க முடியும்.

Thiru .A. R. DAMODARAN: Even if 100 per cent is paid by the Government of India, the same difficulty which the Hon. Minister mentioned because of the discrepancy in wage will arise. How do the Government propose to solve the issue ?

Thiru G. SWAMINATHAN: Sir, there is another point on which a doubt has arisen. The U.G.C. scale of pay was recommended in .1971. Now we have granted more salary to teachers as per the recommendations of our Second Pay Commission. It is said that because we announced more salary Commission, the Second Pay Commission, we had to pay according to the Second Pay Commission, we had to pay 100 per cent, while if we had adopted the U.G.C. recommendations, the Government of India would have given 80 per cent. I do not know what is the relevance of it ?

